முத்தாரம்மன் கதை

பதிப்பாசிரியர் முனைவர். சு. நிர்மலாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

- சென்னை -

முத்தாரம்மன் கதை

(நாட்டுப்புறக் கதைப்பாடல்)

பதிப்பாசிரியர்

முனைவர் சூ. நிர்மலா தேவி,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

டி. டி. டி. ஐ. தரமணி

சென்னை-600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Mutāramman Katai
Author	:	Dr. S. Nirmala Devi., M.A. PH.D., Diploma in Epigraphy and Archaeology; Diploma in Manuscriptology. Research Assistant., I.I.T.S.
Publisher	:	International Institute of Tamil Studies, Madras - 113.
Publication Number	:	226
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	December, 1995
Paper used	:	16 kg Creamwove
Size of the book	:	⅛ Demmy
Printing types used	:	10 Point
Number of copies printed	:	1,200
Number of Pages	:	XIV + 410
Price	:	Rs. 85/-
Binding	:	Paper Pack
Artist	:	Jegan
Subject	:	Folk ballad

வெள்ளி விழா வெளியீடு

முனைவர் **ச. சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அணிந்துரை

பேரறிஞர் அண்ணா அவர்களால் வடிவமைக்கப் பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979 முதல் சுவடியியல் பட்டய வகுப்புகளை நடத்தி வருகின்றது. சுவடியியல் துறையில் தமிழகத்தில் பட்டய வகுப்பு நடத்தும் நிறுவனம் இது ஒன்றுதான் என்பது குறிப்பிடத் தக்கது. இச்சுவடியியல் துறையில் படித்து, இந்நிறுவனத் திலேயே ஆய்வு உதவியாளராகப் பணியாற்றிவருகின்ற முனைவர் நிர்மலாதேவி, சுவடியியல் துறையில் நுட்ப மான அறிவுடையவர். ஆழ்ந்த ஈடுபாடும் இணைய, இவர் சுவடித் தொடர்பாக வெளியிட்ட நூல்கள் பல. குறிப்பாக, பணவிடுதூது, கருவூரார் பல திரட்டு, தமிழ்ச் சுவடிகள் அட்டவணை, The Wandering Voice, The date-less Muse, The unsung melodies போன்ற நூல்கள் சுட்டத் தக்கன. மற்றுமொரு எடுத்துக்காட்டாக வெளிவருகிறது' முத்தாரம்மன் கதைப்பாடல் பதிப்பு'.

முத்தாரம்மன் கதை என்ற நாட்டுப்புறக் கதைப் பாடல் பதிப்பு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெள்ளி விழா வெளியீடாக வருகின்றது.

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த் திசைச் சுவடி நூலகத்தில், சுவடி வடிவிலுள்ள இதுவரை வெளி வராத இக்கதைப்பாடல், பிற அம்மன் கதைப் பாடல்களுடன் ஒப்பிடப்பட்டுப் பதிப்பிக்கப் பெற்று, நூல் வடிவம் பெற்றுள்ளது.

நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங் களில் அம்மன் கோயில்களில் கொடை (விழா) நடக்கும் பொழுது இக்கதைப்பாடல் வில்லுப்பாட்டு வடிவில் பாடப்படுவதெனத் தெரிகின்றது. வில்லுப்பாட்டு வடி வினது என்பதற்கு இக்கதைப் பாடலிலேயே அகச்சான்று கள் உள்ளன.

பாதாள லோகத்தில் நாககன்னிகைக்கு இரட்டைக் குழந்தைகளாகப் பெரிய முத்தம்மன், சின்னமுத்தம்மன் பிறக்கின்றனர். வளர்ந்தவுடன் இமயமலை சென்று சிவனை நோக்கித் தவம் செய்கின்றனர். உலகில் மருள் நீக்கி, அருள் சுரக்கவும், பெருகியுள்ள அநீதியை அகற்றி நீதியை நிலை நாட்டவும் மக்களிடையே அம்மை நோயைப் பரப்ப வேண்டும்; அதனால் 'அம்மைமுத்துக்களை வர மாகத் தருக' எனக் கேட்டுப் பெறுகின்றனர். அம்மை முத்துக்களைக் கொண்டு செல்ல வண்டிகளும், விதைப்ப தற்குப் படை பரிவாரங்களையும் வரமாகப் பெறுகின்ற னர். வடபகுதி தொடங்கி ஊர் ஊராக விதைத்துக் கொண்டு வந்து, அம்மை நோய் பரவும் அச்சத்தால் பக்தியை வளரச் செய்து, இறுதியில் பட்டபுரம் என்ற இடத்தில் தெய்வமாகியதாகக் கதை முடிகின்றது.

பெரியம்மை, சின்னம்மை, என்ற இருவேறு அம்மைக்கு இயைய, பெரிய முத்தம்மன், சின்ன முத்தம்மன் என்ற இருவேறு அம்மன்கள் இக்கதைப் பாடலில் படைக்கப் பட்டுள்ளமை, பிற அம்மன் கதைப்பாடல்களில் காணப் படாத சிறப்பு வளர்ச்சி நிலை எனக் குறிப்பிடலாம்.

அம்மன், அம்மை முத்துக்களை விதைத்துக் கொண்டு சென்ற இடங்களாக 372 ஊர்ப்பெயர்கள் இடம்பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அம்மனின் பரிவார தேவதைகளாக 43 சிறுதெய்வங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளமையை இவ்வம்மன் கதைப் பாடலின் சிறப் புக் கூறு எனக் குறிப்பிடலாம்.

அம்மன்-நாகத்துடன் தொடர்புபடுத்தப்படுவதற்கான காரணங்கள் இந்நூலில் சிறப்பாக ஆய்வு செய்யப்பட் டுள்ளன. அம்மன் விழாக்களின் போதும், அம்மன் புறப் படுகையின்போதும் பல்வேறு வித இசைக் கருவிகள் முழக்கப்படுவதாகக் கதை நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. மொத்தம் 44 இசைக் கருவிகள் முழக்கப் பெறுவதாக அமைவதில், பெரும்பான்மையும் தோற்கருவிகள் இடம் பெறுவதற்கு என்ன காரணம் என்பதும் ஆராயப் பெற்றுள்ளது.

முத்தாரம்மன் பற்றிய பெயராய்வு, அம்மைநோய் தொடர்பான சொல்லாட்சிகள் பற்றிய ஆய்வு, முத்தாரம்மன் கதை-முப்புரம் எரித்த கதை தொடர்பான ஆராய்ச்சிக் குறிப்புக்கள், பரிவார தேவதைகளின் பெயர் பற்றிய ஆராய்ச்சிகள் போன்றவற்றை இந் நூலின் சிறப்பு மிகு ஆராய்ச்சிக் குறிப்புகள் அடங்கிய பகுதிகள் எனச் சுட்டலாம்.

இத்தகைய அரிய பல செய்திகளை நுணுக்கமாக ஆய்ந்து எழுதியுள்ள முனைவர் சூ. நிர்மலாதேவி பாராட்டுக்குரியவர்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் க. பொன்னுசாமி அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலாளர் திருமிகு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப. அவர்களுக்கும் இச்சுவடி வெளியீட்டுக்கு நிதியுதவி வழங்கிய திரு. பன்னீர் செல்வம் அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

நூலினை நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்த பாவை பிரிண்டர்ஸ்-க்கும் எங்கள் நன்றி.

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பல சிறந்த நூல்களை வெளியிடுவதைத் தனது முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. 'இதுவரை வெளிவராத தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடுதல்' என்ற நிலையிலும், பன்முக ஆராய்ச்சிக் கருத்துக்களுடன் சுவடி பதிப்பிப்பாருக் கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறது. இவ்வடிப் படையில் இந்நிறுவனத்தின் வெள்ளிவிழா வெளியீடாக 'முத்தாரம்மன் கதை' என்ற சுவடி பதிப்பித்து வெளியிடப் படுகின்றது.

தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் போன்ற வர்களின் அரிய உழைப்பால் தமிழ் நூல்கள் பல அச்சில் பதிப்பிக்கப்பெற்று, வெளியிடப்பட்டதன் பின், இலக்கியங் களைப் படித்தின்புறுதலோடு, பதிப்பிக்கவும் வேண்டும் என்ற மனப்பான்மையும் பெருகி வளர்ந்ததெனக் கூறலாம்.

உ. வே. சா. அவர்கள் காலத்திலும், அதற்குப் பின்னரும் இலக்கிய, இலக்கணச் சுவடிப் பதிப்புக்களுக்கு முக்கியத்து வம் அளிக்கப்பட்டது. இத்தகு முக்கியத்துவம் தற்போது நாட்டுப்புற இலக்கியங்கள், தெய்வங்கள், கலைகள் தொடர் பான சுவடிப் பதிப்புக்களுக்கும் அளிக்கப்படுகின்றமை தமிழின், தமிழினத்தாரின் நற்காலம் என்றே சொல்ல வேண்டும்.

நாட்டுப்புற இலக்கியங்களுக்கென்று பல்கலைக் கழகங் களில் தனிப்புலம் அமைந்துள்ளமையும், இத்துறை தொடர் பான சுவடிகளுக்கு முக்கியத்துவம் தரப்படலும் போற்றத் தகுந்தவையாகும்.

சுவடிகளிலுள்ள பல கதைப்பாடல்கள் பல்கலைக் கழகங்கள் வழியும், அரசு, தனியார் நிறுவனங்கள் மூலமும் பதிப்பித்து வெளியிடப்படுகின்றது.

டாக்டர் அ. விநாயகமூர்த்தி போன்றோர் முனைவர் பட்டத்துக்கு நாட்டுப்புறப்பாடல் சுவடியாய ஐவர் அம்

மானையைப் பதிப்பித்து ஆய்வு செய்து, சுவடிப்பதிப்பை யும், ஆய்வையும் மேற்கொள்வாருக்கு வழிகாட்டியாகவும் உள்ளனர்.

நாட்டுப்புறத் தெய்வங்களுள் தலையாய இடம் வகிக்கும் அம்மன் பற்றிய செய்திகளையும், அம்மனிலும் முதலிடம் பெறும் மாரியம்மனாய முத்தாலம்மன் எனப்படும் முத்தா ரம்மனைப் பற்றிய செய்திகளையும் நாட்டுப்புற மக்களின் எண்ணங்கள் வழி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தால் 'முத்தாரம்மன் கதை' என்ற சுவடி பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அம்மன் கதைப்பாடல்கள் பாடப்படுவதில்லை. சுவடி வடிவிலும் பாடி வைக்கப் பெறவில்லை. கன்னியாகுமரி, நெல்லை மாவட்டங்களிலேயே முத்தாரம்மன் கதைப்பாடல்கள் பாடப்பெறுகின்றன; சுவடி வடிவிலும் கிடைக்கின்றன. இவ்விரு மாவட்டங்களிலிருந்தும் அண்டை மாநிலமாகிய கேரளத்துக்கும் இச்சுவடிகள் சென்று, சேமித்து வைக்கப் பெற்றுள்ளன. கேரள மாநிலத்தின் தலைநகராய திருவனந்த புரத்திலுள்ள கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி கள் நூலகத்துச் (Oriental Research & Manuscripts Library) சுவடியாய முத்தாரம்மன் கதை (எண்-8427) என்ற சுவடியே பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

முதல் நிலையாக, முத்தாரம்மன் கதை பதிப்பித்தலில் மேற்கொண்ட முறைகள், கதை அமைந்துள்ள முறை, கதைச்சுருக்கம், கதைப் பொருண்மை பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் நிலையில், கதையில் சிறப்பு நிலைக் கூறு கள் விவரிக்கப்பட்டுள்ளன, கதையில் இடம் பெறும் அம்மன்-நாகத் தொடர்பு பற்றியும், கதையில் இசைக்கருவி கள் பெறும் இடம் பற்றியும், அம்மை நோயின் வரலாறு, அம்மை நோய்களின் வகைகள் சுவடிகளில் எவ்வாறு விளக் கப் பெற்றுள்ளன என்ற விவரங்கள், மற்றும் அம்மை

நோய் தொடர்பான சொல்லாட்சிகள் குறித்த ஒரு சிறப் பாய்வு, கதையில் இடம் பெறும் இடப்பெயர்கள் விவரம், தெய்வநிலைக் கூறுகள் போன்றன விவரிக்கப்பெற்றுள்ளன.

மூன்றாம் நிலையில் முத்தாரம்மன் கதைப்பாடற் சுவடி கள் ஒப்பிடப்பெற்றுள்ளன.

நான்காம் நிலையில் கதை தொடர்பான சிறப்புப் பார்வையாக முத்தாரம்மன்கதை—முப்புரம் எரித்த கதை—ஓர் ஆய்வு என்பதும், முத்தாரம்மனைப் பற்றிய பல்வேறு பெயர்கள் தொடர்பான ஆய்வும் மேற் கொள்ளப் பெற்றுள்ளது.

இப்பதிப்பிலும், பதிப்பாராய்ச்சிக் கருத்துக்கள் முடிந்த முடிவுகள் அல்ல. இன்னமும் புதிய சுவடிகளில் புதிய கருத்துக்கள், கிடைப்பின் முடிவுகளில் மாறுதல்களும் நிகழலாம்.

பல நாட்டுப்புறச் சிறு தெய்வங்களின் பெயராய்வுகள் இப்பதிப்பில் மேற் கொள்ளப் பெற்றுள்ளன. அம்மனின் பரிவார தேவதைகளான ராக்காச்சி, மலையன், மலைச்சி என்பன இயற்கை வழிபாடு காட்டும் தெய்வங்களா என்பது சிந்தித்தற்குரியது.

ரா + க் + ஆச்சி = ராக்கச்சி (இரவுத்தாய்)

மலை + அன் = மலையன்

மலை + ச் + இ = மலைச்சி

என்ற அமைப்புக்களுடையன எனத் தோன்றுகிறது.

இரவு, மனித உயிர்களுக்கு அச்சமூட்டுவது, அச்சமூட்டு வனவற்றையே தெய்வமாக வணங்கிய ஆதி மனிதர், இரவுத்தாய் அல்லது இரவு ஆச்சி என இருளையே இராக் காயி இராக்காச்சி என்ற தெய்வமாக வணங்கிரோ என எண்ணத் தோன்றுகின்றது.

கிரேக்கர்களும் ''இருள்தேவி'' என்ற தேவதையை வணங்கியமை இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

''இருள் எனும் இத்தேவியைக் காற்று காதலிக்க, அக்காதலின் விளைவாக ஓர் வெள்ளி முட்டையை அவளுடைய கருப்பையில் வைத்தான் என்றும், அம்முட்டையிலிருந்து 'ஈராஸ்' எனும் காதல் தேவன் பிறந்து, உலக இயக்கத்தைத் துவக்கியதாகக் கிரேக்கப் புனைகதைகள் அமைகின்றன'' என டாக்டர் நா. வானமாமலை அவர்கள் தம் ''உலகப் படைப்புக் கதை, கதை மூலங்களைப் பற்றிய ஓர் ஆய்வு (ஆராய்ச்சி இதழ், டிச. 1971, பக். 385) என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார்.

கிரேக்கரிடம் உள்ள 'இருள் தேவி' வழிபாடு போன்று, 'இரவுத்தாய்' 'இராக்காச்சி' என்ற தமிழரின் இயற்கை வழிபாடு அமைந்துள்ளமை தெளிவாகின்றது. இது அரக்கர் என்ற நிலையுடன் தொடர்பு படுத்தப்பட்டுக் கீழே தள்ளப்பட்டது என எண்ண இடம் உள்ளது.

இருள்தாயைக் குறிக்கும் ராக்காச்சி என்பதனோடு தொடர்புள்ள ராக்கு, ராக்காயி, ராக்கம்மா முத்து ராக்கு, இருளாயி என்ற பெயர்கள் இன்றும் நாட்டுப்புற மக்களின் பெயர்களாக உள்ள வழக்குகளும் கருதத்தக்கது.

இருள் கருமையுடையதாயின் கருப்பாயி, கருத்தம்மா என்று நாட்டுப்புறங்களில் பெயர் வழங்குவதும், நீலி என்றுள்ள தெய்வப் பெயர் வடிவமும், இரவுத்தாய் என்று பொருள் படும் இராக்காச்சி என்ற அமைப்புடன் தொடர்பு படுத்திப் பார்க்கத்தக்கது.

இவ்வாறு ராக்காச்சி, கருப்பாயி, நீலி என்பன 'இருள் தேவதை' வணக்கத்துடன் தொடர்புடையதாயிருக்க, ராக்காச்சி என்பது, 'ராக்ஷக்ஷி' என்பதனின்றும் வந்தது என அரக்க உரு, அரக்க இனம், குணம் என்பனவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டு இழிவுபடுத்தப்பட்டுள்ளமை ஆரியத் தொடர்பின் பின்னர் நிகழ்ந்ததாகலாம்.

நாட்டுப்புறத் தெய்வ வடிவங்களை மென்மேலும் ஆழ்ந்து ஆய்வு செய்ய, இன்னும் பல உண்மைகள் உலகுக்குக் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

சூ. நிர்மலாதேவி

நன்றியுரை

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகத்திலுள்ள 'முத்தாரம்மன் கதை' என்ற தெய்வக் கதைப் பாடல் சுவடியைப் பதிப்பித்தலில் ஆர்வம் காட்டி ஆவன செய்துதவிய முனைவர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கு முதற்கண் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

'பிற அம்மன் கதைப்பாடல்களெல்லாம் வெளி வந்துவிட்டன. முத்தாரம்மன் கதைப் பாடலும் விரைவில் அச்சேற்றப்பட வேண்டும்' என்று பன்முறையும் சொல்லிச் சொல்லி, ஆக்கமும், ஊக்கமும் அளித்து, இந்நூல் வெளி வர மூல முதற் காரணமாய் அமைந்த எமது நிறுவன இயக்குநர் முனைவர் ச. சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு உளம் நிறைந்த நன்றியையும், வணக்கத்தையும் செலுத்தும் கடமையுடையேன்.

சுவடியைப் படி எடுக்க அனுமதித்த கேரளப் பல்கலைக் கழகச் சுவடி நூலக இயக்குநர் முனைவர் டி. பாஸ்கரன் அவர்களுக்கும், சுவடி ஒப்பீட்டுக்கு உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம், ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தாருக்கும் நன்றியுடையேன்.

நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த பாவை பிரிண்டர்ஸ்-க்கு என் நன்றி.

சூ. நிர்மலா தேவி

சுருக்கக் குறியீட்டு விளக்கம்
(Abbreviations)

1.	பக்.	— பக்கம்
2.	சூத்.	— சூத்திரம்
3.	சு. எண்.	— சுவடி எண்
4.	இ.	— இதழ் (leaves)
5.	இ.ம.	— இதழ் மறுபுறம்
6.	ப.ஆ.	— பதிப்பாசிரியர்
7.	மொ.ஆ.	— மொழிபெயர்ப்பாசிரியர்
8.	தொ.ஆ.	— தொகுப்பாசிரியர்
9.	பரி.	— பரிபாடல்
10.	கலி.	— கலித்தொகை
11.	சிலப்.	— சிலப்பதிகாரம்
12.	குறுந்.	— குறுந்தொகை
13.	திருத். மாக்கதை	— திருத்தொண்டர் மாக்கதை
14.	தொல். புறத்.	— தொல்காப்பியம் புறத்திணையியல்
15.	பெருங். உஞ்சைக்.	— பெருங்கதை உஞ்சைக்காண்டம்
16.	முத். கதை	— முத்தாரம்மன் கதை
17.	முத். விற். கவிதை	— முத்தாரம்மன் விற்கவிதை
18.	கே.ப.சு.	— கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசை நூலகச் சுவடி (Oriental Manuscripts Library, Kerala University)
19.	ஆ.ஆ.நி.	— ஆசிய ஆய்வியல் நிறுவனம் (Asian Studies)
20.	உ.த.நி.சு.	— உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி (International Institute of Tamil Studies, Madras).
21.	செ.கீ.சு.	— சென்னை கீழ்த்திசை நூலகச் சுவடி (Oriental Manuscripts Library, Madras)

22. த.ச.சு.	—	தஞ்சை சரசுவதி மஹால் நூலகச் சுவடி
23. மதுரை.	—	மதுரைத் தமிழ்ச் சங்கம்
24. ஈரோடு.	—	ஈரோடு கலைமக்ள் கல்வி நிலையம்
25. எழுமாத்தூர்.	—	எழுமாத்தூர் வேலப்பாளையம் உயர் திரு. தெய்வசிகாமணிக் கவுண்டர் தொகுத்த சுவடிகள்
26. பாண்டிச்சேரி	—	பாண்டிச்சேரி பிரெஞ்சிந்தியக் கலைக் கழகம்
27. தொ.பொ.ஆ.	—	தொல்பொருள் ஆய்வுத்துறை (Department of Archaeology, Mandaivalli, Madras-28) *(1981-இல் தொகுக்கப்பட்ட சுவடிகள்)*
28. கல்கத்தா.	—	கல்கத்தா தேசிய நூலகம்
29. பாரீஸ்.	—	பாரீஸ் தேசிய நூலகம் Catalogue Somaire Des Manuscripts Indians Indo-Chinois & Malayo Polynesiens Paris, Ernest Leroux F diteur 1912.

உள்ளடக்கம்

VI. பின்னிணைப்புக்கள்

முத்தாரம்மன் கதை – பதிப்பு விளக்கம்

தெய்வக் கதைப்பாடற் சுவடிகளில் சிறப்பிடம் பெற்றுத் திகழும் அம்மன் கதைப்பாடல்களில், பதிப்பிப்பதற்காக "முத்தாரம்மன் கதை" என்ற இதுவரை பதிப்பில் வெளிவராத கதைப்பாடற் சுவடி எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இது கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 8427– என்ற எண்ணுடைய சுவடியாக உள்ளது.

சுவடியமைதி

38 x 3.4 செ.மீட்டர் அளவுள்ள இச்சுவடியின் அனைத்து இதழ்களின் மேல் ஓரப் பகுதிகளும் சிதைவுக்கு ஆளாகியுள்ளன. இடையிடை பூச்சி அரிப்புக்களும் காணப்படுகின்றன.

இதழின் ஒவ்வோர் பக்கத்தையும் இரு பகுதியாகப் பகுத்துக்கொண்டு 14 முதல் 16 வரிகள் வரை எழுதப்பட்டுள்ளன. சில இதழ்களில் இரண்டாகப் பகுக்கப்படாமல் தொடர்ச்சியாக ஒரே வரிகளாக எழுதப்பட்டுமுள்ளன. மரபு வழி யாப்பின்படியும், நாட்டுப்புறப் பாடல் யாப்பின்படியும் அமைந்துள்ள இக்கதைப்பாடலை இவ்வகைகளின்படியே பிரித்து வரியெண்களிடப்பட்டுள்ளன. 2017 வரிகள் உள்ளன.

சுவடி தோற்றத்தில் பழமையானதாகத் தோன்றுகின்றது. இரு துளை அமைக்கப்பட்டு ஏடுகள் கோர்க்கப்பட்டுள்ளன.

காலம்

பொதுவாகப் பெரும்பான்மையான சுவடிகளில் காலக் குறிப்பைக் காண்பதரிது. சுவடித் தோற்றம், எழுத்து வடிவு, சொல்லப்பட்ட கருத்து, சொல்லும் முறை போன்றவற்றை வைத்து, காலத்தை ஓரளவு கணிக்க இயலும். தற்போது நமக்குக் கிடைக்கும் பல சுவடிகள் மூலங்களாக அன்றிப் படிகளாக உள்ளதனால், மூலத்தில் உள்ள காலத்தைப் படி செய்வோர், படியிலும் எழுதி வைத்து விடலால், நமக்கு கிடைக்கும்

குறிப்பிட்ட படிகளாகிய சுவடிகளின் உண்மையான காலத்தை உணரவும் வாய்ப்பில்லாது போய்விடுகின்றது. தவிர மருத்துவ, சோதிட, இலக்கியப் பொருண்மையுள்ள சுவடிகளில் பொதுவாகக் காலக் குறிப்பைக் காணவே முடிவதில்லை. ஆயின் பெரும்பான்மையான கதைப்பாடற் சுவடிகளில் காலக் குறிப்பைப் பார்க்க முடிகின்றது. இதற்கு இவை அண்மைக் காலமாய 16–ஆம் நூற்றாண்டு தொட்டு ஏட்டில் எழுதப்பட்டமை காரணமாதல் கூடும். மேலும் இவற்றில் பலவும் படிகளாக அன்றி மூலங்களாகவும் இருப்பதால் குறிப்பிட்ட சுவடி எழுதப்பட்ட உண்மையான காலமே அது என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள 8427 – முத்தாராம்மன் கதைப்பாடல் சுவடியின் தொடக்கத்தில் சுவடி தொடங்கப்பட்ட தமிழ் ஆண்டு, மாதம் போன்றன அதனை அடுத்து உரைநடையிலும், சுவடியை எழுதி முடித்த காலம் சுவடியிறுதியில் கொல்லம் ஆண்டு, மாதம், தேதி போன்றவற்றுடன் உரைநடை வடிவிலும் குறிக்கப் பட்டுள்ளன.

தமிழாண்டு 877 பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் ஞாயிறு திருவோணம் பூர்வ பஞ்சமி குரு உதய அமிர்த யோகத்திலும்,

கொல்லமாண்டு 1047– இல் (கி.பி. 1872) ஆவணி மாதம் 29–ம் தேதி பூர்வபட்சமும், குரு வாரமும் அசுபதி நட்சத்திரமுங் கூடிய சுபயோக சுப தினத்திலும் இச்சுவடி எழுதத் துவங்கப்பட்டதாகவும்,

கொல்லமாண்டு 1048 (கி..பி. 1873) கார்த்திகை மாதம் 6–ந் தேதி மங்கள வாரமும் அமரபட்சமும், புனர்பூச நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் இச்சுவடி எழுதி முடிக்கப்பட்டதாகவும் குறிப்புக்களுள்ளன.

இதனால் 60 இதழ்களுள்ள 2017 வரிகளைக் கொண்ட இக்கதைப்பபாடலை எழுத 1 வருடம் 2 மாதம் 7 நாட்கள் தேவைப்பட்டுள்ளதெனத் தெரிகின்றது.

தொடர்ந்து நாள்தோறும் எழுதாது, நல்லநாளில், நல்ல நேரத்தில், தெய்வத் தொடர்புடைய கிழமைகளில், எழுதுதற்குத் தமக்குத் தக்க நேரம் கிடைத்த நாட்களில், எழுதி யெழுதி வந்து பின் குறிப்பிட்ட

நன்னாளில் நன்னேரம் பார்த்து முடிக்கப்பட்டுள்ளது எனக் கொள்ளலாம்.

சுவடி முடிக்கப்பட்ட காலமான கொல்லமாண்டு 1048 அதாவது கி.பி. 1873 இதன் காலம் எனக் கொள்ள இதன் வயது 112 என அமைகின்றது.

ஆசிரியர்

பொதுவாகக் காலக் குறிப்பு அமையும் சுவடிகளில் அச்சுவடியை எழுதிய ஆசிரியர் பெயரும் அமையக் காணலாம். இத்துடன் அவர் எவ்வூரைச் சேர்ந்தவர் என்பதும் காணப்படுவதுண்டு.

இச்சுவடித் துவக்கத்திலும், முடிவிலும் ஆசிரியர் பெயரும் அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"வள்ளியூரிலிருக்கும் முத்துக் கருப்பப் புலவர் மகன் அருணாசலப் புலவன் எழுதின சுவடி" எனச் சுவடித் துவக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுவடியிறுதியிலும் இதே குறிப்பு அமைந்துள்ளது.

இவர் 'இருளணைஞ்ச பெருமாள்' என்பவர் வில்லுப்பாட்டாகப் பாடியதையே சுவடியில் எழுதி வைத்தார் என்ற குறிப்பும் உள்ளது.

"ஏர்வளரும் பட்டபுரம் முத்துத் தாய்க்கு
இசைந்ததமிழ்க் கதையைவில்லி லியம்பு வோமே"

– வரி . 10–11.

என்றும்,

"சீர்வள ரணைஞ்சபெரு மாள்புலவ னருளிய
ஞானமாகி யிருளணைஞ்ச பெருமாள் தானும்
நல்ல முத்தம்மன் கதைசொல்லி வைத்தானே"

– வரி. 121–123

என்றும் காணப்படுகின்றது.

இச்சுவடியின் எழுதுமுறையும், பதிப்பும்

பாடல் வடிவில் அமைந்துள்ள இச்சுவடியில் பாடல்கள் யாப்பு முறைப்படி வகை பிரித்து எழுதப்படாது, இதழ் ஓரத் துவக்க முதல் இறுதி வரை நீண்ட நெடும் வரிகளாக எழுதப்பட்டுள்ளன.

....

....

....

....

....

சில இடங்களில் இதழ் இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

....

....

....

....

எனினும் யாப்பு முறைப்படி சீர்பிரித்து எழுதப்படவில்லை. இது பொதுவாகச் சுவடிகளில் காணப்படும் எழுது முறையேயாகும். அவற்றைப் பின்பற்றியே இச்சுவடியிலும் எழுது முறை அமைந்துள்ளது.

இக்கதைப்பாடற் சுவடியில் வெண்பா, விருத்தம், அகவல் என்ற மரபுவழி யாப்பிலமைந்த பாடல்கள் இடையிடை அமைந்துள்ளன. இவை பா இறுதியில் குறிக்கப்பட்டுமுள்ளன. பிற பெரும்பான்மையான பாடல் அமைப்புக்களும் நாட்டுப்புறப் பாடல்களுக்கென்றே அமைந்த யாப்பினவாக உள்ளன. தொங்கல், நடை என்ற தலைப்புக்கள் அவ்வப் பாக்களின் இறுதியில் தரப்பட்டுள்ளன. இத்தகு பாத்தலைப்புக்கள் எல்லாம் பாக்களின் முதலில் அமையுமாறு பதிப்பிக்கப்பட்டுள்ளது.

வில்பாட்டு வடிவினதாதலின் பல்வேறு சந்தங்களுடன் கூடியனவாகப் பாடல்கள் சுவையுணர்வோடு யாக்கப்பட்டுள்ளன. மக்கள் இலக்கியமாதலின், பேச்சு வழக்கு மலிந்த நடையில் எழுதப்பட்டுள்ளது. இவ்வியல்புத் தன்மை கெடாவண்ணம் இவ் வழக்கினை மாற்றாது உள்ளவாறே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. மரபு வழிப் பாடல்கள் யாப்பு முறைப்படியும், நாட்டுப்புறப் பாடல் யாப்பு வகையினவும்

பொருள் நோக்கேயன்றிச் சீர் நோக்கியும் பிரிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

எழுத்து முறையும், பதிப்பும்

அச்செழுத்துக்கள் மலிந்துவிட்ட இந்நாளில் படித்துப் புரிந்துகொள்ள முடிகின்ற எழுத்து வடிவத்திலேயே இக்கதைப்பாடற் சுவடி எழுதப்பட்டுள்ளது.

பொதுவாகச் சுவடிகளில் ஒற்றுக்குப் புள்ளியின்றியும், குறில், நெடில் வேறுபாடுணர்த்த ஒற்றைக் கொம்பு, இரட்டைக்கொம்பு வேறுபாடின்றியும் (ெ, ே) துணையெழுத்து, ரகர வேற்றுமையில்லாதும் எழுதப்படுதல் ஒரு மரபாகவே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அது போன்ற எழுத்து முறையிலேயே இச்சுவடியும் எழுதப்பட்டுள்ளது. இத்தகு எழுத்து முறைகள் இக்கால அச்செழுத்து முறைப்படி ஒற்றுக்களுக்குப் புள்ளிகளோடும், பிற மாற்றங்களுடனும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

ஈசானன் (வரி.636) என்பது ஈசானன் எனவும், திரு. ஐ வேலி (வரி.1394) என்பது திருநெல்வேலி எனவும், அதி கூ மான (வரி. 1945), அ கூ சாலை (வரி. 1946) என வல்லொற்றுக்கள் இணைந்து வரும் பொழுது ஒரே எழுத்தாகச் சுவடியில் எழுதப்பட்டுள்ள கூட்டெழுத்துக்கள் அச்செழுத்துக்கள் போன்று அதிக்கமான, அக்கசாலை எனவும், வட உச்சரிப்பு ஆட்சியில் பொஷ்த்தாமரை (வரி.1203) என அமைந்துள்ளது பொற்றாமரை எனத் தமிழ் எழுத்துக்களோடும், உச்சரிப்புக்களோடும் மாற்றிப் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

குறிகளும், எண்களும்

இச்சுவடியில் முற்றுக் குறிகளாக உ, – என்பன பயன்படுத்தப் பட்டுள்ளன. இத்தகு குறிகள் அனைத்தும் நீக்கப்பட்டு, பா முற்றுப்பெற்ற இடங்களில் முற்றுப்புள்ளி, இட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. தவிர இல்லாத வரிகளைக் குறிக்க நடைமுறையில் உள்ள . . . என்கின்ற குறி பயன்படுத்தப்பட்டுள்ளது (வரி. 91 ஐ அடுத்து).

பொதுவாகப் பெரும்பான்மையான சுவடிகளிலும் காணப்படுதல் போல, இதழ்களின் இடது ஓர நடுவில் இதழ் எண்களும், பா முடிவுகளில் பா எண்களும் இடப்பட்டுள்ளன. இவை தமிழ் எண்களாகவே உள்ளன.

இடையிடை அமையும் விருத்தங்களுக்கும், வெண்பாக்களுக்கும் எண் இடப்பட்டு வந்து, இடையிலேயே அவை நின்று போயிருக்கின்றன. இத்தகு பா எண்கள் முழுமையாக நீக்கப்பட்டு, அனைத்திற்கும் வரி எண்கள் தந்து பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சுவடிப் பிழைகளும், திருத்தங்களும்

சுவடியில் உள்ளவை அனைத்தும் சரியான எழுத்து, சொல் வடிவங்கள்; அவற்றில் பிழையே இருக்காது; எனவே சுவடியிலுள்ள எதனையும் மாற்றாது அதில் உள்ளதை உள்ளவாறு பதிப்பித்தல் வேண்டும் என்ற கொள்கை தவறானதென்பது சுவடி பதிப்பிப்பார் அறியவரும் ஓர் உண்மையாகும்.

சுவடிகளில்,

(1) மூலங்களைப் பலர் பல இடங்களில், பல காலங்களில் படியெடுத்துப் படியெடுத்து வருவதாலும், காலநெடுமை, பலர் பல சிந்தனைகளுடன் எழுதல், கையெழுத்து வேறுபாடுகள் போன்றவற்றாலும் பிழைகள் நேரும்.

(2) பேசுவது போல் அப்படியே எழுதிவிடலால் எழுத்து வழக்குக்கும், பேச்சு வழக்குக்கும் உள்ள எழுத்து வடிவத்தில் வேறு பாடின்றிப் பிழைகள் நேரும்.

(3) ஒருவர் சொல்ல வேறு ஒருவர் அல்லது பலர் எழுதுதலால் ஒலியமைப்பைத் தவறாகப் புரிந்துகொண்டு எழுதுதலாலும் பிழைகள் மலியும்.

(4) மூலத்திலுள்ள எழுத்தை வெளிச்சக் குறைவு, கவனமின்மை, எழுத்தொப்புமை போன்ற காரணங்களால் வேறு ஒரு எழுத்தாகப் புரிந்து எழுதுதலால் பிழை விளையும்.

இதுபோன்ற பல்வேறு காரணங்களால் சுவடிகளில் பிழைகள் மலிதலுண்டு. இத்தகு பிழையான எழுத்துக்கள் திருத்தப்பட்டும், மிகை எழுத்துக்கள் நீக்கப்பட்டும் இச்சுவடி பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பழைய சுவடிகளைவிடப் புதிய பிற்காலச் சுவடிகளில் பிழைகள் மலிந்துள்ளமைக்கு இச்சுவடி மேலும் ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

I. வென்னீர்க்கார்ருன்னி (வரி.834), முள (840), நிளத்த (1450), கன்னுதல் (1460) குளல் (1513) பிறையாகவேகடில்லி (940), குளகரெனும் (1396), நாலுனாளிகை (1413), பளவூர் (1526), விளிங்கம் (1589), களைக்கோட்டம் (1593), காஞ்சிறப்பள்ளி (1597), என்றிசை (1713), வயினவ (1890) என இவ்வாறாகச் சுவடியில் ன – ண, ள– ழ, ர–ற என்ற, பேச்சு வழக்கில் வேறுபாடின்றி வழங்கி வரும் எழுத்துக்களால் விளைந்த இதுபோன்ற பிழைகள், எழுத்து வழக்கில் இன்று வழங்கி வருவதுபோல் வென்னீர்க்காரருண்ணி, முழா, பிறையாகை ஏக டில்லி, குழகரெனுங், நாலுனாழிகை, நிழத்த, கண்ணுதல், குழல், பழவூர் விழிங்கம் கழைக்கூட்டம், காஞ்சிரப்பள்ளி, எண்டிசை வயிணவ எனச் சரியான எழுத்து உச்சரிப்பில் திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

II பேச்சு வழக்கில் சொல்லை அழுத்திக் கூற முனைவதாலும் பிழைகள் நேர்வதுண்டு, இதனால் இறைசூல் (985), குரவை (1372), தமிள்ளோதிய (1474), வற்க்கரை (1592), விலைகினாள் (1705), என்று சடைகோபம் (1801), யிருக்கைய்யார (1919), செண்புக்கா தேவி (1952), என்று சுவடியில் அமைந்துவிட்ட சொற்கள் இரசூல், குரவை, தமிழோதிய வற்கரை, விலகினாள், சடபோகம், யிருகையார, செண்பகாதேவி எனச் சரியான வடிவில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

III. ஒரு எழுத்து மற்றொரு எழுத்துபோல் தோன்றும் எழுத்தொப்புமையாலும் சுவடிகளில் பிழை நேர்தலுண்டு.

வசிய (886). ஆருருமோக்கி (1114), வெள்ளிக் கிணங்கும் (1501) பண்ணை (1531), கருப்புக் கோட்டை (654), பஞ்சவங்காட்டாலு (1639), வாது (1684) என இவ்வாறு சுவடியில் முறையே சி–தி, மோ–போ, ண–ள, ப–பி, க–அ, லு–று, ா–ந என்ற எழுத்தொப்புமைகளால் வந்த பிழைகள் திருத்தப்பட்டு வதிய, ஆரூரும் போக்கி, வள்ளிக் கிழங்கும்,

பின்னை, அருப்புக் கோட்டை, பஞ்வங்காட்டாறு, வந்து, எனப் பொருள் பொருத்தமுறத் திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

IV. இச்சுவடியில் பேச்சு வழக்கில் உள்ளவை நாட்டுப்பாடலின் இயல்புத் தன்மை கெடாவண்ணம் எழுத்து வழக்குக்கு மாற்றாமல் உள்ளவாறே பதிப்பிக்கப் பெற்றிருப்பினும், பேச்சு வழக்காகவே பதிப்பிக்கப் பொருளை மாறுபடுத்தும் என அறியவரும் இடங்களில் எழுத்து வழக்கிற்கு மாற்றியும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.சான்றாக, யெமவான் (885), துடச்சி (1532), சொன்ன (1927), புனைக்குளம் (1968) என அமைந்திருந்தவை, இமவான், துடைச்சி,சொர்ண,புன்னைக்குளம் எனத் திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

V. எழுதும் பொழுது கவனக் குறைவாலோ, அறியாமையாலோ, பிறர் சொல்ல எழுதும்பொழுது ஒலி வேறுபாட்டைத் தவறாகப் புரிந்து கொள்ளலாலோ, சுவடிகளில் உள்ள சொற்களில் எழுத்துக் குறைவோ, எழுத்து மிகையோ ஏற்பட்டுப் பிழை நிகழல் உண்டு.

சான்றாக இச்சுவடியில் முத்தாரா அம்மன் (சுவடித் தலைப்பு), இடாலாக்குடி (1654), குளாலாள் (504), பாதாளான் (564) மாகாண்டாங் (589) சொல்வாள் (764) உச்சித (799) கரம்புனை (1605) என எழுத்து மிகைகள் நிகழ்ந்திருப்பதையும் (இவற்றின் சரியான வடிவம்:– முத்தார அம்மன், இடலாக்குடி, குழலாள், பாதாளன், மாகாண்டங், செல்வாள், உசித, கரமனை என்பதாகும்). அருணாசலப்புலவன் (ஆசிரியர் பெயர்), நாதர் (430), வக்கின்றாளே (780) என்ற சொற்களில் எழுத்துக் குறை நிகழ்ந்திருப்பதையும் (இவற்றின் சரியான வடிவம்:–அருணாசலப்புலவன் நாரதர், உவக்கின்றாளே என்பதாகும்) காணமுடிகிறது. இத்தகு பிழைகளும் சரிசெய்யப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

VI. எழுத்து மிகைபோல் கவனக் குறைவாலும், அவசரத்தாலும், இன்னும் குறிப்பிட்ட அச்சொல்லை எழுதியிருக்கவில்லை என்ற எழுதுபவரின் தவறான கணிப்பாலும் சொல் மிகையும் நிகழல் உண்டு.

சான்றாக – யிரு யிருபத்து (780) என அமைவதைச் சுட்டலாம். இவ்வாறமையும் பிழைகளும் நீக்கிச் சரிசெய்யப்பட்டுள்ளன.

VII எழுதிக் கொண்டே செல்லும்பொழுது இடையில் எழுத்தொன்று விடப்பட்டதாக அறிந்தால், விட்ட இடத்துக்கு நேர் மேலேயோ, நேர் கீழேயோ அவ்வெழுத்தை எழுதலுண்டு.

சான்றாக, நல்ல (574), நகலோகம் (789) என அமைவதனைச் சுட்டலாம் இவ்வாறு அமைகின்ற எழுத்துக்களையும் கவனித்து சொற்களைச் சீராக்கிப் பதிப்பித்தல் பதிப்பாசிரியரின் கடமையாகின்றது.

VIII. எழுதிவரும் ஒரு சொல்லில் ஒரெழுத்துக்குப் பதில் தவறான வேறொன்றை எழுதிவிட்டால் அதனை அடித்துவிட்டு அடுத்து, சரியான எழுத்து வடிவத்தை எழுதலுண்டு. இச்சுவடியில் தவறான எழுத்தின் மேலேயே சரியான எழுத்தையும் எழுதியிருக்கக் குழப்பம் எஞ்சுகிறது.

சான்றாக, பின்கலையில் (369), பரமலை (1610) சத்திய வாகாநீசரை (1824) என உள்ளவற்றில் தவறான ல், லை, நீ என்பவற்றின் மேலேயே ன், னை, ரீ என எழுதப்பட்டதால் குழப்பம் ஏற்பட, இவ்வாறுள்ளவற்றின் சரியான வடிவத்தையும் உணர்ந்து பதிப்பித்தலும் அவசியமாகின்றது.

இவ்வெட்டு வகையான பிழைகள் தவிர, மரகத என்பது மரதக (491) என எழுத்து முன்பின் மாற்றி அமைந்திருத்தல், ஏ—ஈ ஒலிப்பொப்புமையால் நிகழ்ந்துள்ள சிவிந்தீசனை என்பது சிவிந்தேசனை (1558) என வந்திருத்தல், விளக்கமாகச் சொல்ல நினைத்ததால் பாணிக்கிரணம் என்பது கரப் பாணிக்கிராணம் (1114) என எழுதியிருத்தல் போன்றனவும் இன்னும் இது போன்ற பல வகைகளில் வந்த பல்வேறு பிழைகளும் நீக்கப்பட்டு இச்சுவடி பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

சுவடிப் பதிப்பொப்பு

8427 – முத்தாரம்மன் கதை என்ற ஒரு சுவடி மட்டுமே நன்னிலையில் கேரளப் பல்கலைக் கழகச் சுவடி நூலகத்திலுள்ளது. முத்தாரம்மன் கதை என்ற பெயரில் சுவடி எண் இடப்படாத மற்றொரு சுவடி ஒன்றும் இந்நூலகத்திலுள்ளது. 76 x 3.2 செ.மீ அளவுடைய

நீளமான இச்சுவடியில் 11 இதழ்களில் பக்கத்துக்கு 5 பகுதியாக 25 வரிகள் வரை எழுதப்பட்டு, சுமார் 550 வரிகள் கொண்ட, தொடக்கமும், முடிவுமற்றதாக மிகுந்த சிதைவுக்காளாகியுள்ளதாக இச்சுவடி காணப்படுகின்றது. இடது ஓரப்பகுதி 25 செ.மீட்டர் நீளத்துக்கு மிகவும் சிதைந்துவிட்டது. மிகப் பிற்காலத்துச் சுவடி என்பதைத் தோற்றம் தெளிவுறுத்துகின்றது.

இழுத்தெழுதப்பட்ட எழுத்துக்கள் பெரியனவாய் இருப்பினும், ஒழுங்கான வடிவில்லாமையின் தெளிவில்லை. முயற்சித்துப் படித்துப் பார்த்த அளவில் பதிப்பிக்கப்பெறும் முத்தாரம்மன் கதையினின்றும் மாறுபட்டதாக அமைந்திருத்தலின் வரி ஒப்பீடு செய்ய உதவவில்லை.

இதே நூலகத்திலுள்ள 8028 – வில்கதை அம்மன் கதை என்ற கதைப்பாடலும் முத்தாரம்மன் கதைப்பாடலே ஆயினும் பதிப்பிக்கப் பெறும் 8427 – முத்தாரம்மன் கதைப் பாடலினின்றும் மாறுபட்ட கதையமைப்பாதலின் இதுவும் பதிப்பிற்குப் பயன்படுத்தப் பெறவில்லை.

உச்சினி மாகாளி அம்மன் கதை என்ற, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள சுவடியிலும், சென்னையில் திருவான்மியூர் என்ற இடத்திலுள்ள ஆசிய ஆய்வியல் நிறுவனத்திலுள்ள சுவடி எண். 46, 48 – உச்சினி மாகாளி அம்மன் கதையிலும் பதிப்பிக்கப்பெறும் முத்தாரம்மன் கதை போன்று இறுதியில்அம்மன் அம்மை நோய் தருவதாய் அமைந்து, முத்தாரம்மன் கதையுடன் கதைக்கருவால் ஒப்புமைப்படினும், அமைப்பு, கதைப்போக்கு, நிகழ்ச்சிகளில் முற்றிலும் மாறுபட்டிருப்பதான் இதுவும் பதிப்பிக்கப்பெறும் முத்தாரம்மன் கதை வரிகளோடு ஒப்பிடப் பயன்படுத்தப்படவில்லை.

முத்தாரம்மன் விற்கவிதை என்ற, ஆறுமுகப் பெருமாள் நாடார் அவர்களால் 1978 – இல் பதிப்பிக்கப்பெற்ற கதையும், கதையமைப்பால் வேறுபட்டதாதலின் பதிப்பொப்புக்குப் பயன்படுத்தப் பெறவில்லை.

ஆசிய ஆய்வியல் நிறுவனத்துச் (Institute of Asian Studies) சுவடிகளான 52, 27 என்ற எண்களுள்ள சுவடிகளும் பதிப்பில் வெளிவந்துள்ள முத்தாரம்மன் விற்கவிதை போன்றனவே.

இத்தகு முத்தாரம்மன் கதைப்பாடல்களே கன்னியாகுமரி, நெல்லை மாவட்ட அம்மன் கோவில் விழாக்களில் பாடப்படும் முத்தாரம்மன் கதைகளாகவும் தெரிகின்றது.

மிகுதியும் சிதைந்த முத்தாரம்மன் கதையும், உச்சினி மாகாளி கதை, வில்கதை அம்மன் கதைகளும் பாடப்படுவதாகத் தெரிகின்றது.

ஆயின் பதிப்பிக்கப்பெறும் இந்த 8427 – முத்தாரம்மன் கதையின் கதையமைப்பு, இதிலுள்ளவாறே எவ்விடத்திலும் பாடப்படுவதாகத் தெரியவில்லை

இதனால் வாய்மொழியாக இன்று பாடப்பெறும் முத்தாரம்மன் கதைகளோடும் இப்பதிப்பை ஒப்பிட இயலவில்லை.

எனவே சுவடியில் உள்ளபடி வேறு எச்சுவடியுடனும் ஒப்பிடாது இச்சுவடி தனித்த முறையிலேயே பதிப்பிக்கப் பெறுகின்றது.

சுவடிச் சொற்பொருள்

இச்சுவடியிலுள்ள மிகக் கடினமான, முக்கியமான சொற்களுக்கு மட்டும் சுருக்கமான, பொருள் அகரவரிசையில் அமைக்கப்பட்டுப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

முத்தாரம்மன் கதை – அமைப்புமுறைச் சிறப்பு

இத்தலைப்பின் கீழ் முத்தாரம்மன் கதையின் கதைப்பாடல் மரபுகள் பின்பற்றப்பட்டுள்ள முறைகளைக் காணும் முகமாக, இதன் அமைப்பு முறை பார்க்கப்படுகின்றது.

அமைப்பு முறை

கதைப்பாடல்கள் படிப்பதற்கும், பாடுவதற்கும் என்ற இருமுறைகளில் அமைவதுண்டு.

> "தானமா யிக்கதையைப் படித்தபேர் கேட்டபேர்
> தரணியி லதியதவம் பேர் பெற்று வாழுவார்"
>
> – 124 – 125.

என இக்கதைப்பாடலிலேயே குறிப்பு உள்ளமையின் இது படிக்கவும், பாடும்போது கேட்கவும் என்ற இருமுறைக்கும் ஏற்றதாக அமைந்துள்ளதெனத் தெரிகின்றது.

முத்தாரம்மன் கதை அமைப்பு முறையை 13 பிரிவுக்குள் அடக்கலாம்.

1. கடவுள் வாழ்த்து – விநாயகர் வணக்கம்
2. பல தெய்வ வேண்டுதல்
3. சரஸ்வதி வணக்கம்
4. அவையடக்கம்
5. குருபரம்பரை வணக்கம் கூறல்
6. அருந்தவம் செய்து மகவுபெறும் பேறடைதல்
7. கருத்தரிப்புப் புதுமையும், பிரசவ வேதனையும்
8. பிள்ளை பிறந்ததும் செய்த செயல்கள்
9. பிள்ளைப் பெயருக்கான காரணம் கூறல்

10. குழவியை வளர்த்த முறைமை

11. வளர்ந்த கதைநாயகர் தவம் செய்யச் சென்ற சிறப்பும், தவ மேற்கொண்டு பெற்ற வர மகிமையும் கூறல்.

12. வரம்பெற்ற கதைநாயகர் பல ஊர்கள் கடக்க, அவ்வவ்வூர்களில் நடந்த செயல்களும், குறிப்பிட்ட ஓர் இடத்தில் நாயகர் தெய்வமாதலும் தெரிவித்தல்.

13. வாழிஎன வாழ்த்திக் கதையை முடித்தல்

என இவ்வாறாகப் பகுத்து பார்க்கலாம்.

கதைப்பாடல் மரபுகளும், முத்தாரம்மன் கதை அமைப்பு முறையும்

1. தொடக்கத்தில் தெய்வ வணக்கமும், முடிவில் வாழியும் பாடுதல்.

2. கதைத் தலைவர்களை எல்லாம் தவம் இருந்து பிறந்தவர்; இறையருளால் பிறந்தவர்கள் எனக் குறிப்பிடுதல்.

3. ஆட்பெயர்கள், ஊர்ப்பெயர்கள், அணிகலன்கள் போன்றவற்றை வரிசைப்படுத்திக் கூறுதல்.

4. நாடு, நகர், இயற்கை, போர் ஆகியவற்றை வருணித்துப் பாடுதல்.

5. கதைத் தலைவர்களைத் தெய்வங்களுக்கு ஒப்பிடுதல்

என்பன ஐந்து முக்கியமான கதைப்பாடல் மரபுகள்[1] என சு.சண்முகசுந்தரம் அவர்கள் விவரிக்கின்றார்.

நாட்டுப்புற இலக்கியம், சு. சண்முகசுந்தரம், தமிழ் இலக்கியக் கொள்கைகள் 3-ஆம் தொகுதி. (ப.ஆ) டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அ.அ. மணவாளன். மார்ச் 1978. ப 214

இத்தகு கதைப்பாடல் மரபுகள் எனப் பேசப்படுவன அனைத்தையும் இக்கதைப்பாடல் தன் அமைப்பு முறையாகக் கொண்டு திகழ்கின்றது. பெரும்பான்மையான பிற கதைப்பாடல்களில் அமைந்துள்ள பல அமைப்புமுறைக் கூறுகளையும் இக்கதைப்பாடல் அமைப்பு முறையில் காணமுடிகின்றது.

இக்கதைப்பாடலில் கதைப்பாடல் மரபுகளாகப் பல கதைப் பாடல்களிலும் அமைந்துள்ள நிலைகளே அமைப்பு முறையாகத் திகழ்வதான், இத்தகு மரபுநிலைகளை நீக்கிப் பார்த்தால் கதையே இல்லையோ என்னுமளவுக்குக் கதைப்பாடல் மரபுநிலைகளின் ஆட்சி உச்சம் பெற்றுள்ளது.

இக்கதைப்பாடலிலுள்ள 2017 வரிகளில் "ஆட்பெயர்கள், ஊர்ப்பெயர்கள், அணிகலன் போன்றவற்றை அடுக்கிக் கூறுதல் என்ற கதைப்பாடல் மரபுப்படி, 748–ஆவது வரியில்,

"அரியமகா மேருவின் வலமாக வந்தனள்"

என்பது தொடங்கி, 1986–ஆவது வரியில்,

"........ பட்டபுரந் தன்னில்

வரிசைநல்ல முத்தம்மனும் வந்தனள்"

என அமையும் 1240 வரிகளிலும் அம்மன் சென்ற ஊர்ப்பெயர் அடுக்கல்களே அமைந்துள்ளன.

எஞ்சிய 777 வரிகளும்கூட, பிற கதைப்பாடல் மரபு நிலைகளின் படியே அமைந்திருக்கின்றன.

1.	தெய்வ வணக்கம்	– 1	– 149	வரிகள்
2.	அவையடக்கம்	– 50	– 67	"
3.	குரு வணக்கம்	– 68	– 125	"
4.	கதைச் சுருக்கம்	– 126	– 129	"
5.	பிறப்பிட வர்ணனை	– 130	– 137	"

6. குழவிக்காகத் தவம் செய்தலும்,
   குழவிப் பேறடைதலும் – 138 – 235 "
7. பெயர் வைப்புக்கான
   காரணம் கூறல் – 236 – 247 "
8. குழவியை வளர்த்த முறை – 248 – 323 "
9. தக்க பருவத்தில் கதைநாயகர் தவம்
   செய்யச் செல்லலும், வரம் பெறலும் – 324 – 747 "

என இவ்வாறு அமைந்து கதைப்பாடல் மரபுகளே கதையமைப்பாக வளர்ச்சி பெற்றுள்ளமை புலனாகின்றது.

இம் முத்தாரம்மன் கதை போன்றே 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிற்காலக் கதைப்பாடல்கள் பலவற்றிலும்,கதை வளர்ச்சியே கதைப்பாடல் மரபுகள் கொண்டே கட்டப்பட்டிருக்கின்றனதோ என ஐயுறுமளவுக்குக் கதைபபாடல் மரபுகளின் ஆட்சி உச்சம் பெற்றுள்ளதையும் பார்க்க முடிகின்றது.

தொகுப்பு

(1) பெரும்பான்மையான கதைப்பாடல்களும் கதைப்பாடல் மரபின்படி அமைந்திருப்பது போலவே இம்முத்தாரம்மன் கதையும் மரபு தழுவியே அமைந்துள்ளது.

(2) மிகப் பிற்காலமாகிய 19 – ஆம் நூற்றாண்டினதாதலின் கதைப்பாடல் மரபுகளே கதையை நிர்ணயித்திருக்கின்றன எனக் கூறுமளவுக்குக் கதைப்பாடல் மரபுகள் இக்கதையில் உச்சம் பெற்றுள்ளன.

(3) கதைப்பாடல் மரபுகள் இக்கதையில் உச்சநிலை எய்தியிருப்பதற்கு இதிகாச, புராணக் கதைப்பாடல்கள்போல, முன்பே இருந்த ஒரு கதையைத் தழுவியும், தொடர்புபடுத்தியும், நீட்டியும் கதைப்பாடலாகப் பாடுவது போலல்லாமலும் சமூக. வரலாற்றுக் கதைப்பாடல்கள் போன்று எங்கேனும் ஒரிடத்தில் நடைபெற்ற

நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைதல் போல இல்லாமலும், குறிப்பிட்ட தெய்வம் குறித்த கதை நிகழ்ச்சிகளை முழுக்கவுமே கற்பிந்துப்பாட வேண்டிய தேவை கதையாசிரியருக்கு இருந்தமையே காரணம் எனலாம்.

முழுவதையும் கற்பித்துப் பாடவேண்டிய அவசியம் நேரிட்டதால், கதைப்பாடல் மரபுகளையே அடிப்படையாக்கிக் கதையமைக்கும் நிலை நேரிட்டாதோ எனக் கருத வேண்டியிருக்கிறது.

(4) கதைப்பாடல் மரபாகிய ஊர்பெயர் அடுக்கி வருதலைப் பாடலின் முக்கால் பகுதியாகக் கொண்டிருப்பதனை இக்கதைப் பாடலின் ஒரு சிறப்பம்சமாகக் கொள்ளலாம்.

(5) அம்மன்கள் பல இடம். மலை, ஊர்களில் அம்மை நோயைப் பரப்பியும், தீர்த்தங்கள் பலவற்றில் நீராடியும், தலங்கள் பலவற்றைக் கடந்தும் வரும்பொழுது ஆங்காங்குள்ள தெய்வங்களைக் கண்டு வணங்கியும், பல சிறு தெய்வங்களால் வணங்கப்பட்டும் வந்தனர் என அமையும் நிகழ்ச்சிகளையே கதைக் கருவாக இக் கதைப்பாடற் சுவடி கொண்டிருத்தலின், ஊர்ப்பெயர் அடுக்கல் என்ற கதைப்பாடல் மரபு இக்கதைப் பாடலில் உச்சம் பெற்றுத் திகழ வாய்ப்பேற்பட்டிருக்கிறது என்று கூறலாம்.

முத்தாரம்மன் கதைப் பொருள் – ஒரு நோக்கு

முத்தாரம்மன் கதையில் கூறப்பட்டுள்ள கதைப் பொருண்மை இப்பகுதியில் விளக்கப்படுகின்றது.

கதை விளக்கக் குறிப்புக்கள்

I பட்டபுரத்தில் வீற்றிருக்கும் முத்துத்தாய்மீது கதைபாட , தந்தி முத்தாகிய ஆனைமுகன் காக்க வேண்டும் என்ற விநாயகர் துதியிலமைந்த காப்புப் பாடலுடன் முத்தாரம்மன் கதைப்பாடல் தொடங்குகிறது (வரிகள் 1–5).

II. 877 பிரமாதி வருடம், கார்த்திகை மாதம், ஞாயிறு திருவோணம், பூர்வ பஞ்சமி, குருவுதைய அமிர்த யோகம் என இவ்வாறு அமைந்த தமிழாண்டு, மாத, நாள், நட்சத்திரம் உடைய காலவமைதியிலும்,

கொல்லமாண்டு 1047 (கி.பி. 1872) ஆவணி மாதம் 29–ஆம் தேதி, பூர்வ பட்சமும், குருவாரமும்,அசுபதி நட்சத்திரமும் கூடிய நல்யோக, நன்னாளில் வள்ளியூரைச் சேர்ந்த முத்துக் கருப்பப் புலவர் மகன் அருணாசலப் புலவன் எழுதியதாகக் காலம், ஆசிரியர்பற்றிய குறிப்புக்கள் விநாயகர் வணக்கத்தினை அடுத்து இடம்பெற்றுள்ளது.

III. காளியுடனாடும் சங்கரர், கதிர்காம வேலவன், அரிசி, கோதும்பை, சிறுபயறு, பால், துவரை, சீனி, சர்க்கரை, கடலை முதலாக அதிரசம், தேன்குழல், வடை, மோதகம், தோசை, பணியாரம் ஈறாக உள்ள தின்பண்ட வகைகளைக் குடவயிறு நிறைய உண்ணும் புகர்முகவன், செங்கமலப் பூவில் வீற்றிருக்கும் இலக்குமி, சரசுவதி போன்ற தெய்வங்களை வணங்கல் அடுத்து அமைந்துள்ளது (13–49).

IV. தொடர்ந்து, "வெள்ளி, வான்மீன்', மின்மினி போன்றன சந்திரனோடும், தீபம் சூரியனோடும், குரங்கு,நாய் போன்றன சிங்கத்தினோடும் ஊமையும், செவிடனும் மதிமந்திரியோடும், பூநாகம் – புவிதாங்கும் ஆதிசேஷனோடும், பித்தளை – பொன்னோடும், கரடி – தேனோடும், மூடன் முற்றுமறிந்த கணித வல்லானோடும்

இணையாகத் துணிந்தது போல, கல்வி வல்ல புலவர்கள் மத்தியில், இக்கதை பாட வந்த நான், "புலவர்களே உங்கள் வாய்த் தாம்பூலத்தை என் வாயாகிய காளாஞ்சி கொண்டு ஏந்துகிறேன்" எனக் கூறும் ஆசிரியர் அவையடக்கம் அமைந்துள்ளது. (50 – 67).

V. பர சமய கோளரி (சம்பந்தர்) சீரெங்கநாதர், குப்பையாண்டி, சமுகன் (சண்முகம்) குளத்தூரய்யன் சீஷனாகிய மாந்தைக் குமாரவேல், சந்ததிப் பண்டாரம், கள்ளப்பிரான் கவிராசர், திருமணிக் கவிராசர், நாகப்புலவர், சிதம்பரதேசிகன், மாடப்புலவர், அய்யம்பெருமாள் புலவர், சோணையாண்டிப் புலவர், அழகரடியாப்புலவர் போன்ற தன் குரு பரம்பரையையும், தன் குருவையும், முத்தம்மன் கதை சொல்லி வைத்த அணைஞ்ச பெருமாள் புலவன் அருளிய இருளணைஞ்ச பெருமாளையும் அடிவணங்கி இக்கதையைப் படித்த, கேட்ட பேர்களையும் வாழ்த்திக் கதை கூறத் துவங்கும் பகுதி அடுத்து இடம் பெறுகின்றது.

VI. பத்தாங் கடலாய பாற்கடலில், பளிங்கு மண்டபத்திலுள்ள பொற்பீடமமர்ந்து ஆட்சி செய்யும் நாகராசாவின் தங்கை நாக கன்னிக்காகக் காசிப ரிஷி செய்த வேள்விப் பயனால் பிண்டம் கிடைக்கிறது. அதனை நாக கன்னி அருந்தக் கர்ப்பமுறுகிறாள்.

பத்தாம் மாதத்தில் இரு பெண் குழவிகளாகப் பெரிய முத்தும், சின்ன முத்தும் பிறக்கின்றனர்.

கானகம் சென்று வாழ்ந்திருந்த காசிப ரிஷியும் வந்து கண்டு முல்லை வென்ற நகைமுத்து மகளிர்க்கு முத்து எனப் பெயர் சூட்டி, நாகராசனோடு கலந்தாலோசித்து விசுவகர்மனை அழைத்துத் தொட்டில் செய்விக்க, குழந்தைகள் கண் வளர்ந்து ஐந்து வயதடைகின்றனர்.

பெரிய முத்துவுக்கும், சின்ன முத்துவுக்கும் ஐந்து வயதாகிய போது, நஞ்சாறு மிடற்றானை நோக்கித் தவம் செய்யுமாறு நாககன்னி அனுப்ப, வடகயிலைக்கு இருவரும் பயணமாகித் தெய்வ கெங்கை ஆற்றினருகே கடுந்தவம் புரிய, தவமகிமை அனலாகிச் சிவபிரானைச் சுட, இருவரையும் சிவன் அழைத்து தவ நோக்கம் கேட்க, உலகில் மருள் நீக்கி அருள் சுரக்க வழி உண்டாகுமாறு அம்மை முத்துக்களும்,

உலகெங்கும் பயணம் செல்ல, படை பரிவாரங்களும் வேண்டும் என வரம் கேட்கிறார்கள்.

வரமும், பரிவாரங்களும் பெற்று, மேருவை வலமாக வந்து, வட பகுதியினின்று தென்னாடு நோக்கி வருகின்றனர். கடந்த மலை, தீர்த்தம், தலம், ஊர்ப்பெயர்கள் விவரிக்கப்படுகின்றன.

டில்லி வந்தபோது, ஆட்சியிலிருந்த உறக்குப் பாதுஷா இஸ்லாம் மதம் துறந்து அம்மன் வழிபாட்டை மேற்கொள்ளுமாறு, அம்மை நோய் பரவச் செய்து ஆட்கொள்ளும் நிகழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது.

கடந்து வரும் ஒவ்வோர் இடத்திலுமுள்ள தெய்வங்களை வணங்கியும், சில இடங்களிலுள்ள தெய்வங்களால் வணங்கப்பட்டும், ஆங்காங்குள்ள புனித தீர்த்தங்களில் நீராடியும், தம்மை வணங்காத, தம்மை மறுக்கின்ற ஊர் முழுவதிலும் அம்மை முத்தை விதைத்து ஆட்கொண்டு செல்வதாகக் கதை நிகழ்ச்சிகள் அமைகின்றன. பிற மாவட்டங்களைவிட நெல்லை, கன்னியாகுமரி மாவட்டத்திலேயே மிகுதியான ஊர்களுக்குச் சென்றுள்ளதாக விளக்கப்பட்டுள்ளது.

பல்லூரும் கடந்துவந்து இறுதியில் பட்டபுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளித் தெய்வமாக நிலைத்ததாகக் கதை முடிவுறுகின்றது.

பாடலாசிரியர், பிற ஆசிரியர்கள் பற்றிய குறிப்புக்கள்:

தெய்வ வணக்கம், அவையடக்கத்தினை அடுத்து, கதை துவங்குவதற்கு முன்பாகவே இக்கதைப் பாடலின் ஆசிரியரான அருணாசலப்புலவர், அவரது குரு, இருவர் காலத்திய குரு பரம்பரையினரைப் பற்றிய விளக்கங்கள் போன்றன குரு வணக்கம், குரு பரம்பரை வணக்கம் கூறுமுகமாக விளக்கப் பெற்றுள்ளன. இதனால் ஆசிரியரது சமகாலத்திய, அவருக்கு முந்தைய தமிழ்ப் புலவர் வரிசை பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

"திருநாதன் மாலரி வரியோதி வைத்த
சீரெங்க நாதர் சீர்பாத மறவேனே"

(74–75)

என்ற வரிகளால் சீரெங்கநாதர் என்பவர் 'அரி' என ஓதி இக்கதைப் பாடலாசிரியரான அருணாசலப்புலவருக்கு கல்விப் பயிற்சியைத் துவக்கி வைத்தவர் என்பதும்,

"வருநாத னாங்குளத்தூ ரய்யன்சீஷ னாகும்

மாந்தைக் குமாரவேல் சித்த மலரடியேன்"

(78 – 79)

என்பதனால் குளத்தூரய்யன் சீஷனாக மாந்தைப் பதியைச் சேர்ந்த குமாரவேல் என்பவர் இருந்தார் என்பதும்.

"மறவாத வில்வீசு கோல்குட நாணென்று

மாந்தைபெறு வேந்தர்தமில் வரிசைபெறு தீரன்

திறமா னகத்தநகர் பெருமாள்சொல் புத்திரன்

திருமேனிக் கவிராசன்"

(95 – 98)

என்ற வரிகளால்,

மாந்தை வேந்தர்களிடையே குடவொலியோடு, வில்லில் கோல் கொண்டு அடித்து ஒலியெழுப்பிப் பாடும் வில்லுப்பாட்டுப் பாடி, தக்க பரிசுகள் பெறுபவரும், அகத்தீசுவர நகரத்தைச் சேர்ந்த பெருமாள் புலவரின் புத்திரருமானவர் திருமேனிக் கவிராசர் என்பதும் புலனாகின்றது.

அண்ணாவி மாடப்புலவர் என்பவர் ஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டவராகவும், இக்கதைப் பாடலாசிரியரான அருணாசலப் புலவருக்கு வில்லில் பாடும் முறையைப் பயிற்று வித்தவராகவும் இருந்தார் என்பது,

"தேசிகன் பரசமய சிங்கத்தின் சீஷன்

சித்தகுரு மனைகாவ லன்பெத்த போசன்

ஆசுகவி வீசுகோல் பேசுவில் தொழில் தந்த

அண்ணாவி மாடப்புலவர் தமையும் பணிந்தோம்"

(103 – 106)

என்ற வரிகளால் புலாகின்றது.

"காசியும் கன்னியா குமரியும் புகழ்பெற்ற

கனகோவ லன்கதையைக் கத்த காராளன்

மாசில்லா னய்யம்பெரு மாள்புலவர்"

(107 – 109)

என்பதால், வடநாட்டிலுள்ள காசி முதலாக தென்னாட்டு எல்லையாகிய கன்னியாகுமரி வரையும் புகழ்பெற்றுத் திகழந்ததாகக் கோவலன் கதை இருந்தது என்பதும், இக்கதையைக் கற்றுச் சீரிய முறையில் பாடுதலில் வல்லவராக அய்யம் பெருமாள் புலவர் விளங்கினார் என்பதும் புலப்படுகின்றது.

இம் முத்தாரம்மன் கதையை முதலில் பாடி வைத்தவர் இருளணைஞ்ச பெருமாள் என்பதும், இவர் அணைஞ்ச பெருமாள் புலவரின் மகன் அல்லது சீடர் என்பதும்.

"சீர்வள ரணைஞ்சபெரு மாள் புலவ னருளிய

ஞானமாகி யிருளணைஞ்ச பெருமாள் தானும்

நல்ல முத்தம்மன் கதைசெல்லி வைத்தானே"

(121 – 123)

என்ற வரிகளால் தெரியவருகின்றது.

அவதார நோக்கம்

அம்மனின் அவதார நோக்கங்கள் எவை என்பது கதைப்பாடலில் பல இடங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாரை வதைத்தாள்? யாரையெல்லாம் காத்து ஆட்கொண்டாள் என அம்மனின் செயல்கள் பற்றிக் கூறும்பொழுதும், அவதாரமெடுத்த காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

"அறந்தழைத் திடவேசெய்ய அரியதோர் புவியில்வந்தாள்"

(209)

என்பதால், மறம்நீக்கி அறம் செழிக்கச் செய்ய அவதாரம் எடுத்தாள் என்பதும்,

"மருள் செய்யு மருளை நீக்க
மலங்கிடு மலக்கந் தீர்க்க
வெருள் செய்யும் வெருளை நீக்க
வேண்டிய வரந்தா மெய்யா"

(465 – 468)

எனச் சிவபிரானிடம் பெரியமுத்தும், சின்னமுத்தும் வரம் கேட்கின்ற முறையில், உலகில் மருள் நீக்கி, அருள் நிரப்ப அவதாரம் எடுத்தனர் என்ற கருத்துக்களும் புலப்படுத்தப்பட்டுள்ளன.

"சன்னை சொன்னவர் தங்களைக் கொல்லுதே"

(990)

என்பதனால் சாடையாக அவதூறு செய்து தூற்றுவாரை வதைத்தாள் என்பதும்,

"ஓரங்கள் சொன்னவர் ஒக்க மடியுதே"

(998)

என்பதனால் வெற்று வீரம் பேசித் திரிபவரையும் அம்மை நோய்க்கு ஆட்படுத்தி அழித்தாள் என்பதும்,

"வண்டமிழ்ப் புலவரென் றெண்ணாத பேர்களை
வாயிலே மண்ணு மணலுஞ் சொரிந்தாள்"

(1710 – 1711)

என்ற வரிகளினால் தமிழிழிவு செய்வோருக்கும் அம்மை நோய் தந்து மரணம் தழுவச் செய்தாள் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மன்று தன்னி லிரங்காத நெஞ்சரை
மாய முத்தை விரைத்து மண்ணாக்கினாள்
அன்று மின்று மிரங்குவாள் தங்களை
ஆதரித்துப் பெரியவ ராக் கினாள்"

(1959 – 1962)

என்ற வரிகளால் இரக்கமற்றோரை அம்மை முத்து விதைத்து வதைத்ததையும், இரக்கமுள்ளோரை ஆதரித்துக் காத்தமையையும் உணரமுடிகின்றது.

"இரங்கி நின்றவர் தங்களைக் காத்தனள்
இரக்க மத்தவர் தங்களைத் துரத்தினாள்"

(994 – 995)

என்ற வரிகளிலும் இரக்க மனம் கொண்டோரைக் காத்து, ஈவிரக்கம் அற்ற அரக்க மனத்தினரை அழித்த உண்மை வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

"இளகாத நெஞ்சரையு மிரங்காத வஞ்சரையும்
எட்டுலெச்சம் பூதம்விட்டுக் கெட்டுலெச்சை யேகெடுத்து"

என்பதாலும் கல்நெஞ்சரையும், இரக்கமில்லாத வஞ்ச நெஞ்சத்தாரையும் எட்டு லட்சம் பூதப்படையை ஏவி, லெச்சை கெட வைத்தாள் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனால்,

(1) உலகில் மருள்நீக்கி, அருள் பெருகச் செய்ய அம்மை நோய் தரலை ஒரு கருவியாக மேற்கொண்டிருக்கிறாள் என்பதும்,

(2) அம்மை நோய் பரவுவதால் தாக்கப்பட்டாரைக் கண்டு பிறர் இரக்க உணர்வு கொள்கிறார்களா? அன்னாருக்கு உதவும் நன் முயற்சியில் ஈடுபடுகிறார்களா? என அறியவும்,

(3) வலியார், எளியார் என்ற வேறுபாடற்று, மாந்தருள் மன ஒற்றுமையைத் தோற்றுவிப்பதற்கும் அம்மை நோய் தந்து ஆட்கொள்ளப்பட்டதாக அவதார நோக்கங்கள் உரைக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் அம்மை நோய் பரவுதல் கண்ட மக்கள் அம்மை நோய் தம் தவறுகளுக்காகவும், இரக்கமற்ற தங்கள் குணத்துக்காகவும், தெய்வ நிந்தனை கூறுதற்காகவும் தெய்வம் மேற்கொள்ளும் செயலே என நம்பிய நம்பிக்கைகளின் விளைவேயாகும்.

முத்தாரம்மனைக் குறிக்கும் பெயர்கள்

இக்கதையில் முத்தாரம்மன் பெரியமுத்து (வரி. 910) சின்னமுத்து (213) என்ற இரு அம்மன்களாக உரைக்கப்பட்டுள்ளது. இரு அம்மன்களையும் குறிப்பிடுவனவாகக் கீழ்க்காணும் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. நல்ல முத்து, அழகுமுத்து போன்ற அடைகளை நீக்கிய பெயர்களாகத் தரப்படுகின்றன.

கங்காளி, திரிசூலி, முத்தம்மன் (17), முத்து மாதா (36), முத்துமாலை (246), முத்து (299), முத்தரசு (300), ஆதிமுத்து (305), செல்லி (311), முத்தாரம்மன் (519), முத்துத்தாய் (596), அம்மன் (926), முத்தார் (962), மாரி, கெவுரி (1078), துர்க்கை, நீலி, கபாலமுண்டி (1079), வீரி, பவுரி (1080), காளி, சண்டி (1081), பாரியநாரி (1082), பஞ்சாட்சரத்தி, பரஞ்சோதி, ஆதி (1083), முத்துக்காரணி (1162 – 1163), பத்திரகாளி,

மாகாளி, முத்துநாயகி (1267), பட்டபுரத்தம்மன் (2010) என அம்மன் 31 பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளாள்.

இதிலுள்ள கங்காளி, திரிசூலி, பஞ்சாட்சரத்தி, பாரியநாரி, காளி, சண்டி, பரஞ்சோதி, ஆதிமுத்து, ஆதி, பத்ரகாளி, மாகாளி, கெவுரி, துர்க்கை, நீலி என்ற பெயர்கள் சக்திக்கு உரியனவாதலின், சைவ சமயத்தில் சிவபிரானின் மனையாளாய சக்தி என்ற பெருந் தெய்வ நிலையோடு முத்தாரம்மன் இணைந்து கலந்துவிட்ட காலகட்டத்தில் இக்கதைப்பாடல் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்ற உண்மையை இப்பெயர்கள் புலப்படுத்துகின்றன.

முத்தம்மன், முத்துமாதா, முத்தரசு, முத்துத்தாய், முத்தார், ஆதி முத்து, முத்து, முத்துக்காரணி போன்ற பெயர்கள் அம்மை முத்துக்குக் காரணமானவள் இவ்வம்மன் என்ற எண்ணம் ஆழமாக மக்கள் மனத்தில் வேரூன்றியிருந்தமையை வெளிப்படுத்துகின்றன.

முத்தாரம்மன் கதை காட்டும் சமுதாயம்

மதுரை மாநகரில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால் வருணத்தாருக்கும் தனித்தனியாகத் தெருக்கள் அமைந்திருந்த நிலையை,

"நாலுதெருத் தோறுமாந்தை வேந்தர்க ளலங்கரித்தார்"

(1261)

"ஆதிமறை யோர்தெருவும் அரசர் தெருத்தனிலும்

அழகுவணி கர்தெருவும் அருள்வெள்ளா ளர்தெருவும்

சோதிசின்ன முத்துத்தாயும் படையோடே சென்றுநின்று

துடுக்காய்முத் தைவிரைத்துச் சோதித்தா ளடங்கலையும்"

(1250–1253)

என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

"சாதியெளி யோர்களான சங்கமசா தித்தெருவும்

சண்டமாருதமாய் முத்தைத் தான்விரைத்துச் செல்லலுற்றாள்"

(1254 – 1255)

என்ற வரிகளால் நால் வருணத்துளடங்காத எளியவர்களாகிய கலப்புச் சாதி மக்களுக்கெனத் தனியாகத் தெருக்கள் இருந்த நிலையும் தெரியவருகின்றது.

அத்துடன் கலப்பு மணம் நிகழ்ந்திருக்கின்றது என்பதும், அவர்கள் கீழ்ச் சாதி அளவில் தாழ்த்தி மதிக்கப்பட்டார்கள் என்பதும் புலனாகின்றது.

மேலும் மேல்சாதி, கீழ்ச்சாதி வேறுபாட்டுணர்வு ஆழமாகக் காலூன்றி இருந்த சமுதாய நிலையும் இவ்வரிகளால் தெளிவாகின்றது.

இலந்தையடித்திட்டிலும், கண்ணாளர் தெரு, தேவதாசியர் தெரு, இடையர் தெரு, சாலியர் கைக்கோளர் தெரு, பட்டு நெசவாளர் தெரு என்ற பிரிவுகளுடன் தெருக்கள் தொழில் அடிப்படையில் பகுக்கப்பட்டிருந்தமையை,

"கர்க்கிஷத் தொழில்கள்கத்த கண்ணாளர் தெருத்தனிலும்"

(1848)

"கன்னியர் கொண்டாடும் முத்துநாச்சியார் சன்னிதிக்கேத்த

காரிகையார் தான்வளருந் தேவதாசியள் தெருவில்"

(1852 – 1853)

"அன்னைய ரிடைத் தெருவும் சாலியர்கைக் கோளர் தெரு

அட்டதிக்குங் கொண்டபல பட்டாடைத் தெருக்கள்தொறும்"

(1856 – 1857)

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

மேலும் முத்துநாச்சியார் கோவிலில் ஆடுதற்கென்று தேவதாசியர் இருந்தமையும், அன்னாருக்கென்று தனித்த தெரு அமைந்திருந்தமையும், தேவதாசி முறை இக்கதைப்பாடல் எழுந்த கால கட்டத்தில் இருந்தது என்ற வரலாற்றுச் சான்றும் இப்பாடல் வரிகளால் (1852 – 1853) தெரியவருகின்றது.

நால்வருணத்தாரில் அந்தணருக்கே சமுதாயத்தில் முதலிடமும், முக்கியத்துவமும் இருந்தது என்பதை,

"ஆதிமறை யோர் தெருவும் அந்நதணர் தெருவும்"

(1250)

என அந்தணர் தெரு முதலில் கூறப்பட்டுள்ளமையும்,

கதைப்பாடலின் இறுதிப்பகுதியாய 'வாழி' என்பதில் (அனைவரையும் நன்றாக வாழ வேண்டும் என வாழ்த்தி முடிக்கும் பகுதி)) முதல் வாழ்த்தாக,

"இசை வான மறையோரும் வாழியே"

(2008)

என முதல் வாழ்த்தாக அந்தணர் வாழ வாழ்த்துக் கூறியிருத்தலும், அன்னார் சமுதாயத்தில் பிறரைக் காட்டிலும் உயர்ந்த இடம் பெற்றிருந்தமையை உறுதி செய்கின்றது.

கதைப்பாடல்கள் கோயில் விழாவின்போது, ஊர்க்கிராம அதிகாரியாகிய நாட்டாண்மைக்காரர் முன்னிலையில் பாடப்பட்டு வந்தது என்ற நிலையை,

"வருந்தாத நாட்டாண்மைக் கரையாளர் வாழியே"

(2009)

என நாட்டாண்மைக்காரருக்கும் வாழி எனக் கூறி முடித்துள்ள வரிகள் தெளிவுறுத்துகின்றன.

சமய நிலை

சைவம், வைணவம் என்ற இரு சமயங்களும் சிறப்பான நிலையில் பரவியிருந்திருக்கின்றன. சைவ, வைணவத் தலங்களுக்குச் சென்று அவ்வவ் மதத்துக்கு ஏற்ற வழிபாட்டை மக்கள் செய்து வந்திருக்கின்றனர்.

"அனுப்பவே சந்தனந் திருமாலை தீர்த்தமும்

அழகு சட கோபமுந் தரித்தனள்"

(1800 – 1801)

என அமையும் வரிகள் வைணவக் கோயிலின் வழிபாட்டைத் தெளிவுபடுத்துகின்றன.

பொதுவாக இந்துக்கள் எனப்படுவோர் இவ்வவிரு சமயக் கோயில்களுக்கும் வேறுபாடின்றிச் சென்று வந்துள்ளளமை தெரிகின்றது.

அம்மனே அவ்விடங்களிலுள்ள சைவ, வைணவத் தலங்களுக்குச் சென்று, அவ்வத் தலத்துத் தெய்வங்களை வணங்கியும், சில தெய்வங்களால் வணங்கப்பட்டும் வந்ததாகக் காட்டப்பட்டுள்ளதால், இருசமய இணைப்பு நோக்கு செம்மைபெறச் செயல்பட்டுக் கொண்டிருந்த சமயநிலை இக்கதைப்பாடலெழுந்த சமுதாயத்தில் நிலவியதென்பது உறுதிப்படுகின்றது.

"அரியும் சிவனும் ஒண்ணு – இதை

அறியாதவன் வாயிலே மண்ணு"

என்ற நிலையே அமைந்திருக்கின்றது.

இக்கதைப்பாடல் அம்மன் வழிபாடு சக்தி வழிபாட்டோடு

இணைந்த கால கட்டத்தில் பாடப்பட்டுள்ள நிலையை,

ஆதிபத்ரகாளி, மாகாளி, துர்க்கை, கெவுரி, நீலி, கங்காளி, திரிசூலி, பாரியநாரி, காளி போன்ற சக்தியின் பெயர்களை முத்தாரம்மனின் பெயர்களாகக் கூறியிருத்தலாலும்,

"......... யெருக்கலை மாலையிட்டு"

(801)

"அரவக் கொடிநிழத்த அலகைக் கொடிநடக்க"

(827)

"சக்கரவாளக் குடையு மிக்காடலு மொக்கவர"

(830)

"வந்தாளே சிங்க ராச வெருதினாள்"

(1478)

என்ற பாடல் வரிகளில் சக்திக்குரிய சின்னங்கள், வாகனங்களையே முத்தாரம்மனுக்குரியதாக இயம்பியுள்ளதாலும் தெளிவாக உணர முடிகின்றது.

ஆக, சக்தியே அம்மன் என்பதாலும், சக்தி சிவனின் மனைவி என்ற நிலையிலும், சிவன் சைவ சமயக் கடவுள் என்பதாலும், வைணவ சமயத்தைவிடச் சைவ சமயம் தூக்கலாக உள்ள நிலையை இக்கதைப்பாடலில் காணமுடிகின்றது.

சக்தியே முத்தாரம்மன் என அம்மனைப் பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்திக் காட்டியுள்ள நிலையை இக்கதைப்பாடலில் காண முடிகின்றதெனினும், சில இடங்களில் சக்தி வேறு அம்மன் வேறு என மாறுபடுத்திக் காட்டி, அம்மனைத் தனித்ததொரு தெய்வமாகப் பிரித்துக் காட்டியுள்ளமையையும் பார்க்க முடிகின்றது. சான்றாக,

"கூளியும்பூ தப்படையுங் காளியு முன்னேநடக்க"

(824)

"ஆதியை நினைந்துநல்ல விபூதியுங் கொடுத்தனளே"

(1275)

"மாகாளி பேய்காளி சூழவே"

(479)

"மாரிமுப்புராதி துர்க்கை மட்டுள்ள புட்டாபுரத்தி"

வரிசைப் படைநடத்தப் பிரிசத்துட னெழுந்து"

(1402 – 1403)

"முப்புராதி மாரிதுர்க்கை உக்கிரகாளி வீரி

பகையாய் வரும்பிம ராக்கிசக்தி முன்னேவர"

(1633 – 1634)

என வந்துள்ள வரிகளில் சக்தியாய காளி, ஆதி, துர்க்கை என்பவர்களும் பரிவாரங்களாக முத்தாரம்மனின் உடன்வந்தனர் என அமைவதால் சக்தியினும் வேறுபட்ட தனித்த, நிலைக்கு முத்தாரம்மன் உயர்த்தப்பட்டுள்ளமை புலப்படுகின்றது.

அம்மை முத்துக்கள் முத்தாரம்மனால் வருகின்றதென்றும், அதிலும், பெரியம்மை பெரிய முத்தம்மனாலும், சின்னம்மை சின்னமுத்தம்மனாலும் தோன்றுகின்றதென்றும், திடமாக மக்கள் நம்பியதால் இக்கதைப்பாடலில் அம்மை நோய்க்குரிய அம்மன் வழிபாடு உச்சம் பெற்றுத் திகழ்கின்றது.

அம்மை நோய் வரும் என்று அஞ்சியும், வந்தபின் அதனை நீக்க அம்மன் அருள் வேண்டியும், அம்மனுக்குகந்த முறையில் பூசைகள் செய்ததாகக் கதைப் பாடல் காட்டுகின்றது.

"தருவெனக் கொண்டும் பூசைக ளேத்தியே

சந்திதோறு மகாமேரு நிறுத்தியே

இருமனது வையாமல் கிடாய் வெட்டி
ஏற்க வேகொள் மார்க்கம தாக்கியே
அருமை போலும் மலைபோலச் சோறுகறி
ஆக்கி வைத்துக் குவித்துச் சேவித்து
குவித்து நல்ல மதுக்குடம் வைத்தனர்
கோடி தோரணம் நெய்விளக் கேத்தினர்"

(1012 – 1019)

என்றும்,

"நின்ற தோரணங்கள் மகாமேருவின் நிலைநிறுத்தி
நிலையாய்க் குறிஞ்சிநாட்டி நிலைவிளக் கேத்திவைத்தார்
நன்றென வாழைகள் நாட்டி நல்லதோர்மேல் கட்டிகெட்டி
நாலுதெருத் தோறுமாந்தை வேந்தர்க ளலங்கரித்தார்
குன்றெனச் சோறுகறியுங் கோழிகிடா யாடுவெட்டிக்
குங்கிலியத் தீபத்துடன் கொட்டுவாச் சியமுழங்க"

(1258 – 1263)

என்றும் அமைந்துள்ள வரிகள் அம்மனுக்குப் பூசை செய்த முறைகளைத் தெளிவுறுத்துகின்றன.

அச்சத்தின் அடிப்படையில் பக்தி தோன்றி, அம்மை நோயின் கொடூரம் வலுப்பெறப்பெற, பக்தியும் பெருகியுள்ள நிலைகளைக் காண்கிறோம்.

தங்கள் உயிரைப் பலிகொள்ளும் அம்மனை ஆற்றுவிக்க, ஆடு, கிடாய், கோழிகளைப் பலிகொடுத்து மாற்றுத் தேடியுள்ளனர்.

அம்மை நோயின் கொடுமை கண்ட, அதனின்றும் மீள இயலாத டில்லி பாதுஷாவும், தன் சமயமான இஸ்லாம், அம்மை நோய் நீக்கும் தன்மையில் பயனற்றுப் போகவே, அம்மனுக்காட்பட்டு, அவளுக்குகந்த

முறையில் பூசைகள் செய்ததாகக் குறிப்புக்கள் உள்ளன (943 – 1035). பாதுஷாவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளனைத்திலும் அம்மை நோய்க் கொடுமை யினின்றும் விடுபட, அம்மன் வழிபாடு துவக்கப்பட்டுள்ள தாகத் தெரிகின்றது. இக்கதை எழுந்த கால கட்டத்துக்கு முன்னர் அம்மை நோய்க் கொடுமையால் மகம்மதிய மக்கள் பலர் சைவம் தழுவி மதம் மாறியதைப் பாடற் குறிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன.

வரலாற்றுச் செய்திகள்

இக்கதைப்பாடல் 1872– இல் எழுத்துருப் பெற்றதாயினும், அதற்கு முன்னர் வாய்மொழியாகப் பல காலம், பலர் வழி, பல இடங்களில் பாடப் பட்டு வந்த பாடலாதலின், வரலாற்றுக்குதவும் செய்திகள் பலவற்றையும் இதில் காணமுடிகின்றது.

I. "செந்தமிழ் பிறந்த வடவேங்கடஞ் சிறப்பைச் சொல்வாம்"

(1051)

"வட வேங்கட மென்றதோர் – தமிழ்

மண்டலந் தன்னில் வரிசை பெற"

(1052 – 1053)

என்ற வரிகளின் மூலம் வடவேங்கடம் தமிழகத்தின் வடவெல்லையாக மட்டுமன்றி, செந்தமிழ் பிறந்த நிலமாகவும், தமிழ் பேசப்படும் மக்களைக் கொண்டதாகவும் திகழ்ந்திருக்கின்றதென்ற உண்மை புலனாகின்றது.

பின்னால் காலப்போக்கில் ஆந்திர மாநில எல்லைப்புறத் தெலுங்கு மக்களின் குடியேற்றத்தாலும், தமிழ் மக்களே தெலுங்கு மொழி பேசிப் பெருகியதாலும், தெலுங்கு மக்களை அதிகமாகக் கொண்ட பகுதியாகி, ஆந்திர மாநிலத்தோடு இணைக்கும் நிலை உருவாகி விட்டது எனலாம்.

II. அம்மன் தெற்கு நோக்கி வரும்பொழுது டில்லியை அடைந்த–தாகவும், அங்கு பாதுஷா ஆட்சி நடைபெற்று வந்ததாகவும் பாடலில் குறிப்புக்களுள்ளன.

"துடந்துரு மக்குப் பாரிசாவும்" (946)

"அக்குப் பாரிசாக் கந்திரி யிட்டனன்" (1005)

"அக்குப் பாரிசாக் கந்திரி யிட்டனர்" (1029)

என்ற தொடர்களால் டில்லியை ஆண்ட பாதுஷாவின் பெயர் பேச்சு வழக்கில் 'அக்குப் பாரிசா' எனக் குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம்.

இதன் சரியான வடிவம் "உறக்குப் பஹதூர்ஷா" என்பதாக இருத்தல் வேண்டும்.

மொகலாயர்களின் வரலாற்றைக் காணும்பொழுது கி.பி. 1707 முதல் கி.பி. 1862 வரையும் பஹதூர்ஷாக்களின் ஆட்சி நடைபெற்று வந்திருப்பது தெரின்றது.

கி.பி. 1707 – இல் முதலாம் பஹதூர்ஷா என்பவர் பஹதூர்ஷாக்களின் ஆட்சியைத் துவக்கி வைத்துள்ளார். இவருக்குப் பின் பல பஹதூர்ஷாக்கள் ஆட்சிசெய்து, இறுதியில் கி.பி. 1862–இல் இரண்டாம் பஹதூர்ஷாவின் ஆட்சியோடு பஹதூர்ஷாக்களின் ஆட்சி முடிவுற்றிருக்கின்றது.[2]

பல பஹதூர்ஷாக்களின் பெயர்கள் வரலாற்று நூல்களில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

எனவே, கி.பி. 1707 – கி.பி. 1862 – க்கு இடைப்பட்ட பஹதூர்ஷாக்களில் உறக்குப் பஹதூர்ஷா என்ற ஒருவரும் ஆட்சி செய்திருக்கக் கூடும்.

தவிர "1618–ஆம் ஆண்டு அஹமதாபாத்திலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும், ஒருவிதத் தொற்றுநோய் பரவி, நூற்றுக்

---

2 டாக்டர் கி.ர. அநுமந்தன், ந.க. மங்களமுருகேசன், இந்திய வரலாறு (கி.பி. 1206 முதல் 1773 வரை). (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1976), பக்.532-542

கணக்கான ஐரோப்பியர்களும் இந்தியர்களும், இறந்தனர். அந்த தொற்று நோயைப்பற்றித் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. அது இந்தியாவில் 1918–ஆம் ஆண்டு ஏற்பட்டுப் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்ற இன்புளுயன்ஸா (Influenza) என்ற தொற்று நோய் போன்றதாக இருக்கலாமென்று கருதப்படுகின்றது. [3]

அது அம்மை நோயாக இருக்கலாம். கி.பி. 1618–இல் வந்த அம்மை நோய் 1707–இல் பஹதூர்ஷாக்கள் ஆட்சியில் மீண்டும் ஒருமுறை பலமாகத் தாக்கவே, ஹக்குப் பஹதூர்ஷா அம்மன் மதத்தையும் ஏற்று, அவளுக்குகந்த முறையில் கந்திரிப் பூசையுமிட்டு, அல்லாவைப் போல் அவளையும் தெய்வமாக ஏற்றுக் கொண்டிருந்திருக்கக் கூடும்.

III பெரும் பளஞ்சி, சிறு பளஞ்சி கடந்து ஏருபாடியில் (ஏர்வாடி) அம்மன் வந்தபோது,

“வரகுண பாண்டியனும் வந்து போற்றிடவே”

(1739)

என்ற குறிப்பு காணப்படுகின்றது.

பிற்காலப் பாண்டியர் வரலாற்றில் “வரகுணராமன் குலசேகரன்” என்ற பாண்டிய மன்னன சக ஆண்டு 1537–இல் அதாவது கி.பி. 1615 முதல் சக ஆண்டு 1675 வரை அதாவது கி.பி. 1753 வரை ஆட்சி செய்ததாகத் தெரிகின்றது. இவனே வரகுணபாண்டியன் ஆதல் வேண்டும்.

மேலும் உறக்குப் பஹதூர்ஷாவின் ஆட்சிக் காலமும் இப்பாண்டிய மன்னனது ஆட்சிக்காலமும் ஒத்து போகின்றது.

இவன் சோமயாகம் நடத்தியதால் “குலசேகர சோமயாஜி” என்ற பெயர் பெற்றதாகவும், ‘தீட்சிதர்’ என்ற விருதும் இவனுக்குள்ளதாகவும், இவனது கல்வெட்டுக்கள் தென்காசி, குற்றாலம் போன்ற இடங்களில் காணப்படுவதாகவும், இவன் நடத்திய வேள்வியில் கலந்துகொண்டு

---

3. மு. அப்துல ரஹீம் மொகலாயர்களின் வரலாறு. (த.பா.நி.. 1976). ப.242

அந்தணர்களுக்குக் குடியிருப்பு அமைத்துக் கொடுத்து, நிலங்களும் தானம் அளித்ததாகவும் உள்ள குறிப்புக்கள் வரலாற்று நூல்களில்[4] கிடைக்கின்றன.

இக் கதைப்பாடல் வழங்கப்பட்ட காலகட்டத்தில் டில்லியிலும், நெல்லையிலும் ஆட்சி செய்தவர்கள் இவர்களாதலின் இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

IV. மீனாட்சியம்மன் கோயிலின் அமைப்புமுறை 1202–1204–ஆம் வரிகளில்,

"முத்தளக்கும் மண்டபமும் முன்னேபொன்னின் கோபுரமும்
மோகனப் பொற்றாமரையும் வாகனப்பிறை கடந்துகண்டு
வித்துருவக் கொடிமரமும் வெள்ளியம்பலமுங் கடந்து"

என விவரிக்கப்பட்டுள்ளது.

நாயக்கர் ஆட்சியில் முத்தளக்கு மண்டபம், பொற்கோபுரம், பொற்றாமரைக் குளம், கொடிமரம் என்றமைத்துச் சிறப்பாகக் கோயிலைக் கட்டிய பின்னர் இப்பாடல் வரிகள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற வரலாற்று உண்மை இவ்வரிகள் மூலம் புலனாகின்றது.

"நன்னுதல் அங்கயற் கண்ணி
தனக்கு நலம்பெறவே
உன்னத மாகுங் கொடிக்கம்பம்
மாபலி பீடமுடன்"

எனத் திருமலை நாயக்கர் செய்த கோயில் திருப்பணிகளைத் திருப்பணிமாலை குறிப்பிடுகின்றது.[5]

---

4 டாக்டர் கே.வி. இராமன் பாண்டியர் வரலாறு (த.பா.நி. 1977). ப. 144.

5 அ.கி பரந்தாமனார். மதுரை நாயககர் வரலாறு (மூன்றாம் பதிப்பு. ஜனவரி 1971). ப. 197.

திருமலைநாயக்கரது ஆட்சிக்காலம் கி.பி. 1623 முதல் கி.பி. 1659 வரையாகும். எனவே இதற்குப் பின்னரே கதைப்பாடலில் இப்பாடல் வரிகள் இணைந்திருத்தல் வேண்டும் எனலாம்.

வாணிபம்

802 – ஆம் வரியில் அம்மனுக்குக் கழுத்தில் சீன மணி அணிவித்ததாய்க் குறிப்பு வருகின்றது.

"ஏகவடஞ் சீனமணி யெருக்கலை மாலையிட்டு"

என அமைகிறது. சீன நாட்டாரோடு பண்டுதொட்டே இருந்த வாணிபத் தொடர்பை இது புலப்படுத்துகின்றது.

கலை உணர்வு

அம்மை நோய் தோன்றச் செய்பவளான அம்மன் பெயராலேயே அந்நோயை அம்மை நோய் என அழைத்து, அந்நோயால் விளையும் கொப்புளங்களை முத்து என உவமித்து, அம்மனை முத்தாரம்மனாக்கி, அம்மை நோய் வராது காக்கவும், வந்தபின் தீர்க்கவும் அம்மனுக்கு விழா எடுத்து, விழாவில் அவளைச் சிறப்பித்துப் பாட, அவள் வரலாற்றையும் கற்பித்து, அதற்கு இனிய, எளிய நாட்டுப்புற இசை கொடுத்து, வில்லடித்துப்பாட ஏற்ற முறையில் கதைப் பாடலாக உருவாக்கி, ஏடுகளில் அதனை எழுதியும் வைத்திருக்கின்றனர். இலக்கியக்கலைக்கும், இசைக்கலைக்கும் இத்தகு அம்மன் கதைப்பாடல்களால் மேலும் சில அணிகலன்கள் கிடைத்திருக்கின்றன.

வில்லுப்பாட்டு வடிவினதாய இக்கதைப் பாடலில் அம்மன் சென்ற இடங்கள்தோறும், இசை முழக்கத்தோடு சென்றாள் என்றும்,

அவ்வவ்விடங்களில் அம்மனுக்கு விழா எடுப்பவர்கள் பல்வேறு இசைக்கருவிகளை முழக்கிச் சிறப்பித்தார்கள் என்றும் வருகின்ற அமைப்புக்களால், இப்பாடலில் பிற கலைகளைவிட இசைக்கலையின் இடம் குறிப்பிடத் தக்கதாக அமைந்துள்ளது.

சிவபிரானிடம் வரம்பெற்ற பின்னர் அம்மன்கள் கயிலை கடந்து வரும்போது, பல்வேறு இசைக்கருவிகள் முழங்க வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

"திடம்படப் பேரிகைமத் தாளமிடைக் கையுங்கொட்ட"

என்று தொடங்கி,

"உத்தார வணத்துடனே உணர்பெறுசாஸ் திரவீணை"

என்பது வரையுள்ள 838 முதல் 858–ஆம் வரிகளில் பேரிகை, மத்தளம், இடக்கை,கரடி, சல்லிகை, தாளம், திமிலை, முரசு, உறுமி, தடாரி, தும்புரி, சல்லாரி, சம்புலப் பறை, மோகன முரசு, கிடுபிடி, கனகதப்பு, செண்டித்தாளம் போன்ற தோற்கருவிகள் முழங்க,

எக்காளம், தனிச்சின்னம், கின்னரி, காளம், நவுரி, பூரிகை, கொம்பு, நாகசுரம் என்ற துளைக்கருவிகள் ஊத,

ருத்திரவீணை, கயிலாசவீணை,தண்ணடை,கின்னரி, தம்புரா சாஸ்திர வீணை போன்ற நரம்புக் கருவிகள் இசைக்க, சிலம்பு, சதங்கைகள் கொஞ்சி, நடனமாதர்நடம் பயின்றுவர, அம்மன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் இக் கதைப்பாடல் எழுந்த காலகட்டத்தில் இத்தகு 20 வகைத் தோற்கருவிகளும், எண்வகைத் துளைக்கருவிகளும், அறுவகை நரம்புக்கருவிகளும் வழக்கிலிருந்தன என்பதும், அவைகளை இசைக்கும் முறைகளையும் மக்கள் அறிந்திருந்தனர் என்றும் தெரிய, அக்கால கட்ட மக்களின் கலை உணர்வு புலனாகின்றது.

அம்மனுக்குகந்தவைகளாக இப் பல்லியங்கள் திகழ்ந்திருக் கின்றன என்பதும் தெரிவருகின்றது.

அம்மன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும்பொழுது, ஒரோரிடத்திலும் அம்மை நோய் பரப்பிவிட்டு, அவ்வப்பகுதி மக்களால் செய்யப்பட்ட பூசை,வழிபாட்டு முறைகளை ஏற்றுக்கொண்டு புறப்படும் பொழுது, இசைக்கருவிகள் முழங்கச் சென்றதாகவே அமைந்துள்ளது. அவ்வாறு அமையும் இடங்களாக,

"இடி முழக்கமென மேளங் கொட்டியே
எண்டிசைப் பூதம் வண்டிகொண் டாடவே"

(972 – 973)

என்றும்;

"தவில் முரசு டம்மாணங் கிடுபிடி
எண்டிசைக்கு மதிரப் பிறப்பட்டு"

(1037 – 1038)

என்றும்,

"காளச் சின்னம் நாகசுரம் கருதியே கணங்களூத
கன்னல்முத்துத் தாயுடனே சின்னமுத்துத் தாய்வரவே"

(1184 – 1185)

என்றும்,

"விரைந்துபூ தங்கள்வரக் கணங்கள்கு டையெடுக்கக்
கைமணிமத் தாளங்கொட்ட காளச்சின்ன மூதிவர"

(1289 – 1290)

என்றும்,

"இடிபோல் வெடியதிர எண்ணில்லாத பூதம்வர
துந்துமிமுதற் பல்லிய முப்பது முழங்கிடவே"

(1373–1374)

என்றும்,

"பம்பை யார்ப்பப் படைகள் நெருங்கிடச்
செம்பொன் னிட்ட சிவிகையி லேறினாள்"

(1462–1463)

என்றும்,

"ஏறினாள் பல்லியங்கள் முழங்கவே
ரெற்றின மாமணிப் பல்லக்கி லேறினாள்"

(1464–1465)

என்றும்,

"கொட்டு வாச்சிய மெத்த முழங்கவே
கொம்பு ஏங்குட னெங்கு முழங்கவே"

(1520–1521)

என்றும்,

"ஒறப்பட் டேவருங் காளிகள் கூளிகள்
ஒட்டியே மேளங் கொட்டியே முன்வர"

(1554 – 1555)

என்றும்,

"விந்துநாதம் பேரிச் சங்கு நாதமும்
வேதாளை பாதாள பூதங்க ளாடவே"

(1686 – 1687)

என்றும்,

"இனிப்பா ரெனப்பூதம் பல்லியந் துந்திமி
இடியென முழக்க விளியெறி யவே"

(1804– 1805)

என்றும்,

"முழக்கவே காளசின்னம் நாவூரி பூரிகை
முகவீணை நாககுரம் ஊதியே"

(1808 – 1809)

என்றும்,

> "கனக தப்பு கிடுபிடி பேரிகை
>
> கைமணி மும்முரசு முழங்கவே"
>
> (1931–1932)

என்றும்,

> "சுத்த மத்தளந் துந்திமி யார்ப்பவே
>
> ஆர பார வெடிக ளதிரவே"
>
> (1978–1979)

என்றும் உள்ள பாடல் வரிகளைக் கூறலாம்.

இக்கதைப்பாடலில் அம்மன் இசை முழங்கச் சென்றதாகப் பதின் மூன்று இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன.

அம்மனுக்காக விழா எடுத்துப் பூசை செய்யும்பொழுது இசை முழக்கிச் சிறப்பித்ததனை,

> "அழகாகப் பொங்கலிட்டார் ஆடலயம் பம்பைகொட்டப்
>
> பம்பைமுத லானபதி னெட்டுவாச் சியமுழங்க"
>
> (1265–1266)

என்றும்,

> "காண்டிய நுதலார்க ளாலத்தி யேந்த
>
> கனகதப்பு சங்கு நாகசுர மூத
>
> வேண்டிய மாறாத வரிசைதந் தருளிய
>
> விறல் வணிகர் தெருவிலே வந்திருந்தாளே"
>
> (1744–1747)

என்றும் வரும் இடங்கள் தெளிவுறுத்துகின்றன.

இவற்றின்மூலம் இக்கதைப்பாடல் எழுந்த காலகட்டத்தில் இசைக்கலை பெற்றிருந்த இடம் புலனாகின்றது.

"மெல்லவே நடனம் வரச் சிலம்புசதங்கை கொஞ்ச" (855)

என்றும்,

"இங்கிதக்கு மாரரையுஞ் சங்கீதமுத் தம்மன்கண்டு
கீதம்பாட மாதராடக் கிணங்கள் வணங்கிவர" (1621–1622)

என்றும் வந்துள்ள வரிகள் மூலம் நடனக்கலைகள் இடம்பெற்று வளர்ந்து வந்துள்ளமை புலனாகின்றது.

இசைக்கலை பற்றிய குறிப்பு மிகுதியும் கிடைக்கின்றது.

மனித மனத்துக்கு மகிழ்வு தரக்கூடிய பக்தி, இசையில், பக்தியால் இசைக்கலை வளர்ந்தும், இசையால் பக்தி விளக்கமுற்றும் திகழ்ந்திருக்கின்றது எனலாம்.

பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள்

இக்கதைப்பாடல் மக்கள் மத்தியில் வாய்மொழியாகப் பல்லாண்டு காலம் வழங்கி வந்து, குறிப்பிட்ட காலகட்டத்தில் எழுத்துருப் பெற்றுள்ளதால், அவ்வக் கால மக்களின் பழக்கவழக்க, நம்பிக்கைகள், பிற பண்பாட்டுச் சின்னங்கள் படிந்துள்ளதாக அமைந்துள்ளது.

இக்கதைப்பாடல் வழி புலனாகும் பழக்க, பண்பாட்டு நிலைகள், நம்பிக்கைகளாகக் கீழ்க்காணுபவற்றைக் குறிப்பிடலாம்.

(1) சுவடி எழுதத் துவங்கும்பொழுதும், முடிக்கும் பொழுதும் நன்னேரம் பார்த்தே தொடங்கலும், முடித்தலும் செய்யும் பழக்கத்தைக் கைக் கொண்டிருந்தனர்.

(2) விநாயகருக்குப் பல்வேறு தின்பண்டங்களைப் படைக்கும் வழக்கமிருந்தது (24–34).

(3) கல்விப் பயிற்சி தொடங்குமுன்னர் 'அரி' எனத் திருமாலின் பெயரை ஓதுவித்தே தொடங்கும் பழக்கமிருந்தது (74 – 75).

(4) குரு–சிஷ்யர் முறையில் நாட்டுப்புறக் கதைப்பாடல்களைப் பாடும் முறை கற்பிக்கப்பட்டு வந்தது (105).

(5) புகழ் பெற்ற சிறந்த கதைப்பாடல்களை மக்களிடையே பாடிப் பரிசுகள் பலவற்றை நாட்டுப்புற இசைக்கலைஞர்கள் பெற்றனர் (96, 119).

(6) எட்டுமாதக் கர்ப்பத்தில் சடங்கு செய்தனர் (160 – 161).

(7) காரணத்தோடு பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும் வழக்கமிருந்தது (246–247).

(8) ஐந்து வயதாய இளம்பிள்ளைப் பருவத்திலேயே காடும், வனமும், மலையும், ஆறுங் கடந்து சென்று, இறையை நாடித் தவமேற்கொண்டவர் இருந்தனர் (323–347).

(9) முனிவர்கள் இறையருள் பெறத் தபோவனங்களில் உடலை வருத்திக் கடுந்தவ மேற்கொண்டனர் (348–355).

(10) தாம்பூலம் தரிக்கும் வழக்கமிருந்தது. தாம்பூலத்தை அளவுப்படி சீர்படுத்தி மடித்துத் தருவதற்கென்று அடப்பைக்காரர்கள் இருந்தனர். தாம்பூல எச்சில் துப்புதற்கென்று 'காளாஞ்சி' என்ற பாத்திர வகை இருந்தது (833 – 834, 1268, 66 – 67).

(11) திருட்டி ஏற்படும் என்ற காரணத்தால் ஆரத்தி எனப்படும் 'ஆலத்தி' எடுக்கும் வழக்கமிருந்தது (831, 1744).

(12) அம்மன் கோயில் விழாவின் போதும், அம்மன் ஊர்வலத்தின் போதும் ஆலிப்பாத்தடிக்காரர், வெடிக்காரர் உடன் சென்றனர். (969)

(13) கோயில் கட்டு முன்னர் நன் முகூர்த்தம் பார்த்துத் தொடங்கினர் (1257).

(14) கடல் நடுவில் நாகலோகமும், அங்கு நாகராசனும், நாககன்னிகைகளும் வாழ்ந்ததாக நம்பினார் (130 – 139).

(15) குழந்தைப் பேறுக்காக வெள்ளி செய்வதும், அதில் கிடைக்கும் அவியை உண்ணக் குழவி பிறக்கும் என்ற புராண நம்பிக்கை மக்களிடை ஆழமாக வேரூன்றி இருந்தது (144 – 156).

(16) ஊன், உறக்கமின்றி, உடலை வாட்டிக் கடுந்தவம் மேற்கொள்ளும் பொழுது, தவக்கனல் இறைவனைச் சென்று சுட, இறைவனழைத்து விரும்பிய வரம் தருவான் என்ற புராண நம்பிக்கையும் இருந்தது (358 – 395).

(17) அம்மன் பல்வேறு வகையான அம்மை முத்துக்களைச் சிவனிடம் வரமாகப் பெற்று, மக்களிடையே அவற்றைத் தூவிப் பரப்புவதாக நம்பினர்.

(18) தாங்கள் செய்கின்ற தவறுகளுக்கும், ஈவிரக்கமற்ற தங்கள் குணக்கேட்டுக்குத் தண்டனையாகவும், தெய்வ நிந்தனை கூறி, அகம்பாவமான செயல்களைச் செய்வதாலும் அம்மன் அம்மை நோயைத் தருகிறாள் என்று மக்கள் பெருநம்பிக்கை கொண்டிருந்தனர்.

முத்தாரம்மன் கதையில் இடம் பெற்றுள்ள இலக்கியச் செய்திகள்

தமிழ் இலக்கிய வரலாற்றை எடுத்துக்கொண்டால் பெரும்பான்மையான இலக்கியங்களில், அவற்றுக்கு முந்தைய கால, அவ்விலக்கிய கால இலக்கியங்களின் தாக்கம் காணப்படலுண்டு. இத்தகு மரபு ஒட்டி முத்தாரம்மன் கதைகளிலும், அதற்கு முந்தைய கால, அக்கால இலக்கியங்களின் தாக்கம் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

12 இடங்களில் புராணச் செய்திகளையும் 6 இடங்களில் இதிகாசக் கருத்துக்களையும், 1 இடத்தில் காவியக் கருத்தையும் காண முடிகின்றது.

இதிகாச, காவியச் செய்திகளைவிட, புராணச் செய்திகள் மிகுதியாக இக்கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளன. இதற்கு இக்கதைப்பாடல் தெய்வம் பற்றியதென்பது ஒரு காரணமாதல் வேண்டும்.

புறம் போன்ற பிற இலக்கியச் செய்திகளும் உள்ளன.

தொல்காப்பியம், திருவாய்மொழி, நன்னூல், யாருப்பருங்கலக் காரிகை, அணியிலக்கண வகைகள், கோவலன் கதை போன்றவற்றைப் பற்றிய குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

(1) அரசனுக்கு அஞ்சிய வாதவூரார் பொருட்டு நரிகளைப் பரிகளாக்கிய 59–ஆவது திருவிளையாடல் பற்றிய செய்தியும், [6]

(2) கத்ருவின் குமாரனான, நாகனெனும் பெயர் கொண்ட, பிரமன் கட்டளையால் பாதாளத்திலுள்ள நாகர்களுக்குத் தலைமை பூண்டு பூமியைத் தாங்கும் ஆதிசேடனைப் பற்றிய குறிப்பும், [7]

(3) வாஸ்து எனும் மநுவிற்கு அங்கிரசியிடம் உதித்த குமாரனும், மயனுக்குப் பிதாவும், தெய்வத் தச்சனுமாகிய விசுவகர்மாவினைப் பற்றிய செய்தியும் [8] உள்ளன.

இதில் விசுவகர்மா தங்கம், இரத்தினம் கலந்து நான்கு வேதங்களைக் கால்களாகவும், சந்திரன், ஆதித்தவரைப் பலகையாகவும், பக்கத்திலுள்ள விண்மீன்களை நிலைகளாகவும், பிற வான் மீன்களையும், ராசிகள் பன்னிரண்டையும் கயிறுகளாகவும் அமைத்து பெரிய, சின்ன முத்தாரம்மன்கள் துயிலத் தொட்டில் செய்தனர் என்றமைகின்ற அமைப்பு, திரிபுரம் எரிக்கச் சென்ற சிவபிரானுக்கு தேர் அமைத்த புராணச் செய்தியோடு [9] ஒப்புடையதாக உள்ளது கருதத் தக்கது.

---

6. "பாண்டியன் தனக்காய்நல்ல பரிதன்னை நரியாயீன்ற"
- முத். கதை. வரி. 471.

7. "அந்திரப் புவிதாங்குஞ் சேடனுக் கிணையாய்"
- முத். கதை. வரி. 58.

8. வரி. 264 - 273

9. அஷ்டகுல பர்வதங்கள் விதானமாக, அண்ட முகடு கொடிஞ்சியாக, இடைவெளி தட்டாக, வேதங்கள் குதிரையாக, தேர் அமைத்த செய்தி இடம்பெற்றுள்ளது.

(4) 4,5–ஆம் திருவிளையாடலாக உள்ள, உமாதேவியார் மலயத்துவச பாண்டியர்க்குத் தடாதகையாய்த் திருவவதாரம் செய்ததும், சிவபெருமான் சோமசுந்தர பாண்டியனாக எழுந்தருளித் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணங் கொண்ட புராணச்செய்தியும், [10]

(5) 57 – ஆவது திருவிளையாடலாக உள்ள, பரதவர் குலப்பெண்ணாக அவதரித்திருந்த பார்வதி தேவியை, செம்படவனாகிச் சுறாமீனைக் கொன்று மணந்த சிவபிரானைப் பற்றிய புராணச் செய்தியும், [11]

(6) மற்றும் மாலும், பிரம்மனும் சிவனின் அடிமுடி காண, அளவில் வளர்ந்து நின்ற புராணச் செய்தி பற்றிய குறிப்பும்,[12]

(7) விரோசனன், தேவி என்பவர்களின் புத்திரனும், பிரகாலதனின் பேரனுமான மாபலிச் சக்கரவத்தியின் முன்னர் வாமனனாகி வந்த திருமால் மண்ணுக்கும், விண்ணுமாக வளர்ந்த புராணச் செய்தியும், [13]

(8) வீணணாகிய வாணனைக் கொன்ற செய்தியும் (வரி. 1533) இம்முத்தாரம்மன் கதையில் இடம் பெற்றுள்ளன.

மேலும்,

(9) தாருகா வனத்தில் முனிவர்கள் தவம் செய்கின்ற முறை (வரி. 695–740),

(10) கயிலையங்கிரி எவ்விதம் அமைந்திருந்தது என்பதனை விளக்கும் முறை (வரி.400–459),

---

10. "நிற்குமரன் பத்னி பார்ப தியாள்
நேந்து தவசாக யிருப்ப ளவில்
சற்குண முடைய யீசுரன் வந்து
தையல் தனைக்கலி யாணம் பண்ணி" - வரி. 887 - 890.

11. வரி. 1136-1149.

12. வரி. 1698.

13. "சூழவே மாவேலி முன்னோடி வளர்த்த மால்" - வரி. 1776.

(11) முனிவர்கள் குறித்த விவரங்கள் (வரி.695–740),

(12) தவம் செய்தால் அத்தவத்தீ சிவனைச் சுட, அவர் உமையாளோடு, அது சொல்லலும், பின் ஞானக் கண்ணால் தவம் செய்பவர் யார் என்ற உண்மை உணர்தல் என்ற முறை போன்றவற்றில் புராணீகத் தன்மை அமைந்திருப்பதையும் காணமுடிகின்றது.

II. இதிகாசக் கதைகளான இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றுடன் தொடர்புடைய கருத்துக்கள், பாத்திரங்கள் பற்றிய செய்திகளாக,

(1) "அடவை யாங்கெந்த மாதன மலைதன்னில்
அனுமார் தன்னையுங் கண்டுகொண் டாடினாள்"
– வரி.571–572

எனக் கந்தமாதன மலையில் அனுமன் இருந்ததாகக் கூறல்,

(2) 926–935 – ஆம் வரிகள் மூலம் அயோத்திப்பதியில் எழுபது வெள்ளஞ் சேனையுடைய தசரத ராமரையும் கண்டு வணங்கியதாகக் கூறல்,

(3) "ஏத்ததோர் குந்தி விசைய னெனும்
தருப்பார் குந்தா தேவி – மேன
தவசு பண்ணுவது தானே கண்டாள்"
– வரி. 1061 – 1063

என்ற வரிகள் மூலம் மகாபாரதப் பாத்திரங்கள் பற்றி இயம்பல்,

(4) "மட்டில்லாத விசுவாமித்திரர் வேள்வியும்
வந்து கண்டனள்" – வரி.1524–1525

என்பதனால் இராமாயணம் குறிப்பிடும், இராமபிரானின் பாதுகாப்புடன் விசுவாமித்திரர் செய்த வேள்வி பற்றிய செய்தி சொல்லல்,

(5) "சனக ராயன் படை போலே" – 1935

என இராமாயண ஜனக மகாராஜாவின் படைப்பெருமை பற்றிய கருத்து இடம்பெறல் போன்றவற்றைக் கூறலாம்.

III. (1) "கன்று கொண்டு கனியெறிந்தவர் தங்கை

.... யாங்குழல் வாய்மொழி" – 1315

என்ற வரி சிலம்புப்பாடல் வரியை [14] நினைவுபடுத்துகிறது.

பிற இலக்கியக் குறிப்புகள்

இக்கதைப்பாடலிலுள்ள,

"காதலால் மறையில்ஆகாசந் தோன்றவைத்து
தினமுறு மாகாசத்தில் தேயுவைத் தோன்றவைத்து
அருமைபெறுந் தேயுவில் அப்புவைத் தோன்றவைத்து
பெருமைபெறு மப்புவில் பிருதிவி தோன்றவைத்து"
– வரி. 620 – 623

என்ற வரிகளும், 452–455–ஆம் வரிகளும் [15]

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீருமென்றாங்(கு)"

என்ற புறப்பாடல் வரிகளை [16] நினைவுபடுத்துகின்றன.

---

14. "கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்" - சிலப்பதிகாரம். 2 : 17.

*15. "துதிபெருகு மாகா சஞ்சூழ்ந்து கிடக்கும்
சொல்லுமா காசத்தைக் கால்சூழ்ந்து கிடக்கும்
மதிபெருகும் வாயுக் கால்சூழ்ந்து கிடக்கும்
வன்னிதன்னை யப்புச் சூழ்ந்தே கிடக்கும்"*

16. புறநானூறு. பா.எண்.2, வரி. 1-5.

"தன்னரிய மூலமதில் வன்னிதன்னை வைத்துத்

தலையான கால்நிறுத்தி யசைவுதன்னை யுன்னி

மண்ணதிலும் விண்ணதிலும் ஊடுருவிப் பாயும்

வாசிதன்னை யேவிவெளித் தேடியொளி நாடி

நாடிகளெல் லாமிறுக்கிப் படுமுடிச்சாய்க் கட்டி

நாதமென்னு மாதிப் பொறிகளுள்ளே யடக்கி"

– வரி.360 – 365.

என்ற வரிகள் திருமூலர் திருமந்திரத்தின் பிராணாயாமம் எனப்படும் வளிநிலையில் அமைந்துள்ள பாடற் கருத்துக்களோடு [17] ஒப்புடையனவான உள்ளன.

"மட்டுப் படாத்திரு வாய்மொழி கத்த
வயிணவ மறை யோராம்" – வரி. 1889

என்ற வரியிலும்,

"முத்தமிழ்க் <u>காரிகை நன்னூல்</u> <u>தொல்காப்பியம்</u>

மொழிகின்ற <u>யெழுத்துச்சொல் பொருள்யாப்பு</u> மதுவும்

சுத்த மாகிய <u>அலங்காரத்தின் பனுவலும்</u>

துகைகண்டு வகைகண்டு சொல்லுகவி ராசன்"

– வரி. 84–87

"காசியுங் கன்னியா குமரியும் புகழ்பெற்ற

கன<u>கோவ லன்கதை</u>யைக் கத்த காராளன்"

– வரி. 107 – 108

என்ற வரிகள் மூலம் தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் குறித்தும் அவை மக்களிடையே பெற்றிருந்த சிறப்பிடம் குறித்தும் அறிய முடிகின்றது.

---

17. பாடல்கள் 546-558.

"பூட்டி யேபதி னெண்பு ராணமும்

போத மறுபத்து நாலு கலைகளும்

ஊட்டினா ரிதைச் சேனை புகட்டினார்"

– 232–234.

18 புராணங்களையும், 64 கலைகளையும் புகட்டினார் என்பதான், புராணங்களும், கலைகளும் இக்கதை தோன்றிய காலத்தில் பெற்றிருந்த இடம் புலனாகின்றது.

கையாளப்பட்டுள்ள உவமைகள்

நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் காணப்படுவது போன்றே இதிலும் எளிதில் விளங்கக்கூடிய உவமைகளும் , மக்கள் மத்தியில் புகழ்பெற்று, அனைவர் மனத்திலும் இடம்பெற்ற இதிகாசக் கதைப் பாத்திரங்கள், நிகழ்ச்சிகளோடு தொடர்புடைய உவமைகளும் ஆளப்பட்டுள்ளன.

"தன்தாயை விட்டுத் தவிக்குமாங் கன்றதுபோல் " – வரி.171.

"ஒடைந்த கடலென்னப் படையுடனே"– வரி.940.

"சொன்ன மாரியாய் முத்துச் சொரியுதே " – வரி.989.

"கவிக் குலங்கள் எழுபது வெள்ளம் போல்"– வரி.1024.

"வலைகள் சேந்து அரித்தது போலவே " – வரி. 1514.

" காளவாய் முகிலெனுஞ் செங்கனிவாய் நம்பி " – வரி 1780.

"மின்னியிடித்து மழைமேகங்கள் சொரிந்தாப் போலே"

– வரி 1858.

"சனக ராயன் படை போலே " – வரி.1935.

கரும்பனைய மொழி முத்துத்தாய்" – வரி.1973.

என இவ்வாறான எளிய உவமைகள் ஆளப்பட்டுள்ளன.

வருணனை அமைப்புக்கள்

கதைப்பாடல்கள் கதையை வருணிப்பதாலேயே அமைகின்றன என்றாலும், கதையின் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் சற்று விரிவான முறையில் விளக்கிச் செல்லும் பகுதிகளை வருணனை அமைந்துள்ள பகுதிகள் எனக் குறிப்பிடலாம்.

அவ்வாறு உள்ளனவாக இக் கதைப் பாடலில்,

கயிலாய மலை வருணனை – வரி.400–459,

மேருமலை வருணனை – வரி.643– 792.

வரம் வாங்கிக் கொண்ட அம்மன் ஆடை, அணிகலன் பூண்டு

பரிவாரங்களோடு இசை முழங்கச் செல்லுகின்ற முறை – வரி. 793–862.

என்ற முறையில் அம்மன் வந்த வருகை வருணிக்கப்பட்டுள்ளது.

நடையமைதி

நாட்டுப்புறக் கதைப்பாடல்களுக்கே உரிய,

- எளிதில் புரிந்து கொள்ளத் தக்க நடை
- பேச்சு வழக்குச் சொற்கள் மலிந்திருத்தல்
- இனிய ஓசையுடையதாயிருத்தல்
- நாட்டுப்புறச் சமுதாயத்தைப் பிரதிபலித்தல்

என்ற தன்மைகளையே இக்கதைப்பாடலும் கொண்டிருக்கிறது.

"ஏர்வளரும் பட்டபுரம் முத்துத் தாய்க்கு

இசைந்ததமிழ்க் கதையைவில்லி லியம்பு வோமே"

– வரி 10–11.

எனக் கதைப்பாடலின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாலும்,

"திருந்தநிறைப் பாடலைக் கேட்டோரும் வாழியவே"

– வரி 2012.

எனப் பாடல் முடிவில் குறிப்பிட்டுள்ளதாலும் வில்லுப்பாட்டாகப் பாட, அதனைப் பிறர் கேட்பதற்கு ஏற்ற நடையில் இக்கதைப்பாடல் பாடப்பட்டது என்ற உண்மை புலப்படுகின்றது.

"அருணாசலப் புலவன் எழுதின கவடி நன்றாக"

என்பதால் படிப்பதற்கு ஏற்ற முறையில் கவடியில், இக் கதைப்பாடல் எழுதி வைக்கப்பட்டது என்பதும்,

"தானமா யிக்கதையைப் படித்தபேர் கேட்டபேர்
தரணியி லதியதவம் பேர்பெற்று வாழுவார்"

– வரி. 124 – 125.

என்ற குறிப்பால் படிப்பதற்கும், கேட்பதற்கும் உரிய நடையிலியன்றது இக்கதைப்பாடல் என்பதும் தெரியவருகின்றது.

"ஞானமாகி யிருளணைஞ்ச பெருமாள் தானும்
நல்ல முத்தம்மன் கதைசொல்லி வைத்தானே"

– வரி 122–123

என்பதால் வாய்மொழியாக, செவிவழியாக வழங்கி வந்தது இக்கதைப்பாடல் என்ற உண்மையும் புலனாகின்றது.

ஆக, வாய்மொழியாக வழங்கி வந்த கதைப்பாடல், வில்லுப்பாட்டு வடிவில் மக்களிடையே பலவிடத்தும், பலர் வாயிலாகப் பாடப்பட்டு, பின் படிப்பதற்கு ஏற்ற முறையில் அருணாசலப் புலவர் அவர்களால் கவடியில் எழுதப்பட்டுள்ளது எனலாம்.

வில்பாட்டு வடிவில் வழங்கி வந்ததையே ஏட்டில் எழுதினர் என்பதால், பல்வேறு சந்தங்கள் அமைந்து இசைக்கூறுகள் மலிந்துள்ள நடையை இக்கதைப்பாடலில் காண முடிகின்றது.

I. வில்பாடலுக்கென்று சில பாடு மரபுகள் உள்ளன. இத்தகு மரபுகளியன்ற நடையிலேயே இக்கதைப்பாடல் அமைந்துள்ளது.

(1) வில்பாட்டுப் பாடுபவர் வில்லில் கட்டியுள்ள நாணில் கோல்களை அடித்து இசையெழுப்பிக்கொண்டு பாடலைப்பாட, அவர் கடைசியாகப் பாடிய வரியைப் பின்பாட்டுப் பாடுபவர்கள் அழுத்தமாக ஒரு தடவை பாடி முடிக்க, அவ்வரியையோ, அல்லது அவ்வரியிலுள்ள ஒரு சொல்லையோ தொடக்கமாகக் கொண்டு, வில்பாட்டுக்காரர் தொடர்ந்து பாடுதல் வில்லுப்பாடலின் தன்மையாக அமைதலுண்டு.

இத்தன்மையை வில்லுப்பாடல் வகையாய இக்கதைப் பாடலில் காண முடிகின்றது.

பொதுவாக 4 வரிகளுக்கு ஒருமுறை இறுதி வரியின் சொல் அடுத்தவரியின் தொடக்கமாக அமைதலை இக்கதைப் பாடலில் காணமுடிகின்றது. முழுவரியும் வருதலுண்டு, சான்றுகளாக,

"அடந்து வரும் படைக் கஞ்சாமலே
அம்மன் தனைக்கண்டும் வணங்காமலே
அம்மன் தனைக் கண்டும் வணங்காமலே
அல்லா ஒருவனென் றவனிருந்தான்"

– வரி.948–951

என முழு வரியும்.

"சொல்லுதவி யேநல்ல கல்விதர வேணும்
தரவேணும் வர்க்கமுர்தம் மழை பொழிந்ததுபோல்"

– வரி. 19–20

"இந்த யேந்திழைக் கொருவரு மாதரங்காண் கிலன் சதியோ
சதியோ முன்னேசெய்த விதியோ நாகராசர் தங்கை"

– வரி.181–182.

"அநேகவித முண்டதிலே தவசுபண்ணு முறைமை
பண்ணரிய தாருகா வனந்தனிலே தவசு"
– வரி.355–356.

"பொன்மதிலுங் கோட்டைவாசல் தென்மதுரை யுங்கடந்து
தென்வடல் கிழக்கு மேக்குச் சேதுராமே சுரமட்டு"
வரி.1281–1282

"சதிர்பே ராழி முனி புகழவே
சதிரங்க சேனையோடு கொச்சினாப் புளிமூடும்"
– வரி.1783–1785

என இறுதி வரியிலுள்ள சொல்லும் மறித்து வருகின்றவற்றைக் குறிப்பிடலாம்.

(2) ஒரு கதைப்பாடலை வில்லில்பாடும்பொழுது, ஒரேவித இசையமைப்போடு பாடல்களைப் பாடினால் விரைவில் சலிப்பும், வெறுப்பும் தட்டிக் கதை கேட்கும் ஆர்வத்தைக் குறைத்துவிடும் என்பதால், பல்வேறு இசையமைப்புடைய பாடல்களைப் பாடுதல் வில்பாட்டுக்காரர்கள் மேற்கொண்ட ஒரு உத்தியாகும்.

வில்பாடலாகிய இக்கதைப்பாடலிலும் இவ்வுத்திமுறை கடைப்பிடிக்கப்பட்டு, பல்வேறு இசையமைதிகள் உள்ள நடையாலியன்ற பாடல்களை நாம் காண முடிகின்றது. சான்றுகளாக,

நடை தொங்கல் என்ற நாட்டுப்புற யாப்பில் அமைந்த,

"வருகின்றாள் பெரிய முத்து நாயகி
மாணிக்க வயிரப் பல்லக் கேறினாள்" – வரி. 505–506

என்று ஒருவித இசையிலும்,

இதனைத் தொடர்ந்து விருத்தத்திலமைந்த,

"இருந்ததோர் முத்துமாதா ரேழில்மகா மேருவுள்ள

பொருந்திய வண்மையுண்மை பொன்னிறப் புதுமை தண்மை"

– வரி.597–598

என்று வேறொரு இசையிலும்,

தொடர்ந்து அகவலோசையில்,

"அஞ்சல் பராபர மாகிய பரமேசுரன்

தஞ்சத்தார் தலம் படைக்கத் தானருளி" – வரி. 601–602

என்றும், அடுத்து விருத்த யாப்பிலமைந்த இசைப்பாடலும், தொடர்ந்து,

"அறிவு கொண்ட பருபதம் – அட்டகுல

பருபத மிது பருபதம்

அழகு ராச பருபத – மிது

அரிய ரசத பருபதம்

பிரிவு நீல பருபதம் – நல்ல

புகழ் கயிலாச பருபதம்" – வரி.647–652

என, அதனின்றும் வேறுபட்ட இசைப்பாடலும் என்று இவ்வாறான பல்வேறு இசையமைதியுள்ள பாடல்கள் கொண்ட நடை அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

நாட்டுப்புறப் பாடல்கள் இருவகை யாப்பினவாக அமையும் எனக் கருதுகின்றனர். அவை:–

நாட்டுப்புறப் பாடல் யாப்பு)
) எனப்படும்.
மரபு வழி யாப்பு)

நாட்டுப்புறப் பாடல் வகையினதான இக்கதைப்பாடலும் இவ்விருவகை யாப்பு நிலைகளையும் கொண்டுள்ளது.

நடை, தொங்கல், தாராட்டு என நாட்டுப்புறப் பாடல் யாப்பினவாய பாடல்கள் பெரும்பான்மையனவாக இக்கதைப்பாடலில் அமைந்துள்ளன.

மரபு வழிப்பட்ட யாப்பினவாக வெண்பா ஒன்றும் (வரி.44–47), கலிவிருத்தம் இரண்டும் (வரி. 1318–1321, 1879–1882), அகவல் ஒன்றும் (வரி.601–642), விருத்தம் 27 பாடல்களும் [18] இக்கதைப்பாடலில் காணப்படுகின்றன.

நாட்டுப்புறக் கதைப்பாடல்களுக்கே உரிய பேச்சு வழக்குச் சொற்களும் [19] இக்கதைப்பாடலில் மலிந்து காணப்படுகின்றன.

பாடல் முழுவதுமே பேச்சு வழக்கு நடையிலேயே அமைந்துள்ளது.

மரபு வழிப்பட்ட யாப்பமைந்த பாடல்களும் பேச்சு வழக்குச் சொற்களுடனேயே யாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இக்கதைப்பாடல் நெல்லை மாவட்ட, கன்னியாகுமரி எல்லையை ஒட்டிய வள்ளியூரைச் சார்ந்தது ஆதலின் அம்மாவட்டங்களின் வழக்குச் சொற்கள் [20] பயின்றும் வரப்பெற்றுள்ளது.

---

18. வரிகள்: 126-129, 170-173, 206-209, 210-213, 312-315, 396-399, 461-468, 469-472, 497-500, 501-503, 597-600, 643-646, 691-693, 863-866, 958-961, 1048-1051, 1174-1176, 1306-1309,1362-1369, 1460 - 1464, 1558-1561, 1672-1675, 1764-1767, 1822-1825, 1927-1930, 1987-1990, 2014-2017.

19. அஞ்சுராணி (அம்சராணி), யாக்கவே (ஆர்க்கவே), கத்தா (கர்த்தா), வளந்த (வளர்ந்த), சத்தே (சற்றே), சொக்கமாய் (சொர்க்கமாய்), தெருநெல்வேலி (திருநெல்வேலி) போன்ற சில சொற்களை பேச்சு வழக்கு நடையிலியன்ற சொற்களுக்குச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

20. வீசாறி (832 (விசிறி), புள்ளிதோறும் (1679) (ஆள்தோறும்) என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

II. கதையின் சிறப்பு நிலைக் கூறுகள்

முத்தாரம்மன் கதையில் நாகத் தொடர்பு

உலக வரலாற்றினை எடுத்துக் கொண்டு, தெய்வ வணக்கம் தோன்றியதற்கான அடிப்படைக் காரணங்கள் எவை என ஆராயப் புகுந்தால் மூல முதல் காரணமாக முன்நிற்பது ஆதிமனிதனின் அச்ச உணர்வே என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

சமயம் தோன்றிய வகையை ஆய்வுசெய்தஅறிஞர் பெருமக்களும் முற்காப்பு, நன்றியறிவு, பாராட்டு, அன்பு, கருதுகோள் என்ற அடிப்படைகளில் மதம் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதினும், இவை அனைத்திற்கும் கூட அச்ச உணர்வே காரணம் என அறிவித்துள்ளனர்.

ஆதி மனிதன்,

- தீ, இடி போன்ற பூத இயற்கைக்கும்
- பாம்பு போன்ற நச்சுயிர்களுக்கும்
- இறந்தோராவிகட்கும்

அஞ்சியதால், அச்சம் தந்த அவற்றையே தெய்வமாகக் கருதி வழிபடத் தொடங்கினான்.

நாக வழிபாட்டின் தோற்றம்

நாகம் உயிரைக் குடிக்கும் நஞ்சுடையதாதலும், அடர்ந்த காடுகளாக இருந்த ஆதி சமுதாயத்தில் மிகுந்திருந்து மரண பயம் சூழுமாறு மனிதரை ஆட்டிப் படைத்ததாலும், எந்த நேரத்தில், எவரைத் தீண்ட உயிர் பிரியுமோ என்ற அச்சவுணர்வை ஓயாது ஊட்டிக் கொண்டிருந்ததாலும், உயிர்மேல் பற்றுக்கொண்ட மனித மனங்களால் உயிருக்கு ஊறு விளைக்காது காக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தெய்வமாகவே வணங்கப்பட்டிருக்கின்றது.

மனித சமுதாயத் துவக்க வரலாற்றில் உலக நாடுகள் முழுவதிலுமே இவ்வணக்கம் இருந்திருக்கின்றமையை அறிய முடிகின்றது.

நாக வழிபாடு – இந்தியா – பிற நாடுகள்

“பாம்பு வணக்கத்திற்குப் பெயர்பெற்றதாக ஆப்பிரிக்க நாட்டை முதலாவதாகவும், அடுத்தாக இந்திய நாட்டையும் குறிப்பிடலாம்” என ஆ.சு. இராமலிங்கம் அவர்கள் ‘பாம்பும் மனிதனும், (1976 – பக்.21) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

“ஆப்பிரிக்கர்கள் ‘பைதன்’ என்ற பெரும் மலைப் பாம்புகளையே வணங்கினர். குறிப்பாக நீக்ரோக்கள் மலைப்பாம்பு வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடுடையவர்கள்”

“டஹோமன் நாட்டு குடிமகன் மலைப்பாம்பினைக் கண்டால் பூமியில் படுத்து வணங்குவான். இப்பாம்புகள் வாழ சிறு குடில்களையும் அமைத்துக் கொடுத்தனர்”.

ஜப்பான் நாட்டு நாகசாகி நகரில் உள்ள வெள்ளை நிறமான கடல் பாம்புகளைக் கடவுளின் அவதாரம் என்று கருதுவர்.

நாகரீகத்தில் தொன்மை வாய்ந்தவர் என்று கருதப்படும் கிரேக்கர்களும், உரோமானியர்களும் பாம்புகளைப் புனிதக் கடவுளாக வணங்குவர் என்ற கருத்துக்களையும் மேற்படி நூலில் காணலாம்.

“ஜெர்மனியில் பாம்பை வணங்கும் பழக்கமுண்டு” “ஐரோப்பாவில் பாம்புகள் குறைவாகக் காணப்படுவதால் பாம்பு வடிவாக உள்ள ‘அங்குல்லா’ என்ற ஈல்மீனை வணங்குவர்”. என “பாம்புகள்” (பெ.மா. அண்ணாமலை பக்.162) என்ற நூல் குறிப்பிடுகின்றது. இவ்வாறு பல நாடுகளிலும் பாம்பு தெய்வமாக வணங்கப்பட்ட நிலை தெரியவருகின்றது.

இந்தியாவிலும் பாம்புகள் தெய்வங்களாகவும், தெய்வ அம்சம் பொருந்தியனவாகவும் கருதி வணங்கப்பட்டு வந்திருக்கின்றன. இதிகாச, புராணங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. சிந்துவெளி நகராகிய ஹரப்பாவில் பாம்புப் பதுமைகளும், பாம்புப் படம் விரித்த முத்திரைகளும், பாம்புருவம் தீட்டப்பட்ட பாண்டங்களும் கிட்டியுள்ளன. அக்கால மக்கள் பாம்பை வணங்கி வந்தனர்; பாம்பிற்குப் பால்

வார்த்தனர் என்று எண்ணுதற்குரிய குறிகளும் காணப்படுகின்றன. கங்கைச் சமவெளியில் 5–ஆம் நூற்றாண்டில் பாம்பு வழிபாடு இருந்ததாக யுவான் சுவாங் குறிப்பு கூறுகின்றது.

மானுடர் வாழும் இவ்வுலகையே ஆதிசேஷன் என்ற பாம்பு தாங்கிக் கொண்டிருப்பதாகவும், இராமன் தம்பி இலக்குவன்; கிருஷ்ணரது அண்ணன் பலராமன் போன்றோர் அனந்தன் என்ற பாம்பின் அவதாரம் என்றும் கூறிச் சிறப்பித்தமை பாம்பு பெற்றிருந்த உயர் இடத்தை உணர்த்துகின்றன.

பாம்பு வணக்க வளர்ச்சி நிலைகள்

நஞ்சீந்து மரணம் தந்ததால் பாம்பினை நேரடியாக வணங்கியமை ஆதி நிலையாகும்.

இரண்டாம் நிலை மானுட வடிவில் அமைத்த தெய்வ உருவங்கள் சிறப்புற்று நிலைபெறத் தொடங்கிய காலகட்டத்தில் பாம்புகள் அம்மானுடத் தெய்வ உருவங்களின் அணிகலன்களாகவும், (சிவன்) குடையாகவும், (சக்தி) படுக்கையாகவும், ஆயுதமாகவும் (திருமால்) மாற்றம் பெற்று இணைக்கப் பெற்றதாகும்.

தெய்வங்களின், மக்களின் பிறப்போடும் நாகம் தொடர்புபடுத்தப் பட்டுள்ளமையை மூன்றாவது நிலையாகக் குறிப்பிடலாம். இது பாம்பு வழிபாட்டின் தொன்மையையும், சிறப்பையும் புலப்படுத்துவதாக உள்ளது. (சான்று அம்மன், ஹீப்ரு கதைகள்).

பாம்புகளால் உயிர் நீங்கிவிடுமே என்ற அச்ச உணர்வு காரணமாக வழிபட்ட முதல் நிலையிலிருந்து பிற காரணங்களுக்காக வழிபடும் நிலை வளர்ந்துள்ளதை நான்காவதாகக் குறிப்பிடலாம்.

“கிரேக்கர்கள் பாம்புகளைக் குடும்பத்தைக் காக்கும் கடவுளாக மட்டுமின்றி, செடி, கொடிகளைக் காக்கும் கடவுளாகவும் கருதினர்.

பாபிலோனியர் பூமியின் வளமையைப் பாம்பாகக் கருதி வணங்கினர். வட அமெரிக்காவின் செவ்விந்தியர்கள் பாம்புகளை மழை,

மின்னல், இடி, போன்றவற்றிற்குச் சான்றாகக் கருதினர். ஆக இம்மூன்று நாட்டுக் கருத்துக்கள் மூலம் செழிப்புத் தெய்வமாகப் பாம்பு வணங்கப்பட்டிருக்கின்றமை புலனாகின்றது.

தமிழகத்தில் நாகவழிபாடு

நாகலோகம் பற்றிய நம்பிக்கைகள் இருந்தமையைப் பழம் புராணங்கள், இதிகாசங்களில் காணமுடிகின்றது.

பொறாமையுணர்வால் துரியோதனன் வீமனைக் கொடிகளைக் கொண்டு கட்டிக் கடலில்தாழ்த்த, வீமன் நாகலோகம் அடைந்து, அங்கு அவர்களால் தரப்பட்ட பானம் அருந்தி, முன்னைவிடப் பதினாயிரம் யானைப் பலம் கொண்டவனாகத் தன்னாடடைந்ததாகப் பாரதம் கூறுகின்றது.

தீர்த்த யாத்திரை சென்ற அர்ச்சுனன், ஆற்றில் நீராடும்போது நாக கன்னிகையால் விரும்பப் பெற்று, நாகலோகம் அழைத்துச் செல்லப்பட்டு, அவளை மணந்ததாகவும் மகாபாரதம் தெரிவிக்கின்றது.

நாகர், நாகலோகம் பற்றிய குறிப்புக்களை மணிமேகலையும் தருகின்றது.

மணிமேகலையின் 'பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை' யில்,

"பிறப்புவிளங் கவிரொளி யாத்தகை யாசனம்
கீழ்நில மருங்கி னாகநா டாளும்
இருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
எமதீ தென்றே யெடுக்க லாற்றார்" – வரி.53–56

என வரும். இதில் "கீழ்நிலம் என்பது கீழ்த்திசையிலுள்ள நாகரென்னும் ஒருவகை மனிதர் வாழும் நாடு; நாகநாடென்பர்" என விளக்கம் தருவார் டாக்டர் உ.வே.சா. அவர்கள்.

நாகநாடு பற்றி மேலும் இந்நூலில்,

"நாகநன் னாட்டு நானூற் றியோசனை" (9:21)

"நாக நாடு நடுக்கின் றாள்பவர்" (24 : 54)

"நாக நன்னா டாள்வோன்" (25 : 54)

"நாகநா டாள்வோன்" (29 : 3)

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவர்கள் நாக இலச்சினையை (பாம்பு அடையாளம்) உடைமையின், இவர்களுக்கு இப்பெயரும், தக்ஷகரென்ற பெயரும் வந்தனவென்று ஊகிக்கின்றனர்.

நாக வழிபாடு கொண்டவர்களாதலின், அதனையே தம் குலச் சின்னமாகக் கொண்டிருத்தல் வேண்டும். நாகத்தைக் குலச் சின்னமாக உடைய இவர்கள் பழங்குடி வர்க்கத்தைச் சார்ந்த ஆதிவாசிகளாதல் வேண்டும்.

ஆக, நாகலோகம் என்பது கடலடியிலுள்ள பாதாள லோகத்திலுள்ள நாகங்கள் வாழும் தலம் என்பது முதல் நிலையாகவும், அடுத்து நாகஇலச்சினையைக் கொண்ட நாகர்கள் என்ற ஆதிவாசிகளின் நாடு நாக நாடு என்பதனை இரண்டாம் நிலையாகவும் காண்கிறோம்.

நாக இலச்சினையைக் கொண்ட ஆதிவாசிகளை அடக்கியதன் அடையாளங்களே திருமால் பாம்பணைமீது பள்ளி கொண்ட கோலம் என்பர் அறிஞர்.

"நாரா என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு நீர் என்பது பொருளாகும். நாராயணன் நீரின்மீது உறங்குபவன். அவன் நீரிலுள்ள பாம்பின்மீது உறங்குபவன். பாம்பு பண்டைய இனங்களின் குலக்குறி" எனப் புராண உண்மைகளை ஆராய்ந்த நூல்கள் கூறுகின்றன. (Myth and Reality பக்.20)

"நாராயணனைத் தெய்வமாகக் கொண்ட வளர்ச்சிபெற்ற இனக் குழுக்கள் ஏதோ ஒரு நாக குலக் குறியை உடைய இனக் குழுவை வென்றதால் பாம்பு நாராயணனது படுக்கையாக ஆக்கப்பட்டது" என

டாக்டர் நா. வானமாமலை அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார். (உலகப் படைப்புக்கதைகள், கதை மூலங்களைப் பற்றி ஓர் ஆய்வு. ஆராய்ச்சி 1971).

திருமாலின் வாகனமான கருடனின் காலில் நாகம் சிக்குண்டு கிடப்பதும், முருகனின் வாகனமான மயிலின் காலடியில் பாம்பு கட்டுண்டு கிடப்பதும், கருடன், மயிலுக்குப் பாம்பு அஞ்சும் என்ற இயற்கை ரீதியான உண்மை தவிர, இவ்வாறு நாக இலச்சினையைச் சின்னமாகக் கொண்டவர்களை அடிமை கொண்டவர்கள் அவ்வுட் கருத்தைத் தெரிவிக்கும் வண்ணமும், இவ்வாறு தம் தெய்வ அமைப்புக்களை நிறுவியிருக்கலாம்.

ஆக, இவ்வாறு கடலடியிலுள்ள நாகங்கள் வாழும் உலகம் நாகலோகம் என்றும், பூமியின் கீழ்த் திசையிலுள்ள நாகர் எனும் பழங்குடியினர் நாடு நாகநாடு என்றும் இருவித கருத்துக்கள் தமிழரிடையே இருந்திருக்கின்றன. அதில் இரண்டாவது கருத்து, முந்தையதின் அறிவுபூர்வமான எண்ணத்தின் வளர்ச்சி எனக் கருத இடமுள்ளது.

எவ்வாறாயினும், இவ்விருவேறு நிலை தமிழகத்தில் நிலவியுள்ளமை தெரிகின்றது. எனினும், நாகவழிபாடு செய்யும் வழக்கம் எப்போதிருந்து தமிழகத்தில் துவங்கியது எனத் திட்டவட்டமாகக் கூறுதல் கடினம். அச்ச உணர்வு காரணமாகப் பாம்பை வழிபடத் துவங்கிய காலகட்டத்திலேயே பாம்புகள் வழிபாடு தமிழகத்திலும் தொடங்கிவிட்டது எனக் கூறுதல் பொருந்தும்.

கி.பி. 6–ஆம் நூற்றாண்டெனக் கருதப்படும் சேந்தன் திவாகர நிகண்டுக்கும், கி.பி. 10–ஆம் நூற்றாண்டென்று கூறப்படும் சூடாமணி நிகண்டிற்கும் இடைப்பட்ட காலத்தது எனக் கருதப்படும் பிங்கலந்தை நிகண்டு துர்க்கையின் பெயராக 'அம்பணத்தி' என்பதனைக் குறிப்பிடுகின்றது. 'பணத்தி' என்ற சொல் பாம்புப் படத்தைக் குறிக்கும். "அழகிய படத்தை உடைய பாம்பினை உடையவள்" என்பது 'அம்பணத்தி' என்பதன் முழுப் பொருளாகும்.

இதனால் கி.பி. 6–கி.பி. 10–க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் பாம்பு பெண் தெய்வமாய துர்க்கையுடன் தொடர்புபடுத்திச் சிறப்பிக்கப் பெற்றுள்ளமை புலனாகின்றது.

அம்மன் வழிபாட்டில் பாம்பு பெறும் இடம்

பிற தெய்வ வழிபாடுகளைவிட, அம்மன் வழிபாட்டில் பாம்பு நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. உலக நாடுகள் அனைத்திலும் முதலில் தோன்றியது தாய்த் தெய்வ வழிபாடகவே உள்ளதை அறிஞர்கள் சான்றுடன் நிறுவியுள்ளனர். இத்தகு தாய்த் தெய்வ வழிபாட்டுடன் பழைய பாம்பு வழிபாடும் இணைந்து காணப்படுவதில் வியப்பில்லை. பழைய தாய்த் தெய்வ வழிபாடே நாளடைவில் நாட்டுப்புற மக்களால் மட்டும் வணங்கப்பெறும் அம்மன் வழிபாடாகக் குறுகிப் போய்விட்டது.

பெருந்தெய்வ வழிபாடாய தந்தை வழிபாட்டுடன் 'தாய்கள் தந்தையர்க்கு மனைவியர்' என்ற முறையில் இணைக்கப் பட்டிருக்கின்றன.

இந்த முறையில் தாய்த் தெய்வங்கள் தந்தை வழிபாட்டுடன் கலந்து, பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்தவும் பட்டுள்ளது.

முத்தாரம்மன், மாரியம்மன், காளியம்மன், பிடாரியம்மன், முப்பிடாதியம்மன், வெயிலுகந்தம்மன் என்று உள்ள பல்வேறு அம்மன்களும் சிவபிரானின் மனைவியாய சக்தி அல்லது பார்வதியின் அம்சங்களே என ஒன்றுபடுத்தப்பட்டுப் பெருந் தெய்வநிலைக்குக் கொண்டு போகப்பட்டுள்ளன.

அப்போது பாம்பு வழிபாடு தாய்த் தெய்வத்துடன் இணைந்து, 'தாய்த் தெய்வமாய அம்மனே பாம்பினின்றும், பாம்பு முட்டையினின்று;ம் பிறந்தவளே' என உறவு கூறிக் கலக்க, அதே சமயம் தந்தை தெய்வங்களுக்கும் இப்பாம்புகள் அணியாகவும், படுக்கையாகவும், ஆயுதமாகவும் கூறி இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆயின் தந்தை தெய்வத்தைவிடத் தாய்த் தெய்வத்துடனேயே தாய்–சேய் உறவு கூறி

அணுக்கத் தொடர்பு கற்பிக்கப்பட்டுள்ளமை பாம்பு வழிபாட்டின் பழமையை உறுதிப்படுத்துகின்றன.

நாட்டுப்புறங்களில் இன்றும் அம்மன் வழிபாட்டில் பாம்பு முக்கிய இடம் வகிப்பதாகவே உள்ளது இதனை விளக்கும்.

கேரளத்தில் பகவதியம்மன் வழிபாட்டில் பாம்புத் தொடர்பு மிகச் சிறந்த நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளமை தெளிவாகின்றது. பகவதி கோயில் முகப்புகளில் பாம்புகள் ஓவியங்களாகத் தீட்டப் பட்டிருப்பதும்,[21] பகவதியின் பல்வேறு பெயர்களில் மூத்த பகவதி, இளைய பகவதி, துர்க்கா பகவதி, நாக பகவதி என்பவற்றில், ஒரு பகவதியின் பெயரே நாகத் தொடர்புள்ளதாக அமைந்துள்ளதும், நாக பகவதிக்கு நாகத்துக்குகந்த மிளகும், முட்டையுமே காணிக்கையாகச் செலுத்துவதும்,[22] மூத்த பகவதியின் களத்தை நாகப்பாம்பின் வரிப்படம் போல் தரையில் மஞ்சள் கலந்த அரிசி மாவால் வரைவதும்,[23] நாகபகவதிக்குக் கோலங்கட்டி ஆடுபவன் முடியிலும், ஆடைகளிலும் அட்டையால் செய்யப்பட்ட பாம்பினுருவங்களையும் கடைவாயில் இரு நாக எகிருகளையும் வைத்துக் கொண்டு ஆடுதல் வழக்கமாக உள்ளதும்,[24] தனியாக வசூரிமலை என்ற அம்மனுக்குரிய கோயில் ஒரு பாம்புப் புற்றுடன் காணப்படுவதும், பாம்பு வழிபாடு அம்மன் வழிபாட்டுடன் கொண்டுள்ள நெருங்கிய பிணைப்பைக் காட்டுகின்றன.

குழவிப் பேற்றுக்காகப் பாம்பினை வழிபடுதல் தாய்த் தெய்வத்துடன் நெருங்கிய தொடர்புடையது பாம்பு வழிபாடு என்பதனைப் புலப்படுத்துகின்றது.

பொதுவாக, சைவ, வைணவக் கோயில்கள் அனைத்திலுமே பாம்புருவங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் இரு பாம்புகள் பின்னிப்பிணைந்த நிலையில் காணப்படுவதுண்டு. இனப் பெருக்கத்தின் குறியீடாகவும் கருதி இவ்விதம் அமைக்கப்பட்டிருத்தல்

---

21. பி.எல்.சாமி, கண்ணகியும் பகவதி வழிபாடும், ஆராய்ச்சி (டிச.71), ப. 398.

22. மேற்படி, ப. 402.

23. மேற்படி, ப. 399.

24. மேற்படி, ப. 402.

வேண்டும் எனத் தெரிகின்றது. கிரேக்கர்கள், வட அமெரிக்கர்கள், பாபிலோனியர் போன்றவர்கள் பாம்பினைச் செழிப்புத் தெய்வமாகக் கருதி வணங்கிய செய்திகள் இங்கு நினைக்கத் தக்கன. சைனர்களின் நாக தேவதை பத்மாவதி என அழைக்கப்படுகின்றது.

சக்தி முதல் யுகத்தில் குண்டலியாக உதித்தாள் எனக் கூறுவதுண்டு. [25] யோகிகள் இதனைத் தம் யோகத்தால் மேலேழுப்பி, சிரசிலுள்ள ஆயிரமிதழ்த் தாமரையை அடையச் செய்து அமிர்தம் உண்டு சாவாநிலை எய்துவர் எனக் கருதப்படுகின்றது.

நாகத்தை வழிபடும் நாகபஞ்சமி என்ற விழா கோடையில் கொண்டாடப்படும். அம்மனுக்கும் இதே கோடை காலத்தில் விழா எடுத்துச் சிறப்பிக்கும் ஒப்புமை கருதத் தக்கது.

மாரியம்மனைப் பாம்புப் புற்றுடன் தொடர்புபடுத்தி, புத்து மாரியம்மன், புத்தாலம்மன் என்றே நாட்டுப்புறங்களில் அழைப்பதும் எண்ணத் தக்கது.

ஆக அம்மனுடன்,

- அம்மன் நாகத்தினின்றும் பிறந்தவள்
- அம்மனின் குடையாக, சடையாக, மாலையாக, ஆயுதமாக, அணியாக, தலைக்கு அணையாக, காவலாக, சக இருப்பியாக உள்ளது பாம்பு
- அம்மன் கோயில்களில் குழவிப்பேறு, இனக்கவர்ச்சி, செழிப்புக் குறியீடாகவும் அமைதல்

என்ற முவ்வேறு முறைகளில் பாம்பு வழிபாடு அம்மன் வழிபாட்டுடன் இணைந்திருக்கின்றது எனலாம்.

---

25. முதல் யுகத்தில் குண்டலியாகவும், இரண்டாம் யுகத்தில் வாலையாகவும், மூன்றாம் யுகத்தில் பார்வதியாகவும், நான்காம் யுகத்தில் கருமாரியாகவும் உதித்தாள் எனச் சக்தியின் யுக அவதாரங்களைக் கூறுவதுண்டு.

"கருந்தலை நாகமம்மா காக்குதம்மா உன் கொலுவில்"
"சேஷமென்ற பாம்பை யெல்லாம் சேரவே பூண்ட சக்தி"
"நாகங் குடை பிடிக்க நற்பாம்பு தாலாட்ட"
"பாம்பே தலைக்கணைதான்"
"ஐந்தாறு பாம்புனக்கு அள்ளியிட்ட வீரசடை"
"பாம்பு கண்ணி நீலியம்மா"

என "மாரியம்மன் தாலாட்டு" (ஸ்ரீமகள் கம்பெனி வெளியீடு) குறிப்பிடுவது இவண் எண்ணத் தக்கது.

முத்தாரம்மன் கதையில் நாகத் தொடர்பு:-

கடலடியிலுள்ள நாகலோகத்திலுள்ள நாகராசாவின் தங்கை நாக கன்னிகைக்கும், காசிப மகாமுனிக்கும் குழவி வேண்டுமென்ற அவா பிறக்க, உதங்க முனிவர் அதற்கென ஒரு வேள்வி செய்ய, அவ்வேள்வியில் தோன்றிய பிண்டத்தை உண்ட நாககன்னி கர்ப்பமுற்று, சின்னமுத்தம்மன். பெரியமுத்தம்மன் என்ற இரட்டைக் குழந்தைகளை ஈன்றதாக முத்தாரம்மன் கதை [26] தெரிவிக்கின்றது.

முத்தாரம்மன் விற்கவிதை [27] உவர்க்கடல், கருப்புக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நல்ல தண்ணீர்க்கடல் போன்றவற்றைக் கடந்து உள்ள பெருங்கடல் வளைந்திருக்கும் இருட்டு நாட்டின் ஒரு புறமாயுள்ள சொர்ண பூமியின் பளிங்கு மலையருகே மரகதப் பாறையும், அதில் கமலையென்ற திருச்சுனையுமிருக்க, அதன் பக்கத்தில் மாணிக்கப் புற்றெழும்ப, அதில் வசிக்கும் நாகம் அமுதகலசம் ஈன, கலசத்தை ஆதிமுனி எடுத்துக் காத்து, மந்திரம் உருவேற்ற, அதனின்று அரக்கியர் எழுவர் பிறந்ததாயும், இவர்களே முப்புராதிகளைப் பெற்றதாகவும், இம்முப்புராதிகளுக்குத் தாயாக ஆனவளே முத்தாரம்மன் என்றும் கதை செல்கிறது.

---

26. பதிப்பிக்கப்பெறும் சுவடி எண். 8427, முத்தாரம்மன் கதை (கே.ப.சு.) ஆகும்.

27. (ப.ஆ.) ஆறுமுகப்பெருமாள் நாடார் (1974)

இதில் நேரடியாக நாகமீன்ற அமுத கலசத்தினின்றும் தோன்றியவள் அம்மன் எனாது, நாகம் பெற்றெடுத்த அமுத கலசத்தினின்றும் பிறந்தவர்களுக்குப் பிறந்தவர்கள் முப்புராதி என்றும், இத்தகு முப்புராதிகளின் தாய் முத்தாரம்மன் என்றும் சுற்றி வளைத்து நாகத்துடன் அம்மன் பிறப்பு மறைமுகத் தொடர்புடையதாகக் கூறப்பட்டுள்ளது.

8018 – வில் கதை அம்மன் கதையும் (கே.ப.கு.),

"வருமையுடன் வீற்றிருக்கும் மானாகஞ் செய்தவத்தால்
பெருமையுடன் முட்டைதன்னைப் புகழ்பெறவே யீன்றதுவே
அருமையுடன் மூன்றுமுட்டை யடைகிடந்த னாகமது
நாகமது மூன்று பெண்கள் நலமுடனே யீன்றதுவே"

என்றும், இந்த மூன்று பெண்களும் முப்புராதியை ஈன்றதாகவும், இம் முப்புராதிக்குத் தாயாக ஆனவள் முத்தாரம்மன் என்றும், முத்தாரம்மன் விற்கவிதையை ஒட்டியே தெரிவிக்கின்றது.

ஆக, இக்கதையிலும் பாம்பினின்றும் பிறந்தவள் அம்மன் என நேரடியாகக் கூறாது, பாம்பு முட்டையினின்றும் தோன்றியவர்களுக்குப் பிறந்தவர்கள் முப்புராதி என்றும், இம்முப்புராதியின் தாய் முத்தாரம்மன் என்றும் அமைந்து, நாக முட்டையினின்றும் அம்மன் உதித்தமை மறைமுகப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

ஆயின் திருநெல்வேலி மாவட்ட ஊர்களில் அம்மன் பாம்பு முட்டையினின்றும் தோன்றியதாக நேரடியாகவே வில்பாடலில் பாடப்படுவதாகத் தெரிகின்றது.[28]

---

28. திருநெல்வேலி மாவட்ட வண்ணாரப்பேட்டைப் பகுதிகளில் திரு. மயிலேறி என்னும் வில்லுப்பாட்டுக்காரர், அம்மன் பாம்பு முட்டைக்குள்ளிருந்து வந்ததாக, நேரடியாகவே தம் பாடலில் பாடுகிறார். - தே. லூர்து. கதைப்பாடல்களின் இயல்புகள். உ.த.நி. கருத்தரங்கக் கட்டுரைகள் (1977).

பின்னால் கதை வளர்ச்சி, மாற்றங்கள் ஏற்பட்டு, ஏட்டு வடிவில் எழுதப்பெறும் பொழுது, நேரடியாக பாம்பு முட்டையினின்றும் அம்மன் பிறந்தாள் எனக் கூறாது, வேறு மூவரோ, எழுவரோ பிறந்ததாகவும் அவர்கள் முப்புராதியைப் பெற்றதாகவும், அம்மன் இவர்கள் தாயாக ஆனதாகவும் நீட்டி வளர்த்து மறைமுகத் தொடர்புடையதாய் அம்மன் – பாம்பு தொடர்பு மாறியிருக்கலாம்.

வேறு சில கதைப்பாடல்களில் அம்மன் பிறப்பு பாம்பு பெற்றதாய் நேரடியாகக் கூறப்பெறாது, அதன் விஷத்துடன் தொடர்புடையதாகப் பாடப்படுதலையும் காணமுடிகின்றது.

திருக்கண்ணன்குடி (திருநெல்வேலி மாவட்டம்) போன்ற ஊர்களில் இன்றும் பாடப்பட்டு வரும் 'உச்சி மாகாளி கதை' என்ற அம்மன் கதைப் பாடலில், சிவன், வாசுகி என்ற பாம்பால் உமிழப்பட்ட ஆலம் உண்டபோது, உமை சிவபிரானின் கழுத்தைப் பிடிக்க, அவ்விஷம் சிவனின் உச்சந்தலை வழியாக உச்சிமாகாளியாக உருவெடுத்து வெளிவந்ததாக அமைந்துள்ளது.

ஆக, இக்கதையில் பாம்பு விஷத்துடன் அம்மன் பிறப்பு தொடர்பு படுத்தப்பட்டுள்ளமை புலனாகின்றது.

முத்தாரம்மன் கதை (கே.ப.சு. எண்ணிடப் படாத சுவடி) என்ற சுவடியும், அரன் பாம்புமிழ்ந்த நஞ்சை உண்டபின், வாயைக் கொப்பளித்த தண்ணீரில் வண்டிமலையன், வண்டி மலைச்சியம்மன் பிறந்ததாகக் கூறுகின்றது.

ஆக, இதிலும் பாம்புவிஷத்துடன் வண்டிமலைச்சியம்மன் பிறப்பு தொடர்புபடுத்தப்பட்டுள்ளமை தெரியவருகின்றது.

முதலில் பாம்பு வணக்கம் தனிப்பட இருந்து பின் தாய்வழிச் சமுதாயத்தில் தாயினையும், பின் தாயின் உருவில் தெய்வத்தினையும் வழிபடத் துவங்கிய பொழுது, பாம்போடு அல்லது பாம்பு விஷத்தோடு தாய்த் தெ;ய்வங்களின் பிறப்பு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது எனலாம்.

எவ்வாறாயினும்,

(1) பாம்பாய நாககன்னி பெற்றதாக,

(2) பாம்பு முட்டையினின்று வந்ததாக,

(3) பாம்பு ஈன்ற அமுத கலசத்தினின்று வெளியேறியதாக,

(4) பாம்பு விஷம் மூலமாக,

என்ற இவற்றுள் ஏதேனும்ஒரு முறையாக அம்மன் தோன்றினாள் எனக் கதை அமைக்கும் மரபு நிலை நோக்க, பாம்பு வணக்கம் தாய்த் தெய்வ வழிபாட்டுக்கும் முந்தையது என்பதையும், பாம்பு வழிபாடும், தாய்த்தெய்வ வழிபாடும் தம்முள் நெருங்கிய தொடர்புடையன என்பதையும் உணரமுடிகின்றது.

பாம்பு வணக்கம் தாய்த்தெய்வ வழிபாடு முகிழ்த்த காலத்தில்,

- தாய்த் தெய்வங்களின் பிறப்பினோடு தொடர்பு படுத்தப்பட்டும்
- தாய்த் தெய்வத்தின் குடையாக
- படைக் கருவியாக
- கடிவாளக் கயிறாக "திட்டுப் பாம்பைக் கடிவாளமாக்கியே" (முத்தாரம்மன் விற்கவிதை, வரி.608)

ஆக்கப்பட்டும் தாய்த்தெய்வ வணக்கத்துடன் கலந்து நிலைத்திருக் கின்றது எனலாம்.

பதிப்பிக்கப் பெற்றுள்ள முத்தாரம்மன் கதையில் நாகமுட்டை, அல்லது நாகமீன்ற அமுத கலசம், அல்லது நாக விஷத்தினின்றும் அம்மன் பிறந்ததாகக் கூறாது, நாக கன்னிகைக்குப் பிறந்ததாகக் கூறியிருப்பதற்கு,

ஒரோர் நிகழ்ச்சிகளாகவும் அமைந்து கதைப்பாடல் மரபுகளாகவே திகழும்,

1. குழவிப் பேறின்றி மனம் வருந்தல்

2. குழவிப் பேறுக்காகத் தவம் செய்தல்
3. கர்ப்பமுறல்
4. ஓரோர் மாதத்திலும் உடல் உறும் மாற்றம் விளக்க
5. எட்டாம் மாதத்தில் செய்யும் சடங்குகள்
6. பத்தாம் மாதத்தில் அனுபவிக்கும் பிரசவ அவத்தை
7. பிரசவம் நிகழ்தல்
8. குழவி பிறந்ததும் செய்த செயல்கள்
9. குழந்தைக்குப் பெயரிடுமுறை
10. குழவி வளர்ப்பு முறை
    - தொட்டில் செய்தல்
    - தாலாட்டல்
    - கல்விப் பயிற்சி
    - தவம் செய்ய அனுப்பல்

என்ற முறைகளெல்லாம் பாம்பு முட்டை, பாம்பீன்ற அமுத கலசம், பாம்பின் விஷம் என்ற நிலைகளினின்று குழவியாய் அம்மன் பிறந்தாள் எனப் பாடும்போது அமைக்க இயலாது ஆதலின், மனிதப் பெண் அடையும் அவத்தைகளையெல்லாம் பாடுதற்கு ஏற்றவாறு இம்முத்தாரம்மன் கதையில் நாக கன்னிகைக்கு அம்மன் பிறந்ததாகப் பொருத்தமுற அமைந்துள்ளார் எனக் கொள்ளலாம்.

இம்முத்தாரம்மன் கதையில் 130 முதல் 333 வரையும் உள்ள 204 வரிகளில் நாகலோகம் – நாகராசர் – நாககன்னிகை – குழவிகளின் பிறப்பும் , வளர்ப்பும் என்ற நிலைகள் சிறப்புற விளக்கப் பெற்றுள்ளன.

நாகத்துடன் தொடர்புடைய செய்திகள் அமைந்துள்ள விதம்

“அங்கு நாகலோக மதிலொரு நாகராசர்" என நாகலோகம், நாகராசர் பற்றிய குறிப்பும், (வரி.137)

“நாக ராசாவின் நல்லதங்கை நாககன்னி” என நாகராசாவின் தங்கை நாககன்னி என்பதும்,

"ஆக முரைத்தாளே பதினாலு தலைமுறை அகர உகரத்தின் பிரணவத்துள் நிலை நின்றாள்" (140 – 141)

என நாககன்னியின் தவ வல்லமைச் சிறப்பும்,

"மாகமுறச் சத்திக் காசிபமா விருஷிக்கும்
மங்கைக் கழகான தங்கைநாக கன்னிக்கும்
கண்ணுக் கழகான புதல்விதான் வேணுமென்று" (144–146)

என்ற வரிகளால் காசிப முனி+நாக கன்னிகைக்குக் குழவி விருப்பம் தோன்றியமையும்.

"வேள்வி வளர்த்துப்பின் மூலமந் திரத்தினால்
வன்னிக் கொழுந்தின்மேல் சுழிமுனை நாட்டியே
வாய்வுதனி லேறி வருகின்ற பொருள்தன்னை" (149–151)

என்ற வரிகளால் குழவிப் பேறுக்காக வேள்வியியற்றித் தவம் செய்த நிலைகளும்,

"உன்னியொரு பிண்டம் ஓம்நமசி வாயமென்ன
....
மகிழ்ந்தங் கருந்தியே யிருந்தன ளருந்தவம்"
தாங்கும் நாககன்னி யுதரத்தி லொரு மாதம்" (152–156)

என்ற வரிகளால் பிண்டமருந்தி நாககன்னி கர்ப்பமுற்றமையும்,

156–164–ஆம் வரிகளால் ஒன்று முதல் 10 மாதம் வரை அவள் உடல் அடைந்த மாறுபாடும்,

165 முதல் 187 வரையும் நாககன்னியின் பிரசவ வேதனையும்,

188 முதல் 213 வரை உள்ள வரிகளால் பெரியமுத்தம்மன், சின்ன முத்தம்மன் என்ற இரட்டைக் குழந்தைகளை நாககன்னி பெற்றெடுத்த நிலையும்,

214 –247 வரையுமுள்ள வரிகளில் நாககன்னி குழவி பெற்றதும், அக்குழவிகளுக்குச் செய்தவைகளும், பெயரிட்ட முறையும்,

246 முதல் 327 வுரையுமுள்ள வரிகளில் குழவிகளுக்குத் தொட்டில் செய்து தாலாட்டிச் சீராட்டி வளர்த்தமையும், சிவனை நோக்கித் தவம் செய்ய நாகக்கன்னி அனுப்பியமையும் விவரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 331–ஆம் வரி வரையும் நாகத் தொடர்புடையதாக இக்கதைப்பாடல் படைக்கப்பட்டு, அம்மன் பிறவி எடுத்த விதமே நாகத் தொடர்புடையது எ ா விளக்கப் பெற்றுள்ளது.

அறிய வரும் கருத்துக்கள்

(1) அம்மன்களுக்கு நாகத்தினைத் தாயாகக் கூறுதலை அம்மன் கதைப்பாடல்கள் ஒரு மரபாகவே கொண்டிருப்பதனால், நாக வழிபாடு அம்மன் வழிபாட்டுக்கு முந்தையது என்ற தோற்றப் பழமையும்,

(2) காலப்போக்கில் தாய் வழிபாடு காலூன்றியபோது அதனுடன் 'மூதாதை' என்ற நிலையில் கலந்திருக்கிறது என்பதும்,

(3) தாய்த் தெய்வ வழிபாடு செழிப்புற்று. வளர்ச்சி எய்திய நிலையில், தாய்த் தெய்வத்துக்குக் குடையாக, ஆயுதமாக அமைக்கப்பட்டு, இரண்டாம் பட்ச நிலைக்குக் கீழ்நோக்கித் தள்ளப்பட்டிருக்கிறது என்பதும்,

(4) தாய்த் தெய்வ வழிபாட்டினை இரண்டாம் நிலைக்குத் தள்ளி, தந்தைவழிச் சமுதாயத்தில் எழுந்த, தந்தை தெய்வ வழிபாட்டு நிலை உயர்ச்சியும், சிறப்பும் பெற்ற காலகட்டத்தில், படுக்கையாகவும், (திருமாலுக்கு) அணியாகவும் (சிவனுக்கு) வாகனங்களின் காலடிகளில் சிக்குண்டு அவதியுறும் நிலைக்கு (முருகனின் மயில், கிருஷ்ணனின் கருடன்) மிக அடிமட்ட நிலைக்கும் நாக வழிபாடு தள்ளப்பட்டிருக்கிறது எனலாம்.

(5) இத்தகு குறியீடுகள் நாக வழிபாடு மூன்றாம் பட்ச

நிலைக்குத் தள்ளப்பட்டதை மட்டுமல்லாமல், சமூக, வரலாற்று நிலையில் நாகத்தைக் குலச் சின்னமாக உடைய, நாக வழிபாடுடைய பழங்குடி மக்களை வெற்றிக்கொண்டு, அவர்களிடையே தந்தை வழிபாட்டு முறை பரப்பப்பட்டதிலும் வெற்றி கொண்டதன் அடையாளமாகவும் அமைக்கப் பட்டன எனலாம்.

(6) நாகம், அச்சம் காரணமாக தனித்த நிலையில் வணங்கப்பட்ட நிலை காலப்போக்கில் மாறி, தாய்த் தெய்வங்களாகிய அம்மன்களோடும், தந்தை தெய்வங்களுடன் தொடர்புடையன என்ற காரணங்களுக்காக, இவர்கள் கோயில்களில் வைக்கப்பட்டு வணங்கும் நிலை ஆனது.

(7) தவிர வளமைக் குறியீடாகவும், இனக் கவர்ச்சி, குழவிப் பேறு போன்ற பிற காரணங்களுக்காகவும் நாகத்தை வணங்கும் நிலை இன்றும் வளர்ந்து பரவியுள்ளது.

(8) முத்தாரம்மன் கதைகளில் அம்மனுக்குத் தாய் என்ற நிலைகளிலும், அம்மனின் பிறப்புக்கு மூலகாரணி என்ற நிலையிலும் அமைந்து சிறந்துள்ளமை இதன் முதன்மைத் தன்மையையும், தாய்த் தெய்வ வழிபாட்டுக்கும் முந்தையது என்ற இதன் பழமைத் தன்மையையும் தெளிவுபடுத்துகின்றது.

(9) அம்மன் கதைகளில் நாகத்தைத் தாயாக அமைத்துப் பாடுதல் வழிவழி வந்த மரபாகவே இருத்தல் வேண்டும் (காரணம் நாட்டுப்புறப்பாடல்கள் பழமைக் கூறுகளைக் காத்தளிக்கும் பெட்டகம் என்பதில் அறிஞர்களுக்குள் கருத்து வேறுபாடில்லை) இம் முத்தாரம்மன் கதையும் அம்மரபைப் பிறழாமல் பின்பற்றியுள்ளது எனலாம்.

(10) இம்முத்தாரம்மன் கதையில் நாக கன்னிகைக்கு அம்மன்கள் பிறந்ததாகக் கூறியுள்ளமை, பாம்பு முட்டை, பாம்பீன்ற அமுத கலசம், பாம்பின் விடம் என்றமைந்த நிலைகளினின்றும் முற்றிலும் முன்னேற்றம் அடைந்த நிலையை விளக்குவதாகும். இதனால் பதிப்பிக்கப் பெற்றுள்ள இம்முத்தாரம்மன்கதை பிற முத்தாரம்மன் கதைப்பாடல்களுக்கெல்லாம் பிந்தைய நிலையில் எழுந்த கதைப்பாடல் என்பது தெளிவாகின்றது.

பிற்காலக் கதைப்பாடல்களில் கதைப்பாடல் மரபுகளாகவே பின்பற்றப்பட்டுள்ள குழவிப் பேறு வேண்டித் தவம் செய்தல் முதல், குழவி வளர்ப்பு வரைஉள்ள நிலைகளை விளக்கவும் நாக கன்னிகைக்குப் பிறந்தாள் என்ற இந்நிலை ஏற்றதாகவும் அமைந்திருக்கின்றது.

முத்தாரம்மன் கதையில் இசைக்கருவிகள் பெறும் இடம்

மொழி தோன்றாத நிலையில் ஆதி மனிதன் ஒலிக் குறிப்புக்களால் தன் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறான். மூங்கில்களில் வண்டு துளைத்த துளை வழியும், மிருகங்களின் தோல், நரம்பு வழியும் இசை எழுவதைக் கண்டு, வேட்டையாடி உண்டு உடல் திருப்தியுற்ற நிலையில், உளத் திருப்தியடைமாறு இசையெழுப்பிக் கூத்தாடவும் செய்திருக்கிறான். தம்மைக் காட்டு விலங்குகளினின்றும், நச்சுயிரிகளினின்றும், இயற்கைச் சக்திகள் அபாயங்களினின்றும் காத்த தம் அருட்தெய்வத்தினைச் சிறப்பிக்கும் வகையில் தமக்கு உளத் திருப்தியேற்படுத்திய இசையையே இசைத்து வழிபட்டிருக்கின்றனர். இசைக்கும், இறைக்கும் இவ்வாறு அடிநாள் தொட்டே ஆழ்ந்த உறவிருந்து வந்திருப்பதை அறிய இயலுகின்றது.

பக்தியை, இசையால் பரப்பி வளர்த்த நாயன்மார்களையும் பார்க்கிறோம். கோயில்களில் நாடோறும் தேவாரப் பாடல்களை ஓதுபவர்களை நியமித்து, அவர்கள் பரம்பரை பரம்பரையாய் நலமுற்று வாழ மானியங்கள் அளித்த சோழ மன்னன் இராசராசனையும் வரலாறு காட்டுகின்றது. இறை தொடர்பாய, எக்காரியமும் இசை இன்றி நிகழாது என்ற நிலை இன்றுவரை தொடர்ந்து வந்திருக்கிறது.

இறைவனே இசை வடிவானவன்; நாத வடிவானவன் என்பது இந்து மதத்தின் கோட்பாடு. இறைவன் ஓம் எனும் பிரணவமாய், ஓங்கார வடிவமாய்த் திகழுவதாகக் கழறுவர். சிவபிரானின் கையிலுள்ள உடுக்கை ஒலியினின்றே உலகம் பிறந்தது என்ற புராணீக, தத்துவக் கருத்துக்களும் உள்ளன.

இவ்வாறு இறை என்றால் இசை என்றும், இசை என்றால் இறை என்றும் ஒன்றுடன் ஒன்று கலந்தும், கரைந்தும் திகழ்கின்ற நிலையைக் காண முடிகின்றது. இறைமீது கொண்ட பக்தி இசைக் கலையை வளர்த்திருக்கின்றது; இசை பக்தியைச் சிறப்புறச் செய்திருக்கிறது எனலாம்.

இவை இத்தகு நெருங்கிய உறவுடைய இந்நிலையில் தெய்வக் கதைப் பாடலாய முத்தாரம்மன் கதையில் இசை, இசைக் கருவிகள்

பற்றிய குறப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவில் இடம் பெற்றுள்ளதில் வியப்பேதும் இல்லை.

முத்தாரம்மன் கதையில் இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள்:–

பதிப்பிக்கப் பெற்றுள்ள இக்கதைப்பாடலில் இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள் ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்றன.

394, 514, 568, 838–858, 972, 1037, 1263, 1265, 1290, 1365, 1462,1467, 1520–1521, 1551, 1555, 1686, 1732, 1745, 1804, 1808–1809, 1931–1932, 1976, 1978 என்ற எண்களுள்ள வரிகளில், அதாவது மொத்தம் 45 வரிகளில் இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள் அமைந்துள்ளன.

மொத்தம் 44 இசைக்கருவிகள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் சின்னம், தனிச் சின்னம் என அமைப்பு வேறுபாட்டுடனும், வண்ணச் சின்னம், சந்திரநிறத் தவல் என நிறவேறுபாட்டுடனும்,

- தாளம்
  - அனுதாளம்
  - இங்கிதத் தாளம்
- தவில்
  - உச்சந்தவில்
  - மந்தத் தவில்

வீராணம் – மந்தவீராணம் என இசை வேறுபாட்டுனும்,

- பறை
  - சம்புலப் பறை
  - நாகப்பறை
  - நாழிகைப்பறை

- முரசு
  - மும்முரசு
  - மோகன முரசு
- முழவு
  - அந்தரி முழவு
  - குட முழா

என்று வகை வேறுபாட்டுடனும் குறிப்பிடப் பெற்றுள்ளன.

சங்கு 7 இடங்களில் மிகுதியாகக் குறிக்கப்பெற்றுள்ள இசைக் கருவியாக உள்ளது.

மேளம், துந்தமி என்பன 5 இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன.

பேரிகை, கொம்பு, நாகசுரம், தாளம், தவில், கைமணி, தப்பு என்பன 3 இடங்களிலும், மத்தளம், திமிலை, முரசு, நவுரி, கொட்டு, பம்பை, காளம், பூரிகை என்பன 2 இடங்களிலும், பிற 1 இடத்திலும் சுட்டப்பட்டுள்ளன.

இசைக்கருவிகள் இவ்வாறு பெயர்களோடு குறிக்கப் பட்டுள்ளவை தவிர,

பதினெட்டு வாத்தியம்	(1266)
பல்லியமுப்பது	(1374)

எனப் பொது நிலையிலும் குறிக்கப்பட்டுள்ளன.

குரவை முழக்கம் (1372), இடியென முழங்கல், விளியெறிதல் (1805) வெடிகளதிரல் (1979), சங்கீதம் (1984) என்றும் இசையெழுப்பிய நிலைகள் இயம்பப்பட்டுள்ளன.

அமையும் சூழல்

எப்போது இசைக்கருவிகள் முழங்கியதாக அமைகின்றது எனக் காணும் பொழுது,

(1) அம்மன் சிவபிரானிடம் வரம் வாங்கி மீளும் பொழுது அமைதல்

(2) ஒரோர் தலம் நோக்கிச் செல்லும் போது அமைதல்

(3) ஊர் சென்று அம்மை நோய் பரப்பி மக்களை ஆட்கொண்டு மீளும் போது அமைதல்

838 முதல் 846 வரை உள்ள வரிகளில் பேரிகை, மத்தளம், இடக்கை, கரடி, சல்லிகை,தாளம், திமிலை, குடமுழா, தக்கை, நாகப் பறை என்ற தோற்கருவிகள் ஒலிக்கப்பெற்றதும்,

தொடர்ந்து 846 முதல் 850 வரை உள்ள வரிகளில் சங்கு, எக்காளம், தனிச்சின்னம், காளை, நவுரி, கொம்பு, நாககரம் போன்ற துளைக் கருவிகள் இசைத்ததும்,

பின் இவற்றைப் பின்பற்றித் தவில், கிடுபிடி, வீராணம், திமிலை, செண்டை போன்ற தோற்கருவிகள் முழங்கியதும் (851–854),

தொடர்ந்து ருத்திர வீணை, கயிலாச வீணை, கின்னரி, தம்பூர், சகஸ்ரவீணை போன்ற நரம்புக் கருவிகள் (856–858) ஒலித்ததாகவும் முறைப்படி அமைந்துள்ளது.

இசைக் கருவிகளை எம்முறையில், எதனை முதலில், எதனைத் தொடர்ந்து, எதனைக் கலந்து இசைக்க வேண்டும் என்ற முறைமைகளை யெல்லாம் தெரிந்து இசைத்திருக்கின்றனர் என்பதும் தெளிவாகின்றது.

“பறை யுடலக் குழல் முரல” (840) என்பதான் பறையொலியைத் தொடர்ந்து குழலிசையை ஒலிக்கச் செய்தனர் என்பதும், கிடுபிடியைத் தொடர்ந்து கைமணியை ஒலிக்கச் செய்தனர் (851) என்பதும் புலப்படுகின்றது.

மிகுதியாகப் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள்

முத்தாரம்மன் புறப்படுகைக்கு மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டுள்ள இசைக் கருவிகள் தோற்கருவிகள் என்பது தெளிவாகின்றது.

குறிப்பிடப்பட்டுள்ள 44 இசைக் கருவிகளில் 28 இசைக்கருவிகள் அதாவது இடக்கை, உறுமி, கனகதப்பு, கொட்டு, சந்திரவளையம், சல்லரி, சல்லிகை, சுத்தமத்தளம், செண்டை, டம்மாரம், டோலக், தக்கை, தடாரி, தண்டை, தம்பூர், தவில், திமிலை,துடி, துந்துமி, பம்பை, பறை, பேரிகை, மத்தளம், முரசு, முழவு, மேளம், வீராணம் என்பன தோற் கருவிகளாகவே உள்ளமை கவனிக்கத் தக்கது. இவையெல்லாம் உரத்த ஒலி எழுப்ப வல்லன. பெரும்பான்மையும் விலங்குத் தோல்களினின்றும் செய்யப் பெறுபவை.

அடுத்து, எக்காளம், கொம்பு, தனிச் சின்னம், நவுரி போன்ற உரத்த ஒலி எழுப்பும் துளைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டமை தெரிகின்றது. ஆக,

- தோலில் செய்யப்பட்டவை
- உரத்த ஒலி எழுப்புபவை

என்ற நிலைகளிலமைந்த இசைக்கருவிகளைப் பெரும்பான்மையாக முத்தாரம்மன் புறப்படுகைக்குப் பயன்படுத்தி இருக்கின்றனர் என்ற உண்மை தெளிவுறுகின்றது.

பழமரபு சான்றவை

நாட்டுப்புற மக்களால் வணங்கப்பெறும் முத்தாரம்மன் தெய்வத்தின் புறப்படுகைக்கும், பவனிக்கும் இவ்வாறு உரத்த ஒலி எழுப்புவனவற்றையும், தோலால் ஆன கருவிகளையும் மிகுதியும் பயன்படுத்தியமைக்குப் பழ மரபுத் தொடர்பு காரணமாதல் வேண்டும்.

நாட்டுப்புற மக்களிடத்திலேயே பழமையான சமூகக் கூறுகளைக் காண இயலும் என்பர் அறிஞர்கள்.

"மானிடவியலை விளக்கும் நாட்டுப்புறவியலின் தன்மைகள், நாகரீகம் அடைந்துள்ள தற்காலச் சூழ்நிலையில் கிராமத்தார் களிடம்தான் அதிக அளவு இருக்கின்றன" [29] என்றும், பொதுவாக எல்லா நாட்டிலுமே விவசாய மக்களிடத்திலுள்ள பழக்கவழக்கங்களிலும் மரபுச் செய்கைகளிலும்தான் முன்காலத்தவரின் பண்பாட்டு எச்சங்கள் தங்கியிருக்கின்றன" [30] என்றும்,

"நூல்வழிக் கல்வியறிவு இல்லாத மக்களே தங்களின் பழமையான எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் மரபாக, அஃதாவது மூதாதையர்களிடமிருந்து பெற்றோர்களுக்கும், பெற்றோர்களிடமிருந்து அவர்களுடைய சந்ததிக்கும், வாய்மொழி வாயிலாகவே பரப்பிப் பாதுகாத்து வருகின்றனர்" [31] என்றும் அமையும் அறிஞர்களின் கருத்துக்கள் எண்ணத் தக்கன.

நாகரீகம் அடையாத கால கட்டத்தில் இசை மென்மைத் தன்மை உடையதாக அன்றி, வல்லொலி உடையதாக, பேரோசை எழுப்ப வல்லனவாக அமைந்திருத்தல் வேண்டும்.

காலப்போக்கிலேயே நயம்பட, பல்வேறு ஒலி வேறுபாடுகளும் வெளித் தெரியுமாறு, மென்மையும், நுண்மையும் கொண்டனவாக இசைகள் வேறு பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

---

29. "Much of the anthropological material called folklore comes from rural population of the civilized world". - Encyclopaedia of the Social Sciences, Vol.V (1537).p. 288

30 In all customs and traditions of the peasant class in all countries are embedded the knowledge of past events. - Everyman's Encyclopaedia, Vol.5, p.35.

31 for the people with least book education commonly cherish most firmly old ideas and superstitions which have been passed on by word of mouth for generations" - Oxford Junior Encyclopaedia, Vol.I, London, 1976.

மேலும் ஆரம்ப கட்டத்தில் மனிதன் தான் வேட்டையாடிய விலங்குகளின் மாமிசத்தை உண்டு, தோலை ஆடையாகப் பயன்படுத்தியவன், அதனின்று ஒலி எழும் நுட்பத்தையும் நோக்கி, தோற் கருவிகளைக் கானகத்தில் கிடந்த மரத்துண்டுகளின் மேல் பிணைத்து, மரக்கோலால் ஓங்கி அடித்து ஒலி எழுப்பக் கற்றிருக்கிறான்.

மூங்கில்களின் துளைகளில் காற்று நுழைந்ததால் எழுந்த இசை கண்டு, துளைக் கருவிகளையும், விலங்குகளின் நரம்புகளில் நாதம் பிறப்பதறிந்து நரம்புக் கருவிகளையும் படைத்திருக்கின்றான்.

ஆதிநிலையாகிய தோற்கருவிகளின் இசையை, ஆதித்தெய்வ நிலையாகிய தாய்த்தெய்வத்துக்குப் பயன்படுத்துதல், நாட்டுப்புற மக்களின் தெய்வமாகிய அம்மன் வழிபாடு வரை மரபு மாறாது பின்பற்றப்பட்டு வந்துள்ளமை தெரிகின்றது.

அதுபோல் உரத்த ஒலி எழுப்பும் கருவிகள் பயன்படுத்துகின் றமையும் ஆதிமனித நிலைகளோடு ஒப்பிடத்தகும் பழமைக் கூறு மிகுந்தவை.

இந்நிலைகளை இன்றும் உள்ள ஆதிவாசிகள் அல்லது பழங்குடி மக்கள் தம் தெய்வங்களுக்கு வழிபாடு செய்யும்போது முழக்கும் இசைக் கருவிகளோடும் ஒப்பிட உண்மை தெளிவாகும்.

“கோவை மாவட்டத்தில் வாழும் இருளர் என்ற ஆதிவாசி மக்கள் பொரே (பறை?) தவுலு (தவில்?) என்ற தோற்கருவிகளையும், புல்லாங்குழல் போன்ற மங்கே, நாகசுரம் போன்ற கொகாலு என்ற துளைக் கருவிகளையும், சால்ரா என்ற கஞ்சக் கருவியையும், திருவிழா மற்றும் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதாகத் தெரிகின்றது ”.[32]

---

32. செங்கோ - வனாந்தரப்பூக்கள் (ஜன. 1979), ப. 41.

"நீலகிரி இருளர்கள் கடிமெ பொரே (பறை ?) தம்பட்டே (தம்பட்டம்?) என்ற தோற்கருவிகளையும், புல்லாங்குழல் போன்ற புகிரி, நாககுரா, குவாலு என்ற துளைக் கருவிகளையும் விழா, மணம், சாவு போன்ற நிகழ்ச்சிகளில் பயன்படுத்துகின்றனர்".[33]

"கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள ஆனை மலைவாழ் காடர்கள் கூத்தின்போது தமிழ் நாட்டில் கிராமத்தவர் பயன்படுத்தும் பறை, துருத்தி போன்ற வாத்தியங்களையே பயன்படுத்துவதாக அறிய வருகின்றோம்". [34]

விஞ்ஞான வளர்ச்சியால் மின்சார உதவியோடும், பலவித கரணிகளால் உருவாக்கப் பெற்றுள்ள இசைக் கருவிகளின் எண்ணிக்கை மலிந்துள்ள இன்றைய கால கட்டத்திலும், இந்த ஆதிவாசிகளே பழம் மரபு வழி வந்த பண்டையோர் இசைத்த இசைக் கருவிகளையே இன்னமும் இசைத்துக் கொண்டு வந்து, ஆதிமக்கள் எத்தகு கருவிகளை இசைத்திருக்கக் கூடும் என்பதற்குச் சான்றாகவும் திகழ்கின்றனர்.

பழங்குடி மக்கள் தாம் பயன்படுத்தும் தோல், துளைக் கருவிகளுடனேயும், தோற்கருவிகளையே சிறப்பாகவும், துளை, கஞ்சாக்கருவிகளைத் துணைநிலையாகவும் அமைத்து இசைத்தல் தோற்கருவிகளையே சிறப்பாகப் பயன்படுத்தியதாகத் தெரிகின்ற முத்தாரம்மன் கதையமைப்போடும் பொருந்தி அமைவது கவனிக்கத் தக்கது.

ஆகவே, தோற்கருவிகளை மிகுதியும் பயன்படுத்தியதாக அமையும் முத்தாரம்மன் கதைப்பாடலில் காணும் நிலை ஆதிமக்கள் பயன்படுத்திய இசைக் கருவி நிலைகளுடன் தொடர்புள்ள பழமை வாய்ந்ததாகும்.

---

33. ஆர். பெரியாழ்வார், இருளரும் இசையும், (ப. ஆ.) நா. வானமாமலை, மக்களும், மரபுகளும் பக். 147 - 149.

34. எஸ்.ஆர். வேங்கடராமன், பாரதப் பழங்குடிகள் (மே. 1983).

அம்மன், ஆக்ரோஷத் தெய்வமானதாலும் மென்மை ஒலி எழுப்பும் கருவிகளைவிட வன்மையான உரத்த ஒலி எழுப்பும் கருவிகளுக்கு முக்கியத்துவம் தந்து இசைக்கப்பட்டன என்றும் கருதலாம்.

அறிய வருவன:-

(1) முத்தாரம்மன் கதையில் அம்மன் புறப்படுகையின் போது தோல், துளை, நரம்புக்கருவிகள் இசைத்ததாகக் கதைப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது. முத்தாரம்மன் விற்கவிதையும் இவ்வாறே அமைந்துள்ளது.

(2) 19-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கதைப் பாடலாதலின் இசைக் கருவிகள் நன்கு புழக்கத்தில் புகுந்து, கோயில் விழாக்களிலும் பெரிதும் பயன்படுத்தப்பட்ட நிலை இருந்தது. ஆதலின், அவ்வாறே கதைப்பாடலில் அம்மனின் புறப்படுகையின்போது அனைத்து இசைக்கருவிகளும் ஒலித்தன என்ற முறையில் அமைந்துள்ளன.

(3) ஒலிக்கப்பெற்ற இசைக்கருவிகள் 44 ஆகவும், இவற்றில் தோல், துளை, நரம்புக் கருவிகள் என்பன அடங்குவனவாகவும் உள்ளன.

(4) இவற்றுள் தோற்கருவிகள் மட்டுமே 28 என்ற நிலையிலமைந்து முதலிடம் பெற்றுள்ளன.

(5) இசைக்கப்பெற்ற கருவிகளில் தோற்கருவிகள் மிகுதி என்பது பழம் மரபு, பழங்குடிமக்கள் தொடர்புடைய நிலையாகும். ஆதித் தெய்வமாய தாய் வழிபாட்டின் சாயலை நினைவூட்டுவதுமாம்.

(6) இதனால் அம்மன் வழிபாட்டு நிலையில் பயன்படுத்தப்பெறும் இசைக் கருவிகள் பழம் நிலையின என்பது புலனாகின்றது.

(7) இதற்கு இன்றும் உரத்த ஒலி எழுப்பும் கருவிகள், தோலாலான இசைக்கருவிகளை மிகுதியாகப் பயன்படுத்துகின்ற ஆதிவாசிகளின் செயல்கள் தக்க சான்றுகளாக அமையும்.

(8) கதைப் பாடல் தோன்றிய காலத்தில் அம்மன் வழிபாடுகளின் போது இசைக்கப்படும் இசைக்கருவிகளை, கதையிலும் அம்மன் ஒரோர் ஊர் செல்லப் புறப்படுகையின் போதும் ஒலித்ததாக அமைத்துச் சிறப்பித்துள்ளனர்.

(9) இவ்வாறு இசைக்கருவிகள் முழங்க, அம்மன் புறப்பட்டாள் என இயம்பிப் பாடும்போது, அம்மன் உலா வரலைக் கண்முன் காணுவதாகவே கதை கேட்கும் மக்கள் நினைத்துப் பக்தியில் மூழ்குவர்.

ஆக, இவ்வாறு பக்தியுணர்வை மிகுவிக்கச் செய்து கிளர்ந்தெழச் செய்யும் நோக்குடனும், அடிக்கடி அம்மன் இசைக் கருவிகள் முழங்க ஊர்தோறும் சென்ற திருக்காட்சி விவரிக்கப் பெற்றுள்ளது எனலாம்.

(10) இசைக் கருவிகளை முழக்குவதும், முழக்குவதாக அமைவதும், அதனை நேரடியாக அனுபவிப்பது போன்ற உணர்வை எழுப்பி இன்புறச் செய்ய வல்லன என்ற உளவியல் நோக்குடனும், இசை மூலம் பக்தி பரப்பும் உத்தி நிலையுடனும், அம்மன் இசைக்கருவிகள் முழங்கப் புறப்படும் நிலைகள் மிகுதியும் அமைக்கப்பட்டுள்ளன எனலாம்.

(11) நடுகல்லில் நிலைத்து உறையும் ஆன்மாவை வாழ்த்தி ஆடலும், பாடலும் நிகழ்த்துவது தொல் மரபு.

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபின் கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே”

(தொல். புறத். நூற்பா.5)

என்கிறது தொல்காப்பியம். இவ்வாழ்த்து பிற்காலத்து வளர்ச்சியுற்ற நிலையில் வஞ்சிக் காண்டத்தில் காணப்படுகின்றது.

இறை உருவங்களிலும் இறையே தங்கியுள்ளதாகப் பாவித்து, அவற்றை ஊர்வலமாகக் கொணர்கையில் ஆடல், பாடல் இசைக்கருவி முழக்கம் போன்றன நிகழ்ந்திருக்கின்றமை தொல் மரபு சான்ற ஒரு நிகழ்ச்சியாகும்.

அம்மை நோயின் வரலாறு

முத்தாரம்மன் கதைகளில்அம்மை நோய் பற்றிய குறிப்புக்களைச் சிறப்பாகக் காணமுடிகின்றது. அம்மன் என்ற தெய்வ வடிவே, அம்மை நோயுடன் நெருங்கிய தொடர்புள்ள அமைப்பாக இருத்தலையும் அறிய முடிகின்றது. அம்மன் – அம்மை நோய்த் தொடர்பு ஏன், எப்பொழுது, எவ்வாறு ஏற்பட்டது என்பதையும், முத்தாரம்மன் கதைகளில் சிறப்பு நிலை வகிக்கும் குறிப்புக்களாக அம்மை நோய் பற்றியன இடம் பெறுவதற்கு என்ன காரணம் என்பவற்றையும் குறித்துப் பகுத்துணர்வதற்கு முன்னர், அம்மை நோயின் வரலாறு என்ன என்பதைப் பற்றி அறிந்துக்கொள்வது அம்மன்– அம்மை நோய்த் தொடர்பைத் தெளிவுற அறிவதற்கு ஊன்றுகோலாகும் என்ற எண்ணத்தில் அம்மை நோயின் வரலாறும், அந்நோய் தொடர்பான பிற செய்திகளும் விளக்கப்படுகின்றன.

அம்மை நோய்த் தோற்றம்

ஆதி மனிதனுக்குப் பக்தியுணர்வு தோன்றியதற்கு அடிப்படைக் காரணமாக அச்ச உணர்வினைக் குறிப்பிடுவர் அறிஞர்கள்.

இவ்வச்ச உணர்வு — மனித மரணம்
- இயற்கைச் சக்திகள் (நீர், நெருப்பு, காற்று)
- பாம்பு போன்ற நச்சுயிரிகள்
- கொள்ளை நோய்கள்
- இறந்தோராவிகள்

போன்றவற்றால் தோன்றியிருக்கின்றது.[35]

இதில் கொள்ளை நோய்கள் எனப்படும் அம்மை, பிளேக், காலரா, சீதபேதி போன்றன, மனிதர்கள் சற்றும் எண்ணாத நேரத்தில் திடீரெனத் தோன்றி, மக்கள் என்ன இது? ஏன் இது தோன்றியது? எவ்வாறு

---

35. ஞா. தேவநேயன், தமிழர் மதம் (நவம்பர், 1972), ப. 7.

இதை முறியடிப்பது? எனத் திகைத்துக்கொண்டிருக்கும் வேளையிலேயே குவியல், குவியலாக மக்களைப் பிணங்களாக்கி அச்சுறுத்தியிருக்கின்றன.

அம்மை என்ற கொள்ளை நோய்

14–ஆம் நூற்றாண்டிலும், 17–ஆம் நூற்றாண்டிலும் எலிகளால் பரவும் பிளேக் என்ற கொள்ளை நோய் பெருவாரியாகப் பரவி மக்களைப் பலி வாங்கியிருக்கிறது. இந்நோயால் இலண்டன் மாநகரில் மக்கள் பேரழிவுக்குள்ளாகியதாகத் தெரிகின்றது. இந்நோயால் கி.பி.1665–இல் இந்நகரின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு மக்கள் மடிந்திருக்கின்றனர்”[36]

18 –ஆம் நூற்றாண்டில் அம்மை நோயாகிய கொள்ளை நோய் பெருவாரியாக உலகெங்கும் பரவியிருந்திருக்கின்றது.

“இவ்வம்மை நோய் முதன்முதலாக சீனா, இந்தியா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் தோன்றியதென ஒருசிலர் கூறுகின்றனர். [37]

“ஸ்பானியர் இந்நோயை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல, அது 60 இலட்சம் அமெரிக்க இந்தியர்களைப் பலி வாங்கியதாகவும் தெரிகின்றது”. [38]

“ஐஸ்லாந்திலும், கொள்ளை நோயாக இது பரவி ஒரே வாரத்தில் 1/3 பங்கு ஜனத்தொகையைப் பலி கொண்டதாகத் தெரிகிறது”.[39]

---

36. ரா. ராஜதுரை, மருத்துவக் கலை அன்றும் இன்றும் (1969), ப. 16.

37. எஸ். சங்கரராமன், தொற்று நோய்கள் (நவ. 1976), ப. 20.

38. மேற்படி, ப. 21.

39. தொற்று நோய்கள், Op. Cit., ப. 21.

ஆஸ்திரேலியாவிலும் பரவிப் பழங்குடி மக்களைப் பலி கொண்டிருந்திருக்கிறது.

"பிரான்ஸ், ஜெர்மன் போர் நிகழ்ந்தபோது, ஜெர்மன் மக்களுக்கு இந்நோய் பரவி இரண்டு இலட்சம் ஜெர்மானியரைப் பலி கொண்டது. இது போரில் இறந்தோர் எண்ணிக்கையை விடப் பன்மடங்கு அதிகமாகும்.

1714-இல் இங்கிலாந்திலும் பயங்கரமாகப் பரவ, இலண்டனில் மட்டும் ஒவ்வோர் ஆண்டும் 1000 பேர் இந்நோயால் இறந்திருக்கின்றனர்". [40]

ஐரோப்பாவில் 15-ஆம் நூற்றாண்டிலேயே இந்நோய் தோன்றியிருப்பினும், 16, 17 - ஆம் நூற்றாண்டுகளிலேயே தன் தீவிரத்தைக் காட்டி, மக்களைப் பெருமளவில் கொள்ளை கொண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறியது என அமெரிக்கக் கலைக் களஞ்சியம் தெரிவிக்கின்றது. [41]

தவிர அமெரிக்கக் கண்டம் கண்டறியப்பட்டு, 15 ஆண்டுகளே ஆகியிருந்த நிலையில் ஸ்பானியர்களால் அமெரிக்கா வந்த இந்நோய், கணக்கற்ற மக்களைப் பலி வாங்கியதையும் தெரிவிக்கின்றது. [42]

"1752-இல் பாஸ்டன் நகரில் 15, 684 மக்கட் தொகையில் 5,998 பேர் அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர்". [43]

---

40. மேற்படி, ப. 24.

41. Encyclopaedia Americana - Americana Corporation (1970).

42. "Fifteen years after the discovery of America, Small-pox was introduced into the Western Hemishere by the Spaniars and within a short time 3,500,000 of an estimated 6,000,000 natives were said to have died in this Americas". - p. 107.

43. Encyclopaedia of Americana, p. 107.

"ஐஸ்லாந்தில் 36 சதவிகித மக்களை இந்நோய் பலிகொண்டிருக்கிறது". [44]

"18-ஆம் நூற்றாண்டு வாக்கில் இந்நோய் மிகக் கடுமையான அளவில் பரவி, ஐரோப்பாவில் ஆண்டுதோறும் 5 இலட்சம் மக்களை மடியச் செய்திருக்கின்றது. ஆசியாவிலோ இதனினும் அதிகமாக இருந்திருக்கின்றது".[45]

ஐரோப்பாவில் 1614-இல் தொற்று நோயாகப் பெருமளவு பரவியதாகவும், 1666-75-ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் முழுவதுமாகத் தன் ஆக்கிரமிப்பைக் காட்டியதாகவும் தெரியவருகின்றது.[46]

அம்மை நோய் உண்டாகும், பரவும் விதம்

அம்மை நோய் 'வைரஸ்' எனும் ஒருவகைக் கிருமியால் உண்டாவதெனக் கண்டறிந்துள்ளனர். இவை மனிதர் உட்கொள்ளும் உணவு, உடலில் எத்துவாரம் வழியும் உட்புகும் தன்மை கொண்டன.

இக்கிருமிகள் உடலில் புகுந்து இனவிருத்தி செய்த பின், அவை வேகமாக வெளிவரும்போது இந்நோய் உண்டாகின்றது.

உண்மை வைரசுகளாகிய இவை உடற் செல்களுக்குள் புகுந்து, செல்களின் பெருக்க வினைகளையே தம் பெருக்கத்திற்குக் கவர்ந்து வாழும். இதனால் இக்கிருமிகள் உடலிற் புகுந்தபின் அழிக்க மருந்தில்லை. தரும் நோய் தவிர்க்க மருந்துண்டே தவிர, தீர்க்க மருந்தில்லை.

---

44. *"In Iceland small-pox killed 36 percent of a population of 50,000 in the epidemic of 1707". - Encyclopaedia of Americana, p.107.*

45. *வாண்டுமாமா, மருத்துவம் பிறந்த கதை, ப. 89.*

46. *Small-pox was pandemic in Europe in 1614 and epidemic in England during 1666 - 75 and there were scattered outbreaks in New England all through the 17th Century. - Publisher William Benton, Encyclopaedia Britannica, Vol. 20 (1972)*

ஒருவரின் உடலில் புகுந்த வைரசுகள் எளிதில் பிறரைத் தொற்றும் குணமும் கொண்டனவாதலால், விரைவில் பெருவாரியான மக்களிடையே பரவவும் செய்யும்.

காற்று மூலம் இவை விரைந்து பரவுவதான் நோயாளியின் தும்மல், இருமல், எச்சில், உட்கொண்ட மீதி உணவு, பயன்படுத்தும் பொருட்களாய படுக்கை, உடை, தட்டுக்கள், குவளை, பென்சில், விளையாடும் பொருட்கள் என்றுள்ள பலவற்றானும் இந்நோய் பரவ ஏதுவுள்ளது. நோயில்லா மனிதன் சுவாசிக்கும்போது மூச்சுக் குழாய் வழியாக உட்சென்று, இரத்தத்தில் கலந்து உடம்பின் எல்லாப் பாகங்களுக்கும் சென்று நோயை உண்டாக்குகின்றது.

அம்மை நோய்க் கிருமிகள் 6 மாதம் வரைஉடலில் தங்கி, அதன் பின்னரே அழியும் தன்மையன. எனவே 6 மாதம் வரையும் நோயுற்றவர், பிறருக்கு நோய் பரவாவிதத்தில் பாதுகாப்புடன் இருத்தல் நல்லது. இவரது தோலில் உள்ள கொப்புளங்கள், பொறுக்கு, சீழ் முதலியவற்றில் வைரஸ் இருந்து கொண்டு பிறருக்குப் பரவ ஏதுவுண்டு.

அம்மை நோய்த் தடுப்பு முறைகள்

அம்மை நோய் கி.பி.14 முதல் 18–ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலகட்டங்களில் தன் தீவிரத்தைக் காட்டி, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை உருவாக்கி வரலாறு படைத்துள்ளது என்றாலும், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, குறிப்பாக வேத காலத்திலேயே இந்நோய் இருந்திருக்கிறது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

"ரிக் வேதத்திற்குச் சற்று பிந்திய காலத்தில் தோன்றிய, ஆயுர்வேத மருத்துவ முறையை நிலைப்படுத்திய சரகர், சுசுருதர் எனும் இரு பெரும் மருத்துவ மேதைகளில் சுசுருதர் தமது மருத்துவக் குறிப்புக்களில் வைசூரி நோய் பற்றித் தெளிவான விளக்கங்கள் தந்துள்ளார். [47]

---

47. மருத்துவக்கலை அன்றும் இன்றும், Op.Cit., ப. 16.

"புகழ் வாய்ந்த பெர்சியன் மருத்துவரான ராஸஸ் (Rhazes) கி.பி. 9–ஆம் நூற்றாண்டிலேயே பெரியம்மைக்கும், தட்டம்மைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்கியுள்ளதாகத் தெரிகிறது.

பிரான்ஸ், இத்தாலியில் கி.பி.570–லேயே 'கொப்புள நோய் என்ற சொல்லாட்சி இருந்திருக்கின்றது". [48]

சீனர்கள் பண்டைக் காலத்திலேயே அம்மை நோய்த் தடுப்பு முறைகளைக் கையாண்டதாகத் தெரிகிறது.

அம்மைநோய் ஒருமுறை ஒருவருக்கு வந்தால் திரும்ப அவருக்கு வராது. தடுக்கும் எதிர்ப்புச் சக்தி அவர் உடலில் உண்டாகி இருக்கும் என்ற தன்மையைத் தெரிந்து வைத்துக்கொண்டு, அம்மை நோயை வலிய அடைந்து எதிர்ப்புச் சக்தி பெற்று நோய்த் தீவிரத்திலிருந்து காத்துக் கொள்ளும் தடுப்பு முறையைச் சீனர்கள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கடைபிடித்து வந்ததாகத் தெரிகின்றது.

"அவர்கள் அம்மை நோய்ப் பொறுக்குகளை மூக்கில் வைத்துத் தேய்த்து எதிர்ப்புச் சக்தி பெறலைத் தடுப்பு முறையாகக் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது". [49]

"பொறுக்கைக் காயவைத்துப் பொடியாக்கிக் கை, அல்லது நெற்றியில் சிறு கீறல் செய்து, அப்பொடியை வைத்துத் தேய்த்து, நோய்பெற்று எதிர்ப்புச் சக்தியை அடைதலைப் பல்லாண்டுகட்கு முன்பே இந்தியாவில் அந்தணர்கள் கைக்கொண்டதாகத் தெரிகின்றது".[50]

---

48. The Persisan physician Rhazes about A.D. 900 wrote the first known account separating small-pox from measles; although Eusebius mentioned a Syrian epidemic in A.D. 302 and the term Variola ('Pox') was used by Bishop Marius of the disease in France and Italy in 570. - Encyclopaedia Britannica, Op.Cit.

49. தொற்று நோய்கள், Op. Cit., ப. 20.

50. மேற்படி, ப. 21.

"பாரசீகர்கள் அப்பொடியை மாத்திரைகளாக்கிச் செய்து பயன்படுத்தியதாகவும் தெரிகின்றது.[51]

"இவ்வாறு அம்மைப் பொறுக்குகளைப் பயன்படுத்தி, அம்மை நோயை வலியப் பெறுதல், பல சமயம் மென்மையாக வந்து அகன்றிடினும், சில சமயம் தீவிரமாகத் தாக்கி, மரணம் வரை கொண்டு செல்வதும் உண்டு".[52]

இவ்வாறு அம்மைப் பொறுக்குகளை உடலில் தேய்த்து அம்மை நோயைப் பெறுவதுபோல் தம் குழந்தைகளுக்கு அம்மை நோய் கண்ட குழந்தைகளின் சட்டையை வாங்கி அணிவித்தும், அம்மை நோயை ஏற்றுக்கொண்டு எதிர்ப்பு சக்தியைப் பெறும் பழக்கமும் சீனத் தாய்மாரிடை இருந்ததாகத் தெரிகின்றது. இம்முறைகளை 'இம்யூனிசேஷன்' (Immunization) என்பர். இதனையே ஐரோப்பாவில் இனாகுலேஷன் (Inoculation) என்றனர்.

"பெரியம்மைக் கொப்புளத்திலுள்ள பாலை எடுத்துத் தம் உடலில் குத்திக்கொண்டு நோய் பெற்று எதிர்ப்புச் சக்தியைப் பெறும் இனாகுலேஷன் முறையும் இந்தியா, அரேபியா முதலிய கீழ் நாடுகளில் 2000 ஆண்டுகட்கு முன்பே கையாளப்பட்டதாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்".[53]

18-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் "மேரி வார்ட்லி மாண்டேகு" அம்மையார் துருக்கிக்குச் சென்றபோது, இந்த முறையை அங்கே கற்றுக்கொண்டு, பிறகு இங்கிலாந்து வந்து தன் மகனுக்கும் அம்முறையில் தடுப்பு முறை செய்தார்.[54] பிறரும் இதனைப் பயன்படுத்தி அம்மை நோயின் கடுமையினின்றும் காத்துக்கொள்ள வேண்டும் எனப் பிரச்சாரமும் செய்தார்.

---

51. மேற்படி, ப. 21.

52. The New book of knowledge, J.K. 10, V.19 (1749-1823).

53. கலைக்களஞ்சியம், தொகுதி - 1, (1954), ப. 102.

54. மேற்படி.

இதனை மருத்துவர்கள் 'ஏமாற்றுவேலை' என்றனர். இங்கிலாந்து மதகுருமார்களும் "கடவுளாகப் பார்த்துத் தண்டனையாக மனிதனுக்குத் தருவது அம்மை நோயாதலால் அதனைத் தடுப்பது ஆகாது" என எதிர்த்தனர்.

ஆயினும் நோயின் கொடுமை தாளாமல் ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள மக்கள் 'இனாகுலேஷன்' என்ற இம்முறையைப் பின்பற்றி, பெரியம்மைக் கொப்புளச் சீழ் எடுத்து நோயை வலிய ஏற்று, எதிர்ப்புச் சக்தி பெற்று தடுப்புச் செய்து கொண்டனர்".[55]

ஆயின் இம்முறை, சீர்திருத்தம் பெற்ற தக்க முறை இல்லையாதலின், பன்னிரண்டு சதவிகித மரணம் நிகழ்ந்தது; பலர் குருடராயினர்; பற்பல கடுமையான விளைவுகளும் ஏற்பட்டன. எனவே நிரந்தரமான, முற்றிலும் தீமையற்ற ஒரு தடுப்பு முறையைக் கண்டறிய வேண்டிய தேவை ஏற்பட்டது.

டாக்டர் எட்வர்டு ஜென்னர் கண்ட தடுப்பு முறை

அம்மை நோயால் மக்கள் பெருவாரியாக மரணமுற்றுக் கொண்டிருந்த கடுமையான சூழ்நிலையில் கி.பி.1749 மே 17 –ஆம் தேதி இங்கிலாந்தில் எட்வர்டு ஜென்னர் பிறந்தார்.

இவரது அலுவலகப் பால்பண்ணையில் வேலைசெய்த 'சாரா நெல்மஸ்' என்ற பெண்மணி, "ஏற்கெனவே தனக்கு மாட்டம்மை வந்துவிட்டதால் இனிப் பெரியம்மை வராது" என்று கூறிய கூற்றால் சிந்தனைக்குட்பட்ட ஜென்னர்,1794 மே மாதம் கோமாரிக் கொப்புள நீரை எடுத்து 'ஜேம்ஸ் ஃபிப்ஸ்' என்ற எட்டுவயதுச் சிறுவனுக்குச் செலுத்திவிட்டுப் பின் ஜூலை முதல் தேதி பெரியம்மைக் கொப்புள நீரைச் செலுத்திப் பரீட்சித்துப் பார்க்க, சில மாதங்களின் பின்னும், பின் எப்போதும் அவனுக்கு பெரியம்மை நோய் வாராதிருத்தலை அறிந்து மாட்டம்மைப்பால் பெரியம்மை நோயைத் தடுக்கும் எதிர்ப்புச் சக்தி கொண்டது என்பதைக் கண்டுபிடித்தார்.

---

55. தொற்று நோய்கள், Op.Cit., ப. 22

இலத்தீன் மொழியில் 'வாக்கர்' என்றால் 'பசு' என்பது பொருளாகும். பசுவிடமிருந்து தயாரிக்கப்பட்ட மருந்தாதலின் 'வாக்சினேஷன்' (Vaccination) என இத்தடுப்பு முறைக்குப் பெயர் வந்தது.

ஜென்னர், தான் தடுப்பூசி கண்டறிந்த விதத்தை ராயல் சங்கத்துக்கு (Royal Society) எழுதிப் பத்திரிகைக்கு வெளியிட்டு அனுப்ப, சங்கம் வெளியிட மறுத்துத் திருப்பியனுப்ப, ஜென்னர் தானே தன் சொந்த செலவில் 1798–இல் வெளியிட்டார்.

வெளியிட்டபின் இவரது கண்டுபிடிப்பிற்குப் பலத்த எதிர்ப்பு எழுந்தது. மாட்டம்மைப் பாலை மனிதனுக்குச் செலுத்தினால் விலங்கு நோய்கள் பல மனிதருக்கு வரும் என அச்சுறுத்திப் பேசினர் பலர். அம்மைப்பால் குத்தியபின் மனிதன் மாடாக, எருதாக மாறுவதாகக் கேலிச்சித்திரங்கள் பல பத்திரிகைளில் வெளியாயின. மக்களிடம் செல்வாக்குள்ள டாக்டர் இன்ஜென்ஹஸ் என்பவரும் இவ்வம்மைப் பாலுக்குப் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கவே ஜென்னர் மனமுடைந்தார்.

ஆயின்அம்மை நோயின் தீவிரம் அதிகமாக ஆக, இவர் முறையை உலகம் படிப்படியாக ஏற்றுக் கொண்டது. இதனால் அம்மை நோய் வருவது பெருவாரியாகத் தடுக்கப்பட்டது.

ஜென்னர் இம்முறையைக் காண்பதற்கு முதல்வருடம் வரை இலண்டனில் சராசரி 2018 பேர் அம்மை நோய்க்குப் பலியாகிக் கொண்டு இருந்தனர். இவர் தடுப்பூசி கண்டறிந்தபின் 622 ஆகக் குறைந்தது.

1800–இல் 85–ஆவது ரெஜிமெண்டிலுள்ள சிப்பாய்களுக்கு ஜென்னர் தானே அம்மை குத்தினார். 1802–இல் இவரது கண்டுபிடிப்பைப் பாராட்டி 10,000 பவுன் பரிசு தரப்பட்டது.

அதன்பின் பல பட்டங்களையும், பதக்கங்களையும் பல்வேறு பல்கலைக்கழகங்களும் அளித்துக் கௌரவித்தன.

இவரின் அம்மைத் தடுப்புமுறை உலகெங்கும் சட்டமாக்கிக் கடைப்பிடிக்கப்பட்டது "1840–இல் செய்த சட்டப்படி, விரும்பினால் குத்தலாம் என இருந்து, பின்1853–இல் கட்டாயமாக அம்மை

குத்தவேண்டும் எனச் சட்டம் இயற்றி,அம்மை ஒழிப்பு முறை உலகெங்கும் சீராகக் கைப்பற்றப்பட்டது.1898–இல் குழந்தைக்கு 6 மாதம் ஆகும் முன் அம்மை குத்தியிருத்தல் வேண்டும் என்ற வரன்முறை விதிக்கப் பட்டது". [56] இத்தகு நிலைகளால் அம்மை நோயின் பாதிப்பு ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வந்தது. 1963–1970–க்குள் இடைப்பட்ட 7 ஆண்டுகளில் அம்மைநோய்ப் பாதிப்பு எவ்விகிதத்துக்குக் குறைந்துள்ளது என்பதனை விளக்கும் எண்ணிக்கை விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

		1963–இல்	1970 – இல்
"ஆசியாவில்	–	1,08,408	25,841
ஆப்பிரிக்காவில்	–	16, 941	3,154
அமெரிக்காவில்	–	7,385	1,759
ஐரோப்பாவில்	–	129	22
இந்தியாவில்	–	83,423	9,999 "[57]

இவ்வாறு அம்மை நோய் இத்தடுப்பு முறையால் வெகுவாகக் குறைந்து வந்ததால், 1948–இல் 'அம்மை குத்தல் நல்லது' எனச் சட்டத்தில் சிபாரிசு மட்டுமே செய்யப்பட்டது, கட்டாயப்படுத்தப்பட வில்லை.

உலகம் முழுவதும் பரவியிருந்த கொடிய அம்மை நோயை ஒழித்தது ஓர் உலகசாதனையாகும். பிறக்கும் குழந்தைகளுக்கெல்லாம் உடனடியாக இவ்வம்மைத் தடுப்பூசி போட்டு மனிதப் பிறப்பிலேயே இதற்குத் தடுப்புச் செய்து, இன்று உலகிலேயே பெரியம்மை நோய் இல்லை என்ற அளவிற்கு வெற்றி கண்டுள்ளது மருத்துவ சாதனையுள் ஒன்றாகும். இன்று உலகில் எத்தியோப்பியாநாடு தவிர எந்நாட்டிலும் இவ்வம்மை நோய் இல்லை; அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது.

---

56. கலைக் களஞ்சியம், Op.Cit., ப. 102.

57 டாக்டர் யு. இராமராவ், குழந்தை வளர்ப்பும் நோய்த் தடுப்பும், (ஆகஸ்டு, 1975), ப. 80.

இந்தியாவில் 1975–ஆம் ஆண்டு மே மாதம 24–ஆம் தேதி அஸ்ஸாம் மாநிலம் கச்சார் மாவட்டத்திலுள்ள 30 வயது பெண்ணுக்கு அம்மைக்கொப்புளம் கண்டதாகவும், அதுவே இறுதி என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

அம்மைநோய் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதான் இன்றைய நிலையில் கண்டறியப்பட்ட தடுப்பு முறையும் தேவையற்றதாக நிற்கிறது. அம்மை நோய் பாடப் புத்தகங்களில் ஓர் விளக்கமே என்ற நிலையில் இன்று தேய்ந்து நிற்கிறது எனலாம்.

அம்மை நோய் – வகை விவரம்

அம்மை என்ற சொல் பொதுவாக, வசூரி எனும் பெரியம்மையைக் குறிக்கும். தடுப்பூசி கண்டதும் மரணத்தை நல்கும் இப்பெரியம்மைக்கே. ஆயின் இப்பெரியம்மை தவிர அம்மை நோயில் பலவகைகள் உள்ளன.

உலக அளவில், பொதுவாக அம்மை நோயை, (1) பெரியம்மை (Small-pox),(2) சின்னம்மை (Chicken-pox), (3) தட்டம்மை (Measles), (4) புட்டாலம்மை (Mumps) என 4 வகையாகக் பிரிப்பர்.

"கி.பி. 9–ஆம் நூற்றாண்டிலேயே ராஸஸ் (Rhazes) என்ற பெர்சியன் மருத்துவர் பெரியம்மைக்கும், தட்டம்மைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்கியதாகத் தெரிய வருகின்றது". [58]

அம்மைகளில் கொடியதும், மரணத்தைத் தருவதுமான பெரியம்மை மட்டுமே இன்று ஒழிக்கப்பட்டுள்ளது. மற்ற அம்மை வகைகள் இன்னமும் காணப்படுகின்றன. இவற்றுக்குத் தடுப்பு முறைகளும், தடுப்பூசிகளும் இதுவரையும் கண்டறியப்படவில்லை. இதனால் இவை வருமுன்னும், வந்த பின்னும் தடுக்க இயலாதவை. ஆயின் பெரியம்மை போல் உடலுக்குப் பெரும் வருத்தத்தையும், வடுக்களையும், மரணத்தையும் அளிப்பவை அல்ல என்பதான், மக்கள் இவற்றை அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை.

தமிழ்ச் சுவடிகளில் சுமார் 14 முதல் 22 வகையான அம்மை நோய் வகைகள் பற்றியும், பெயர் விவரங்கள், குணங்கள் குறித்தும் குறிப்புக்கள் கிடைக்கின்றன.

முக்கியமான இரு அம்மைகளான பெரியம்மை, சின்னம்மைக் குள்ள வேறுபாடும், இவ்வம்மைகளும், தட்டம்மை, ஜெர்மன் தட்டம்மை, புட்டாலம்மை, மணல்வாரி என்பனவற்றுக்குமுள்ள,

---

58. Encyclopaedia Britannica, Op. Cit.,

- பிற பெயர்கள்
- இந்நோய்கள் உண்டாக்கும் கிருமிகள்
- இவை பரவும் விதம்
- நோய்க்கான அறிகுறி
- நோய் அடையும் நிலைகள்
- உடலில் உண்டாகும் பாதிப்புக்கள்
- நோய் முதிர்வு காலம்
- நோய்த் தடுப்பு முறை
- நோய்கள் குறித்த பிற முக்கிய குறிப்புக்கள்

என்ற முறையில் அம்மை நோய் வகைகளின் விவரங்கள் இப்பகுதியின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளன. [59]

---

59. இத்தகு அட்டவணைத் தயாரிப்பிற்குக் கீழ்க்கண்ட நூற்கள் துணைபுரிந்தன.

1. தொற்று நோய்கள்

2. மருத்துவக்கலை அன்றும் இன்றும்,

3. டாக்டர் கே. வாசுதேவராவ், தொத்து வியாதிகள், தமிழாக்கம்.காப்டன், என். சேஷாத்திரி, (டிசம்பர், 1959).

4. எஸ். சூசை ராஜா, பயங்கர வியாதிகளும், பயனுள்ள சிகிச்சையும், '(மே. 1981).

5. வேலூர் டாக்டர் ஏ.ஆர். கண்ணப்பர், நம்நாட்டு மூலிகைகள்.

6. T.V. Sambasivam Pillai - Tamil English Dictionary of Medicine, Chemistry, Botany and Allied Science, Vol. IV, p. 2231.

7. Grolier - The New book of knowledge D Vol.IV, New York (1973).

8. Encyclopaedia Americana, Op.Cit.,

9. குழந்தை வளர்ப்பும், நோய்த் தடுப்பும், Op.Cit.,

தவிர, உப்புதிரி, கடுகம்மை, கரும்பனசை, கல்லுதிரி, கொள்ளம்மை, தவளை அம்மை, பனைமுகரி, பாசிப்பயத்தம்மை, பாலம்மை, முடக்கம்மை, மொழுக்கன், வரகுதிரி, வெந்தயம்மை போன்ற அம்மை நோய் வகைகளின் தன்மைகளும் அடுத்து விவரிக்கப் பட்டுள்ளன. [60]

இத்தகு அம்மை வகைகளின் பெயர்களும், வகை முறைகளும் தமிழக மக்களிடையே மட்டும் வழங்கப்பட்ட சிறப்புடையன என்பது குறிப்பிடத் தக்கது.

	பெரியம்மை	சின்னம்மை
1.	கொப்புளம் தோன்று முன்பும், சீழ் பிடிக்கும் பொழுதும் கடுமையான காய்ச்சல் இருக்கும்.	கொப்புளம் தோன்றும் பொழுது மட்டும் இலேசான காய்ச்சல் வரும்.
2.	கொப்புளம் தோலில் ஆழமாகப் பதிந்திருக்கும்.	இலேசாகப் பதிந்திருக்கும்.
3.	முகம், கை, கால் பகுதிகளில் மிகுதியாகக் காணப்படும்.	உடம்பில் அதாவது மார்பு, வயிறு, முதுகுபகுதிகளில் அதிகமாக இருக்கும்.
4.	அக்குள் போன்ற மறைவிடங்களில் தோன்றாது.	தோன்றும்.
5.	உள்ளங்கை, பாதம் போன்ற பகுதிகளில்கூடக் காணப்படும்.	காணப்படாது.

60. இவ்விளக்கங்களுக்கு

1. பயங்கர வியாதிகளும், பயனுள்ள சிகிச்சையும்,

2. 3952- வசூரி வகையும், சிகிச்சையும் (கே.ப.சு.)

3. புஷ்பா அசோக் குமார், அருள்வலம், மங்கை (பத்திரிகை). (மார்ச். 1985), பக். 33-35.

போன்றவற்றினின்றும் கிடைத்த குறிப்புக்கள் துணைசெய்தன.

	பெரியம்மை	சின்னம்மை
6.	கொப்புள முதிர்ச்சி மெதுவாக இருக்கும்.	வெகு சீக்கிரத்தில் அமையும்.
7.	கொப்புளங்கள் அனைத்தும் ஒரே தடவையில் கிளம்பி சீழ்கட்டும்.	புதிது புதிதாகக் கிளம்பும்.
8.	சீழ் கட்டும்போது திரும்பவும் வரும் காய்ச்சல், பக்கு உதிரும் வரை இருக்கும்.	கொப்புளம் நீர்கொள்ளும்பொழுது காய்ச்சல் வருவதில்லை.
9.	கொப்புளத்தின் ஒவ்வொரு பருவமும் ஒரே சமயத்தில் தெரியும்.	எல்லாப் பருவங்களும் ஒரே சமயத்தில் தெரியும்.
10.	கொப்புளம் தோன்றிச் சுமார் 10–15 நாட்களில் பக்கு தோன்றும்.	4–7 நாட்களுக்குள் தெரியும்.
11.	14–28 நாட்களுக்குப் பிறகு பக்கு விழும்.	சுமார் 14 நாட்களில் விழுந்துவிடும்.
12.	பொறுக்கிலிருந்தும் கிருமிகள் பரவும்.	பரவாது
13.	தோலில் நீங்கா வடுவினை விட்டுச் செல்லும்	வடு நீங்கும்.

பெயர் (1)	பிற பெயர்கள் (2)	உண்டாக்கும் கிருமி (3)	பரவும் விதம் (4)	அறிகுறி (5)
I பெரியம்மை (Small - Pox)	வைசூரி அல்லது வசூரி	வேரியோலா வைரஸ் (வேரி-யோலா மேஜர் / வேரி-யோலா மைனர்) பல்வகை உண்டு. முக்கிய ஒன்று இரத்தக் கசிவு அம்மை (Haemorrhogic type)	இருமல், தும்மல், எச்சில், தூசி, நோயாளி தொட்ட பொருட்கள், தாயிடமிருந்து குழவிக்கு நஞ்சுக் கொடி மூலமும்.	அதிகக் காய்ச்சல், முதுகு, இடுப்பு, கை, கால், தலைவலி, வாந்தி, குழந்தையாயின்வலிப்பும், சிலருக்கு இடுப்பைச் சுற்றிச் சிவந்த தடமும் இருக்கும்.
II சின்னம்மை (Chicken-Pox)	சின்ன வைசூரி, கொப்பளிப்பான், நீர்க்கொளுவான் (நீர்க்-குளுவை,நீர்க்குளுவன், நீர்க்குழுவை), விளை-யாட்டம்மை, சிரிப்பம்மை.	ஹெர்பீஸ் வேரிசெல்லா (Herpes - Vericella)	காற்று, தொடப்பட்ட பொருட்கள்	காய்ச்சல், உடம்புவலி, இலேசான தும்மல்
III தட்டம்மை (Measles)	சிச்சிலுப்பை (விச் சிலுப்பை, விச்சிரப்பன், விச்சிரிப்பு) உமியம்மை.	ரூபியோலா வைரஸ் (Rubeola virus)	காற்று, தூசி, தொடும் பொருட்கள்	முதுகு, தலைவலி, காய்ச்சல், இருமல், தும்மல், சளி, கண் சிவந்து இருத்தல். 24 மணி நேரத்தின் முன் கன்ன உட்பு-றத்தில் காப்ளிக்ஸ் ஸ்பாட்ஸ் (Kopliks spots) வெண்ணிறப் பொட்டுக்களாகத் தெரியும்.
IV ஜெர்மன் தட்டம்மை (German Measles)	–	ருபெல்லா வைரஸ்	"	இருமல், சளி, இலேசான காய்ச்சல்.

(1)	(2)	(3)	(4)	(5)
V புட்டாலம்மை (Mumps)	தாடையம்மை, கன்னக்கட்டு, கூடைக்கட்டு, கூகைக்கட்டு, மன்னைக்கட்டு, பொன்னுக்கு வீங்கி, நங்கைக்கு வீங்கி, பொன்னி.	மம்ஸ் வைரஸ்	காற்று, தூசி, மலம், மூத்திரம்.	காய்ச்சல், தலைவலி, வாயிலுள்ள எச்சில் சுரப்பிகள் (Salivary glands) பாதிக்கப்பட்டுக் கன்னம் வீங்கல்.
VI மணல்வாரி	மணலுதிரி, மனலுருதி, எனவும் பேச்சு வழக்கில் அழைக்கப்படும்.	வைரஸ் வகைக் கிருமி.	காற்று, தூசி.	மிதமான காய்ச்சல்.

நிலை (6)	பாதிப்புக்கள் (7)	நோய் முதிர்வு காலம் (8)	தடுப்புமுறை (9)	பிற குறிப்புகள் (10)
I அறிகுறி தொடங்கி 3–4 நாட்–களில் முகம் முதல் கால் வரை அம்மைக் கொப்புளங்கள் தோன்றி மாக்யூல் (Macule) பாப்யூல் (Pepule) வெசைகிள் (Vesicle) பஸ்ட்யூல் (Pustule) என்ற 4 நிலைகளை அடைந்து பொறுக்கு முதிர்ந்து வடுக்களை விட்டுச் செல்லும்.	மரணம்,தழும்பு நிறை தோற்றம், கொப்புளம் சீழ்பிடித்துக் கட்டியாதல், மூச்சு மண்டலத்தைப் பாதித்தால் நிமோனியாவும், நரம்பு மண்டலத்தைத் தாக்கினால் மூளைக் காய்ச்சலும் எலும்பு மண்டலத்தைப் பாதிக்க, மூட்டு வீங்கல், மூட்டுக்களில் இரத்தம் கட்டல் நிகழும். காதில் சீழ்பிடிக்க, பார்வை இழக்க ஏதுவுண்டு. இரத்தக் கசிவு அம்மைவரின் மூக்கு, வாய், கண், பெண்ணுறுப்பில் இரத்தம் கசியும். தோலினடியிலும் கசிந்–துறையும். 3–4 நாட்களில் கொப்புளம் தோன்றாமலே மரணம் நேரலாம்.	11–14 நாட்கள்	வாக்ஸினேஷன் எனும் தடுப்பூசி குத்திக் கொள்ளல்.	ஒருமுறை வந்தால் சாகும்வரை திரும்பவராது.
II 24 மணிநேரத்தில் கொப்புளம் தோன்றி,14 நாட்களுக்குள் பக்கு விழும். பெரியம்மைக்குரிய மாக்யூல் போன்ற 4 நிலைகளை வெகு விரைவில் அடையும்.	மரணம் குறைவே. சிக்கல் ஏற்பட்டால் மூளைக்காய்ச்சல், நிமோனியா, கண்ணில் வெள்ளை விழுந்து பார்வை மங்கல் நிகழலாம்.	15 – 16 நாட்கள்	தடுப்புமுறை கிடையாது.	பெரியம்மையோடு ஒப்பிட இலேசானது. ஆயின் அரிப்பினால் சிரமம் தருவது. வந்தவருக்குத் திரும்ப வராது. இந்நோயின் வைரஸே அக்கிக்கு முரியது. பெரும்பான்மை 6–10 வயதுக் குழந்தைகளுக்கே தென்னிந்தியாவில் அதிகம்.

	(6)	(7)	(8)	(9)	(10)
III	காது பின்புறம், நெற்றியில் தோன்றிப் பின் உடல் முழுவதும் பரவும். ஒன்றோடொன்று இணைந்து சிவப்பு நிறத் திட்டுக்களாகவே அமையும். பின் நீல நிறமாகிக் கருகி மறையும்.	மரணமில்லை. சிக்கலுண்டாயின் நிமோனியா, பிராங்கைடிஸ், காதில் சீழ்வடிதல், மூளைக்காய்ச்சல் உருவாகலாம். இந்நோய்க்குப் பின் க்ஷணரோகம் தொடர்வது சில வேளை நிகழும் சிக்கலாகும்	சுமார் 10 நாட்கள்	தனி மருந்தில்லை. காமாகுளோபுலின் நோயின் வீரியத்தைக் குறைக்க உதவும்.	ஒரு முறையே வரும். 2–10 வயது குழந்தைகளையே அதிகம் தாக்கும். மனிதருக்கு மட்டுமே வரும். கர்ப்பிணிகளுக்கு வரின் குறைப்பிரசவம் நிகழும்.
IV	முகம் தொடங்கி உடல் முழுதும் வேர்க்குரு போன்ற கொப்புளங்கள் தோன்றும். இந்நோயின் குணம் நெறிகட்டுதல் (Lymphadenopathy).	மரணமில்லை. இலேசான நோயே. ஆயின் கர்ப்பிணிகளுக்கு முதல் 3 மாதத்திற்குள் வந்தால் குழந்தைக்குக் இப்பொழுது கண்ணில் பூவிழுந்து, மூளை, இருதய, கை, கால் வளர்ச்சியைப் பாதிக்கக்கூடும்.	2 முதல் 3 வாரங்கள்	ருபெல்லா வாக்சின். நமது நாட்டில் கிடைப்பதில்லை.	மரணம் நிகழுவது அரிதே.
V	எச்சில் சுரப்பிகள் மட்டும் பாதிக்கப்பட்டது போல் தோன்றினாலும் இவ்வைரஸ் இரத்தத்துடன்கலந்து பிற உறுப்புக்களையும் பாதிக்கும்.	இன உற்பத்தியை வளர்க்கும் உறுப்புக்கள் (Orchitis, Ovaritis) பாதிக்கப்படலாம்.பான்கிரியாஸ் பழுதடையக்கூடும்,மூளைக்காய்ச்சல் வரவும், இருதயம் பாதிக்கப்படவும் ஏதுவுண்டு.	14முதல்19 நாட்கள்	வாக்சீன் கண்டு பிடித்துள்ளனர். ஆனால் இதுவும் நம் நாட்டில் கிடைப்பதில்லை.	மழை, இளவேனில் குளிர் காலத்தில் அதிகம் பரவும். 5 வயதினருக்கு மேற்பட்ட எல்லா வயதினருக்கும் வரும். மரணமில்லை.
VI	சிச்சிலுப்பை போன்றதாயினும் அதனளவுக்குக் கடுமையானதன்று. கொப்புளம் கடுகளவு பருத்திருக்கும். தனித்தனியாயும், சிலவேளை சற்றுக் குவியலாகவும் காணப்படும்.	கர்ப்பிணிகளுக்கு முதல் 3 மாதத்திற்குள்ளாகத்தோன்றினால், பிறக்கும் குழவிக்குச் செவி கேளாமை, இதயக் குறைபாடு போன்றன நிகழ வாய்ப்புண்டு.	14முதல்19 நாட்கள்	இல்லை	எல்லா வயதினரையும் தாக்கக்கூடியது. மரணமில்லை.

பிற அம்மைகள்

(1) உப்புதிரி (உப்புருதி, உப்புதரி, விப்புருதி, வெப்புருதி)

காய்ச்சல் வந்த மூன்றாம் நாள் சிரசில் குருத் தோன்றிப் பின் உடலெங்கும் உப்புபோல் தோன்றி, ஐந்தாம் நாள் நீர்கட்டி, ஏழெட்டு நாட்களில் இறங்கும். இவ்வம்மை முற்பகலில் காய்ந்திருப்பது போல் தெரிந்து, பிற்பகலில் தோன்றி விடும் தன்மை உடையது.

(2) கடுகம்மை

காய்ச்சல் கண்ட மூன்றாம் நாள் சிரசில் குருத்தோன்றிப் பின் உடம்பெங்கும் கடுகு போன்ற குரு உண்டாகும். உடல் வீக்கம், மன்னைக் கட்டு, குரல் கம்முதல், பேதி முதலியன தோன்றும். கருப்பாகிப் பார்வை மறைத்துப் பதின்மூன்று நாட்கள் இடைவிடாது ஆட்டி, போகும் பொழுது, சமயங்களில் பார்வையையும் பறித்துப் போகும் குணம் கொண்டது.

(3) கரும்பனசை (கரும்பனஞ்சை, கரும்பனிச்சை)

காய்ச்சல் கண்ட நான்காம் நாள் சிரசில் குருத் தோன்றிப் பின் மேனியெங்கும் உண்டாகும். மாறா உஷ்ணமும், உடல் வலி, பேதி, மூர்ச்சை தோன்றும். உடல் கருகிக் குரு உள்வாங்கும். மலசலம் கட்டி, பதின்மூன்று நாளில் இறங்கும்.

(4) கல்லுதிரி (கல்லுருதி)

மிகுந்த காய்ச்சல், சன்னி, வாந்தி, பேதி, தாகம் எடுத்தல் தோன்றும், மூன்றாம் நாள் சிரசில் சங்கம் பழம்போல் குருத் தோன்றி, ஏழாம் நாள் நீர்கட்டிப் பத்தாம் நாள் இறங்கும்.

(5) கொள்ளம்மை

காய்ச்சல் கண்ட மூன்றாம் நாளில் குருத் தோன்றும். சன்னி, கண்ணொளி மங்கல், காது பஞ்சடைத்தது போலிருத்தல், வாயுலர்தல்,

வலிப்பு போன்ற துயர்கள் தந்து 13, 14 – ஆம் நாளளவில் இறங்கும்.

(6) தவளை அம்மை

காய்ச்சல் மிகுதியாகி நடக்கவொட்டாது. சூலை நோய்போல், வலி காணும். உணவு உட்கொள்ளாவிடாது வருத்தும். ஒன்பதாம் நாளிறங்கும்.

(7) பனை முகரி (பனை முசரி)

மிதமான காய்ச்சல் அல்லது சன்னி, வயிற்றுப்போக்கு, மயக்கம், வாந்தி, விழி சிவப்பதுடன் இடைவிடாது நீர்வழிதல், உடல் கடுப்பு, வீக்கம், பெரும்பாடு இவற்றுடன் கூடியது.

(8) பாசிப்பயத்தம்மை

காய்ச்சல் கண்ட மூன்றாம் நாள் சிரசு தொட்டு, உடலெங்கும் கொப்புளம் தோன்றும். ஏழாம் நாள் நீர்கட்டி ஒன்பதாம் நாளிறங்கும்.

(9) பாலம்மை

காய்ச்சல் கண்ட மூன்றாம் நாள் சிரசில் ஒரே ஒரு கொப்புளம் மிகப் பெரியதாகத் தோன்றி உடல் கடுப்புண்டாக்கி, நான்காம் நாள் நீர்கட்டி ஒன்பதாம் நாள் இறங்கும்.

(10) முடக்கம்மை

வெப்பையும், தீராத வயிற்று வலியைப் போன்ற சூலை நோயும், அடிக்கடி நடுங்கி வாய் பிதற்றித் தன் நினைவு மறந்து நான்கே நாட்களில் தேகமெங்கும் பரவ, ரணங்களாகிப் பிழைக்க முடியாது என்று சொல்லக் கூடிய மரணத்தைத் தருவது.

(11) மொழுக்கன் (சுரைக்காயம்மை)

மிதமான காய்ச்சலுடன் உடல் கடுப்பு, அக்குள் போன்ற இடைவெளிகள், தோள், முழந்தாள் என்று உடம்பெங்கும் வீக்கம் தோன்றி, வாய் வழியாய் உமிழ்நீர் வடிதல் போன்ற உபத்திரவங்கள் தந்து ஏழு நாட்களில் இறங்கும் தன்மை கொண்டது.

(12) வரகுதிரி (வரகுருதி, வரகுருவி)

அதிகக் காய்சசலுடன் மூன்றாம் நாள் கொப்புளங்கள் தோன்றும். வாய் வழியாக உமிழ்நீரும், இரத்தமும் கலந்து வருதல், பற்கடித்தல், உடம்பெரிச்சல், நீர்த்தாரையில் இரத்தம் காணல் என்பவற்றைத் தந்து 7–11–ஆம் நாளிறங்கும்.

(13) வெந்தயம்மை

காய்ச்சல் கண்ட மூன்று, நான்கு நாட்களில் குருத் தோன்றும். தேக எரிச்சல், சீதபேதி தந்து ஏழாம் நாள் நீர்கட்டி, ஒன்பதாம் நாள் இறங்கும்.

அம்மை நோய் தொடர்பான சொல்லாட்சிகள்

அம்மை நோய் மிக நீண்ட கால வரலாறுடையது. கி.மு. 64–இல் உரோமானியர் சிரியாவை முற்றுகையிட்டு வென்றபோது, அங்குள்ள அப்போலோ கோவிலில் முத்திரை வைத்த பெட்டியை, அதன் மீதிருந்த சாபக்கேட்டைப் பொருட்படுத்தாது திறக்க, தொற்றுநோய் பரவி, முகங்களில் கொப்புளங்கள் தோன்றியதாகவும், இவர்கள் உரோமிற்கு ஓட, உரோமில் இந்நோய் பரவி, பதினைந்து ஆண்டுகள் பயங்கர ஆட்சி செய்ததாகவும் உள்ள, அம்மை நோய் தோன்றிப் பரவியதை விளக்கும் பழைய வரலாறொன்று [61] இந்நோயின் தொன்மையை விளக்கும். அம்மை நோய் வடுக்கள் "எகிப்தில் வைக்கப்பட்டுள்ள 'மம்மீஸ்' எனப்படும் சவங்கள் சிலவற்றிலும் உள்ளதைக் கண்டறிந்துள்ளனர்" [62]

"கி.பி. 6–ஆம் நூற்றாண்டிலேயே இந்நோய்க்கான பல்வேறு தடுப்பு முறைகளைச் (Immunization) சீனர்கள் கைக்கொண்டு மிருந்தனர்" [63]. ஆயின் கி.பி. 17–18–ஆம் நூற்றாண்டிலேயே இந்நோய் தன் தீவிரத்தைக் காட்டிக் கொள்ளை நோயாகப் (Epidemic) பரவி, உலக மக்களை நடுநடுங்க வைத்தது.

உலக நாடுகள் அனைத்திலும் பரவி, உலக வரலாற்றிலும் ஒரு முக்கிய இடம் பெற்றுவிட்ட அம்மை நோய் தொடர்பான சொல்லாட்சிகள் தமிழரின் தனிப்பட்ட மனப்போக்கினை வெளிக்காட்டுவனவாக உள்ளன.

I. அம்மை நோய்ப் பெயர் வைப்புக்கள்

அம்மை நோய் குறிப்பதாக 'அம்மை', 'வசூரி' அல்லது 'வைசூரி', 'வெப்புநோய்', 'மாரி', 'குருநோய்', 'கொப்புளநோய்' என்ற சொற்கள் வழங்கி வந்திருக்கின்றன. இவற்றுள் 'அம்மை' என்பது பெருவழக்காய் இருந்திருக்கின்றது.

---

61. எஸ். சங்கரராமன், தொற்று நோய்கள் (நவ. 1976). பக். 19-20.

62. மேற்படி, ப. 21.

63. வாண்டுமாமா, மருத்துவம் பிறந்த கதை (நவ. 1977), ப. 89.

அ. அம்மை

தமிழில் 'அம்மை' என்ற சொல் தாயை, தாய் போல் உலகு காக்கும் தாய்த்தெய்வத்தைக் [64] குறிப்பதாக அமைந்து, 'இத்தெய்வம் தரும் நோய்' [65] என்ற பொருளில் 'அம்மை நோய்' என வழங்கி, இறுதியில் அம்மை என்பது இன்றைய நிலையில் அம்மை நோயைக் குறிப்பதாகவே விஞ்சி நிற்கிறது.

அம்மையில் உள்ள வேர்ச் சொல்லான அம் = நீர் என்ற பொருளைக் குறிக்க, நீரை உடைய கொப்புளங்களைக் கொண்டதால் அம்மை என வழங்கப்பட்டு, நோயின் கடுமை மிகுதியானபோது 'அம்மை' எனத் தெய்வப் பெயரால் அழைக்கும் சூழல் வளர்ந்திருக்கலாம்.

அம்மை என்ற தாய்த் தெய்வப் பெயராலேயே 'அம்மை நோய்' என ஒரு நோயைப் பெயரிட்டழைக்கும் மரபு உலகில் தமிழினத்தில் மட்டுமே காணப்படும் சிறப்பு நிலையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

'அம்மை நோய் வருவது தெய்வத்தால்' எனக் கருதிய மனப்போக்கு, பொதுவாக உலக நாடுகள் அனைத்திலும் இருந்திருக்கின்றது.

"தெய்வத்தின் கட்டளை மீறப்பட்டால் வைசூரி, காலரா போன்ற தொத்து நோய்களின் மூலம் அது குற்றவாளிகளைப் பழிவாங்கும் என்ற எண்ணம் சீன மக்களிடையே இருந்தது". (உலக மக்களின் பழக்க வழக்கங்கள் பக்.80)

---

64. "அப்பன் நீ அம்மைநீ ஐயனும்நீ' - அப்பர் தேவாரம், பா. எண். 1450.

"அத்தனொடு மம்மை யெனக் காணார்" - மேற்படி, பா. 598, 9.

65. முத்தாரம்மன் கதைகள், மாரியம்மன் கதை, உச்சினிமாகாளியம்மன் கதைகள் போன்ற அம்மன் கதை, கதைப்பாடல்கள் அனைத்தும், அம்மையால் வருவன அம்மை நோய்கள் என்ற அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

"அம்மை நோய் மனிதன் செய்த பாவத்தால் தோன்றுவது. எனவே தடுப்பு முறை பயனுடையதாக இருப்பினும், அதைப் பின்பற்றுவது கடவுளின் ஆணையை மீறுவதாகும் என இங்கிலாந்து நாட்டு மத குருமார்கள் கூற, மக்களும் அதனை முழுமையாக நம்பினர்". (தொற்று நோய்கள் பக்.21)

"வைசூரி, தெய்வம் மனிதனுக்கு அளிக்கும் தண்டனை என்ற கருத்து முதுவ இன மக்களிடம் இருந்தது". (உலக மக்களின் பழக்க வழக்கங்கள் பக் 19–20)

தெய்வத்தின் சினத்தால் இந்நோய் வருகின்றதென்ற எண்ணம் சங்கத் தமிழ் மக்களிடையே வேரூன்றியிருந்தமைக்குச் சிலம்பு சான்று பகர்கிறது.

ஸ்ரீகுறும்ப பகவதி வரலாறு மூலம், பகவதி சினந்தால் அம்மை நோய் தருவாள் என்ற எண்ணம் கேரள மக்களிடையேயும் இருந்தமையை அறிய முடிகின்றது. (கண்ணகியும் பகவதி வழிபாடும் பக் 399)

கண்ணொளி, உருவப் பொலிவு இழப்பொடு உயிரையும் [66] பறித்துச் சென்ற இந்நோய்க் கொடுமையால் விளைந்த மரண பயம் இத்தகு மத நம்பிக்கையை வளர்த்திருக்கின்றது.

---

66. "கி.பி. 1665-இல் இலண்டன் மாநகரின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு மக்கள் இந்நோயால் இறந்தனர்".

- ரா. ராஜதுரை, மருத்துவக்கலை அன்றும் இன்றும் (1969), ப.16.

"18-ஆம் நூற்றாண்டில் ஆண்டுதோறும் ஐரோப்பாவில் 5 இலட்சம் மக்கள் அம்மை நோயால் மாண்டனர். ஆசியாவிலோ அதைவிட அதிகம்".

- மருத்துவம் பிறந்த கதை, Op.Cit., ப.59.

"ஸ்பானியர் இந்நோயை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல, அது 60 இலட்சம் அமெரிக்க இந்தியர்களைப் பலி வாங்கியது".

- தொற்று நோய்கள், Op.Cit., ,ப. 21.

மதங்கள் தோன்றுவதற்கே அடிப்படைக் காரணமாக மனிதனின் அச்சவுணர்வைக் குறிப்பிடுவர் அறிஞர்கள்.

"கடவுள் பிராத்தனை, பலியிடுதல் முதலிய சமயப் பொருட்கள் யாவும் மனிதனது குற்ற, அச்ச உணர்வுகளிலிருந்து உண்டானவை" என்றும், 'சமயம்' என்பது மனிதன் இயற்கையிடமும், மரணத்துக்குப் பின்வரும் நிலைமையிடமும் உள்ள அச்சத்தின் விளைவே [67] என்றும் உளவியலறிஞர் ஃபிராய்டு கூறுவது கருதத் தக்கது.

மரணத்தையும், மரண பயத்தையும் வழங்கிய அம்மை நோயை அம்மை என்ற தாய்த் தெய்வப் பெயராலேயே அழைத்திருக்கின்றனர் தமிழர்கள்.

1. அம்மையால் வந்த நோய் 2. அம்மை தந்த நோய், 3. அம்மையைத் தவிர வேறு கதியில்லை என்ற நிராதரவை அளித்த நோய், 4. அம்மையால் மட்டுமே தீர்க்க இயலும் என்ற எண்ணத்தை வளர்த்த நோய் அம்மை நோயாகி இருக்கிறது.

மனக் கவலைகளை, உளப் பாரங்களைப் பிறரிடம் கூற, சுமை நீங்கி அமைதி பிறக்கும் என்ற மனவியல் அடிப்படையில், நடைபெறும் செயலைத் தடுக்கவும், தவிர்க்கவும் இயலாத நிலையில் தம்மை மீறிய ஒரு சக்தியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு 'முடிவு தீயதாயினும், நல்லதாயினும் நின் விருப்பம்' என அமைந்து அமைதி கண்டிருக்கின்றனர். நோய்க் கடுமையை இத்தகு மன விடுதலையே (Self-Relief) பாதியாகக் குறைக்கும் என்பதை இன்றைய உடல், உள மருத்துவம் ஒப்புக் கொள்கின்றது.

---

67. "In Iceland small-pox killed 36 percent of a population of 50,000 in the epidemic of 1707".

- Americana Corporation - Encyclopaedia (1970, p. 107.

கலைக் களஞ்சியம், தொகுதி–4 (1956), ப. 448.

'அம்மை, அம்மை' எனத் திரும்பத் திரும்ப அவள் பெயர் கூறுவதிலும், அவள் புகழ். செய்கை போன்றவற்றை இசையோடு துதித்துப் பாடுதலிலும் நோய் தீரும் என்ற மன நம்பிக்கை ஏற்பட்டு, மனப்பாரம் குறையும் என்ற உளவியல் நோக்குடனேயே அம்மன் பற்றிய கதைப்பாடல்களும், பதிகங்களும், துதிகளும், தாலாட்டுக்களும் படைக்கப்பட்டிருக்கின்றன. தெய்வக் கதைப் பாடல்கள் 66–ம், முத்தாரம்மன் தொடர்பாய, கவடிகளிலுள்ள பாடல்கள் 59–ம் கிடைத்துள்ளன.

(1) தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மை, [68] முதன்மையாலும் [69]

(2) அம்மை நோய் குறிப்பாகக் குழந்தைகளைத் தாக்குவது [70]

என்பதாலும் அவர்களுக்கு அறிமுகமான 'தாயே இது' எனக் கூறி ஆறுதல் படுத்து முகத்தாலும்,

(3) நோயுறும்போது குழந்தையை, இல்லத்துள்ளோரைக் கவனிக்கும் தலையாய பொறுப்பு இல்லத் தலைவியாய தாய்க்கு இருப்பதால், தாய் தன்னை ஒத்த, தன்னிலும் மூத்த தாயுருவத்தை வணங்கல் இயல்பு என்ற முறையாலும்,

---

68. காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து (Savazery) நாகரீக முற்கால (Barbarism) விவசாயத்திற்குச் சமுதாயம் மாறும்பொழுது. உலகெங்கும் பெண்ணாதிக்கச் சமுதாயம் தோன்றியது. இக்காலத்தில் பெண் தெய்வங்கள் தோற்றம் பெற்றன

- தமிழவன். பண்டைத் தமிழரின் பேய்கள் பற்றிய கருத்து. ஆராய்ச்சி இதழ் (ப.ஆ.) டாக்டர் நா. வானமாமலை, (டிச. 1971). ப. 440.

69. 'தமிழகத்தில் அம்மன் கோயில்களே மிகுதி - டாக்டர் க.ப. அறவாணன். செந்தமிழ் செனகால் செங்கோர் (1977 ப.10.

70 'அம்மைகள் பொதுவாகச் சிறுவர்களைத் தொற்றும் குணம் கொண்டவை'. - கலைக் களஞ்சியம். தொகுதி-1. ப.102.

16–ஆம் நூற்றாண்டு வரை வளர்த்த பல சமய தெய்வங்களும் இருக்க, அம்மை என்ற தாய்த் தெய்ப் பெயரால் இந்நோயை அழைத்திருக்கின்றனர் எனக் கருதலாம்.

தாயை, தாய்த் தெய்வத்தைக் குறிக்க, பல சொற்கள் இருக்க, அம்மை என்ற சொல்லோடிணைத்து இந்நோயை அழைத்ததற்குக் காரணம்,

(1) தாயைக் குறிக்கும் 'அம்மா' என்பதினும், 'அம்மை' என்ற பழமையான சொல் பாமர மக்களிடம் பயின்று வந்ததானும், [71]

(2) குடியேற்ற நாடாகிய இந்தியாவிற்கு மேற்குக் கடற்கரை வழி ஐரோப்பியர் வந்ததும், அம்மை நோயால் தீவிரமாகத் தாக்கப்பட்டது மாகிய மேற்கு மலையாளம், கன்னியாகுமரி, நெல்லை மாவட்டங்களில், தாயை முறையே அம்மே, அம்மை என அழைப்பதாலும் இச் சொல்லே, தாய்த் தெய்வம் தந்ததாகக் கருதப்பட்ட நோய் குறிக்கவும் ஆளப்பட்டது எனக் கொள்ளலாம்.

இந்நோயைத் தாய்த் தெய்வப் பெயரால் அழைத்த சிறப்பு, பிற இன மக்களிடம் இல்லாத, திராவிட இன மக்களிடம் மட்டும், அதிலும் சிறப்பாக, தமிழரிடையே பெருவாரியாகக் காணப்படும் ஒரு சிறப்புக் கூறுமாகும்.

'அம்மன்' என்பது 'அன்' விகுதி பெற்றமைந்த வீரப் பண்பு மிகுதி குறித்து வழங்கி வந்தமையின், அன்பு நிலை மேம்பாட்டுத் தொடர்புடையதாய 'அம்மை' என அழைத்த தாய்த்தெய்வப்பெயரால் வழங்கினர் எனலாம்.

---

71. பாமர மக்களிடத்திலேயே முன்னோரின் பழைய பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், மரபுச் செய்கைகளின் எச்சங்கள் உள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

``In all customs and traditions of the plesant class in all countries are, embedded the knowledge of past events - Every Man's Encyclopaedia, Vol.5.

ஆ. வசூரி அல்லது வைசூரி

1. வெம்மையால் வருவது [72] 2. வெம்மை தருவது [73] என்ற இவ்வம்மையின் இருதன்மைகளை மனத்திற் கொண்டு வைசூரி அல்லது வைசூரி (வசு – சுவாலை, அக்கினிதேவன், கிரணம்) என வழங்கியிருக்கின்றனர். இதே அடிப்படையை உட்கொண்டே 'வெப்பு நோய்' என்றும் விளம்பியிருக்கின்றனர்.

இவ்வம்மை வரக் காரணம் வைரஸ் [74] (Virus) எனும் கிருமி என விஞ்ஞானிகள் இயம்ப, வெம்மையால் வருவதெனத் தமிழர் மனங்கள்

---

72. " ஆமென்ற வசூரியது வருவ தேது
அழகான காரணந்தா னேதோ வென்னில்
வேகமென்ற சரீரத்தில் வேக மிஞ்சி
வெக்கையோடு தேகமெல்லாஞ் சூடு மீறி
காமென்ற மூளையது கொதிப்பு மிஞ்சி
கனமான அஸ்தியதைத் துளைத்துக் கொண்டு"

- சு. எண். 3952, வசூரி வகையும், சிகிச்சையும் (கே.ப.சு), பா. எண். 3.

73. அனைத்து அம்மை நோயுடன் உடலில் அனலாய்க் கொதிக்கும் காய்ச்சலுடன் தொடங்கும். இதில் பெரியம்மைக்குக் கொப்புளம் பொறுக்கு தட்டும் வரையும் காய்ச்சல் காணப்படும். இத்துடன் பொதுவாக அனைத்து அம்மை நோய்களுமே எரிவு தரக்கூடியவை. அரிப்பெடுத்தலும், சொறிந்ததும் எரிச்சல் தருவதும் அம்மைக் கொப்புளங்களின் குணங்களாகும்.

74. அம்மை நோய் 'வைரஸ்' எனும் கிருமி உடலுட்புகுந்து, விரைவாக இனப்பெருக்கம் செய்தலால் வருகிறது என்பதுடன், ஓரோர் அம்மை வகையும், ஓரோர் இன வைரஸால் உருவாகிறது என்றும் கண்டறிந்துள்ளனர்.

1. பெரியம்மை - வேரியோலா < வேரியோலா மேஜர் / வேரியோலா மைனர்

2. சின்னம்மை - ஹெர்பீஸ்வேரியோலா (Herpes Vericella)

3. தட்டம்மை - ரூபியோலா வைரஸ் (Rubeala Virus)

4. புட்டாலம்மை - மம்ஸ் வைரஸ் (Mumps Virus)

எண்ணியதற்குக் காரணம், கடும் கோடையினை அடுத்து வரும் இளவேனிற் காலத்தில் இவ்வம்மை அதிகமாகப் பரவுதலைக் [75] கண்டு, 'கோடையில் உடல் அனுபவித்த வெக்கையின் விளைவே இது' எனத் தீர்மானித்ததாகலாம்.

இ. மாரி

1. கொப்புளத்தில் நீர் உள்ளமை 2. மனித உடலில் மழைத்துளிகள் தங்கிய தோற்றத்தைத் தருதல், 3. மழைநீர் மேலிருந்து கீழாகச் சொரிதல் போல், அம்மை நோயும் உடலின் மேல்பாகம் (முகம்) தொடங்கிக் கீழாகச் (கால்) சொரிதல், 4. சிறு துளியாகத் தொடங்கி, பெரு மழையாக மாறும் மழையின் செயல்போல் முகத்திலும்,ஆங்காங்கு சில முத்துக்களை இட்டுப் பின் உடலெங்கும் பெருவாரியாக நிறைந்து விடும் ஒப்புமை. 5. மழையின்மையால் விளையும் வெப்பத்தால் தோன்றுவதாகக் கருதியதாலும், வெம்மை தருதலானும் மழைத் தேவையை மக்கள் மனத்தில் தோன்றச் செய்தல், 6. அம்மை வடுக்களால் உடல் தோற்றமே மாறி அமைதல் [76], 7. பொதுவாக 'நோய்களுக்கும், நீருக்குமுள்ள முக்கிய தொடர்பு' [77] கருதல் என்ற இவ்வெண்ணங்களின் அடிப்படையில் மாரி என அழைத்திருத்தல் வேண்டும்.

---

75. "Small-pox occur in all climates and regions of world . . . . it is most frequent in Winter pp. - Encyclopaedia Americana / p. 108.

76. தலை மாறி உயிர் பெற்றெழுந்த ரேணுகையை மாரியாகக் கருதல்; மகிஷாசுரனை வதைக்க மும்மூர்த்தியாக மாறி அழித்த மகிஷாசுரமர்த்தினியை மாரியாகக் கொள்ளல், திரிமூர்த்திகள் சாபத்தால் அழகு மங்கி, குரூபியாக மாறிய நாகாவலி உலகில் மாரியாகப் பிறந்தாள் எனக் கூறல் போன்ற புராணக் கதைகளின் இணைப்பு 'மாறியதால் மாரி' என்ற எண்ணம் இருந்தமைக்குச் சான்றுகளாகும்.

77. நோயுறுவார்க்கு நீரைக்கொண்டு ஆசி அளிப்பதுதான் எல்லாவிதமான ஆசிகளுக்கும் பொதுவாக இருந்தது.

- ரூத் பெனிடிக்ட், பண்பாட்டுக் கோலங்கள், தமிழாக்கம் - கி.பூ. சுப்பிரமணியன் (மார்ச், 1964), ப.63.

ஈ. குருநோய்

கட்டி, புண், விதை, கொட்டை என்ற பொருளில் அமையும் 'குரு' என்ற சொல்,. 1 அம்மை நோயால் விளையும் புண், 2. சிறு கட்டிபோல் தோன்றும் கொப்புளங்களைக் கொண்டமை, 3. விதைகள் போன்ற வடிவமைப்பு, 4. ஒரு விதை பெருகிப் பயிராகி, அதனை ஒத்த பல விதைகளைத் தருதல் போன்று, ஒருசில கொப்புளங்கள் தோன்றிப் பல்கிப் பெருகல் என்ற அம்மை நோயின் செயலுடன் உள்ள ஒப்புமை என்ற இவற்றை கருத்திற் கொண்டு 'குருநோய்' என அழைத்திருக்கின்றனர்.

"கோடாமல் வண்டிகளில் குருக்களையும் தானேற்றி

நாடடக்கி விதைக்கவென்று நாயகியும் வழி நடந்து"

வரி. 1181–1182.

என முத்தாரம்மன் விற்கவிதை [78] அமையும்.

உ. கொப்புள நோய்

சில கொப்புளங்களை உடைய நோய் என்ற பொருளில் (Small - pox) என்றும், "Small - pox" எனப்படும் பெரியம்மையுடன் ஒப்பிட, எளிய உரமற்ற கொப்புளங்களைக் கொண்டது என்ற பொருளில் "Chicken-pox" என்றும் பெற்ற பெயர்கள்போலக் கொப்புளங்களை உடைய தன்மையால் கொப்புள நோய் என அழைத்திருத்திருக்கின்றனர்.

இவ்வாறு அம்மை நோயைப் பல்வேறு காரணங்களால் ஐந்து வகையான பெயரமைதிகளோடு வழங்கியிருப்பினும், 'அம்மை தந்ததால் அம்மை நோய்' என்ற எண்ணமே ஆழமாகப் பதிந்திருந்தமையின், அம்மை நோய் தொடர்புடைய பெரும்பான்மையான சொற்களும் 'அம்மை' என்ற அடையுடனேயே வழங்கப்படுகின்றன.

---

78. ப.ஆ. ஆறுமுகப் பெருமாள் நாடார் (1978).

அம்மைப்புண், அம்மைக்கட்டு, அம்மைக்காப்பு (அம்மங்காப்பு) அம்மை குத்தல், அம்மைப்பால், அம்மை வடு, அம்மைக் கொப்புளம் என்ற இவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம்.

II. அம்மை நோய் வகைப்பாட்டுப் பெயர்கள்

பெருவாரியாகப் பரவி. வழக்கில் பயின்றுவரும் அம்மை நோய் வகைகள் என்ற முறையில் பெரியம்மை, சின்னம்மை, தட்டம்மை, புட்டாலம்மை மணல்வாரி என்பவைகள் அமையினும் பதினான்கு [79] முதல் இருபத்திரண்டு வகை அம்மை நோய்களின் பெயர்களும், குணங்களும் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

- நிறத்தால்
  - கருஞ்சப்பட்டை
  - கரும்பனசை
- தன்மையால்
  - கல்லுதிரி
  - சொரியம்மை
  - தவளை அம்மை, பாலம்மை
  - முடக்கம்மை
- வடிவால்
  - சடையுதிரி, கொள்ளம்மை
  - தட்டம்மை (சிச்சிலுப்பை – சிறு சிலும்பல்களாக அமைவது)
  - உப்புதிரி, உமியம்மை,கடுகம்மை
  - வெந்தயம்மை, பாசிப்பயத்தம்மை, வரகுதிரி
  - பனைமுகரி, சுரைக்காயம்மை, மணல்வாரி (மணலுதிரி)

---

79. சு.எண். 3952 - வசூரி வகையும். சிகிச்சையும் (கே.ப.சு) என்பதில் ஓரோர் அம்மையின் குணங்களும். சிக்கல்களும். மருந்து விபரங்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

வடிவு, தன்மையால் — பெரியம்மை
சின்னம்மை (நீர்க்கொளுவான், விளையாட்டம்மை, சிரிப்பம்மை கொப்பளிப்பான்)

இடம், தன்மையால் – புட்டாலம்மை (அம்மைக்கட்டு, மென்னிக்கட்டு. தாடையம்மை, கன்னக்கட்டு பொன்னுக்கு வீங்கி, நகைக்கு வீங்கி)

எனப் பெயர்சூட்டியுள்ளனர்.

இவை அனைத்தும் காரணப் பெயர்களாகவே உள்ளமை கவனிக்கத் தக்கது.

கொள், வரகு, பாசிப்பயறு, கடுகு, வெந்தயம், சுரைக்காய், பனைமுகரி, மணல்வாரி (இறுதி இரண்டும் நெல் வகைகள்) என்று விளை பொருட்களின் பெயர்களை அம்மை நோயின் வடிவுக்கேற்ப உவமித்தவர்கள் நாட்டுப்புற விவசாயப் பெருமக்களாதல் வேண்டும். தாம் அன்றாடம் கண்டு, பழகி அனுபவித்து வரும் உடனுள்ள பொருட்களை உவமையாக்கியுள்ளனர்.

இதிலும் கடுகு, வெந்தயம், சுரைக்காய் போன்ற சமையல் பொருட்களையும், நெல் குத்தி நீக்கும் உமியையும் உவமையாக்கியவர்கள் கிராமப்புறத் தாய்மார்களாதல் வேண்டும்.

III. அம்மைக் கொப்புளப் பெயராட்சிகள்

அம்மைக் கொப்புளத்தைக் குறிக்கக் குரு, முத்து என்ற சொற்களைச் சிறப்பாக ஆண்டிருக்கின்றனர்.

குரு

விதைகளை, கொட்டைகளைக் 'குரு' என்றழைக்கும் வழக்கு, இன்றும் கேரள, கன்னியாகுமரிப் பகுதிகளில் வழங்கப்படுகின்றது. (சான்று: சக்கைக் 'குரு').

விதையின் வடிவு, விதை போன்று பல்கிப் பெருகுவது போன்ற அடிப்படைகளில் அம்மைக் கொப்புளங்களைக் குரு எனக் கூறியிருக்கின்றனர்.

இப்பகுதிகளில் வழங்கும் அம்மன் கதைப்பாடல்களில் இவ்வழக்கின் அழுத்தத்தைக் காணலாம்.

"பெரும்பயறு கானவிதை பெருஞ்சோளங் கம்பம் புல்லும்
செந்தினையாம் காடகக்கண்ணி சிறந்தநல்ல கருந்தினையாம்
செங்கடுகு கூவரகு சிறந்த வித்து வகைகளுடன்
கல்லுருவி கருஞ்சப்பட்டை கையேற்றாள் உலகளந்தாள்"[80]

என அமையும் பாடல் வரிகள் கவனிக்கத் தக்கன.

முத்து

விதைகளை 'முத்து' எனும் வழக்கும், பொதுவாகத் தமிழகத்தில் வழங்கி வந்திருக்கின்றன.

ஆமணக்கு முத்து, வேப்ப முத்து போன்றனவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம்.

முற்றியது - முற்று - முத்து என அமைந்து, அம்மைக் கொப்புளத்தின் திரட்சி, பளபளப்பு நோக்கி, சிப்பியில் விளை முத்தையும் உருவகமாக்கியுள்ளனர்.

"கொட்ட மிட்ட முத்தாரம்மன் முத்தெல்லாங்
குதிரை மீதிலுங் கொண்டுவரச் சொன்னாள்
....
வயிர முத்துநல் மாணிக்க முத்துடன்
திட்டமாஞ் சிப்பி முத்துவேய் முத்துடன்"

80 *முத்தாரம்மன் விற்கவிதை, Op. Cit., வரி. 4050-4053.*

என அமைக்கப்படும் முத்தாரம்மன் கதைப்பாடல் வரிகளில் கொப்புளத்தை முத்தாக உருவகப்படுத்தி உரைத்துள்ள முறைமை புலனாகின்றது.

உயிரை வாங்கும் கொடிய நோயின் கொப்புளத்திற்கு உயிரை வளர்க்கும் உணவு வித்துக்களை, நவமணியுட் சிறந்த முத்துக்களை உவமித்தும், உருவகப்படுத்தியும் சிறப்பித்ததற்கு 'தெய்வம் தருவது இது' என்ற ஆழமான எண்ண வேரூன்றல் அமைந்திருந்தமையே காரணமாகும்.

IV. அம்மைநோய் – அம்மன் பெயர்த் தொடர்புடைய சொற்கள்

அம்மை நோயின் கடுமை மிகுதியாகிக் கொடுமை மலிந்தபோது, 'தம் கைக்கு மீறிய செயல் இது' என முடிவு கட்டி, இதற்கோர் எல்லை காண இறையாலேயே இயலும் எனத் தீர்மானித்து, நோய் தொடர்பாய அனைத்தையும் தெய்வக் கண்ணோட்டத்துடனேயே அணுகி, நோய் வரும் காரணம், தன்மை, வடிவு, மருந்து போன்ற அடிப்படைக்கூறுகள் அனைத்தையும் தனித்தனி அம்மனாக்கி வணங்கியுள்ளனர்.

வெம்மையால் வருவதும், வெம்மை தருவதுமாகிய நோய் வரும் காரணம், நோய்த்தன்மை என்பவற்றோடு 'வெயிலுகந்தம்மன்', 'வெயிலுண்டம்மன்' என்றமைந்த அம்மன்களையும்,

நோய்க் கொடுமையில் வலியதும், மெலியதுமாய பெரியம்மை, சின்னம்மையோடு பெரியம்மன், சின்னம்மன், பெரிய முத்தம்மன், சின்ன முத்தம்மன் என அமைந்த அம்மன்களையும்,

மழைபோல் அம்மை முத்துக்களைச் சொரிவது, அரிப்பினை வழங்குவது என்ற அம்மை நோய்க் குணத்தோடு சொரி முத்தம்மன், சொறிமுத்தம்மன் என்பதனையும்,

புட்டாலம்மை, உப்புதிரி, சுரைக்காயம்மை அல்லது மொழுக்கன் என்ற அம்மை நோய் வகைகளோடு புட்டாலம்மன், உப்பிலியம்மன் (உப்புதலுள்ளவள்) , உப்புடாரி (உப்புதலுடையவள்) என அமையும் அம்மன் பெயர்களையும்,

அம்மைக் கொப்புளப் பெயரான முத்து, குரு என்பவற்றோடு முத்தம்மன், குருவம்மா, குருவாயி என வரும் பெயர்களையும்,

அம்மங்காப்பெனப்படும் அம்மை நோய் மருந்தாய வேம்புடன் வேம்புலியம்மன், வேப்பிலைக்காரி என்ற அம்மன் அமைப்புக்களையும் இணைத்துச் சிந்தித்துப் பார்க்கலாம்.

V. அம்மை நோயோடு ஒப்புமை உடைய அம்மன் அமைப்புக்கள்

அம்மை நோய்ப் பெயர்கள்		அம்மன் பெயர்கள்
பெரியம்மை	–	பெரியம்மன்
சின்னம்மை	–	சின்னம்மன்
முத்து	–	முத்தம்மன்
பெரியமுத்து	–	பெரிய முத்தம்மன் (முத்துத் தம்பி, முத்துக் குமரன். இவை முத்தாரம்மனின் பரிவார தேவதைகள்)
சின்ன முத்து	–	சின்ன முத்தம்மன்
சொரி முத்து	–	சொரிமுத்தம்மன்
சொறிமுத்து	–	சொறி முத்தம்மன்
சடையம்மை	–	சடையம்மா, சடைத்தலைச்சி
புட்டாலம்மை	–	புட்டாலம்மன்
கருஞ்சப்பட்டை)		
கரும்பனசை)	–	கருமாரி
உப்புதிரி	–	உப்புடாரி, உப்பிலியம்மன்
குருநோய்	—	குருவம்மா
	—	குருவாயி

இதனோடு (குரு = விதை என்ற நிலை) பலதானிய வித்துக்களைத் தூவி முளைக்க வைத்து, அம்மன்விழாக்களில் முளைப்பாரி எடுத்தலை இணைத்து நோக்கலாம். அம்மன் அம்மை வித்துக்களைப் பரப்புபவள், பெருக்குபவள் என்ற எண்ணத்தினடிப் படையில் இவ்விழாச் செய்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

குருவாயூர் என்பதும், குரு+ஆய்+ஊர் எனக் குருவுக்குத் (அம்மைக்குரு) தாயாக உள்ளவளின்ஊர் என்று அம்மை நோய்க்குரிய தாய்த் தெய்வத்தின் தலமாக அமைந்து, தந்தை வழிபாடு, காலூன்றிய காலத்தில், குருகுலக் காவலனாகிய கண்ணபிரானின் தலமாக மாற்றப் பட்டிருத்தல் வேண்டும். தற்போது இத்தலத் தெய்வம் குரு+ஆய்+ஊர்+அப்பன் – குருவாயூரப்பன் எனப் பொருள் பொருத்தமின்றி அமைந்திருப்பதே உண்மையை விளக்கும்.

காய்ச்சல் – காச்சக்காரி
வெப்புநோய்
என்பதோடு
- வெயிலுகந்தம்மன்
- வெயிலுண்டம்மன்
- வெயில் காத்த அம்மன்
- வெயிலுவந்தம்மன் (வெயிலை விரும்பிய அம்மன்)
- அனற்காரி
- உச்சிமாகாளி (உச்சி வேளையில் பூசை பெறுபவள்)

என்ற அம்மன்களையும், காந்தாரி, காந்தாலம்மா (காந்துதல் – எரிதல்) என்ற அமைப்புக்களையும் இணைத்து நோக்கலாம்.

அம்மன் விழாக்களில் தீக்குழி இறங்கல், அக்கினிச் சட்டி எடுத்தல் போன்றவற்றுக்கும், அம்மனுக்குச் செவ்வாடை (செம்மை வெம்மையின் அடையாளம்) புனைவதற்கும், அவள் வெம்மை நோய்க்குரியவள், வெம்மை தருவாள் என்ற எண்ணங்கள் அடிப்படையாதல் வேண்டும்.

அம்மங்காப்பு என்ற வேப்பிலை+மஞ்சள் அரைத்த கலவை என்பதனோடு	வேப்பேரி வேம்புலியம்மன் வேப்பிலைக்காரி வேம்படியம்மன் வேம்புடையாள்	என்ற அம்மன்களை இணைத்துப் பார்க்கலாம்.

வேம்பு+உடை+ஆள் (வேம்பினை உடையவள் அதாவது வேம்பினைத் தல விருட்சமாகக் கொண்டவள்	வேம்பு+உடையாள் (வேப்பிலையை ஆடையாக அணிந்தவள்)

வேப்பிலையும் மஞ்சளும் அரைத்த கலவையே அம்மை நோய்க்குத் தக்க மருந்தாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவையே அம்மனுக்கும் உரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இங்கு அம்மனுக்கு மஞ்சளாடை புனைவதும், அம்மங் கொண்டாடிகள் உடல் முழுக்க மஞ்சளரைத்துப் பூசிக் கொண்டு வருதலும், விழாவில் மஞ்சள் பால் ஊற்றலை ஒரு முக்கிய சடங்காகக் கொள்ளலும் எண்ணிப் பார்க்கத் தக்கன.

அம்மை வடு என்பதோடு – மாறி, மகாகோரி (மாகோரி > மாரி?) என்ற அம்மன்களை இணைத்துச் சிந்திக்கலாம்.

அலகு குத்தி புண்ணும், வடுவுமாக ஆக்கிக்கொள்ளும் அம்மன்விழாச் செய்கைகள்,

"துங்கச் சிலாகைக் கயிறு குத்திக்கொண்டு
துள்ளுவா ருள்ள நிறைந்திருப்பாள்"
"வந்து செடிலை நடத்தி வைத்தா ளெங்கள்
மாரி முத்தம்மன் மன மகிழ்ந்து"

என அமையும் 6364 – சீரணி அம்மன் கும்மி வரிகள் (இ.7, இ.9) (செ.கீ.சு). எண்ணத் தக்கன. அவள் அம்மை நோயால் புண், வடுக்களாக உடலுருவை மாற்றுபவள் என்ற எண்ணத்திலாதல் வேண்டும்.

அம்மைப்புண்	)	ஆயிரம் கண்ணுடையாள்	)	என்ற
என்பதோடு	)	பதினாயிரங் கண்ணுடையாள்	)	அம்மன்
	)	கண்ணாத்தா	)	பெயர்கள் இணைக்கத் தக்கன.

அம்மைக் கொப்புளங்களை உடலெங்கும் நிறைத்து அம்மைப் புண்களாக்கி, தேகமே கண்கள் திறந்து பார்ப்பது போன்ற தோற்றத்தைத் தருபவள் ஆயிரங் கண்ணுடையாள் ஆகியிருக்கிறாள் எனலாம். கண்ணனூர் (கண்+அன் (சாரியை + ஊர்) என்ற அம்மன் தலப் பெயர்கள் இவ்வமைப்புடன்இணைத்துச் சிந்திக்கத்தக்கன. கொடுங்கண்ணூர் (கேரள மாநிலம்) பகவதி கோயிலருகில் இன்றும் இவ்வம்மன் கோயில் உள்ளது.

வசூரி அல்லது வைசூரி நோயோடு வசூரி மாலையம்மன் என்பது இணைத்து நோக்கத் தக்கது.

நீர்க் கொளுவான் – மாரி – நீர்த்தன்மை உடையவள் என்ற பொருளில் அம்மன் விழாவில் கரகம் எடுத்தலாக, நீர் நிறைந்த குடத்தைத் தலையில் வைத்து ஆடல் அமைந்திருத்தல் வேண்டும். (தற்போது வெறும் குடத்தை அணிசெய்து ஆடலாக மாறிவிட்டது).

இவ்வாறாக அம்மை நோயோடு தொடர்புபட்டே, அதன் ஒவ்வோர் கூறையும் அம்மன்களாக உருவாக்கி வணங்கி வந்துள்ளமை புலனாகின்றது.

VI. அம்மைநோய் தொடர்பான பிற சொல்லாட்சிகள்

அம்மை நோய் வருதலைத் தெய்வீகத்தோடு தொடர்புபடுத்திக் கண்ட நாட்டுப்புறப் பாமர மக்களின் மனங்களினின்று, இக் கொடிய நோய் தொடர்பானஅமங்கலச்சொற்களும் மங்கலச் சொற்களாகவே மலர்ந்துள்ளன. கொல்ல வந்த புலியையும் கும்பிட்டமைந்த மன நிலைகளைக் காண்கிறோம். இத்துடன் ஒவ்வோர் சொல்லும் பொருளாழத்துடனும் கையாளப்பட்டிருக்கிறது. பொதுவாக உடலில் புறக்காரணிகளால் தோன்றும் கட்டியையோ, வீக்கம்

போன்றவற்றையோ 'ஏதோ புறப்படுகிறது' எனக் கூறல் வழக்கிலிருக்க, 'அம்மைக் கொப்புளம் அம்மனால் வருவது' எனக் கருதியமையின், அம்மை போட்டிருக்கிறது, அம்மை வார்த்திருக்கிறது, அம்மை வந்திருக்கிறது, அம்மன் விளையாண்டிருக்கிறது, அம்மை பார்த்திருக்கிறது என்ற சொற்களால் வழங்கினர்.

ஆயிரம் கண்ணுடையாள், கண்ணாத்தா, பதினாயிரங் கண்ணுடையாள் என அழைத்தமையோடு இச்சொல்லாட்சி (அம்மை பார்த்திருக்கிறது) இணைத்து நோக்கத் தக்கது.

தவிர நிறைய இடுதலை, பூச்சொரிதல்(மைசூரில் இவ்வழக்கு இன்றுமுளது). பூரித்திருக்கிறாள் (மகிழ்ச்சியால் பூரித்தல்), நிறையாபரணமாகப் பூட்டி இருக்கிறாள் (முத்து ஆதலின்) என்றும்,

கண்ணில் கொப்புளம் விழுதலைப் 'பூவிழுதல்' என்றும், நோய் மறைதல் அல்லது போதலை 'இறங்குதல்' (மேலிருந்து கீழாக வந்து மறைதலை உணர்ந்து உரைத்திருக்கின்றனர்), அம்மை நோயால்இறந்துபோதலைக் 'குளிர்ந்துவிட்டது' என்றும் கூறுவர். இதனை, 1. உள்ளம் குளிரப் பேசுதல் என்ற உலக வழக்கு, 2. நீர் உடைய கொப்புளத்தால் இறத்தல், 3. வெப்பு நோயாகிய அம்மை தற்போது இறப்பின் மூலம் குளிர்ந்துவிட்டது எனல் , 4. இறந்ததால் பிணத்தின் தன்மையாய குளிர்ச்சி – என்ற 4 நிலைகளோடும் சிந்திக்க இச்சொல் ஆளப்பட்டுள்ள ஆழம் புலனாகும்.

அம்மைக் கொப்புள நீரை 'அம்மைப்பால்' (பால் தாய்மையுடனேயே தொடர்புடையது) என்றும், நோய் திரும்ப வரலை 'மறு முள் பாய்தல்' (முள் தைத்த இடத்தில் திரும்பவும் முள் தைத்தால் மிகுந்த வேதனை தருவது, அம்மைநோய் வந்து நொந்த உடலில் திரும்ப வரலோடு உருவகப்படுத்தப்பட்டுள்ளது). என்றும் வழங்கிய சொல்லாட்சிகள் பொருளாழமும், மங்கலத் தன்மையும் கொண்டனவாகும்.

சில எண்ணத்துளிகள்

1. அம்மை நோயின் தன்மைகளை உற்றுக்கவனித்துப் பொருள் பொருத்தத்தோடு நாட்டுப்புறப் பாமர மக்கள் பெயர் சூட்டியுள்ளனர்.

2. அனைத்தையும் விடத் 'தெய்வத்தால் வருவது' என்ற எண்ணமே ஆழமாக வேரூன்றி இருந்தமையின் அம்மைப் பெயர்கள், கொப்புளங்கள், அம்மைநோயின் வடிவு, தன்மை, நோய்க்குரிய மருந்து என்று அனைத்துக் கூறுகளையும் அம்மன்களாக்கி வணங்கியுள்ளனர்.

3. மதங்கள் தோன்றுவதற்கு மனிதனின் அச்ச உணர்வு காரணம் என்ற உளவியல் அடிப்படைக்கு அகச் சான்றாகத் திகழ்வன அம்மை நோயும், தொடர்பான சொல்லாட்சிகளுமாகும்.

4. தமிழர்கள் அம்மை நோயை ஆரம்ப முதலே தெய்வமாகக் கருதியதற்குக் கி.பி. 6முதல் 16–ஆம் நூற்றாண்டு வரை உள்ள 10 –நூற்றாண்டுக் காலமும் பக்தி நெறியில் பயின்று திளைத்து வந்த பான்மை காரணமாகலாம்.

'தெய்வம் செய்யும் செயலே இது', 'தெய்வமேஇது', 'தெய்வத்தாலேயே இதனைத்தீர்க்க இயலும்' என அமைந்து, அனைத்தையும் தம் முயற்சிக்கு அப்பாற்பட்டதெனக் கருதிய மனங்களினின்றும் பல அம்மன் கதைப்பாடல்களும், பதிகங்களும், துதிகளும், தாலாட்டுக்களும் மலர்ந்து இலக்கிய, வரலாற்று, சமய உலகில் நிலைத்திருக்கின்றன.

ஆயின் 'அம்மை நோய் தெய்வத் தண்டனை' எனத்தொடக்கத்தில் கருதினாலும், நோயின் கொடுமை எல்லை மீறிய போது நோயை நோய் எனவே கொண்டு, தம்மால் அதனை அழிக்க இயலும் எனக் கருதிய மனப்போக்கில் வளர்ந்த, இங்கிலாந்து மண்ணில் பிறந்த எட்வர்ட் ஜென்னரால் (Edward Jenner) அம்மை நோய்க்குரிய தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்க முடிந்தது.

இத்த இருவேறு மனநிலைகளுக்குக் காரணம் அந்தந்த நாடு வளர்த்து வரும் அரசியல், கல்வி, சமயம், பொருளாதாரம், கலாச்சாரம் போன்ற பாரம்பரியங்கள் காரணமாகும். இந்தியா பண்டுதொட்டு மெஞ்ஞான நாடாகவும், இங்கிலாந்து போன்ற மேலை நாடுகள் விஞ்ஞான நாடுகளாகவும் திகழ்ந்து வந்துள்ளமையின், அம்மை என்ற

கொடிய தொற்று நோயால் விளைந்த நெருக்கடியை, தத்தமக்கே உரிய இருவேறு வழிகளில் அணுகியிருக்கின்றன.

தற்போது உயிரைப் பலி கொள்ளும் பெரியம்மை முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டமையின் விஞ்ஞானம் கண்டறிந்த தடுப்பு மருந்து பயனற்றதாகி மறக்கப்பட்டு வரும் சூழல் உருவாகியுள்ளது. ஆயின் மெஞ்ஞானம் கண்டறிந்த இந்நோயின் மூலம் தோன்றிய தெய்வங்களும், இலக்கியங்களும் தமிழர் உள்ளளவும் நிலைத்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

முத்தாரம்மன் கதையில் அம்மை நோய்த் தொடர்பு

முத்தாரம்மன் கதையிலுள்ள அம்மை நோய்த் தொடர்புடைய செய்திகள் குறித்து அறிவதற்கு முன், இத்தகு கதைப்பாடல் எழுந்த காலகட்டத்தில் தோன்றிய அம்மன் பற்றிய பிற இலக்கியங்களில், அதாவது அம்மனைக் குறித்த நாட்டுப்புறப்பாடல்கள், பதிகங்கள், ஊஞ்சல்கள், கும்மிகள், பிற கதைப் பாடல்களில் அம்மை நோய்த் தொடர்பு பற்றிய குறிப்புக்கள் எந்த அளவில், எம்முறையில் அமைந்திருந்தன என்பதை அறிய, பதிப்பிக்கப் பெற்றுள்ள இம்முத்தாரம்மன் கதையில் அமைந்துள்ள அம்மை நோய்த் தொடர்புள்ள செய்திகள் இடம்பெற்றுள்ள முறையும், அளவும், விதமும் தெளிவாகும் என்ற எண்ணத்தில், முதலில் அம்மன் தொடர்பாய பிற இலக்கியங்களில் அமைந்துள்ள அம்மை நோய்த் தொடர்புடைய கருத்துக்கள் பார்க்கப்படுகின்றன.

அம்மன் பாடல்களில் அம்மை நோய்த் தொடர்பு

அம்மை நோய் பெருவாரியாகப் பரவத் தொடங்கிய 17–18 ஆம் நூற்றாண்டுகளில் அம்மன் தொடர்பாக எழுந்த பாடல்கள் அனைத்திலும் 'அம்மை நோய் தருபவள் அம்மன்' என்ற கருத்தினை ஓர் அடிப்படை நிலையாகக் காண முடிகின்றது.

வெளிவந்த, வெளிவராத நூற்களில், சுவடிகளில் அம்மை நோய்த் தொடர்புடையாளாக அம்மன் காட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

வீட்டில் யாருக்கேனும் அம்மை நோய் வந்து, அதன் உக்கிரம் அதிகப்பட்டு, நோயாளி பெரும் அவதிக்கு ஆளாகும்போது, அம்மன் புகழை இசையோடு கலந்து, நோய் வேதனை உணராது, இசையிலும், அம்மனின் செயற்கரும் செயலிலும், உளம் மூழ்கி, உடல் நோவு மறக்குமாறு பாடுதலுண்டு, இத்தகு பாடல்களில் 'அம்மை முத்துக்களை இறக்கு' என வேண்டும் நிலைகள் மூலாதாரமாக அமையும். நோய்க்கு முக்கிய மருந்தாய வேம்பும் இப்பாடல்களில் சிறப்பித்துப் பாடப்பெறும். இவ்வகையான நாட்டுப்புறப் பாடல்களில் குறிப்பிடத் தக்க இடம்பெறும் 'மாரியம்மன் தாலாட்டில்' [81] அம்மனுக்கும், அம்மை நோய்க்குமுள்ள தொடர்பு நிலைகள் ஆழமான முறையில் சுட்டப்பட்டுள்ளன.

---

81. ஸ்ரீமகள் கம்பெனி வெளியீடு.

"கொலுவிருந்த சக்தி கோத்தமுத்தை நீயிறக்கு"

"பார முத்தை யிறக்கிப் பாலகனைக் காருமம்மா"

"வேப்பிலையால் தான்தடவி விசிறிமுத் தழித்துவிடு"

"விபூதியைப் போட்டு இறக்கிவிடு முத்திரையை"

என்றும்,

"அனலம்மா உன் சொரூபம்"

"கனலம்மா உன் சொரூபம்"

என்றும், (வெப்பு நோயாகிய அம்மைக்கு முன் வரும் கடுங்காய்ச்சலைத் தரும் தன்மையள் ஆதலின், அம்மைநோய்த் தன்மையையே அம்மனின் தன்மைக்கு ஏற்றி உரைத்துள்ளனர் எனலாம்).

அம்மை நோய்க்கு அருமருந்தாய வேம்பினை அம்மனுடன் இணைத்து,

"ஈட்டிபோல் வேப்பிலையை யினியனுப்பிக் கொண்டவளே"

"கத்திபோல் வேப்பிலையைக் கதறவிட்டாய் லோகமெல்லாம்"

"வேப்பிலைக் குள்ளிருக்கும் வித்தைகளை யாரறிவார்"

"வேம்பு ரதமேறி வித்தகியே வாருமம்மா"

"வேப்பஞ் சீலையாள்"

"வேப்பிலையே பஞ்சுமெத்தை"

"வேப்பம் பாலுண்டவளே"

என்று விளம்பப்பட்டுள்ளாள்.

இவ்வாறு 'மாரியம்மன் தாலாட்டு' தவிர, பல நாட்டுப்புறப் பாடல்களிலும் அம்மை நோய்த் தொடர்புடையாளாக அம்மன் பாடப்பட்டுள்ளமையைப் பார்க்கமுடிகின்றது.

அம்மன் கதைப்பாடல்களில் அம்மை நோய்த் தொடர்பு

அம்மனைப் பற்றிய கதைப்பாடல்களில் 'அம்மை நோய்க்குரியாள் இவள்' என்ற கருத்தைப் பரவலாகப் பார்க்க முடிகின்றது.

முத்தாரம்மன் விற்கவிதை [82], வில்கதை – அம்மன், கதை [83] உச்சினி மாகாளி கதை, [84] மாரியம்மன் கதை [85] போன்ற அம்மன் கதைப் பாடல்களில் அம்மை நோய்க்குரியவளாக அம்மன் காட்டப்பட்டுள்ள தன்மையைச் சிறப்பாகக் காண முடிகின்றது.

முத்தாரம்மன் விற்கவிதையில் முப்புரத்தையும், முப்புராதி களையும் சிவபிரான் எரித்து அழித்து பின், முப்புர நாயகியாகிய முத்தாரம்மன் தன் கோட்டை, தன் பிள்ளைகள் (முப்புராதிகளாய திரிபுராதிகள்) அழிவுக்காக அழுது புலம்பி விட்டு, அவர்களை எழுப்ப வேண்டிப் பின் அவர்களும் உயிர் பெற்றெழ, அவர்களுக்கும், முத்தாரம்மனுக்கும் சிவன் வரம் தருகிறார். முத்தாரம்மனுக்கு அம்மை நோய் பரப்பும் வித்துக்களை வரமாக ஈன்றதாகக் கதை முடிகின்றது.

இதனால் அம்மனே அதாவது தாங்கள் வணங்கும் பெண் தேவதையே, அம்மை நோயைப் பரப்பித் தங்களை ஆட்கொள்ளுகிறது என்ற எண்ணம் மக்களிடையே ஆழமாகப் பரவியிருந்த நிலையை இவ்வாறு அமைத்த கதைப்பாடல் அமைப்புக்கள் புலப்படுத்துகின்றன.

அம்மைக் கொப்புளங்களின் வடிவுக்கேற்ப, அவை பல்வேறு வகையான விதைகளுடன் ஒப்பிடப்பட்டு, இத்தகு தன்மையுள்ள அம்மை

---

82. ஆறுமுகப் பெருமாள் நாடார் (ப.ஆ) (1978)

83. சு.எண். 8028 - (கே.ப.சு)

84. சுவடி பார்த்து கையாலெழுதிய படி. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இணைப் பேராசிரியர் டாக்டர் ஏ.என். பெருமாள் அவர்களிடமிருந்து பெற்றது.

85. வாய்மொழியாக வழங்கிவரும் கதையாக மதுரை மாவட்டத்தில் இன்றும் வழக்கிலுள்ளது

வித்துக்களை அம்மன் சிவனிடம் வரமாகப் பெற்று வந்து, மக்களிடையே தூவி, அம்மை நோயைப் பரப்பினாள் என்றும் கதைப்பாடல் அமைத்துள்ளனர்.

"வாரும்பிள்ளாய் உலகுசத்தி வரமுனக்குச் சொல்லக்கேளு"
வடிவருதிப் பாறையிலே வாங்குமென்றார் பிடிவிதையை
பிடிவிதையைத் தான்வாரி பெண்ணணங்கு கைக்கொடுத்தார்
அத்திக்காய் வகைபலதாம் ஆதளங்காய் வகைபலதாம்
துத்திக்காய் வகைபலதாம் தூதளங்காய் வகைபலதாம்"

(வரி.4043 – 4047)

என்றும்,

"சிறிய சம்பா மிளகுச்சம்பா சிறந்தநல்ல முத்துவெள்ளை
குறுவைக்குளை யானுடனே கூடப்பனங் குறுவைவித்து
வரிக்குறுவை பூனைக்காலி வாய்த்தமொட்டைக் குறுவைவித்து
கருங்குறுவை கருப்புக்காவி கடியவித்து அரிக்கிறாவி
குலவாளை வெள்ளைச்சம்பா கூடமணல் வாரியுடன்
தலைநாளில் கையேற்று தாய்முத்தார் வாங்கியபின்"

(வரி.4055–5060)

என்று கதைப்பாடல் வரிகள் அமைவது கவனிக்கத் தக்கது.

வில்கதை அம்மன் கதையிலும், அம்மன் அம்மை முத்துக்களை வரமாகப் பெற்றுப் பரப்பியதாகக் கதைப்பாடல் அமைக்கப்பட்டுள்ளமை, இத்தகு எண்ணம் மக்களிடை ஆழமாக வேரூன்றியிருந்தது என்பதற்கு ஆதாரமாகத் திகழ்கின்றது.

சிவபிரானிடம் அம்மன் தனக்கு எம்மாதிரியானவற்றை யெல்லாம் அம்மை முத்துக்களாகத் தரும்படி வேண்டினாள் என்பதை இக்கதைப்பாடல்,

"கல்லுறுகி செல்லுறுகி காஞ்சூரம் முளையுறுகி
சிந்துமணி சிதறுமணி சிச்சிலுப்பை பால்கடுக்காய்
ஆலமுத்து ஆத்திமுத்து அதியசாம் பிறாணிமுத்துவும்
இலுமிச்சம் பழமதிலே யிசைந்தமுத்து வேணுமென்றாள்
கோவைப் பழம்போலே கோர்த்தமுத்து வேணுமென்றாள்
இசங்கம் பழம்போலே யிசைந்தமுத்து வேணுமென்றாள்
வாழைப் பழம் போலே வறுத்தமுத்து வேணுமென்றாள்
இலந்தம் பழம்போலே இலங்குமுத்து வேணுமென்றாள்
கத்தரிப் பழம்போலே கனத்தமுத்து வேணுமென்றாள்"[86]

என விவரிக்கின்றது.

உச்சினி மாகாளி கதையிலும் அம்மன் அம்மை நோய்க்கு உரியவளாகக் காட்டப்பட்டுள்ளமை தெரிகின்றது.

இதில் மாகாளி கோயிலில் மறைத்து வைக்கப்பட்டுள்ள திரவியங்களைக் கைப்பற்ற வேண்டுமென்று, கோயிலைப் பரங்கிப்படை பீரங்கி வைத்துத் தகர்க்க, சினமுற்ற மாகாளி தன் பூதப்படை கொண்டு, பரங்கிப் படையைத் தாக்கி அழித்து, பின்னும் சினமடங்காது, பரங்கித் தலைவன் சம்புத் துரையின் சீமை முழுவதையும் அழிக்க, அம்மை முத்துக்களை வரம்வேண்டிப் பெற்றதாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது.

"என் கோட்டை யானதையு மிடித்தானே சம்புத்துரை
கோயில்கொடி மரங்களெல்லாம் கூண்டோடே அழித்துவிட்டான்
மூலையிலே இருந்தஎன்னை முற்றத்தில் நிறுத்திவிட்டான்
மேடையிலே இருந்தஎன்னை வெளிதனிலே தள்ளிவிட்டான்
அம்பலத்தில் இருந்தஎன்னை அடவியிலே தள்ளிவிட்டான்
அரும்பாவி சம்புத்துரை அவனுடைய பட்டாளமும்

---

86. இ.ம. 16.

ஆனைப்படை குதிரைப்படை அத்தனையும் கொன்றுவிட்டேன்

அவனுடைய சீமைஎல்லாம் அழிக்கவரம் தாருமையா" [87]

(வரி. 415–420).

எனக் கதைப்பாடல் வரிகள் அமைகின்றன.

வெள்ளையர் ஆட்சியின் போது, சம்புத்துரை என்பவனின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அம்மை நோய் பெருவாரியாகப் பரவி, மக்களைத் துன்புறுத்த, உடன் அவர்கள் 'சம்புத்துரை அம்மன் கோயிலை இடித்து நாசமாக்கியதால் சினமுற்றே அம்மன் இவ்விதம் அம்மை நோய் பரப்புகின்றாள்' எனத் தொடர்புபடுத்திப் பார்த்து நம்பிய நம்பிக்கையின் விளைவே கதைப்பாடலின் இத்தகு அமைப்புக்குக் காரணமாம்.

மாரியம்மன் கதையிலும் அம்மை நோய் தருபவள் என அம்மன் படைக்கப்பட்டு, அம்மை நோய்த் தொடர்புடைய செய்திகள் அமைக்கப்பட்டுள்ளன.

தன் தங்கை குழந்தைகளை மாரி பார்க்க வர, தனக்குக் குழவியில்லையே என்ற ஏக்கத்தால் தன் குழந்தைகளைக் கண்பார்த்து விடுவாளோ என்று அஞ்சிய தங்கை, தன் குழந்தைகள் ஏழில் ஒன்று வெளியே விளையாடச் சென்றிருக்க, மீதி ஆறினையும் பிடித்து ஆறு குலுக்கைகளில் (நெல் முதலிய தானியங்களை இட்டு வைக்கும் மண்ணாலாய பெரிய அமைப்புக்கள்) அடைத்து மூடி வைக்க, தங்கையின் கபடச் செயல் அறிந்த மாரி,குழந்தைகள் எங்கே என, 'அவர்கள் விளையாடச் சென்றிருக்கிறார்கள்' என்று தங்கை கூற, 'அப்படியா நன்றாக விளையாட்டும்' என்று மாரி கூறிச் செல்ல,

---

87. குறைப்பிரதி யாதலின் இதுவரையுமே கதை காணப் படுகின்றது. ஆயின் நெல்லை மாவட்ட திருக்கண்ணன்குடி போன்ற ஊர்களில் "உச்சிமாகாளி கதை" என்ற பெயரில் பாடப்பெறும் இத்தகு கதைப்பாடலில், அம்மன் இறுதியில் அம்மை முத்துக்களை வரமாகப் பெற்றுவந்து அவன் சீமை முழுவதையும் அழித்ததாகவே பாடப் பெறுகின்றது. ஆ.ஆ.நி. யில் முழுமையாக உள்ள பிரதிகளிலும் இவ்வாறே கதை முடிவு காணப்படுகின்றது.

குலுக்கையைத் திறந்து பார்த்த தங்கை, குழந்தைகள் மீது அம்மை விளையாடி மரணமுற்றிருக்கக் கண்டு, தன் தவறும், தமக்கை மாரியின் மகத்துவமும் அறிந்து, பிள்ளைகளை உயிர்ப்பித்துத் தருமாறு மனதுருகி வேண்டிக்கொள்ள, மாரியும் அவ்வாறே செய்ததாகக் கதை கூறப்படும்.

இதனின்றும் மாரியம்மன் அம்மை நோய் தருபவள்; நீக்குபவள் என்ற எண்ணப் படிவின் அடிப்டையில் இக்கதை எழுந்த தன்மை தெளிவாகின்றது.

அம்மனும் பிற நோய்த் தொடர்பும்

மரணத்தை விளைவிக்கும் கொடிய அம்மை நோயுடன் மட்டுமன்றி, பிற கடுமையான நோய்கள் பலவற்றோடும் அம்மன் தொடர்புபடுத்தி உரைக்கப்பட்டுள்ளமையை இதே பாடலில் கதைப்பாடல்கள் காட்டுகின்றன.

அம்மை நோயுடன் தொடர்புபடுத்தி உரைக்கப்பட்ட பின் நிலையில், வேறுபல கொடிய நோய்களையும் தருபவள் என்ற கருத்து காலப்போக்கில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

"மாரியம்மன் கலிவெண்பாவில்" [88] பல்வேறு நோய்க் காரணியளாக அம்மன் உரைக்கப்பட்டுள்ளாள்.

"காய்ச்சல் தலைவலிகள் கண்ணோய் கண்ணில் புகைச்சல்
மூச்சடக்கல் மாரடைப்பு முத்தியதோர் – ஆச்சரியச்
சன்னியொடு சூலைநோய் தான்புத்துக் காமாலை
வன்னி குன்மநோயும் வயர்கடுப்பும் – இன்னமின்னம்
வாந்தி பிராந்துடன் வாத பித்த சேத்துமத்தோடே
ஈந்த விரைவாதமுடன்".

என அமைகிறது.

---

88. சு.எண். R 6165. இ.ம. 4 செ.கீ.சு.

முத்தாரம்மன் விற்கவிதையில் சொரி சிரங்கினோடு அம்மனைத் தொடர்புபடுத்திக் கண்டுள்ள நிலையை,

“ஆளான ஆட்களுக்கும் அருமருந்த பெண்களுக்கும்
இளவெயிலில் தானிருந்து இருநகமும் கொண்டுகுத்த
பல்காட்ட கண்சிமிட்ட பரபரெனக் கரகரென
சிரங்கெனவே தான்சொறிய சில்லிரத்தம் தான்பாய
அறங்கையிலும் புறங்கையிலும் அருமருந்த முழங்கையிலும்
ஒருநாளும் ஒழியாமல் ஊழியுள்ளோர் தங்களுக்கு
உரிமையுள்ள சிரங்கெனவே ஒருவிதையும் தாருமென்ன”

(வரி. 4068–4074)

என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

வில்கதை அம்மன் கதையிலும்,

“உச்சியிலே போட்டமுத்து உச்சிப்பிளவை யுண்டாக்குதய்யோ
நெத்தியிலே போட்டமுத்து நிலையாணி யாகுதய்யோ
கண்ணதிலே போட்டமுத்து கண்ணோசை யாகுதய்யோ
கழுத்திலே போட்டமுத்து கண்டமாலை யாகுதய்யோ
மார்பதிலே போட்டமுத்து மார்பாணி யாகுதய்யோ
அரையதிலே போட்டமுத்து யரையாப்பு மாகுதய்யோ
துடையதிலே போட்டமுத்து துடைவாளை யாகுதய்யோ
பாதத்திலே போட்டமுத்து பாதசக்ர மாகுதய்யோ” [89]

என உச்சிப் பிளவை முதல் பாத சக்கரம் வரையுள்ள பல்வேறு நோய் தருபவளாக அம்மனைச் சித்தரிக்கின்றது.

---

89. இ. ம. 15.

தம்மால் நீக்க முடியாத கொடிய நோய்களின் வருகைக்கு அம்மனே காரணம் என்றும், அத்தகு நோய்களை அவளே நீக்க இயலும் என்றும் மக்கள் நம்பிய நம்பிக்கையின் விளைவுகளே இத்தகு வரி இணைப்புக்களின் காரணம்.

பதிப்பிக்கப்பெற்றுள்ள முத்தாரம்மன் கதையில் அம்மை நோய்த் தொடர்பு

குறிப்பிட்ட இம்முத்தாரம்மன் கதையைப் பார்க்கும்போது, பிற கதைப்பாடல்களை விட, அம்மன் அம்மை நோயுடன் மிக நெருங்கிய தொடர்புடையவளாக உள்ளமை தெரியவருகின்றது.

கதைப்பாடல் முழுவதுமே அம்மன் பல இடங்களிலும் அம்மை நோய் பரப்பி, அதன் மூலம் மக்களை ஆட்கொண்டு சென்று, இறுதியில் 'பட்டபுரம்' என்ற இடத்தில் தெய்வமாவதாகவே முடிகின்றது.

"அம்மை நோய் பரப்பி ஆட்கொள்ளுதல்" என்பதையே கதைப்பாடல், கருவாகக் கொண்டுள்ளமையின் அம்மை நோய்க்குரிய தெய்வமாக அம்மனைக் கருதும் நிலையே மேலோங்கி நிற்கிறது.

ஆயின், அம்மன் தொடர்பாய பிற கதைப்பாடல்களில் (முத்தாரம்மன் விற்கவிதை, வில்கதை அம்மன் கதை, உச்சினி மாகாளி அம்மன் கதை போன்றன) அம்மன் அம்மை நோய்க்குரியவள் என்று சில இடங்களில் சில குறிப்புக்களாக மட்டுமே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

'அம்மை நோயின் தீவிரம் அதிகப்பட்டபோது அம்மன் – அம்மை நோய்த் தொடர்பு நெருக்கமாகி, அம்மன் அம்மை நோய்க்கே சிறப்பாக உரியவள் என்ற கருத்து ஆழமாக வேரூன்ற, அது கதைப்பாடலிலும் எதிரொலித்திருக்கிறது' எனலாம். இதனால் பிற அம்மன் கதைப்பாடல்களை விட இம்முத்தாரம்மன் கதைப்பாடல் காலத்தால் பிற்பட்ட நிலையினது என்பதும் உறுதிப்படுகின்றது.

மேலும், பிற அம்மன் கதைப்பாடல்களில், ஒரே அம்மனை வைத்து அம்மை நோய்க்குரியவள் எனப் பொதுவாகப் பேசப்பட்டிருக்க,

இக்கதைப் பாடலில் பெரியம்மை, சின்னம்மை என்ற அம்மை வகை வேறுபாட்டுக்குத் தக, பெரியம்மன், சின்னம்மன் அல்லது பெரிய முத்தம்மன், சின்ன முத்தம்மன் என்றே இருவேறு அம்மன்களாகப் பாகுபடுத்தி உரைத்துள்ளதையும், இருவரும் நாக கன்னிகைக்கு இரட்டையராகப் பிறந்து, தமக்கை, தங்கை உறவு முறையுடையார் என அமைத்துள்ளதையும் பார்க்க, பிற கதைப்பாடல்களினின்றும் மாறுபட்ட வளர்ச்சி நிலை கொண்டது என்பது தெளிவாகின்றது.

அம்மை நோய் பொதுவாக ஒரு கொடிய நோய் என்றும், அதற்கு அம்மனின் சினம் காரணம் என்றும், மக்களால் கருதப்பட்ட நிலையில் அம்மை நோய்குரியவளாக அம்மன் படைக்கப்பட்டு, அம்முறையில் அம்மன் கதைப்பாடல்களும் அமைந்திருக்க, அம்மையில் பெரியம்மை, சின்னம்மை என்று வகை பிரித்து, அவற்றின் குண வேறுபாட்டின் தன்மையை உணர்ந்தபின், அவற்றின் தன்மைக்கேற்ப, இருவேறு அம்மன்களாக அமைத்துக் கதைப்பாடல் படைத்துள்ள நிலையை இக் கதைப்பாடலில் காண்பதால், இது பிற அம்மன் கதைப்பாடல் களினின்றும் மாறுபட்ட வளர்ச்சி நிலையிலமைந்து, காலத்தால் பிற்பட்ட நிலையைக் காட்டுகின்றது எனலாம்.

பெரியம்மைக் குரியவள் பெரிய முத்தம்மன், சின்னம்மைக் குரியவள் சின்னமுத்தம்மன் என்ற வரையறை நிலைகளைக் கதைப்பாடலின் பல இடங்களில் காண முடிகின்றது.

"நிலைக்கும் பெரியமுத்து நிலையாத சின்னமுத்து"

(வரி. 1660)

என்ற வரியிலுள்ள 'பெரியமுத்து', 'சின்னமுத்து'க்குரிய அடைமொழிகளில் பெரியம்மை, சின்னம்மைக்குரிய குண விசேடங்கள் சுட்டப்பட்டு, பெரியமுத்து பெரியம்மைக் குரியவளாயும், சின்னமுத்து சின்னம்மைக் குரியவளாகவும் வேறு பிரிக்கப்பட்டிருக்கின்றனர்.

பெரியம்மை தாக்கினால் வடு உண்டாகி உடலில் நிலைத்து விடுவதையும், சின்னம்மை, வடுக்களை விட்டுச் செல்லாத தன்மை உடைமையையும், இவ்வரிகளிலுள்ள அடைமொழிகள் சுட்டிக் காட்டுகின்றன.

தவிர, சிவபிரானிடம் இரு அம்மன்களும் சென்று வரம் வாங்கும் பொழுதே,

"பொருதுவரு முத்தென்றும் நல்லமுத் தென்னவும்

புகழ்பெரிய நாமம் நீதருவாய்"

(வரி. 479–480)

எனத் தங்களுக்கு திருநாமம் அமைக்கும் முறையை வரமாகக் கோரியதாகக் கதைப்பாடல் வரிகள் அமைகின்றன.

பெரிய முத்தமனுக்கு 'பொருதுவருமுத்து' என்றும், சின்ன முத்தம்மனுக்கு நல்லமுத்து என்றும் நாமம் அமையக் கேட்டதாகப் படைக்கப்பட்டுள்ளது.

போர் செய்ய வரும் கொடிய முத்து பெரியம்மை என்பதும், அதனோடு ஒப்பிட, சின்னம்மை தீங்கு தராத, மரணம் போன்ற கொடிய விளைவுகளைத் தராத அம்மை என்பதும், மக்களால் வேறு பிரிக்கப்பட்டு, அவற்றின் குண விசேடத்தின் அடிப்படையிலும் 'பெரிய' , 'சின்ன' அம்மைகள்என்ற அடைமொழிகளுடன் பெயர் தரப்பட்டுள்ளது. சிவபிரானிடம் அம்மன்களே 'பொருதுவருமுத்து' என நாமம் நல்குமாறு வரம் கேட்டதாகக் கதைப்பாடலில் அமைந்துள்ளமை, இருவேறு அம்மன்களின் குண வேறுபாடுணர்ந்த மக்களின் படைப்பு முறையாகும்.

அம்மை நோய்க் குறிப்புக்கள் அமைந்துள்ள இடங்கள்

'அம்மன் அம்மை நோய் பரப்பிக் கொண்டு பல இடங்களுக்கும் செல்லல்' – என்பதனையே 'கதைப் பொருண்மை' நிலையாக இக்கதைப்பாடல் கொண்டிருப்பினும், குறிப்பிட்ட சில இடங்களில் அம்மை நோய்த் தொடர்புடைய குறிப்புக்களை வெளிப்படையாகவும், மிகுதியாகவும் காணமுடிவதால், அத்தகு இடங்களாக அமைவனவற்றை அம்மை நோய்த் தொடர்புடைய குறிப்புக்களாகக் கொண்டு நோக்க, சுமார் 33 இடங்களில் அத்தகு குறிப்புக்கள் இருத்தலை அறியமுடிகின்றது.

அவ்விடங்களையும், அவற்றில் இடம்பெறும் அம்மை நோய்க் குறிப்புக்களையும் சுருக்கமான முறையில் தந்தால் கீழ்க்கண்டவாறு அமையும் எனலாம்.

வரி எண்கள்	இடம்பெறும் குறிப்புக்கள்
1. 479	அம்மை நோய்க் குணத்தை வெளிப்படுத்தும் அடைமொழி.
2. 516–541	அம்மை நோய் முத்துக்களின் வடிவு, நிற ஒப்புமையும், வகை விபரமும்.
3. 957	பாதுஷாவின் சேனையில் அம்மை நோய் முத்துக்களை விதைத்தல்
4. 961	பல்வகை அம்மை முத்தேந்திச் செல்லல்.
5. 976–983	டில்லி பாதுஷாவின் நாட்டில் கல்லுருதி அம்மை நோய் யானையைத் தாக்கல் கருஞ்சப்பட்டை என்பது குதிரையைத் தாக்கல், மாடு, ஆடுகளும் அம்மை நோயால் மடிதல், மனிதருக்கு மணலுருதி என்ற அம்மை வகை வரல்.
6. 987–997	பாதுஷா ஆண்ட நாட்டு மக்களில் சன்னை (சாடை) சொன்னவர், இரக்கமற்றவர்களை அம்மை நோய் தந்து அழித்தல்.
7. 1194–1195	பெரியம்மை நோய் வந்ததன் பின் சின்னம்மை நோய் வரல்.
8. 1209 – 1255	மதுரையில் அம்மை நோய்
9. 1283	முதலில் சின்னம்மை கண்டதாகக் குறித்தல்.
10. 1339–1343	தென்காசிப் பாண்டியரின் கோட்டை, யானைப்படை, குதிரைப்படைகளில் அம்மை நோய் வரல்.
11. 1348–1350	வடகரையூர், வடகரையாற்றுக்கு

	மேற்கு, வடக்குப் பகுதிகளில் அம்மை முத்துக்களை விதைத்தல்.
12. 1357	பற்பல ஊர்களிலும் முத்தைச் சொரிதல்.
13. 1376–1378	விக்கிரமசிங்கபுரம், மன்னார் கோவிலில் அம்மை முத்துக்களைப் பரப்பல்.
14. 1387	தாமிரவர்ணிச் சங்கு முகம் அடங்கிய பகுதிகளில் அம்மை நோய் வரல்.
15. 1394–1401	திருநெல்வேலியில் அம்மை முத்துக்களைத் தூவுதல்.
16. 1411–1463	சின்னம்மை நோய் மட்டும் கண்ட இடங்கள்.
17. 1483–1484	நாட்டுப்புறம் நாற்பதூரிலும் அம்மை பரப்பல்.
18. 1496–1497	பல ஊர்களிலும் அம்மை முத்தை விதைத்தல்.
19. 1513–1515	குலசேகரப்பட்டணம், மானாடு போன்ற பகுதிகளில் அம்மை நோய் வரல்.
20. 1526–1527	பழவூர், கருங்குளம், வள்ளியூரில் அம்மை நோய் தாக்கல்.
21. 1574–1611	கன்னியாகுமரி மாவட்ட ஊர்களில் கருஞ்சப்பட்டை என்ற அம்மை வகை காணல்.
22. 1628–1636	கருஞ்சப்பட்டை, மண், மணல்வாரி, பனைமுகரன் என்ற அம்மை வகைகளைப் பட்டணத் தெருக்கள் தோறும் பரப்பிக் கொண்டு செல்லல்.

23. 1637–1669	நெல்லை மாவட்ட ஊர்களை அம்மை நோய் தாக்கல்.
24. 1676–1682	பணகுடி, இக்கதைப் பாடலாசிரியர் ஊரான வள்ளியூர், போன்ற ஊர்களில் அம்மை முத்தை விதைத்தல்.
25. 1688–1691	விசைய நாராயணத்தூரில் தொகைக்குள் அடங்காத அளவு அம்மை முத்துக்களைக் கொத்துக் கொத்தாக விதைத்தல்.
26. 1705	திருக்கண்ணநல்லூரில் அம்மை நோய் பரப்பாது நீங்கல்.
27. 1708–1711	ஆனைக்குளத்தில் மண், மணல்வாரி அம்மை வகைகளைப் பரப்பல்.
28. 1747–1748	ஏருபாடி வணிகர் தெருவில் அம்மை நோய் தராது விலகல்.
29. 1813	நம்பியேழூரில் அம்மை நோய் முத்துக்களை விதைத்தல்.
30. 1840–1858	இலந்தையடித்தெரு என்ற ஊரின், வெவ்வேறு தொழில் செய்வோர் வாழும் ஒரோர் தெருவிலும் பெரியம்மை பரவ, அது நீங்குமுன் கனலுருதி போன்ற அம்மை வகைகளும் பரவல்.
31. 1925–1930	வரமங்கை நாட்டைச் சின்னம்மை தாக்கல்.
32. 1936 – 1938	பூதங்கள் ஏற்றி வந்த அம்மை முத்துக்களின் விவரம்

33. 1955–1960 – பல்வேறு வகைப்பட்ட அம்மை முத்துக்களை இரங்காத நெஞ்சர் மீது விதைத்து அவர்களை மண்ணோடு மண்ணாக்கல்.

என்றிவ்வாறாக அம்மை நோய்க் குறிப்புக்களை வகைப்படுத்தலாம்.

அம்மை முத்துக்களின் விபரம்

அம்மன்கள் இருவரும் சிவனிடம் அம்மை முத்துக்களை வரமாகப் பெற்றபோது, எத்தகு முத்து வகைகளையெல்லாம் பெற்று மீண்டனர் எனக் கூறுமுகமாக, அம்மை நோயால் உண்டான கொப்புளங்களின் வடிவம் எவ்வெவ்வாறெல்லாம் இருக்கும் என விவரிக்கப்பட்டுள்ளது.

அம்மை முத்துக்களின் வடிவுக்கேற்ப முத்து, மாணிக்கம், யானைக்கோட்டு முத்து, மேலும் சங்கு, சிப்பி, வேய், வெண்டாமரை, கன்னல், செந்நெல், குன்றிமணி என்ற இவற்றின் முத்துக்களுடனும், இவற்றுடன் கடலை, உளுந்து, துவரை, பெரும்பயறு போன்றவற்றுடனும் உவமிக்கப்பெற்றுள்ளன. (வரி. 521–530, 539–540) (இவைகள் பயத்தம்மை என்ற அம்மை வகையுடன் இணைத்துச் சிந்திக்கத் தக்கன).

நிறம் நோக்கி, சங்கம்பழம், விரிசம்பழம், ஆத்திப்பழம் போன்றவற்றுடனும் (531–533) ஒப்பிடப்பெற்று உரைக்கப்பெற்றுள்ளன.

தவிர, அம்மை நோய் வகைகளின்படி, கொடிய பனைமுகரன், கல்லுருதி, கருஞ்சப்பட்டை, மணல்வாரி, சடையுருதி, வாமாரி (வாயம்மை) (வரி.536–540 போன்றனவும் குறிக்கப்பட்டுள்ளன.

அம்மை நோய் பரவிய விதங்கள்

அம்மன்கள் இருவரும் சிவபிரானிடம் வரமாக அம்மை முத்துக்களைப் பெற்று மீண்டு, வடகயிலை தொடங்கி மலையாளம் வரையுமுள்ள அனைத்து இந்தியப் பகுதிகளிலும் அம்மை முத்துக்களை விதைத்து, அம்மை நோயைப் பரப்பினார்கள் என்ற அமைப்பில் கதைப்பாடல் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. ஆங்காங்கு பல தல

தெய்வங்களை வணங்கியும், சிறு சிறு தெய்வங்களாலும், அவ்விடத்து வாழும் மக்களாலும் வணங்கப்பட்டும், அவர்கள் செய்த பூசை முறைகளை ஏற்றுக் கொண்டும், தல தீர்த்தாடணம் செய்தும், கடந்து வந்து இறுதியில், பட்டபுரம் என்னும் இடத்தில் கோயில் கொண்டதாகக் கதை அமைகின்றது.

அம்மை பரவியதாக அமையும் இடங்களில் 'பரவு முறைகள்' பலவிதங்களில் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

பெரும்பாலான இடங்களுக்கும் பெரியமுத்தம்மன், சின்னமுத்தம்மன் என்ற இரு அம்மன்களும் சேர்ந்தே சென்று பெரியம்மை, சின்னம்மையைப் பரப்பியதாக அமையினும்,

(1) ஒரு சில இடங்களில் பெரியம்மை முதலிலும், பின் சின்னம்மை பரவியதாக அமையும் நிலைகளைக் காணமுடிகின்றது.

"வண்ணமது ராபுரியென் றெண்ணுமந்தப் பட்டணத்தில்
வாய்த்ததிரு வாலேதெய்வத் தீர்த்தமும்வந் தாடியபின்
பின்னர் சின்னமுத்துத்தாயும் பெருங்கடல் படையோடே
பிரிசத் துடனெழுந்து மதுரைப்பதி யில்வந்தார்"

(வரி.1192–1195)

என்ற வரிகளில் பெரிய முத்தம்மன் மதுரைப்பட்டணம் வந்ததன் பின் சின்ன முத்தம்மன் வந்தாள் என்ற கருத்து உரைக்கப்பட்டுள்ளமையின், மதுரைமாநகரில் பெரியம்மை பரவிய பின்னர் சின்னம்மை பரவிய நிலையை இவ்வரிகள் குறிப்பிடுகின்றன எனக் கொள்ள இடமுள்ளது.

(2) வேறுசில இடங்களைப் பார்க்கும்போது அவ்விடங்களில் சின்னம்மை முதலில் பரவிப் பின்னர் பெரியம்மை பரவியது எனக் கருத இடமுள்ளது.

"சின்னமுத்துத் தாய்படையு முன்னேமுத்தைத் தான்விரைக்க"

(வரி. 1283)

என்பதால் சின்னம்மை முதலில் கண்டது என்பது தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

(3) மற்றும் சில இடங்களைப் பார்க்கும்போது அவ்விடங்களில் சின்னம்மை நோய் மட்டுமே பரவியதாக எண்ண இடமுள்ளது.

'வரமங்கை நாட்டில் அம்மை முத்துக்களை விதைப்பாயாக' எனப் பெரிய முத்தம்மன் கூற, சின்னம்மன் விதைத்தாள் என அமையும் இடம் அந்நாட்டில் சின்னம்மை நோய் பரவியிருந்தது என்பதைச் சுட்டுகின்றது எனலாம்.

"சொன்ன போதுநல் சொர்ண வயிரவன்
சின்ன முத்துபொற் சேனையு மானையும்
வண்ண முத்தை வரமங்கை நாடெல்லாம்
கன்னல் முத்தைக் கனக்க விரைத்தனள்"

(வரி.1927–1930)

எனக் கதைப்பாடல் வரிகள் அமையும்.

நெய்வேலியினை அடுத்துக் கம்பையாற்றுக்கு இரு அம்மன்களும் வரும் பொழுது, பெரியம்மன் கம்பையாற்றிலேயே இருக்க, சின்ன முத்தம்மன் மட்டும் கல்லிடைக்குறிச்சி தொடங்கி கருசக்காடு ஈறாக உள்ள பகுதிகளில் அம்மை முத்துக்களை விதைத்துப் பரப்பி, பல காணிக்கைகளையும் சேகரித்துக்கொண்டு, பெரிய முத்தம்மனுடன் கம்பையாற்றில் வந்து சேர்ந்து காணிக்கைகளை அவள் காலடியில் வைத்தாள் என அமையும் பகுதியைப் பார்க்கும் பொழுதும், சின்னம்மன் மட்டும் சென்று வந்ததாகக் கூறும் இவ்விடங்களில் சின்னம்மை நோய் மட்டும் கண்டது எனக் குறிப்பிடுவது கதைப்பாடலாசிரியரின் எண்ணமாகலாம் எனத் தெரிகின்றது (வரி.1411–1459).

(4) சில இடங்களில் பெரியம்மை, சின்னம்மையுடன் வேறு பல்வகையான அம்மை நோய்களும் பரவியதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகரில் இருவகையான பெரிய, சின்ன அம்மைகளுடன் கல்லுருதி, மணலுருதி, பனைமுகரன், செங்கரப்பன், கருஞ்சப்பட்டை, முன்னடைப்பன் என்ற வகைகளும் பரவியமை விளக்கப்பட்டுள்ளது (வரி.1226–1230).

> "பிறந்த குழந்தைமேலும் பிறவாத கெர்ப்பமேலும்
> பிள்ளைதன்னை சிறியவர் பெரிய மனுசர்மேலும்
> கறந்த பசுக்கள்மேலுங் கன்றுமேலுங் காளைமேலும்
> காரிகையாள் மாரிமுத்தைக் கடல்போல தான்சொரிய
> மறைந்தகிடாக் கள்மேலு மறையாத மேதிமேலும்
> வலியசெம் மறிமேலும் மத்துள்ளவெள் ளாட்டின்மேலும்
> மேலான ஆனைமேலும் வெம்புரவி தங்கள்மேலும்"
>
> (வரி.1220–1225)

இவை பரவியதாக விவரிக்கப் பெற்றுள்ளது.

இலந்தையடித் தெருவில் பெரியம்மை பரவ, அது விலகும் முன் கனலுருதி போன்ற அம்மை வகைகள் பரவியதை,1840 முதல் 1958 வரையுள்ள வரிகள் தெரியப்படுத்துகின்றன. [90]

(5) குறிப்பிட்ட சில பகுதிகளில் குறிப்பிட்ட சில அம்மை வகையே பரவியிருந்தது எனக் கருதும்படியான குறிப்புக்கள் சில கிடைக்கின்றன.

சான்றாக, கன்னியாகுமரி, கேரளப் பகுதிகளில் கருஞ்சப்பட்டை என்ற அம்மை வகையே பெருவாரியாகப் பரவியிருந்தது என உணர்த்தும் குறிப்புக்கள் இக்கதைப் பாடலில் உள்ளன.

---

90. "உலகில் பெரியமுத்து விலகிக்கொள்ளும் முன்னேசென்று
கன்னியர் கொண்டாடும் முத்துநாச்சியார் சன்னதிக்கேத்த
காரிகையார் தான்வளருந் தேவதாசியள் தெருவில்
வன்னியர் குறப்படையும் மாடனிரு ளப்பன்துர்க்கை
வளைந்து கனலுருதி மாரிபோல் சொரிந்துகொல்ல
அன்னைய ரிடைத்தெருவும் சாலியர்கைக் கோளர்தெரு
அட்டதிக்குங் கொண்டபல பட்டாடைத் தெருக்கள்தொறும்
மின்னி யிடித்துமழை மேகங்கள் சொரிந்தாப் போலவே
விரைத்தாள் சொரிமுத்தாக" (வரி. 1851-1858).

களக்காடு நாடு தொடங்கி, கோழிக்கோடு வரையுமுள்ள கன்னியாகுமரி, கேரளப் பகுதிகளில் (74 இடங்கள்) (வரி.1570–1611) கருஞ்சப்பட்டை என்ற அம்மை வகையே பரவியிருந்தது என்பது,

"தெரிஞ்சசட்டை முத்துடன் கருஞ்சப்பட்டை விரைத்தாள்" (வரி.1577)

"எரிந்தகருஞ் சப்பட்டை யெட்டுத்திக்கு மேவளைய" (வரி.1586)

"எறக்கக் கருஞ்சப்பட்டை அக்கினிமுத்தாய் விரைத்து" (வரி.1604)

"பரியகருஞ் சப்பட்டை பலமுத்துக் குலமுத்து
கரமனையுங் கொடுத்து" (வரி.1610–1611)

என இடையிடை இப்பகுதியில் குறிப்பிடப்படும் தொடர்களால் விளக்கமுறுகின்றன.

கன்னியாகுமரி, கேரளப் பகுதியைச் சேர்ந்த இவ்விடங்களில் 'கருஞ்சப்பட்டை' என்ற அம்மை வகையே பெருவாரியாகப் பரவியிருந்த செய்தியை மனத்துட் கொண்டு, அதனை வெளிப்படுத்தும் முறையில் இவ்விதம் கதைப்பாடல் வரிகளை ஆசிரியர் அமைத்துள்ளார் எனக் கருத வேண்டியுள்ளது.

(6) குறிப்பிட்ட சில அம்மை வகைகள் மனிதரைத் தாக்கியதாகவும், விலங்கினங்களில் குறிப்பிட்ட ஒவ்வோர் விலங்கினத்தையும் வெவ்வேறு அம்மை வகைகள் தாக்கியதாகவும் குறிக்கப்பட்டுள்ளன.

டில்லி பாதுஷா நாட்டில் பெரியம்மை, சின்னம்மை என்ற அம்மை வகைகள் மனிதர்கள்மேல் வந்தன என்பதை,

"வடிவு முத்து மனிதர்மேல் செல்லவே" (வரி.974)

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

யானைகளைக் கல்லுருதி என்ற அம்மை வகை தாக்கியதையும், குதிரையைக் கருஞ்சப்பட்டை கொன்றதையும், மாடுகள், ஆடுகள் வெப்புருதி, மணலுருதியால் மடிந்ததையும் கதைப்பாடல் வரிகள் சுட்டுகின்றன.

"கொடிய கல்லுருதி ஆனையை வெல்லவே
குதிரைதன்னைக் கருஞ்சப்பட்டை கொல்லவே
குதிரை யானையுஞ் சேனையுந் தானையுங்
கொப்பளங் கொண்டு ஒக்க மடியுதே
சதிருடன் வந்த மாடுக ளாடுமேல்
தாவிக் கோவித்து வேகித்து மோகித்து
அதிரு மன்னன் மணலா யுருதிவெப்பால்
ஆவி போகுது சாகிதுகா ணென்பார்" (வரி.976-983)

என்று குறிக்கப்பட்டுள்ளன.

மேலும், பிறந்த குழந்தை, பிறவாத கர்ப்பம், பிள்ளை, தள்ளை (தாய்) சிறியவர், பெரியவர் என்ற அனைத்து நிலையிலுள்ள மனித இனத்துமீதும் சட்டை முத்து, சொரிமுத்து என்ற அம்மை வகைகளும், செந்நெல்முத்து, கன்னல் முத்து, கமல முத்து, தெரிமுத்து, செல்லமுத்து, நல்லமுத்து என வருணிக்கப்படுகின்ற பெரியம்மை சின்னம்மை கண்டதையும், (இவ்விரு அம்மன்களும் இவ்விதம் விவரிக்கப் படுவதைக் காப்புச் செய்யுளும் 520-531 வரிகளும் தெளிவுறுத்தும்) 1217 முதல் 1223 வரையுமுள்ள வரிகள் சுட்டுகின்றன. 1224 முதல் 1231 வரையுமுள்ள வரிகள் கிடா, மேதி, செம்மறி, வெள்ளாடு ஆனை, புரவி இவற்றின் மேல் கல்லுருதி, மணலுருதி, பனைமுகரன், செங்கரப்பான், கருஞ்சப்பட்டை, வெப்புருதி, முதலிய அம்மை வகைகளும் அடைப்பானும் வந்ததைக் குறிப்பிடுகின்றன.

(7) சில இடங்களை அம்மை நோய் தாக்காதும் விட்டது எனக் குறிப்பிடும் கருத்துக்களையும் காணமுடிகின்றது. அவ்விடங்களில் அம்மைநோய் பரவாதிருந்த நிலைகளை மனத்துட்கொண்டு,அம்மன் அவ்விடங்களில் அம்மை நோய் பரப்பாது விட்டுச் சென்றாள் என அமைத்துக் கதைப்பாடலாசிரியர் பாடினார் எனலாம்.

"ஒன்னார் துதிக்கின்ற கண்ணநல் லூரிலே
உலகம்மனைக்கண்டு விலக்கினாள் முத்தை"
(வரி.1704-1705)

என்ற வரிகள் உலகம்மன் கோயில் கொண்டுள்ள கண்ண

நல்லூரில் முத்தாரம்மன் அம்மை முத்துக்களை விதைக்காது, அவ்வூரிலுள்ளோருக்கு அம்மை நோய் தந்து வதைக்காது விட்டு நீங்கிச் சென்றாள் என்பதனைப் புலப்படுத்துகின்றன. இதனால் இக்கதைப் பாடல் எழுந்த காலகட்டத்தில் கண்ணநல்லூரில் அம்மை நோய் பரவாதிருந்திருத்தல் வேண்டும் என்பதும், இதனைக் கண்ணநல்லூரில் உலகம்மன் குடி கொண்டுள்ளதால் அவள் எல்லைக்குள் முத்தாரம்மன் தன் ஆட்சியின் உக்கிரத்தைக் காட்ட விரும்பாததனாலேயே அம்மை நோய் பரவவில்லை என்ற நிலையில், மக்களின் அத்தகு நம்பிக்கை நிகழ்ச்சியைக் கதைப்பாடலாசிரியர் பாடினார் என்பதும் தெளிவாகின்றது.

ஏருபாடியிலுள்ள வணிகர் தெருவிலும் அம்மைநோய் பரவவில்லை என்பதனை 1729–1748–ஆம் வரிக் குறிப்புக்கள் தெரியப் படுத்துகின்றன.

"விறல்வணிகர் தெருவிலே வந்திருந் தாளே

விறல் வணிகரை வாழ்ந்திருக்க வேசொல்லி" (வரி.1748–49)

என்ற வரிகளின் பொருளை நோக்கும் பொழுது அம்மை நோய் தந்து அவர்களை வதைக்காது 'சிறப்பாக வாழ்ந்திருங்கள்' என்று கூறி நீங்கினாள் என்பது தெரிகின்றது.

இந்தக் குறிப்பிட்ட தெருவில் மட்டும் அம்மைநோய் பரவாதிருந்திருத்தல் வேண்டும். அதனை மக்கள் அத்தெருவிலுள்ளோரை மட்டும் நல்லபடியாக வாழ்க என்று அம்மன் வாழ்த்திச் சென்றுவிட்டாள் போலும் எனப் பேச, அதனையே கதைப்பாடலாசிரியரும்அம்முறையிலேயே பாடலில் அமைத்தார் எனலாம்.

(8). அம்மன் குறிப்பிட்ட இடத்தில் அம்மை நோயைப் பரப்புமுன் அத்தல தெய்வங்களிடம் முன்கூட்டியே தெரிவித்துக்கொண்டு, பின்னர் அம்மை முத்துக்களை விதைத்ததாகவும் குறிப்புள்ளது. மதுரையில் சொக்கர் துர்க்கையைப் பணிந்து, "போத முத்தை விரைக்கிறேன்" என வேத முத்து உரைத்துவிட்டு விதைத்ததாகக் குறிப்புள்ளது. (வரி.1208–1209).

இது, தலத்தில் சக்திவாய்ந்த தெய்வங்களிலிருந்தும் அம்மை நோய் பரவியது ஏன்? என்று சிந்தித்துப் பார்த்த மக்கள், அத்தல தெய்வங்களிடம் கூறி முன் அனுமதி பெற்றுக்கொண்டே, அம்மன் அம்மை முத்துக்களை விதைத்தாள் எனக்கருதி மனச் சலனம் கொண்டதன் விளைவாதல் வேண்டும் இவ்வமைப்பு.

(9). பற்பல ஊர்களிலும் அம்மை நோய் பரவியிருந்தது என ஊர்ப் பெயர்களையும் குறிப்பிட்டுக் கொண்டு சென்றாலும் குறிப்பிட்ட சிலர் மீது அம்மைநோய் பரவியது என அமையும் அமைப்புக்களையும் பார்க்க முடிகின்றது.

"சன்னை சொன்னவர் தங்களைக் கொல்லுதே" (வரி.990)
"மன்று தன்னி லிரங்காத நெஞ்சரை
மாய முத்தை விரைத்து மண்ணாக்கினாள்" (வரி.1559-1560)
"இரங்கி நின்றவர் தங்களைக் காத்தனள்
இரக்க மத்தவர் தங்களைத் துரத்தினாள்" (வரி.994-995)
"ஒரங்கள் சொன்னவர் ஒக்க மடியுதே" (வரி.998)
"இளகாத நெஞ்சரையு மிரங்காத வஞ்சரையும்
எட்டு லெச்சம் பூதம்விட்டுக் கெட்டுலெச்சை யேகெடுத்து
பழகாத் தெருநெல்வேலி பட்டணத்துள் ளோர்பதறப்
பாரிய முத்தைவிரைத்து மாரியேகோத் தலர்தூவ"
(வரி.1308-1401)

என்றும் அமைகின்ற வரிகள் இத்தகு குணங்கள்கொண்டோரை அம்மை நோய் தாக்கியது என்ற பொருள்பட அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகையோர் உள்ளதாலேயே அம்மை நோய்வருகிறது என்றும், இத்தகு குணக் கேடுள்ளவர்களைத் தண்டிக்கவே அம்மன் அம்மை நோயைத் தருகிறாள் என்றும், இத்தகு குணங் கொண்டோரையே அம்மை நோய் தாக்கும் என்றும், மக்கள் நம்பிய நம்பிக்கையினை அடியொற்றி அமைக்கப்பட்டனவாதல் வேண்டும் இத்தகு வரிகள்.

(10). அம்மை நோய் பரவிய இடங்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கொண்டு செல்லலை இக்கதைப்பாடலில் சீர்மையாகப் பின்பற்றி யிருப்பினும், சிற்சிலஇடங்களில் 'பற்பல ஊர்களிலும் அம்மை நோய் பரவியது, பட்டி, தொட்டிகளிலும் இந்நோய் பரவிக்கொண்டு சென்றது' என்றிவ்வாறாகப் பெயர் குறிப்பிடாமல் அமைந்துள்ள

இடங்களையும் காண இயலுகின்றது.[91]

மிகச் சிறிய ஊர்களிலும், ஊரென்று குறிப்பிடுமளவுக்கு வளர்ச்சி பெறாத சில வீடுகளைக் கொண்ட பகுதிகளிலும் கூட அம்மைநோய் பரவியிருந்தது என்பதைப் பெயர் குறிப்பிடாமல் அமைத்துச் சென்ற இத்தகு வரிகள் தெளிவுறுத்துகின்றன எனலாம்.

அம்மனும், பிற நோய்த் தொடர்பும்

அம்மை நோய்க்குரியவளாக அம்மன் அமைக்கப்பட்டிருப்பினும், பிற நோய்களுக்குரியவளாகவும் பிற அம்மன் கதைப்பாடல்களில் காட்டப்பட்டுள்ளதைப் போல, இக்கதைப் பாடலிலும் செங்கரப்பான், காய்ச்சல், அடைப்பான் என்ற நோய் வகைகளையும் அம்மன் தந்ததாக உரைக்கப்பட்டுள்ளது.

"கொல்லுருதி செங்கரப்பான் குளிர்க்கருஞ் சப்பட்டை
நாலா விதத்துடனே காச்சல்வெப்பு முன்னடைப்பன்
நடுங்கப் பதறிடவே நாலுதிக்கு மேபார்க்க"

(வரி. 1229 – 1231)

என அமையும் வரிகளைச் சுட்டிக் காட்டலாம்.

அறியவரும் கருத்துக்கள்:-

(1) அம்மை நோய் பரவியிருந்த காலகட்டத்தில், மக்களைக் குவியல், குவியலாகக் கொன்று கோர நர்த்தனம் ஆடிய அம்மை நோயைக் கண்ட நாட்டுப்புறங்களில் வாழும் எளிய மாந்தர்கள், எதனால் இது வருகின்றது என்ற காரணமும் புரியாமல், எவ்வாறு இதனைத் தடுப்பது என்று தடுக்கும் முறையும் அறியாமல் திணறி, இறுதியில்

---

91. "பாத்தாள் பலப்பல வூர்தோறு முத்தைச் சொரிந்தாள்" (வரி.1357).
"பழுதில் லாத பலப்பல வூர்தோறும்
பாங்கடல் முத்தைத் தான்விரைத்தா ளம்மன்" (வரி 1496-1497
"பின்னடந்த பட்டிதொட்டி வீரராசா வின்பாளையம்" (வரி.1288)
"குப்பம்குப்ப மாகமுத்தை ஒப்பமாய் விரைத்துக் கொண்டு (வரி.1872)

தங்களின் அநீதியான குணக்கேடுகளைக் கண்டு பொறாத, தாங்கள் வணங்கும் தாய்த் தெய்வமே தங்களைத் தண்டிப்பதற்காக இவ்வாறு அம்மை நோயைத் தருகிறாள் எனத் தீர்மானித்து, அவளை வணங்கி வேண்டிக் கொண்டாலே இந்நோய் தீரும் என்று உறுதியாய் நம்பி, அவளுக்கு விழா எடுத்து, அவள் சினம் தணிவிக்குமாறு, அவள் புகழைச் சிறப்பித்துப் பாடும் நோக்குடன், அவள் பிறந்து வளர்ந்து, தவம் செய்து அம்மை நோயைப் பரப்புவதற்காக, அம்மை முத்துக்களையே வரமாகப் பெற்று, நாடு முழுவதும் பரப்பினாள் என்ற முறையில், தங்கள் நம்பிக்கை அடிப்படையில் அமைந்த அவள் வரலாற்றை, தங்களுக்கே உரிய எளிய நடையில், இசையொழுங்குடன் கதைப் பாடலாக யாத்தனர் எனக் கருத இடம் தருகிறது இக்கதைப்பாடல். விழாக் காலங்களில் இத்தகு கதைப்பாடலைப் பாடுவதன் நோக்கம் அம்மை நோய் தந்து வதைக்காது 'எங்களைக் காப்பாற்று' என்று வேண்டிக் கொள்ளவும், தம்கால, தம் வருங்கால சந்ததியினருக்கு அம்மனின் பராக்கிரமத்தை எடுத்து இயம்பவேண்டும் என்பதனாலுமாகும்.

(2) அம்மை நோய் பரப்புவதே நாட்டின் மருள்நீக்கி அருள் விளங்கச் செய்வதற்கும் [92] மக்களில் தீக்குணங்கள் கொண்டோரை அழித்து நற்குணங்கள் பெற்றவரை வாழவைத்துப் பூவுலக வாழ்க்கையைச் சீர்படுத்தவுமே [93] என்ற எண்ணங்கள் மக்கள் மனத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தமையைக் கதைப்பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

---

92 "மருள்செய்யு மருளைநீக்க
மலங்கிடு மலக்கந் தீர்க்க
வெருள்செய்யும் வெருளைநீக்க
வேண்டிய வரந்தா மெய்யா"

(வரி.465-468)

93. "இரங்கி நின்றவர் தங்களைக் காத்தனள்
இரக்க மத்தவர் தங்களைத் துரத்தினாள்"

(வரி.994-995)

"மன்று தன்னி லிரங்காத நெஞ்சரை
மாயமுத்தை விரைத்து மண்ணாக்கினாள்"

(வரி.1959-1960)

(3) அம்மன் பல இடங்களிலும் அம்மை நோய் பரப்பிக்கொண்டு செல்ல, அம்மை நோயின் தீவிரம் கண்ட மக்கள் அஞ்சி நடுங்கி அம்மனுக்குப் பொங்கலும், பூசையும், பலியும் அளித்து அவளை மகிழ்விக்க, அவற்றை ஏற்றுக்கொண்டு அம்மன் பின் வேறு இடங்களுக்குச் செல்லல் என்ற இம்முறைகளே கதைப்பாடல் நிகழ்ச்சிகளின் மையக் கருத்தாக உள்ளது.

ஏற்றுக் கொள்ளாத, பிறமதம் சார்ந்த டில்லி பாதுஷாவின் ஆளுகைக் குட்பட்ட பகுதிகளை அம்மை நோய்க்காட்படுத்தி, அம்மனுக்குகந்த முறையில் பாதுஷாவைப் பூசை, பொங்கல் முதலியன செய்ய வைத்து அவனையும், அவனது நாட்டு மக்களையும் தன் ஆளுமைக்காட்படுத்திய வரலாற்று நிகழ்ச்சி குறிக்கப்பெற்றுள்ளது. அம்மை நோய் பரவிய கால கட்டத்தில் தாங்கள் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருப்பினும், பெரும்பான்மையினராக இருந்த இந்து சமய மக்களெல்லாம் இது தாங்கள் வணங்கும் அம்மனால் வருகிறதென நம்பி, அவளுக்கேற்ற முறையில் வழிபாடு செய்ய, சிறுபான்மையினராய இஸ்லாம் இனத்தவர்களும் அம்மை நோய் அம்மனால் வருகின்றதென்ற அந்தக் கருத்துக்காட்பட்டு, இந்துக்கள் செய்த அதே வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி அம்மனைத் துதித்திருக்கின்றனர் என்பதும் இக்கதைப்பாடல் மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

(4) அம்மை முத்துக்களின் வடிவு, நிறத்துக்கியை, பல பொருள்களோடும், அம்மை நோயின் தன்மை, வரும்விதம், உடலைப் பாதிக்கும் முறைகள் என்பனவற்றுக்கேற்பவும் அம்மை நோய் பல வகைகளாக அமையினும், இரு முக்கிய, பெருவாரியாகத் தாக்கிய அம்மைகள் என்ற நிலையில் பெரியம்மை, சின்னம்மை என்பன அமைய, அவற்றுக்குக் காரண கர்த்தாக்களாக, பெரிய முத்துக்களை, ஆழமான வடுக்களைத் (பெரியம்மை) தருபவளுக்குப் பெரிய முத்தம்மன் என்றும், சிறிய, வடுவற்ற முத்துக்களைத் (சின்னம்மை) தருபவளாகச் சின்னம்மன் என்பவர்களையும் படைத்து வணங்கியிருக்கின்றமை தெரிகின்றது.

(5) அம்மன் தொடர்பாய எல்லாக் கதைப்பாடல்களிலுமே அம்மன் அம்மை நோய்த் தொடர்புடையவளாகவே படைக்கப்பட்டிருக்கின்றாள்.

(6) பல அம்மன் கதைப்பாடல்களிலும் அம்மை நோய்க்குரியவள் அம்மன் என்ற நிலையில் ஓரம்மனே படைக்கப்பட்டிருக்க, பதிப்பிக்கப் பெற்றுள்ள அம்மன் கதைப்பாடலில் பெரியம்மைக்குரியவள் பெரிய முத்தம்மன் என்றும், சின்னம்மைக்குரியவள் சின்ன முத்தம்மன் என்றும் வேறுபடுத்தி இரு அம்மன்களாகப் படைத்துள்ளமை இரு அம்மை வகைகளை வேறுபடுத்தி அறிந்தபின், இருவேறு அம்மன்களாகப் படைக்கலாம் என்று கருதி அமைத்த எண்ண வளர்ச்சியைக் காட்டுவதான், பிற அம்மன் கதைப்பாடல்களினும் இது காலத்தால் பிற்பட்ட நிலையினது என்ற உண்மை புலனாகின்றது.

(7) அம்மை நோய்க்கு மட்டுமன்றி, அம்மை போன்று மிகு வேதனையையும், கொடிய விளைவுகளையும் தரும், வேறு பிற நோய்களுக்கும் அம்மனே காரணம் என்றும், அவளாலேயே அவற்றை நீக்க இயலும் என்றும் தொடர்புபடுத்திக் கண்டிருக்கின்றனர்.

(8) அம்மை நோய் யாரை, எங்கு, எவ்விதத்தில், எவ்வம்மையாகித் தாக்கியது என்பதும், எங்கு தாக்காது, ஏன் விட்டது என்பதும், மனிதர்களை எவ்வித அம்மைதாக்கியது? விலங்குகளை அதிலும் குறிப்பிட்ட எவ்வெவ் விலங்கினத்தை எவ்வகை அம்மை தாக்கியது என்பதும், எவ்விடத்தில் எவ்வகை அம்மை மட்டுமே பரவியது என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை உறுதியாகப் புலவரின் கற்பனையாக இருத்தல் இயலாது. அம்மை நோய் எவ்வெவ்விடத்தில், எவ்விதம் யாரைத் தாக்கியது என்பதையெல்லாம் பிறர் வாய் கேட்டு, நுணுகி உணர்ந்தபின் கதைப்பாடலில் அவற்றைத் தக்க முறையில் சமூக வரலாற்றுக் குறிப்புக்களாக இணைத்துப் பாடியுள்ளார் என்றே கருதத் தோன்றுகிறது.

முத்தாரம்மன் கதையில் இடப்பெயர்கள்

கதைப்பாடல்களுக்கென்று சில மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. இத்தகு மரபு நிலைகளில் 'பெயரடுக்கி வருதல்' என்பதனையும் ஒரு மரபாகவே கதைப்பாடல் ஆசிரியர்கள் பின்பற்றியுள்ளமையை, பல கதைப்பாடல்கள் தெளிவுபடுத்து கின்றன. ஊர்கள், ஆட்கள், ஆடை, அணிகலன் என்ற இவற்றின் பெயரடுக்கிக் கூறலாக இத்தகு மரபு அமையும். கதைப்பாடல் வகைகளான இதிகாச, புராண, சமூக, வரலாற்று, தெய்வீகக் கதைப் பாடல்களில், வரலாற்றுக் கதைப்பாடல்களிலேயே ஊர், ஆட்பெயர் அடக்கல்களைச் சிறப்பாகக் காணமுடிகின்றது.

அரசர்கள், குறுநில மன்னர்கள் போன்றவர்கள் படையெடுத்துச் செல்லும்போது,

1. அவர்களின் படைகள் கடந்துசென்ற ஊர்களைக் குறிப்பிடும் முறையிலும்,
2. அவர்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் எவையெவை எனக் கூறும் முறையிலும்,
3. போரில் கைப்பற்றிய பகுதிகள் யாவை எனத் தெரிவிக்கும் முறையிலும்,
4. குறிப்பிட்ட மன்னனின் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்கள் யாவர் எனக் கூறும் முறையிலும்

ஊர்ப்பெயர்கள், ஆட்பெயர்கள் இடம்பெறுதல் வரலாற்றுக் கதைப்பாடல்களில் முக்கியத் தேவையுமாகி விடுகின்றது.

இராமப்பய்யன் அம்மானையில் 78 ஊர்ப்பெயர்களும், கான்சாகிபு சண்டையில் 69 இடப்பெயர்களும் இடம்பெடற்றுள்ளன. மேலும் இராமப்பய்யன் அம்மானையில் 62 குறுநில மன்னர் பெயர்களும், கான்சாகிபு சண்டையில் 18 குறுநில மன்னர் பெயர்களும் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

வரலாற்றுக் கதைப்பாடல்களினை அடுத்து சமூகக் கதைப் பாடல்களில் ஊர்ப் பெயர்கள் இடம்பெறல் அமைந்து இரண்டாம் இடம் வகிக்கின்றது எனலாம். கதை மாந்தர்கள் எந்தெந்த ஊர்களை யெல்லாம் கடந்து எங்கு சென்றனர் என்ற முறையில் ஊர்ப்பெயர் அடுக்கல் இடம்பெறுதலுண்டு. ஆயின் இவை எல்லாச் சமூகக் கதைப்பாடல்களிலும் இடம்பெற்றே தீரும் எனக் கருத இயலாது.

வரலாற்றுக் கதைப்பாடல்களில் பெருவழக்காகவும், சமூகக் கதைப் பாடல்களில் சிறுபான்மையாகவும் இடம்பெற்றுள்ள 'ஊர்ப்பெயர் அடுக்கல்' என்ற மரபு தெய்வீகக் கதைப்பாடல்களில் அமைதல் அரிதே.

பதிப்பிக்கப் பெற்றுள்ள முத்தாரம்மன் கதையில் இடப்பெயர்கள் பெறும் இடம்:-

தெய்வக் கதைப்பாடல்களில் ' இடப்பெயர் அடுக்கல்' அமைதல் அருகிய வழக்கே. அவ்வருகிய வழக்காகத் தெய்வக் கதைப்பாடலாகிய இம்முத்தாரம்மன் கதையில் இடப்பெயர் அடுக்கல் அமைந்து சிறந்துள்ளதைக் காண இயலுகின்றது.

பிற தெய்வக் கதைப்பாடல்களிலும், பிற முத்தாரம்மன் கதைப்பாடல்களிலும் காண இயலாத தன்மையில், பதிப்பிக்கப் பெற்றுள்ள இம் முத்தாரம்மன் கதைப்பாடலில் இடப்பெயர்கள் இடம்பெறுதலுக்கு என்ன காரணம் என்பதனைக் காணவேண்டியது அவசியமாகிறது.

1) கதைப்பாடல் மரபுகள் பிற்காலக் கதைப்பாடல்களிலேயே முறையாகவும், விரிவாகவும் பின்பற்றப்பட்டுள்ளன. கதையினை விடவும் கதைப்பாடல் மரபுகள் முனைப்பாகத் தெரிவதைப் பிற்காலக் கதைப்பாடல்களில் சிறப்பாகக் காண இயலும். சில கதைப்பாடல்களைக் காணும்பொழுது கதைப்பாடல் மரபுகளைப் பயன்படுத்த ஏற்றவாறே கதையைத் தெரிந்தெடுத்தனரோ என்ற எண்ணமும் எழுமாறு கதைப்பாடல் மரபுகளே கதைப்பாடல் நிகழ்ச்சிகளாக விரிந்து, கதையாக அமைந்திருத்தலையும் காண இயலுகின்றது. இதே முறையில் கதைப்பாடல் மரபுள் ஒன்றாய 'இடப்பெயர் அடுக்கல்' என்ற மரபு அம்மன் கதைப்பாடல்களில் பிந்தைய காலகட்டத்திலெழுந்த இம்முத்தாரம்மன்

கதைப்பாடலில் சீராக, விரிவாகக் கடைப்பிடிக்கப்பட்டு, ஊர்ப் பெயர் அடுக்கல் மரபே கதைப்பாடல் நிகழ்ச்சிகளாகவும் அமைந்து சிறந்துள்ளது எனலாம்.

2) 'அம்மை நோய் பல ஊர்களுக்கும் பரவல்' என்ற கதைக் கருவுக்கு ஏற்றவாறு 'ஊர்ப்பெயர் அடுக்கல்' அமைதல் தேவையானதாகவும் உள்ளதால் இடம்பெற்றுள்ளது.

3) அம்மன் வழிபாடு பல இடங்களிலும் பரவியிருத்தற்குத் தக, அங்கெல்லாம் அம்மன் பவனியாகச் சென்றாள் என அமைத்தலுக்குப் பொருத்தமாக ஊர்ப்பெயர்கள் இடம்பெறல் அமைகின்றது எனலாம்.

4) ஒரு குறிப்பிட்ட ஊரில் அம்மனுக்கு விழா எடுக்கும்போது, சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் பெருவாரியான மக்கள் விழாக்கோலம் காணவும், அம்மனைத் தரிசனம் செய்யவும் வருவதுண்டு. அவர்கள் அம்மனின் சிறப்பைப் பற்றிப் பேசும் வில்லுப்பாட்டினைக்கேட்க அவாவுதலுண்டு. அப்போது கதைப்பாடலில் தம் ஊர்பெயரும் இடம்பெற்று, தங்கள் ஊருக்கும் அம்மன் வந்தாள் என்ற முறையில், கதையில் தங்கள் ஊர்ப்பெயர் இடம்பெறின் மகிழ்வும், கதையினை மீண்டும் மீண்டும் கேட்க ஆவலும் கொள்வதுண்டு. இதற்காக இவ்வம்மன் கதைப்பாடலில் பல ஊர்களையும் இணைத்துப் பாடும் நிலை அமைந்து சிறந்தது எனலாம்.

5) இவ்வம்மன் கதைப்பாடல் வில்லுப்பாட்டு வடிவில் பாடப்படுவதாதலின், வில்லுப் பாட்டாகப் பாடுபவர்கள் அம்மன் குடிகொண்டுள்ள பல ஊர்களுக்கு சென்று கதைப்பாடலைப் பாடுவர். ஆதலின், கதைப்பாடலில் பல ஊர்ப்பெயர்களும் அமைந்து அவ்வவ்வூர் மக்களுக்குப் பெருமை ஏற்படும் விதத்தில் அமையுமாறும் இவ்வாறு ஊர்ப்பெயர்களை இணைத்தனர் எனலாம்.

6) கதைப்பாடலில் ஊர்ப்பெயர்களை அடுக்கிக் கூறல் தேசீய ஒருமைப்பாட்டுணர்வைக் காட்டும் நோக்குடனும் அமைக்கப்படுகின்றது எனலாம்.

7) அம்மன் வழிபாடு இவ்வாறு பல்வேறு ஊர்களிலும் கால்கொண்டிருந்தது என்பதனைக் குறிப்பித்துக் காட்டவும், இக்கதைப்

பாடலில் ஊர்ப்பெயர் அடுக்கல்கள் அமைக்கப்பட்டுள்ளன எனலாம்.

8) ஆசிரியரின் பூகோள அறிவை, பல ஊர்களையும் குறித்து அறிந்தவர் என்ற தன்னுணுக்க அறிவை வெளிக் காட்டுவதாகவும் ஊர்ப்பெயர் அடுக்கல் முறை இக்கதைப்பாடலில் அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

9) பலவூர் சுற்றி வந்தவர் என்று கூறல் மூலம், அம்மனின் பெருமையை உயர்த்திக் காட்டவும், ஊர்ப்பெயர் அடுக்கல் உருவாக்கப்பட்டுள்ளது எனலாம்.

10) பல ஊர்ப்பெயர்களையும் அடுக்கி விரைவாக இசை நயத்துடன் கூறல் மூலம் மக்களைப் பிரமிப்புக்குள்ளாக்கி, வியப்புச் சுவையை உருவாக்கும் நோக்குடனும் ஊர்ப்பெயர் அடுக்கல்களை அமைத்துள்ளார் எனலாம்.

11) இவ்வாறு இந்தியா முழுவதும் அம்மை நோய் பரவியிருந்தது என்ற வரலாற்று உண்மையைத் தெரிவிக்கும் முகமாகவும்,ஊர்ப்பெயர் அடுக்கல் மரபு பொருத்தமுறக் கையாளப்பட்டுள்ளது.

12) சைவ, வைணவம் என்ற இருவேறு சமயத்தாரும் அம்மன் கதைப் பாடல் கேட்க வருவர் என்பதான் சைவ, வைணவக் கோயில்கள் என்று சமய வேறுபாடின்றி, அனைத்து ஆலயங்களுக்கும் அம்மன் சென்றாள் என்பதால், இரு சமயப் பொதுமை கொண்டவளாக அம்மனும், கதைப்பாடலும் அமைந்து, பெருவாரியாக மக்கள் ஆதரவைப் பெறும் என்ற எண்ணத்துடனும் இக்கதைப்பாடலில் ஊர்ப்பெயர் அடுக்கல் அமைந்து சிறக்கிறது எனலாம்.

13) முன்பு கதைப்பாடலில் சில தேவைகள் கருதி, முக்கியமாகக் கதைப்பாடலின் நிகழ்ச்சிக்கு அவசியம் என்பது கருதி, இடப்பெயர்கள் இடம் பெற்றிருக்க, பின்னர் இது மரபாகவே ஆகிவிட்டிருக்கிறது. பின்னால் வந்த கதைப்பாடல்களில் இது தவறாமல் கடைப்பிடிக்கப்பட்டுப் பின்னர் இவ்வாறு ஊர்ப்பெயர் அடுக்கலுக்கு உகந்த வகையிலுள்ள கதைக்கருக்கள் கொண்டனவும் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கதைப்பாடலாகப் பாடப்பட்டுள்ளன.

இத்தகு கதைப்பாடலுக்குச் சான்றாக இவ்வம்மன் கதைப்பாடல் அமைகிறதென்றும் கொள்ள இடமுள்ளது. இக்கதைப் பாடலைக் காணும்போது, 'ஊர்ப்பெயர் அடுக்கல்' என்ற கதைப்பாடல் மரபின் முனைப்பை அறிய இயலுகின்றது. நூலின் முக்கால் பாகமும் இம்மரபின் அடிப்படையில் அமைந்த நிகழ்ச்சித் தொகுப்புக்களாகவே உள்ளன.

இடம்பெறும் முறை

1) பதிப்பிக்கப் பெற்றுள்ள முத்தாரம்மன் கதைப் பாடலில் மொத்தம் 370 இடப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. கதையில் கூறப்பட்டுள்ள முறைப்படியும், (இதில் வழங்கும் பெயர், பெயரின் சரியான வடிவம் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன). அகரவரிசைப் படுத்தியும் அமைத்த ஊர்ப் பெயர்களின் அட்டவணை பின்னணைப்பில் தரப்பட்டுள்ளது.

2) வடபகுதியினின்றும் தென் தமிழ்நாடு, கேரளம் வரையுள்ள இடப்பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3) வடபகுதி ஊர்ப்பெயர்கள் பரவலாகவும், தென்தமிழ்நாட்டு இடப்பெயர்கள் சற்று விரிவாகவும், நெல்லை, கன்னியாகுமரி, கேரள மாவட்ட ஊர்ப்பெயர்கள் மிக விரிவான முறையிலும் இடம்பெற்றுள்ளன.

4) ஊர்ப்பெயர்கள் 332–ம், மலைபற்றிய பெயர்கள் 14–ம், ஆறு குறித்த பெயர்கள் 8–ம், தீர்த்தப் பெயர்கள் 11–ம், இரண்டு வனப் பெயர்களும், சமாதி, வாய்க்கால், தீவு போன்ற இடப்பெயர்கள் மூன்றும் ஆகமொத்தம் 370 இடப்பெயர்கள் அமைந்துள்ளன. மலை, ஆறு, தீர்த்தம், வனம், சமாதி, தீவு, வாய்க்கால் போன்றவற்றின் பெயர் வரிசை வரி எண்ணுடன் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

5) அம்மன்கள் இருவரும் ஊர்கள்தோறும் அம்மை நோய் பரப்புவதாகவும், மலை, ஆறு, வனங்களைக் கடந்து வருவதாகவும், தீர்த்தங்களில் நீராடுவதாகவும் கதை நிகழ்ச்சிகள் அமைந்து, இவ்வாறாக ஊர்கள், மலை, ஆறு, தீர்த்தம், வனங்களின் பெயர்கள் உரைக்கப்பட்டுள்ளன.

6) நெல்லை, கன்னியாகுமரி, கேரளப் பகுதிகளைச் சேர்ந்த

ஊர்கள் குறித்து மட்டும் விரிவாக இக்கதைப் பாடலில் காணப்படுதலுக்கு நெல்லை, கன்னியாகுமரி எல்லையிலமைந்த வள்ளியூர்ப் புலவரால் இக்கதைப்பாடல் இயற்றப்பட்டிருத்தல் காரணமாகலாம். ஆசிரியர் தாம் நன்கு அறிந்த இப்பகுதியைச் சேர்ந்த ஊர்களை விரிவாகத் தம் கதைப்பாடலில் அமைத்துள்ளார் எனலாம்.

7) இக்கதைப்பாடலில் ஊர்ப்பெயர்களைக் குறிப்பிடும் பொழுது, உள்ள ஊரின் பெயருடன் 'ஊர்' என்பதனை இறுதியில் சேர்த்துக்கொள்ளும் போக்கைக் காணமுடிகின்றது. இது இக்கதைப்பாடலைப் பாடிய ஆசிரியரின் தனிப்பட்ட நடைப்போக்காகவும், மக்கள் பேச்சு வழக்கில் இவ்வாறு உள்ள ஊர்ப்பெயர்களுடன் ஊர் என்பதனையும் இணைத்து வழங்கும் வழக்கமிருத்தல் கூடும் என்பதும், ஓசை நயம் கருதி இவ்வாறு அமைக்கப்பட்டது என்பதும் புலப்படுகின்றது.

கீழே கதைப்பாடலில் ஊர்ப்பெயர்கள் அமையும் விதம் தரப்பட்டுள்ளது. இவ்வூர்ப் பெயர்கள் ஊர் என்று மிகுத்துச் சொல்லிய சொல்லுடன், வரி எண்ணுடன் அமைந்துள்ளன. தொடர்ந்து அடைப்புக்குள் இன்று வழக்கில் வழங்கிவரும் அதே ஊர்ப்பெயரின் வடிவம் தரப்பட்டுள்ளது.

மேலகரத்தூர் (1332) (மேலகரம்)
வடகரையூர் (1350) (வடகரை)
திப்பணம்பட்டியூர் (1353) (திப்பணம்பட்டி)
கல்லிடைக்குறிச்சியூர் (1416) (கல்லிடைக்குறிச்சி)
முக்கூடலூர் (1445) (முக்கூடல்)
ஈசாந்திமங்கலத்தூர் (1641) (ஈசாந்திமங்கலம்)
தோவாளையூர் (1668) (தோவாளை)

இவைபோன்று பதி, நாடு, சீமை என்ற மிகையான சொற்களுடனும் ஊர்ப்பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கருவைப்பதி (1865)
களந்தைப்பதி (1821)
தருவைப்பதி (1821)
தருவைப்பதி (1869)

பாரமங்கைப்பதி (1989)
களக்காடுநாடு (1570)
ஊத்துமலை நாடு (1440)
எட்டமான் சீமை (1441)

என்ற இவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம்.

8) உள்ள ஊர்ப்பெயரை உள்ளவாறு குறிப்பிடாது (1) இலக்கிய நயத்துடனும், (2) பேச்சு வழக்கில் உள்ளபடியும், (3) ஊரின் பழைய பெயரைக் கொண்டு பெயர் குறிப்பிடலும் காணப்படுகின்றது. கீழே கதைப்பாடலிலுள்ள பெயரும், அடைப்புக்குள் உண்மையான பெயரும் தரப்பட்டுள்ளன.

சேரநங்கையூர் (சேரன்மாதேவி)
செவ்வலூர் (1428) (இடைசெவல்)
கல்லுக்கு மேற்குள்ள வூர்? (1431)
கன்னியா குமரி (1543) (கன்னியாகுமரி)
தென்சிவிந்தைப்பதி (1557) (சுசீந்திரம்)
அனந்தேசரூர் (1603) (பத்மநாபபுரம்)
சிவிந்திரந் தேரூர் (1603) (சுசீந்திரம் தேரூர்)
ஏருபாடி (1729) (ஏருவாடி)
கருவைப்பதி (1865) (கரிவலம்வந்த நல்லூர்)
களந்தைப்பதி (1821) (களம்பூர்)
எட்டமான் சீமை (1441) (எட்டயபுரம்?)
வீரராசாவின் பாளையம் (ராஜபாளையம்)
அனந்தேசரூர் (திருவனந்தபுரம்)

9) சில இடங்களில் ஊர்ப்பெயர் குறிக்காது, மொத்தமாக அடக்கிக் கூறுகின்ற முறையும் பின்பற்றப்பட்டுள்ளது.

தெற்கு வடக்கு மலையாளம் (1656), நாஞ்சினாடு (1657), என அமைவனவற்றைச் சான்று காட்டலாம்.

10) சிலவிடங்களில்,

ஒன்பது திருப்பதி (1388)
பலப்பலவூர் (1496)

பட்டிதொட்டி (1288)
குப்பம் குப்பமாக (1872)
நல்ல நாட்டுப்புறம் நாற்பதூரையும் (1483)

என்ற முறையில் ஊர்கள் மொத்தத் தொகையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

(11) அம்மன் சென்று அம்மை நோய் பரப்பியதாக அமைந்துள்ள இடங்களிலெல்லாம், அம்மனுக்கு மக்கள் பூசை முதலியன செய்து வழிபட்டனர் என்ற நிலையிலமையும் ஊர்களிலெல்லாம், அவளுக்குக் கோயில் எடுத்த இடங்களிலெல்லாம் (திருக்குறுங்குடி – 1749 –1751, பட்டபுரம் – 1987 – 2004) அம்மன் வழிபாடு கால் கொண்டிருந்தது எனக் கருதலாம்.

(12) அம்மன் சென்ற அல்லது அம்மை நோய் பரவிய இடங்களாக, வடநாடு, தென் தமிழ்நாடு, தென்பாண்டி நாடு, கன்னியாகுமரி, கேரளப் பகுதிகள் என அமைந்து, மீண்டும் நெல்லை மாவட்ட ஊர்ப்பெயர்கள் இடம் பெறலைக் 'கதைப்பாடலில் ஊர்ப்பெயர்கள்' இடம்பெற்றுள்ள முறைப்படி நோக்கும் பொழுது புலனாகும். இறுதியாக அம்மன்கள் நெல்லை மாவட்டப் பகுதியிலுள்ள 'பட்டபுரம்' என்ற இடத்திலேயே கோயில் கொண்டதாகக் கதைப் பாடல் குறிக்கின்றது.

கதையமைப்பில் இருமுறை நெல்லை மாவட்ட ஊர்ப் பெயர்களும், அவற்றில் அம்மன் வந்து அம்மை நோய் பரப்பியதாகவும் காணப்படுவது, அம்மை நோய் நெல்லைப் பகுதி ஊர்களில் இருமுறை தாக்கியது என்பதனைக் குறிப்பிடுவது ஆகலாம்.

13) அம்மன் செல்லும் ஊர்ப்பெயர்களில்,

தெய்வத் தலங்களுக்குச் செல்லல்
அம்மை நோய் பரப்பிச் சென்ற ஊர்ப்பெயர்கள்
அம்மனுக்குப் பொங்கல், பூசை, பலி முதலியன செய்து வழிபட்ட ஊர்களும் (டில்லி, மதுரை போன்றன) அம்மன் கோயில் கொண்ட இடங்களும் (திருக்குறுங்குடி 1750 – 1751)

என்ற முந்நிலைகள் அமையக் காணலாம்.

தெய்வத் தலங்களாக இடம்பெறும் ஊர்ப்பெயர்களில், அம்மன் வழிபட்ட தலங்களும், அம்மனால் வழிபடப்பட்ட தெய்வங்களின் தலங்களும் என்ற இரு நிலைகள் அமைகின்றன.

தொகுப்பு

1) பிற்காலக் கதைப்பாடல்களில் கதைப்பாடல் மரபுகள் உச்சம் பெற்றிருக்கின்றன.

I கதைப்பாடல் மரபுகளே கதையாகவும்,

II கதைப்பாடல் மரபுகளைப் புகுத்துதற்கென்றே தேர்ந்தெடுக்கப்பட்ட கதையமைப்புக்களையும்,

III குறிப்பிட்ட ஒரு கதைப்பாடல் மரபு கதை முழுக்க வீச்சு (வியாபித்தல்) பெற்றுள்ள கதைப்பாடல்களையும் பிற்காலக் கதைப்பாடல்களில் காண இயலும். இவற்றுள் 'ஊர்ப்பெயர் அடுக்கல்' என்ற கதைப்பாடல் மரபு, கதைப்பாடல் முழுக்கவும் ஆட்சி செலுத்துகின்ற கதையமைப்புடன், இம் முத்தாரம்மன் கதைப்பாடல் அமைந்துள்ள நிலையைக் காண்கிறோம். இக்கதைப்பாடல் மரபை எடுத்துவிட்டால் கதையே இல்லை எனுமளவுக்குக் கதை முழுக்க இம்மரபின் அடிப்படையிலேயே (Foundation) அமைக்கப்பட்டுள்ளது.

2) ' அம்மன் அம்மை நோய் பரப்பிக்கொண்டு ஊர் ஊராகச் சென்றாள்' என்ற மக்கள் நம்பிக்கையின் பேரில் அமைந்த கதைக் கருவுக்கு 'ஊர்ப்பெயர் அடுக்கல்' என்ற கதைப்பாடல் மரபு இக்கதைப்பாடலில் ஆளப்படுவதற்குப் பொருத்தமாகவும் அமைந்திருக்கிறது.

3) பிற அம்மன் கதைப்பாடல்களில் 'ஊர்ப்பெயர் அடுக்கல்' மரபு இத்தகு முக்கிய இடம் பெறாதிருக்க, பதிப்பிக்கப்பெற்றுள்ள இம் முத்தாரம்மன் கதையில் மட்டும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வது, இக்கதைப்பாடலின் காலத்தால் பிற்பட்ட தன்மையை உறுதிப் படுத்துகின்றது.

4) சைவ, வைணவத் தலங்களுக்கெல்லாம் அம்மன் பாகுபாடின்றிச் சென்று வணங்கினாள் என்றும், வணங்கப்பெற்றாள் என்றும் அமைவது, இருசமயமும் கடந்தது அம்மன் வழிபாடு என்பதும் உறுதிப்படும் என்ற எண்ணத்தில் படைக்கப்பட்டதாதல் வேண்டும்.

5) அத்துடன் தலப்பெயர்களாக அடுக்கலால், இரு சமய மக்களும் இணைந்து பெரும்பாலோர் வில்லில் பாடும் தம் கதைப்பாடலைக் கேட்க வருவர் என்பது கருதியும், பல தெய்வத் தலங்களின் தரிசனத்தை விளக்கும் புண்ணிய கதைப்பாடலைக் கேட்போம் என்ற நோக்குடனும் பலர் வருவர் என்ற எண்ணத்தாலும் தலப்பெயர் அடுக்கல் நிலையை ஆசிரியர் சிறப்பாக எடுத்தாண்டுள்ளார் எனலாம்.

6) வடபகுதி, தென்பகுதி என்று இந்தியா முழுவதுமுள்ள ஊர்களைக் கடந்து வருபவளாக அம்மனை அமைத்துள்ளதால், இவள் இந்தியா முழுவதும் வணங்கப்பட்ட தெய்வமாகக் கருதவும், வணங்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கும் நோக்குடனும், கதைப்பாடலில் இந்திய ஊர்ப் பெயர்கள்அடங்கலும் அமைக்கப் பட்டுள்ளது எனலாம்.

7) வடபகுதி, தென்பகுதி ஊர்ப்பெயர்கள் அடங்கலும் இயம்பப் பெற்றுள்ளமையின், தேசீய ஒருமைப்பாட்டுணர்வைக் கிளர்த்தும் நோக்குடனும், இந்தியாவின் எப்பகுதி மக்களும் கேட்க விரும்பும் கதைப்பாடலாக ஆக்கும் நோக்குடனும் படைக்கப்பட்டுள்ளது எனலாம்.

(8) 18–ஆம் நூற்றாண்டைய கதைப்பாடலே என்பதான், ஊர்ப் பெயரமைதியில் கால நெடுமையால் விளையும் பல்வேறு மாற்றங்களைக் காண இயலவில்லை. எனினும் பேச்சுவழக்கு நடையுடனும், இலக்கிய நடையோடு பழைய பெயர்களைக் குறிப்பிட்டும் அமைக்கப்பட்டுள்ள ஊர்ப்பெயர்களைப் பார்க்க முடிகின்றது.

(9) இடம்பெற்றுள்ள இடப்பெயர்களில் நெல்லை, கன்னியாகுமரி, கேரள மாவட்ட ஊர்ப்பெயர்களே மிகுதியாகவும், சிறப்பாகவும் இடம்பெற, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த வள்ளியூரில் தோன்றிய கதைப்பாடல்

இது என்பதும், இம்மூன்று மாவட்டங்களிலும் வழங்கி வந்த கதைப்பாடல் என்பதும் இதற்குக் காரணமாகலாம்.

(10) அம்மன் சென்ற, அம்மை நோய் பரவி மக்களை ஆட்கொண்ட பகுதிகளிலெல்லாம் அம்மன் வழிபாடு கால் கொண்டிருந்திருக்கலாம். இதனால் அம்மை நோய் தீவிரப்பட்டு உச்சகட்டத்தை எட்டியபோது, இவ்வூர்களில் அம்மன் வழிபாடும் உச்சநிலை பெற்றிருக்கிறது என்றஉண்மைகளை 370 இடப்பெயர் அடுக்கல்கள் அமைந்துள்ள இக்கதைப்பாடல் தெளிவுபடுத்துகின்றது.

(11) அம்மன் சென்ற இடங்களை, அவள் சென்ற முறைப்படியே ஒரோர் இடத்தையும் கோடிட்டு இணைத்து, நோக்கிக்கொண்டே சென்றால் சக்தி சக்கர அமைப்புக்கள் போன்றன தோன்றக் கூடும்.

முத்தாரம்மன் கதையில் தெய்வநிலைக் கூறுகள்

முத்தாரம்மன் கதைப்பாடல் வகையுள் 'தெய்வக் கதைப்பாடல்' என்ற பிரிவினுள் அடங்கும் முத்தாரம்மன் கதைப்பாடலின் 'பொருண்மை' யே தெய்வம் பற்றியதாதலின் தெய்வநிலைக் கூறுகள் இதனுள் மலிந்து காணப்படுகின்றன.

தவிர, இக்கதைப்பாடலின் அடிப்படை நோக்கமே, தெய்வம் பற்றிப் பேசல் என்பதாகவே அமைகின்றது.

(1) தெய்வத்தின் புகழ்பாடி மக்களிடையே பக்தியுணர்வைப் பெருக்க வேண்டும்,

(2) தெய்வத்தைத் துதி செய்து பாடுதலால், தமக்கு அம்மை நோய் முதலாய இன்னல் மிகு நோய்கள் வராது என்ற நம்பிக்கையை மக்கள் மனத்தில் விதைத்தல்,

(3) அம்மனுக்கு எடுக்கப்படும் விழாவாதலால் அவளது வாழ்க்கை வரலாற்றைப் பாடுதல் வேண்டும் என்ற எண்ணம்,

(4) தெய்வத்துக்கு எடுக்கப்படும் விழாவில் தெய்வங்களின் செயல்களை (அம்மனின் அம்மை நோய் பரப்பல்) விரிவாகப் பாடி மக்களிடம் பயம் கலந்த பக்தியை உருவாக்கல்,

என்றமையும் அடிப்படை நோக்கங்களை இக்கதைப்பாடல் கொண்டு, மொத்தத்தில் 'தெய்வம் பற்றிப் பேசல்' என்பதனையே அடி ஆதாரமாகக் கொண்டுள்ளமையின் இதில் தெய்வநிலைக் கூறுகள் காணப்படுவதில் வியப்பேதுமில்லை.

அம்மன் – இருவேறு நிலைகள்

கதைப்பாடலின் தலைமைப் பாத்திரங்களாக, பெரிய முத்தாரம்மன், சின்ன முத்தாரம்மன் என்ற இருவரைக் குறிப்பிடலாம்.

பிற அம்மன் கதைப்பாடல்களில் ஒரு அம்மனே காட்டப்பட்டு, அவள் மட்டுமே தலைமைப் பாத்திரமாகவும் அமைய, இக்கதைப்பாடலில்,

தமக்கை, தங்கை நிலைகளில் உடன்பிறந்தாராக இரு அம்மன்கள் தலைமைப் பாத்திரமாக அமைகின்றனர். கதைப்பாடலின் இறுதி நிலை வரையும் இருவேறு அம்மன்களாகவே நின்று செயல்பட்ட முறைகளைக் கதைப்பாடல் நெடுகிலும் தெளிவாகக் காண முடிகின்றது. சுமார் 37 இடங்களில் இந்நிலைகள் வெளிப்படையாகத் தெளிவு படுத்தப் பட்டுள்ளன. [94]

வேறு எந்த அம்மன் கதைப்பாடல்களிலும் காண இயலாத 'இரு அம்மன்கள்' என்ற இவ்வளர்ச்சி நிலை பிற அம்மன் கதைப்பாடல்களிலும் காலத்தால் பிந்தைய நிலை கொண்டது இக்கதைப்பாடல் என்பதனை உறுதிப்படுத்துகின்றது.

பொதுவாக, 'அம்மை நோய்க்கு அம்மன்' என்ற நிலை வைத்து வணங்கிய மக்கள், அம்மைநோய் தீவிரமாகப் பரவி, மக்கள் பெரியம்மை, சின்னம்மை என்ற இருவேறு அம்மைகளின் குணநலன்களைத் தெளிவாக அறிந்த நிலை அடைந்தபின் பெரியம்மைக் குரியவளாகி 'பெரிய முத்தம்மனை' யும், சின்னம்மைக் குரியவளாகச் 'சின்ன முத்தம்மனை யும்' பாகுபடுத்தி வணங்கத் தலைப்பட்டனர் எனலாம். இது 'முத்தாரம்மன் கதையில் அம்மை நோய்த் தொடர்பு' என்ற தலைப்பின் கீழும் விளக்கப்பட்டுள்ளது.

பிறந்து, தவமேற்கொண்டு, வரம்பெற்று, நாடுகள் தோறும் அம்மை நோய் பரப்பச் செய்தும், [95] தல தெய்வங்களை வணங்கியும், வணங்கப்பட்டும் [96] இறுதியில் குறிப்பிட்ட இடத்தில் தெய்வமாதல் என்ற அனைத்து நிலைகளிலும் இருவரும் கூறப்பட்டிருப்பினும், பெருவாரி–

---

94. இருவேறு அம்மன்களாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ள நிலைகள் அனைத்தும் தொகுத்து, வரி எண்களுடன் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

95. "ஒன்றெனப் பலமுத் தேந்தி உறுதியாய்ச் செல்லுமென்றார்
செல்லுமென முத்தார் சின்னமுத்தா ரருளவே

(வரி. 961-962)

96. "அம்மன் முத்தம்மன் சின்னமுத் தம்மனை
அழகு துர்க்கையும் வந்துகொண் டாடினாள்"

- (வரி. 1486 - 1487)

யான இடங்களில் பெரியம்மனுக்கே முக்கியத்துவம் அளித்து ஒருமையில் கூறிக்கொண்டு செல்லும் கதையமைப்பு நிலைகளையே காண முடிகின்றது. சான்றுகளாக, இருவேறு அம்மன்களுமே சென்றாலும், பெரிய முத்தாரம்மனை மட்டுமே சிறப்பித்து,

"தோகை முத்து வடக்கே முடுகினாள்" (566)

"அனுமார் தன்னையும் கண்டுகொண் டாடினாள்" (572)

"வெல்லு மருந்துகள் ஒருநாங்கு கண்டனள் " (578)

"கருணை சத்தியதீர்த்தங் கடந்தா ளம்மன்" (900)

"முந்தவே! முத்தை விரைத்து நடந்தனள்" (1484)

"மானாடெங்குந் தானாடாய்க் கொண்டனள்" (1515)

"வார மாகிய பட்டபுரந் தன்னில்
வரிசை நல்ல முத்தம்மனும் வந்தனள்" (1925)

என அமைவனவற்றைக் கூறலாம். இவை தவிர பல்வேறு இடங்களிலும் [97] பெரியம்மனை மட்டும் கருத்தில் கொண்டு முடித்த ஒருமை முடிவுகளை வெளிப்படையாகக் காணமுடிகின்றது.

இவ்வாறு ஓரம்மனுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்து அமைத்துள்ள இந்நிலைகள் பிற அம்மன் கதைப்பாடல்களில் அம்மனை ஒருத்தியாகவே படைத்தளித்த எண்ணங்களின் எச்சங்களாதல் வேண்டும்.

இருவேறு அம்மன்களாகப் பிரித்துப் படைக்க, பதிப்பிக்கப் பெற்றுள்ள இக்கதைப்பாடல் முயன்றிருப்பினும் மரபுப்படி ஓரம்மனுக்கே முக்கியத்துவம் அளித்து, ஓரம்மனே செய்தாள் என்ற நிலையில் கதைப்பாடல் வினை முடிவுகளை ஒருமையிலேயே அமைத்துக் கொண்டு சென்றுள்ளனர் எனக் கருத வேண்டியுள்ளது.

---

97. 581, 582, 586, 596, 748, 764, 780, 902, 910, 920, 924, 943, 994-995, 1039, 1477, 1479, 1484 போன்ற வரிகளைக் குறிப்பிடலாம்.

பெரிய முத்தம்மன், சின்ன முத்தம்மன்

பெரிய முத்தம்மன், சின்ன முத்தம்மன் என்ற இருவருமே இக்கதைப்பாடலில் 'தலைமை மாந்தர்' எனினும் பெரிய முத்தம்மனுடன் ஒப்பிட, சின்ன முத்தம்மன் துணைப்பாத்திர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. பரிவார தேவதைகளுடன் சேர்ந்து செயலாற்றும் இவள் பரிவார தேவதைகளைவிட, சற்று உயர்ந்த நிலையுடையவள் என்ற அமைப்பில் படைக்கப்பட்டுள்ளாள்.

பெரிய முத்தம்மனின் இளமை குறித்த நிலைகள் பின்னால் இளையவளாய 'சின்ன முத்தம்மன்' என்ற அமைப்பாக வளர்ச்சி பெற்றிருக்கலாம்.

I. பெரியம்மன் ஆணையைச் சிரமேற் கொள்பவளாகவும், பெரியம்மன் ஏவியபின், அவ்வேவலைப் பிற பரிவார தெய்வங்களுடன் கூடி நிறைவேற்றுபவளாகவும் சின்ன முத்தம்மன் அமைகின்றாள்.

"செம்மைபெற நல்லமுத் தம்மன் வாங்கித்
திடிமண் ணடிக்கச் சொன்னாள்
சொன்ன போதுநல் சொர்ண வயிரவன்
சின்ன முத்துபொற் சேனையு மானையும்
வண்ண முத்தை வரமங்கை நாடெல்லாம்
கன்னல் முத்தைக் கனக்க விரைத்தனள்"

(1925–1930)

என்றமையும் வரிகளைச் சான்று காட்டலாம்.

II. அம்மனுக்கு வாகனமாகப் பல்லக்கும், சின்னம்மனுக்கு அவள் வாகனத்திலும் சிறப்புக் குறைந்த வாகனமாய வேதாளையும் அமைகின்றன.

"துகையாகச் சின்னமுத்து வேதாளை மீதில்வர
தொல்லுலகில் நல்லமுத்து நல்லசிவி கையில்வர"

(வரி.1630–1631).

"சின்னமுத்து வேதாளையில் முன்வர

... ... முத்துத்தாய் நல்ல

கனக தண்டிகைதனி லெழுந்தருள"

(வரி.1972–1974)

எனக்கதைப்பாடல் வரிகள் அமைகின்றன.

III. தவிர பெரிய முத்தம்மனைத் தன்னிலும் உயர்ந்தவளாகக் கருதி, காணிக்கை முதலியன வைத்துச் சின்ன முத்தம்மன் வழிபட்டதாகவும் குறிக்கப்படுகின்றது.

"அளவற்ற ரெற்றினங்கள் ஆனைமேலும் பூதமேலும்

அம்மைநல்ல முத்துத்தாய்க்கு அழகாகக் கொண்டுவந்து

காணிக்கை யாய்வைத்துச் சின்னமுத்துத் தான்பெரியமுத்து

கமலந் தனைத்தொழுது கம்பையாத்தில் வந்துசேர்ந்தாள்"

(வரி. 1456–1459)

IV. மேலும் பெரியமுத்தம்மன் உயிரைப் பலிகொள்ளக் கூடிய கொடிய பெரியம்மை நோய் முத்துக்களைப் பரப்பினாள் என்றால், சின்ன முத்தம்மன் மரணம் போன்ற கொடிய விளைவுகளைத் தராத, வீரியம் குறைந்த சின்னம்மை நோய் முத்துக்களையே விதைத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

"நிலைக்கும் பெரியமுத்து நிலையாத சின்னமுத்து"

(வரி.1660)

என்றமையும் பாடல் வரிகளில் பெரியம்மையால் உண்டாகும் மாறா வடுவையும், சின்னம்மையின் வடு தராத, நிலைத்து நில்லாது எளிதில் நீங்கிவிடும் குணங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

V. பெரிய முத்தம்மன் பட்டபுரத்தில் தெய்வமாகிய பொழுது பெரியம்மன் அளவுக்கு உக்கிரமும், வீர்ய குணமும் கொள்ளாது சகித்து வாழ்பவளாய சின்ன முத்தம்மனும் அவள் அருகே கோயில் கொள்கிறாள்

(வரி.2003–2005).

ஆக, இரு அம்மன்களும் பல நிலைகளில் வேறுபட்டவர்களாக, பெரிய முத்தம்மனைவிட, சின்ன முத்தம்மன் பல நிலைகளில் கீழடங்கி இருப்பவளாகப் படைக்கப்பட்டுள்ளமை தெரிகின்றது.

இரு வேறு அம்மன்களாகப் படைத்திருப்பினும் சமநிலை நல்கப்படாது, துணைப் பாத்திரத்திலும் சற்று உயர்ந்த நிலையே சின்ன முத்தம்மனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிற அம்மன் கதைப்பாடல்களினின்றும் வேறுபட்டுச் சின்ன முத்தம்மன் என்ற ஒரு பாத்திரத்தைத் தனியாக இக்கதைப்பாடலில் அமைத்துச் சிறப்பித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

பாத்திரப்படைப்பு நிலைகளிலும் தெளிவான வேறுபாடு உணர்த்தப்பட்டுள்ளது.

தெய்வப்பெயர்கள் அடுக்கப்பட்டுள்ள இடங்கள்

பெரிய முத்தம்மன், சின்ன முத்தம்மன் என்ற இரு அம்மன்களும் இருவர் என்ற நிலையுடன் குறிப்பிடப்பெற்றுள்ள, கதைப்பாடலில் வெளிப்படையாகத் தெரிகின்ற 37 இடங்கள் தவிர, தெய்வப் பெயர்கள் குறிப்பிடப்பெற்றுள்ள இடங்களாக 25 இடங்களைக் குறிப்பிடலாம்.

இவற்றை மூன்று நிலைகளாகப் பகுத்துக்கொள்ள முடிகின்றது.

(1) குறிப்பிட்ட தெய்வத்தின் நிலைகளைப் பன்னிப் பன்னிப் பேசல். [98]

(2) ஒரு தெய்வத்தின் பல பெயர்களை அடுக்கிக்கூறல். [99]

---

98. வரி எண்கள் :- 291 - 311

99. 547 - 551, 1078 - 1084, 1532 - 1540, 1566 - 1568, 1660 - 1661.

(3) பல்வேறுபட்ட தெய்வங்களின் பெயர்களை அடுக்கிக் கூறுதல்.[100]

எனப் பிரிக்கலாம்.

I. தெய்வத்தின் நிலைகளைப் பன்னிப் பன்னிப் பேசல்

பெரிய முத்தம்மனும், சின்ன முத்தம்மனும் இரட்டைக் குழந்தைகளாக நாககன்னி வயிற்றில் தோன்றிய பின், அவர்களைத் தாலாட்டித் துயிலச் செய்த போது அமையும் தாலாட்டுப் பாடல் பகுதியில் இரு அம்மன்களைக் குறித்தும் பன்னிப் பன்னிப் பேசும் முறை காணப்படுகின்றது.

"வெளியான காசிமா மெய்யிருசி பிண்டமதால்
அழியாத வஸ்துவெனும் ஆதிமுத்து மாமயிலே
மாமயிலே சின்னமுத்து வளர்நாக ராசாவின்
தாமன் மருமகளே தையல்முத்து மாதாவே
மாதாவே திருப்புவனம் வாழ்வே கயிலையில்வாழ்
வேதாவைக் கூறி விருதுபெறு மெல்லியரே" (வரி.304-309)

என இவ்வாறாகச் சிறப்பித்துப் பாடுவது கதைப்பாடலைக் கேட்கும் மக்களுக்கு விருப்பூட்டும் என்ற எண்ண அடிப்படையில் விளக்கம் பெற்றுள்ளது.

II. ஒரு தெய்வத்தின் பல பெயர்களை அடுக்கிக் கூறல்

5 இடங்களில் அம்மனுக்குள்ள பிற பெயர்கள் அடுக்கிக் கூறப்பட்டுள்ளன. அடிக்குறிப்பு எண். 99 இல் வரி எண்களுடன் அவ்விடங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

---

100. 191-193,481-488,560-564,816-820, 824, 828, 963-966, 1231-1244, 1323-1325, 1402-1408,1553, 1624-1627, 1632-164, 1693, 1703, 1712-13, 1730-1733, 1836-1841, 1949-1953.

கதைப்பாடலில் கதை நகர்ந்து கொண்டிருக்கும் போக்கிலேயே இடையிடையே அம்மன் பெயர் குறிப்பிடப்பெறும்போது, கதைப்பாடல் ஆசிரியர் கூற்றாகவே, அவளின் பிற பெயர்கள் அடுக்கிக் கூறப் பட்டுள்ளன.

இதற்கு 3 நிலைகள் காரணங்களாதல் கூடும்.

(1) கதையின் தலைமைத் தெய்வத்தினுடைய பல்வேறு நாமங்களைக் கதைப்பாடலின் இடையிடையே அமைத்தல், கேட்கும் மக்களுக்குப் பக்திப் பரவசத்தை உருவாக்கும் என்பதானும்,

(2) தெய்வ நாமத்தைக் கேட்டலே தாம் பெற்ற பெரும்பேறு என்று பக்தியுணர்வுடைய மக்கள் கருதுவதாலும்,

(3) அம்மனைப் பெருந்தெய்வப் பெயர்களான சக்தி, திரிசூலி, கங்காளி, பார்வதி என்ற நாமங்களால் அழைப்பதான் அவள் உயர்ச்சியையும், பல தெய்வங்களுமாக அவளே பரிணமித்து நிற்கும் பெருமையையும் வெளிக்காட்ட இத்தகு 'ஒரு தெய்வத்தின் பலபெயர் அடுக்கும்' முறைகள் பயன்பட்டுள்ளன எனலாம்.

"மாரி கெவுரி துர்க்கை – நமவன்
துர்க்கை நீலி கபால முண்டி
வீரி பவுரி முக்கண் – திறம்
வெல்லுந் திரிசூலி காளி சண்டி
பாரிய ணாரி துய்ய – நல்ல
பஞ்சாச் சரத்தி பரஞ்சோதி – ஆதிக்
கரிய முத்தார் எங்களம்மன்" (வரி.1078–1084)

என்றும், முத்தாரம்மனின் பல்நாமங்கள் அடுக்கப்பட்டுள்ளதையும்,

"காளிநீலி கபாலி திரி சூலியாம்
ஒருசொல் லானபரா சத்திஆதி சத்தி
ஓம்நமசி வாயஞான மனோன் மணி
குரிசி லான குமரிப் பகவதி"

எனப் பகவதியின் பல் திருநாமங்களும் அடுக்கப்பட்டுள்ளதையும் சான்றுகளாகக் காட்டலாம்.

பல்வேறுபட்ட தெய்வங்களின் பெயர்களை அடுக்கிக் கூறல்

19 இடங்களில் பல்வேறுபட்ட தெய்வங்களின் பெயர்கள் அடுக்கிக் கூறப்பட்டுள்ளன. வரி எண்கள் அடிக்குறிப்பு எண். 100 –இல் தரப்பட்டுள்ளது. அம்மனின் உடன்வரும் பரிவார தேவதைகளாக இவை அமைகின்றன.

அம்மனே தனக்கு இத்தகு பரிவார தேவதைகளைத் தரவேண்டும் எனச் சிவனிடம் வேண்டிப் பெற்றதாகவும் கதைப்பாடல் அமைகின்றது. இவ்வாறு அடுக்கிக் கூறலுக்குக் கீழ்க்கண்ட இருநிலைகள் காரணமாதல் கூடும்.

(1) பரிவாரங்களாகப் பல குட்டி தேவதைகளைத் தருமாறு வேண்டினாள் என்பதால், இத்தகு தெய்வங்களையெல்லாம் விட அவள் உயர்ந்தவள், தலைமை சான்றவள் எனக்காட்டி, அம்மனைச் சிறுதெய்வ நிலையியினின்றும், பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்தும் போக்கு அமைதலை உணர முடிகின்றது.

(2) அம்மனைப் பல பரிவார தேவதைகள் சூழ்ந்துகொண்டு முன்னும், பின்னுமாக வந்தன என்று அவற்றின் பெயர்களையெல்லாம் அவ்வப்போது அடுக்கிக் கூறுவதால், பல்வேறு தெய்வப் பெயர்களை அடிக்கடி மந்திரம் போன்று மக்கள் காதில் ஒலிக்கச் செய்து, பக்தியுணர்வுக்கு ஊட்டச்சத்து அளிக்கப்படுகின்றது.

"வருவான வண்டி மலையனு மலைச்சியும்
மாமுண்டி சாமுண்டி மாதரும்
கருவான வேப்பிலைக் கனசூரக் காரரும்
கருதிவரு மக்கினிக் குமாரரும்
....
வீதிவரும் பேச்சிராக் காச்சிகாட் டேரியும்
வெருளாக யிருளனும் அருளய்யா" (வரி.485–494)

என்று பரிவார தேவதைகளாக இவர்களை அம்மன் சிவனிடம் வரமாகக் கேட்டதையும்,

"பல்லக்கில் பெரியமுத்து பவனி, யெழுந்தருளப்
பன்னுதமிழ்ச் சின்னமுத்தும் பாரவேதா ளையில்வர
மல்லனைய பூதகணம் மெல்லவே சிவிகையேந்த
வயிரவன் வீரசூரன் வண்டிமலையன் வரவே
சொல்லரிய பேச்சிவண்டி மலைச்சி யிசைக்கிவர
சோணைமுத்து மாரித்தாயும் ஆனைபரி மீதிலேற"
(வரி.815–820)

எனப் பரிவார தேவதைகள் உடன் வந்த காட்சியும் சித்தரிக்கப் பட்டுள்ளன. பரிவார தேவதைகளின் திருப்பெயர்களைக் கதைப் பாடலின் பல இடங்களிலும் அடுக்கிக் கூறலைக் கேட்க மக்கள் விரும்பியிருக்கின்றனர்.

பரிவார தேவதைகள்

இக்கதைப்பாடலில் அம்மனின் பரிவார தேவதைகளாக 44 தெய்வங்கள் 133 இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. வரி எண்களுடன் பெயர்கள் அகர வரிசைப்படுத்தி பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

ஒரே தெய்வம் 2 முதல் 8 இடங்கள் வரையும் குறிப்பிடப்பட்டுள்ள நிலைகளையும் காணமுடிகின்றது.

அக்கினிமாடன்	)	
இசக்கி	)	
வண்டிமலையன்	)	8 இடங்கள்
வயிரவன்	)	
பேச்சி	–	7 இடங்கள்
கண்டகருணன்	)	
காளி	)	6 இடங்கள்
வீரபத்திரன்	)	
பெரியசுவாமி	–	5 இடங்கள்

என அமைகின்றன. இவையும், பிற பரிவார தேவதைகள் பெறும் இட எண்ணிக்கையும் வரி எண்களுடன் 'அம்மனின் பரிவார தேவதைகளின் அகரவரிசைப் பட்டி' என்பதனுள் தரப்பட்டுள்ளன.

பெருந்தெய்வங்கள் பரிவார தேவதையாதல்

அம்மனின் பரிவார தேவதைகளின் வரிசையில் ' பெருந் தெய்வம்' என்ற நிலையுள் அடங்கும் தெய்வங்களும் குறிப்பிடப் பட்டுள்ளன.

இத்தகு பெரிய தெய்வங்களும் கூட அம்மனுக்குப் பரிவாரமாகி அடங்கி உடன் வந்தன என்பதில் அம்மனை, குறிப்பிடப்பட்ட அப்பெரிய தெய்வங்களையெல்லாம் விட உயர்ந்தவளாகக் காட்டும் நோக்கும், கதைப்பாடல் கேட்கும் மக்களைக் கருதச் செய்யும் நோக்கும் புதைந்துள்ளன எனலாம்.

அத்துடன் சிறுதெய்வ நிலையினின்றும், பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்தும் முகமாக 'சக்தி அம்சமே அம்மன்' என இணைப்பு நிகழ்த்திப் பெருந்தெய்வமாக்கிய நிலையினின்றும் மேலும் உயர்த்துவதாக, அத்தகு சக்தியும் இவளுக்குப் பரிவாரமாக உடன் வந்தாள் என்ற கருத்து அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

"கூளியும்பூ தப்படையுங் காளியுமுன் னேநடக்க" (வரி.824)

"ஒறப்பட் டேவருங் காளிகள் கூளிகள்
ஒட்டியே மேளங் கொட்டியே முன்வர" (வரி.1554 – 1555)

"பத்திர காளி அக்கினி மாடனும்

... ...

ஒருமுகமாகச் சென்று வளைந்ததே" (வரி.1950–1954)

இவ்வாறு சக்தி வடிவாய காளி, பத்திரகாளி தவிர, சாமுண்டி (562), செண்பகாதேவி (1952), துர்க்கை (1402,1633) எனப்பட்டவர்களும் அம்மனின் பரிவாரங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவை தவிர ஆண் தெய்வங்களுள் பெருந்தெய்வ நிலையில் வைக்கப்படும் ஆதிமூலமாய மூல தேவனும், முருகப் பெருமானாய வெத்திவேலய்யனும் அம்மனின் பரிவாரங்களாக இயம்பப்பட்டும் உள்ளனர்.

"மூல தேவனும் நீலனும் நீலியும்

... ...

கவிவாணர் தொழுது முன்னே வர" (வரி.1473 – 1475)

"கடுத்த முகத்துடனே வெத்திவேலய்யனும் வந்து

கண்ட கருணன் பெரிய குண்டோதரனும் வரவே"

(வரி.1838 – 1839)

என அமைதலைக் காண்கிறோம்.

அம்மனின் அம்சங்களே பரிவாரங்களாதல்

சக்தி வடிவங்களாய காளி, பத்திரகாளி, சாமுண்டி, துர்க்கை என்ற தெய்வங்கள், அம்மனுக்குப் பரிவார தேவதைகளாக இயம்பப்பட்டுள்ளது போல,அம்மனின் அம்சங்களாகிய சோணைமுத்து மாரி, புட்டாபுரத்தி, மாரி என்ற தெய்வங்களும் அம்மனின் பரிவாரங்களாக உடன் வந்ததை,

"பல்லக்கில் பெரியமுத்து பவனி யெழுந்தருளப்

பன்னுதமிழ்ச் சின்னமுத்தும் பாரவேதா ளையில்வர

... ...

சோணைமுத்து மாரித்தாயும் ஆனைபரி மீதிலேற"

(வரி.815 – 820)

"மாரிமுப்பு ராதிதுர்க்கை மட்டுள்ள புட்டாபுரத்தி

வரிசைப் படைநடத்தப் பிரிசத்துட னெழுந்து" (வரி.1402)

"தக்கமுப்பு ராதிமாரி துர்க்கையுக்கிர காளிவீரி

பகையாய் வரும்பிரம ராக்கிசத்தி முன்னேவர" (வரி.1633 – 1634)

என்றமையும் வரிகள் புலப்படுத்துகின்றன.

சக்தி பல பெயர்களால் அழைக்கப்பட்டபோது, சக்தியின் அம்சங்களாகப் பல்வேறு தெய்வங்கள் உருவாகி வளர்ந்ததுபோல, அம்மனின் பல்வேறு பெயர்களும் தனித் தனித் தெய்வங்களாக வளர்ந்து, அவையே அம்மனுக்குப் பரிவாரங்களாகவும் ஆகியிருக் கின்றன. பிற அம்மன் கதைப்பாடல்களில் காணப்படாத இத்தன்மை இக்கதைப்பாடலில் காணப்படுவது இதன் காலத்தால் பிற்பட்ட நிலையையும் புலப்படுத்துகின்றது.

பரிவாரங்கள் முன், பின்னாக வந்த வரிசை முறை

அம்மன்களுடன் வந்த பரிவாரங்களின் செயல்களை ஆங்காங்கு அடுக்கிக் கொண்டு செல்லும்போதே எப்பரிவார தேவதைகள் முன்னாக வந்தன, பின்னாக வந்தன என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

"மின்னிய சின்னமுத்தம்மன் பின்வர
பின்னடந்த பெரியசுவாமியும்
பேச்சி யாச்சியிசைக்கி ராக்கி சத்தியும்
முன்னடந்த அகோர வயிரவன்
மூல தேவனும் நீலனும் நீலியும்" (வரி.1469–1473)

என அமையும் வரிகளைக் காணமுடிகின்றது.

பொதுவாக அம்மன் கோயிலில் விழா நடைபெற்று அம்மன் ஊர்வலமாக வரும்பொழுது, பரிவார தேவதைகள் இதே முறைப்படி முன், பின்னாக வரும் முறை பின்பற்றப்பட்டிருக்கலாம்; அல்லது இவ்வாறு காலங்காலமாகக் கோயில் விழாக்களில் முறைப்படி தெய்வ நிலைகளை முன்பின்னாக அமைத்து வருதலைக் கண்டு கதைப்பாடலில் அதே விபரத்தைத் தந்திருக்கலாம்.

சித்தர் நூற்களில் 'பூசைவிதி' பற்றி இயம்பும்பொழுது, சக்கர வடிவமிட்டு, அதில் எவ்வெவ் மூலையில் எத்தெய்வத்தை நிறுத்த வேண்டும் என்றெல்லாம் வரையறை செய்து கூறப்படுதலுண்டு. அதுபோல் இதிலும் எத்தெய்வம் முன்னே, பின்னே என்பன வரையறுத்து உரைக்கப்பட்டுள்ளது. 16 –ஆம் நூற்றாண்டின் பின் பெருவாரியாக

இயற்றப்பட்டஇத்தகு சித்தர் நூல்களின் கருத்து போன்று இதே காலகட்டத்திய அம்மன் கதைப்பாடற் கருத்தும் அமைந்துள்ளது நோக்கத் தக்கது.

சில பரிவார தேவதைகளின் பணி

44 தெய்வங்கள் அம்மனின் பரிவார தேவதைகளாகக் கூறப்பட்டிருப்பினும், சில பரிவார தெய்வங்கள் அம்மனின் கீழ், குறிப்பிட்ட பணிகளைச் செய்து வந்தன என விளக்கப்பட்டுள்ளது.

"தளகத்தன் பெரிய சுவாமி முன்வரவே" (வரி.1733)

என்ற வரியால் பரிவார தேவதையாய பெரியசுவாமி, அம்மனின் பரிவாரப் படைக்குத் தளகர்த்தனாக இருந்து பொறுப்பேற்று நடத்தும் தெய்வம் என்பதும் இது பரிவாரப்படையின் முன்னர் தலைமை தாங்கி, படைநடத்திச் செல்லும் என்பதும் தெளிவுறுகின்றது.

"காரியக்கார னக்கினி மாடன்" (வரி. 1404)

"சீரிய வண்டிமலைய னக்காரியக் காரன்" (வரி. 1406)

என்ற வரிகளால் அக்கினிமாடன், வண்டிமலையன் என்ற பரிவார தேவதைகள் காரியக்காரர்களாகப் பணி செய்தன என்ற குறிப்பு தரப்பட்டுள்ளது.

பரிவார தேவதைகளில் அடங்காத கறுப்பியம்மனையும் முத்தம்மன் சந்தித்தவுடன் 'எனது வாசல் பிரதானியாக இனி இருப்பாயாக' எனக் கூறி, அவளையும் தன் கீழடிப்படுத்திய செய்தியை,

"கறுக்குங் குழலிமுத்து கறுப்பியம்மனைக் கண்டாள்

... ...

முக்கியமாய் நம்முடைய வாசல்பிர தானியாக

முகனை பெற யிருவென்று முத்தம்ம னருளிச் செய்தாள்"

(வரி. 1831–1845)

என்ற வரிகளால் தெரியப்படுத்துகின்றன.

இவ்வாறு அம்மனுக்குப் பிற தெய்வங்கள் தளகர்த்தராகவும், காரியக்காரராகவும், வாசல் பிரதானியாகவும் இருப்பர் என்பதான் மக்களை ஆட்சிசெய்யும் அரசன்போல் தெய்வங்களை யெல்லாம் ஆட்சிசெய்பவளாக அம்மன் அமைக்கப்பட்டுள்ளாள் என்றும் கூறலாம்.

கதைப்பாடல் மூலம் அறியவரும் பரிவார தேவதைகளின் குணநலன்கள்

கதைப்பாடலில் பரிவார தேவதைகள் கூறப்பட்டுள்ள இடங்களில், அவற்றுக்கு அடைமொழி கொடுத்துச் சிறப்பித்துள்ள நிலைகளில் அவற்றின் குணங்கள் எவை என்பன பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

“அசத்திக் கிடத்திக் கொல்லும் அதம சண்டாளன்” (வரி.1236)

என்பதன் மூலம் ஆட்களை உடல் அசதியால் படுக்கையில் கிடக்க வைத்துக் கொல்லும் தன்மையது அதம சண்டாளன் என்ற தேவதை என்பது புலப்படுகின்றது. ராக்காச்சியாச்சி (960), பேச்சியாச்சி (1471) என வரும் தேவதைப் பெயர்கள் மூலம் தாய்த்தெய்வங்கள் இவை என்பது தெளிவாகின்றது.

பேச்சி

பேச்சி என்பதற்கு, ‘சுருவம்’ என நாட்டுப்புற வழக்கில் அழைக்கப்பெறும். உருவம் செய்யும் பொழுது இடுப்பில் ஒரு குழந்தையை இடுக்கிக் கொண்டிருப்பவளாகவே இன்றும் படைக்கின்றனர். எல்லா மாவட்டத்திலும் இம்முறை மரபாகப் பின்பற்றப்பட்டு வருகின்றதையும் காண்கிறோம்.

“ஆவி கொடுத்தென்னை யெழுப்பி – எங்கள்
ஆதிசூரப் பேச்சித்தா யாடலுற்றாள்” [101]

என்று பேச்சி, தாய் வடிவம் கொண்டவள் என்பதும்,

101. சு.எண். 9178-D-பேச்சி அம்மன் ஆனந்தக் களிப்பு, கே.ப.சு., இ.1.

"கையிலொரு குழந்தை ஆச்சி
காலில் சில பிணங்கள்" [102]

எனக் குழந்தையைக் கைக்கொண்டிருக்கும் வடிவமுடையாள் அவள் என்பதும் பிற நூற்களிலும் சுட்டப்பட்டுள்ளன.

பேச்சி என்ற பெயர் வடிவு பேய்ச்சி என்பதனின்று வந்திருக்கக் கூடும். சுடுகாட்டில் உள்ளவளாகவும், பூதகணங்களின் உடனிருப்புடன் உள்ளவளாகவும் உள்ளதால் பேய்ச்சி என்பது பேச்சி ஆகியிருக்கலாம் எனக் கருதத் தோன்றுகின்றது.

தவிர இலக்கிய வழக்கிலும் பேய்ச்சி என்ற சொல் வழக்கு பேச்சியைக் குறிப்பதாக அமைகின்றது. [103]

இனி, பேழ்ச்சி என அதாவது பெரியவள் என்ற பொருளில் அழைக்கப்பட்டுப் பின் இது பேச்சி என மருவி வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருதவும் இடமுள்ளது. தமிழரின் தொன்மையான வழிபாட்டில் பேய்த்தெய்வ வழிபாடு பெறும் சிறப்பிடம் இங்கு இணைத்து எண்ணத் தக்கது.

ராக்காச்சி

இனி, ராக்காச்சி என்பது 'ராக்காச்சி **யாச்சி**' எனத் தாய்மைக் குணம் குறிப்பதாகவும், பிரமராக்கி (வரி.1634) எனப் பிரம்மனோடும் அல்லது முழுமுதற் பொருளோடும் தொடர்புபட்டு அமைவதாகவும் கதைப்பாடலில் குறிக்கப்படுகின்றது.

ராக்காச்சி என்பது ராக்ஷதை அல்லது ராக்கதை எனப்படும் அரக்கரைக் குறிப்பிடும் சொல்லுடன் தொடர்புள்ளதாகத் தெரிகின்றது.

---

102. சு.எண். 9176-C -பேச்சி அம்மன் தாலாட்டு, கே.ப.சு., இ.3

103. சு. எண்.8432 - ஆமையம்மானைக் கதை, கே.ப.சு., இ. 46-49 (இதில் மாடன் - மாடத்தி, மலையன் - மலைச்சிபோல பேயனுக்கிணையான பெண் தேவதையாகப் பேய்ச்சி உள்ளது).

நாட்டுப்புற இலக்கியங்களில் இதற்குரிய சான்றுகளைக் காணமுடிகின்றது. [104] "அவ மரணமடைந்த பார்ப்பனியின் பேய் வடிவமே பிரம ராட்சதை" என்றும் தெரிகின்றது. பொதுவாக ரா (இரவு) + ஆச்சி – அதாவது "இருள் நிறம் கொண்ட அம்மா" என்ற பொருளில் இச்சொல் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

'இடுகாட்டுச் சாமுண்டி' (வரி.1235) என அமைவதில் மயானத்தில் உள்ள தெய்வம் இவள் என்ற கருத்து விளக்கமுறுகின்றது.

கண்ட கருணன் (வரி.1625) என்ற தேவதையின் பெயர் வடிவமே 'கண்டம் கருத்தவன்' என்ற அவன் தன்மையை விளக்குவதாக உள்ளது. நீலகண்டனாய சிவனின் அம்சமெனத் தெரிகின்றது. செவியையே கண்ணாக உடையவன் என்ற புராணக் கருத்தும் உள்ளது.

பொதுவாக நாட்டுப்புறச் சிறுதெய்வங்கள் கருநிறம் கொண்டனவாதலால் 'காண்பவர்களுக்குக் கரிய தோற்றத்தைத் தருபவன்' என்ற பொருளில் 'கண்டகருணன்' என அமைந்திருக்கலாம்.

வண்டிமலையம்மன் வரி: 562, 818, 966, 1233, 1325, 1406, 1625, 1952 என உள்ள ஒன்பது இடங்களில் வண்டிமலையன் பற்றியும்,

வண்டிமலைச்சி (819) பற்றி ஓர் இடத்திலும் இவளே மலைச்சி என்ற பெயரில் 3 இடங்களிலும் (562, 966, 1233) குறிக்கப்பட்டுள்ளனர்.

மலையன், மலைச்சி என்பன மலைவாழ் மக்கள் வணங்கும் குறிஞ்சி நில ஆண், பெண் தெய்வத்தின் பெயர்களாதல் வேண்டும் என்பது அவற்றின் பெயர்ப் பொருண்மை கொண்டே தெளிவாகத் தெரியவருகின்றது. ('மலைச்சி' என்றே 562, 966, 1233 – ஆம் வரிகளால் காணமுடிகின்றது). மலைச்சாமி, மலையாண்டி என்று இன்றும் நாட்டுப்புற மக்கள் பெயர்கள் அமைவதைக் காண்கி–றோம். இவற்றோடு வண்டிமலையன், வண்டிமலைச்சி என வண்டி என்ற

---

104. சு.எண்.8029 - வாணதீர்த்தக் கரைப்புலையன் சுடலையாண்டி கதை- கே.ப.சு. என்பது ராக்காச்சியாய பிரமராச்சதை அல்லது பிரமராக்ஷக்ஷி ஈசுவரரை வளர்த்ததாயும், இவர் மூலம் சுடலையாண்டி தோன்றியதாயும் குறிக்கின்றது.

அடையுடன் இப்பெயர்கள் வழங்கப்பட்டமைக்குப் பண்டு நெடுந்தூரப் பயணத்துக்கு மாடுகள் பூட்டிய வண்டிகள் பயன்படுத்தப்பட்டதும், அவ்வாறு மலையடிவாரங்களில் செல்லும் வண்டிகளுக்குக் காவலாக உள்ள மலைத் தெய்வங்கள் என்ற பொருளில் வண்டிமலையன், வண்டிமலைச்சி எனப் பின்னர் சிறப்படை மொழியுடன் வழங்கியிருக்கலாம்.

அம்மன் மகிஷாசுரமர்த்தினியாக அவதாரமெடுத்து தாருகாசுரனின் சிரமறுத்து, சிந்திய இரத்தத்தை வண்டியிலேற்ற, அவ்விரத்தம் திரண்டு வண்டிமலையன், வண்டிமலைச்சி பிறந்ததாக 'முத்தாரம்மன் விற்கவிதை' (வரி.1769 – 1774) தெரிவிக்கின்றது.[105]

வயிரவனைப் பற்றிய குறிப்புக்கள் 11 இடங்களில் உள்ளன. வரி எண்கள் "பரிவார தேவதைகளின் அகரவரிசைப் பட்டி"யில் தரப்பட்டுள்ளன.

இவற்றுள் மூவிடங்களில் மட்டும் வால வயிரவன் (1232), நாத வயிரவன் (1624), அகோர வயிரவன் (1472) என்ற அடைமொழிகளுடன் வயிரவன் என்ற பரிவார தேவதை குறிப்பிடப்பட்டுள்ளது. 'வால' என்ற அடைமொழி பாலப்பருவத்தனான வயிரவனையும் 'நாத' என்பது தக்க பருவம் அடைந்தபின் உள்ள வயிரவனையும், 'அகோர வயிரவன்' என்பது இப்பரிவார தேவதை உக்கிர குணம் கொண்டது என்பதையும் புலப்படுத்துகின்றது.

சில தேவதைகளின் பெயர் வடிவங்களிலேயே அவற்றில் குணநலன்களோடு நிறம், வடிவு போன்ற பிற தன்மைகளும் அறிய வருகின்றன.

---

105. "தேரோடு தாருகன் தன்னைப் பிடித்து
சிறுமழுக் கொண்டு அறுத்தாள் தலையை
... ...
சூழப் பறக்கின்ற ரத்தத்தை வாரி
சூலவண் டிமேலே ஏற்றினா ளம்மை
வண்டியில் ரத்தம் திரண்டுவடி வாக
வந்து பிறந்தானே வண்டி மலையன்
வண்டி மலையனும் வண்டி மலைச்சியும்
வந்திரு பேரும் உடனே பிறந்தார்".

இருளப்பன், கறுப்பன், காளி, நீலகேசரி, நீலன். நீலி என்ற தேவதைப் பெயர்களிலிருந்தே கருநிறம் கொண்ட தேவதைகள் இவை என்பது புலனாகின்றது.

'அதம சண்டாளன்' என்ற தேவதைப் பெயரில் 'சண்டாளன்' என்பது தாழ்குல மகனைக் குறிப்பதாக அமைகின்றது. இவர்கள் கருநிறத்தவர். அதமசண்டாளனென்ற பெயருடைய இத்தேவதையும் கருநிறம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

இதுபோல் இடுகாட்டுச் சாமுண்டி, காட்டேரி, காடாளம்மன், துர்க்கை என்ற தெய்வங்களும் கருநிறத்தன.

ராக்காச்சி, ராக்கிசக்தி என்பன ராக்ஷசர் என்ற சொல் தொடர்புடையன. ராக்ஷதர் அல்லது அரக்கர் எனப்படுபவர்களின் நிறம் கருமை. இந்த ராக்காச்சி, ராக்கிசக்தி என்பவர்களின் நிறமும் இதுவே.

சங்கிலிப்பூதம், பேச்சி (பேய்ச்சி) எனப்படுபவர்களின் பெயர்கள் பூதம், பேய் என்ற சொற்களின் இணைப்பாகவும், மரூஉ ஆகவும் உள்ளதால், இந்த பூதம், பேய் எனப்படுவனவற்றில் நிறமும் கருமை என்பதான் சங்கிலிப் பூதம் என்ற இத்தேவதைகளின் நிறமும் கருமை எனத் தெரிகின்றது.

தவிர 'சங்கிலிப்பூதம்' காலில் கட்டப்பட்ட சங்கிலியுடன் ஒலியெழுப்பி இழுத்திழுத்து நடந்து செல்லும் என்பது மதுரை மாவட்ட மக்கள் வழக்காக உள்ளது. சங்கிலியாண்டி என்றும் இது வழங்கப்படும்.

'சந்திவீரன்' முச்சந்தி, நாற்சந்திகளில் நின்று அத்தெருக் களைக் காவல் புரியும் தெய்வம் என்பது இத்தேவதைப் பெயராலேயே தெளிவுறத் தெரிகின்றது.

கதைப்பாடல் நாயகர்கள் பரிவார தேவதைகளாதல்.

இசக்கி, வன்னியர் எனப்படுபவர்களும் பரிவார தேவதைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இசக்கி கதை [106] வன்னிராசன் கதை [107] என்பன நெல்லை மாவட்டத்து மக்கள் மத்தியில் பெருவழக்குப் பெற்றுத் திகழ்பவை. இக்கதைகளின் நாயகி, நாயகரும் அம்மனுக்குப் பரிவாரமாக

இயம்பப்பட்டுள்ளமை சமூகத்தில் வாழ்ந்து மறைந்த இசக்கி, வன்னிராசன், ஆகியோர் தெய்வமாகவே மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டு, அம்மனுக்குப் பரிவார தேவதைகளாகவும் அமைக்கப்பட்டுள்ளனர் எனலாம்.

இவ்வாறு இசக்கி, வன்னிராசன் எனும் வன்னியன் போன்றவர்களின் வரலாறுகள் கதைப்பாடல்களாகப் பாடப்பட்டு, மக்கள் மத்தியில் சிறப்புப் பெற்று, அக்கதை மாந்தர்களும் தெய்வங்களாகவே மக்களால் போற்றப்பட்ட காலத்தில் அவர்கள் அம்மனின் பரிவார தேவைகளாக உரைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு முழு அளவு வளர்ச்சிபெற்ற பிற்பட்ட காலகட்டத்திலேயே இவ்வம்மன் கதைப்பாடல் முகிழ்த்ததெனத் தெரிவதால், பிற அம்மன் கதைப் பாடல்களில் காணப்பெறாத இவ்வமைப்பு நிலைகள் இக்கதைப்பாடலில் காணப்பெறுவதால் பிற அம்மன் கதைப்பாடல்களிலும் பிற்பட்ட காலத்தது இது என்பது தெளிவாகின்றது.

தேவதைகளல்லாத பிற, பரிவாரங்களாகி உடன்வரல்

தேவதைகளும், மானிடராய்ப் பிறந்து, இறப்பின் பின்னர் தெய்வங்களாக ஆக்கப்பட்டட இசக்கி, வன்னிராசன் போன்றவர்களும் அம்மனின் ஊர்வலத்தின்போது பரிவாரங்களாக வந்தன என அமையும் நிலைகள் தவிர, தேவதைகளல்லாத வேறு பிறவும் பரிவாரங்களாகி உடன் வந்தன என அமையும் அமைப்புக்களைக் காண்கிறோம், கூளி, கூளைப்படை, பூதகணங்கள் என்பன பரிவாரங்களாகி வந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளன.

> "களியும் பூதப்படையுங் காளியு முன்னேநடக்க" (வரி.824)
>
> "கூளி காளி வேதாள பூதமும்" (வரி.967)

---

106. சு. எண். 8019, 8437, கே.ப.சு.,

107. சு.எண். 8017, கே.ப.சு.,

"திசைக்கு எடங்காத திசைபல கூளிகாளி" (வரி. 1240)

"ஒறப்பட் டேவருங் காளிகள் கூளிகள்
ஒட்டியே மேளங் கொட்டியே முன்வர" (வரி.1555)

"புகையா யனலெரிக்கப் பூதங்கள் முத்தை விரைக்க" (1636)

"புறப்பட்டாள் கூளைப் பாளைய முன்செல்லவே
பூதங்கள் சங்குநாத முழக்கவே" (1550–1551)

என்றமைந்துள்ள வரிகள் இதனைத் தெளிவுபடுத்தும். அம்மனைப் பெருந்தெய்வ நிலையோடு இணைத்து, அம்மனைச் சக்தியின் அம்சமெனவே மக்கள் ஏற்றுக்கொண்ட நிலையின் பின் இக்கதைப்பாடல் எழுந்துள்ளதான் சக்தி வடிவாய காளியோடு தொடர்புடைய கூளைப்படைகள் அம்மனுக்குப் பரிவாரமாக இணைக்கப்பட்டுள்ளன. எனலாம்.

தவிர அம்மனுடன்,

"கன்னடந் தமிழோதிய பூதியர்"(1474)

"கவிவாணர் " (1475)

"ஆலத்திப்பெண்கள்" (831) (ஆரத்தி எடுக்கும் பெண்டிர்)

"சாமரை, விசிறி வீசுபவர்" (832)

"பாவாடைஏந்துபவர்" (832)

"காளாஞ்சி காட்டுபவர்" (833) (தாம்பலந் துப்பும் கலம்)

"கட்டியக்காரர்" (833)

"பன்னீர்ச் செம்பு, வெண்னீர்க்காரர் (834)

"அடப்பைக்காரர்" (834) (தாம்பூலம் மடித்துத் தருபவர்)

"வெடிக்காரர்" (வாண வேடிக்கை நிகழ்த்துபவர்)

"ஆலிப்பாத்தடிக்காரர்" [108] (பொம்மை யுருவங்கள் கொண்ட தடியுடையார்)

"கீதம் பாடும் நாவலர்கள்" (860)

போன்றோரும் உடன் வந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது.

அம்மன் கோயில் விழாவின் போது நடக்கும் ஊர்வலத்தில் பக்தர்கள், இன்னிசைப் பாடல் பாடுபவர்கள், வெடி முழக்குபவர்கள், ஆலிப்பாத்தடிக்காரர் போன்றவர்கள் உடன் வருதலை இன்றும் கண்கூடாகக் காண்கிறோம். இத்தகு விழாச் செய்கைகளை மனத்துட்கொண்டு, அம்மன் கதையாக அம்மன் பிறந்து வளர்ந்து பல நாடுகளுக்கு யாத்திரையாகவும், அம்மை நோய் பரப்புமுகமாகவும் செல்லும்போது இத்தகையோரெல்லாம் உடன் வந்தனர் என ஆசிரியர் தன் காலத்து விழாவில் நடந்த செய்கைகளை அம்மன் ஊர் ஊராய் அம்மைநோய் பரப்பி ஊர்வலம் வந்தாள் என்ற கற்பனை அமைப்புக்கு ஏற்றி உரைத்துள்ளார் எனலாம்.

ஆயின் இதனால் அம்மன் கோயில் விழா நிகழ்ச்சிகள் எம்முறைப்படி, கதை எழுந்த காலத்தில் நடைபெற்றிருக்கும் என்ற சமய வரலாற்றுண்மை நமக்குத் தெரியவருகின்றது.

தெய்வ ஊர்வலம் இடம்பெறும் நிலைகள்

அம்மன்கள் இருவரும் ஊர்கள் தோறும் சென்று,

(1) அம்மை நோய் பரப்பல்

(2) தல தெய்வங்களைத் தரிசித்தல்

(3) ஆங்காங்குள்ள தெய்வங்களால் தரிசிக்கப்படல்

---

108. Huge hollow figure, like a man or woman, worn usually by dancers leading a procession in connection with temple festivals.

என்ற இம் முந்நிலைகளை விவரிப்பதாகவே கதைப்பாடல் அமையினும், அம்மன்களின் ஊர்வலத் தோற்றம் 10 இடங்களில் [109] விரிவாகப் பேசப்படுகின்றன.

சிவபிரானிடம், அம்மன்கள் இருவரும் மக்களிடம் பரப்புவதற்காக அம்மை நோய்முத்துக்களையும் தமக்கு வேண்டிய பரிவார தேவதைகளையும் வரம் வேண்டிப் பெற்றபின்னர் அங்கிருந்து புறப்பட்டு வரும் நிலை,

"உருகுகின்ற தங்கநிற மேனியாய்
ஒன்று பத்துநூ றாயிரங் கோடிபோல்
கோடிகோடி கணங்கள் நெருங்கவே
கூளி காளிகள் மேள முழக்கவே"

(511–514)

"வரவே பல்லக்குச் சிவிகையர்கள் பூதங்கள்
வாய்த்த வெள்ளிலைப் பிறமடல் காளாஞ்சி
ஒரமாவாலவட்டம் பரிசைபோல் கவரிகள்
உத்தபூத கெணங்கள் பணிமாற
... ...
சத்திமுத்துக்கு வித்துமுத் தாகிய
தேவி முத்துக் கயிலாசம் போத்தியே
பத்தி யாகப் படைகள் நெருங்கவே
பவுருசு தன்னைப் பகர முகியுமோ"

(543–558)

என்றிவ்வாறாக விவரிக்கப்பட்டுள்ளது.

---

109. வரி எண்கள்:- 505-520, 543-558, 793-862, 1048-1050, 1450-1453, 1550 - 1555, 1571-1573, 1621, 1630-1631, 1986-1687.

இவ்வாறு வந்தவள் மேருவை வலம் வந்து, பூவுலக நாடுகள் ஒவ்வொன்றுக்குமாகச் செல்லும் முன்னர் ஆடை, ஆபரணங்களால் அணி செய்யப்பட்ட நிலைகளும், பின் பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளி ஓரோர் நாட்டுக்கும் சென்ற நிலைகளும் கீழ்க்காணுமாறு விவரிக்கப்பட்டுள்ளன.

"உரிசப் பழங்கனிந்து ஊறுமிதழ்க் கனிவாயும்
உலவுங் குமிழ்மூக்கில் உச்சிதமூக் குத்தியிட்டு
இட்டகமு கங்கழுத்துக் கிணங்கப்ப னுதிவிட்டு
ஏகவடஞ் சீனமணி யெருக்கலை மாலையிட்டு
வட்டவளை யல்பவளம் வளமைக் கடையமிட்டு
மன்னியபொன் மோதிரமும் மலர்விரல் தோறுமிட்டு"

(799– 804)

என அணிந்த அணிகல விபரமும்,

"கட்டு வண்ணப் பட்டுடுத்து வட்டமுலைக் கச்சணிந்து
காரிகைக்குப் பொன்னரைஞாண் கட்டியுடுத் தாரமிட்டாள்
உடுத்தாராம் ருத்திரபந்தம் யோக வேட்டி யொட்டியாணம்
உலகீன்ற முத்துத்தாய்க்கு உண்மைபெற வேயணிந்து"

(807 – 810)

என ஆடை அலங்கார நிலையும்.

"பரவை யுடைத்தது போல் பத்துலெட்சங் கோடிகணம்
பஞ்சவர்ணத் தீவட்டிக லஞ்சாம லெடுத்துவர
அரவக் கொடிநிழுத்த அலகைக் கொடிநடக்க
அக்கினிக் குமாரன் சந்தணக்குமாரன் கொக்கரிக்க
சரவைக் கிணங்கும்பொன்னின் சந்திரவட்டந் தானெருங்க
சக்கரவாளக் குடையு மிக்காடலு மொக்கவர"

(825–830)

என அம்மன் பரிவாரங்கள் புடைசூழ வந்த திருக்கோலமும் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இன்னும் உள்ள வேறு இடங்களிலும் அம்மன் ஓரோரிடம் விட்டுப் புறப்படும் நிலைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக அம்மன் வரம்பெற்றுக் கொண்டும், அணிசெய்து கொண்டும், பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளி பல்வேறு இடங்களுக்கும் வலம் வந்தாள் என்ற இத்தகு நிலைகளைக் கதைப்பாடலாசிரியர் குறிப்பிடத் தக்க அளவுக்கு அமைப்பதற்குப் பல கூறுகள் காரணமாதல் கூடும்.

(1) தெய்வம் புறப்படும் நிலைகளைப் பன்முறை கேட்கும் விருப்பு கொண்ட மக்களுக்கு அவ்வாவலை நிறைவேற்று முகமாகவும்,

(2) இவ்வாறாறெல்லாம் தெய்வப் புறப்படுகைகள் அமைந்தன என அடிக்கடி விவரிப்பதால், கதையைக் கேட்கும் அல்லது கதைப்பாடலைப் படிக்கும் மக்கள், அம்மன் கோயில் திருவிழாக்களின் போது அம்மனின் ஊர்வலமாகப் புறப்பட்டு வரும் திருக்கோலத்தை நேரில் காணுவது போலவே உணர்ந்து, தெய்வ தரிசனம் பெற்றதாகவே பக்தியில் மூழ்கித் திளைப்பர் என்ற எண்ணத்தாலும்,

(3) அம்மன் ஊர் ஊராகச் சென்று அம்மை நோய் பரப்புதலும், தலதரிசனம் செய்வதும் என்பனவே கதைப்பொருண்மையாக அமைதலின், கதை நிகழ்ச்சிகளாக இத்தகு புறப்பாட்டு நிலைகள் அமைக்கப்படுதல் தேவையாக உள்ளதாலும் விவரிக்கப்பட்டுள்ளன எனலாம்.

தெய்வ ஊர்வலத்தில் இசைக்கருவிகள் பெறும் இடம்

அம்மன் வரம் வாங்கி மீளும்போதும், ஓர் ஊரை நோக்கிச் செல்லும் போதும் என்றித்தகு இடங்களில் இசைக் கருவிகள் முழங்கி ஒலித்ததாகக் குறிப்புக்கள் உள்ளன. "முத்தாரம்மன் கதையில் இசைக்கருவிகள் பெறும் இடம்" என்ற தலைப்பின்கீழ் எத்தனை இடங்களில், எத்தனை கருவிகள் இக்கதைப்பாடலில் இயம்பப் பட்டுள்ளன என்பனவெல்லாம் விவரமாகத் தரப்பட்டுள்ளன.

தெய்வம் புறப்படுகையில் இத்தகைய இசைக்கருவிகளெல்லாம் முழங்கி ஒலித்தன எனக் கூறுவது,

(1) தெய்வத்துக்கும் இசைக்குமுள்ள நெருங்கிய தொடர்பு குறிப்பதாகவும்,

(2) இசை மனத்துக்கு மகிழ்வும், உற்சாகமும் அளிப்பதாதலால் தங்கள் மனத்துகந்த இறையோடு தொடர்புடைய காரியங்களுக்கும் இசையைப் பயன்படுத்தி மகிழ்ந்திருக்கின்றனர் என்பதும்,

(3) இன்றும் தெய்வ ஊர்வலத்தின் போது இசை தக்கதொரு இடம் பெறுகின்றதாதலின், ‘முத்தாரம்மன் ஊர் ஊராய் வலம் வந்தாள்’ என்றமைந்த கதைப்பாடலிலும் இசைக்கருவிகள் முழங்க அவள் வந்தாள் எனக் கதைப்பாடலாசிரியர் கூறியிருக்கிறார் என்பதும்,

(4) மனத்தைத் தன்பால் ஈர்க்கும் இசையை இதே தன்மை கொண்ட இறைக்கு அர்ப்பணித்து அதில் மகிழ்வடைந்திருக்கின்றனர் மக்கள் என்பதும்,

(5) மொழிக்கு முன்னர் தொன்மை கொண்ட ஒலியின் குழவியாய இசையை, தெய்வக் காரியங்களில் குறிப்பிடத் தக்க இடம் வகிக்குமாறு பயன்படுத்தியுள்ளமை தொல் இன மக்கள் தொடர்புடைய பழமை வாய்ந்த செயல் இது என்பதும் புலனாகின்றது.

அம்மன் தரிசித்த தெய்வங்கள்

இரு அம்மன்களும் கயிலையில் சிவபிரானிடம் வரம் பெற்ற பின்னர், ஒரோர் இடங்களாகக் கடந்து வந்தனர் என அமையும் ‘கதைப்பாடல் போக்கில்’ கூறப்படும் ‘இடங்கள் கடத்தலை’ இருநிலைகளாகப் பிரிக்கஇயலும்.

- தெய்வத்தலங்கள்
- அம்மை நோயை விதைத்த இடங்கள்

என அவை அமையும். இவ்விருவகை நிலைகளிலும் அமையும்

இடப்பெயர்கள் அம்மன் செல்லும் முறைப்படியும், அகரவரிசைப்படியும் தொகுத்துப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

தெய்வத் தலங்களை அம்மன்கள் இருவரும் கடந்தனர் எனும்போது ஆங்காங்குள்ள தல தெய்வங்களைத் தரிசித்துச் சென்றனர் எனக் கூறும் முகமாக, அவ்வத் தல தெய்வப் பெயர்கள் இயம்பப்பட்டுள்ளன. இக்கதைப்பாடலில் மொத்தம் 91 தெய்வங்களை அம்மன் இருவரும் தரிசித்துக்கொண்டு சென்றதாக 65 இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

864, 871–873, 885–892, 901–906, 908–909, 914–916, 918–919, 926–937, 1040–1041, 1052–1059, 1067–1071, 1072–1073, 1086–1088, 1095–1105, 1125–1161, 1164–1171,1182–1183, 1186–1187, 1188–1189, 1195–1206,1291–1292, 1293–1297, 1299–1301, 1322, 1337, 1396–1397, 1414, 1418–1420, 1428,1433–1434, 1437–1439, 1445–1447, 1460–1461, 1499–1508, 1540 – 1543, 1558–1561,1590–1591, 1601, 1602, 1609–1610, 1614, 1615–1616, 1618–1621, 1672–1675,1680–1681, 1683, 1698–1700, 1709, 1720–1722, 1723, 1729–1735, 1759, 1762–1763, 1772–1773, 1776–1777, 1781–1782, 1822–1825, 1827, 1861–1862, 1863–1866, 1875–1878, 1879–1981, 1921–1924.

என்ற இத்தகு வரிகளில் தலப்பெயரும், அவ்வத்தல இறை, இறைவி பெயர்களும் உரைக்கப்பட்டுள்ளன. 'அம்மன் தரிசித்த தல தெய்வங்கள்' என்ற தலைப்பின்கீழ் தெய்வப் பெயர்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டு பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரே தெய்வப்பெயர் இடம்பெறும்போது தெளிவுக்காகத் தலப்பெயர் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது.

(1) சில இடங்களில் தல தெய்வப் பெயரின்றி தலம் மட்டும் குறிப்பிட்டுச் செல்லும் போக்கும் உள்ளது.

(2)
காணல்)
கடத்தல்) என்ற முந்நிலைகளில்
வணங்கி வழிபடல்)

தலப்பெயர்கள், தல தெய்வப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

(1) வணங்கி வழிபடல் என்ற நிலையில் குறிப்பிட்ட தல தெய்வத்தை அம்மன்களிருவரும் வணங்கிய பின்னர் அம்மன்களுக்கும், அவளுடன் வரும் படைகளுக்கும் அத்தெய்வம் விருந்தளிப்பதாக அமையும் நிலைகளைக் காண இயலுகின்றது.

அம்மன் அயோத்திப் பதியில் அங்கம்மனைக் கண்டு ஆரத் தழுவிக் கொள்ள,

"செண்டு பிடித்தனள் அங்கம்மனுஞ்
சிகத்தில் குருநாத சிங்கத்துக்கு
உண்டு களித்திட விருந்தளித்து
உத்த சேனைக்குஞ் சோறளித்தாள்" (929 – 932)

என்றும், அம்மன் கன்னியாகுமரி சென்றபொழுது,

"வண்டு கிண்டுங் குழலாள் பகவதி
மங்கை முத்துடன் வந்த சனத்துக்கும்
எண்டிசைக்குங் கொள்ளாத படைக் கெல்லாம்
இருந்து கொண்டு விருந்து கொடுத்தனள்"

என்றும் அமையும் நிலைகள் காணத்தக்கன.

மனிதர்கள் தம் இனத்தாரைக் காண ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்துக்குச் செல்லும்போது இல்லம் நோக்கி வந்தவர்களுக்கு விருந்தளித்துப் படைத்தல் மரபு. தெய்வங்களும் மனிதர்போல ஒரு தெய்வம் இன்னொரு தெய்வத்தைக் காணச் சென்றது என்றபொழுது, அவையும் விருந்தோம்பின என, மக்கள் வாழ்வியல் நடப்பு நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளன. கதைப்பாடலைக் கேட்கும் மக்கள், தெய்வத்தின் செயல்களைத் தம் வாழ்வு நிகழ்ச்சிகளாகக் காணும்போது மகிழ்வெய்துவர்; எளிமையாகப் புரிந்துகொள்வர் என்ற எண்ணத்தோடு இத்தகு நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டுள்ளன எனலாம்.

தெய்வங்களைக் கண்டுகொண்டு செல்லும்போது குறிப்பிட்ட சில தெய்வங்களை உறவாக ஆக்கிக்கொண்டு சென்றாள் என்றும் அமைகின்றது. அயோத்திப் பதியிலுள்ள,

"சடைத் தலைச்சி அங்காளம்மனை
தங்கை தமக்கையாய் மேவிக்கொண்டு" (936–937)

சென்றதாகக் காணப்படுகின்றது.

மானுடர் போன்று தெய்வங்களும் உறவுமுறை கொண்டாடின எனக் கூறி, மக்கள் வாழ்வியல் நிகழ்ச்சிகள் தெய்வத்தின் பேரிலும் ஏற்றிக் கூறப்பட்டு, தெய்வக் குணநலன்களைக் கதை கேட்கும் மக்கள் எளிதில் புரிந்துகொள்ளவும், தம்மைப்போலவே அவையும் என்று மகிழவும் ஏற்ற வகையில், இவ்வகை அமைப்புக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன எனலாம்.

இவ்வாறு அம்மன் பல தலங்களுக்கும் சென்று பல தெய்வங்களையும் தரிசித்துக் கொண்டு சென்றாள் எனக் கதைப்பாடல் நிகழ்ச்சிகளை அமைத்திருப்பதற்குப் பல கூறுகள் காரணமாதல் கூடும்.

(1) கதைப்பாடல் நாயகன் அல்லது நாயகியின் பிறப்பருமை கூறுமுகமாக அவர்களின் பெற்றோர் பல்வேறு தலங்களுக்கும் சென்று குழவி வரம் வேண்டுவதாகவும், அதன் பலனாய் மகவு வரம் கிடைத்தது என அமைவதும் கதைப்பாடல் மரபுகளில் ஒன்றாகும்.[110] பல்வேறு தலங்களையும் அம்மன் தரிசனம் செய்துகொண்டு சென்றாள் என விரிவாகக் கூறும் அமைப்பு இத்தகு கதைப்பாடல் மரபின் வளர்ச்சியேயாதல் வேண்டும்.

(2) பல்வேறு தலங்களையும், தல தெய்வங்களையும் கதைப் பாடலில் கூறுவதான், கேட்கும் மக்களுக்குப் பல்வேறு தலங்களுக்கும் நேரில் சென்று ஒரோர் தலத்துள்ள இறை, இறைவியை வணங்கிய மனநிலையை, மகிழ்ச்சியை அளிக்கும் நோக்கத்தாலும் அம்மனின் தலதரிசனம் அமைக்கப்பட்டிருத்தல் கூடும்.

---

110. சிதம்பரநாடார் கதை, Op.Cit., லெச்சுமியம்மன் தவநிலை, சு.எண். 296. உ.த.நி.சு., போன்ற கதைப்பாடல்களில் இத்தகு கதைப்பாடல் மரபுகள் ஆளப்பட்டுள்ளதைத் தெளிவாகக் காணலாம்.

(3) சைவம், வைணம் என்ற சமய வேறுபாடற்று, பல்வேறு தலங்களையும், தலதெய்வங்களையும் அம்மன் தரிசித்தாள் என்பதான், சமய ஒருமைப்பாட்டு எண்ணத்தை விதைத்து, அம்மன் இருசமய வேறுபாடற்றவள் என்ற பொதுமையை மக்களுக்கு உணர்த்தலும் நோக்கமாதல் வேண்டும்.

(4) கதைப்பாடல்கள் சிற்றிலக்கியகாலகட்டத்தின ஆதலின், அவற்றின் தாக்கம் கதைப்பாடல்களில் பல்வேறு கோணங்களில் நிகழ்ந்துள்ளது. சிற்றிலக்கிய வகையினவான தலபுராணங்கள், தலதெய்வங்களின் மகிமைகளைப் பற்றிப் பேசுவது. அம்மன் கதைப்பாடலிலும் இத்கு அமைப்பு உள்ளமைக்குத் தலபுராணத் தாக்கம் காரணமாகலாம்.

அம்மனைத் தரிசித்த சிறுதெய்வங்கள்

அம்மன் ஒரோரிடமாகத் தலதரிசனம் செய்துகொண்டும், அம்மை நோய் பரப்பிக்கொண்டும் செல்லும்போது அங்குள்ள பல தெய்வங்கள் அம்மனைவந்து வணங்கிச் சென்றதாகக் குறிப்புக்கள் உள்ளன.

இவ்வாறு 33 தெய்வங்கள் அம்மனை வந்து தரிசித்ததாக 18 இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

1421,1486–1487, 1489–1493, 1690–1697, 1704–1706, 1714–1715, 1716–1719, 1736–1739, 1751–1755, 1768–1771, 1812–1815, 1816–1820, 1828, 1831–1843, 1939,1941–1942, 1947, 1964–1966.

என அப்பதினெட்டு இடங்களில் வரி எண்கள் அமையும்.

தெய்வங்களின் பெயர்கள் "அம்மனைத் தரிசித்த சிறு தெய்வங்கள் – அகரவரிசை" என்ற அமைப்பின்கீழ் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

அம்மனுக்குப் பரிவாரங்களாக 45 தேவதைகளை இயம்பி, அம்மனைப் பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்தியுள்ளது போன்று, ஆங்காங்குள்ள 33 தெய்வங்கள்அம்மனை அவ்வவ்விடங்களில், அம்மன் வந்தபோது கண்டு வணங்கின என்பதான், அம்மனைப்

பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்த, மேலும் ஒரு படியாக இவ்வமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

இதிலும் உலகம்மன், கயிலாசநாதர், பிரதிவிநாயகன், வெத்திவேலய்யன் போன்ற பெருந்தெய்வங்களும் அம்மனை வந்து வணங்கின என்பதால், இப்பெருந்தெய்வங்களை விடவும் உயர்ந்த நிலைக்கு அம்மன் ஏற்றப்பட்டிருக்கிறாள் எனக் கருதலாம்.

அம்மன் வரும்பொழுது எதிர் கொண்டழைத்துத் தரிசித்த தெய்வங்கள், அம்மனுக்கு அமுது முதலியன படைத்து உபசரித்தும், வழியனுப்பி வைத்ததாகக் கூறியும் அம்மன் சிறப்பிக்கப்படுகின்றாள்.

"வளமான கயிலாச நாதர் சுந்தரபாண்டி
மாய சுந்தராச்சி மாதங்கியும்
நளபாக மாகவே அமுதுகொண் டேகியே
நற்கிருடத்தே நாகலா தேவியும்
உளமாக அமுதிட உண்டுமுத் தம்மனும்
உயர்களந்தைப் பதியினில் சென்றனள்"

(1816 – 1821)

என்றும்,

"கருக்குங் குழலிமுத்து கறுப்பியம்மனைக் கண்டாள்
பிணங்கிவரும் படைக்கும் பேர்வளர்முத் தம்மனுக்கும்
பிசகாம லேயமுது மசகாம லேகொடுத்தாள்
கொடுத்தபின் பூதகெணம் எடுத்துமதுக் குடிக்கக்
கூர்த்தலைக் கூளிகாளி குட்டிக்கரணங் கள்போட"

(1831– 1835)

என்றும் அமையும் வரிகள் சான்றாகும்.

தெய்வங்களுடன் அவ்வவ் நாட்டு மன்னர்களும் வந்து ஏற்றிப்

போற்றிப் பூசை செய்ததை,

"வரகுண பாண்டியனும் வந்து போற்றிடவே
பாண்டியன் சேரன் சோழன் பணிந்தேற்றும்
மங்கையாஞ் சேரமுத்து நங்கை நாயகியும்"

(1739–1741)

என்ற வரிகள் தெளிவுறுத்துகின்றன.

இஸ்லாத்திலிருந்து இந்துவாக மாறி, மறைந்து தெய்வமாய 'ராவுத்தப் போற்றி' என்ற தெய்வமும் வந்து அம்மனைத் தரிசித்துச் சென்றதை,

"வருராவுத்தப் போற்றி வந்துச்லா மெனவே " (1753)

என்ற வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தெய்வக் கதைப்பாடல்களுள்ளும், அம்மன் கதைப்பாடல் களுள்ளும் இவ்வம்மன் கதைப்பாடலிலேயே பெருவாரியான தெய்வப்பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன எனலாம்.

பெரிய, சின்ன முத்தாரம்மன்கள்	–	2
பரிவார தேவதைகள்	–	45
அம்மன் தரிசித்த தலதெய்வங்கள்	–	91
அம்மனைத் தரிசித்த சிறுதெய்வங்கள்	–	33
		171

ஆக 171 தெய்வங்களைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

இவ்வாறு மிகுதியான தெய்வப்பெயர்கள் இடம்பெறுவது கதைப்பாடல் மரபாய 'ஆட்பெயர் அடுக்கல்'என்பதை அடியொற்றி அமைக்கப்பட்டதாகலாம்.

அறிய வரும் கருத்துக்கள்

(1) தெய்வக் கதைப்பாடலாய, பதிப்பிக்கப்பெற்றுள்ள இம்முத்தாரம்மன் கதைப்பாடல் அம்மனின் ஆற்றலைப் புலப்படுத்தி, அவள் புகழ் பரப்பும் நோக்கத்துடன், அவளை அக்கால கட்டத்திலெழுந்த தெய்வங்களின் இணைப்புத் தெய்வமாக, சிறுமரபுத் தெய்வங்கள் எனப்படும் நாட்டுப்புறச் சிறுதெய்வங்களுள் முதன்மை இடம் வகிக்கும் தெய்வமாக, பல்வேறு நிலைபட்ட ஆண், பெண் சிறுதெய்வங்களின் தலைமைத் தெய்வமாக அம்மன் படைக்கப்பட்டுள்ள தன்மை காண்கிறோம்.

(2) உள்ள அம்மன் கதைப்பாடல்களில், இக்கதைப்பாடலிலேயே அம்மன், இருவேறு அம்மைகளான சின்னம்மை, பெரியம்மை என்பதற்கியைய, பெரிய முத்தம்மன், சின்ன முத்தம்மன் என இருவேறு நிலைகளாகப் பிரித்துப் படைக்கப்பட்டு, கதை முடிவு வரை அப்பிரிப்பு நிலை சீராகப் புலப்படுமாறும் அமைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் தெளிவாக வேறுபாடு விளங்குமாறு இருவேறு அம்மைகளின் குணநலன்கள் அடிப்படையில் இரு அம்மன்கள் படைக்கப்பட்டுள்ள இந்நிலை, இக்கதைப்பாடல், அம்மைக்கு ஓரம்மன் என்ற நிலையிலமைந்த பிற அம்மன் கதைப்பாடல்களினின்றும் பிற்பட்ட நிலையினது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. இருவேறு அம்மை நோய்களுக்கிடையே, இருவேறு தெய்வ அமைப்புக்கள் உருவாகி, நோய் நீக்கப்படல் வேண்டும் என்ற தேவையால், இந்து சமயத் தெய்வக் கூட்டத்தில் மேலும் இரண்டு தெய்வங்கள் எழுந்திருக்கின்றன. மனிதத் தேவைகள், நோயால் விளையும் மரணத்தால் தோன்றும் அச்சம் தெய்வங்களைத் தோற்றுவித்து, மனித மனங்களில் அச்சமே பக்திக்கு அடிப்படை என்ற கருத்துக்குத் தக்கதொரு சான்றாக இக்கதைப்பாடல் திகழ்கின்றது எனலாம்.

(3) தெய்வக் கதைப்பாடலான இதில் தெய்வப் பெயர்கள் ஆங்காங்கு அடுக்கிக் கூறப்பட்டுள்ளன. மொத்தம் 171 தெய்வப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. பிற எவ்வம்மன் கதைப்பாடலிலும் காணப்படாத சிறப்பு நிலையாகும் இது.

(4) கதைப்பாடல் நாயகியான அம்மனுக்குப் பல சிறு

தெய்வங்களைப் பரிவாரமாகக் கூறி, அப்பரிவார தேவதைகளினின் றெல்லாம் உயர்ந்தவள்; தலைமை சான்றவள் என அம்மனைக் கூறிச் சிறுதெய்வங்களினின்றும் உயர்ந்த ஒரு பெருந்தெய்வமாக அம்மனைப் படைத்துள்ள திறம் தெரிவருகின்றது.

(5) சிறு தெய்வங்களை மட்டுமன்றிப் பெருந்தெய்வங்கள் என்று கருதப்படுவனவற்றையும் அம்மனின் பரிவாரங்களாகக் கூறியுள்ளமை யின், பரிவாரங்களாகக் கூறப்பட்ட அப் பெருந்தெய்வங்களுக்கும் பெருந்தெய்வமாக அம்மன் உயர்த்தப்பட்டிருக்கிறாள் எனலாம்.

(6) அம்மனின் அம்சங்களே பரிவாரங்களாகக் கூறப்பட்டுள்ளமை யின், அம்மன் படைப்பிலிருந்து பல அம்சங்கள் கிளைத்திருக்கின்ற வளர்ச்சி நிலை புலனாகின்றது.

(7) பரிவார தேவதைகள் எவ்வரிசை முறைப்படி அம்மனுடன் சென்றன என்பதும், எப்பரிவார தேவதை எப்பணி புரிந்தது என்பதும்கூடத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளமையின், அம்மனைப் பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்தும் நோக்கு ஒன்று கருதி மட்டுமே பிற சிறுதெய்வங்கள் பரிவாரங்களாக உரைக்கப்படவில்லை என்பதும், பரிவாரங்களாக அமைந்து நல்வளர்ச்சியுற்ற நிலைக்குப் பின்னரே, இக்கதைப்பாடல் எழுந்துள்ளது என்பதும் தெளிவாகின்றது.

(8) பரிவார தேவதைகளின் குணநலன்கள் பற்றிய குறிப்புக்களும் கிடைப்பதால், இத்தகு நாட்டுப்புறச் சிறு தெய்வங்களைப் பற்றிய செய்திகள் மக்கள் மத்தியில் தெளிவான கோலத்தில் நிலவி வந்திருக்கின்றது என்பதும், இத்தகு தெய்வங்களே நாட்டுப்புற மக்களின் தெய்வங்களாக வணங்கப்பட்டிருக்கின்றன என்பதும் தெளிவாகின்றது.

(9) இக்கதைப்பாடலில் வேறுசில கதைப்பாடல்களின் நாயக, நாயகியரும் பரிவாரங்களாக உரைக்கப்பட்டுள்ளமையின் பரிவார தேவதைகளாக உள்ளவைகளெல்லாம் ஒரு காலத்தில் வாழ்ந்து மறைந்த மனிதகுல வர்க்கத்தினரின் சின்னங்களே என்பது தெளிவாகின்றது.

(10) அம்மன் ஊர் ஊராக வலம் வரும்போது பரிவார தேவதை களல்லாத வேறு பலரும்கூட உடன் வந்தனர் என அமைவது கோயில்

விழாவில் அம்மன் ஊர்வலத்தில் அமையும் நிலைகளை உட்கொண்டமைந்த அமைப்பாகலாம்.

(11) 'அம்மன் ஊர் ஊராய் வலம்வரல்' என்பதே கதை நிகழ்ச்சிகளாக அமைந்து கதையை உருவாக்க, அம்மைநோய் பரப்பல், அம்மன் தல தெய்வங்களைத் தரிசித்தல், அம்மனை ஆங்காங்குள்ள பிற சிறு தெய்வங்கள் தரிசித்தல் என்ற முந்நிலைகளில் கதை நிகழ்ச்சிகள் பின்னப்பட்டிருக்கின்றன.

(12) 'அம்மன் தலந்தோறும் செல்வதாக அமைதல்' கதைப் பாடல் மரபை, தலபுராணத் தாக்கத்தை நினைவூட்டுகின்றது.

(13) தெய்வப்பெயர்கள் பெருவாரியாகக் கூறப்பட்டிருத்தலும் கதைப்பாடல் மரபையும், இது ஒரு தெய்வக் கதைப்பாடல் வகையினது என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

முத்தாரம்மன் கதைப்பாடற் சுவடிகள் – ஓர் ஒப்பீடு

சிறு தெய்வங்களுள் தலைமையிடம் வகிப்பதுஅம்மன் எனும் தெய்வம். மாரியம்மன், முத்தாரம்மன், முத்தாலம்மன், முத்து மாரியம்மன், முத்து மாலையம்மன் என்று இடத்துக்கு இடம் வெவ்வேறு பெயர்களால் வழங்கப்படினும், அனைத்தும் ஓரம்மனின் பல்வேறு பெயர்களே. மாடன் (சுடலை மாடன் கதை) [111] சாத்தன் எனும் ஐயனார் (சாஸ்தா கதை) [112] என்ற வேறுசில தெய்வங்களுக்கும் கதைப்பாடல் உள்ளது எனினும், தெய்வக் கதைப் பாடல்களில் அம்மன் கதைப்பாடல் தனித்ததொரு இடம்பெற்றுச் சிறப்புடையதாகின்றது.

அம்மன் கதைப்பாடல்கள் கிடைக்குமிடங்கள்

உடைநடை வடிவில் அமையும் மாரியம்மன் கதைபோன்றன பிற மாவட்டங்களில் இன்றும் வாய்மொழியாக வழங்கப்பட்டு வரினும், கதைப்பாடல் வடிவில் அமையும் அம்மன் கதைப்பாடல்களை நெல்லை, கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளிலேயே காணமுடிகின்றது. முத்தாரம்மன் கதை, முத்தாரம்மன் விற்கவிதை என்ற தலைப்புக்களுடன் பல சுவடிகள் இப்பகுதிகளில் கிடைக்கின்றன. அம்மன் கோயில்களில் நடக்கும் கொடைகளிலும் (விழாக்கள்) வில்லுப்பாட்டாக இக்கதைப்பாடல்கள் இன்றளவும் பாடப்பட்டும் வருகின்றது.

நெல்லை, கன்னியாகுமரிப் பகுதிகளில் மட்டும் இவ்வம்மன் கதைப்பாடல்கள் கிடைக்கக் காரணம்

அம்மனைக் குறித்த பதிகங்கள், வர்ணிப்புக்கள், வரலாறுகள், எச்சரிக்கைகள், ஊஞ்சல்கள், பாட்டுக்கள், விருத்தங்கள் [113] என்பன

---

111. சு.எண். 8029 - வாணதீர்த்தக் கரைப்புலையன் சுடலையாண்டி கதை. (கே.ப.சு) சுடலை மாடன் கதை. சுடலையாண்டி கதை என்பனவும் உள.

112. சு.எண். 8430 - சாஸ்தா கதை (கே.ப.சு)

" 8022 - சாஸ்தாவின் கதை "

" 62 - " ". (ஆ.ஆ.நி)

சாஸ்தா கையனார் கதை வில்லுப்பாட்டு. (தொ.பொ. என்ற சுவடிகள் உள்ளன.

113. அம்மன் குறித்த இத்தகு பாடல்களின் (சுவடிகளிலுள்ளவை மட்டும்) பெயர்கள் அவை உள்ள இடங்களுடன் குறிப்பிடப்பட்டுப் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன

அனைத்து மாவட்டங்களிலும் கிடைத்தாலும் அம்மனின் வாழ்க்கை வரலாற்றைக் கதைப்பாடல் வடிவில் பாடும் அமைப்பு கிடைப்பது, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் மட்டுமாகவே உள்ளது. இதற்குக் கீழ்க்கண்ட நிலைகள் காரணமாதல் வேண்டும்.

(1) இம்மாவட்டங்களில் இன்று வழங்கிவரும் பல்வேறு நாட்டுப் புறக் கலைகள், பல கதைப் புதையல்களைச் சாத்து வந்திருக்கின்றன என்று சொல்லலாம்.

அவற்றுள் 'வில்லுப்பாட்டு' என்றும் 'வில்லடிச்சான் பாட்டு' என்றும் கூறப்பெறும், இம்மாவட்டத்தில் சிறந்து செழித்து இன்று வரையும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் இசைக்கலை மூலம் பலவித (இதிகாச, புராண , சமூக, வரலாற்றுத் தொடர்புடையன) கதைப்பாடல் கள் மறைந்துவிடாமல், மக்கள் மத்தியில் இன்றும் உயிரோடு உலவி வருகின்றன எனலாம்.

(2) பிற மாவட்டங்களிலும் வழங்கிவரும் லாவணி, ஒயிலாட்டம், கும்மி, பாவைக்கூத்து, பொய்க்கால் குதிரை என்ற நாட்டுப்புறக் கலை அமைப்புக்களில் கதைகள் பல பாடப்படினும், 'பல நாட்கள் வரையும் கூடத் தொடர்ந்து நடைபெறும் வழக்கமுடைய [114] வில்லுப் பாடலில்' நீண்ட நெடும் கதையாக எடுத்துக் கொண்ட பொருண்மைபற்றிப் பாட வாய்ப்புள்ளமையின், அம்மனின் தோற்றம் முதல், அவள் புகழ் பரவி, குறிப்பிட்ட ஓரிடத்தில் அவள் கோயில் கொண்டு நிலைக்கும் வரையுமுள்ள வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் விரிவாக அமைய வில்லுப்பாடல்களிலேயே வாய்ப்பிருக்கிறது. [115] இதனால் வில்லுப் பாட்டுக்களுக்குப் பெயர் பெற்ற நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங் களில் அம்மனைப் பற்றிய செய்திகள் கதைப்பாடல் வடிவில் மிகுதியும் கிடைக்கின்றன என்றும் எண்ண ஏதுவாயுள்ளது.

---

114. "கோயில்களில் நிகழும் வில்லுப்பாட்டுகள் இரவு முழுவதும் பல இரவுகள் தொடர்ந்தும் பாடப்பெறுவன".

- தி.சி. கோமதிநாயகம், தமிழ் வில்லுப்பாட்டுக்கள், ப. 89, 1979.

115. கால அளவைப் பொறுத்து, அதாவது ஒரு நாளில் முடியாமல் மூன்று நாட்கள் வரையும் பாடவேண்டிய திருப்பின், உள்ள கதை நிகழ்ச்சிகளையே விரிவாகப் பாடுதலும், காலம் குறைவானதாக இருப்பின், பல நிகழ்ச்சிகளைச் சுருக்கி ஒரே வரியில் கூறும் போக்கும் உள்ளது.

முத்தாரம்மன் கதைப்பாடல்கள்

நெல்லை, கன்னியாகுமரிப் பகுதிகளில் கிடைக்கின்ற முத்தாரம்மன் கதைப்பாடல்கள் வாய்மொழியாக இன்றளவும் வழக்கில் இருந்து வருபவைகளாகவும், சுவடிகளில் எழுதப்பட்டு, நாட்டுப்புற இலக்கிய மதிப்புடையனவாகவும் திகழ்கின்றன.

சுவடிகளிலிருந்து கிடைக்கக்கூடிய, சுவடியினின்று பதிப்பிக்கப் பெற்ற முத்தாரம்மன் கதைப்பாடல்கள் மட்டுமே இப்பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பிடப் பெறுகின்றன. இவை இன்றும் வாய்மொழியாக வில்லில் பாடப்பெறும் முத்தாரம்மன் கதைப்பாடல்களோடும் கதை நிகழ்ச்சிகளோடும் ஒப்புடையனவாகவே திகழ்கின்றன.

ஒப்பிடப்பெறும் முத்தாரம்மன் கதைப்பாடல்கள்

(1) பதிப்பிக்கப்பெற்றுள்ள முத்தாரம்மன் கதை, சு.எண்.8427 (கே.ப.சு.)

(2) முத்தாரம்மன் கதை – சுவடி எண்ணிடப்படாதது (கே.ப.சு.)

(3) வில் கதை அம்மன் கதை – சு.எண்.8028 (கே.ப.சு)

(4) முத்தாரம்மன் விற்கவிதை – (ப.ஆ.) ஆறுமுகப் பெருமாள் நாடார், அகத்தீசுவரம் (1978).

(5) முத்தாரம்மன் கதை – சு.எண்.52, ஓலைகள்–61, அளவு 1. 7 + 1 1. 4' மூன்று பத்திகளாகப் பக்கத்துக்கு 5 வரிகள், (ஆ.ஆ.நி.)

(6) முத்தாரம்மன் கதை – சு.எண்.27, இதழ்கள்–86, அளவு 48.5' x 3.7, காலம் 1911, மூன்று பத்தியாகப் பக்கத்துக்கு 5 முதல் 7 வரிகள், (ஆ.ஆ.நி.)

(7) உச்சினி மாகாளி அம்மன் கதை – கையெழுத்துப் பிரதி, (உ.த.நி.)

(8) உச்சினி மாகாளி கதை – சு.எண்.46, (ஆ.ஆ.நி.)

(9) " " " – இதழ்கள்–50, அளவு 53' x 3'
முன்று பகுதியாகப் பக்கத்துக்கு
8 வரிகள், சு.எண்.48, (ஆ.ஆ.நி.)

என்ற ஒன்பது சுவடிகளும் ஒப்பிடப்படுகின்றன.

உச்சினி மாகாளி கதை, முத்தாரம்மன் கதை, முத்தாரம்மன் விற்கவிதை போன்ற கதையமைப்புக்களினின்றும் மாறுபட்டதெனினும், இறுதியில் அவ்வம்மனும் சினமுற்று அம்மை நோயையே பரப்பினாள் என்று முற்றுப் பெறுவதான், முத்தாரம்மன் போன்று உச்சினி மாகாளி அம்மனும் அம்மை நோய் தருபவளாகவே அமைந்துள்ளமையின் இணைத்து ஒப்பிடப்பெறுகின்றது.

பதிப்பிக்கப்பெற்றுள்ள 'முத்தாரம்மன் கதை' யிலுள்ள 'கதைப்பொருண்மை', 'முத்தாரம்மன் கதை – பொருளாய்வு' என்ற தலைப்பில் கீழுள்ள 'கதை விளக்கக் குறிப்புக்கள்' என்ற சிறு தலைப்பில் விளக்கப்பட்டுள்ளமையின், இங்கு திரும்பவும் கதை பற்றிய விவரம் விளக்காது விடப்படுகின்றது.

முத்தாரம்மன் விற்கவிதை பற்றிய கதைச் சுருக்கக் குறிப்புக்கள்

சம்புத் தீவுக்கப்பால் ஏழுகடலை அடுத்துள்ள சொர்ண பூமியில் கமலையென்ற திருச்சுனையருகே மாணிக்கப் புற்றிருக்க, அதிலுள்ள நாகம் அமுத கலசம் ஈன, நஞ்சுடைய பாம்பீன்ற அவ்வமுத கலசத்தினின்றும் ஏழு அரக்கியர் தோன்றுகின்றனர். இவர்கள் மூலமாய் நீலன், குமுதன், ஆதித்தன் என்ற முப்புராதியர் பிறக்கின்றனர். அரக்கியர் அவர்களைக் காட்டில் விட்டு மறைந்திடுகின்றனர்.

சக்தி முனி இயற்றிய வேள்வியில் புகை மண்ட, அதனை நீக்க வந்த பார்வதி, வேள்விப் புகையால் விளைந்த வேர்வை வழித்தெறிய, அவ்வேர்வை முத்துக்களின் ஆதாரமாய் முத்தாரம்மன் பிறக்கிறாள். அவ்விதம் தோன்றிய அவளை, அந்நர்தைகளாகக் காட்டிலுள்ள முப்புராதிக்குத் தாயாக, தெய்வமாக அனுப்ப, அவளும் வந்து, காண்டாபுரக் காடழித்து, முப்புரக் கோட்டையமைத்து, முப்புராதியுடன்

சிறப்பாக வீற்றிருக்கின்றாள். இடையில் தாருகனை வதை செய்தும் திரும்புகின்றாள்.

முப்புராதிகளின் புதல்வர்களான சந்தண வாழ்குமரன், முத்துத்தம்பி, முத்துக்குமரன் என்பவர்கள் யாருக்கும் அடங்காது கர்வம் கொண்டு திரிய, முப்புராதிகளும் புதல்வர் வலிமையால் செருக்குற்றுத் தேவரை ஏவல் செய்ய, தேவரைச் சிறைமீட்டு அன்னார் இன்னல் தீர்க்க, மால் பல்வேறு உபாயங்கள் கையாண்டு கோட்டையுள் புக, அனைத்தையும் முப்புராதியர் முறியடிக்க, இறுதியில் முப்புராதியின் சிவபூசை கெடுத்து, அவர்தம் வலியழித்திட, சிவன் முப்புரமெரிக்க வில்லெடுத்து வந்து, இறுதியில் வில்லினைக் கீழே போட்டு, வெறுங்கை கொட்டிச் சிரிக்க ஆனித்திங்கள், அக்கினிவாரம், பூசநட்சத்திரத்தில் முப்புரம் பற்றியெரிகின்றது.

எரிந்ததும், மக்களாய முப்புராதிகளை உயிரோடெழுப்பி, கொல்லப்பட்ட அவர்களுக்கும், தனக்கும் கோடி வரம் தரவேண்டும் என முத்தாரம்மன் வேண்ட, அதன்படி சிவனும் வரமருள்கிறார்.

முத்தாரம்மன் மனிதர்கள் மேல் விதைப்பதற்குப் பல்வேறு வகையான வித்துக்களை வரமாக வேண்ட, ஈசனும் தருகிறார். கோடாமல் வண்டிகளில் குருக்களையும் தானேற்றி, தேரேறி உலகளந்தாள் சிறந்த முப்புராதியுடன் நாட்டகத்தில் வந்து மன்றினில் வாழ் மகிதர்களிடம் மாபூசை பெற வீற்றிருக்கின்றாள் எனக் கதை முடிகின்றது.

இது ஆறுமுகப் பெருமாள் நாடார் அவர்களால் பதிப்பித்து வெளியிடப் பெற்றுள்ள முத்தாரம்மன் கதையின் கதையமைப்பாகும்.

இதே கதையமைப்புடனேயே,

(1) முத்தாரம்மன் கதை– சுவடி எண்ணிடப்படாதது (கே.ப.சு)

(2) வில்கதை அம்மன் கதை – சு.எண்.8028 – (கே.ப.சு)

(3) முத்தாரம்மன் கதை – சு.எண்.52 – (ஆ.ஆ.நி.)

(4) முத்தாரம்மன் கதை – சு.எண்.27 –(ஆ.ஆ.நி.)

என்ற 4 சுவடிகளும் காணப்படுகின்றன. இவற்றுள் முதல் மூன்று கதைப்பாடல்களும் முழுமை பெறாதவைகளாகவே கிடைத்துள்ளன. இறுதியில் உள்ளது மட்டும் முழுமையாக அமைந்துள்ளது. முழுமையாக உள்ள இதனைச் சுவடியினின்றும் பதிப்பித்து வெளியிடப்பெற்றுள்ள முத்தாரம்மன் விற்கவிதையுடன் ஒப்பிட்டுப் பார்க்க, அதே கதை நிகழ்ச்சிகளே அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

(1) சில நிகழ்ச்சிகள் மட்டும் முன்பின் மாறி அமைந்திருப்பதையும்,

(2) உள்ள நிகழ்ச்சிகளே சற்று விரிவாகக் கூறப்பட்டிருத்தலையும்.

அறிய முடிகின்றது.

முன்பின் மாறி அமைந்த நிகழ்ச்சிகளுக்குச் சான்றாக, முத்தாரம்மன் விற்கவிதையில் முக்காட்டில் முப்புராதிகளுடன் கோட்டையிட்டு, அவர்களுக்குத் தெய்வமாகக் கொலுவிருந்த பின், அம்மன் தாருக வதம் செய்ததாக அமைந்துள்ளதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளதைக் கூறலாம்.

உள்ள நிகழ்ச்சிகள் விரிவாக அமைதலுக்குச் சான்றாக, முத்தாரம்மன் விற்கவிதையில் தாருக வதம் சுருக்கமாக அமைந்திருக்க, முத்தாரம்மன் கதையில் இந்நிகழ்ச்சி விரிவாக இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிடலாம்.

ஆகவே முத்தாரம்மன் கதை தொடர்பான 5 கதைப்பாடல்கள் [116] ஒரேவித கதை நிகழ்ச்சிகளை உள்ளடக்கியனவாகவே உள்ளமை தெளிவாகின்றது.

உச்சினி மாகாளி அம்மன் கதை

உச்சி மாகாளி அம்மன் கதை என்றும் நெல்லை மாவட்ட ஊர்களில் வழங்கப்பெறும் இக்கதையின் இறுதியில் அம்மன் அம்மை

---

116. இதே பகுதியில் "ஒப்பிடப்பெறும் முத்தாரம்மன் கதைப்பாடல்கள்" - என்ற சிறு தலைப்பின் கீழுள்ள 1,2,3,5,6 - எனும் வரிசை எண்களுள்ள கதைப்பாடல்கள்.

நோய் தந்த செய்கையால் முத்தாரம்மனுக்குரிய செய்கையில் ஒன்றுபடினும், பிற கதைநிகழ்ச்சிகள் அனைத்தும் முத்தாரம்மன் கதையினின்றும் மாறுபாடுடையனவாகவே அமைந்துள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள உச்சினி மாகாளி அம்மன் கதை பற்றிய கையெழுத்துப்பிரதி, ஆசிய ஆய்வு நிறுவனத்திலுள்ள இரு சுவடிப்பிரதிகள் [117] என, ஆக மூன்றும் கதை நிகழ்ச்சிகளில் ஒருமைப்பட்டு நிற்கின்றன. இவற்றுள் ஆ.ஆ.நி. சுவடிகள் இரண்டும் முழுமையாக உள்ளன. உ.த.நி. கையெழுத்துப் பிரதி முற்றுப் பெறாதது.

முழுமையாக சுவடிப் பிரதிகளின்படி உச்சினி மாகாளி கதையமைப்பு கீழ்க்காணுமாறு அமைந்துள்ளது.

இரண்ய வதையின்போது, நரசிங்கமூர்த்தி இரணியனின் தலை உச்சியில் உகிரால் கொத்த, உதிரம் பெருக்கெடுக்கின்றது. அவ்வுதிரத்தினின்னும் தோன்றிய உச்சினி மாகாளி எனும் உத்திரமாகாளி அல்லது வலங்கை மாகாளி, வடபத்ரகாளி, இலங்கை மாகாளி, இரணபத்ரகாளி என்ற பல்வேறு பெயர் பூண்டவள் விக்கிரமாதித்தச் சக்கரவர்த்தியால் 21 வாயிலுடன் கட்டப்பட்ட கோயிலில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் நாளையில், திரவியங்களைக் கோயிலில் வைத்து மன்னன் நாடு, நீங்க, பன்னிரு வருடம் மழையின்றிப் பஞ்சம் வர, அப்போதும் சந்தணவாழ்நம்பி யென்பான் காளி அருளால் மூன்று வேளையும் மூன்று பொற்காசு பெற்றுப் பூசை நடத்தி வர, தன் ஏழு பெண்மக்களுக்கு மணமுடிக்கப் பொன் வேண்டும் என மிகுதியான பொற்காசுக்கு அவன் காளியை வேண்ட, காளியும் தன்னிடமுள்ள திரவியத்திலிருந்து தங்கப்பாளம் எடுத்துத்தர, ஆட்சி பீடத்திலிருந்த ஆங்கிலேயர் புதையல் பணமோ, கொள்ளைப் பணமோ என்ற ஐயுற்று வினவ, அந்தணன் உண்மையுரைக்கவும் “மாகாளியாவது! தங்கப்பாளம் தருவதாவது!” என எள்ளி நகைத்து, உண்மையைக் கூறுமாறு அவனை அடித்துத் துன்பறுத்தி, காளி கோயிலில் திரவியம் உள்ளது உண்மைதானா என

117. "ஒப்பிடப்பெறும் முத்தாரம்மன் கதைப் பாடல்கள்" என்ற இதே பகுதியிலுள்ள சிறு தலைப்பின் கீழ் 7,8,9 - என்ற வரிசை எண்களின் கீழ் இவை குறிப்பிடப்பெற்றுள்ளன.

அறிய கோயிலையும் இடித்துத் தூளாக்க, காளி பொங்கி எழுந்து, சம்புத் துரையின் பாளையங்களைத் தன் பூதப்படை கொண்டு அழித்தொழித்தும் சினம் தணியாது, அவன் ஆட்சிக்குட்பட்ட பூமியையும் அழிக்குமாறு, சிவனிடம் அம்மை நோய், கக்கல், கழிச்சல், என்று பல்வேறு நோய்களைத் தருமாறு வரம் வேண்டிப்பெற்று, [118] நாடு முழுவதும் பரப்பி, பின்னர் துரையும், அவன் பாளையமும், மக்களும் அஞ்சிப் பதறிப் பூசை செய்ய, பூசைகளை ஏற்றுக்கொண்டு தென்பகுதி நோக்கி வந்து வீற்றிருந்தாள் எனக் கதை முடிவுறுகின்றது.

இவ்வாறு அமைந்துள்ள உச்சினி மாகாளி கதை பதிப்பிக்கப் பெற்றுள்ள முத்தாரம்மன் கதை, பதிப்பில் வெளிவந்துள்ள முத்தாரம்மன் விற்கவிதை, இதே கதையமைப்புள்ள பிற முத்தாரம்மன் கதைகள் என்பனவற்றில் உள்ளவாறு 'உலக மக்களின் ஆணவம், மருள் போன்ற தீய குணங்களை அடக்கி, அருள் பாலிக்கவே அம்மை நோய் தந்தாள்' என்ற கதைக் கருவால் ஒப்புமைப்பட்டுள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

முத்தாரம்மன் விற்கவிதை – முத்தாரம்மன் கதை – ஒப்பு

பதிப்பில் வெளிவந்துள்ள முத்தாரம்மன் விற்கவிதையின் கதையமைப்பையே இப்பதிப்பில் ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொண்டுள்ள இதர நான்கு கதைப்பாடற் சுவடிகளும் பெற்றுள்ளதால் (கே.ப.சு.வில் 2 சுவடிகள், ஆ.ஆ.நி.யில் 2 சுவடிகள்) முத்தாரம்மன் விற்கவிதையுடன் பதிப்பிக்கப்பெறும் 'முத்தாரம்மன் கதை' ஒப்பிடப் பெறுகின்றது.

இவ்விரு கதைகளும் வேறுபட்ட கதை நிகழ்ச்சிகளைக் கொண்டு பின்னப்பட்டுள்ளதால் பலத்த வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. எனினும், அடிப்படைக் கதைக் கருவில் இரண்டும் ஒற்றுமை கொண்டுள்ளதையும் உணர முடிகின்றது.

---

118. இ.ம.13

உத்த நல்ல சுரங் குளிர் சன்னியால்

இ. 14

"சீக்கிரந் தனிலே உயிர் வாங்கவும்

தேசஞ் சுற்றி அம்மன் விளையாடவும்"

"உலகில் மக்களின் மருள் நீக்கிஅருள் வளரச் செய்ய அம்மை நோய் பரப்பும் வித்துக்களை, முத்துக்களைப் பெற்று மக்களிடையே பரப்பி ஆட்கொள்ளல்" – என்பதே அம்மனின் நோக்காக, அடிப்படைக் கருத்தாக இரு கதைகளிலும் அமைந்துள்ளது. கதைக்கருவாகவும் இதுவே அமைந்து, இவ்வடிப்படையிலேயே கதை நிகழ்ச்சிகள் பின்னப்பட்டிருப்பதும் தெளிவாகின்றது.

வேறுபாடுகள்

முத்தாரம்மன் விற்கவிதை	(எண்கள் – வரி எண்கள்) முத்தாரம்மன் கதை
1. உமையாளின் வேர்வையி னின்றும் சக்தியின் அம்சமாக முத்தாரம்மன் பிறந்ததாக அமைந்துள்ளது (350–353) இக்கருத்தில் புராணீகத்தன்மை மிகுந்துள்ளது.	நாக கன்னிகையின் வயிற்றில் தோன்றியதாகக் குறிக்கப் பட்டுள்ளது(204–205). இதில் நாக வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடர்பு புலப்படுத்தப்பட்டுள்ளது.
2. ஓரம்மனாகவே உதிக்கிறாள்.	இரட்டைக் குழந்தைகளாக இருவேறு அம்மன்கள் பிறக்கின்றனர்.
3. பிரசவ வேதனை இடம்பெற–வில்லை.	இடம்பெற்றுள்ளது. பிற்காலக் கதைப் பாடல் மரபில் ஒன்றாதலின் முறையாகக் கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.
4. குழவி பிறந்ததும் சீராட்டல்–கள் இல்லை. கன்னிப்பருவத் தாளாகவே காட்டப்படுகிறாள். புரணத் தன்மை கொண்ட அமைப்பு.	தொட்டில் செய்து, அதிலிட்டுத் தாலாட்டிச்சீராட்டிக் குழந்தை நிலையிலிருந்து வளர்ந்ததாக விவரிக்கப்பட்டுள்ளது. மானுடத் தன்மையுடைய அமைப்பு.

5. முப்புராதிகளின் பிறப்பை ஆதிமுனியாகிய சத்திமுனி வந்து கண்டு பெயரிடுகின்றார்.	முத்தாரம்மன் இருவர் பிறப்பைக் காசிமாரிஷி வந்து கண்டு பெயரிடுகின்றார் (244 – 247)
6. முத்து போன்ற வியர்வையின் ஆதாரமாய்ப் பிறந்த முத்து + ஆதார + அம்மன் – முத்தாரம்மன் எனப் பெயர்க் காரணம் கூறப்படுகின்றது.	காணவந்த காசிமாரிஷியைக் கண்டு, முத்து போல் நகைத்ததால் முத்தாரம்மன் என்ற காரணப் பெயர் சூட்டப்பட்டதாக அமைந்து பெயர்க்காரணம் கூறலில் மாறுபடுகின்றது.
7. முப்புராதிகளை நந்திதேவர் வளர்த்த சீர்மையில் புராணத் தன்மை உள்ளது (227–261).	நாககன்னி அம்மன்களை வளர்த்த சீர்மையில் மானுடத் தன்மை உள்ளது (214 – 323).
8. முத்தாரம்மன் கயிலையி னின்றும் நேரடியாகச் சிவனே அனுப்பப் பூவுலகு வரலாக உள்ளது (418–432).	பூவுலகில் தவம் செய்து, கயிலாய பர்வதத்தினின்றும் சிவன் அழைக்க, சென்று வரம் கேட்டுப் பெற்று மீளலாக உள்ளது (330–504).
9. அம்மனின் பரிவாரங்களாகப் பேய்ப்படை அமைகின்றது (582 – 613).	பரிவாரங்களாகப் பல்வேறு சிறு தெய்வங்கள் அமைகின்றன (481 – 494). பேய்வழிபாடு என்ற முன் நிலையினின்றும் தெய்வ வழிபாட்டுக்கு வளர்ச்சியுற்ற நிலையைக் காட்டுகின்றது).
10. பல்வேறு அம்மைநோய் வித்துக்களை அம்மன் வர மாகப் பெற்றதாக உள்ளது (4044–4182).(அம்மன் செழிப்புத் தெய்வமாகக் கருதப்பட்டதன் எச்சமாக இவ்வமைப்பு அமைந்திருத்தல் வேண்டும்).	பல்வேறு அம்மை முத்துக்களை அம்மன் வரமாகப் பெற்றதாக உள்ளது (515 – 542).(அம்மன் செழிப்புத் தெய்வ நிலையினின்றும் நோய்த் தெய்வமாகவும் பரிணமித்து விட்ட சூழல் தெளிவாகின்றது).

11.	இசையொலிக்கச் செல்லலில் குரவை யொலியே முக்கிய இடம்பெறுகின்றது (468, 565) பழமை உணர்த்துகிறது.	பல்வேறு வகையான இசைக் கருவிகள் ஒலிக்கச்சென்றதாக அமைந்துள்ளது (பிற்பட்ட காலம்).
12.	முத்தாரம்மன் பூசைமுறைகள் விரிவாக இல்லை.	பூசை முறைகள் குறிப்பிடத் தக்க இடம் பெறுகின்றன.
13.	தெய்வத்தன்மை மிகுதி. பிறர் வணங்க இருந்தாள்.	மனிதத் தன்மை மிகுதி. இரு பெண்டிர் தலயாத்திரை போவது போலவே உள்ளது. பல்வேறு தலதெய்வங்களை இவர்கள் வணங்கிக் கொண்டு செல்வதாக உள்ளது.
14.	முப்புரம் எரித்த பழம் புராணச் செய்தியை அடி யொற்றி அமைந்த கதை.	பிற்காலத் தலபுராணம், பயண நூல்கள் போன்று தலயாத் திரைச்செய்திகள்அமையும் அமைப்புடையது.
15.	இதுவும் உச்சினிமாகாளி கதை போன்றனவும் அம்மை நோய் பரப்புவதற்கான காரணம் கூறுவதாகக் கதை விரிந்து, இறுதியில் அம்மை நோயை வரமாகப் பெறலோடு முடிவுறுகின்றது.	அம்மை நோயை வரமாகப் பெறலோடு கதைத் தொடங்கி, உலகு முழுவதும் பரப்பி இறுதியில் ஓரிடத்தில் கோயில் கொள்ளல் என்ற நிலையில் முடிவுறுகின்றது.
16.	திரிபுரம் எரித்த செய்தியை விரிப்பதால், புராணத் தொடர்புச் செய்திகள் மிகுதி யும் கொண்டது.	சீவலமாறன், வரகுணபாண்டியன், உறக்குப்பாதுஷா என்ற மன்னர்கள் தொடர்புடைய செய்திகள் கூறலால் வரலாற்றுத் தொடர்புடையது.

17. சைவ, வைணவ இணைப்புக் காலத்தில் பக்தி இலக்கியப் பின்னணி கொண்டது.	இஸ்லாம் மத வெறுப்புக் காலத்து எழுந்தது. அம்மை நோயின் உக்கிரம் தாங்காது இந்து சமய நெறிமுறைகளோடு அம்மனைத் துதித்து வணங்கிய டில்லி பாதுஷாவையும், அவன் நாட்டு மக்களையும் காட்டுகின்றது.
18. முப்புராதி, இவர்களது மக்களாய முத்துத்தம்பி, முத்துக்குமாரன், சந்தண முத்துக் குமாரன் போன்றவர்கள்அம்மனைத் தெய்வமாகக்கொண்டு முப்புரக் கோட்டை யிட்டு ஆண்ட ஆட்சி யாளர்களாகக் கூறப் பட்டிருக்கிறார்கள்.	அம்மனின் பரிவார தேவதைகளாக இவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். முப்புர எரிப்பின் பின்னர் தெய்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அம்மனின் பரிவாரதேவதைகளா கவும் ஆக்கப்பட்ட வளர்ச்சியுற்ற காலக் கட்டத்தில் இக்கதை எழுந்தமை தெளிவுறுகின்றது.
19. தேவர்களுக்கும், அசுரராய முப்புராதிகளுக்கும் நடந்த போராட்டத்தை விளக்கும் இக்கதைப்பாடல் ஆரிய திராவிட இனக் குழுப் போராட்டத்தைச் சித்தரிப்பதாகக் கொள்ள இடமுள்ளது.	அத்தகு எண்ணங்களுக்கு இடம் இல்லாத கதையமைப்பு உடையது.
20. தாய் வழிபாட்டுக்கும் தந்தை வழிபாட்டுக்கும் இடையில் நடந்த போராட்டத்தில், இறுதியில் தந்தை வழிபாடு பெற்ற நிலைகளை உள்ளடக்கிய நிகழ்ச்சி களமைந்த கதைப்பாடலாகக் கொள்ள ஏதுவுள்ளது.	அத்தகு போராட்டங்கள் முடிந்து, தாய் வழிபாட்டுடன் தந்தை வழிபாடு இணைந்து கலந்துவிட்ட காலகட்டத்துக்குப் பின்னர் தோன்றிய கதையமைப்பைக் கொண்டது.

21. ‘அம்மை நோய் முத்துக்களை வரமாகப் பெற்றுப் பரப்பிக் கோயில் கொள்ளல்’ எனக் கதை முடிவு அமையும்.	அவ்வாறு கதை முடிவில் சுருக்கமாக அமையும் நிகழ்ச்சிகளை விரிவுபடுத்தித் தனி ஒரு கதைப்பாடலாக அமைத்துள்ள போக்கு உள்ளது. அதாவது முத்தாரம்மன் விற்கவிதை, உச்சினி மாகாளி கதை என்பனவற்றின் முடிவு நிகழ்ச்சிகளை விவரித்துரைக்கும் கதைப்பாடல் எனலாம். அத்துடன் அம்மன் பிறப்பு நிகழ்ச்சிகள் கதைத் துவக்கத்தில் இணைக்கப் பட்டுள்ளன.

கால வேறுபாடு

- இருவேறு அம்மன்கள் என்ற நிலை
- குறைவான புராணிகத் தன்மை
- தெய்வீகத்தில் மானுடத்தன்மைக் கலப்பின் மிகுதி
- மற்ற கதைப்பாடலின் சுருங்கிய முடிவு நிகழ்ச்சிகளை விவரித்தமைத்துத் தனிக் கதைப் பாடலாதல்

என்ற இந்நிலைகளுடன் கூடியதாதலால் பதிப்பிக்கப்பெறும் முத்தாரம்மன் கதைப் பாடலின் நிகழ்ச்சியமைப்புக்கள் முத்தாரம்மன் விற்கவிதை காட்டும் கதை நிகழ்ச்சிகளுக்கும் பிந்தைய கால கட்டத்தது என்பது தெளிவாகின்றது.

IV. முத்தாரம்மன் கதை = முப்புரம் எரித்த கதை – ஓர் ஆய்வு

இப்பதிப்பில் ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளபபட்டுள்ள முத்தாரம்மன் கதைப்பாடற் சுவடிகள் ஒன்பதினுள்,[119]

(1) முத்தாரம்மன் விற்கவிதை (சுவடியினின்று பதிப்பிக்கப்பெற்றது – ப.ஆ. ஆறுமுகப் பெருமாள் நாடார்)

(2) வில்கதை அம்மன் கதை (சு.எண். 8028, கே.ப.சு.)

(3) முத்தாரம்மன் கதை (சுவடி எண்ணிடப்படாதது, கே.ப.சு.)

(4) ” ” (சு.எண்.52, ஆ.ஆ.நி.)

(5) ” ” (சு.எண்.27, ”)

என்ற 5 கதைப்பாடல்களும் ஒரே கதையமைப்புக் கொண்டவை என்பது சென்ற தலைப்பின் கீழேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்றும் பாடப்பட்டு வரும் முத்தாரம்மன் கதைப்பாடல்களாக இவ்வைந்து கதைப்பாடல்களின் கதையமைப்பே அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு முத்தாரம்மன் கதை தொடர்பாகக் கிடைத்துள்ள சுவடிகளில் பெரும்பான்மையானவற்றின் கதையமைப்பாகவும், இன்றும் வழக்கில் பாடப்பட்டு வரும் முத்தாரம்மன்கதை கதையமைப்பாகவும் உள்ளது முப்புரம் எரித்த கதையேயாகும்.

---

119. அவற்றின் பெயர், சுவடி எண், சுவடி நூலகம் போன்ற விவரங்கள் "முத்தாரம்மன் கதைகள் - ஓர் ஒப்பீடு" என்ற தலைப்பின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை இடம் வகிக்கும் முத்தாரம்மன் கதைகளின் கதையமைப்பு

முப்புராதியர் பிறப்பு முறையும், வளரும் விதங்களும், அம்மூவருக்கும் தாயாக, தெய்வமாக முத்தாரம்மன் வந்து அமைவதும், காடு திருத்தி, நாடாக்கி, முப்புரக் கோட்டை கட்டி, முத்தாரம்மன் என்ற தாய்த் தலைமையின் கீழ் முப்புராதியர் பேராட்சி செய்து வரும்பொழுது, முப்புராதியரின் புதல்வர்கள் மூவரின் பேருரத்தால் அனைவரும் செருக்குற்றுத் தமக்கீடு யாரும் இல்லை என்று அகங்காரங் கொண்டு, தேவர்களை ஏவல் பூண்டு வாழத் துவங்க, முப்புராதிகளின் ஆணவமடக்கித் தேவர் சிறைமீட்கச் சிவனும், மாலும் எண்ணம் கொண்டு, முப்புரம் அழிக்கவா, இறுதியில் எவர் உதவியுமில்லாமல் சிவபிரான் தன் சிரிப்பாலேயே முப்புரத்தை எரியுண்ணச் செய்ய, தாயாய முத்தாரம்மன், தன்பிள்ளைகளாய முப்புராதிகளை உயிர்ப்பித்துத் தருமாறுவேண்ட, சிவபெருமானும் அவர்களை உயிர்ப்பித்து, அவர்களுக்கும், முத்தாரம்மனுக்கும் வரம் பல தந்து சென்றதாக முத்தாரம்மன் விற்கவிதைக் கதையமைப்பு காணப்படுகின்றது.

இதிலிருந்து 'முத்தாரம்மன் கதை' பதிப்பிக்கப் பெற்றுள்ள கதையமைப்பால் வேறுபடினும் முப்புராதிகளும் (குமுதன், நீலன், ஆதித்தன்) அவர்களின் மூன்றுபுதல்வர்களாகப் பிற 5 முத்தாரம்மன் கதைப்பாடல்களும் குறிப்பிடும் முத்துக்குமாரன், முத்துத்தம்பி, சந்தணமுத்துக் குமாரன் எனப்படுபவர்களும் பரிவார தேவதைகளாக உடன் வந்ததாகவும், அம்மை முத்துக்களைப் பரப்பியதாகவும் தெரிவித்து, "முத்தாரம்மன்–முப்புராதியர்" தொடர்புள்ளதாகவே அமைந்துள்ளது கவனிக்கத் தக்கதாக உள்ளது.

முப்புராதிகளும் அவர் புதல்வர்களும் பரிவாரங்களாகிஉடன் வந்ததை,

"உருவான நீலனுங் குமிர்தனா தித்தனும்
உத்தகிண நாத ருடனேதான்" (483 – 484)

"முப்புராதிக ளொக்க நெருங்கவே" (552)

"நகியாத குமுர்த னீல ஆதித்தன்

நல்ல சந்தண முத்துக் குமாரரும்

சுகியான கயிலாசந் தான்விட்டு" (563 – 565)

"நீலன் குமிர்தனு மாதித்தன் சூழவே" (1553)

"தக்கமுப்பு ராதிமாரி துர்க்கையுக்கிர காளிவீரி

பகையாய் வரும்பிரம ராக்கிசத்தி முன்னேவர" (1633 – 1634)

என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

"சீதசந் தணக்குமாரன் முத்துக் குமாரன்

....

வகைவகைமுத்துக்களைத் துகையில்லாமல் விரைத்து"

(1626 – 1629)

என அம்மை முத்துக்களை, பரிவாரங்களாக அம்மனுடன் வந்து முப்புராதிகளும், இவர் புதல்வர்களும் பரப்பியமையும் கூறப்பட்டுள்ளது.

சிந்தனைக்குரிய செய்திகள்

(1) முத்தாரம்மன் கதை என்றாலே 'முப்புரம் எரித்த கதை' எனக் கருதுமளவுக்கு முத்தாரம்மன் கதைச் சுவடிகளில் பெரும்பான்மை யனவும் முப்புரமெரித்த கதையையே அடிப்படையாகக் கொண்டுள்ளமை,

(2) ஏனைய முத்தாரம்மன் கதைகளும் ஏதேனும் சிலவிதங்களில் முப்புராதியர்களுடன் தொடர்புள்ளனவாகத் திகழ்கின்றமை,

(3) முத்தாரம்மன் கதைகள் இன்றும் வழக்கில் பாடப்பட்டு வரும் இடங்களான நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் முத்தாரம்மன் கதைகளாக முப்புரமெரித்த கதைகளே வழக்காயுள்ளமை என்ற இந்நிலைகளைக் காணும்பொழுது முத்தாரம்மன் –முப்புராதியர் குறிப்பிடத் தகுந்த முறையில் அணுக்கத் தொடர்புடையார் என்றமைகின்ற நிலை சிந்தித்தற்குரியதாக உள்ளது.

முத்தாரம்மன் தெய்வத்துக்குக் கொடை (விழா) நடத்தும்போது,

கேட்கும் மக்களுக்குச் சுவை பயக்குமாறு ஒரு கதையைப் பாடலாக வில்லில் பாடவேண்டிய கடமைக்காக, ஏதேனும் ஒரு புராணக் கதையை இணைத்துப் பாடலாம் என எண்ணிய மாந்தர், புராணக் கதைகளுள் குறிப்பிடத் தக்க இடம் வகிக்கும் முப்புரம் எரித்த கதையை முத்தாரம்மன் கதையாக அமைத்துப் பாடினரா? என்ற எண்ணம் எழுகின்றது.

ஆயின் அதே போழ்தில்,

(1) அதற்குக் குறிப்பிட்டு முப்புரம் எரிந்து சாம்பரான ஓர் அமங்கலக் கதையைத்தான் தெய்வக் கதையாகத் தெய்வத் திருவிழாவில் பாட வேண்டுமா?

(2) அக்கதையில் அனைவரும் வெறுத்தொதுக்கும்படி, ஆணவமும், அக்கிரமுமே உருவாகக் கொண்ட முப்புராதிகளுக்குத் தாயாக, குலதெய்வமாக நாட்டுப்புற மக்கள் பல்லாயிரவரின் தெய்வமாய முத்தாரம்மனை அமைத்துப் பாட வேண்டிய அவசியம் என்ன?

(3) அடங்காமையும், கொடூரமும், நற்சிந்தையுமற்றவராகச் சித்தரிக்கப்பெற்றுள்ள முப்புராதிகளையும், அவர்களின் புதல்வர்களையும் அம்மனின் பரிவார தேவதைகளாக ஆக்கியதென்ன?

(4) தேவாதி தேவர்களுக்கு எதிரிகளான, தேவர்களை அழிக்கும் அழிவு சக்தியின் அஸ்திவாரங்களான, வேறெந்தப் புராணக் கதை மாந்தரும் அம்மனின் அல்லது மக்கள் வணங்கி வழிபடும் தெய்வத் திருவுருவங்களுக்குப் பரிவாரங்களாகக் கூறப்படாதிருக்க, அரக்கர் என்றும், அசுரர் என்றும் மக்கள் மத்தியில் இழித்துரைக்கப்படும் (புராணக்கதைகள் வாயிலாக அறிந்தமையின்) திரிபுராதிகளாய முப்புராதிகளும், அவர் புதல்வர்களும் மட்டும் அம்மனின் பரிவார தேவதைகளாக அமைக்கப்பட்டுள்ளதன் மர்மம் என்ன என்ற வினாக்களும் எழும்புகின்றன.

இலக்கியச் சுவைக்கென்றோ, பொழுது போக்குக்காகப் பாடப்படுவதுதானே என்ற எண்ணத்துடனோ கண்ணிற் கண்ட கதைகளையெல்லாம் எடுத்துத் திணித்துத் தெய்வத்தோடு இணைத்துப் பாடுவதென்பது நாட்டுப்புற மக்கள் மத்தியில் நடைபெற முடியாத ஒரு

செயல் என்பதை, நாட்டுப்புறத்தில் தோன்றி வளர்ந்தவர்கள் அல்லது நாட்டுப்புறவியல் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்த அறிஞர் பெருமக்கள் நன்கு உணர்வர்.

நாட்டுப்புற மக்கள் தங்கள் குலமரபுகளையும், பழக்கவழக்கங் களையும், நம்பிக்கைகளையும், பண்பாடுகளையும் வழிவழியாக, வாழையடி வாழையாகப் போற்றிப் பாதுகாத்து வருபவர்கள். அவை திடீரென மாற்றப்பட்டுவிட எளிதில் மனமொப்பார்.

இதனாலேயே பண்டைய மக்களின் பண்பாட்டு நிலைகளை ஆய்வுசெய்து கண்டறிய விரும்பும் ஆய்வாளர்கள், நாட்டுப்புற மக்களின் வாழ்வையே முழு ஆதாரமாகக் கொண்டு கருதுகோள்களைத் திரட்ட விழைகின்றனர். பழங்குடிமக்களின் எச்சங்களை இன்றும் நாட்டுப்புற மக்களிடையே மட்டுமே காண இயலுகின்றது என்கின்றனர் மானுடவியல் அறிஞர்கள்.

"பொதுவாக எல்லா நாட்டிலுமே விவசாய மக்களிடத்திலுள்ள பழக்க வழக்கங்களிலும், மரபுச் செய்கைகளிலும்தான் முன் காலத்தவரின் பண்பாட்டு எச்சங்கள் தங்கியிருக்கின்றன".[120]

"நூல் வழிக் கல்வியறிவில்லாத மக்களே தங்களின் பழமையான எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் மரபாக, அஃதாவது மூதாதையர்களிடமிருந்து பெற்றோர்களுக்கும், பெற்றோர்களிடமிருந்து அவர்களுடைய சந்ததிக்கும் வாய்மொழி வாயிலாகவே பரப்பிப் பாதுகாத்து வருகின்றனர்" [121] என நாட்டுப்புற அறிஞர்கள் கூறும் கருத்துக்கள் கவனிக்கத் தக்கன.

---

120. "In all customs and traditions of the peasant class in all countries are embeded the knowledge of past, events".

- Everyman's Encyclopaedia, Vol.5, J.M. Dent & Sons Ltd., London (1967), P.35.

121. ". . . for the people with least book education commonly cherish most firmly old ideas and superstitions which have been passed on by word of mouth for generations".

- Oxford Junior Encyclopaedia, Vol.I, London (1976).

இரா. பாலசுப்பிரமணியம், நாட்டுப்புற இயல் - ஒரு விளக்கம், (பஆ), டாக்டர் ச. அகத்தியலிங்கம் மற்றும் மூவர், பதினைந்தாவது கருத்தரங்கு, ஆய்வுக்கோவை, 1983, ப. 246.

எனவே நாட்டுப்புற மக்களின் தெய்வமாய 'முத்தாரம்மன் கதை' யுடன் 'முப்புரம் எரித்த கதை' இணைக்கப்பட்டுள்ளமையும்,

முப்புராதிகளின் குலதெய்வமாக, தாய்த் தெய்வமாக முத்தாரம்மன் இயம்பப்பட்டுள்ளமையும்,

முப்புராதிகளும், அவர்களின் புதல்வர்களும் முத்தாரம்மனின் பரிவாரங்களாக உரைக்கப்பட்டுள்ளமையும் மரபு வழிப்பட்டு அமைந்த நிலையின என்றே கருத இடமுள்ளது.

எனவே முத்தாரம்மன் கதைப்பாடல்களின்படி, முத்தாரம் மனுக்கும், அரக்கர்கள், அசுரர்கள் என்னப்பட்ட முப்புராதிகளுக்கும் இடையிலுள்ள நெருங்கிய தொடர்புகளுக்கு முக்கிய காரணங்கள் இருத்தல் வேண்டும் என்றே தோன்றுகின்றது.

முத்தாரம்மன் – காலப்பழமை

'முத்தாரம்மன்' என்பதனையே குறிக்கும் 'முத்தாலம்மன்' என்ற பெயர் வழக்கு குறிப்பிடப்பட்டுள்ள முதற்கால கட்டமாக, 14 – ஆம் நூற்றாண்டைக் கூறலாம்.

14–ஆம் நூற்றாண்டைய மதுக்கரைப் பட்டயத்தில் 'முத்தாலம்மன்' என்ற தெய்வப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

இப்பாடல் கொடுமுடி சண்முகம் பிரகதம் அவர்களால் 1974 – இல் கொங்கு பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப் பெற்றுள்ளது.

இப்பட்டயத்தில் முதலில் சுபமஸ்து சொஸ்திரி விசையாற்புதம் கலியுக சகாற்புதம் 4360 மேல் "சாலிய வாகன சகாற்புதம் 1307 (கி.பி.1385) விசைய வருடம் மார்கழி மாதம் 17–ந்தேதி தேட்ஜனாயம் பூருவ பஷ்ச திதியும் திருவோண நட்சத்திரமும் சுபநாம யோகமும் பாலவ காரணமும் கும்பலக்கினமும் பெற்ற சுபதினத்தில் இந்த சாசனம் எழுதினது" என்ற குறிப்பு உள்ளது.

இப்பட்டயத்தின் காலம் சாலியவாகன சகாற்புதத்தின்படி கி.பி.

1385 எனத் தெரிகின்றது.[122] இது முதன்முதல் இப்பட்டயம் எழுதப்பட்ட காலத்தைக் குறிப்பிடுவதாதல் வேண்டும். வழிவழியாகப் படி செய்து வந்தோர் மூலச்சுவடியில் உள்ளதை, காலம் முதற்கொண்டு உள்ளவாறு படி செய்து வந்திருக்கின்றனர்.

ஆகவே இந்தக் காலம் மூலச் சுவடி எழுதப்பட்ட காலத்தைக் குறிக்கும். மூலச் சுவடியும் ஒப்பந்தம் செய்து கொண்ட அதே நாளில் எழுதப்படாது, அதற்கும் முற்காலத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்று வழிவழியாக வந்து, பிற்காலத்தில் ஏட்டில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பதனையும் மனத்துட் கொள்ளல் வேண்டும்.

பதிப்பிக்கப்பெற்றுள்ள, வழிவழி படி செய்யப்பெற்று வந்துள்ள இப்பட்டயம் ஆங்கிலேயர் வருகைக்கு முன் சுமார் 300 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார் இதன் பதிப்பாசிரியர்.

கொங்கு தேசத்து 24 நாட்டுக் கவுண்டர்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றிக் கூறுகின்றது இப்பட்டயம். இதில், ஓரிடத்தில் (ப.15),

> "முத்தாலம்மன் செய்ய வேணுமென்றால் அதுக்கு பணம் மூணு
> ஒரு பணத்துச் சித்தாடை ஒரு சோடு கண்மலரு ஒரு சோடு
> பொட்டு காறையும் கண்திறக்கும் போது ஒரு வள்ள நெல்லு
> ஒரு அச்சுக் கருப்பட்டியும் பாக்கு வெத்திலையும் பழம்
> தேங்காயும் ஆட்டுக் கிடாயும் இந்த சுவந்திரமெல்லாம் உண்டு.
> செயிது குடுத்து இருக்கிறோம்"

என 'முத்தாலம்மன்' என்ற தெய்வப் பெயரும், அத்தெய்வ வழிபாட்டுக்குத் தரும் செலவின விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளமையை இப்பட்டயம் மூலம் உறுதி செய்ய இயலுகின்றது.

---

122. கலிய சகாற்புதம் 4360 - இன்படி கி.பி. 1259 என மாறுபடுகின்றது.

இவ்வாறு முத்தாலம்மன் என்ற பெயர் 14–ஆம் நூற்றாண்டிலேயே வழங்கப்பட்டு, அத்தெய்வம் வணங்கப்பட்டதற்குமான சான்று காணப்படினும், சங்க காலத்திலேயே முத்து மாலை அணிந்த தெய்வம் (முத்து + ஆரம் (மாலை) + அம்மன்) பற்றிய குறிப்பைக் காணமுடிகின்றது.அகம் 369–ஆம் பாடலில் அழகியமுத்து வடம் புனைந்து செய்த அழகு அமைந்த வலிய சுவரின் கண்ணுள்ள பாவைக்குப் பலி கொடுத்தல் கூறப்பட்டுள்ளது. [123]

முத்தை அணிந்ததால் முத்தம்மன், முத்தாலம்மன் என்ற தாய்த் தெய்வங்களின் பெயர்கள் அமைந்தன என்பார் பி.எல். சாமி அவர்கள். [124]

எனவே முத்தம்மன், முத்தாலம்மன் என்ற 'பெயர் வழக்குகள்' பிற்காலத்தன எனினும், சங்க இலக்கியமாய அகநானூற்றுப் பாடல்மூலம் முத்தை அணிந்த தாய்த் தெய்வ 'வடிவை'க் காண முடிகின்றது.

முப்புரம் எரித்த கதையின் பழமை

தமிழிலக்கிய உலகில் காலத்தால் முதன்மைபெற்ற சங்க இலக்கியங்களிலேயே முப்புரம் எரித்த செய்திகள் சுட்டப்பட்டுள்ளன.

"ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றி"[125]

"எயிலெரி யூட்டிய வில்லன்" [126]

"தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்து" [127]

என மும்மதில் எரித்த செய்து குறிக்கப்பட்டும்,

---

123. "தாழிய மலர்பல வணியா கேழ்கொளக்
காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப்
பாவையும் பலியெனப் பெறாஅ நோய்பொரா".

124. தமிழ் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிபாடு. (1975). ப.74

125. புறம் 55:2.

126. பதிற். (கடவுள் வாழ்த்து) வரி.3.

127. கலி. (கடவுள் வாழ்த்து) வரி.2.

"கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு

முடன்றக் காண் முகம்போல"[128]

என முப்புரம் எரித்தோனின் முகம் உவமையாகப் பயன்படுத்தப்பட்டும்,

"ஆதி யந்தணன் அறிந்து பரி கொளுவ

வேத மாபூண் வையத் தேர்ஊர்ந்து

நாகம் நாணா மலையில் லாக

மூகை ஆரெயில் ஓரழல் அம்பின்முளிய"[129]

என முப்புரம் எரிக்கச் சென்ற நிலைகள் விவரிக்கப்பட்டுள்ள சங்கப்பாடல் வரிகளைக் காண்கிறோம்.

இவற்றால் முப்புரமெரித்த செய்தி சங்ககாலத்திற்கு முன்னரே மக்கள் மத்தியில் பரவலாக வழங்கப்பட்டு வந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

இத்தகு பழமையான முப்புரமெரித்த செய்தி ஏன் முத்தாரம்மன் கதையுடன் நெருங்கிய வகையில் இணைத்துப் பாடப்பட்டுள்ளது என்பது ஆழ்ந்து நோக்கற்குரிய ஒன்றாகும்.

திரிபுரம் எரித்த கதையும் – உட்குறிப்பும்

முப்புரமெரித்த நிகழ்ச்சி சங்க இலக்கியங்கள் தொட்டு, தற்கால இலக்கியங்கள் வரையும் விரிந்து பரந்து பேசப்பட்டுள்ளது.

இலக்கிய வகையில் மட்டுமின்றி, மருத்துவ நூற்களிலும் மருந்துச் சரக்கின் பரிபாஷைப் பெயராகவும் இச்செய்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

---

128. கலி. 2:4 - 5

129. பரி. 5:22-27.

"நீர்நுள்ளி முப்புரமெரித்தான்
முக்கிராச் சாரணத்திவேர்" [130]

என ஒரு மருந்துச் சரக்கின் பெயர் 'முப்புரமெரித்தான்' எனப் பரிபாஷையாகக் குறிக்கப்பட்டுள்ளதையும் காண்கிறோம்.

பல காலகட்டங்களில் தோன்றிய இலக்கிய வகைகளிலெல்லாம் பரவலாக முப்புரமெரித்த செய்தி பேசப்பட்டிருப்பினும், சிறப்பாகப் பக்தி இலக்கியங்களில் சிவபிரானின் செயல்களில் குறிப்பிடத் தக்க ஒரு செயலாக முப்புரமெரித்தல் கூறப்பட்டுப் போற்றப்படுகின்றமையைப் பார்க்கிறோம்.

திரிபுரம் தொடர்பான செய்திகளாக சம்பந்தர் தேவாரத்தில் மட்டும் 1407 இடங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. [131]

சுந்தரர் தேவாரத்தில் 309 இடங்களிலும், அப்பர் தேவாரத்தில் 288 இடங்களிலும் உள்ளன. [132] ஆக, மூவர் தேவாரத்தில் மட்டும் 2004 இடங்களில் முப்புரம் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளமை தெரிகின்றது.

பக்தி இலக்கியங்களாதலின் சிவபிரான் செய்த முப்புரமெரித்த இக் குறிப்பிட்ட செயல் பெருவாரியாகக் குறிக்கப்பட்டுள்ளது எனலாம்.

சிவபிரானின் செயல்களில் போற்றத் தகுந்த செயலாக முப்புரம் எரித்த செயல் சிறப்பாகக் கூறப்பட்டு இலக்கியங்களில் எடுத்தாளப்படு கின்றமைக்கான காரணங்கள் எவை என்பது சிந்தித்தற்குரியதாக உள்ளது.

---

130. சு.எண். 3929, மருந்து செய்யும் முறை, (கே.ப.சு.) இ.11.

131. வ.சு. செங்கல்வராய பிள்ளை, தேவார ஒளி நெறி (சம்பந்தர்), 1,2, (1963) 3 (1954) - ஆம் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பெற்றது.

132. மேற்படி நூல் - (சுந்தரர்) (1963), மேற்படி நூல் (அப்பர்) முதல், இரண்டாம் தொகுதிகள் (1962) என்பனவற்றை அடிப்படையாக வைத்துப் பெறப்பட்டது

திரிபுரம் எரித்த செய்தியை ஒரு 'புராணக் கதை' என்ற அளவில் மட்டும் எடுத்துக் கொண்டு, இதுவரை 'தத்துவ விளக்க' நோக்கோடு மட்டுமே பார்த்து வந்துள்ளதாகத் தெரிகின்றது.

திரிபுரமாய முப்புரம் என்பது ஆன்மாக்களைப் பற்றிக் கிடக்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களைக் குறிப்பதாகும் என்றும், இம்முப்புரம் எரித்துச் சிவன் ஆடிய திரிபுர தாண்டவம், மறைத்தல் அல்லது திரோபவ தத்துவத்தை அகற்றி, இறை உண்மையை ஆன்மாக்கள் அறியுமாறு செய்த செயலாகும் என்றும் தத்துவ விளக்கம் காண்பர் அறிஞர். [133]

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புர மாவன மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆர் அறிவாரோ"

என்பார் திருமூலர். [134]

இரும்புக்கோட்டை - ஆணவ காரியம்

வெள்ளிக்கோட்டை - மாயா காரியம்

பொன்கோட்டை - வினையின் காரியம்

என இப்பாடலுக்கு உரை விளக்கம் தருவர்.

முப்புரங்கள் என்பன ஸ்தூலம், சூட்சுமம், காரணம் என்பனவாகும் என்றும் தத்துவ விளக்கம் கூறுவர்.

---

133. மயிலை. சீனி. வேங்கடசாமி. எழுவகைத் தாண்டவம். (பிப். 1967).

134. திருமந்திரம். 2-ஆம் தந்திரம். பா. எண். 329.

புராணங்கள் என்றாலே 'பழைய வரலாறுகள்' என்று பொருள் படுவாதனால் புராணங்களைத் தத்துவ விளக்கங்களுடன் மட்டும் பார்க்காது,

புராணங்கள் – தத்துவ நோக்கு

வரலாற்று நோக்கு

சமூக, பாண்பாட்டு நோக்கு

சமய நோக்கு

இலக்கிய நோக்கு

கலை நோக்கு

என்று இத்தகு பன்முக நோக்குகளுடனும் பார்க்கும் பொழுதே, புராணங்களின் முழுப் பரிணாமமும் தெளிவாக அறியப்பட வகை உண்டாகும்.

பராணங்கள் பழங்கதைகள் மட்டுமல்ல. 'வரலாற்றுக் குதவும் கருவலங்கள்' என்று அறிஞர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

"புராணங்கள் உண்மையான வரலாற்று மூலங்களைத் தாங்கியவை" என்பார் ஒரு வங்க உள நூலார். [135]

புராணக் கதைகளைக் குறியீடுகளாகக் கொள்வர் சில அறிஞர்.

"புராணக் கதை என்பது மனிதன், மனிதனுக்கு அப்பாற்பட்டவர் ஆகியோரின் அடிப்படைக் கூறுகளை உள்ளுறை, குறியீடாகக் கொண்டு விளக்கும் கதை அல்லது கதைக் கூறுகளின் தொகுதி" [136] எனக் கருதுகின்றனர்.

---

135. திரு.போஸ், புராணங்கள் உண்மை வரலாறுகளா? - செந்தமிழ்ச் செல்வி (சிலம்பு-12), பக்.479-481.

136. Myth may be difind as a story or a complex of story elements taken as expressing and therefore as implicity symbolizing certain deeplying aspects of human and transhuman existence.

- Princeton Encyclopaedia of poetry and poetics, p.538.

"புராணக் கதைகள் மனிதனின் தொடக்க நிலைகளைப் பற்றியும், தோற்றங்களைப் பற்றியும் கூறுவன; நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பன. வரலாற்று, சமுக, பண்பாட்டு முழுமையே புராணக் கதைகள்" – என்பது மர்சியா எலியாடி அவர்களின் கருத்து.

புராணக் கதைகளை "வாய்ப்பாட்டு முறையில் அமைந்த உண்மை நிகழ்ச்சிகள் (Pradigmatic Archs) என்பார் 'ப்ரெட் குளோதி' (Fred Clothey).

"புராணங்களில் காணும் செய்திகள் யாவையும் முற்றிலும் ஏற்றுக் கொள்ளத் தக்க வரலாற்று உண்மைகள்" என்பார் பார்ஜிதர். [137]

ஒவ்வொரு புராணமும் ஏதோ ஒரு உண்மையைக் கூற விழைகின்றது. அது அடுக்கடுக்காக அமைந்த பல்வேறு செய்திகளால் மறைக்கப்பட்டுக் கிடக்கிறது.

வேண்டாத செய்திகளையெல்லாம் அகற்றிக்கொண்டே வந்தால், வேண்டிய செய்திகளாகிய உண்மை இறுதியில் கிடைத்துவிடும் என்பது 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாக்ஸ்முல்லரின் கருத்து. [138]

இக் கருத்துக்களையெல்லாம் மனத்துட் கொண்டு திரிபுரம் எரித்த புராண நிகழ்ச்சியையும், வரலாற்று நோக்கோடும் சில உட்குறிப்புக்களைத் தம்முள் கொண்டவை என்ற நோக்கோடும் காண,

"ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை" – என்று புராணங்கள் குறித்து வள்ளலார் கூறிய கூற்றை மாற்றி, 'கண்டனர்' என அமைக்க இயலும் என்றே தோன்றுகின்றது.

---

137. டாக்டர் ந.சுப்பிரமணியம், இந்திய வரலாறு (கி.பி.1526 வரை), (ஆ.க. 1972), ப. 47.

138. டாக்டர் சரசுவதி வேணுகோபால், புராணக் கதைகள் ஓர் அமைப்பியல் ஆய்வு, (ப.ஆ.) ச. அகத்தியலிங்கம், மற்றும் பிறர், நாட்டுப்புறவியல் - இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் காலாண்டு இதழ் (1983)

முப்புராதியர் – அரக்கர், அசுரர்?

புராணங்களில் பெரும்பான்மையனவும் தேவர் x அரக்கர் + அசுரர் – போராட்டம் குறித்துப் பேசுகின்றன. இத்தகு அமைப்புக்கள் உலகின் நற்சக்தி தீச்சக்திக்குரிய மோதல்களை விளக்கி, இறுதியில் தீச்சக்தி அழிய நற்சக்தி வெற்றி பெறலைக் குறிப்பிடுவன என்ற பொதுவான தத்துவ விளக்கம் மட்டுமே இதுவரையும் அனைத்துப் புராணக் கதைகளுக்கும் தரப்பட்டு வந்துள்ளது.

பல்வேறு நிலைகளிலும் பார்க்குமாறு மாறுபட்ட கோணங்களில் அமைக்கப்பட்டுள்ள இப் புராணக்கதைகள் தத்துவங்களை மட்டுமே உள்ளடக்கியன எனக் கருதத் தோன்றவில்லை.

புராணங்கள் குறிப்பிடும் தேவர் – அரக்கர், அசுரர்களைத் தத்துவ நோக்கில் மட்டும் பார்க்காமல் உண்மையில் இந்தத் தேவர்கள் யார்? அரக்கர், அசுரர் எனப்படுபவர்கள் யார்? என்ற சிந்தனை 20–ஆம் நூற்றாண்டு அறிஞர்களிடையே கிளைத்துமிருக்கின்றது.

இராமாயண காவியத்தை மையமாகக் கொண்டு, தெய்வப்பிறவி எனப்பட்ட இராமன் ஆரியன் என்றும், அரக்கர் குலத்தவன் எனப்பட்ட இராவணன் திராவிடன் அதாவது தமிழன் என்றும் கருத்துக்கள் வெளிக் கிளம்பியிருக்கின்றன.

ஆகவே இராமாயணம் தமிழரைக் கொண்டே (சுக்கிரீவன் தலைமையிலான குரங்குப்படை) தமிழரைக் கொன்று (இராவணன், அவன் நாட்டு மக்களை) தமிழ்நாட்டில் ஆரிய ஆதிக்கம் பரவியதை எடுத்துக் காட்டும் காவியமே என்பர்.

இதனால் இராமாயண நூலெரிப்புக்களும் அறிஞர் அண்ணாவைத் தளபதியாகக் கொண்டு தமிழகத்தில் நடைபெற்றமையைத் தமிழுலகம் நன்கறியும்.

'ஆரியரால் அரக்கர் எனப்பட்டவர்கள் எல்லோரும் தமிழர் களே" [139] என்பது இத்தகையோர்களின் கருத்து.

---

139. புலவர் குழந்தை. இராவண காவியம் (1946). ப.49.

இராமாயணம் ஆரிய ஆதிக்கத்துக்குப் பயன்பட்டதென்பது மறுக்கொணாத உண்மை என்று, பண்டித நேரு தம் திருமகளாருக்குத் தீட்டிய திருமுகத்திலேயும் இதனைக் குறித்துள்ளார் என்றும், தேவனான இராமனுக்கும், அரக்கனான இராவணனுக்கும் நிகழ்ந்த இராமாயணப் போர் உண்மையில் ஆரிய – திராவிடப் போரே என்றும், 'இராவண காவியம்' என்ற நூலின் ஆராய்ச்சி முன்னுரையில் (ப.20) சி.என். அண்ணாதுரை அவர்களும் குறிப்பிட்டுள்ளார்.

இராமாயணத்தில் இடம்பெற்றுள்ள சம்பராசுர யுத்தத்தில் குறிப்பிடப் பெறும் சம்பராசுரனும், அசுரனென்று ஆரியரால் நிந்திக்கப்பட்ட பாண்டிய மன்னனே என்றும், முதனூலில் சம்பராசுரன் 'மீனக்கொடியோன்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது கருதத் தக்கது என்றும், இந்நூல் (இராவண காவியம், ப.18) கருத்துத் தெரிவிக்கின்றது.

இவற்றை வைத்துக் காணும்போது முப்புராதிகளாய அரக்கர் அல்லது அசுரர் எனப்படுபவர்கள் திராவிடர் எனும் தமிழரா? என்ற வினா எழுகின்றது. முப்புர எரிப்பு நிகழ்ச்சி திராவிடரின் முந்நகர்க் கோட்டையை 'சிவன்' என்ற தெய்வத்தை வணங்கும் ஆரியன் அல்லது சிவன் எனும் பெயர் பூண்ட ஆரியன் எரித்த செய்கையா? என்பதும் எண்ணற்குரியதாக உள்ளது.

"ஆரிய மக்களிடையே வேத காலத்தில் 'சிவாக்கள்' எனும் ஒரு கட்டத்தினர் இருந்தனர் என்றும், பாணினியின் இலக்கணத்திற் கூறப்பட்ட 'சிவபுரம்' இவர்களின் நகரமாக இருக்கலாம்" [140] என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுவது இவண் எண்ணத் தக்கது. இந்த 'சிவாக்களின்' தலைவனாகிய 'சிவன்' எனப்பட்டவன் முப்புரம் எரித்ததைச் 'சிவன் எரித்தது' எனக் கூறியிருக்கலாமோ என்பதும் சிந்தித்தற்குரியது.

இவ்விடத்து, 'இந்திரன் சம்பராசுரனின் 100 கோட்டைகளை அழித்தான்' என்று இருக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருப்பது (2:14:6)

---

140. பொ. திருஞானசம்பந்தம், சிவ வழிபாட்டின் தொண்மை, சித்தாந்தம் மலர் - 45 (1972), ப.243.

இந்திர வணக்கங்கொண்ட ஓர் அரசனின் வெற்றி இந்திரன்மேல் ஏற்றிக் கூறப்பட்டுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது என்ற கருத்தும்,

“நாராயணனைத் தெய்வமாகக் கொண்ட வளர்ச்சிபெற்ற இனக் குழுக்கள் ஏதோ ஒரு நாக குலக் குறியை உடைய இனக்குழுவை வென்றதால், பாம்பு நாராயணனது படுக்கையாக ஆக்கப்பட்டது. நாரா என்றால் சமஸ்கிருதத்தில் நீர் என்பது பொருள். நாராயணன் நீரின்மீது உறங்குபவன்; அவன் நீரிலுள்ள பாம்பின்மீது உறங்குபவன். பாம்பு பண்டைய இனங்களின் குலக்குறி” [141] என்ற திரு. நா. வானமாமலை கருத்தும் நோக்கத் தக்கது.

ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்ற 4 வேதங்களில் நான்காவது வேதமான அதர்வண வேதத்தில் அரக்கர்கள் குறிப்பிடப்பெறுகின்றனர். இதில் அரக்கர்களைப் பிசாசு , பேய் என்றும் கரிய நிறத்தினர், [142] மக்களுக்கு நோய், வறுமை, இன்னல் தருபவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமை கருததக்கது.

“தமிழர் ஆரியரை மிலேச்சர் என்று இழித்துக் கூறியதைப் போலவே, ஆரியரும் தமிழர் முதலான ஏனை வகுப்பினரைத் ‘தாசர்’ (அடிமைகள்) என்றும், ‘அரக்கர்’ என்றும் இழித்துக் கூறியிருக்கலாமோ” [143] என எண்ணத் தோன்றுகின்றது.

எனவே, முப்புராதிகளாய திரிபுராதிகளெனப்படும் அரக்கர் திராவிடராய தமிழரா? முப்புரம் எரித்த நிகழ்ச்சி ஆரியரால் செய்யப்பட்டதா? இந்நிகழ்ச்சி இராமாயணப் போர் போல் ஆரிய – திராவிட இனப் போராட்டம் குறிப்பதா? என்பன ஆய்விற்குரியன.

---

141. திரு.நா. வானமாமலை உலகப் படைப்புக் கதைகள் கதை மூலங்களை பற்றி ஓர் ஆய்வு, ஆராய்ச்சி (காலாண்டு இதழ்) (மலர்-2, இதழ்-4), (டிச.1971), ப.387.

142. “சாதியினைக் குறிக்கும் வர்ணம் என்பது நிறம் குறிப்பது. வெண்ணிறமுள்ளோர் ஆரியர். கறுப்பு நிறம் அநாரியர்” (ஆரியரல்லாதார்-திராவிடர்).

143. தி. நீலாம்பிகை அம்மையார், தனித்தமிழ்க் கட்டுரைகள், செந்தமிழ்க் கட்டுரை நூற்கோவை, கழக வெளியீடு (1964).

ஆரியரும், ஆரியர் வருகைக் காலமும்

ஆரியர்கள் எனப்படுபவர்கள் இந்தியாவின் பூர்வீகக் குடிகளல்லர்; வெளியிலிருந்து இந்தியாவிற்கு வந்தவர்கள் என்பதில் வரலாற்றாசிரியர்களுக்குள் கருத்து வேறுபாடில்லை. ஆயின் அவர்கள் எக்கால கட்டத்தில் வந்தனர் என்பதில் மட்டும் கருத்து மாறுபாடு உள்ளது.

"4000 ஆண்டுகட்கு முன் மத்திய ஐரோப்பா, அல்லது மத்திய ஆசியாவினின்று வந்து இந்திய பூர்வீகக் குடிகளை வென்று அடிப்படுத்தித் தம் நாகரீகத்தைப் பரப்பியவர்கள்" [144] என்பர்.

'கி.மு.1200–இல் ஆரியர் வருகை அமைந்திருந்தது' என்பது மாக்ஸ்முல்லர் என்பாரின் கருத்து. [145]

"கி.மு.2000 தொடக்கத்திலிருந்து இந்தியா நோக்கி ஆரியர்கள் அலை அலையாக வந்தனர்" [146] என்றும் கருதுகின்றனர்.

"பேராசிரியர் நிருபேந்திர குமாரடட் என்பவர், பலர் கூற்றுக்களைத் திறம்பட ஆராய்ந்து, பல காரணங்களைக் காட்டி ஆரியர் இந்தியாவிற்கு வந்த காலம் கி.மு.2500 ஆகலாம் என்றும் அவர்கள் ரிக் வேதம் செய்த காலம் கி.மு.2500 –கி.மு.1500 என்றும் விளக்கியுள்ளார். சிறந்த ஆராய்ச்சியாளர்கள் பலரும் ஆரியர் வருகைக் காலமாக கி.மு. 1500–க்குச் சிறிது முற்பட்ட காலத்தையே குறிப்பர்". [147]

---

144. டாக்டர் ந. சுப்பிரமணியம், இந்திய வரலாறு (கி.பி. 1526 வரை). ப. 36.

145. மேற்படி, ப.39.

146. வி. சிவசாமி, ஆரியர் ஆதி வரலாறும், பண்பாடும், (மே.1979) ப. 29

147. டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை, மொஹஞ்சொதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் (செப்.1972) ப. 231.

"சங்க காலத்தில் வேத வழிப்பட்ட ஆரிய சமயம் நன்கு வேரூன்றியிருந்ததென்பதற்கு வலுவான சான்றுகள் புறம், பரிபாடல், மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை போன்ற சங்க நூற்களிலேயே உள்ளன". [148]

"ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்ததன்பின், பிற இடங்களை முற்றுகையிடும் போது தீவைத்தும், பகைவர்களின் கோட்டைகளைத் தகர்த்துமிருக்கின்றனர்".[149] இது முப்புரக் கோட்டை எரிபட்ட நிகழ்ச்சியோடு இணைத்து நோக்கத் தக்கது.

இவ்வாறு ஒரோரிடமாக வென்று தீவைத்து அழித்துக்கொண்டு இந்தியாவின் தெற்குப் பாகம் வரையும் ஆரியர்கள் பரவியிருந்திருக் கின்றனர்.

"அகத்தியர், பரசுராமன் கதைகள் ஆரிய நாகரீகம் தெற்கே பரவியதை மறைமுகமாக, உருவமாகக் குறிப்பன [150] என அறிஞர்கள் கருதுகின்றனர்.

முப்புராதி – முப்புரம் – முப்புர எரிப்பு

பழம் இலக்கியங்கள் எனப்படும் இதிகாசங்களுள் ஒன்றாய ஸ்ரீமகாபாரதத்தில், 'துரியோதனன் சல்லியனைக் கர்ணனுக்குத் தேரோட்டியாக இருக்க வேண்டும் என வேண்டிக்கொண்டு, திரிபுராசுரர் கதை கூறியதாகக் காணப்படுகின்றது [151] முன்பு தேவாசுர யுத்தத்தில் நடந்ததும் மார்க்கண்டேயரால் தன் பிதாவினிடத்தில் சொல்லப்பட்டது மாகிய கதை எனவும் துரியன் குறிக்கிறான்.

---

148. திரு. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரீகமும் பண்பாடும் (நவ. 1980), ப.142

149. வி. சிவசாமி, ஆரியர் } ஆதி வரலாறும் பண்பாடும், ப. 48.

150. மேற்படி, ப. 90

151. டி.வி. ஸ்ரீநிவாஸாசார்யர் (மொ. ஆ), ஸ்ரீமகாபாரதம் (கர்ணபாவம்), (ஜன. 1923).

'ஐவர் அம்மானை' எனும் நாட்டுப்புறக் கதைப்பாடலில் தருமர் தம்பியர்க்கு வழிநடைப் பயண அலுப்பு தெரியாதிருக்கும் பொருட்டு, திரிபுரர் கதை கூறியதாக இடமாறுபாட்டுடன் அமைந்துள்ளதும் ஈண்டு கருதத் தக்கது.

"தாரகாசுரனின் புதவர்களாய தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்ற முப்புராதிகளுக்கு முரியதாக அமைகின்றது முப்புரக் கோட்டை. விஷ்ணு புத்தராயவதரித்து, நாரதரைச் சீடராக்கி வந்து, பாசண்ட மதத்தைப் போதித்து, திரிபுராதிகளின் சிவப் பற்று கெடுக்க, சிவமொழித்து, புறச் சமயம் தழுவியதால், இனி முப்புராதிகளை அழிக்க வேண்டும் என எண்ணிய சிவன், மேருவை வில்லாக்கி, வாசுகியை நாணாக்கி, விஷ்ணுவைப் பாணமாக்கி, பிரம்மாவைச் சாரதியாக்கி, ஏவத் துவங்க, அக்கணத்தில் பாணமாய விஷ்ணுவின் "தானல்லவோ முப்புராதிகளைக் கொன்று வெல்லப் போகிறோம்"என்ற இறுமாப்பினை மனத்திலுணர்ந்து நகைக்க, சிவனின் அச்சிரிப்பின் சுவாலையால் திரிபுரம் தீப்பற்றி எரிந்தது" எனத் திரிபுரம் எரிந்த கதையின் வரலாறு விரிவுபட்டும் அமையக் காண்கிறோம். [152]

இவ்வாறு சிரிப்பால் எரித்தார் என்பது தவிர, அம்பாலும், [153] கண்ணாலும் [154] எரித்தார் என்று முப்புரத்தை எரித்த முறையில் மாறுபாடுகள் காணப்படினும் 'எரித்தார்' என்ற செயலில் கருத்து வேறுபாடு ஏதும் காணப்படவில்லை.

---

152. ஆ. சிங்காரவேலு முதலியார். அபிதான சிந்தாமணி (The Encyclopaedia of Tamil Literature) (1981). ப. 825-லுள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

153. "இகழும் தகையோர் எயில்மூன் றெரித்த
பகழியொடு வில் உடையோன்"
- சுந்தரர் தேவாரம். 93-3.
"சிலைக் கொள் கணையால் எயில் எய்த
செங்கண் விடையாய்"
- சுந்தரர் தேவராம். 77-7.

154. "கண்ணாலே திரிபுரத்தை யெரித்த ஈசன்
கத்தறிந்து தேவிசொல்லக் கண்டிட் டேனே"
- சு.எண்.2612. மருத்து தயாரிக்கும் முறை (கே.ப.சு.). இ.i.

முத்தாரம்மன் கதைகளில் திரிபுரம் எரித்த செய்தி இதிகாசங்களிலும், புராணங்களிலும் அமைந்துள்ளபடியே விரிவான கதைப்பாடலாகக் காணப்படுகின்றது.

ஆயினும், கீழ்க்கண்ட வகையில் சில மாறுபாடுகளுடனும் அமையக் காண்கிறோம்.

(1) ஏழு கன்னியராகிய அரக்கிமாருக்கு ரிஷி தந்த பரல்களால் முப்புராதியர் தோன்றினர் எனல்.

(2) நீலம், குமுதம், சூரியகாந்தப்பூ என்ற மூவகைப் பூச்சூடிப் பரலை விழுங்க, நீலன், குமுதன், ஆதித்தன் என்ற முப்புராதியர் பிறந்தனர் எனல்.

(3) பெற்ற பிள்ளையர்க்கு முலைப்பால் தந்தால் தம் கற்புப் போய் விடுமென அஞ்சிய அரக்கியர் குழவிகளைக் காட்டில் விட்டேக, நந்திபிரான் அப்பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கல்.

(4) பெரியவர்களானதும் அவர்களை நந்தி, தேவருலகு அழைத்துச் செல்ல, தேவர்கள் 'அட்டமத்துச் சனிகள்' 'எருக்கூட்டப் புழுப்போலே இருக்கும் தேவர்களைக் கருக் கூட்ட வொட்டாமல் அழிக்கும் கால தூதர்கள்' என ஏசி, நந்தி தேவரையும் 'பாம்புக்குப் பால் வார்த்தீரே' எனப் பேசிக் கதவடைத்தல்.

(5) இதனால் நெஞ்சிற் புண்பட்ட முப்புராதியர் 'தேவர் சொன்ன வார்த்தையது செத்தாலும் தீராது. ஆவியுடன் இருந்ததுண்டேல் அது பகரம் (பதிலுக்குச் செய்தல்) தீர்த்திடுவோம்' என்று வஞ்சினம் கொண்டகன்று கானகம் வந்து, காடு கொன்று நாடாக்கிக் கோட்டையிட்டு வாழல்.

(6) முப்புரக் கோட்டையிட்டு வாழும் முப்புராதியர்க்கு உமையாளின் முத்துப்போன்ற வியர்வையில் தோன்றிய முத்தாரம்மன் தாயாக, குலதெய்வமாக வந்தமைதல்.

(7) முப்புராதியர்க்கு முத்துத்தம்பி, முத்துக்குமரன், சந்தண வாழ் குமரன் என்ற மூன்று புதல்வர்கள் தோன்றுதல்.

(8) முப்புரக்கோட்டையைச் சிவபிரான் தன் ஒற்றைச் சிரிப்பால் எரித்தழித்ததன் பின், தாய் முத்தார், முப்புராதிகளை எழுப்பித் தரவேண்டும் என ஈசனை வேண்ட, அவர்களும் அதன்பின் உயிர் பெற்றெழுப்பப்பட, சிவபிரான் முத்தாருக்கு அம்மை நோய் பரப்பும் வித்துக்களை வரமாக ஈந்தும், முப்புராதிகளுக்கு மக்களிடம்,

"முன்றுநிறச் சேவலுடன்

பொங்கலிட்டுச்செங்கிடாய் வெட்டி

பூசை பெற்றுக் கொள்ளும் அதிகாரமும் வழங்கி யருள்வதாக அமைதல் (முப்புராதிகளுக்குச் செங்கிடாய் வெட்டிப் பலியிட்டுப் பூசை நடத்துதல் என்ற நிலையுடன் 'செங்கிடாய்க்காரன்' என்ற நாட்டுப்புறத் தெய்வம் எவ்வகையிலேனும் தொடர்புடையதாக அமையுமா? என்பது சிந்தித்தற்குரியதாக உள்ளது). என்ற இத்தகு எண்வகை நிலைகளில் புராண, இதிகாசங்களில் குறிப்பிடப்பெறும் திரிபுரம் எரித்த கதையினின்றும், முத்தாரம்மன் கதைப்பாடலில் அமையும் முப்புரம் எரித்த கதை வேறுபட்டும் நிற்கிறது.

சிந்தனைக்குரிய செய்திகள்:-

I சப்தமாதர்

முப்புராதியரின் பிறப்பு முத்தாரம்மன் கதைகளில் ஏழு கன்னியருடன் [155] தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

காளி, காளாத்திரி, நீலி, நீலகண்டி, வல்லி, செல்வி, ராக்கதி என்ற இவை சக்தியின் பெயர்களுடன் தொடர்புடையனவாக உள்ளமை கவனிக்கத்தக்கதாக உள்ளது. இந்த ஏழு கன்னியருக்கு முப்புராதியர் பிறந்ததாக முத்தாரம்மன் கதைகள் இயம்புகின்றன.

---

155. "காளிகாளி என்றொருத்தி காளாத்திரி என்றொருத்தி
நீலிநீலி என்றொருத்தி நீலகண்டி என்றொருத்தி
வல்லியென்றும் செல்வியென்றும் மங்கையர்கள் தான்பிறந்தார்
எல்லணைய ராக்கதியும் இன்பமுடன் தான் பிறந்தார்"
- முத்தாரம்மன் விற்கவிதை, வரி. 97-100

இவ்வேழு கன்னியரும் 'சப்தமாதர்' அல்லது 'சப்த கன்னியர் எனப்படும் பன்டைய 'ஏழு தாய்த் தெய்வங்கள்' நிலையுடன் இணைத்து எண்ணத் தக்கனவாய் உள்ளன.

'தாய்மார் எழுவர் வழிபாடு' ஹரப்பன் நாகரீக கால அளவுப் பழமையுடையதெனத் தெரிகின்றது.

ஹரப்பாவில் கிடைத்த முத்திரைத் தகடு ஒன்றில் தாய்த் தெய்வத்தின் உருவமும், அதனோடு ஏழு துணைப்பெண் தெய்வங்களின் உருவங்களும் செதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இத்தகு ஏழு துணைப்பெண் தெய்வங்களும் தாய்மார் எழுவரையும் குறிப்பாதாகக் கொள்ளலாம் என்றும் பேசப்படுகின்றது. ரிக் வேதத்திலும் தாய்மார் எழுவர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. [156]

முப்புராதியர் இத்தகு ஏழு தாய்மார்க்குத் தோன்றினர் என்பது இருவருக்கிடையிலுள்ள நெருங்கிய தொடர்பைப் புலப்படுத்துவதாக அமைந்து பழமை சான்றதாகின்றது எனலாம்.

II. தமிழ்ப் பெயரமைதிகள்

புராணங்களிலும், இதிகாசங்களிலும் காணப்படும் திரிபுரக் கதையில் திரிபுரம் என்றும், திரிபுராதிகள், திரிபுராதிகளின் பெயர்களாக,

தாரகாக்ஷன் – பொன்கோட்டை – தேவலோகத்தில்

கமலாக்ஷன்– வெள்ளிக்கோட்டை –ஆகாயத்தில்

வித்யுன்மாலி – இரும்புக்கோட்டை – பூமியில்

என்ற அமைப்புக்களுடன் வடமொழிப் பெயர்களுடனும், வியப்புச்சுவை தருவனவாகவும், (கோட்டையமைப்பு) இயற்கை இறந்த

---

156. திரு. நடன. காசிநாதன், தாய்மார் எழுவர் வழிபாடு. (ப.ஆ) இரா. நாகசாமி, கல்வெட்டு இதழ்-14, காளயுக்தி ஆண்டு, ஆடித்திங்கள், ப.27.

நிகழ்ச்சிகளுடனும் (கோட்டை அமைந்த இடங்கள்) விவரிக்கப் பட்டிருக்க, [157]

முத்தாரம்மன் கதைகளில் அமையும் முப்புரச் செய்திகள் தமிழுணர்வுடையவனாகவும், நடப்பியல் தன்மை சான்றனவாகவும் உள்ளமை கவனிக்கத் தக்கன.

திரிபுரம் – முப்புரம்

திரிபுராதி – முப்புராதி

திரிபுராதியரின்பெயர் : தராகாக்ஷன் – ஆதித்தன்

கமலாக்ஷன் – குமுதன்

வித்யுன்மாலி – நீலன்

எனத் தமிழுணர்வுடன் பெயர்கள் அமைந்துள்ளன.

இவர்கள் மூன்று காடுகளாயிருந்த முக்காடு என்ற பகுதியைத் திருத்தியமைத்து, அதில் முந்நகர்களை உருவாக்கி முப்புரக் கோட்டை அமைத்ததாக, நடப்பியல் சார்ந்ததாகவும் உள்ளன. [158]

III. முப்புராதிகள் என்ற அமைப்பு தமிழக மும்மன்னரைக் குறிப்பிடுவதா?

மூன்று பெருங்காடுகளை அழித்து, மூவருக்கும் ஒவ்வொன்றான முந்நகரக் கோட்டை யமைத்து ஆட்சி செய்தனர் என முத்தாரம்மன் கதைகளில் குறிக்கப்படும், புராணங்களில் கூறப்படும் முப்புராதியர் என்ற அமைப்பு தமிழக மும்மன்னரைக் குறிப்பிடுவதாகலாமா? என்ற சிந்தனை எழுகின்றது.

---

157. ஸ்ரீபாரதம் (கர்ணபருவம்), Op.Cit., ப.101 என்பதில் இத்தகு முறையில் விவரிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

158. "முக்காட்டில் கோட்டையிட முகூர்த்தமிடு சோதிரியே" (640)
"முந்தவேமுக் காடதனில் முளையறைந்து முகூர்த்தமிட்டார்" (655)
- முத்தாரம்மன் விற்கவிதை.
" மூன்று காட்டையும் வேட்டை யாக்கினார்"
- சு.எண்.52, முத்தாரம்மன் கதை (ஆ.ஆ.நி.), இ.21.

தமிழர் அல்லது திராவிடரை 'அரக்கர்' அல்லது 'அசுரர்' என்று பெயரிட்டு அழைத்த ஆரியர் முந்நகர்க் கோட்டை கட்டி ஆண்ட தமிழக மும்மன்னரை 'முப்புராதிகள்' என்ற அசுரராகப் புராணக் கதைகளில் படைத்தனரோ என்ற எண்ணம் எழுகின்றது.

ஆதித்தன், குமுதன், நீலன் என்ற முப்புராதிகளின் பெயரமைதிகள்,

சேரர் – அக்கினிவம்சம் (அக்கினி நீலனுக்கு உதவிபுரிந்தவன், இராம ராவண யுத்தத்தில் நீலன் என்னும் வானர உருக் கொண்டவன், நீலனுக்கு அருச்சுனன் பெருமைகளைக் கூறியவன் என்ற நிலைகளால் நீலனுடன் தொடர்புடையவனாகிறான் (அபிதான சிந்தாமணி, ப.9.)

சோழன் – சூரிய குலம் (ஆதித்தன் = சூரியன்)

பாண்டியர் – சந்திரகுலம் (குமுதன் – குமுதமலர் சந்திரனுடன் தொடர்புடையது, சந்திரனை நோக்கி மலரக் கூடியது).

என்ற நிலைகளால் மும்மன்னரோடு ஒப்பிட்டு நினைக்கக் கூடிய அளவு பொருத்தமுடையவராகவும் உள்ளமை கவனிக்கத் தக்கது.

IV. முக்காடு – திரிச்சுரம்

முப்புராதிகளாகிய மூன்று மன்னர்களும் முக்காடு அதாவது மூன்று காடுகள் என்ற பெயர் கொண்ட முப்பெரும் காடுகளை அழித்துச் சீர்படுத்திக் கோட்டை கட்டி ஆண்டனர் என்பதைக் குறிக்கும் கதைப்பாடல் வரிகள் அடிக்குறிப்பு எண்.158–லேயே தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. இத்தகு முக்காட்டில் அமைந்த திரிபுரத்தை எரித்து அழித்துள்ளமையால் சிவபிரான் 'திரிபுரமெரித்தோன்' அல்லது 'முப்புர மெரித்தோன்' என்ற பெயருடன் (கங்கை கடார வெற்றிகளின் பின் 'கங்கை கொண்டான்', 'கடாரம் கொண்டான்' என்ற பெயர்களை மன்னர்கள் சூட்டிக் கொண்டதுபோல்) 'திரிச்சுரம் கொண்டவர்' 'திரிச்சுரம் உடையவர்' என்றும் குறிக்கப்படுகின்றமை எண்ணத்தக்கது.

"... கொண்ட சோழமண்டலத்தைக் குலோத் ....
ஜெயோம் எங்களூரிற் திரிச்சுரமுடைய
ஓஹா தேவர்க்கு ....." [159]

என அமையும் கல்வெட்டு வரிகள் கவனிக்கத் தக்கன.

V. மும்மன்னர்களில் தாய்த் தெய்வம் என்பதன் அடையாளம் மூன்று தலை முத்தாரம்மன்

முப்புராதிகளின் தெய்வமாக அமைந்த முத்தாரம்மன் மூன்று முகம் கொண்டவளாகப் படைக்கப்பட்டு வணங்கப்பட்டிருக்கின்றாள். 'மூன்று மன்னர்கள் வணங்கும் தாய்த்தெய்வம்' என்பதுணர்த்தவும் 'மூவரையும்' மூவரின் முப்புரத்தையும் காப்பவள்' என்ற அடிப்படையிலும் 'ஒருடல் மும்முகம்' அமைந்த தெய்வ வடிவாக, முத்தாரம்மனைப் படைத்து வணங்கியிருக்கின்றனர்.

மும்முகம் கொண்டவளாக முத்தாரம்மன் தெய்வம் அமைந்திருந்தது என்பது கதைப்பாடல் வரிகளிலேயே குறிப்பிடப் பட்டுள்ளது.

"மூன்று முகமுங் கையாறுமாய்" [160]
"மூன்று முகங் கொண்ட மாதாவின்
முடிமேற் சொரிந்தவர் நீராட்ட" [161]
"அருமையா மூன்றுமுகங் கொண்டா ளம்மை" [162]
" மங்கை மூன்று திருமுகங் கோலமாய்" [163]

என அமையும் வரிகளைச் சான்று காட்டலாம்.

---

159. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைய சோழர்காலக் கல்வெட்டு. இது சென்னை மாவட்டம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் வெளிச் சுற்றுத் தரையிலுள்ளது. இங்கு 'திரிச்சுரமுடைய மகாதேவர்' என்ற தொடர் சிவபெருமானைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

160. முத்தாரம்மன் விற்கவிதை. வரி. 1835.

161. மேற்படி. வரி. 1853.

162. சு.எண். 52 - முத்தாரம்மன் கதை (ஆ.ஆ.நி.) இ.49.

163. மேற்படி. இ.51.

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் இன்றும் உள்ள முத்தாரம்மன், மூன்று தலைகளுடனேயே காணப் படுகின்றமையும் தக்க சான்றாகத் திகழ்கின்றது. இம்முத்தாரம்மன் 'மூன்று முகங்கொண்ட அம்மன்' என்றே அழைக்கவும் படுகின்றது.

முப்புராதியை மூவர் வணங்கியமையின் "முத்தலை+அம்மன்> முத்தல அம்மன்> முத்தாலம்மன்" என்று ஆகியும் வந்திருக்கலாம்.

நீலன் (கருமை நிறம்), ஆதித்தன் (செம்மை), குமுதன் (வெண்மை) என்ற முப்புராதிகளின் கருமை,செம்மை, வெண்மை குறிக்கும் நிலையுடன் முத்தாரம்மனின் மூன்று முகங்களும் கரு, செந்நிற, வெண்ணிறங்களுடன் கிழக்கு, தெற்கு, மேற்குத் திசைகளில் வடபுறம் நோக்கி அமர்ந்த நிலையில் வடக்கு வாசல் செல்வியாக அமைந்திருந்தமை தெரிகின்றது.

"மங்கை மூன்று திருமுகங் கோலமாய்

வடக்குவாச் செல்வியாய் வீத்திருந் தாளாம்" [164]

எனக் கதைப்பாடல் வரிகள் அமைகின்றன.

இவ்வாறு முச்சிரம் உடைய அம்மன் 'மகாமாரி' என்றும் அழைக்கப் பெறுமென்றும், ரசோ, சத்துவ, தாமத குணமுடைய இம் மும்முகங்கள், படைக்கும், காக்கும், அழிக்கும் என்ற முச்சக்தியையும் உள்ளடக்கியவள் என்ற கருத்தில் படைக்கப்பட்டவை என்று அமையும் தத்துவ விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன. [165] இவை புராணக் கதைகளையெல்லாம் தத்துவ நோக்கில் கண்ட, தத்துவ நோக்கில் மட்டுமே கண்ட காலகட்டத்தைச் சேர்ந்தவை.

முப்புரத்தாருக்குரிய, அவர்களது தாய்த்தெய்வமாய முத்தாரம்மன், மூன்று பேர்களின் தெய்வம் என்பதுணர்த்த முத்தலை உடையவளாகப் படைக்கப்பட்டு வணங்கி வந்த நிலை, காலம் குறிப்பிட இயலாத அளவு பழமை வாய்ந்த ஒன்றெனத் தெரிகின்றது.

---

164. மேற்படி.

165. அபிதான சிந்தாமணி, ப. 1230.

முத்தலை உடையதெய்வ வடிவு சிந்துவெளி நாகரீக காலத்திலேயே கிடைத்துள்ளமை இவ்வம்மனின் பழமையைத் தெளிவுபடுத்தும்.

சிந்துவெளி நாகரீகச் சின்னங்களாகக் கிடைத்தவற்றுள் மூன்று முகம் கொண்ட ஒரு தேவதை வடிவமும் கிடைத்துள்ளதாக இந்நாகரீகம் பற்றி ஆய்ந்த ஜான் மார்சல் (John Marshall) தெரிவித்துள்ளார். [166]

“முத்தலை உடைய தெய்வ வடிவங்கள் ஆனைமலைக் கருகில் அழிந்து கிடக்கும் கோயில்களிலும், வடஆற்காடு ஜில்லாவில் காவேரிப்பாக்கத்தை அடுத்த மேலைச் சேரியிலும், பெல்காம் கோட்டத்தில் உள்ள ‘கோகாக்’ நீர்வீழ்ச்சிக்கு அருகிலும், உதயபுரி சமஸ்தானத்தைச் சேர்ந்த ‘சித்தோர் கார்’ என்னும் இடத்திலும், காணப்பட்டதாகவும், ஆயின் இவை வரலாற்றுக் காலத்தில் வழக்காறு அற்றுப்போய் விட்டதாகவும் தோன்றுகின்றது”. [167]

முப்புராதிகளுடைய தெய்வத்தின் மூன்று அடையாள மாலைகள்

மூவரின் தெய்வம் என்பதுணர்த்தும் வகையில் மூன்று அடையாள மாலைகளையும் முத்தாரம்மன் அணிந்தாள் எனத் தெரிகின்றது.

சங்ககாலத்தமைந்த மூன்று தமிழக மன்னர்களாய சேர, சோழ, பாண்டியர் பனம்பூ, அத்திப்பூ, வேப்பம்பூ மாலைகளை அரசு அடையாளச் சின்னங்களாக அணிந்திருந்தது போன்று முப்புராதிகளாய முப்புரக் கோட்டை கட்டி வாழ்ந்த மும் மன்னர்களும் தமது மூன்று அடையாள மாலைகளைத் தம் குலதெய்வமாய முத்தாரம்மனுக்கும் அணிந்து ‘தம் மூவர்க்குரிய தெய்வம் அவள்’ எண்பதுணர்த்தியிருக்கின்றனர்.

---

166. *"A square seal a three faced deity with typical Dhyanayoga posture".*

- John Marshall, Mohonjo-Daro and the Indus Civilization, Vol.I, p.53.

167. டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை, மொஹஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் (1972), ப.191.

முத்தார்+அம்மன் = மூன்று தார் அதாவது மூன்று மாலைகள் உடைய அம்மன் என்ற பொருளிலும் 'முத்தாரம்மன்' என்ற பெயர் வழங்கப்பட்டிருத்தல் கூடும்.

கி.பி.10—ஆம் நூற்றாண்டைய சூடாமணி நிகண்டு காளியின் பெயர்களாக 'முக்கண்ணி' எனக் குறிப்பிடுவதும் அவள் மும்மாலை உடையவள் என்பதுணர்த்துவதும் ஆகலாம்.

முத்தாரம்மன் கதைப்பாடல்களில் மூன்று மாலை அணிந்த அவள் தோற்றம் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளது.

"முத்துமாலை யம்மனுக்குக் கொத்துமாலை யுங்கொடுத்து

மூனுமாலை யென்றுங் காணத் தானுமாலை யன்மகிழ்ந்து" [168]

எனக் கதைப்பாடல் வரிகள் அமைகின்றன.

முத்தரைக் குரியவள் முத்தாரம்மன்?

முப்புராதியரின் மூன்று பூமிக்கு அல்லது முத்தரைக்கு உரியவள் முத்தாரம்மன் ஆகியிருக்கலாம் என்றும் எண்ண இடமுள்ளது.

முத்தரை+அம்மன் > முத்தாரம்மன் > முத்தாரம்மன் எனப் பேச்சு வழக்கில் நீட்டி வந்திருக்கலாம்.

தரையை அல்லது பூமியைப் பெண்ணாகக் கருதித் தெய்வமாக வழிபடல் தமிழ் மரபே.

பூமியைத் 'தரைப்பெண்' என்றே கொண்டர்கள் இன்றும் அழைக்கின்றனர்.

---

168. சு.எண். 8427 - முத்தாரம்மன் கதை (கே.ப.சு.) (பதிக்கப்பெற்றுள்ள கதைப்பாடல்), வரி. 1562 - 1563.

தரைப்பெண் வழிபாடு சிந்துவெளியிலேயே அமைந்திருந்த பழமையும் உடையதாகும்.[169]

முப்புராதி = முப்புடாரி?

'முப்புராதி' என்ற பெயர் வழக்கிலிருந்தே 'முப்புடாரி' அல்லது 'முப்பிடாரி' என்ற இன்றைய கிராம தேவதையாக வணங்கப்பட்டு வரும் பெயர்வழக்கு தோன்றியதோ என எண்ண இடம் உள்ளது.

முப்புராதிகள் வணங்கிய அம்மன் 'முப்புராதி அம்மன் ' என அமைந்து, இதுவே பின் 'முப்புடாரி அம்மன்' என ஆகியிருத்தல் வேண்டும்.

முப்புராதி என்பதிலுள்ள 'ரகரம்' அழுத்தி உச்சரிக்கப்படும்போது, 'டகரமாக' மாறி 'முப்புடாதி' 'முப்பிடாதி' என்ற பெயர்களாகவே வழங்கப்பட்டுள்ள நிலைக்குச் சான்றுகள் உள்ளன.

"காளி கோவில் கட்டினார்கள்
கட்டுடனே குடும்பக் கமார்கள்
முப்பிடாதி அம்மாள் என்று
மூன்று தரம் அழைத்தார்கள்"[170]
"முப்புடாதி அம்மனுட கோவில் விட்டு"[171]

என அமைவன நோக்கத் தக்கன.

புட்டு – பிட்டு என வருதல் போல புராதி > பிராதி > பிடாரி என அமைந்திருத்தல் வேண்டும்.

---

169. மொஹஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் டீ: ஊவை., ப.189.

170. (ப.ஆ.) சு. சண்முகசுந்தரம், மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை, வரி. 190-193.

171. சு.எண். 8432 - குத்தால லிங்கர் கொடிப்பாட்டு (கே.ப.சு) இ.15.

முப்புராதிகளின் மரணத்தின் பின் அவர்கள் மக்களால் தெய்வங்களாக வணங்கப்பட்டிருத்தல் வேண்டும். மூவரின் நினைவாக மூன்று பீடங்கள் (சற்று உயர்ந்த மேடை) அமைத்து வழிபட மூன்று+பீட+ஆதிகள் = 'முப்பிடாதிகள்' என்றும் வழக்கில் வந்திருக்கலாம் (மதுரை மாவட்டம் சிறுகுடியில் அம்மன் சிலை இன்றிப் பீடத்தை மட்டும் வழிபடும் நிலையை இன்றும் காண்கிறோம்).

எவ்வாறாயினும் முப்புடாரி என்ற பெயர் வழக்கு, ஆதியில் முப்புராதிகளையே குறிக்கும் வழக்காக இருந்திருத்தல் தெளிவு.

முப்புடாரி அல்லது முப்பிடாரி என்பது ஆண் தேவதைப் பெயரே என்பதற்கான சான்று இன்றும் கிடைக்கிறது.

"அப்பனே முப்புடாதி தப்புநடத்தி வைய்யாதே"[172]

"அய்யன் பிடாரி[173]

எனும் வழக்குகள் காணத் தக்கன.

முப்பிடாரி அல்லது முப்புராதிகளின் அரசைக் காத்த அம்மன் 'பிடாரி அரசு காத்த அம்மன்' என அழைக்கப்பட்டிருக்கிறாள், இத்தகு பெயர் வழக்குகள் இன்றும் பல ஊர்களில் காணப்படுகின்றன.

"திருச்சி மாவட்டம் நத்தத்தில் பிடாரி அரசு காத்தம்மன்

" " திருவெறும்பூரில் அரசுகாத்த பிடாரி அம்மன்

" " களத்தினம்பட்டியில் பிடாரி அரசு காத்தம்மன்"[174]

என வழங்கப்பெறும் பெயர் வழக்குகள் காணத் தக்கன.

---

172. சு.எண்.52 - முத்தாரம்மன் கதை (ஆ.ஆ.நி.) இ.22.

173. " 4087 - சித்திரபுத்திர நயினார் கதை - (கே.ப.சு) இ.27.

174. *Nambiar, P.K., Census of India, Vol.IX, Part XI D Templey of Madras State (1961), Nos.76, 51, 74.*

புரத்தை ஆண்டவர்கள் புர+ஆளிகள் > புராளி > பிராளி என வழங்கப்பட்டு, இவர்களின் அம்மன் 'பிராளி அம்மன்' என்றும் அழைக்கப்பட்டிருப்பது தெரிகின்றது.

கோவை மாவட்டம் திம்மங்கனூரில் உள்ள தெய்வம் 'பிராளி அம்மன்' ஆகும்.[175]

முப்புராதிகளாய மூவரும் தெய்வமாகக் கொண்டு வணங்கியதாலேயே "மூவர்கொண்டம்மன்"[176] என்ற பெயர் வழக்கும் தோன்றியிருக்கலாம்.

சேலம் மாவட்டம் பருத்திபள்ளி கிராமத்திலுள்ள "மூன்று மாதா மாரியம்மை" என்பதும் முப்புராதியை மூன்று பேர்களும் வணங்கிய மும்மாதா என்ற நிலையுடன் தொடர்புடைய பெயராக அமைந்திருத்தல் கூடும்.

முப்புலியம்மன் > உப்பிலியம்மன் என்று இன்றும் வழங்கப்பட்டு வரும் பெயர்வழக்குகளும் முப்புராதிகள் தொடர்புடையதாகலாம் எனத் தோன்றுகின்றுது.

ஆட்களைப் 'புள்ளி' என அழைத்தல் இன்றும் கேரளா, கன்னியாகுமரிப் பகுதிகளில் உள்ள வழக்கே (புள்ளிக்காரன், புள்ளிக்காரி என்பன குறிப்பிட்ட ஆண், பெண் என்பது குறிக்கும்). பிற மாவட்டங்களில் "அவர் பெரும்புள்ளி" எனக் குறிப்பிட்ட ஆளைக் குறிக்க புள்ளி என வழங்கும் வழக்கு உண்டு.

"புள்ளிதோறும் முத்தை அள்ளி விரைத்தாள்"

(8427 – முத்தாரம்மன் கதை , வரி.1679)

என ஆள்தோறும் அம்மை முத்தை விதைத்தாள் எனக் கதைப் பாடலிலேயே 'புள்ளி' என்பது 'ஆள்' குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

---

175. Ibid. (1969), No.69.

176. சேலம் மாவட்டம் பரோஜி அக்ரஹாரத்திலுள்ள தெய்வம்.

முப்புள்ளி என்பது முப்புராதிகளைக் குறிக்க வழங்கி, இவர்களின் தெய்வம் முப்புள்ளி அம்மன் > முப்புளியம்மன் > முப்புலியம்மன் > முப்பிலியம்மன் > உப்பிலியம்மன் (மகர மெய் முதல் கெட்டு) என ஆகியிருத்தல் வேண்டும்.

'நல்ல புள்ளியம்மன்' (சேலம் மாவட்டம் மோரூர்) என வழங்கும் பெயர் வழக்குகளையும் பார்க்கிறோம்.

பிடாரி, உப்பிலி என்பதற்குத் தத்துவ விளக்கங்கள் பிற்காலத்து எழுந்து, அப்பெயர்கள் வழங்கிவந்த வரலாற்று நிலையை மறைத்திருக் கின்றன எனலாம்.

பீடை+அரி = பிடாரி – அதாவது பீடைகளை, பிணிகளை அரிபவள் பிடாரி என்றும், உப்பிலி என்பது ஒப்பிலி என்பதன் மரூஉ அதாவது ஒப்பற்றது என்ற பொருளில்வருவது என்றும் விளக்கங்கள் தரப்படுகின்றது.

ஒப்பிலியப்பன் என்பது போன்று ஒப்பிலியம்மன்என்ற வழக்கு இல்லாமை ஈண்டு நினைவிற் கொள்ளத் தக்கது.

தவிர உப்பிலி என்பது மொழி முதலில் மகர மெய் இணைத்துக் கொண்டு முப்பிலி ஆகியிருக்க இயலாதென்பதும் முப்பிலி என்பதே முதல் மகர மெய் கெட்டு உப்பிலி ஆக இயலும் என்பதும் அறிஞர் அறிந்ததே.

புராதிகளைக் குறிக்கும் பிடாரி அல்லது படாரி என்ற பெயர்வழக்கு பழமை சான்றதாகும். கல்வெட்டுக்களில் பிடாரி கோயில்கள் 'ஸ்ரீபிடாரி கோயில்கள்' எனக் குறிக்கப்படுகின்றன. பிடாரிக்குப் பலி கொடுத்த செய்திகள் பற்றியும் குறிப்புக்கள் கிடைக்கின்றன.

"ஸ்ரீகம்ப பருமற்கு யாண்டு இருபதாவது

பட்டைபொத்தனுக்கு ஒக்கொண்ட நாகன்

ஒக்கதிந்தன் பட்டைபொத்தன் மேதவம்

புரிந்ததென்று படாரிக்கு

குன்றகத் தலையறுத்துப் பிடலிகை மேல்

வைத்தானுக்கு"[177]

என அமையும் கம்பவர்மனின் திருவான்மூர் (பல்லவர்காலம்) கல்வெட்டொன்று பிடாரிக்குத்தன் தலையை அரிந்து ஒருவன் பலியிட்டுக் கொண்டதைக் குறிப்பிடுகின்றது.

கன்னர தேவனின் 27–ஆம் ஆண்டு கல்வெட்டு (கி.பி.967) 'உமாபிடாரி' யாள் கோயில் பற்றிய குறிப்பொன்றைத் தருகின்றது.

"கழுவேரி மேட்டு 'உமாபிடாரி' என்னும் செறுவு"[178] எனக் கல்வெட்டுத் தொடர் அமைகின்றது. இதில் புராதிகளைக் குறித்த பிடாரி என்ற ஆண் தெய்வப் பெயர் வழக்கு, அவர்கள் வணங்கும் அம்மனுக்காகி 'உமா பிடாரி' எனப் பெண்தெய்வப் பெயராக மாறிய நிலையைத் தெரிவிக்கின்றது.

பிடாரி – பீடு+ஆர்+இ

பெருமை உடையது, கருவம் உடையது என்ற பொருளில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆணவ நிலையுடன் பெருமை படைத்துத் தேவர்களையும் ஆட்டிப் படைத்து ஆண்ட புராதிகளுக்கு இப்பெயர் பொருத்தமாகதாகவே உள்ளது.

அம்மன் தொடர்பான பழமொழிகளில் 'பிடாரி' பற்றிய பழமொழிகளே மிகுதி[179] என்பது மக்களிடையே இதன் பேராட்சி உச்சத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

"அடங்காப் பிடாரியைக் கொண்டவனுங் கெட்டான்

அறுகங் காட்டை உழுதவனுங் கெட்டான்"

"கட்டுக்கடங்காபிடாரி"

---

177. தொ ஆ. நடன. காசிநாதன். கு. தாமோதரன் - கல்வெட்டு (ஓர் அறிமுகம்) (1973). ப. 67.

178. S.I.I. Vol. VII, No.810.

179. இரா சீனிவாசன். சக்தி வழிபாடு (1975). ப. 352.

"மழைக்கு ஒதுங்க வந்த பிடாரி மனைக்குச் சடுத்தம் (போட்டி) போட்டதாம்"

"ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தினது போல்"

"அண்டத்தைக் கையில் வைத்தாட்டும் பிடாரிக்குச்
சுண்டைக்காய் எடுப்பது பாரமா?"

என்றமையும் பழமொழிகள் பிடாரி என்ற தேவதை அடங்காத்தனமும், முரட்டு சுபாவமும், போர்க்குணமும், அண்டத்தையும் ஆட்டிப்படைக்கும் ஆற்றலும் கொண்டது என்ற பண்புகளை உணர்த்தி, புராணங்கள் காட்டும் முப்புராதிகளின் குணங்களுடன் பொருத்தமுடையதாகவும் உள்ளமை நோக்கத் தக்கது.

பிடாரிப்பட்டி (திருச்சி மாவட்டம், குளித்தலை தாலுகா)

பிடாரிப்பட்டு (தென் ஆற்காடு மாவட்டம், விழுப்புரம் தாலுகா)

பிடாரிதாங்கல் (செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா)

என பிடாரி பெயர் ஊர்ப்பெயர் அமைப்புக்களுடனும் இணைந்து சிறப்புடையதாகின்றது.

'பிடாரி வெளி' என்பது 'கொல்லை வெளி' என்ற பொருளில் அமைந்து 'ஊருக்கு வெளிப்புறம்' என ஆகி, 'தேவர்களால் ஒதுக்கப்பட்டுக் கானகத்தில் வாழ்ந்த முப்புராதிகளின் நிலையுடன் ஒத்துப் போவதாலும் புராதி = பிடாரி என்ற அமைப்பே இருந்திருக்கக் கூடும் என்பது உறுதிப்படுகின்றது.

முப்புரம் – பட்டபுரம் – புட்டாபுரம்?

முப்புராதிகளின் முப்புரம் தீயில் பட்டுஅழிந்ததால் 'பட்டபுரம்' எனக் குறிக்கப்பட்டு. பின் இதுவே 'புட்டாபுரம்' என வழக்கில் வந்ததோ எனக் கருதத் தோன்றுகிறது. 'பட்டபுரத்தம்மன்', 'பட்டாலம்மன்', 'புட்டாபுரத்தி' என முப்புர நாயகியாகிய முத்தாரம்மன் குறிப்பிடப்படுவது இதனாலாகலாம்.

இறத்தலை, அழிதலைப் 'படுதல்' எனக் குறித்தல் தமிழ் மரபு.

"ஊரழியப் போதே
னென்று பட்டான்" [180] (1971/116)

"புலிகுத்திப் பட்டான்
கல்" [181] (1971 / 89)

என அமையும் கல்வெட்டு வரிகள் மடிதலைப் 'பட்டான்' என்றழைக்கும் பண்டை மரபைத் தெளிவுறுத்துகின்றன.

தீயிற் பட்டு அழிந்த முப்புரமும் 'பட்டபுரம்' என அழைக்கப்பட்டு, இங்கிருந்த முப்புராதிகளின் குலதெய்வமாய அம்மனும் 'பட்டாலம்மன்' என்றே அழைக்கப்பட்டிருக்கிறாள்.

தமிழகத்தில் பல ஊர்களில் 'பட்டாலம்மன்' கோயில்களும் உள்ளன.

சேலம் மாவட்டம்	–	கீழமங்கலம்
" "	–	சேந்தமங்கலம்
" "	–	சேனத்தூர்
" "	–	தசரப்பள்ளி

போன்ற ஊர்களில் 'பட்டாலம்மன்' என்ற அம்மன் கோயில்கள் உள்ளமை கருத்திற் கொள்ளத் தக்கன.

திருச்சி மாவட்டம், மதகுடியில் 'பட்டுண்டாளம்மன்' கோயிலிலுள்ள பட்டுண்டாளம்மன் என்ற அம்மன் பெயரும், பட்ட முப்புரத்துடன் இணைத்துச் சிந்திக்கத் தக்கதாக உள்ளது.

முப்புரம் தீயில் பட்டதால் 'பட்டபுரம்' என்றும், இங்கிருந்த முத்தாரம்மன் 'பட்டபுரத்தம்மன்' என்றும் அழைக்கப்பட்டிருத்தல்

---

180. வெ. கேசவராஜ், நடுகல் வழிபாடு (1978), ப. 126.

181. மேற்படி., ப. 139.

வேண்டும். முத்தாரம்மன் கதைப்பாடல் வரிகளும் பட்டபுரம், பட்டபுரத்தம்மன் என்ற சொற்றொடர்களை ஆளுகின்றன.

"இருந்தன்பு கொட்டப் பட்டபுரம் நாங்கெல்லையில்
இசைவான மறையோரும் வாழியே" [182]
"பொருந்திய பட்டப்புரத்தம்மன் கதை படித்தவரும்
புகழாக அனுதினமும் வாழியவே [183]

என அமையும் வரிகள் காணத் தக்கன.

'புட்டாபுரத்தி' என்றும் 'புட்டாபுரத்தாள்' என்றும் முத்தாரம்மன் கதைகளில் முத்தாரம்மன் அழைக்கப்படுகின்றாள். 'புட்டாபுரம்' என்ற வழக்கும் காணப்படுகின்றது.

"மங்கையாம் வடிவுடைச்சி தங்கையாம் புட்டாபுரத்தி" [184]
"புட்டா புரத்தவள் பொய்க்காலி னாலே" [185]
"மீண்டு புட்டா புரத்துக்குப் போகாமல்" [186]

என அமையும் தொடர்களில் 'புட்டாபுரத்தி', 'புட்டாபுரத்தவள்', என முத்தாரம்மனுக்கு அமையும் பெயர்களும், புட்டாபுரம் எனக் குறிக்கப்படும் அவள் வீற்றிருந்த இடமும் முப்புரமாய தீயில் பட்டபுரத்தையும், 'அப், பட்டபுரத்தவள்' அவள் என்பதனையுமே குறிக்கின்றன.

முத்தாரம்மன் கதைப்பாடல்கள் முடிவுறும்போது பட்டபுரம் அல்லது புட்டாபுரத்திலேயே அவள் கொலுவீற்றிருந்ததாக முடிவுறுகின்றன.

"வார மாகிய பட்ட புரந்தன்னில்
வரிசை நல்ல முத்தம்மனும் வந்தனள்" [187]

---

182. சு.எண். 8427, முத்தாரம்மன் கதை, வரி. 2007-2008.
183. " " " " வரி. 2010-2011.
184. சு.எண். 8427 - முத்தாரம்மன் கதை, வரி.1392.
185. முத்தாரம்மன் விற்கவிதை, வரி. 1737.
186. " " வரி. 1815.
187. சு.எண். 8427, முத்தாரம்மன் கதை, வரி.1985-86.

என அமையும் வரிகளில், பல ஊர்களுக்கும் சென்று அம்மை நோய் பரப்பிய முத்தாரம்மன், இறுதியில் 'பட்டாபுரத்தில்' வந்து கோயில் கொண்டதாக அமைகின்றது.

'மாகாளியம்மன் கதை' போன்றவற்றிலும் அம்மன் புட்டாபுரத்தில் வீற்றிருந்ததாகவே உள்ளது. [188]

முப்பரம் அல்லது பட்டபுரம் எனப்படும் புட்டாபுரத்தில் கோயில் கொண்டவள் முத்தாரம்மன் என்று முத்தாரம்மன் கதைப்பாடல்களில் பாடப்பட்டுள்ள முறை, மரபு வழிப்பட்டு அமைந்தவை எனத் தெரிகின்றது.

பட்டபுரம் புட்டாபுரம் என ஆகியது மொழியியல் நோக்கில் எவ்வாறு சாத்திமானது எனத் தெரியவில்லை. ஒருவேளை 'புட்டா', 'புள்ளி' என்று பொருள்படுவதால் ஆளைக் குறிப்பதாகி, முப்புள்ளிகளாகிய முப்புராதிகளைக் குறிப்பிடுவதாகலாம். இம் முப்புராதிகளின் புரம் புட்டாபுரம், இப்புட்டாபுரத் தெய்வமாதலின், 'புட்டாபுரத்தி', 'புட்டாபுரத்தவள்' என அழைக்கும் வழக்கு வந்திருக்கலாம்.

சில எண்ணங்கள்

(1) 'முத்தாரம்மன் கதை' என்பதே 'முப்புரம் எரித்தகதை' எனும் அளவுக்கு, பெரும்பாலான முத்தாரம்மன் கதைப்பாடல்கள் முப்புரம் எரித்த கதையாகவே அமைவது மரபுவழிப்பட்ட நிலையாகும்.

(2) முப்புராதிகள் என்ற அமைப்பு திராவிட, அல்லது தமிழக மும்மன்னரைக் குறிப்பிடுவதாதல் வேண்டும்.

(3) இம் மும்மன்னர்கள் தாய்த் தெய்வ வழிபாடுடையவர்கள். இவர்களின் தாய்த்தெய்வம் மும் முகம் உடைய, முச்சூலம் கைக்கொண்ட, மும்மாலை அணிந்த 'முத்தாரம்மன்' என்ற பெயருடைய தெய்வமாகும்.

---

188. தி.சி. கோமதிநாயகம், தமிழ் வில்லுப்பாட்டுகள் (மார்ச் 1979) ப.43.

(4) தாய் வழிபாட்டினராய, திராவிட, முப்புராதிகளைத் தந்தைவழிபாட்டுடைய ஆரிய இனம் வெற்றி கொண்டதாகக் குறிக்கும் பாடலே முத்தாரம்மன் கதைப்பாடலாக உள்ள முப்புரம் எரித்த கதைப்பாடல்.

(5) 'முப்புடாரி' என்று இன்றும் வழங்கப்பெற்று வரும் நாட்டுப்புறத் தெய்வத்தின் பெயர், ஆதியில் முப்புராதிகளைக் குறிப்பிடுவதாக இருந்திருத்தல் வேண்டும்.

(6) முப்புராதி அல்லது 'முப்புடாரிகளின் அம்மன்', 'முப்புடாரி அம்மன்' எனப் பெயர் வழங்கப்பெற்று, இறுதியில், முப்புடாரி என்பது அம்மனுக்கே ஆகிவரும் பெயராக மாறியிருத்தல் வேண்டும்.

(7) முப்புராதிகளும் தெய்வமாக மக்களால் வணங்கப்பட்டிருக்கின்றனர் என்பதைக் கதைப்பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. தமிழக மும்மன்னர்களின் மறைவின்பின் மக்கள், தெய்வமாக அவர்களை வணங்கியிருத்தல் வேண்டும். பின்னர் இவர்கள் அம்மனின் பரிவார தேவதைகளாக அமைந்திருக்கின்ற நிலையும் தெரிய வருகின்றது.

(8) புராணக் கதையில் 'அசுரர்' என்று இழித்துரைக்கப்பட்டுள்ள முப்புராதியர் தமிழக மும்மன்னர் என்று தெளிவுபடுவதால், புராணங்கள் கூறும் 'அரக்கர்' 'அசுரர்' என்றமைகின்ற பிற நிலைகளும் வரலாற்று நோக்கில் ஆராய்ச்சிக்குட்படுத்தப்படல் வேண்டும்.

முத்தாரம்மன் – பெயராய்வு

முத்தாரம்மன், முத்தாலம்மன், முத்தாளம்மன், முத்தியாலம்மன், மாரியம்மன், முத்துமாரியம்மன், முத்துமாலையம்மன். முத்துமாலை நங்கையம்மன், முத்தம்மன், சின்ன முத்தம்மன், பெரியமுத்தம்மன், சின்னம்மன், பெரியம்மன், சொரிமுத்தம்மன் என்ற அனைத்துப் பெயர்களும் குறிப்பிட்ட ஒரு தெய்வப் பெயரையே குறிப்பதாக அமைகின்றன. இப்பெயர்கள் பற்றியும், பிற பெயர்கள் பற்றியும் சில விளக்கங்கள் காண்பதாக அமைகின்றது இப்பகுதி.

முத்தாரம்மன்

'முத்தாரம்மன்' என்ற பெயராட்சி 14–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மதுக்கரைப் பட்டயத்தில் முதன் முதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 51 ஊர்களில் [189] உள்ள அம்மன்கள் இப்பெயருடையனவாக அமைந்துள்ளன. இவ்விரு மாவட்டங்களில் மட்டுமே இப்பெயராட்சி உள்ளமை குறிப்பிடத் தக்கது. இம் மாவட்டங்களிலும், தென் கேரளப் பகுதிகளிலும் கிடைக்கின்ற அம்மனைக் குறித்த கதைப்பாக்களில் [190] இப்பெயரே ஆளப்படுதலை அறிய முடிகின்றது.

---

189. 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கிடும் துறையினர் 'தமிழ்நாட்டில் கோயில்கள் என்று 8 பகுதிகளாக வெளியிட்ட நூல்களின் துணைகொண்டு எண்ணிக்கை அறியப்பட்டது.

190. இப்பகுதியில் பிற இடங்களில் அமையும் அம்மன் கோயில் எண்ணிக்கைகளுக்கும் இந்நூற்களே துணைபுரிந்தன.

(1) சு.எண்.8427 - முத்தாரம்மன் கதை, (கே.ப.சு).

(2) " " " (சுவடி எண்ணிடப்படாதது).

(3) சு.எண். 8028 - வில்கதை அம்மன் கதை (கே.ப.சு)

(4) முத்தாரம்மன் விற்கவிதை, (ப.ஆ.) ஆறுமுகப்பெருமாள் நாடார், (1978)

(5) சு.எண். 52 - முத்தாரம்மன் கதை, (ஆ.ஆ.நி)

(6) சு.எண். 27 -

முத்தாரம்மன் என்பதனை 'முத்தினை ஆரமாக அணிந்த அம்மன்' என விரித்துப் பொருள் காணலாம். இதே பொருளில் அமையும் 'முத்து மாலையம்மன்'என்ற பெயராட்சியும் நெல்லை மாவட்டத்தில் 6 இடங்களில் வழங்கப்படுகின்றது.

திருச்செந்தூர் மாவட்டம் சீவைகுண்டம் வட்டம் குரங்குணி தென்திருப்பேரைக்குக் கிழக்கில் 1 $^{1}/_{2}$ மைல் தூரத்திலுள்ள 'ஏறல்' என்ற ஊரில் சீதாதேவியின் முத்து மாலையாகக் கருதப்படும் ஒரு மாலையே முத்துமாலையம்மனாக வணங்கப்பட்டுவரும் வழக்கு நோக்கத் தக்கது.

"தாழிய மலர்பல வணியாகேழ்கொளக்

காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப்

பாவையும் பலியெனப் பெறாஅ நோய்பொரா"

(அகம்.369)

என்ற சங்கப்பாடல் மூலம் அழகிய முத்துவடம் புனைந்து செய்த அழகமைந்த வலிய சுவரின் கண்ணுள்ள பாவைக்குப் பலி கொடுத்தல் பற்றிய செய்தியை அறிய இயலுகின்றது. இதன் மூலம் தெய்வத்துக்கு முத்துமாலை அணிவது சங்க காலத்திலேயே இருந்து வந்த மிகப் பழைய மரபே என்பது தெளிவாகின்றது.

'பி.எல்.சாமி' அவர்களும் முத்தம்மன், முத்தாலம்மன் என்ற தாய்த் தெய்வங்களின் பெயர்கள் "முத்தை அணிந்ததால் வந்தவை" என்பார்.

மேலும், "முத்தினையும், கடற் சோழிகளையும், கிளிஞ்சல் களையும் சங்கு வளைகளையும் அணிதல் செழிப்புக் குறியீடுகள்" [191] என அறிஞர்கள் குறிப்பிடுவதாகவும் குறிப்பர்.

வடமேற்கு இந்தியாவில் அரப்பா நாகரீகத்துக்கு முற்பட்டதாகக் கருதப்படும் குள்ளி அகழ்வில் கண்டுபிடித்த நாகரீகத்தில் அகப்பட்ட

---

191. திரு. பி.எல். சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, (செப். 1975), பக். 74-75.

தாய்த் தெய்வ மண் பொம்மைகளின் தலயில் சோழியை அணியாகவும், கையில் நிறைய சங்கு வளைகளையும் கண்டனர். இவைகளை செழிப்புக் குறிகள் என்பர். கிரேக்க, உரோம்நாட்டுத் தாய்த் தெய்வத்திற்கும் கிளிஞ்சலைச் சின்னமாகக் கொள்ளும் வழக்கமிருந்தது.

இதனால் முத்துமாலை அணிந்த தாய்த் தெய்வமாகிய முத்தாரம்மன் தொடக்கத்தில் செழிப்புத் தெய்வமாக வணங்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருத இடமுள்ளது.

பின்னால் வைசூரி அல்லது வசூரி எனும் அம்மைநோய்க்குரிய தெய்வமாக இது கருதப்பட்ட போதும், செழிப்புக்குக் காரணமாய மழை என்று பொருள்படும் மாரி என்பதனை இணைத்து முத்துமாரியம்மன் என்றும்,அம்மைக் கொப்புளங்களை விதை [192] என்றும், குரு [193] என்றும், முத்து [194] என்றும், நிலம் விளைபொருட்களோடு [195] ஒப்பிட்டும், நிலம் விளை பொருட்களையே அம்மை நோய் வகைக்குப் பெயராக்கியும் [196] அவற்றை விதைத்தாள் [197] என்றும் கூறியிருக்கும் சொல்லாட்சிகள் செழிப்புத் தெய்வமாய் வணங்கப்பட்டதன் எச்சங்களாகலாம்.

---

192. முத்தாரம்மன் விற்கவிதை. வரி.4044 - 4045.
"வடிவருதிப் பாறையிலே வாங்குமென்றார் பிடிவிதையை
பிடிவிதையைத் தான்வாரி பெண்ணணங்கு கைக்கொடுத்தார்".
193. மேற்படி. வரி. 4181.
"கோடாமல் வண்டிகளில் குருக்களையும் தானேற்றி"
194. சு.எண்.8427 - முத்தாரம்மன் கதை (கே.ப.சு.) வரி.519-520.
"கொட்டமிட்ட முத்தாரம்மன் முத்தெல்லாங்
குதிரை மீதிலுங் கொண்டுவரச் சொன்னாள்"
195.சு.எண். 8028. வில்கதை அம்மன் கதை. இ.ம.14.
"வாழைப் பழம்போலே வறுத்தமுத்து வேணுமென்றாள்
இலந்தம் பழம்போலே இலங்குமுத்து வேணுமென்றாள்".
196. சு.எண்.3952 - வசூரி வகையும் சிகிச்சையும் (கே.ப.சு)
இதில் வரகுருதி. கொள்ளம்மை. கடுகம்மை. பாசிப்பயத்தம்மை உளுந்தம்மை என்று அம்மை வகைகளின் பெயர்களும். குணங்களும். மருத்துவ முறைகளும் இயம்பப்பட்டுள்ளன.
197. முத்தாரம்மன் விற்கவிதை.
"நாடடக்கி விதைக்கவென்று நாயகியும் வழிநடந்து".

கடல்படு பொருளான முத்தினை மாலையாக அணிந்து, முத்தாரம்மன் என அழைக்கப்பட்டதாலும், கடற்புறங்களை அடுத்த கன்னியாகுமரி, நெல்லை, தென் கேரளப் பகுதிகளில் மட்டும் அப்பெயரால் வழங்கப்படலாலும், அகம் 201–ஆம் பாடலில் கொற்கைத் துறையிலிருந்த கடல்கெழு செல்வியை, பழையர் மகளிர் முத்தையும், வலம்புரிச் சங்கையும் சொரிந்து தழையணி உடுத்துத் தொழுத செய்தி இடம்பெற்றுள்ளதாலும், கடல்கெழு செல்வியாகவும் இவள் தொழப் பெற்றிருத்தல் வேண்டும்.

குமரி அல்லது கன்னித் தெய்வத்தைக் குறிக்கும் 'செல்வி' என்ற சொல்லே 'செல்லி' என மாறி, செல்லியம்மன், செல்லாண்டியம்மன், செல்லாயி அம்மன் (செல்லி+ஆயி. அதாவது செல்வியாய கன்னியா கவும், தாயுமாகி இருப்பவள்) என்ற பெயராட்சிகளோடு தமிழகமெங்கும் (126 கோயில்கள் உண்டு) வழங்கப்பட்டு வந்திருக்கின்றன.

இனி, முத்தாரம்மன் என்பதற்கு மூன்று தார்களை (மாலைகளை) அணிந்தஅம்மன் என்றும் பொருள் பிரித்துப் பார்க்கலாம். துழாய், வில்வ, கடப்ப மாலைகளை அணிந்து, மும்மூர்த்திகளின் சக்தி வடிவமாகத் திகழ்கின்றவள் இப்பெயர் பெறுகின்றாள்.

முத்தாரம்மன் விற்கவிதை, மற்றும் முத்தாரம்மன் கதைகள் (ஆ.ஆ.நி.) என்ற சுவடிகளினின்றும், இவ்வம்மன் முப்புராதிகளின் காவல் தெய்வமாகச் சிறந்திருந்த செய்தி தெரியருகின்றது. மூவர் தெய்வம் என்பதன் அடையாளமாக 'மும்மாலை அணிந்தவள்' முத்தாரம்மன் ஆகலாம்.

அம்மனாக அவதாரம் செய்கையில் முத்துப்போல் நகை செய்தமையின் முத்தாரம்மன் எனப் பெயரிட்டதாகவும் [198] உமையம்மை யின் முத்துப் போன்ற வேர்வையில் ஆதாரமாகிப் பிறந்தமையின், முத்து

---

198. சு.எண். 8427 - முத்தாரம்மன் கதை. (கே.ப.சு) வரி.246-247.

"முல்லை வென்ற நகைமுத்து மாலைக்கு

முதுமொழித் திரு நாமமு மிட்டனர்"

ஆதார அம்மன் முத்தாரம்மன் ஆனதாகவும் [199] உள்ள பெயர் விளக்கங்களையும் காணமுடிகின்றது.

முத்தாலம்மன்

தாராட்டு – தாலாட்டு

குரவை – குலவை

போல முத்தாரம்மன் – முத்தாலம்மன் பெயராட்சிகள் வழங்கி வந்திருக்கின்றன.

முத்தாலம்மன், முத்தாளம்மன் என்ற பெயர்களில் தென் ஆற்காடு, வட ஆற்காடு, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 35 ஊர்களில் அம்மன் கோயில்கள் அமைந்துள்ளன.

முத்தாலம்மன் என்பது முத்து+ஆலம்+அம்மன் என விரிந்து 'முத்துமாரி அம்மன்' என்ற பொருளில் அமையும். (ஆலம் = மழை) ஆலுதல் = சுற்றுதல், ஆடுதல் என்ற பொருளிலும் 'அம்மையாகிய முத்தைப் போட்டுப் பரவுதல்', 'அம்மை நோய் தந்து விளையாடுதல் என்றும் பொருள் தருகின்றது. இதுபோல் 'அம்மை முத்தினை ஆளுபவள்' 'முத்தாளம்மன்' ஆகியிருக்கிறாள். தென், வட ஆர்க்காடு மாவட்டங்களில் இப்பெயர் வழங்கப்படுகின்றது.

இனி, முத்தாலம்மன் என்பதனை 'மூன்று தலை உள்ளவள்' என்ற பொருளிலும் பார்க்க முடிகின்றது.

(முத்தலையம்மன் > முத்தலயம்மன் > முத்தலம்மன் > முத்தாலம்மன்).

"முத்துமாலை உலகளந்தாள் மூன்றுமுகம் கொண்டவளும்"

(வரி.354)

---

199. முத்தாரம்மன் விற்கவிதை, வரி.352-353.

"அம்மன் வேர்வையில் ஆதார மாகியே

ஆதி யாம்முத்தா ரம்மன் பிறந்தனள்"

"மூப்புக் கரசிதான் மூன்றுமுகங் கொண்டாள்"

(வரி.464)

என முத்தாரம்மன் விற்கவிதை குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

மேலும், திரு.நா. வானமாமலை அவர்கள் வள்ளியூர்க் கோட்டை (கோட்டை கட்டிய காலம் கி.பி. 1226 – கோட்டை அழிந்த காலம் 1544 அல்லது 1545 ஆகலாம் என்கிறார்). அழிவை உறுதிப்படுத்தும் சிற்ப அமைப்புடைய தூண்களின் இடிபாடுகளோடு "மூன்று யுகங் கொண்டஅம்மன்" என்ற பெயரில் ஒரு பீடம் இருப்பதாகவும், கவிமணி அவர்கள் இதனை "மூன்றுலகுங் கொண்டாள்" என்ற பெயரின் திரிபாக இருக்கலாம் என்று கருதுவதாகவும் குறிப்பர். [200]

இது மூன்று முகங்கொண்ட அம்மனின் பீடமாக இருக்கலாம், இதே வள்ளியூரைச் சேர்ந்த அருணாசலப் புலவராலேயே கேரளப் பல்கலைக் கழகத் திலுள்ள முத்தாரம்மன் கதைச்சுவடி (பதிப்பிக்கப் பெற்றுள்ளது – சு.எண். 8427) எழுதப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மூன்று முகம் உடையதற்குப் புராண, தத்தவ நோக்கில் மும்மூர்த்திகளுக்கும் முன்னவளாகவும், ரசோ (படைக்கும் சக்தி) சத்துவ (காக்கும் சக்தி) தாமத (அழிக்கும் சக்தி) குணங்களின் வடிவினளாகவும் [201] முறையே செம்மை, வெண்மை, கருமை முகங்களைக் கொண்டவளாகவும் விளக்குவர்.

'முத்தியாலம்மன்' என்ற ஆந்திரத்தில் வழங்கும் பெயரிலிருந்து 'முத்தாலம்மன்' என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். முத்து+இயல்+அம்மன் = முத்தியாலம்மன் ஆனதெனலாம். "தாடிகொம்பு

---

200. ஐவர் ராசாக்கள் கதை, பதிப்பாசிரியர் முன்னுரை, ப.6.

201. கலைக் களஞ்சியம், 4-ஆம் தொகுதி, ப.539.

கிராமம் அகரத்து முத்தாலம்மன் வரலாறு [202] விஜயநகரத்தினின்றும் இவ்வம்மன் வந்ததைக் குறிப்பிடுகின்றது.

முத்தம்மன்

முத்துதல், மூத்தல் என்பனவற்றின் அடிப்படையாகப் பிறந்து, ‘மூத்த அம்மன்’ என்ற பொருள் அமையும். மலையாள நாட்டில் இதே பொருளில் ‘முத்தச்சி’ என அழைக்கப்படுகின்றது. “மூத்த அம்மா, முத்தம்மா, ஆத்தாள், தாயார், அம்மா என்று பாமர மக்கள் அழைப்பர். [203]

பழங்குடியினராய காணிக்காரர் எனப்படுபவர்கள் முததாரம்மா என்ற தெய்வத்தையே இன்றும் வழிபட்டு வருகின்றமை எண்ணத்தக்கது. இவளையே ‘பழையோள்’ என்றும், ‘முதியோள்’ என்றும் மேகலையும் (காதை 19 – வரி.39) குறிப்பிடும். நாயன்மார்கள் ‘முதுகோதை’ என்றனர். கி.பி. 6–ஆம் நூற்றாண்டைய திவாகர நிகண்டும் காடுகாளின் பெயராக ‘மூதணங்கு’ என்ற பெயரைக் கூறுகின்றது.

---

202. சு.எண். 8271 - (செ.சீ.சு.)

"1816-ஆம் வருஷம் ஜூன் மாதம் 4-ஆம் தேதி ஸ்தானிகம் சக்கரராயரும் பூசாரி பொன்னையன் செட்டியும் எழுதிக் கொடுத்தது. அகரத்து முத்தாலம்மன் பூருவம் சுமார் 200 வருஷத்துக்கு முன்பே" என்ற குறிப்புள்ளது.

"ஸ்ரீ கிருஷ்ணராயர் காலத்தில் விஜய நகரப்பட்டணத்துக்குத் திண்டுக்கல் சீமையின் காரிய கர்த்தராகிய சக்கரராயர் அரண்மனைக் காரியமாகச் சென்று முத்தியாலம்மன் கோயிலில் விடுதியாயிறங்கியிருந்து மறுபடி திண்டுக்கல் வருகிறபோது, மேற்படி முத்தியாலம்மன் பிரசாத மூலியமாய் எலுமிச்சம்பழம் போல் பல்லக்கில் எழுந்தருளி வந்து சாந்நித்தியம் காட்டி, தாடிக்கொம்பு கிராமம் அகரத்திலே வந்து நிலையமாக இருந்தது" - என முத்தியாலம்மன் தமிழகம் வந்த வரலாறொன்று கூறப்பட்டுள்ளது.

203. தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு. ப. 54

காட்டு நாச்சியம்மன் – (இராமநாதபுர மாவட்டம் – கம்பனூர்)

காட்டேரி – (வட ஆர்க்காடு மாவட்டம் – காட்டேரி கிராமம்)

காடுகாத்த அம்மன் –(முத்தாரம்மன் விற்கவிதை)

காடாளம்மன் – (சு.எண்.8427 – முத்தாரம்மன் கதை, வரி .1331)

என்ற பெயராட்சிகள் காடுகொளாளோடு இணைத்து நோக்கத் தக்கன.

'மூத்த அம்மன்' என்று பொருள்படும் 'மூக்கம்மாள்' என்று நாட்டுப்புறங்களில் பெயரிடுவதும்,

முதியாலம்மன் – (வட ஆற்காடு மாவட்டம் – ஆதுரை)

முதலாயம்மன் – (" " " – வேதாந்தவாடி)

ஆத்தாளம்மன் – (கோவை மாவட்டம் – ஆவலப்பம்பட்டி)

அம்மாச்சியார் – (தென் ஆற்காடு மாவட்டம் – சௌந்திரவல்லி பாளையம்)

அம்மாச்சி அம்மன் –(மதுரை மாவட்டம் – அம்மாச்சிபுரம்)

பிடாரி அம்மாச்சி அம்மன் – (திருச்சி மாவட்டம் – பாலூர்)

என்ற பெயராட்சிகளும் கவனிக்கத் தக்கன.

மூத்த தாய்த் தெய்வத்துக்குப் பெரிய புட்டங்களும், கொங்கைகளும் காட்டப்படும். கி.மு. 7–ஆம் நூற்றாண்டைய ஆதிச்ச நல்லூர் தாய்த் தெய்வச் சிற்பத்துக்குப் பெரிய வயிறும், கொங்கை களுமுள்ளன. தாய்மையின் அடையாளங்களை மிகுத்துக் காட்டுவதற் காக இவ்வாறு அமைக்கப்பட்டதாகக் கருதுகின்றனர். 9–ஆம் நூற்றாண்டு விஜயாலயச் சோழன் தன் குலதெய்வம் நிதம்ப சூதனிக்குக் கோயில் கட்டியதைக் கல்வெட்டு கூறும். [204] நிதம்பம் என்பது பெண்ணின் புட்டத்தையும், பெண்ணுறுப்பையும் குறிப்பதாகும். 'புட்டாலம்மன்' என்ற பெயராட்சி இவண் இணைத்து நோக்கத்தக்கது.

---

204. Archaeoloical Survey of India, Annual Report, 1906-7

முத்து மாரியம்மன்

முத்துமாரியம்மன் – முத்து மாரி, மாரி, முத்தாரம்மன் என்று முத்தும், மாரியும் இணைந்த பெயராட்சிகளையும், தனித்து மாரியம்மன் என்று மட்டும் வழங்கும் பெயராட்சியையும் தமிழகமெங்கும் காணமுடிகின்றது. தமிழகத்தில் 496 மாரியம்மன் கோயில்கள் உள்ளன. அம்மன் கோயில்களில் அதிக அளவு எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ள அம்மனாக இது உள்ளமை குறிப்பிடத் தக்கது. இதிலும் சேலம் மாவட்டத்திலேயே அதிகமான மாரியம்மன் கோயில்கள் (158) உள்ளதும் கவனிக்கத் தக்கது.

6ஆம் நூற்றாண்டைய திவாகர நிகண்டு காடுகாளின் தொகுப்பில் 'மாரி' என்ற பெயரைக் குறிப்பிடுகின்றது.

கண்ணகி, மாரியம்மன் போன்று அம்மை நோயைத் தடுக்கக் கூடியவள்; தரக்கூடியவள் என்ற கருத்து சிலம்புக் காலத்திலேயே இருந்தது. வெப்பு நோயும் குருவும் நீங்கி, மழை பொழியக் கண்ணகியை வழிபட்ட செய்தியை உரைபெறு கட்டுரை (டாக்டர் உ.வே.சா. பதிப்பு, ப.30) தருகிறது.

இதனால் "மாரியம்மன் என்ற தேவதை கி.பி.2–ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே தமிழகத்தில் வழங்கப்பட்டு வந்தமை தெரிகிறது". [205]

மாரி என்பது 'மா' என்ற சொல்லினடியாகப் பிறந்து, செல்வத்தைக் குறிப்பதாக அமைந்து, செல்வத்தால் விளையும் செழுமையைச் சுட்டுகிறது. (செழிப்புத் தெய்வம்). செழுமையைத் தரும் மழை என்ற பொருளையும் உணர்த்திப் பண்டை வழிபாடான இயற்கை வழிபாட்டுக்குரிய தேவதையையும் குறிப்பிடுகின்றது.

ஆறுமுகப் பெருமாள் நாடார் பதிப்பித்துள்ள 'மாரியம்மன் கதை' [206] மூலம் மாரி மழைக்கும், அதனால் உண்டாகும் வெள்ளப் பெருக்குக்கும் காரணமாய நீர்த் தேவதை என்ற கருத்து புலனாகின்றது.

---

205. Arokyasami - The Cult of Mariamman on the Goddess of the rain, Tamil Culture, April, 1953, p.161.

206. "பார்ப்பினியாகிய அனந்தாயி, பாம்பைக் கடித்த கீரியைக் குழவியைக் கடித்தது எனத் தவறாக கருதிக் கொல்ல, பாவம் தீர்க்கப் பார்ப்பான் பாபநாசம் செல்ல, அனந்தாயி ஊரைச் சபித்துச் சுனையில் குழவியுடன் வீழ, ஊர் பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் அழிகிறது. சிவன் அனந்தாயிக்கு 'மாரியம்மன்' ஆகும் வரம் தருகிறார்" - எனக் கதை அமையும்.

சீதளா தேவி, மாரிமாதா, மரிநாநீ என்ற பெயர்களில் இத்தெய்வ வழிபாடு நாடு செழிப்பதற்காகத் திராவிட ஆதிக் குடிகள், கோண்டு, கஞ்சார் என்னும் வடநாட்டுக் குடிகளாகிய ஜிப்சிகள் மற்றும் மத்திய இந்தியாவிலுள்ள பல குடிகளிடையேயும் நடந்து வருவது நினைக்கத் தக்கது.

மாரி என்பது 'மாறி' என்ற சொல்லின் திரிபாக வந்ததெனக் கொண்டு, பல புராணக் கதைகள் இத்தெய்வ வழிபாட்டுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளன.

அவை "பரசுராமர் – ரேணுகை கதை", [207] "பிருகு – நாகாவலி கதை", [208] "மகிஷாசுர வதக் கதை" [209] போன்றனவாகும்.

"திருவள்ளுவரின் மனைவியை 'மாரி' எனும் கருத்தும் உண்டு". [210]

---

207. பரசுராமர் தன் தந்தை ஜமதக்னி கட்டளைப்படி, தாய் ரேணுகையின் தலையை வெட்டிவிட்டு, உயிர்ப்பிக்க வரம் கிடைத்ததும், அருகில் வெட்டுண்டு கிடந்த பறைச்சியின் தலையை அவசரத்தில் தவறுதலாகத் தன் தாய் ரேணுகையின் உடலில் பொருத்த அவள் உயிர்பெறுகிறாள். தலை மாறி அமைந்தமையின் அவள் மாரியானாள்.

கருத்துக்கள் - Henry White head - The Village Gods of South India (1976), p.116.

208. பிருகு முனிவரின் மனைவியாய நாகவலியின் அழகு, கற்பினைக் கேள்விப் பட்டு, உண்மையா என அறிய, திரிமூர்த்திகள் வர, வெகுண்ட அம்மை அவர்களைக் குழவிகளாக மாற்ற, இது மீச்செலவு எனக்கருதிய திரி மூர்த்திகள் 'அழகு மங்கிப்போக' எனச் சபிக்க, அழகுபோய் அம்மை வார்த்தது போன்ற அடையாளங்கள் தோன்ற, குரூபியாக மாறிய மனைவியை முனிவர் ஆசிரமத்தினின்று ஓட்டி, உலகில் அலகையாய்ப் பிறப்பெடுக்க எனக் கூற, அவளே மாரியானாள்.

- கலைக் களஞ்சியம், தொகுதி - 8 (1961), ப. 247.

209. மகிஷாசுரனை வதைத்த போது மும்மூர்த்திகளால் முடியாமல் போனபோது காளி மும்மூர்த்தியாக மாறி அழித்ததால் மாரி ஆனாள்.
- கருத்துக்கள் மேற்படி நூல், ப. 247.

210. கருத்து - The Village Gods of South India, p.115.

தமிழகத்தில் மாரியைஅம்மை நோய்க்குரியவளாகக் கருதும் வழக்கம் உள்ளது . அம்மை நோய்க்கு மட்டுமன்றி 'பிளேக் நோய்' வந்துற்ற போது, "பிளேக் அம்மா"[211] வாகவும் ஆகியிருக்கிறாள். வேறு பலவிதமான நோய்களை நீக்கும் தெய்வமாகவும் வணங்கப் பட்டிருக்கிறாள்.[212]

சின்ன முத்து, பெரிய முத்து

சின்னம்மன் பெரியம்மன்)

சின்னமாரி பெரியமாரி) – கோவை மாவட்ட வழக்கு

8427 – முத்தாரம்மன் கதையில் 'சின்ன முத்து', 'பெரிய முத்து' எனச் 'சிறிய', 'பெரிய' என்று இரண்டாகப் பிரிந்த பெயராட்சிகளைக் காண முடிகின்றது. 'சின்ன முத்து சின்னம்மைக் குரியவளாகவும், பெரிய முத்து பெரியம்மைக் குரியவளாகவும்' பேசப்படுகின்ற நிலையை முத்தாரம்மன் கதை தெளிவுறுத்துகின்றது.[213] இருவருக்கும் அக்காள் – தங்கை உறவும் கற்பிக்கப்பட்டுள்ளது.

சொரிமுத்தம்மன்

சொரிமுத்து, சொரிமுத்தம்மன், சொரிமுத்து மாரியம்மன் என்ற பெயர்கள்வழக்கிலுள்ளன. முத்தினை அதாவது அம்மைக் கொப்புளங் களை மாரி போன்று சொரிகின்றவள், சொறிகின்றவள் (அரிப்பெடுத்த லால் சொறிதல்) என்ற பொருட்களில் இவை அமைகின்றன.

"உரிமையுள்ள சிரங்கெனவே ஒருவிதையும் தாருமென்ன" (வரி.4074)

---

211. Narendranath Bhattacharya, The Monther Goddesses (1977), p.56.

212. வில்கதை அம்மன் கதை - இ.ம.15.

"கழுத்திலே போட்ட முத்து கண்டமாலை யாகுதய்யோ

மார்பதிலே போட்ட முத்து மார்பாணி யாகுதய்யோ

அரையதிலே போட்ட முத்து யரையாப்பு மாகுதய்யோ

துடையதிலே போட்ட முத்து துடைவாளை யாகுதய்யோ"

213. முத்தாரம்மன் கதை, வரி.1660

எனச் சிவபிரானிடம் முத்தாரம்மன் சொரி சிரங்குகளைத் தருதலையும், ஒரு வரமாகக் கேட்டுப் பெற்றதை 'முத்தாரம்மன் விற்கவிதை' விவரிக்கின்றது.

இவ்வம்மன் சவரர்கள் என்ற இனக் குழு மக்களின் தெய்வத்தோடு தொடர்புடையதாதல் வேண்டும்.

"சவரர்களின் தேவி சபரி". [214] மகாயான பௌத்தத்தில் 'பர்ணசபரி' என்றும், ஹீனயான பௌத்தத்தில் 'நக்ன சபரி' என்றும் தொழப்பட்டிருக்கிறாள்.

சபரி > சவரி > சொரி என ஆகியிருக்கிறது.

சபுரி முத்தையன் > சொரி முத்தையன் எனப் பேச்சு வழக்கில் வழங்கப்பட்டிருப்பதை (சு.எண்.8018 – சொரி முத்தையன் பாட்டு கே.ப.சு.) இங்கு இணைத்துக் காணலாம்.

சவரர்கள் இன்றும் வாழ்ந்துவரும் பழங்குடி மக்களாவர்.
"கவர்கணை வாழ்க்கைச் சவரர்"
(பெருங். உஞ்ஞை. 56, 68).

எனப் பெருங்கதை கூறும்.

பாலை நிலத்தில் வாழ்ந்த இவர்களின் வெற்றி தரும் வேட்டைத் தெய்வமாக அம்மன் இருந்திருக்கிறாள்.

இவ்வினக் குழு மக்கள் தங்கள் தாய்த் தெய்வக் கோயிலில் தங்கள் உயிரை மாய்த்துக் குடலையும், கண்மணிகளையும், வேம்பின் சினைதோறும் தொங்க விட்டிருந்த செய்தியும் பெருங்கதையில் பேசப்படுகின்றது. இதில் இவ்வம்மனுக்குரிய வேம்பில் தொங்கவிட்டனர் என்ற செய்தி கவனிக்கத் தக்கது.

---

214. "நிலைக்கும் பெரியமுத்து நிலையாத சின்னமுத்து"

தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, ப. 48.

"அரநுதி யன்ன பரன்முரம் படுக்கத்துச்
சுரமுத லடைந்த குழகன் புரிசைப்
பாழ்நிலை வாழ்நர் பரவினர் தூஉம்
செந்தடிக் குருதிப் பைந்நிணக் கொழுங்குடர்
எண்டிசை மருங்கினுங் கொண்டவ ரெடுத்த
வேர்முத லூசல் வேம்பின் சினைதொறும்
கண்பா டவிந்த கண்மணிப் பிறங்கலோடு"

(பெருங்கதை 1:52, வரி. 6–12).

தொடர்பான பிற பெயர்கள்

'முத்தாரம்மன் விற்கவிதை' மூலம் முத்தாரம்மன் திரிபுராதிகளென்ற முப்புராதிகளின் அரசு காத்த தெய்வமாக, அவர்களது காவல், குலதெய்வமாக இருந்த செய்தி தெரிகிறது. [215] முப்புராதிகளின் அம்மன் 'முப்பிடாரி அம்மன்' ஆகியிருக்கிறாள்.

(முப்புராதி > முப்புடாதி > முப்புடாரி > முப்பிடாரி)

பிடாரி அம்மன் – சேலம் மாவட்டம் – பொன்னப்பட்டி

பிடாரி அரசு காத்தம்மன் – திருச்சி மாவட்டம் – களத்தினம்பட்டி

பிடாரி அரசு காத்தம்மன் – திருச்சி மாவட்டம் – நத்தம்.

அரசு காத்த பிடாரி அம்மன் – திருச்சி மாவட்டம் – திருவெறும்பூர்.

முப்பிடாரி அம்மன் – மதுரை மாவட்டம் – தென்கரை

பிடாரி காவதம்மன் – செங்கற்பட்டு மாவட்டம் – ஆனைக்காடு

---

215. கதையமைப்பே இதன் அடிப்படையிலேயே இயற்றப் பட்டுள்ளது. "முப்புரத்தைக் காத்திருக்கும் கைப்பிரம்புக் காரியம்மன்" (வரி.378) என்றமையும் வரிகளும் இதனைப் புலப்படுத்துகின்றன.

பிடாரி காகதம்மன் – செங்கற்பட்டு மாவட்டம் – கரனிழம்பட்டி
முப்புடாதி அம்மன் – (சு.எண்.8432 – குத்தாலலிங்கர் கொடிப்பாட்டு, இ.15).

என்ற பெயர் வழக்குகள் சிந்திக்கத் தக்கன.

மூவர் கொண்டம்மன் – சேலம் மாவட்டம் – பரோஜி அக்ரஹாரம்
மூன்று மாதா மாரியம்மன் – சேலம் மாவட்டம் – பருத்திப்பள்ளி
முப்புலியம்மன் – செங்கற்பட்டு மாவட்டம் – வில்லிவாக்கம்

என்ற பெயராட்சிகளும் நோக்கத் தக்கன.

முப்புர எரிப்பின் பின்னர் தெய்வமாகிய முப்புராதிகளுக்கு மூன்று பீடங்கள் அமைத்து வணங்க, முப்பீட ஆதி முப்பிடாதி ஆனது போல், அவர்களையே குறிக்கும் 'முப்புள்ளி' என்பதில் புள்ளி என்பது நபரைக் குறிப்பதாக வழங்கி, முப்புள்ளியம்மன் (மூவருக்கு அம்மன்) முப்புலியம்மன் ஆனதெனலாம். சேலம் மாவட்டம் மோரூரில் வழங்கும் நல்லபுள்ளியம்மன் என்ற பெயராட்சி கவனிக்கத் தக்கது.

முப்புலியம்மன் 'மூப்பு உள்ள அம்மன்' என்ற பொருளில் அமைந்து, மூத்த தாய்த் தெய்வத் தொடர்புடையதுமாகலாம்.

முப்புலியம்மனின் முதல் மகரமெய் கெட்டு 'உப்பிலியம்மன்' என்ற பெயராட்சியும் வழக்கிலுள்ளது. இப்பெயர் 'திருவள்ளுவர் சரித்திரம்' [216] குறிப்பிடும் 'உப்பை' என்பதனோடும், நாகாவலியைக் காத்த வண்ணாத்தி உப்பை [217] என்பதனோடும் தொடர்புபடுத்திக் காணத்தக்கது.

---

216. 6383 - பி. 11283 - ஏ - திருவள்ளுவர் சரித்திரம் - (கே.ப.சு.) இதில் வள்ளுவரோடு அவதாரம் செய்த எழுவரில் உப்பை என்பவள் வண்ணார் குலத்தில் உதித்ததாகச் செய்தி உள்ளது. இந்த உப்பை நாகாவலியைக் காத்த உப்பையா என்பது தெரியவில்லை.

217. The Village Gods of South India, p.115.
"When Nagavali was put away it is said that a washer woman took care of her, and that in consequence she was also called Uppai . . . . "

இன்னும்,

வேம்புலியம்மன் – சென்னை, மதுரை மாவட்டங்கள்

(வேம்பு உள்ள அம்மன்)

வேம்பு + புளி + அம்மன் எனப் பிரிப்பாரும் உண்டு.

(டாக்டர் நடன. காசிநாதன் (தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் சொற்பொழிவில் கேட்டது).

வெம்புலியம்மன் – செங்கற்பட்டு, சென்னை , வடஆற்காடு மாவட்டங்கள் (வெப்பு உள்ள அம்மன்)

வெயிலுண்டம்மன்)
வெயிலுகந்தம்மன்) – நெல்லை, மதுரை, இராமநாதபுர
வெயில்காத்தம்மன்) மாவட்டங்கள்

என்ற பெயராட்சிகளும் நினைக்கத் தக்கன.

முத்தாலம்மன் கதை இறுதியில் அம்மன் 'பட்டபுரத்தில்' தெய்வமாகியதாகவும், முத்தாரம்மன் விற்கவிதை 'பட்டபுரத்தம்மன்' என்றும், குறிப்பிடுகின்றன. இக்கதை அமைப்புக்கள் நோக்க, 'பட்டபுரம்' தீயில் பட்ட முப்புரம் எனத் தெரிகின்றது.

'பட்டபுரத்தம்மன்', 'பட்டபுரத்தி' என்பதனோடு 'புட்டாபுரத்தி' [218] என்ற பெயராட்சியும், பட்டாலம்மன், பட்டாளம்மன் (தமிழகத்தில் 21 கோயில்கள் உண்டு) என்ற பெயர் வழக்குகளும், போர், வெற்றி, பரிவாரங்களின் தலைமைத் தெய்வம் ஆதலான் அமைந்த 'பட்டபுரத்தியம்மன்' (8 இடங்கள்) படைவேட்டம்மன் ப (ை) ட வெட்டியம்மன், படை வேட்டியம்மன், ப (ை) ட வீட்டம்மன், (7 இடங்கள்) பெரியபாளையத்தம்மன், பாளையம்மன் என்ற பெயராட்சிகளும் குறிப்பிடத் தக்கன. எல்லைக் காவல் தெய்வமாதலின் அமைந்த எல்லையம்மன், (30 கோயில்), வடக்கு வாச் செல்லியம்மன் (வடக்கு வாசல் செல்வியம்மன்) (8 இடங்கள்) என்ற பெயர் வழக்குகளும் எண்ணத் தக்கன.

அறிய வரும் கருத்துக்கள்

(1) தெய்வத்துக்கு முத்துமாலை அணிதல் சங்க காலத்திலேயே உள்ள மரபாதலின், முத்தாரம்மன் என்ற பெயராட்சி சங்ககாலப் பாவை வழிபாட்டுத் தொடர்புடையது.

(2) முத்து செழிப்புக் குறியீடாகக் கருதப்பட்டதாதலின், முத்தணிந்த முத்தாரம்மன் செழிப்புத் தெய்வமாக வணங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கடல்படு பொருளான முத்தினை அணிந்து கடல்கெழு செல்வியாயும் திகழ்ந்திருக்கிறாள்.

(4) முத்தாலம்மன், முத்து மாரியம்மன், மாரியம்மன் என்ற பெயர்களில் மழைக்குரிய தேவதையாகவும், மழையின்மையால் விளையும், வெப்பு நோய்க்குரியதாகவும் கருதப்பட்டிருக்கிறது. வெம்புலியம்மன், வெயிலுண்டம்மன், வெயிலுகந்தம்மன் என்ற பெயராட்சிகள் இது தொடர்பானவை.

(5) முத்தம்மன், முப்புலியம்மன் என்பன மூத்த, மூப்புள்ள என்ற பொருட்களில், மூத்த தாய்த் தெய்வ வழிபாட்டுத் தொடர்புடையன. ஆத்தாளம்மன், அம்மாச்சிஅம்மன், முத்தியாலம்மன், புட்டாலம்மன் என்ற பெயராட்சிகள் இது தொடர்பானவை.

(6) இருவேறு முக்கிய அம்மைக்குத்தக அம்மன் சின்னம்மன், பெரியம்மன் என இரண்டாகப் பிரிந்திருக்கிறது.

(7) முப்பிடாரி அல்லது முப்புடாரி என்ற சொல் முப்புராதிகளைக் குறிப்பிடுவதாதல் வேண்டும்.

(8) முத்தாரம்மன், முத்தாலம்மன், முப்புலியம்மன், பட்டாளம்மன், பட்டபுரத்தம்மன், புட்டாபுரத்தி, பட்டத்தரசியம்மன், படைவீட்டம்மன், படைவேட்டம்மன், படைவெட்டியம்மன், பாளையத்தம்மன், எல்லையம்மன், மூவர் கொண்டம்மன், பிடாரி அரசுகாத்தம்மன் என்ற பெயர்கள் முப்புராதி, முப்புரம் தொடர்பானவை.

(9) முத்தாரம்மன் பல்வேறு பெயராட்சிகளோடு,

- செழிப்புத் தெய்வமாக
- தாய்த் தெய்வமாக
- கன்னித் தெய்வமாக
- நோய்த் தெய்வமாக
- இனக் குழுத் தெய்வமாக
- போர்த் தெய்வமாக
- காவல் தெய்வமாக

காலந்தோறும் கலந்தமைந்திருந்த போக்கினைக் காண்கிறோம்.

(10) முத்தாரம்மன்

- முத்து+ஆரம்+அம்மன்
- முத்தார்+அம்மன்
- முத்து (போன்று)+ஆர் (மாலை – நகை = நகைத்த) + அம்மன்
- முத்து+ஆதார+அம்மன்

முத்தாலம்மன்

- முத்து+ஆலம்+அம்மன்
- முத்தலை+அம்மன்

முத்தியாலம்மன்

- முத்து + ஆலும் + அம்மன் (ஆடுதல்) (விளையாடுதல்)
- முத்து+இயல்+அம்மன்

முத்தாளம்மன் – முத்து+ஆள்+அம்மன்

முத்தம்மன் – மூத்த+அம்மன்

முத்து மாரியம்மன் – முத்து (போன்ற) மாரி+அம்மன் (மழை)

சொரி முத்தம்மன் – (சபரி > சவரி) சொரி+முத்தம்மன்

(11) முத்தாரம்மன் (கன்னியாகுமரி, நெல்லை மாவட்ட வழக்கு)

- முத்தாரம்மன்
  - பிற மாவட்டங்களில்
    - முத்தாலம்மன்
      - முத்து மாரியம்மன்
        - முத்தம்மன்
          - சின்ன முத்தம்மன்
          - பெரிய முத்தம்மன்
          - சொரி முத்தம்மன்
        - மாரியம்மன்
          - சின்னம்மன்
          - பெரியம்மன்
    - முத்து மாலையம்மன்
      - முத்தியாலம்மன்
      - முதியாலம்மன்
      - முதலாயம்மன்
    - முத்தாளம்மன்

V. சுவடி எண். 8427 — முத்தாரம்மன் கதை (மூலம்)

ஹரி : ஓம் நன்றாக

குருவே துணை

செல்லமுத்து நாமஞ் சிறந்தமுத்துப் பட்டபுரம்
நல்லமுத்துத் தாய்க்கதையை நான்நவில – வில்லமுத்து
வேணுமுத்துத் தாணுமுத்து வேலமுத்து மூலமுத்துக்
காணுமுத்துத் தந்திமுத்துக் காப்பு.
சீர்வளரெண் ணூற்றெழுபத் தேழா மாண்டுத்
    திகழ்பிர மாதிவருசங் கார்த்திகை மாதம்
பார்வளர்நா யறுதிருவோ ணத்தில் பூருவ
    பஞ்சமியில் குருவுதைய மமுர்த யோகம்
கார்வளருங் குழலிசிவ காமி சோமி
    கங்கைநங்கை மங்கைசெங்கைக் கல்விச் செல்வி
ஏர்வளரும் பட்டபுரம் முத்துத் தாய்க்கு
    இசைந்ததமிழ்க் கதையைவில்லி லியம்பு வோமே.

குருபாதமே கெதி. குரு முன்னிற்கவும்.

கூசயஎஞு ஆவணிபூஉயகூ ே.பூருவ பச்சமுங்
குருவாரமும் அசுபதி நட்செத்திரமுங் கூடின சுபயோக
சுபதினத்தில் வள்ளியூரிலிருக்கும் முத்துக் கருப்புப் புலவர்
மகன் அருணாசலப் புலவன் எழுதின சுவடி நன்றாக
குருவே துணை. குருபாதமே கெதி. குரு முன்னிற்க
வேணும். சரசுபதி அம்மாள் முன்னிற்க வேணும்.
வேலும் மயிலுந்துணை.

உறரி ஓம் நன்றாக

முத்தார அம்மன் கதை.

சங்காழி கொண்டமால் நம்பி மருகோனே
தந்திமுக னேகுகனே செந்தில் முருகோனே
பொங்காளி யுடனாடுஞ் சங்கரரே ஈசுரனார்
புதல்வனே முதல்வனே அமரர்தம் நாயகரே
கங்காளி திரிசூலி சிங்கார முத்தம்மன்
துங்காழி சூழ்புவியில் கதிர்காம வேலவனே
சொல்லுதவி யேநல்ல கல்விதர வேணும்.
தரவேணும் வாக்கமுர்தம் மழைபொழிந் ததுபோல
தந்துதவு வாயென்முன் வந்துதவி செய்வாய்
வரவேணுங் குமரேச வள்ளி நாயகனே
மயிலேறி வருகின்ற அயிலேறு பூங்கரனே
பரமேவு அரிசிகோ தும்பை சிறுபயறு
பால்துவரை சீனிசர்க் கரைகடலை விடலை
சீர்மேவு நறுநெய் தேனிள்நீர் செங்கரும்பு
கற்கண்டு நற்கதலி காரெள்ளி னுடனே
கார்நிறக் கற்பகக் கன்றுணவுட் கொள்ள
கனதருப்பண மவல்பொரி கரும்புடனே
சீர்பெறு மாதுளங்கனி பிலாச் சுளையும்
தீன்சுவைக் கதிரசந் தேன்குழல் வடையும்
பார்பெறு மோதகந் தோசைமுத லாகப்
பணியார வகையுடனே அணியாக வேதான்
போர்பெறுங் குடவயறு நிறையஅமு துண்ணும்
புகர்முகவ னேவந்து புத்திதரு வாயே.

புத்திதந் தருளுவாய் முத்து மாதாவே
புகழ்கொண்டு தமிழ்கொண்டு பொருள்கண்டு பாடச்
சித்திரம்பெற வில்லில் பாடுதற்கு னின்றன்
திருவடிக ளல்லாது ஒருதுணையு முண்டோ
சத்திநீ தந்தயென் புத்திர பாக்கியமும்
தவறாம லொருநாளு மறவாம லருள்வாய்
முத்திதரு வாயடி யேனுக் கிங்கிரங்கி
முத்தமிழ்ப் பாமாலை கொண்டருள்வா யம்மா.

வெண்பா

அருள்தருவா யென்னாவி லாய்ந்ததமிழ்க் கெல்லாம்
பொருள்தருவாய் செங்கமலப் பூவே – திருவருளால்
வாயிரங்க வெண்ணையுண்ட மாற்கிளைய மங்கைமுத்துத்
தாயிரங்கத் தன்மைசொல்வேன் தான்.

வேறு நடை

தன்மைதரும் முத்தம்மன் கதைகண்டு பாட
சரசுபதி யேகல்வி தந்தருளு வாயே.
வெண்மைநிற மானதோர் சந்திரர்க் கிணையாய்
வெள்ளியும் வான்மீன் மின்மினியுஞ் சரியோ
உண்மைநிற மானதோர் சூரியர்க் கிணையாய்
ஒருதீபம் வைத்துலகில் இருள்நீக்குவ தொக்கும்
வன்மைதருஞ் சிங்கத்தின் வாய்க்குள்ளே சென்று
மந்திநா யுங்கூடிச் சந்திப்ப தொக்கும்.
மந்திரிக் கிணையான ஊமையுஞ் செகுடனும்
மழலையுங் கூடியே குழறிடுவ தொக்கும்.

அந்திரப் புவிதாங்குஞ் சேடனுக் கிணையாய்
அணுவான பூநாக மாலிப்ப தொக்கும்
சுந்தரப் பொன்னும்பித் தாளையுஞ் சரியாமோ
சொல்லரிய தேனுக்குக் காடி சரியாமோ
முந்திரி யின்னதென்று அறியாத மூடன்
முழுக்கணக்க னென்னவே முழங்குவது மொக்கும்.
கணக்கொன்று மறியேனான் எழுத்தொன்று மறியேன்
கல்வியறி யேன்கவிதை சொல்லவறி யேனே.
இணக்கமாய்ப் புலவரே உங்கள்வாய்த் தம்பலம்
ஏந்தினேன் காளாஞ்சி என்வாயி னாலே.
குணக்காட்டி லடியேனைப் புலவனென் றெண்ணியே
குத்தமெல்லாம் பொறுத்துக் கண்டுகொள்ளு வீரே
வணக்கமாய் முத்தம்மன் கதைகண்டு பாடுதற்கு
மாசில்லாச் சகலகுரு நாதர் குருநாதன்
குருநாதன் பரசமய கோளரி சங்கத்தின்
கோதில்லாப் பங்கயப் பாத மறவேனே.
திருநாதன் மாலரி வரியோதி வைத்த
சீரெங்க நாதர் சீர்பாத மறவேனே.
தருநாத னாங்குப்பை யாண்டி வணிகேசன்
சமுகனைச் சமுக னிருதாளை மறவேனே
வருநாத னாங்குளத்தூ ரய்யன்சீஷ னாகும்.
மாந்தைக் குமாரவேல் சித்த மலரடியேன்
சித்தம் பொன்னம்பலவர் சீர்கொண்ட கமலம்
திருவடியு மென்னுடைய குருவடியு மறவேன்

சத்த சாகர மெனக்கத்த பார்ப்பயன்றாள்

சந்ததிப் பண்டாரம் பாத மறவேனே.

முத்தமிழ்க் காரிகை நன்னூல் தொல்காப்பியம்

மொழிகின்ற யெழுத்துசொல் பொருள்யாப்பு மதுவும்

சுத்த மாகிய அலங்காரத்தின் பனுவலும்

துகைகண்டு வகைகண்டு சொல்லுகவி ராசன்

கவிராச ரென்னையங்கார் திம்மையங்கார் துணைவன்

கல்விக் கடல்வரத கவிராசர் சிங்கம்

செவிராசிய மல்லாக் கவிகாள மேகம்

தெய்வனாயகன் னாககவி ராயர்துணை யானோன்

....

கழலினை துதித்துயின் னாள்கவிதை சொன்னோம்

புவிராசர் வாழ்த்து கள்ளப்பிரான் கவிராசர்

புகழான திருனாம மொருநாளு மறவேன்.

மறவாத வில்வீசு கோல்குடம் நாணென்று

மாந்தைபெறு வேந்தர்தமில் வரிசைபெறு தீரன்

திறமா னகத்தநகர் பெருமாள்சொல் புத்திரன்

திருமேனிக் கவிராசன், மழவனரு ளாலே

நறைமேவு சோலைக் குருகைஅழகியநம்பி

நகர்செங்கை நாட னாகப்புல தீரன்.

பிரதாப னாங்குட்டிக் காராள னீன்ற

பேர்வளர் சிதம்பரத் தேசிகன் தனையும்

தேசிகன் பரசமய சிங்கத்தின் சீஷன்

சித்தகுரு மனைகாவ லன்பெத்த போசன்

ஆசுகவி வீசுகோல் பேசுவில் தொழில்தந்த
அண்ணாவி மாடப்புலவர் தமையும் பணிந்தோம்
காசியுங் கன்னியா குமரியும் புகழ்பெற்ற
கனகோவ லன்கதையைக் கத்த காராளன்
மாசில்லா னய்யம்பெரு மாள்புலவர் தமையும்
மனதிலே வைத்து நினைத்துவளர் செல்வன்
மனத்துள் வைத்துச் சோணையாண்டிப் புலவர்தமையும்
வடிவழக ரழகரடி யாப்புலவர் துணையாம்
தினத்திலே மெய்த்தோர் மாந்தைவேந்தர்க் கெல்லாம்
திடமாக வேசாதிப் பிள்ளையென வந்தோம்
இனத்திலே சிங்கமுடை யார்கோட்டை யீன்று
இசைகொண்டு திசைகொண்ட யியல்கொண்ட தீரன்
சனத்திலே போர்க்குருவுங் கெசவள நாடன்
சங்கைதமிழ் மங்கைவான மாமலை தன்னில்
மங்கையூ ரவர்சொல்லி வரிசையும் பெற்றோன்
தேனமாஞ் சோலைமயில் நாச்சியா ரைத்தொழுது
சீர்வள ரணைஞ்சபெரு மாள்புலவ னருளிய
ஞானமாகி யிருளணைஞ்ச பெருமாள் தானும்
நல்ல முத்தம்மன் கதைசொல்லி வைத்தானே
தானமா யிக்கதையைப் படித்தபேர் கேட்டபேர்
தரணியி லதியதவம் பேர்பெற்று வாழுவார்.

விருத்தம்

அரியசொ லமுர்த மாகி அன்புள்ளோர் பொறுத்துக் கொள்ளும்
பெரியதோர் முத்து மாதா பிறந்துதான்வளர்ந்து சென்று

உரியதோர் கயிலை புக்கே உலகெல்லாம் விரிந்த வாறும்
விரிதிரைக் கடல்சூழ் பூமி விளங்கிடத் தமிழால் சொல்வாம்.

வேறு

சொல்லு மொருகட லிருகடல் முக்கடல்
    தோன்று நாற்கட லைங்கட லறுகடல்
வெல்லு மெழுகடல் எண்கடல் ஒன்பதா
    விளங்கும் பற்றாங்கடல் பால்கடல் தன்னில்
செல்லும் பளிங்குமா மண்டபந் தன்னிலே
    திரு வரசுஞ் சிறந்தபொற் பீடமும்
அல்லும் பகலுஞ் சிவாயநம வென்று
    அங்கு நாகலோக மதிலொரு நாகராசர்
நாக ராசாவின் பட்டணந் தனையாளும்
    நாக ராசாவின் நல்லதங்கை நாககன்னி
ஆக முரைத்தாளே பதினாறு தலைமுறை
    அகர உகரத்தின் பிரணவத்துள் நிலைநின்றாள்
பாக மயிலென்னக் குயிலென்ன வளர்த்த பின்
    பங்க யாசனத் தயன்விதிப் பயனினால்
மாகமுறச் சத்திக் காசிமா விருஷிக்கும்
    மங்கைக் கழகான தங்கைநாக கன்னிக்கும்
கண்ணுக் கழகான புதல்விதான் வேணுமென்று
    காசிமா விருஷிநாக கன்னிக் கிணங்கவே
மின்னிப் பிரகாச வடிவென்ன நோக்கியே
    வேள்ளி வளர்த்துப்பின் மூலமந் திரத்தினால்
வன்னிக் கொழுந்தின்மேல் சுழிமுனை நாட்டியே

வாய்வுதனி லேறி வருகின்ற பொருள்தன்னை
உன்னி யொருபிண்டம் ஓம்நமசி வாயமென்ன
உதங்கமுனி கையில் நாககன்னி வாங்கினாள்
வாங்கினா ளிருகைய் யார மெய்யார
மகிழ்ந்தங் கருந்தியே யிருந்தன ளருந்தவம்
தாங்கும் நாககன்னி யுதரத்தி லொருமாதம்
தனித்த யிருமாத மூன்றாந்திங் களுமாகி
ஓங்கும் நாலுட னயலஞ்சு மறியவே
உயர்ந்த அறுதிங்கள் உயரேழு மாதமாய்
பாங்கி யிருநான்கு திங்களில் சடங்குதான்
பக்தியுடன் செய்தார் சித்திரவிஸ் தாரமாய்
சித்திரத் துடன் ஒன்பது மாதமாய்
திங்கள் பத்துஞ் சிறப்பாகச் சென்றபின்
கொத்தலருங் குழல் நாக கன்னிக்கும்
கொண்ட சூலுளைந் தங்கமுந் தங்கமாய்
பத்தி ரம்பெறப் பொய்நோவு மெய்நோக
பரி தவித்துப் பதறிக் கதறினாள்
சத்தி முத்துக்கு வித்துமுத் தென்றுதான்
தையல் சத்து மறியாமல் நொந்தனள்.

விருத்தம்

நொந்தாள் திருவயிறு நோவா லுடல்மெலிந்து
தன்தாயை விட்டுத் தவிக்குமாங் கன்றதுபோல்
கந்தா முகுந்தா கறைக்கண்டா காவலென்று
வந்தா ளிருந்தாள் மலங்கினாள் நாககன்னி.

வேறு நடை

மலங்கினாள் கயிலை வாசனை யீசனை நன்றே
மணிவாய் திறந்தே இமையாளே யுமையாளேயென்று
கலங்கினாள் பெரிய காசிமா விருஷியைப் பார்த்து
கனிக்கனக மாமுலையும் வதனமும் விதனமும் வேர்த்து
துலங்கினார்கள் பல்லியரிசி தேவிமார்கள் சூழ்ந்துவந்து
தொட்டுப் பிடித்திடவே மட்டுக்குழ லசைந்துவீழ்ந்து
இலங்கினார்கள் முந்துவிதி தன்னைப்பதி தன்னை மதியோ
இந்த யேந்திழைக் கொருவரு மாதரங்காண் கிலன்சதியோ
சதியோ முன்னேசெய்த விதியோ நாகராசர் தங்கை
உயிர்தவிக்கும் தவிக்குங் கரங்குவிக்கும் நாககன்னிமங்கை
கெதியோ பிள்ளை யொன்றோரெண் டோவென் றறியேனம்மா
இதுகீர்த்திப் பரமா வித்து மூர்த்திகாணு மிதுகும்மா
நதியோ பெருங்கடலோ மலையோ பிருதிவியின் கூறோ
பொதுநாத னோவேத னோயேதென் றறிகிலேன் வேறோ
நிதியோஒன் றோரண்டோ பதியோமுன் னைசொல்லும் திருவேணி
எங்கள் நித்திய கலியாணி அத்தருடன் நடித்தவாணி
வாணி சரசோதி கபாலி கங்காளி திரிசூலி
குருமாதங்கி வேதாளி வைரவி நீலி
பாணி யறதாரி மாரிமக மாயிவீரி மன...
பத்தியாள சிவ சத்திப் பரப்பிரம நாரி
சேணி யாளப் புவிதரணி யாளவருள் தோன்றும்
திருவுரு அவதார ஒருபொரு ளிருவகை மூன்றும்

ஆணிமுத்துச் சுரதாணி நாககன்னி தயவாய்
முத்தாரம்ம னிருபேரும் நன்மையாகச் சிறு மகவாய்
சிறுத்துப் பெருத்த சிவலிங்கம் மலைபோலே
நல்லதேவி பொன்னுமுத்து மாவிசின்ன முத்தும் நீலி
நிறுத்துப் புவனம் பதினாலு லோகமுட்டி நின்று
வேதநேயா தூயா வெகுமாயா துணைவியர் நன்று
மறுத்துச் சிவனயனு மாலும் பிறப்பதுபோல் மோக
முத்துமாத ரிருபேரும் ஒருபொருள் பலவித மாக
பொறுத்துப் புவிதழைக்க நாககன்னி வயத்தில் நிறைந்தாள்
ரெற்றி னப்பொன்னு நல்லமுத்துஞ் சின்னமுத்தும் வந்து பிறந்தாள்.

விருத்தம்

பிறந்தன ரிருபேர் தாமும் பிறப்பது ஒன்றுரெண்டு
சிறந்ததோர் மூன்றுநாலு திசைபல பொருளாய் நிற்கும்
உறைந்தவர் வாயோ யாமல் ஓம்நம சிவாயமென்றே
அறத்தழைத் திடவேசெய்ய அரியதோர் புவியில் வந்தாள்.
அரியதோர் பெரியமுத்து அவனிதான் சிறந்த முத்தும்
விரிதமிழ்க் கிரங்குமுத்து வேண்டவே வளர்ந்த முத்தும்
கரியதோர் கூந்தல்நாக கன்னிதான் பெற்ற முத்தும்
புரிசடைச் சின்னமுத்தும் புகழ்பெறப் பிறந்ததன்றே.

வேறு நடை

அன்று தான்பெற்ற ரெண்டு பெண்களும்
அவ்வு முவ்வுமாய் மவ்வு மாகியே
இன்று தானந்த நாக கன்னியும்

இள மயில்களை உள மகிழவே
நன்று நன்றெனக் குரவை யார்ப்பவே
நாக லோகமுந் தான்மு ழங்கவே
துன்று தொப்புளுந் தான றுத்தபின்
துய்ய மஞ்சணெய் பெய்து கையினால்
கையில் மஞ்சள் கோரோ சனையினால்
களப கஸ்தூரி நல்புழுகு வேதிக்கே
துய்ய மஞ்சனஞ் சவாது பூசியே
சொல்லுஞ் சந்த மகில்புகையும் வீசியே
மையெ ழுதியே திலத மிட்டனர்
வச்சிர மானதோ ருச்சி யிட்டனர்
பொய்யில் லாத்திரு நீறு பூசியே
பொன்னுந் தேனும் பால்சீனி கூட்டியே
கூட்டியே சதுர் வேதம் நான்கையும்
கொண்டு மூவிரண் டாறு சாஸ்திரமும்
பூட்டி யேபதி னெண்பு ராணமும்
போத மறுபத்து நாலு கலைகளும்
ஊட்டினா ரிதைச் சேணை புகட்டினார்
உலக கன்னி முலைப்பாலு மூட்டினார்
பான நல்மொழி நாக கன்னியும்
பதுமை லெட்சுமி மகளிர் பெத்ததை
கானகந் தன்னில் வாழு கின்றதோர்
காசிமா விருஷி வந்து கண்டனர்
தேன லங்குழல் ரெண்டு பெண்களும்

தேவர் தேவியோ யாரறி கிலோம்
ஊன லந்திரு மேனி யுமவர்க்
கொப்புமோ வவர்க் கொப்பு மில்லையே
இல்லை யென்றுதான் காசிமா விருஷி
ஏக நாகரா சாவுஞ் சொல்லவே
முல்லை வென்ற நகைமுத்து மாலைக்கு
முதுமொ ழித்திரு நாமமு மிட்டனர்
மல்லை வென்றபுய நாக ராசனும்
மாசில் லாததோர் காசிப முனியும்
ஒல்லை தன்னிலே ரெண்டு பெண்களும்
உண்மை ஞான விழிக்கண் வளரவே
கண்வ ளரவே வேணு மென்றுதான்
கனக விசுவ கர்மாவை நோக்கினார்
விண்வ ளரவே ஞான தேசிகன்
விசுவ கர்மனும் வந்து தோன்றினான்
பண்வ ளரவே காசிமா விருசி
பணி விடையென நாக ராயனும்
தான்வ ளரவே வேணுமென் றுதான்
தான ருளவே முனிய ருளுவார்
முனிய ருளுவார் நாககன்னி பெத்த
முத்துமா லைசின்ன முத்து மாலைக்கு
இனிய தொட் டிலிப்பொழுது வேணுமே
என்ற பொழுதிலே விசுவ கர்மனும்
நனிய தங்கமு(ம்) ரெற்றினம் ஒன்பதும்
நாலு வேதமுங் கால்க ளாகவே

கனிய சந்தி ராதித்த ரெண்டையும்
கட்டி னாரதைப் பலகை யாகவே
பலகை யாகவுஞ் சட்ட மாகவும்
பக்க மீன்களை நிலைக ளாகவும்
அலகை யும்பல வான மீனையும்
ஆக ராசிகள் பன்னி ரெண்டையும்
உலகை யாளவே கயறு கொக்கியே
உட னுதவினார் விசுவ கர்மனும்
இலகு தொட்டி லுண்டாக்கி வந்ததோர்
ஈச னீன்ற விசுவகர்மன் மெய்க்கவே
மெய்க்க வேவளை ரெற்றின மாமுடி
மேக வாகன மீதி லேறியே
கைக்குள் வாங்கியே விசுவ கர்மனும்
கயிலை தன்னில்போ யருகு நின்றனர்
மைக்கடல் கயல் விழியு மாதர்கள்
மன்னு தொட்டிலைக் கொக்கி தூக்கியே
திக்கெல் லாம்புகழ் புட்ப மெத்தையில்
திருவை முத்துமணி யுருவை ரெண்டையும்
உருவ மானதோர் அரிவை மாதரை
உலகெல் லாம்புகழ் விருது கூறியே
அருவ மாகியே யுருவு மாகியே
ஆதி யாகியே சோதி யாகியே
குருவு மாகியே குணமு மாகியே
கோதில் லாதமெஞ் ஞான மாகியே

தருவு மாகினி யென்று மாதரை
தான்கி டத்தித்தா ராட்டி னார்களே.

தாராட்டு

தாராரும் பூஞ்சோலைத் தய்யலுக்கெல் லாமரமே
சீராருந் தெய்வத் திருவே யுருவடிவே
வடிவே கனக மணியே மரகதமே
அடியே னடிமுடியே அழகுமுத்துக் கோகிலமே
கோகிலமே சிறந்தவஞ்சி கிஞ்சுகவா யஞ்சுகமே
நலமே பிறந்தகுரு நல்லமுத்து நாயகமே
நாயகமே நாக கன்னி – உன்னை
நன்மையினால் பெத்தெடுத்த
தாயகமே முத்தே தனிமை தவிர்த்தவளே
இனிமை வளர்த்தவளே எங்கள்குல முத்தர சே
அரசே உயிர்க்குயிரே – சொல்
லானந்த மானவளே
உரைசேர் மனோன்மணியே ஒளியில் வெளிப் பொருள்
வெளியான காசிமா மெய்யுருசி பிண்டமதால்
அழியாத வஸ்துவெனும் ஆதிமுத்து மாமயிலே
மாமயிலே சின்னமுத்து வளர்நாக ராசாவின்
தாமன் மருமகளே தையல்முத்து மாதாவே
மாதாவே திருப்புவனம் வாழ்வே கயிலையில் வாழ்
வேதாவைக் கூறி விருதுபெறு மெல்லியரே
மெல்லியரே கல்வி விளங்குகுல கோத்திரங்கள்
செல்லியரே யென்றுமுத்தைச் சிறப்பாய்த்தா ராட்டினரே.

விருத்தம்

சிறப்புடன் முத்து மாதா தினந்தினங் கண்வளர்ந்தாள்
அறப்புடன் மஞ்சளாட்டி அமுதுடன் முலைப்பா லூட்டி
இறைக்கிவர் பொருந்துமென்றே எண்ணில்லா வேதம்
நறைத்திகழ் குழலாள் நாக கன்னிதான் வளர்க்கலுற்றாள்.

வேறு நடை

உத்தவய தொன்று ரெண்டு மூன்றாண்டு தன்னில்
உண்மை ஞான முள்ளதுவும் உபதேசங் கற்று
சித்திடையு மேகலையும் வித்துருவு மணியும்
சிலம்பு தண்டை பாடகமுஞ் செய்யவிர லாழி
வெத்தி பெறப் பலபணிக ளெல்லா மணிந்து
விளையாட்டுப் பருவமதாய் நாலுவய தாகி
முத்துமணி முக்கண்ணனே உன்தஞ்ச மென்று சொல்லி
முகனையுட னிருபேர்க்கும் அஞ்சுவய தாச்சே
அஞ்சான வயசு தன்னில் நாககன்னி தானும்
அன்னையரே யென்று முத்தை அழகுபெறச் செய்து
நஞ்சாறு மிடற்றானைக் கண்டுதொழ வேதான்
நற்றவசு பண்ணுமென்ன நாககன்னி யனுப்ப
பஞ்சாரும் பாதத்தார் தவசுபண்ணப் போறோம்
பரிவினுடன் விடைகொடுத்துப் பகுந்தனுப்பு மென்றார்
மஞ்சாருங் குழலார்கள் நாகலோகம் விட்டு
வருகாசிப முனிதனையும் நாகரா சனையும்
நாகராச னெனவே முனிதனையும் வணங்கி
நடந்தனர்கள் வடகயிலை நற்சாகை தேடி

மேகராய ரென்னுறங்கு மலையதுவுங் கடந்து
வெயிலெரிப்பக் கிரணமில்லை யிருள்வனமுங் கடந்து
கோகராயக் கிணங்களுள்ள குமடுகளுங் கடந்து
குளிர்ப்பனியும் நெருப்பாறு மயிர்ப்பாலங் கடந்து
தேவராய ரென்னுமொரு ருத்திரபூமிக் கருகாய்
சென்றிருந்தார் பெரியமுத்து சின்னமுத்து தானும்
தானமது செய்யவென்று புண்ணிய தீர்த்த மதிலே
தையலிரு பேர்முழுகித் தாருகா வனத்தில்
கானமருங் குழல்விரித்து வகுந்துசடை பின்னி
கனகவர்ணத் துகிலுடுத்து மறுதாரும் புனைந்து
ஊன மில்லாப் புலித்தோலை ஆசனமாய் விரித்து
உத்தளமாய்த் திருநீற்றை நிற்றளமாய்ப் பூசி
தேனமருஞ் சோலை தன்னில் தாருகா வனத்தில்
தெய்வ கெங்கை யாத்தருகே இருபேரும்இருந்தார்
இருந்ததிலே சிலபேர்கள் தவசுபண்ணு மகிமை
இருகாலுக் கொருகால்கீழ்ப் பெருவிரலை யூன்றி
திருந்தியிரு கைகோர்த்துச் சிவனடியைப் பார்த்து
திருட்டிதன்னை விழியாமல் சிவதவசு நிற்பார்
பொருந்துதலைக் கீழூன்றிக் கால்மேலா யுசத்தி
பொணையாய்க்கைப் பாணிகொட்டி யிணையாக நிற்பார்
அருந்தவங்க ளூசியின்மே லசையாமல் நிற்பார்
அநேகவித முண்டதிலே தவசுபண்ணு முறைமை
பண்ணரிய தாருகா வனந்தனிலே தவசு
பண்ணுகிற தவசதிலும் எண்ணரிய தவசு

எண்ணரிய தவசுபண்ண வேணுமென்று உன்னி
இந்துநுதல் பெரியமுத்துக் கிளையசின்ன முத்தும்
தன்னரிய மூலமதில் வன்னிதன்னை வைத்துத்
தலையான கால்நிறுத்தி யசைவுதன்னை யுன்னி
மண்ணதிலும் விண்ணதிலும் ஊடுருவிப் பாயும்
வாசிதன்னை யேவிவெளித் தேடியொளி நாடி
நாடிகளெல் லாமிறுக்கிப் படுமுடிச்சாய்க் கட்டி
நாதமென் னுமாதிப் பொறிகளுள்ளே யடக்கி
வாடிகளெல் லாம்போட்டு அடிமுடியி னடுவே
மனமுதலாய் வட்டமென்று மாய்கைதன்னை வெறுத்து
ஏடிதன்னைப் பேசிவைத்த குணமதுவுங் குறித்து
இடையான பின்கலையின் சுழுமுனைநீர் பார்த்து
கோடிசூரியப் பிரகாச ஞானயுக் கிரமாதேசம்
கொழுந்துதன்னைக் காணவென்று யெழுந்துமலர் தூவி
விரிந்ததவும் வெளுத்ததுவும் ஒவ்வதி லொவ்வதிலும்
மேலுலகி லூறவரும் பாலதும் உண்ணாமல்
கரிந்தபயி ரதுபோலே தசைகளெல்லா முணந்து
கண்மூக்கு வாய்செவியின் கரணமெய் குலைந்து
சரிந்துலரும் வேளையிலே யிவர்மூன்று கனலின்
தழல்புகைசென் றண்டமெல்லாந் தான்வீசக் கண்டு
தெரிந்தசிவ யோகமதுக் கிரங்கியுள்ள முருகி
சிவஞான தேசிகனார் திருவுளத்தி லுகந்து
திருவேயென் ளுருகிருக்கும் முருவேநல் லுமையே
சிவயோகஞ் செய்வதுநீ யனலாகச் சுடுதே

திருமாலோ பிரமாவோ யிருசிதபோ தனரோ
சிவனாரும் உமையுடனே திருவுளம்பத் தியபின்
குருவேநீர் ஞானவிழி யருளாகப் பார்த்து
கூறிடுவீ ரடியார்க்குக் குணக்ககடலே யென்றாள்
தருவான பதினாலு லோகமெல் லாம்பார்த்துத்
தன்கயிலைக் கருகாக மங்கையரைக் கண்டார்
கண்டவுட னேயுமைக்குக் கடவுளருள் செய்யக்
கயிலையிலே யிருவர்தம்மைக் கூட்டிவா வென்றார்
வண்டனைய குழலுமையும் வெள்விடைமே லேறி
மகதேவர் நந்தீசர் மால்பிரமர்ச் சூழ
தொண்டரெல்லாம் கைதொழவே சென்றுகறைக் கண்டர்
தோகையர்க ளிருவரையு மாதரவா யழைத்து
கொண்டுவரத் துந்துமியுஞ் சங்குமு ழங்கிடவே
குருக்கயிலைக் கிருவரையுங் கொண்டுசென்று வைத்தார்.

விருத்தம்

வைத்தன ரிருபேர்தாமு மாசில்லா மணியு மாதும்
புத்தியில் சகலதேவர் புண்ணிய ரிருந்த வண்மை
சித்திதரும் கண்டுகாணாச் சிறீகயி லாசக் குன்றின்
அத்தலம் பெருமைநீளம் அகலமும் உரைத்துக்கொண்டார்.

வேறு நடை

உரைகொண்ட வெள்ளிமலை உயர்நீ ளத்தின்
உணர்கின்ற யேழு லெட்சத் தாயிரமாம்
தரைகொண்ட முப்பதுநா யிரங்கோடி யோசனை

தாம்புக்கு மேலுயர்ந்த ரோசினையி னளவாய்
அரைகொண்ட நாற்பதி னாயிரங்கோடி யோசினை
அத்தலை யகன்றுபின் னாயிரத் தஞ்ஞாறு
வரைகொண்ட யோசனை குறுக்ககல மாகிய
வடிவுதான் பெத்ததோர் கயிலாச மதிலே
வடிவு முப்பத்து முக்கோடி தேவர்களும்
வருமிருசியள் நாற்பத் தெண்ணாயிரவரும்
கோடிமுப் பத்துமுக் கோடிருத் திரரும்
கூறரிய பிருதிவிகள் முப்பத்து முக்கோடி
சடுதியள் நிறைந்ததோர் மகாயிந்திர தீபரும்
சத்துநாற் பத்தொருகோ டிகண நாதரும்
துடிய்யான நவகோடி தேவர்களு மதிலவர்
துகைகோடி நவகோடி நவநாதர் தாமும்
நாதருட னெண்கோடி அட்டவயி ரவரும்
நலமேழு கோடிதா னதிகாரச் சித்தரும்
மூதறிவு நவகோடி நந்தீ சுரரும்
முன்னூல் தவத்தோரும் மூவாறு கணங்களும்
பாதமற வாப்பக்க நந்திபன் னிருவரும்
பகரா யிரங்கோடி அவதானச் சித்தர்கள்
ஆதரவி னால்வந்த மூன்றுலட்சத் தின்மேல்
அறுபத் திருகோடி கயிலாச ருத்திரராம்
கயிலாசப் பிரமரவர்க் கூழிய ரெட்டெட்டும்
கனகபிறங் குருநாதர் பெரியதோர் தேவரும்
பயிலாய மெழுகோடி யோகநேத் திரரும்
பத்துநூறா யிரங்கோடி பஞ்சநேத் திரரும்

அயிலா யிரங்கோடி நயன முடையோர்
ஆதினாத் தூவயிறர் அவரா யிரங்கோடி
துயிலாத ஆயிரங்கோடி தும்புரு நாரதர்
துய்யதோர் மெஞ்ஞான கிம்புருஷ ருடனே
ஒடனா யிரங்கோடி மகாயிந் திரதீபரும்
உத்த சதக்கோடி வேதராக் கிஷரும்
அடலா யிரமுடிப் பானுகம்ப ருடனே
அஞ்ஞூாறு முடியான வானத்த சூரரும்
திடமான பதினாயிரங் கோடிகண நாதரும்
திருச்சின்ன நின்றுதான் பணிமாறப் பண்ணும்
கடலான சதகோடி சந்திரர் சூரியரும்
கைப்பந்தங் கொண்டு உலாவிநின் றிடவே
நின்றாயி ரங்கோடி அவதானச் சித்தர்கள்
நிகரான உள்ளியம் பணிமாறப் பண்ணும்
ஒன்றான சருவா பரணியள்தம் பிரானார்
உணர்வான சருவக் குருக்கள் தம்பிரானார்
நன்றான சருவ தேவர்கள் தம்பிரானார்
நம்சருவ லோகத்துக் குங்கர்த்த னானார்
கன்றான சருவேசுர னெழுந்தருளி யிருக்க
கதிபெருகு கயிலாசத் தெக்குவடக் கெல்லாம்
கதின்பதிங் கோடி ரோசினையி னளவுக்கும்
கயிலாச வெளிமேவி யிருளா யிருக்கும்
விதிகாரன் மத்திய திசையிலகப் புட்டது.
விரிதுருப கண்டமென்றே சொல்லப் பட்டது

துதிபெருகு மாகா சஞ்சூழ்ந்து கிடக்கும்
சொல்லுமா காசத்தைக் கால்சூழ்ந்து கிடக்கும்
மதிபெருகும் வாயுக் கால்சூழ்ந்து கிடக்கும்
வன்னிதன்னை யப்புச் சூழ்ந்தே கிடக்கும்
வாழ்ந்தகார் சூழவே கட்டிமேன் னோக்கியே
மறுவில்லாச் சருவமுஞ் சருவசத் தியினும்
தாழ்ந்த பாதாளத்தைத் தாங்குமுரம் பத்தியே
ஆய்ந்த கடலீ ரெழுபுவன மெய்த்திடவே
ஆதியைத் தொழுதிருவர் வரமருளு மென்றார்.

விருத்தம்

அருள் செய்வாய் கயிலை வாழ்வே
அரியதோ ருமையே மாதே
பொருள் செய்வா யுலக மீதில்
பொருளுண்மை யறியாத் தன்மை
மருள் செய்யு மருளை நீக்க
மலங்கிடு மலக்கந் தீர்க்க
வெருள் செய்யும் வெருளை நீக்க
வேண்டிய வரந்தா மெய்யா
வேண்டிய வரந்தா வென்று மெல்லிய ரிருவர் சொல்லத்
தூண்டிய முனியைக் கொன்ற துய்யமால் பிரமன்சூழ
பாண்டியன் தனக்காய் நல்ல பரிதன்னை நரியா யீன்ற
ஆண்டவ பொய்யா மெய்யா வரமெனக் கருளுமென்றார்.

நடை

கருதுமென் றரனருள் யிருள்நீங்கி யிருவரும்
கமலமுகங் கரங்கூப்பித் தொழுதே
விருதுசெக விருதுடன் தெட்சண பூமியில்
விமலனே யமலனே முழுதும்
வருதிடந் தோன்றியே வளர்முத்து மாரியே
மாகாளி பேய்காளி சூழவே
பொருதுவரு முத்தென்றும் நல்லமுத் தென்னவும்
புகழ் பெரிய நாமம் நீதருவாய்
தருவான வயிரவன் அகோர முடனேதான்
தக்க சங்கார வீரேசுரன்
உருவான நீலனுங் குமிர்தனா தித்தனும்
உத்த கிணநாத ருடனேதான்
வருவான வண்டி மலையனு மலைச்சியும்
மாமுண்டி சாமுண்டி மாதரும்
கருவான வேப்பிலை கனசூரக் காரரும்
கருதி வரு மக்கினிக்கு மாரரும்
காதிவரு சூலவே லாயுதக் கபாலமும்
கனக பொற்பிரம்பு திருநீறுடன்
பாதிமர கதமாலை முத்துமாலை வயிரப்
பவளமாலைக ளணிய வுலாவிட
வீதிவரும் பேச்சிராக் காச்சிகாட் டேரியும்
வெருளாக யிருளனும் அருளய்யா

சோதிநீ தரவேணு முததுவகை யீதெல்லாம்
தொழுதிருகை கொண்டே பணிந்தனர்.

விருத்தம்

பணிந்தபின் கயிலை மாதர் பார்பதி கோடி தேவர்
துணிந்துதா னிவர்கள் சொன்ன தூயதோர் வரங் கொடுத்தார்
அணிந்திரு கையால் வாங்கி ஆதியே போற்றி யென்று
தணிந்திரு முத்து மாதா தையலுக் கருகாய் வந்தார்
வந்துதான் கயிலை தன்னில் வலமாகச் சுற்றி வந்து
கந்தனை மூத்தோன் றன்னைக் கையினால் தழுவிக்கொண்டு
இந்துவன் குடை நிழத்த யிறையுமை வரங் கொடுக்க
கொந்தலர் குழலாள் முத்துக் குருகினம் வருகின் றாளே.

நடை தொங்கல்

வருகின்றாள் பெரியமுத்து நாயகி
மாணிக்க வயிரப் பல்லக் கேறினாள்
பொருகின்ற விழிச்சின்ன முத்தம்மனும்
போத வேதாள பூதத்தி லேறினாள்
தருகின்ற மணிமந்திர தந்திரந்
தக்க வேதங்க ளொக்க யிலங்கவே
உருகின்ற தங்கநிற மேனியாய்
ஒன்று பத்துநூ றாயிரங் கோடிபோல்
கோடிகோடி கணங்கள் நெருங்கவே
கூளி காளிகள் மேள முழக்கவே
சாடியேறிப் பொற்தண்டிகை யானைமேல்

சப்ப ரத்திலு முத்துக்கள் வாரியே
நாடியேபல பூதந் தலைச்சுமை
நல்ல ஒட்டகங் கொட்டியந் தன்னிலும்
கொட்டமிட்ட முத்தாரம்மன் முத்தெல்லாங்
குதிரை மீதிலுங் கொண்டுவரச் சொன்னாள்
வட்டமாய்நல்ல முத்து முத்தாரமும்
வயிர முத்துநல் மாணிக்க முத்துடன்
துட்டமும்மதக் கோட்டானை முத்துடன்
துய்ய சங்கு வலம்புரி முத்துடன்
திட்டமாஞ் சிப்பிமுத்து வேய்முத்துடன்
செய்ய வெண்டா மரைமுத் திலங்கவே
இலங்கவே கன்னல் முத்தொரு பாரிசம்
ஏற்கவே சென்னல் முத்தொரு பாரிசந்
துலங்கவே குன்றி முத்தொரு பாரிசஞ்
சுண்டு முத்துக் கட்டாணி முத்தோர்தரம்
மலங்கவே சங்கம்பாடி முத்தொரு நிறம்
வரிசை விரிசம் பழமுத் தொருநிறம்
கலங்கவேவரும் ஆலத்திப் பழமுத்து
கார சாரம் பழமுத்துக் குருமுத்து
குருமுத் தொருமுத்துப் பலமுத்து விதங்களாங்
கோனியப் படாரங் கொடிய பனைமுகரன்
கரும்த் துருதியுங் கல்லுருதி கொல்லுருதி
கருஞ்சப் பட்டையுஞ் செம்பட்டை
ஒருமுத் திருமுத்துக் கடலை துவரைமுத்து

உழுந்து சிறுபெரும் பயறு சடையுருதி
வருமுத் தடங்கலு மொருமிக்க வாரியே
வகைக்கு வகையாகத் தெரிந்தொக்க கொடுவர
வரவே பல்லக்குச் சிவிகையர்கள் பூதங்கள்
வாய்த்த வெள்ளிலைப் பிறமடல் காளாஞ்சி
ஒரமா வாலவட்டம் பரிசைபோர் கவரிகள்
உத்தபூத கெணங்கள் பணி மாற
தரவாயு வாமாரி தேன்மாரி மதுமாரி
தயிர்மாரி நெய்மாரி பால்மா ரியும்
பரமே சிவமாரி பொன்மாரி பூமாரி
பாரில் மண்மாரி முத்துமாரி கல்மாரி
முத்து மாரி சாமளி மாகாளி
முப்பு ராதிக ளொக்க நெருங்கவே
சத்திய மாமுனி சொல்படி யாகவே
தாண்டவன் குருநாதன் மூன்றா னவர்
சித்தி முத்துக்கு வித்துமுத் தாகிய
தேவி முத்துக் கயிலாசம் போத்தியே
பத்தி யாகப் படைகள் நெருங்கவே
பவுருசு தன்னைப் பகர முடியுமோ
முகியாத கணங்க ளொரு கோடி
முத்துப் பேச்சி யிசைக்கி வயிரவன்
சகியாத வீரேசுரன் பாதாளன்
சாமுண்டி வண்டி மலையன் மலைச்சியும்
நகியாத குமுர்த னீல ஆதித்தன்

நல்ல சந்தண முத்துக் குமாரரும்
சுகியான கயிலாசந் தான்விட்டு
வாராளே தெய்வ துந்துமி யார்க்கவே
எடவையாஞ் சாலியாவண மலைவிட்டு
ஏற்க வுந்திரி மூர்த்திகள் தமைக்கண்டு
அடவையாங் கெந்தமாதன மலைதன்னில்
அனுமார் தன்னையுங் கண்டுகொண் டாடினாள்
நடவாயிரங் கோடிரோசினை நீளத் தகலமாம்
நல்லபஞ்ச பருபத முண்ட திலேதான்
அதிலே ஆயிரந் திருமண்டல முண்டும்
ஆதிநாரண பிரமதோத் திரங்க ளுண்டும்
விதின விசேக பருபதந் தன்னிலே
வெல்லு மருந்துகள் ஒருநாங்கு கண்டனள்
சதிர்சல்லிய காணி சந்தனக் காணியுஞ்
சமுர்த காணியும் அமுர்த சிவனையும்
துதிசெய்தே முத்து தெற்கே பிறப்பட்டாள்
சொல்லும் நீலகிரி பட்டணந் தனில்வந்தாள்
வந்த முத்தம்மன் சேவடி போத்தியே
வல்ல நீலனும் நீலியும் பின்வந்தார்
அந்தமா மளகாபுரி தான்விட்டு
அசுரர் தேவ ருத்தம்பண்ணக் கண்டனள்
நந்து லாவிய அதிசெய கண்டமும்
நயன்ற பொதிபோன்ற வயிரருங் கண்டனள்
கண்டு யேமகூட நீலகிரி மாகாண்டங்

காணு மூன்று பருபதமுண் டதுதன்னில்
உண்டு சிறீவர்ணங் கெங்கையது தான்விட்டு
தண்டிகை முத்தாரம்மன் படைக ளுருமிட
தானே புடைசூழ வானவர்கள் தொழவேதான்
அண்டமுற நின்ற மகாமேரு தன்னிலேதான்
அம்மை முத்துத்தாய் செம்மைபெற வந்திருந்தாள்.

விருத்தம்

இருந்ததோர் முத்து மாதா ரெழில்மகா மேருவுள்ள
பொருந்திய வண்மையுண்மை பொன்னிறப் புதுமை தண்மை
அருந்தவத் திக்கு பாலர் அட்டகுல பருபதங்கள்
திருந்தவத் தஞ்சுராணி நின்றதோர் தகைமை சொல்வாம்.

வேறு அகவல்சீர்

அஞ்சல் பராபர மாகிய பரமேசுரன்
தஞ்சத்தார் தலம் படைக்கத் தானருளி
மனது நினைந்து வடிவா யிருந்து
தனது பதியாம் தன்ப ரையினில்
துரவா பரத்தில் பரவாட்டத்தில் தனிமுதலாகிய
பராப ரத்தைத் தோன்ற வைத்து
நிராத லத்தில் நிலையாய்ப் பொருளெனும்
பராப ரத்தைத் தோன்ற வைத்து
அல்லும் பகலு மயிரா வனஞ்செல்லும்
பரத்தில் சிவத்தைத் தோன்ற வைத்துத்
தரிக்கும் சிவத்தில் சத்தியைத் தோன்றவைத்துப்
புரிக்குஞ் சத்தியில் பூதாதியைத் தோன்றவைத்து

பூதாதி விந்துவில் பொருள்தன்னைத் தோன்றவைத்து
சத்தி விந்துவில் சதாசிவத்தைத் தோன்றவைத்து
துய்ய சதாசிவத்தில் மயேசுரனைத் தோன்றவைத்து
செய்ய மயேசுரனில் ருத்திரனைத் தோன்றவைத்து
விரும்பு முருத்திரனில் விட்டுணுவைத் தோன்றவைத்து
விரும்புகழ் விட்டுணுவில் வேதாவைத் தோன்றவைத்து
காதலால் மறையில் ஆகாசந் தோன்றவைத்து
தினமுறு மாகாசத்தில் தேயுவைத் தோன்றவைத்து
அருமைபெறுந் தேயுவில் அப்புவைத் தோன்றவைத்து
பெருமைபெறு மப்புவில் பிருதிவி தோன்றவைத்து
பிருதிவியி லவித்திரப் புதைவிளங்கிப் பெருகி
உறுதிபெறும் நிலைமை அஞ்சுராணி யாகிய
சருவலோகத் துக்காதாரம் அவற்றைத் தாமாக்கிக்
கதிபெருகுங் கர்த்தாவி னருளாலே
ஆங்கார மாய்ச்சீறி மகாமேரு வாகி
ஓங்கார ஒளியாய் உதய மானது
அப்படி மகாமேருக் கச்சுநிலை யாவேன்
அப்படி செப்படி கொண்ட அட்டகி
அத்தா யிருக்கும் அதிகனக மேருவைத்
தாங்கி நிற்குந் திக்குப் பாலர்
போரா னிலைமைக்கும் இந்திர னக்கினி
இமனிருதி வருணன் வாய்வு குபேரன்
ஈசானன் இவர்க்கு ஆயுள்பாதந் தாங்கிநிற்பார்
அயிரா வதம் புண்டரிகம் பாமணங் குமர்தமஞ்சன
மயிராபதம் புட்பகெந்தஞ் சாமுகஞ் சுக்கிரிதீபம்

இந்த அட்டகெசங்களைத் தாங்கி வருவரில்
நந்தாத எட்டு நாகங்க ளாகும்
இப்படி அட்டமா நாகத்தைத் தாங்கிவருவது
வட்டம னென்னும் வளந்தரு ளாமையே.

விருத்தம்

இதுசிறீ மகாமேருக் கேத்தருகில் நிற்கும்
அதுகனக மேருவுக் கருகாய் நின்றது
புதுமைசெறி அட்டகுல பருபதங்கள்
அதனைமுத்தமி ழறிவினால் வகைதுகை யுரைப்பாம்.

வேறு நடை

அறிவு கொண்ட பருபதம் – அட்டகுல
பருபத மிது பருபதம்
அழகு ராச பருபத–மிது
அரிய ரசத பருபதம்
பிரிவு நீல பருபதம் – நல்ல
புகழ் கயிலாச பருபதம்
பெரிய மந்திர பருபத – மிமைய
பருபித மிது நாங்களாம்.
குறி வட்ட குல பருபதஞ்
சூழ்ந்த பூமியின் துண்ட மானது
கண்டு வளர்ந்த நீண்ட பேரின்
கூறிச் சத்தே கேளு மென
சேரி வன மேருக் கண்ட
மேதின கண்டம் ருத்திர கண்டமாய்

சிறந்த பரதங் கண்டம் பாரு
சிகண்ட மத்திப கண்ட மாய
மாக ரெதக் கண்ட மேவக்
கண்டந் தெட்சண கண்ட மாய்
வரிசை யான வொன்பது வகை
வடிவி ன்ழகு கேளு மென
மோகமான மேருகண்டம் பத்துக்கோடி ரெண்டுபத்துடன்
முதிருகின்ற நாலாயிரம் ரோசினை நீளங்கொண்டதாய்
ஆகமகல மிருபத்தய்யா யிரம்ரோசினை பிரமாணமாய்
அதியமான சுத்தத்திரியில் அதன் பெருமையைக் கேளுமென
ஏகமான அன்பத் தய்யாயிர மிலங்குரோசினை காணுமே
காணும்ருத் திரகண்ட மெட்டெட் டுக்கோடி யன்பஞ்சு லெச்சமும்
கணக்கி லன்பத் தய்யாயிரம் ரோசினை காணுமேபிர மாணமே
நாணும் பரத கண்ட மெழுகோடி அன்பஞ்சு லெட்சமும்
நவிலு மன்பத்தய் யாயிரம் ரோசினை நல்லதோர் பிரமாணமே
வேணும்பா ருதிகண்ட மாறுகோடி அன்பஞ்சு லெட்சமும்
மெய்யி லம்பத் தய்யாயிரம் ரோசினை விளங்கியே பிர மாணமே
சேணுமத் திபகண்ட மஞ்சஞ்சு கோடி அன்பஞ்சு லெட்சமும்
செல்லு மன்பத் தய்யாயிரம் ரோசினை திருந்தியே பிர மாணமே
திருந்தும் ருத்திர கண்டம் நாலுகோடி அன்பஞ்சு லெட்சமும்
செல்லு மன்பத் தய்யாயிரம் ரோசினை வெல்லவே பிர மாணமே

பொருந்துந்தெட் சணாகண்ட மீரெண்டு கோடி அன்பஞ்சு லெட்சமும்
பொய்யில் லாத அய்யாயிர ரோசினை பொருள்தாம்பிர மாணமே
அருந்தவம் பெறவேணு மன்பத்தி நாலாயிரங் கோடி ரோசினை
அளவுநீளம் பிருதிவி யானது அரிமகா மேரு பருபதம்
பருபதம்பதி நானா யிரங்கோடி லெச்சத்துயரங் கீழ்ப்புகும்
பகுந்து நிறுவி உயர்ந்த ரோசினை பகுந்துமேலும் உயர்ந்ததாம்
கெருவி தத்துட னிந்தத் துகையும் ரோசினைக்கித் துகையதாம்
கிளரும் ரோசினை குறுக்ககல மாகிய கீர்த்திமாமகா மேருவே.

விருத்தம்

மேருவின் வடிவு கண்ட மெல்லியர் முத்து மாதர்
பாருள்ள மண்ணும் விண்ணும் பசுபதிக் கிணங்கி நின்றார்
சீர்பெறும் பொன்னின் குன்றஞ் சிறிமகா மேருவைச்சூழ்ந்த
தாருகா வனத்தி லுள்ள தவமுனி விபரஞ் சொல்வோம்.

வேறு நடை

தாரு வாறிக ரோம மகாமுனி
தண்ண றும்பச லோசன மாமுனி
சீறு வாந்துரு வாசன் மாமுனி
செங்கை கொண்ட கமண்டல மாமுனி
கூறும் நல்ல தவமுனி கோமுனி
கோதில் லாத கலைக்கோட்டு மாமுனி
பாரும் வேத வியாசன் மாமுனி

பார றிய தவசு மகாமுனி
வேத நாரதர் கிம்புரு மாமுனி
மிக்க நல்ல கெவுதம மாமுனி
ஆதி யான சுமதக்கினி மாமுனி
அரிய வேதஞ்சொல் காசிப மாமுனி
அரிய ஞான 'பரத்துவாச மாமுனி
அன்பர்க் கான விசவாமித்திர மாமுனி
விரிதமிழ்க் ககத்திய மாமுனி
மிய்க்க வந்த புலத்தியர் மாமுனி
உரியகல்விச் சனகன் சனக குமாரன்
உத்த சுக்கிரன் உணர்வறத் தெரிசினைகள்
வரிசை யான பரஞ்சோதி மாமுனி
வணங்கி வந்த செவந்தகண் நாதரும்
வணங்கி யேவரும் வீரக்கண ணாதர்
வைய மெச்சிய தெய்வகண நாதரும்
இணங்கி வந்த சிவயோக கணனாதர்
இங்கி தம்பெறு ஞானகலி யாணர்
பிணங்கினோ ரிணங்கதா ரட்டமா சித்தர்
பின்னைச் சுப்பிரகாசி ஞான கலியாணர்
அணங்கி அந்த சித்திரஞான கலியாணர்கள்
ஆதித்த சித்திர ஞானகலி யாணர்கள்
சித்தருயிர் வேசப் பிரகாச ஞானமாய்ச்
சிறந்தகலி யாணரெனு மீசரிடைக் காடர்
நித்த முளமுனி வியாக்கிர பாதமுனி

நிறைந்த நிறைஞ்சன் பதஞ்சலி வாழ்முனி
சுத்த நாற்பத் தெண்ணாயிரம் இருஷிகள்
துகைக்கு எறுபத்தி நாலாயிர முனிவர்கள்
பத்தர் முப்பத்து நாலாயிரங் கணநாதர்
பண்ணுக் கிசைந்த கின்னரர் கிம்புருஷரும்
கின்னரர் கிம்புருஷர் இருபத்து நாலாயிரம்
கீர்த்தி பதினாயிரங் கெந்து ருவரும்
முன்னே நாலாயிரங் கெருடர்கந் துருவரும்
முப்பதும் பின்னை முக்கோடி தேவரும்
சொன்னப் பிரகாச வருணசந்தி ராதித்தர்
சொல்லுஞ் சதகோடி ருத்திர ரொருகோடி
பெருகுமார்க் கண்டன் பேரானக் கினிவாயு
மின்னு மிந்திர சித்திரபுத் திரருடன்
அருகே தருமனுஞ் சண்டனு மறலியும்
அம்மன் தனைப்போற்றி அனபேருஞ் சூழவே
சூழ்ந்த அதலவிதல சுதல நிதலமும்
துலங்குந் தராதலங் கரதலம் பாதாளம்
தாழ்ந்த யிதுவேழுங் கீழிலோக மானது
தயங்கத் தவம்பெறு மேலோகஞ் செல்லவே
வாழ்ந்த பூலோகம் புவலோகஞ் சுவலோகம்
வருமகா லோகஞ் சிவலோகந் தவலோகம்
ஆழ்ந்த சத்தியலோக மழகாகத் தான்விட்டு
அரியமகா மேருவின் வலமாக வந்தனள்.

நடை

வலமாக மேருவுக்கு மேற்கா கத்தான்
வண்ணயதி னேசமென்னோர் மலைதா னுண்டும்
பிறமாய் முப்பதுங் கோடிலெட் சத்துள்
பேரான ரோசினை கீழ்ப்புக்க தாகும்
தலமான தய்யா யிரங்கோடி ரோசினை
தானுயர்ந்து யிவ்வளவு தலைதான் காணும்
குலமான தஞ்ஞூறு கோடி லெட்சங்
குறுக்ககலம் ரோசினைதான் கொண்ட தாமே
கொண்ட கோயதின் மேலோ ரகுவென்னுங்
குளிர்தங்க முகமாகக் கிழக்கு னோக்கி
உண்டதின்மே லாயிரம் ரோசினை நீளத்தா
லுயர்ந்ததொரு வாசமா முளதாய் நிற்கும்
கண்டதற்கு மேற்கெல்லா மரசந் தீவாங்
கதிர்கோடிப் பிரகாசங் கடந்தே கொண்டு
வண்டனைய குழலி முத்து மாலையம்மன்
வந்தமகா மேருவுக்கு வடக்குச் செல்வாள்
வடதிசையி லேமகூட நீலகிரி மாகாண்டம் வளர்ந்தே மூன்றும்
அடவுடனே பருபதமுண் டஞ்ஞூறு கோடி லெட்சத்து ரோசினைக்கீழ்த்
திடமுடனே ஆயிர லெட்சத்தின் ரோசினை உசர்ந்திரண்டு மேலாய்
தடவரைரண் டாயிரமாம் லெட்சத்தின்ரோ சினையகன்ற தலைய தாமே.

ஆமெனவே யதின்மேலே சிறிவண்ண மென்ற கெங்கை முகமாயிரம்
மாமெனவே உசரம் நோக்கிப் பரந்த மேலாயிரம் ரோசினை உலாவும்
தாமெனவோ ரால்நிற்கும் ஆலந்தீ வென்றதற்குத் தகும்பே ராகும்
ஆமகா மேருவின் தனக்குக் கிழக்காக அம்மைமுத்து வரும்புதுமை யறியச் சொல்வாம்.
புதுமைகிரி நாற்பது னாயிரங்கோடி லெட்சம் புட்ப கெந்தம்
அதிமைபெறு நாற்பது னாயிரங்கோடி லெட்சம் அடவுடனே அதினகல மகன்று தானும்
விதிபெருகு குறுக்ககலம் நாற்பதினாயிரங் கோடி லெட்ச மேவிக்
கெதிபெருகு மந்திரமென்னும் கெங்கையாறு கீழ்முகமாய்ப் பரந்துயந்து கிளருந்தானே
தானாயி ரங்கோடி லெட்சத்தின்ரோ சினைஉயர்ந்த தருவாய் நிற்குந்
தேனாருஞ் செண்பகப்பூ விருக்ஷம்நின்ற சிறப்பாகுஞ் செண்பகத்தீ வாச்சு பின்பு
ஆனாலு மேருவுக்கு தெக்குவட கிழக்குத்தன்னை அளந்து கூர்ந்து
மானாருங் கன்னிமுத்து மேருவுக்குத் தெக்காக வந்திருந்த உகமைதன்னை உவக்கின்றாளே.
வரவென்றே தெக்கே மந்திரம் கயிலை வடவிந்திர மலைதான் மூன்று
தரனின்ற யிருபத்து நாலா யிரங்கோடி லெட்சத்தான் கீழ்ப்புறகே
அரைநின்ற நாற்பது னாயிரங் கோடி லெட்சத்தி னகலமாகித்
திரைநின்ற செங்கையதின் தீர்த்தவிசேக மிகவுஞ் சிறக்குந் தானே.

கெங்கையா யிரமுகமாய்த் தெக்குநோக்கிக்
கீழ்ப்பணிந்து யதினடுவே கிளந்தேஓங்கி
சங்கைநவ கோடிலெட்சம் நீளமாகிச்
சம்புமரம் நின்றதினால் தழைத்துமீறிக்
கொங்குவளர் குமரிமட்டும் நாகலோகங்
கூண்டபெருந் தீவிதென்னக் குறித்தே கொண்டு
மங்கைமுத்துந் தங்கைமுத்துஞ் சேனைசூழ
மகாமேருவுக்குத் தெக்குவார வருதல் சொல்வாம்.

நடை

வரிசைக் கனகமுத்து மாதாவை யலங்கரித்து
மாணிக்கத் திருவும்பிறை வச்சிரத்தா லுச்சிப்பூவும்
பரிசச் சடைதிருத்திப் பின்னிவகுந் தேமுடித்து
பிச்சிப்பூச் செண்பகப்பூவும் பச்சைக்கொழுந் துந்தரித்துக்
குரிசிக்கிணங்கும் நெத்திப் பட்டஞ் சித்திரக் கோப்பணிந்து
குழைக்காதுக் கேத்த ரெற்றினக் கொந்தளப் பொன்னோலையிட்டு
உரிசப்பழங் கனிந்து ஊறுமிதழ்க் கனிவாயும்
உலவுங் குமிழ்மூக்கில் உச்சிதமூக் குத்தியிட்டு
இட்டகமு கங்கழுத்துக் கிணங்கப்ப னுதியிட்டு
ஏகவடஞ் சீனமணி யெருக்கலை மாலையிட்டு
வட்டவளை யல்பவளம் வளமைக் கடையமிட்டு
மன்னிய பொன் மோதிரமும் மலர்விரல் தோறுமிட்டுக்
கட்டுவண்ணப் பட்டுடுத்து வட்டமுலைக் கச்சணிந்து
காரிகைக்குப் பொன்னரைஞாண் கட்டியுடுத் தாரமிட்டார்

உடுத்தாரம் ருத்திரபந்தம் யோகவேட்டி யொட்டியாணம்
உலகீன்ற முத்துத்தாய்க்கு உண்மைபெற வேயணிந்து
வடிவான பாதசரம் மாணிக்கச் சிலம்புதண்டை
வயிரச் சதங்கைகொஞ்ச மரகதப் பாடகமும்
துடிய மயிலடி காலாழி பீலி மோதிரமும்
துங்கமுத்துத் தாய்க்கிணங்க மங்கைய ரலங்கரித்தார்
கடிதாகப் பொன்னுஞ்சூலங் கையில் கபாலமேந்திக்
கவரிகுடை நிழத்தக் கனகப்பொற் பல்லக்கேறிப்
பல்லக்கில் பெரியமுத்து பவனி யெழுந்தருளப்
பன்னுதமிழ்ச் சின்னமுத்தும் பாரவேதா ளையில்வர
மல்லனைய பூதகணம் மெல்லீவே சிவிகையேந்த
வயிரவன் வீரசூரன் வண்டிமலையன் வரவே
சொல்லரிய பேச்சிவண்டி மலைச்சி யிசைக்கிவர
சோனைமுத்து மாரித்தாயும் ஆனைபரி மீதிலேற
நல்லமுனி வோர்கள் சூழ்ந்து முன்னடந்து சேவிக்கவே
நற்பணி மாறிடவே மாதரவர் குரவையிட
குரவை யிடவே கண்டகருணன் படைநடத்தக்
கூளியும்பூ தப்படையுங் காளியுமுன் னேநடக்க
பரவை யுடைத்ததுபோல் பத்துலெட்சங் கோடிகணம்
பஞ்சவர்ணத் தீவட்டிக ளஞ்சாம லெடுத்துவர
அரவக் கொடிநிழத்த அலகைக் கொடிநடக்க
அக்கினிக்குமாரன் சந்தனக் குமாரன் கொக்கரிக்க
சரவைக் கிணங்கும்பொன்னின் சந்திரவட்டந் தானெருங்க
சக்கரவா ளக்குடையும் மிக்காடலு மொக்கவர

ஒக்கவேயா லத்திப்பெண்க ளத்திக்கடங்க லும்நெருங்க
உபய சாமரையில் வீசாறிபா வாடையேந்தப்
பக்கமுங் காளாஞ்சியேந்தக் கட்டியக்கா ரர்துதிக்கப்
பன்னீர்ச்செம்பு வென்னீர்க்கார ருண்ணிப்பொன் ணடப்பக்காரர்
தக்ககூடா ரங்குதிரை தானையானை யும்நெருங்கத்
தத்திதத்தி யாகப்பூத முத்துக்கள் சுமந்துவர
செக்க (ர்) வானத் திடிபோலேச் சிக்கென வெடியெழும்பத்
திடம்படப் பேரிகைமத் தாளமிடக் கையுங்கொட்ட
கொட்டிய சுரடியுடன் சல்லிகைதா ளந்திமலை
குடமுழாத் தக்கைனாகப் பறையுடலக் குழல்முரல
இட்டமுரசி னனுதாளம் அடக்கங் கவரிபெற்ற
இங்கிதத் தாளத்துறுமி யேற்றதோர் தடாரியுடன்
வட்டமாங் கனகமிடுந் தும்புரிச்சல் லாரிகொட்ட
வாதுக்கனிச் சம்புலப் பறையுமோ கனமுரசும்
அட்டதிக்குந் தானெருங்கும் நாழிகைப் பறையுடனே
அந்தரி முழவுடனே சந்திரவ ளையங்கொட்டச்
சந்திர நிறத்தவல் சங்குநாதந் தான்முழங்கச்
சத்தத்தின் எக்காளமூதத் தனிச்சின்னந் தானூதவே
சிந்தைமகிழுங் கின்னரிகாளை நவுரி பூரிகை
திறமான கொம்புடனே திகழ்நாக சுரமூத
மந்தத்தவில் கிடுபிடிகை மணியுச் சந்தவிலும்
வண்ணச்சின்ன வீராணமு மந்தவீரா ணந்திமிலை
சுந்தரஞ் சேரவளர்க் கிடுபிடியுங் கனகதப்பும்
சொல்லரிய செண்டைதாள மெல்லவே முழங்கிவர

மெல்லவே நடனம்வரச் சிலம்பு சதங்கைகொஞ்ச
விஸ்தார ருத்திரவீணை கயிலாச வீணை
உல்லாசச் சரமண்டலந் தண்ணடைகின்னரி தம்பூரு
உத்தார வணத்துடனே உணர்பெறுசாஸ் திரவீணை
நல்லமுத்து நாயகிக்கு யித்தனைசே வித்துவர
நாவலர்சங் கீதம்பாட நாடகசா லைகளாட
வல்லபடை யோடேஎங்கள் முத்துத்தாயுஞ் சின்னமுத்தும்
மகாமேருவுக்குத் தெக்குவார வழியிலுகமை சொல்வோம்.

விருத்தம்

மகமுறு குமரி வியாக்கிரதம் வாய்த்த தருமாலைக் கேத்திறசித்தம்
அகமுறு மூன்றுதீ வுண்டதிலே ஆகஒன்பது காளிங்கன் தெய்வம்
ஒகமுறு மண்டல மென்றதொரு நாடுண்டு யர்ந்தநா டதிலே
எகமுறு பஞ்சநதியளுண்டு யிசைந்தநதிக் கரைப்புதுமை
யிணங்கச் சொல்வாம்.

நடை

பஞ்ச நதிக்கரைச் சம்புமுனி
பஞ்சார துருவத்த முனியுடனே
அஞ்ச லென்னுநகர்ப் பராசரமுனி
அழகாய் மூன்றுபே ரதிலிருப்பார்
தஞ்ச மெனத்தெண்ட காரணியுந்
தானே தீவுண்டு தானதிலே
கஞ்ச மலர்சேருஞ் சாமுண்டியுங்
கடிய பாதாள தீர்த்தமுண்டும்
கடிய யிருசிகள் தானம்பண்ணிக்

கனக ரூப மாகு வர்காண்
படியி லிதன்தெக்கு அருண்கண்டம்
படையோடே முத்துத் தாய்வரவே
நெடிய தீவதில் வாணவரெல்லாம்
நீலநிறச் சமுலம் பொசித்து
தடிய கருப்பஞ் சாறுதுபொசித்து
தானாயிரத் தாண்டு வாழ்வர்கண்டாய்
வாழு மதின்தெக்கு அதினகண்டம்
வரிசை நாடுண்டு அந்தநாட்டில்
சூழும் இமவானென் றேகிரிதான்
தோன்று மதில்விட்டு வதியநிற்கும்
நிற்குமரன் பத்னி பார்பதியாள்
நேந்து தவசாக யிருப்பளவில்
சற்குண முடைய யீசுரன் வந்து
தையல் தனைக்கலி யாணம்பண்ணிப்
புட்ப மழைமாரி சொரிந்த யிடம்
புகழுமுத்துத் தாய்கண் டுளமகிழ்ந்து
தெற்குப் பசுவாரி மலையென்றதோர்
திகழும் பூமியுண் டவடத்திலே
உண்டத் தியானமுந் தவசுபண்ணி
உகந்தே யிருப்பார்க ளுணர்வுடனே
எண்டரணி விட்டம் உண்டுநாற்பத்
தெட்டு கோடி லெட்சம் ரோசினையாம்
கண்டால் கீர்த்தி யுடையதொரு
கருணை சத்தியதீர்த்தங் கடந்தாளம்மை

பண்டே மொழிமுத்துத் தாயார்படை
பரிசு கெந்தமா பருபதத்தில் வந்தாள்
வந்தவகை முப்பத் தெட்டும்விட்டு
வளராயிரத் திருநூறு தீர்த்தம்
பிந்த நரசிங்க மூர்த்தியையும்
பிரிசத் துடன்கண்டு யிதற்குத்தெற்கே
அந்தாயிரத் தன்பது ரோசினை
அழகு நீளமுள்ள பருபதமுண்டும்
நந்தப் பருபத நாதனையும்
நல்ல மொக்கீச தீர்த்தங்கண்டாள்
நல்லஅதுபூ விருச்சத் தின்கீழ்
நல்ல சூதமா முனியுங்கண்டு
வல்லமுத்து நல்லமுத்து மாதா
மல்லிக்கா சணந்தன்னில் வந்தாள்
எல்லாச் சிவாலயம் பத்துமுண்டும்
ஈசுரர் சன்னதமா யிருப்பாரங்கே
வையம் புகழவே முத்துமாதா
வந்தா ளுத்திரமாங் காளியிலே
உத்திர மாகாளி தனையுங்கண்டு
உத்திர மண்டலிகல் லாறுங்கொண்டாள்
சித்திர மானதோர் தேவகிரி
சிறந்த சந்திரகிரி துவாரகாவும்
சத்திர மானது தான்கடந்து
சங்கு சக்கரக் கோட்டைகண்டாள்
அத்திர வேல்விழி முத்துமாதா

அயோத்திப் பதியுங் கண் டங்கம்மனை
கண்டு மகிழ்ந்துகொண் டாடிமெச்சி
கையாரவே தழுவிக் கொண்டாள்
செண்டு பிடித்தகை அங்கம்மனுஞ்
சிகத்தில் குருநாத சிங்கத்துக்கு
உண்டு களித்திட விருந்தளித்து
உத்த சேனைக்குஞ் சோறளித்தாள்
பண்டு யெழுபது வெள்ளஞ்சேனை
படைத்த தசரத ராமரையும்
பக்தியுடன் முத்துத் தாய்பணிந்து
சடைத் தலைச்சி அங்காளம்மனை
தங்கை தமக்கையாய் மேவிக்கொண்டு
அடைந்த கதிரவ னுதிக்குமுன்னே
அயோத்திப் பதிவிட்டு வாரா ளம்மன்
ஒடைந்த கடலென்னப் படையுடனே
ஒய்ந்து வாராபுரி தனைக்கடந்து
கடந்து பெண்ணரசி நாடும்விட்டுக்
கடிய லாடதேசந் தன்னில்வந்தாள்
நடந்து பிரையாகை ஏகடில்லி
நல்ல முத்தம்மன் படைவரவே
துடந்துரு மக்குப்பாரி சாவும்
சுலுத்தான் முத்திரை கொண் டிருக்கையினால்
அடந்து வரும்படைக் கஞ்சாமலே
அம்மன் தனைக்கண்டும் வணங்காமலே
அம்மன் தனைக்கண்டும் வணங்காமலே

அல்லா ஒருவனென் றவனிருந்தான்
கொம்மை யிளமுலை முத்துமாதா
  கூடவரும் படைதனையும் பார்த்து
இம்மை தனில்மோச்சங் கொடுக்கவல்ல
  இரசூல் முகம்மதுக் காளாகினோன்
செம்மை யுடையதோர் பாருசாவின்
  சேனை தனில் முத்தை விரையுமென்றாள்.

விருத்தம்

என்றபின் முத்துமாதா ரெத்தினக் கூடாரந்தன்னில்
மன்றல் ஞாலமீதில் மகிழ்ந்துதான் சிறந்து
நின்றதோ ரிசக்கிபேச்சி நிறைந்தராக் காச்சி யாச்சி
ஒன்றெனப் பலமுத் தேந்தி உறுதியாய்ச் செல்லுமென்றார்.

வேறு

செல்லுமென முத்தார் சின்னமுத்தா ரருளவே
  சிறந்த வயிரவன் வீரசூர னிருளப்பன்
வெல்லுங் காட்டேரி அக்கினி மாடனும்
  வேப்பிலைக் காரர் காச்சலெரி கண்ணர்
கொல்லும் வண்டி மலையன் மலைச்சியும்
  கூளி காளி வேதாள பூதமும்
அல்லும் பகலுறங் காக்கண நாதரும்
  ஆலிப்பாத் தடிக்காரர் வெடிக்காரர்
தடி யிருப்புலக்கைப் பருஞ் சூலமும்
  சக்கரங் கவணு முப்பிடி குந்தமும்

இடி முழக்கமென மேளங் கொட்டியே
எண்டிசைப் பூதம் வண்டிகொண் டாடவே
வடிவு முத்து மனிதர்மேல் செல்லவே
வளர் பெரிய சுவாமிக்குச் சொல்லவே
கொடிய கல்லுருதி ஆனையை வெல்லவே
குதிரை தன்னைக் கருஞ்சப்பட்டை கொல்லவே
குதிரை யானையுஞ் சேனையுந் தானையுங்
கொப்பளங் கொண்டு ஒக்க மடியுதே
சதிருடன் வந்த மாடுக ளாடுமேல்
தாவிக் கோவித்து வேகித்து மோகித்து
அதிரு மன்னன் மணலா யுருதிவெப்பால்
ஆவி போகுதே சாகிதுகா ணென்பார்
எதிரில் லாமன்னன் கும்பிடும் பாரிசா
இரசூல் நபிதன்னை வணங்கியே
தன்னையுந் தலைவனென வறிந்தவன்
தையல் முத்தம்மன் தன்னை யறிந்திலான்
சொர்ண மாகச் சொரியு முத்தமும்
சொர்ண மாரியாய் முத்துச் சொரியுதே
சன்னை சொன்னவர் தங்களைக் கொல்லுதே
தானே கோடி பிணங்கள் குவியுதே
உன்னை யுன்னை யொருவனென் றோதியே
ஒடைய வனைத் தொழுது வணங்குவார்
இரங்கி நின்றவர் தங்களைக் காத்தனள்
இரக்க மத்தவர் தங்களைத் துரத்தினாள்

மரங்கள் போலு மலைபோலும் பூதங்கள்
மல்லர் போலக் கிங்கிலுவர் நெருங்கவே
ஓரங்கள் சொன்னவர் ஒக்க மடியுதே
ஒன்று பத்து நூறாயிரஞ் சாகுதே
சரங்களைக் கெலியாத முகில் படை
தையல் முத்துப் படைக்கஞ்சிக் கெஞ்சியே
கெஞ்சியே அசனோ வசனோ வென்ன
கீர்த்தி யான முகம்மது மன்னனும்
அஞ்சி நின்று அல்லாவென வோதியே
அக்குப் பாரிசாக் கந்திரி யிட்டனன்
மிஞ்சிக் கந்திரிப் பூசையி லேயொரு
வெளிச்சம் வந்து உதித்தது காணுமே
வஞ்சி முத்து மாதாவென்று சொல்லியே
மாசில் லாத ஒருவ னருளவே
ஒருவ னேஉல கத்துக்குக் கத்தனாம்
உன்னைப் போலவன் தன்னைக்கொண் டாடுகிறோம்
தருவெனக் கொண்டும் பூசைக ளேத்தியே
சந்திதோறு மகா மேரு நிறுத்தியே
இருமனது வையாமல் கிடாய் வெட்டி
ஏற்க வேகொள் மார்க்கம தாக்கியே
அருமை போலும் மலைபோலச் சோறுகறி
ஆக்கி வைத்துக் குவித்துச் சேவித்தனர்
குவித்து நல்ல மதுக்குடம் வைத்தனர்
கோடி தோரணம் நெய்விளக் கேத்தினர்
நவிக் கிணங்கிய பாரிசா மன்னனும்

நாலு திக்கும் படையை நிறுத்தினர்
புவிக் கிணங்கப் புரவிக ளானைகள்
போதவே கொண்டு வந்து நிறுத்தினர்
கவிக் குலங்கள் எழுபது வெள்ளம்போல்
கணங்கள் பூதங்க ளுண்டு களித்ததே
உண்ட பேர்தானை மேலுக்குச் சபிக்கவே
உபைய சாமரை புழுகு சவாதுடன்
அண்டர் பேர்த்து முததாரம்மன் சொக்கமாய்
அக்குப் பாரிசா கந்திரி யிட்டனன்
க்ண்டு சேனையோ டானை புரவியும்
கடல் பெருக்கமென் றோதித் தியானித்துப்
புண்ட ரீக அல்லாவை முகம்மது
போற்றி வீத்திரு நாற்றிசை மெய்க்கவே
வண்டு மொய்த்தகுழல் முத்துத் தர்யாரும்
வரிசைப் பல்லக்கு மீதினி லேறினாள்
சண்ட மாருத மென்னப் படைகளும்
தவில் முரசு டம்மாணங் கிடுபிடி
எண்டி சைக்கு மதிரப் பிறப்பட்டு
இங்கி தக்கெங்கை வந்துதீர்த்த மாடினாள்
தீர்த்தமும் விசுவ னாத ருலகையுஞ்
சேவித்தாள் செக நாத சுவாமியைக்
கீர்த்தி யான விசைநகரம் விட்டு
கேளா பெரியநல் மாவையுங் கண்டனள்
ஆர்த்த மன்பது னாயிரங்கோடி யோசனை
ஆகங் கீழ்த்திசை தெற்கான பூமியில்

வார்த்தை மாற வடவேங்கட மென்ற
    மண்ட லத்தில்முத்தா ரம்மன் வந்தனள்.

விருத்தம்

வந்ததோர் முத்து மாதா வளர்சிறு முத்துத்தாயும்
தொந்தமாம் பூதவேதத் தொனிபெறு முனிவர் சூழச்
சந்த ராசர் கீதம்பாட தையலார் நடமதாடச்
செந்தமிழ்ப் பிறந்தவட வேங்கடஞ் சிறப்பைச் சொல்வாம்.

வேறு

வட வேங்கட மென்றதோர் –தமிழ்
    மண்டலந் தன்னில் வரிசைபெற
திடமான யனேக சத்தம் – நதி
    தீர்த்தங்க ளுண்டுஞ் சிறப்பாக
இடமான மூர்த்தி பெறும் – நல்ல
    எங்கடமான் மலை மேலே
நடமான கிட்டிண மால் – அஞ்சு
    நாராயண மூர்த்தி தானிருப்பார்
இருப்பா ரவ ருகே – நல்ல
    ஏத்ததோர் குந்தி விசையனெனும்
தருப்பார் குந்தா தேவி – மேன
    தவசு பண்ணுவது தானேகண்டாள்
தானே அதற்குத் தெக்கே – துகை
    சங்கை யறுபது ரோசனையாம்
மானேந்தும் வேல்வி ழியாள் – முத்து

வந்தாளே காஞ்சி புரமதிலே
தேனேந்துஞ் சொல்மொ ழியாள்நற்
சிறந்த காமாச்சி திருக்கோவில்
காமாச்சி விசா லாச்சி – பொன்னுங்
கங்கை மீனாட்சியைக் கைகுவித்தே
ஏமஞ் சிறந்த முத்தார் – கச்சி
ஏகாம் பரத்தைத் தொழுது கொண்டு
சீமான் தெரிந்த முத்தார் – ஆடாச்
செக்கையும் ஓடாத தேரைக் கண்டாள்
மாமோ கனம் படைத்த – கரு
மாரி யரையாத அம்மி கண்டாள்
மாரி கெவுரி துர்க்கை – நமவன்
துர்க்கை நீலி கபால முண்டி
வீரி பவுரி முக்கண் – திறம்
வெல்லுந் திரிசூலி காளிசண்டி
பாரிய னாரி துய்யநல்ல
பஞ்சாச் சரத்தி பரஞ்சோதி – ஆதிக்
கரிய முத்தார் எங்களம்மன் – நல்ல
காஞ்சி புரங் கடந்தாள்
புரமான கச்சி நகர்புகழ் காளத்திநாதர் விருஞ்சிபுரம்
அரனாம் பாளூசி திருப்பாண்டிக் கொடியென்றாலும்
பரமாம் படைவீடும் பரமேசுரர் சன்னத மாயிருப்பார்
வரமாள் தீர்த்தங்களும் மகா சித்தி தான் கொடுக்கும்
கொடுக்கு மதற்குத் தெற்கு – புகழ்

கூறு வறுபது ரோசினையாம்
அடுக்கும் புவி யகலம் – இரு
நான்கு டையான் குறுக்ககலம்
எடுக்குங் கணக்கின் படி – யந்த
எல்லையில் தில்லைவன மொன்று முண்டும்
ஒடுக்குஞ் சிவ ஞானம் – ஆதி
மூலரென் றோதுஞ் சிதம்பரமாம்
ஆதி சிதம்ப ரத்தின் – சருவ
ஆபரணங்கள் சருவ தேவர்களும்
நீதி சருவே சுரன் – தினம்
நித்தமு மானந்தம் நித்தருளால்
சோதி யருள் வளருந் – தினஞ்
சூழத் திருவேலி ஆறுமுண்டும்
வீதி தனைத் தொழுது – கன்னல்
வேய்முத்துத் தாய்முத்துத் தான்வரவே
முத்துக் குடை நிழத்தப் – பூத
முக்கோடி தேவர்கணஞ் சூழ
அத்தி முகத்தோனும் – நல்
லறுமுக வேலருந் தான்வரவே
சித்திக்கு வித்தானாள் – திகழ்
சிங்கார முத்துத்தாய் தெற்கேவர
சத்திய வாசகன் சொல் – முத்துத்
தார்குழ லாரூர் தனிலே வந்தாள்
ஆரூரும் போக்கி – சதலம்
மதலம் புவியென்று மிருக்கையினால்

காரூர் சூத்திர முகிர்த்த – மதில்
காரணி புண்டரீக தீர்த்தமுண்டும்
வேரூ ரருங்காசி – வெள்ளி
யம்பல மாங்கயி லாசமதில்
தேரூர மப்பாலும் – தினம்
பூரண மாக யிருக்குமப்பால்
எப்பாலு மாயிருக்கும் – இதுக்
கப்பாலுந் தெக்குச் சமுத்திரத்துள்
ஒப்பான ரோசினையாம் – ஒரு
கோடித் திருமறைக் காடென்றதோர்
அப்பால் சிவாலயமும் – ஆறுகோடி
ருத்திரர் லெட்சிக்கவே
செப்பா ரிளமுலையா – ளிது
தெக்குத் திருவுத்திர மங்கையென்றாள்
தன்னில் வருணபுரம் – இது
தானே பாதாளவான் றன்னிடத்தில்
பன்னு தமிழ்க்குரிய – சிவ
பார்பதி சன்னத மாமளவில்
இன்னல் சுப்பிர மணியன் – றனக்
கீசுரர் சாபம் பலித்திடவே
சொன்னபடி மகரமீன் – போலத்
தோன்றிப் பதினாயிரம் வருசம்
பதினாயிரம் வருசம் – திரை
பன்னு மலவன் சமுத்திரத்துள்
அதிய தவசு பண்ணி – சிவன்

அருசிறி கயிலாச மதில்
மதியா லெழுந்தருளி – மக
ராலய சுப்பிர மணியருட்
விதி சாபந் தீர்த்தருளிப் பின்பு
வேண்டும் பரதரவர் முன்பாக
முன்பாகச் சீர்பெறவே – திரை
சேரு மடந்தையை மூர்த்தியுடன்
அன்பாய்க் கலியாணம்– நல்
அருளால் பாணிக் கிராணம் பண்ணி
இன்பான பாதாளம் – புவிராச
வருணவல்லி யாகுமென்று
தென்பார் புகழும் – வெள்ளிச்
சிறீ கயிலாசம் கொடுத்தருளி
கொடுத்தார் பரவ ரென்று – தினங்
கோத்திர மாகிய சாஸ்திரத்தின்
நடுத்தான் சிவஞான – போதமென
கோச மங்கையில் நண்ணுறவே
உடுத்த கடல்புவியில் – நண்ணு
னுமையுட னங்கழகா யிருந்தார்
வடித்தேன் கனிந்த குழல் – முத்து
மாதாவு மீதெல்லாங் கண்டனளே.
கண்டே கருணை பொங்கி – முத்துக்
காரணி தெற்காக வாரபோது
உண்டே வளருந் – திருப்
பெருந்துறை யென்னும் வேணுபுரம்

கொண்டங் கெழுமலராய்ப் – பொற்

குருந்துண்டு நின்ற மலரல் மங்கை

தண்டா மரைநிறைந்த – சிவ

சத்தியும் ஞான தெரிசனமாய்க்

குருப்போத சத்தியெல்லாந் – தவங்

கொண்டங்கே மூர்த்தி எழுந்தருளி

இருப்பா ரிது பாண்டி – என்ற

விசேஷ மென்றதோர் மண்டலங்காண்.

விருத்தம்

மண்டலந் தன்னிலுள்ள மனுடர்க்கோ குருவாய்வந்த

ஒண்டொடி முத்துமாதா உறுபடைக் கணங்கள்சூழ

அண்டர்கள் கண்டுவாழ்த்த அருந்தவ முனிவர் போற்றத்

தொண்டர்நா டதுவுஞ்சுத்திச் சோணாடு துலங்க வந்தாள்.

வேறு நடை

சோழர் திருநாடு திருக்கடவூர் தனைக்கடந்து

துய்யதிரு வானைக்காவும் பையவே யெழுந்தருளி

மேளதாளங் கொட்டிடவே விண்ணவ ரடிகடந்து

வெள்ளக்கட லென்னவருங் கொள்ளிடமுந் தான்கடந்து

ஆழக்கடல் காவேரிக்குங் கொள்ளிடத்துக் கும்நடுவே

அம்பெருமாள் நம்பெருமாள் தம்பிரான்சீ ரெங்கங்கண்டு

காளச்சின்னம் நாககரம் கருதியே சின்னமுத்துத் தாய்வரவே

கன்னல்முத்துத் தாயுடனே சின்னமுத்துத் தாய்வரவே

சின்னம்பணி மாறிவரத் திருச்சிராப் பள்ளியூரில்

செவ்வந்தீ சுரர்தமையுஞ் சிறப்பாகக் கண்டுகொண்டு
அன்னதரும வென்னமுத்தா ரழகர்மலையில் வந்தாள்
அழகர் தனைத்தொழுது ஆனமலை யுங்கடந்து
பொன்னுநதி யென்னுநதி வரகநதி நாகநதி
புனத்தா னதிபெருகுங் குமரியென் றெழுதீர்த்தம்
வண்ணமது ராபுரியென் றெண்ணுமந்தப் பட்டணத்தில்
வாய்த்ததிரு வாலேதெய்வத் தீர்த்தமும்வந் தாடியபின்
பின்னல்சின்ன முத்துத்தாயும் பெருங்கடல் படையோடே
பிரிசத் துடனெழுந்து மதுரைப்பதி யில்வந்தார்
பொன்னுலகி லிந்திரனும் போதவெள்ளை வாரணனும்
பூவுலகில் சொக்கரையும் போதபூசை பண்ணும்நேரம்
மின்னுமுடிப் பாண்டியனும் வேண்டித்தொழ வந்தபோது
விண்ணுலகுக் கிந்திரனார் விரைந்தோடும் வேளையிலே
துன்னுபுகழ்ச் சொக்கரையுந் துர்க்கையையு மறந்துபோனாள்
சொக்கரென்று துர்க்கையைத் தொழுதாளே முத்துமாதா
முத்தளக்கு மண்டபமும் முன்னேபொன்னின் கோபுரமும்
மோகனப் பொற் றாமரையும் வாகனப்பிறை கடந்துகண்டு
வித்துருவக் கொடிமரமும் வெள்ளியம்ப லமுங்கடந்து
மீனாட்சி யம்மனையு மின்னுங்கயல் கண்ணியையும்
அத்தர்சொக்க னாதரையும் அழகாகப் போத்திக்கொண்டு
அறுபத்தி நாலுதிரு விளையாட் டலங்காரமும்
புத்தமுத முத்துத்தாயுஞ் சொக்கர்துர்க்கை யையும்பணிந்து
போதமுத்தை விரைக்கிறேன் வேதமுத் துரைக்கலுற்றாள்
உரைத்திடுமுன் பாண்டியர்கள் மானோம்புத் திருவிழாவில்

ஒன்றுபத்து நூறாயிரம் ஒருகோடி ஆடுகிடாய்
இறைத்தகிடா ஆயிர மானபெலி கொண்டதுர்க்காய்
இன்றுமுத்தை விரைக்கிறேன் நின்றமுத்தைத் தரமிட்டு
நிறைத்தகோ லாலவண்டி நின்றகரி பரிமேலும்
நின்றஒட் டகையெருது கூண்டகானங் கொண்டுவந்தாள்
தெறித்தகடற் குள்வாழுஞ் சிப்பிசங்கு முத்துடனே
சென்னல்முத்து கன்னல்முத்து சிறந்த கமலமுத்து
சிறந்ததோர் சட்டைமுத்து தெரிமுத்து சொரிமுத்து
செல்லமுத்து நல்லமுத்து செய்யதோரவை யீன்றமுத்து
பிறந்த குழந்தைமேலும் பிறவாத கெர்ப்பமேலும்
பிள்ளைதள்ளை சிறியவர் பெரிய மனுசர்மேலும்
கறந்த பசுக்கள்மேலுங் கன்றுமேலுங் காளைமேலும்
காரிகையாள் மாரிமுத்தைக் கடல்போலே தான்சொரிய
மறைந்த கிடாக் கள்மேலு மறையாத மேதிமேலும்
வலியசெம் மறிமேலும் மத்துள்ளவெள் ளாட்டின்மேலும்
மேலான ஆனைமேலும் வெம்புரவி தங்கள்மேலும்
வெல்லுருதி கல்லுருதி மீறா மணலுருதி
கோலமான செவ்வுருதி கொடிய பனைமுகரன்
கொல்லுருதி செங்கரப்பான் குளிர்க்கருஞ் சப்பட்டை
நாலா விதத்துடனே காச்சல்வெப்பு முன்னடைப்பன்
நடுங்கிப் பதறிடவே நாலுதிக்கு மேபார்க்க
வாலவ யிரவன் வீரபத்திரன் அக்கினிமாடன்
வண்டிமலையன் மலைச்சி கண்டகருண னிசைக்கி
இசைக்கிகா டேரிபேச்சி யிருளப்பன் சந்திவீரன்

இணங்காத ராக்காச்சியும் இடுகாட்டுச் சாமுண்டியும்
அசத்திக்கி டத்திக் கொல்லும் அதமசண் டாளனுடன்
ஆயிரம்பூ தப்படைகள் வாயிரங்கப் பூசைகொள்ள
மசக்கும்வே தாளைமேலே வன்னச்சின்ன முத்துத்தாயும்
மாபூதஞ் சங்கிலிப்பூதம் வாய்த்த சந்தணக் குமாரன்
திசைக்கு ளடங்காத திசைபல கூளிகாளி
தெரிதமி ழானபுகழ்ப் பெரியசு வாமிதொழ
பெரியசுவாமிதொழப் பேர்பெரிய முத்துத்தாயும்
பிரதான மாமதுரை தன்னிலே யிருந்துகொண்டு
அரியதோர் சின்னமுத்தார் அக்கினிமாடன் முதலாய்
அடலாய் மதுரையெல்லாம்அனலாய்முத் தைவிரைத்து
கரிய நிறையதாகிக் கதறிப் பதறிடவே
காலன்பூசை கொண்டதுபோல் கண்டகண்ட வீதிதோறும்
வீதியுமா சித்தெருவும் மேல்தெருவுங் கீழ்த்தெருவும்
விண்டு பேசும் வண்டியூரும் மிக்கதோர்வை கைக்கரையும்
ஆதிமறை யோர்தெருவும் அரசர் தெருத்தனிலும்
அழகுவணி கர்தெருவும் அருள்வெள்ளா ளர்தெருவும்
சோதிசின்ன முத்துத்தாயும் படையொடே சென்றுநின்று
துடுக்காய்முத் தைவிரைத்துச் சோதித்தா ளடங்கலையும்
சாதியெளி யோர்களான சங்கமசா தித்தெருவும்
சண்டமாருதமாய் முத்தைத் தான்விரைத்துக்
கொல்லலுற்றாள்.

கொன்றபோது கூடலூர்த்தாய் கோதைமுத்துத் தாய்தனக்குக்
கூடிமுகிழ்த் தங்களிட்டுக் கோவிலுங்கெட் டிமுகித்து
நின்ற தோரணங்கள் மகாமேருவின் நிலைநிறுத்தி

நிலையாய்க் குறிஞ்சிநாட்டி நிலைவிளக் கேத்திவைத்தார்
நன்றெனவா ழைகள்நாட்டி நல்லதோர்மேல் கட்டிகெட்டி
நாலுதெருத் தோறுமாந்தை வேந்தர்க ளலங்கரித்தார்
குன்றெனச் சோறுகறியுங் கோழிகிடா யாடுவெட்டிக்
குங்கிலியத் தீபத்துடன் கோட்டுவாச் சியமுழங்கப்
அன்றுபிச்சி யிருவாச்சி வெட்டிவேருங் கட்டித்தூக்கி
அழகாகப் பொங்கலிட்டார் ஆடலயம் பம்பைகொட்டப்
பம்பைமுத லானபதி னெட்டுவாச் சியமுழங்கப்
பத்திரகாளி மாகாளி முத்துனா யகிதனக்கு
செம்பவள வெள்ளிலைகா ளாஞ்சிகுஞ்சம் வீசாறியும்
தெய்வகன்னி மார்கள்வந்து சிறப்பாய்ப்பணி மாறவே
கும்பகுட முன்னிறைத்துச் சந்தணங்கஸ் தூரிவீச
கொலுகுபராக் கென்னவே கட்டியம்பூ தங்கள்கூற
அம்புவிகன் னிகைச்செல்வி அம்மன்துர்க்கை சொர்க்கர்வளர்
அழகாய் மதுரையுள்ளோர் அம்மனுக்குப் பூசையிட்டார்
அம்மைமுத்துத் தான்மகிழ்ந்து அஞ்சலஞ்ச லென்றுசொல்லி
ஆதியை நினைந்துநல்ல விபூதியுங் கொடுத்தனளே
கொம்மையிள மாமுலையாள் கூளைப்படை யையழைத்துக்
கூடாரம் நிசாளவெடியுங் கொப்பரை குதிரையானை
செம்மைபெற வேபயணந் திடிமண் வெடிமுழக்கச்
சிவிகை கவிகைவாசல் செல்லமுத் தெழுந்தருள
பொம்மைசெறி யாவணிபுர முங்கடந்து தெக்கு
பொன்மதிலுங் கோட்டைவாசல் தென்மதுரை யுங்கடந்து
தென்வடல் கிழக்குமேக்குச் சேதுராமே சுரமிட்டு
சின்னமுத்துத் தாய்படையு முன்னேமுத்தைத் தான்விரைக்க

மண்ணடைந்த கொங்குதேசம் வாய்த்ததோர் பழனிதேசம்
மலையு முடுக்குநாடுங் குலைகேடு செய்துவர
பொன்னடந்த மன்னார்பேட்டை உன்னுமுன்னே தான்கடந்து
பூவலையந் தன்னில்முத்து சீவலபுத் தூரில்வர
பின்னடந்த பட்டிதொட்டி வீரராசா வின்பாளயம்
விரைந்துபூ தங்கள்வரக் கணங்கள்கு டையெடுக்கக்
கைமணியத் தாளங்கொட்ட காளச்சின்ன மூதிவர
காவிலிளங் குயில்முத்து சீவலபுத் தூரில்வந்து
மணங்கமழச் சூடிக்கொடுத்தாள் மலர்த்தாள் தனைவணங்கி
மங்கைராகம் பாடிடவே சங்கரனார் கோவில்வந்தார்
பணங்கள்பணிந் திடத்தொழும் பத்திகொண்ட புத்தடியூர்
பாவனாச தீர்த்தத்தையும் மோகமாகப் பார்த்துக்கொண்டு
அணங்காகு மாவுடையும் அய்யாசங்க ரேசரையும்
ஆதரவி னால்தொழுது வாதவநல் லூரில்வந்தாள்
வாதவநல்லூர் புளியங்குடி சிந்தா மணியூரும்
மடையூடே தேன்பரக்குங் கடையநல் லூர்தனையும்
கோதில்லாத் தனுமதீர்த்தங் குண்டமுஞ் சடாயுதேவர்
கோவிலுங் கடந்துகட்டிப் பிள்ளையார் தனையுங்கொண்டு
பாதைக்கரை யேநடந்து பண்புளி தனைக்கடந்து
பக்திகொண்ட முத்துத்தாயும் படையுஞ் செருமிடவே
சீதளம் பெருகு திரிகூட திருக்குற்றாலத்தில்
செங்கைமுத்து கங்கைமுத்துந் தங்கைமுத்து வந்திருந்தாள்.

விருத்தம்

மங்கையர் கவரிவீச மாலயன் புகழ்ந்து வாழ்த்த
சங்கைமா முனிவர்சூழச் சகலவே தங்கள் வாழ்த்தத்
திங்கள்வெண் குடைநிழத்தத் திரிகூடர் ஆலயத்தைச் சுற்றும்
பொங்குமாக் கடல்நீராடிப் புரிதவ மாதா நின்றாள்.

நடை

நின்ற படையுடன் முத்தம்மன் நின்றசின்ன முத்தம்மனும்
நேச மாகிய பாலருவியுந் தேனருவியும் நீராடினார்
நன்றியுட னகலுநீரர் மெய்யுடன்நெய் யருவி நீராடினார்
நாவுலோகமும் பூவுலோகமும் நல்லவுற்பன தீர்த்தமும்
தென்றல்வந்து மணங்கமழ்ந்திடுஞ் செண்பகடாவிச் சோலையும்
செங்கண் மாலுறைச் சங்குவீதியும் பொங்கு மாமரச் சோலையும்
கன்றுகொண்டு கனியெறிந்தவர் தங்கை யாங்குழல் வாய்மொழி
காதலான குறும்ப லாவளர்க் கற்றரான திருக்குற்றாலரே.

கலிவிருத்தம்

காதல் கொண்டுக ருங்கயல் கன்னிமார்
பூத லத்தில் புருடரும் போத்தவே
ஆத லாள்வ ளராய நாயகி
ஈத லத்தி லிலங்குங் குற்றாலரே.

நடை

குற்றாலநாதர் குழல்வாய் மொழியையுங் கண்டு கொண்டு
அம்மன் கோவிலும் பாதாள வாசலுஞ் சேவித்து

வற்றாத பூத வயிரவ னின்று வணங்க
நல்ல வண்டி மலையனுங் கண்டகருணனு மிணங்க
நற்றேவ ராம்வீர பத்திரர் தன்னையும் விண்டாள்
முக்கண் ணாத ருறைகின்ற சித்திர சபைமுத்துங் கண்டாள்
சிற்றாறு கண்டதோர் குற்றாலர் கோவில் கடந்தாள்
நற்றிடி மண்ணடிக்க அடியொட்டிப் பாறைமேல் நடந்தாள்
நடந்த கணங்க ளிருபிறமும் நின்று பொரவே
பொன்னின் நாடாளப் பசும்பொன்னின் காடாளம்மன் பின்னேவர
அடந்த படையோடே மேலகரத்தூர் செங்கோட்டை தின
மாலிருக்கும் பரலியான்பாறை புளியரை நாட்டை
துடந்தபடை யோடேஅதி செகாநங்கை மின்னாள் இது
தேரறாத் தென்காசி மாசித்தெரு வென்று சொன்னாள்
கடந்தமெஞ் ஞானமருளு வகாளை கைகுவித்தே
தென்காசி விசுவநாதர் மாசில்லாக் கோவிலைச் சேவித்தே
கோவில் கொடிமரங் கோபுரத்தார் பரித்திருந்தாள் அன்று
கோட்டையும் பாண்டியன் வீட்டையு முத்தைச் சொரிந்தாள்.
மாவிலக்கு யலவனானை குதிரைமுத் தாய்ச்சேர
வாரிக்கு வித்தாளே மண்ணுக்குக் கட்டின வித்தாய்
பாவில்தமிழில் பழுதில்லாத்தென் காசி யூரைக் கன
பட்டணமுந் திட்டம் பார்த்தாள் பலப்பல பேரை
காவில் குறித்து வனதுர்க்கை பூசைபோல் குடுத்தாள் திறல்
காளிக்குங் கூளிக்கும் நீளிக்கப்பூசை கொடுத்தாள்
பூசை கொடுத்து முததாரம்மன் தன்னையும் பணிந்தாா் புகழ்
பொன்காசி சேர்ந்ததோர் தென்காசி யூரையும் பணிந்தாள்

ஆசை வடகரை யாத்துக்கு மேக்குக் குள்ளாய்
மட்டதற்கு வடக்கு மடக்கொடி முத்தாக வெள்ளம்
தேசம் பெறவே வடகரையூர் முத்தை விரைத்தாள்
நற்றிரு மூலனாதர் கனிவாய் மொழியை முன்னுரைத்தார்
ஓசைக் கடல்போலே சுரண்டை சுந்திரபாண்டி பாவூர் கன
உத்தள முத்தண்டல் திப்பணம் பட்டியூர் பூவூர்
ஊரும் புலியூ ரிடையன்பாறை வழிசுத்தி மன
துத்தக் கடையங் கிட்டிணாபுரம் மேந்தியா புரஞ்சுத்தி
பாரும் விசும்புங் கடலுக்கு மலைக்குந் தானிருந்தாள்ஊரைப்
பாத்தாள் பலப்பல வூர்தோறும் முத்தைச் சொரிந்தாள்
தேருந் தமிழத்தி தீர்த்தஞ் சிவசயி லேசர் நற்
சிறந்த வன்னியப்பர் ஆவுடையார் குளத்தூரார்
ஆரும் புகழும்நல் லாழ்வார் குறிச்சியூர் சிறந்தாள் சொல்
லதியபொதிகை மாமலையில் முத்தம்மனும் வந்தாள்.
அழகாய்த் திருநெல்வேலி அம்பதி முத்தைவிரைத்து
அரியாந் திகிரிமுத்து அருள்முத்தை வேண்டிக்கொண்டு
குழக ரெனுங்கரிய மாணிக்கப் பெருமாளையும்
கோவிந்தமிட்டே தொழுது மாவிந்தையாய் வாரபோது
இளகாத நெஞ்சரையு மிரங்காத வஞ்சரையும்
எட்டுலெச்சம் பூதம்விட்டுக் கெட்டுலெச்சை யேகெடுத்து
பழகாத் தெருநெல்வேலி பட்டணத்துள் ளோர்பதறப்
பாரிய முத்தைவிரைத்து மாரியேகோத் தலர்தூவ
மாரிமுப்பு ராதிதுர்க்கை மட்டுள்ள புட்டாபுரத்தி
வரிசைப் படைநடத்தப் பிரிசத்துட னெழுந்து

காரியக்கார னக்கினிமாடன் வீர பத்திரனும்
கன்னல் முத்துஞ் சின்னமுத்துங் கறுப்பன்வயிரவனும்
சீரிய வண்டிமலைய னக்காரியக்கார னிருளன்
திறமான வன்னியரு மறவாத வன்னியரும்
நாரிபேச்சி யிசக்கிநீலி நாதவேதா ளைக்கிணங்க
நல்லதிரு நெல்லையுள்ளோர் வல்லபூசை கள்கொடுத்தார்
வல்லமுத்து நெல்வேலியை மகிழ்ந்துகொண் டாடும்நேரம்
மங்கைசின்ன முத்துத்தாயுஞ் சங்கைசொல்லாப் படையோடே
நல்லமுத்து நாச்சியாரைத் தொழுதுவ ணங்கிக்கொண்டு
நாலுநா ழிகைக்குயிந்தக் கம்பையாத்தி லிருமென்ன
செல்லமுத்து மணிமுத்து சொரிமுத்தய்யன் கோவிலும்
திருவான முத்துமாலை யம்மனுங்கூ டவரவே
ஒல்லையி லெழுந்தருளிக் கல்லிடைக் குறிச்சியூரை
ஒருமிக்க முத்துக்களைப் பருமுத்தான் விரைத்து
முததணிந்த ரெற்றினமணி மரகத வல்லியையும்
முக்கண்ணெரித் தாவுடையார் ஆதிவராகப் பெருமாள்
அத்தன்குல சேகரமுடை யார்சிவ காமியையும்
அன்று பாடகப்பிள்ளையார் நின்றுபணிந்தே தொழவே
சுத்தமான வெள்ளங்கொள்ளி சித்திரக்கெங் கைநதியும்
தோறாத வீரகநங்கை வீரவநல்லூர் தனிலும்
எத்தலம் புரக்குமுத்து யிரைத்துவி ரைத்துக்கொண்டு
ஏத்தகளக் காடிஅய்யன் தோத்திரமாய்ப் போத்திசெய்து
போத்திவருஞ் சேரமங்கை ஊரையுஞ் சிறந்தமுத்து
பொருந்தவிரைத்து மடைசப்பதியைக் கொள்ளை கொண்டு

விருத்தம்

கதிபெருக வரங்கொடுக்குங் கிருதாரனும்
காச்சி பெறுஞ் சித்திரையில் கனதனம்போல்
துதிபெருகத் தொண்டரெல்லாங் கண்டு போற்றத்
துடிபடத் துந்துமியும் முழங்கி யார்ப்பப்
பொதிகை மலை தனில்வளரு மகஸ்திய
மாமுனி தவத்தைப் புகழ்ந்து கொண்டு
மதிபெருகு நல்லமுத்துத் தாயுஞ் சின்ன
வன்னமுத்துத் தாயுடனே வந்து கண்டார்.

வேறு

வந்துகண்ட பொதிகை மாமலையி லகத்தியனை
முத்தனை நினைந்துகொண்டு முத்தம்மனுந் தான்வரவே
இந்துநுதல் கன்னியர்கள் வந்துகுர வைமுழக்க
இடிபோல் வெடியதிர எண்ணில்லாத பூதம்வர
துந்துமிமுதற் பல்லிய முப்பது முழங்கிடவே
தோகையுல காளைப்பாவ னாசரைத் தொழுதுகொண்டு
நந்துசெறி விக்கிரமர் சிங்கத்தில் முத்தைவிரைத்து
நல்லமன்னார் கோவிலூரை நல்லமுத்தைத் தான்விரைத்து
விரைத்து வாகைக் குளத்தைப்பூ தங்கள் கொல்ல
விளக்கிடு மாகாசமட்டும் வழக்குடன் சென்றுவர
தரைத்தலமல் லீச்சரமாம் நாலாயிரம் நங்கைமங்கை
சங்கைப் பெரியனாயகி கயிலாச னாதரையும்
உரைத்துப்பிர சங்கங்கொண்ட ஊர்க்காட்டுக் கோட்டியப்பர்

உத்ததிரு வலஞ்சுழி உத்தர தீர்த்தமுங்கண்டு
இரைத்ததோ ரானைகாத்த பெருமாள் நாறும்பூநாதர்
எங்க ளாவுடையம்மனை சங்கையாக வேபணிந்து
சங்கையான தாம்பிரவண்ணிச் சங்குமுக மட்டுஞ்செல்ல
தடங்கடல் மட்டுமுத்தை அடங்கல் விரைத்துக்கொண்டு
பொங்குகடல் தூத்துக்குடி ஒன்பது திருப்பதியும்
பொய்சொல் லாததோழப் பன்பண்ணை வல்லநாடு பாளையமும்
துங்கமுத்த ராமன்குளஞ் செப்பறை சிந்துபூந்துறை
சொல்லரிய கம்பையாறு நெல்லையம் பதிதனிலும்
மங்கையாம் வடிவுடைச்சி தங்கையாம் புட்டாபுரத்தி
வளரும்நெல் வேலினாத ரழகாய் மகிழ்ந்திருக்க
சாத்துமவ்வல் செவ்வலூரில் சவுந்தர வல்லியையும்
தாள்பணிந்து சீவலவன் தென்பண்ணை தனைக்கடந்து
காத்தனவே உய்யக்கொண்டான் அம்மனூரை யுங்கடந்து
கல்லடந்த சங்காணியுங் கல்லுக்குமேக் குள்ளவூரும்
மாத்தரிய னாபுரமும் பாப்பாகுடி கவுலிப்பாறை
மறந்தபுதுப் பட்டியில் திரிபுர சுந்தரியைத்
திரிபுர சுந்தரியைச் சிறப்பாகக் கண்டுக்கொண்டு
சீவலாகுளமும் நெட்டூர் மாயமாங் குறுச்சிசுத்தி
விரிதிரைக் கடலென்னப் படைகள் நெருங்கிவர
மெல்லமுட வாக்குறிச்சி மானூரம்ப லமுங்கண்டு
அரிய பொன்னம்பலவன் அருளாஞ் சீவலமாறன்
அம்மன் பாடகவல்லியை நன்மையாகக் கண்டுகொண்டு
துரியசித் தாத்துப் போக்கு ஊத்துமலை நாடுமட்டும்

தொட்டியரெட் டமான்சீமை கெட்டியே முத்தைவிரைத்துக்
கெட்டியே கருசக்காட்டை முட்டியே துருசறுத்து
கீர்த்திகொண்ட வைப்பாறு வேம்பாறு தன்னைவிட்டுக்
கொட்டியேமுன் னேநடக்கக் கயத்தாறு கெங்கைகொண்டான்
கோடாத முக்கூடலூரில் வாடாதழ கரைப்போற்றி
வட்டியே முதல்குடுத்துக் கட்டியே யனைமுகித்து
மரகதவல்லி சோளக வல்லியையும் வாழ்த்திக்கொண்டு
அட்டியாஞ் செய்துங்கநல்லூர் கிட்டிண புரங்கடந்து
அழகான முத்துக்குல மாணிக்கபுரங் கடந்து
மாணிக்கக் குடைநிழத்த மாதர்களா லத்தியேந்த
வண்டிமலையன் முதலாய தண்டிகைக் கணங்கள்சூழ
ஆணிப்பொன்னு மாடைக்காசும் ஆடையா பரணத்தோடே
அய்யங்காச்சிப் படைசூழ அம்மைசின்ன முத்துத்தாயும்
தோணித்துறை தாம்பிரவன்னி சூழ்ந்ததோர் விளாகத்துறை
சொல்லரிய கம்பையாறு நெல்லையம் பதியினிலும்
அளவற்ற ரெற்றினங்கள் ஆனைமேலும் பூதமேலும்
அம்மைநல்ல முத்துத்தாய்க்கு அழகாகக் கொண்டுவந்து
காணிக்கை யாய்வைத்துச் சின்னமுத்துத் தான்பெரியமுத்து
கமலந்தனைத் தொழுது கம்பையாத்தில் வந்துசேர்ந்தாள்.

விருத்தம்

கம்பை யாற்றுறைக் கண்ணுதல் மூர்த்தியைத்
தம்பமாய் முத்துத் தான்தொழு தேத்தியே
பம்பை யார்ப்பப் படைகள் நெருங்கிடச்
செம்பொன் னிட்ட சிவிகையி லேறினாள்.

வேறு நடை

ஏறினாள் பல்லியங்கள் முழங்கவே
    ரெற்றின மாமணிப் பல்லக்கி லேறினாள்
கூறினார் மங்களங் கட்டி யங்களுங்
    கொம்பு சங்குட னெங்கு முழங்கவே
மீறிவந்த வேதாளை நடுங்கவே
    மின்னிய சின்னமுத் தம்மன் பின்வர
பின்னடந்த பெரிய சுவாமியும்
    பேச்சி யாச்சி இசைக்கிராக் கிசத்தியும்
முன்ன டந்த அகோர வயிரவன்
    மூல தேவனும் நீலனும் நீலியும்
கன்னடந்தமி ழோதிய பூதியர்
    கவி வாணர் தொழுது முன்னேவர
தென்னடந்த பொருநை நதிவிட்டு
    செய்யும் ஓமநல்லூர் திடியூர் தனில்வந்தாள்
பந்த டித்து வரும் கன்னி மார்களும்
    பகவதி சுனை தீர்த்தமு மாடினார்
நந்துகூலிய காரு சேரிமுதல்
    நல்ல நாட்டுப்புறம் நாற்ப தூரையும்
முந்தவே முத்தை விதைத்து நடந்தனள்
    முனைஞ்சிப் பட்டியில் வந்தாள்முத் தம்மனும்
அம்மன் முத்தம்மன் சின்னமுத் தம்மனை
    அழகு துர்க்கையும் வந்துகொண் டாடினாள்
செம்மை யாகிய சேந்தநகர்ச் செல்வி

திருவல நேரியில் வந்துகொண் டாடினாள்
கொம்மை கோட்டை யிடிக்கும் படையோடே
கொண்டு வந்து பூலாவுடை அய்யனும்
நன்ம னத்தி லிருக்கவென் றெண்ணியே
நல்ல முத்தைத் தொழுது வணங்கினார்
தொழுது நின்ற பூலாவுடை அய்யனைச்
சுக மாக யிருமென் றனுப்பினாள்
பழுதில் லாத பலப்பல வூர்தொறும்
பாங்குடன் முத்தைத் தான்விரைத்தா ளம்மன்
முழுது முத்தமிழ் தந்தருள் வித்தகன்
முருக வேள்திருச் செந்தூரைக் கண்டனள்
எழுதியே தெய்வானைக்கு மானன்று
ஈன்ற வள்ளிக் கிழங்குங் குமாரரை
ஆர வேலோ டறுமுக வேலனை
அப்பு மனஒப் பில்லாத மணியனே
சீர்பெருங் கடல் வீசுந் திரைவிட்டுத்
தீர்த்த வாரி யமுர்தம் பொசித்தனர்
சூர சங்காரன் தெய்வானை வள்ளியை
துங்க முத்தம்ம னிங்கிதம் பேசியே
மாரவேள் மயி லேறியை வாழ்த்தியே
வாரி நீரலை வாய்க்கரை தான்விட்டு
அலைசேருங் கடக்கரை நீளமும்
ஆறு கோடி கணங்கள் குதிக்கவே
குலசேகரப் பட்டணந் தன்னிலுங்
கொத்தலர் குழல் முத்தை விரைத்தனர்

வலைகள் சேர்ந்து அரித்தது போலவே
மானா டெங்குந் தானாடாய்க் கொண்டனள்
நிலைசேரும் பலப்பல லூர்விட்டு
நீட்டுக் கொண்டதோர் கூட்டப் புளிவிட்டு
விட்டுக் கீழ்ப்பத்து மேற்பத்துத் தான்சுத்தும்
விருந்தெனவே பெரும்பத்துத் தான்விட்டு
கொட்டு வாச்சிய மெத்தமு ழங்கவே
கொம்பு சங்குட னெங்கு முழங்கவே
எட்டுத் திக்கும் புகழ் விசையாபதி
எல்லை யாந்தில்லைச் சோலை யருவியும்
மட்டில் லாதவிசு வாமித்திரர் வேள்வியும்
வந்து கண்டனள் முத்து வரிசையாய்
வரிசை யாம்பழ வூருங் கருங்குளம்
வாரி யூரையுங் காரிய மாக்கியே
பரிசைக் காரரும் பூதவே தாளையும்
பல்லக்கி லாறக் கவுசிகூ டாரமும்
பிரிச மாகப் பெரியமுத் தம்மனும்
பின்னைச் சின்னமுத் தம்மனுஞ் சேனையும்
விரிச டைச்சி துடைச்சி யிடைச்சிதான்
வீண னாகிய வாணனைக் கொன்றவள்
அரிசியைக் கல்லதாக்கிக் குருணை போல
அருந்த வுட்டை மணலாக்கு மெல்லியர்
கரிசன மான தவத்துக் குடையவள்
காளிநீலி கபாலி திரிசூலியாம்
ஒருசொல் லானபரா சத்திஆதி சத்தி

ஓம்நமசிவ(ாய) ஞான மனோன் மணி
குரிசி லான குமரிப் பகவதி
கோவில் வாசல் குரைகடலுங் கண்டாள்
கண்டு தென்கட லாடிக்கொண் டாடியே
கன்னி மாகு மாரியை வணங்கினாள்
வண்டு கிண்டுங் குழலாள் பகவதி
மங்கை முத்துடன் வந்த சனத்துக்கும்
எண்டி சைக்குங் கொள்ளாத படைக்கெல்லாம்
இருந்து கொண்டு விருந்து கொடுத்தனள்
உண்டு பூதங் களித்துநின் றாடவே
ஒண்டொடி முத்து அன்று பிறப்பட்டாள்
புறப்பட்டாள் கூளைப் பாளையமுன் செல்ல
பூதங்கள் சங்குநாத முழக்கவே
நிறப்பட் டாடை பாவாடை விரிக்கவே
நீலன் குமிர்தனு மாதித்தன் சூழவே
ஒறப்பட் டேவருங் காளிகள் கூளிகள்
ஒட்டியே மேளங் கொட்டியே முன்வர
திறப்பட் டாள்நல் லகத்தீசுரம் விட்டு
தென்சிவிந்தைப் பதியில் வந்தா ளம்மன்.

விருத்தம்

தென்னு லாவிய தென்சிவிந் தீசனை
உன்னி வேத முணருமையாள் தன்னைப்
பொன்னு லாவு புகழ்முத்துத் தாய்துணை
கண்ணில் முத்துக் கரங்குவித் தேத்தினாள்.

வேறு

முத்துமாலை யம்மனுக்குக் கொத்துமாலை யுங்கொடுத்து
மூணுமாலை யென்னுங்காணத் தாணுமாலை யன்மகிழ்ந்து
பத்திமாலை தோரணங்கள் பக்கநாலுக் குமிணங்க
பவனிவரு முமையாள் அவனிவிடை கொடுத்தாள்
வித்துமாலை முத்துமாலை மெய்க்குமாலை யெங்குமாலை
வீரமாலை சூரமாலை வேதமாலை நாதமாலை
வஸ்துமாலை யாகவந்த சித்துமாலை முத்துமாலை
மாலையும் விடையும்வாங்கி ஆலயந் தனைக்கடந்து
கடந்தாள் களக்காடுநாடு தேன்கொம்பு பறக்கையோடும்
காளிகூளி பூதத்தோடே ஆழியேழுஞ் சூழப்படை
குடந்தான் சுமந்தகொங்கைக் கோதையர் கவரிவீசக்
கொள்வாய்ப் பூதகெணங்கள் ஔள்ளியே தீவெட்டியேந்த
தடந்தா னிதுவெனவோ ராக்கியமங் கலத்தூரில்
சகலதெரு வுஞ்சென்று சனங்களைத் தான்வளைந்து
திடந்தா னெனவிருந்து பரவா ளவரையும்
தெரிஞ்சசட்டை முத்துடன் கருஞ்சப்பட்டை விரைத்தாள்.
தெரிந்த தருமைபுரம் ஞானகுடி யீத்தான்முழி
தெள்ளுதமிழ்ப் பிள்ளைதோப்பு வலம்புரி முட்டத்துறை
அரிந்து கொண்டாப் போலவே வேம்பனூ றுவீரணசேரி
ஆளூர்வணி கர்தெருவில் அலங்கார மாயிருந்தாள்
சொரிந்த மிடாலங் குளச்சை திருவ்னாங்குறுச்சி
சொல்லுமண வாளகுறிச்சி பழங்கடைப் புதுவூரும்
விரிந்த யிரணியல் நெய்யூர் தேங்காய்ப் பட்டணமும்

விழிகிளியூர் மசங்கொட்டாரம் பைங்குளமட்டும்
எரிந்தகருஞ் சப்பட்டை யெட்டுத்திக்கு மேவளைய
எங்கிலுஞ் சிறவாரை விதரிப்பிரம வாவரையும்
வாவறைகொல் லாங்கோடு மழையு மழையமுதும்
வருபாவூர் விழிங்கம் பூவாறு கருங்குளமும்
தாவருடை யாறுநெடுங் கண்டவெயி லூரருங்கூர்
தானதவ மானமிந்தச் சயனன் தனைத் தொழுது
காவறையும் வற்கரையுங் கனதீர்த்த மாடிக்கொண்டு
கல்லனைய கொல்லன்சிறையும் கீழைக்கழைக் கோட்டமதும்
ஆவுறை ஆரியநாடு பொற்றாழி நெடுமன்காடு
ஆலப்பள்ளி அம்லப்பள்ளி வேட்டுக்காடு புறக்காடு
புறங்கா டெருமைகொல்லி பேட்டைபுறக்காடு யிராலேரிப்பேட்டை
பின்னுங் காஞ் சிரப்பள்ளிப் பேட்டையீத்துக் கூடலூரும்
சிறக்கவே பள்ளிப்புறம் பெரியகொட்டா ரக்கரை
செய்ய கொச்சி முக்காடு காயல்கா யங்குளமும்
பறக்கை கருணாபபள்ளி ஆலம்பாடு மொகரம்புரி
பகருங் கொடுங்கண்ணூரு பகவதி தன்னைக் கண்டு
நிறக்குஞ் சுப்பிரமணியன் நிறைந்த அருவிக் கரை
நீதிஅனந் தேசரூரும் நெய்யாற்றங்கரை பாறசாலை
எறக்கக் கருஞ்சப்பட்டை அக்கினிமுத்தாய் விரைத்து
எரங்கிப் பதறியோடப் பரிவிக்கல் கரமனை
கரமனை குழித்துறை கால்வாய் முளவன்கோடு
கட்டான நட்டாலி நெல்வேலி குஞ்சரன்கோடு
அருமனை பொன்மலை திற்பரப்பு திருநந்திக்கரை
அங்கமான வேங்கோடு அயப்பன்கோடு பூட்டேத்தி

பரமனைப் போற்றிக் கொண்டு கோழிக்கோடு மட்டுஞ்சென்று
பரியகருஞ் சப்பட்டை பலமுத்துக் குலமுத்து
சுரமனையுங் கொடுத்துத் திருவட்டாறுங் கடந்து
சொல்லரிய பன்னிமலை மேய்க்கோடு கோட்டைவிளை
கோட்டைவிளை அய்யனையு மீட்டமுடன் கண்டுகொண்டு
கூண்டமண லிக்கரையி லானகோட்டுத் தம்பிரானும்
சேட்டமுடன் மகாதேவர் சிறந்த திருவாங்கோடு
சேரன்கே ரளபுரமுஞ் சிதறால்வள்ளி யாறுவிட்டு
மேட்டைவெட்டிக் கோட்டையிட்ட கற்குளமுஞ் சென்றபடை
வீடுந்திரு நீலகண்ட ராடுந்திரு வம்பலமு
மேட்டமென்னுங் குழலாள் வள்ளிதெய் வானைமெய்க்கும்
இங்கிதக்கு மாரரையுஞ் சங்கீதமுத் தம்மன்கண்டு
கீதம்பாட மாதராடக் கிணங்கள் வணங்கிவரக்
கேரளதே சத்தைச்சுத்திக் கீர்த்திகொண்ட முத்துத்தாயும்
நாதவயிரவன் வீரபத்திரன் அக்கினி மாடன்
நல்லவண்டி மலையனுஞ் செல்லகண்ட கருணனும்
சீதசந்தணக் குமாரன் முத்துக்குமாரன் கறுப்பன்
தீர்க்கமா யக்கினிமாடன் வேப்பிலைக்கா ரர்படையும்
வாதையாங் கருஞ்சப்பட்டை மண்மணல் பனைமுகரன்
வகைவகை முத்துக்களைத் துகையில்லாமல் விரைத்து
துகையாகச் சின்னமுத்து வேதாளை மீதில்வர
தொல்லுலகில் நல்லமுத்து நல்லசிவி கையில்வர
தகையாத பேய்ப்படையும் நீலகேசரி யுடனே
தக்கமுப்பு ராதிமாரி துர்க்கையுக்கிர காளிவீரி

பகையாய் வரும்பிரம ராக்கிசத்தி முன்னேவர
பட்டணந் தெருக்கள்தோறு மிட்டமாகப் பூசைகொண்டாள்
புகையா யனலெரிக்கப் பூதங்கள் முத்தைவிரைக்க
புண்ணியமுத் தம்மன்படை பன்னிவாய்க்கால் தான்கடந்து
பன்னிவாய்க்கால் சுங்கான்கடை கள்ளியங்கா டுகடந்து
பஞ்சவங்காட் டாறும்விட்டுத் தஞ்சமாங் கோட்டாறும்
எண்ணிய வடசேரியுந் தாழைக்குடி பூதப்பாண்டி
இறைச்சிகுளம் புத்தேரி ஈசாந்திமங் கலத்தூரும்
கண்ணிறைந்த அருமைநல்லூர் வீரவ நல்லூரும்
காத்தேன் மாத்தாண்ட நல்லூர் கூத்தேன் நிறைந்து கொண்டு
நண்ணியமணலும் விளாங்காடு மத்திக்கோடுஞ் சுத்தி
ஞாலம்புகழ் சுள்ளோடு கருக்கரை சாட்டுப்புதூர்
காடும்வால மாத்தாண்ட புரமும் அனந்தபுரமும்
கருதியே சிறைமடம் அந்திராபுரந் தெள்ளாந்தை
நாடிய துவரங்காடு நல்லதெரிசனங் கோப்பு
நகர்மாத்தாங் கரையூர் காரைமாங் குளத்தூரும்
பாடியசொல் லழகிய பாண்டி மேல்கரையும்
பனைவிளாகஞ் சீகப்பால் நல்லூரு திட்டிவிளையும்
மோடி திருப்பதிசாரஞ் செண்பகராமன் புதுவூர்
மும்மண் டலமும்புகழ் கொம்மண்டை கிட்டிணன்கோயில்
ஓடிய யிடலாக்குடி அருப்புக்கோட்டை ஆச்சிராமம்
உத்தசிவிந் திரந்தேரூர் உண்மைமருந்து மாமலை
மலைக்குக் கடலுக்குத் தெக்குவடக்கு மலையாளமும்

வாஞ்சையாய் முத்தைவிரைத்து நாஞ்சினாடு தான்கடந்து
விலைக்குள் பொருந்துமுத்து விலையில்லா முத்துடனே
மெய்ப்பாக வேயிரைத்து வெப்பாக வேநிறைத்து
நிலைக்கும் பெரியமுத்து நிலையாத சின்னமுத்து
நீதியான வள்ளிமுத்துச் சோதியான பிள்ளைமுத்து
துலைக்குத்துலை யடங்காத தூசிப்படை முன்னடக்கத்
துட்டரைக் கொட்டமடக்கி வட்டமாகத் திட்டம்பாத்தாள்
திட்டமாம் பழத்தூருங் கொவ்வைத் தாமரைக்குளம்
சீலநக ராம்புதுவூர் மேல்மருங்கூர் புதுவூர்
வட்டயீத்தாங் காட்டுப்புதூர் வளர்தாணு மாலையன்புதூர்
வரிசைநல்லூர் குறண்டி வண்டிக்காரன் புதூரும்
அட்டதிக்குந் தோவாளையூர்க் கிட்டிணனுந் தாமறிய
ஆரவாய் மொழிதனையும் பாராமல் முத்தைவிரைத்துக்
கொட்டமிட்டு முப்பந்தல் பெருங்குடி பெருங்கைநங்கை
கூறிடும் பணகுடியில் பேறுடன்முத் தம்மன்வந்தாள்.

விருத்தம்

வந்த முத்து வளர்சிவ காமியை
இந்து மேல்நடைஇராமலிங் கேசரைத்
துந்து மினல் சுருதி முழங்கவே
நந்து பேதபொன் னாடித் தொழுதனள்.

வேறு நடை

தொழுது பணகுடி நாட்டி லேமுத்தைச்
சொரிந்து தெருத்தோறும் பூசையுங் கொண்டாள்

பொழுது போகுமுன்னே தெக்கு வள்ளியூரில்
புள்ளி தோறுமுத்தை அள்ளி விரைத்தாள்
எழுதரிய வடிவேலர் தெய்வானை வள்ளியூர்
என்றுங் குமாரரை நின்றோதிக் கொண்டு
முழுதுமே வூரெங்கு முத்தை விரைத்து
மூன்றுயுகங் கொண்டாளை வந்துகண் டாளே
வந்துகண்ட தங்கையை மங்கள மெனவே
வரிசை பலதுஞ்செய்து போய்வாரு மென்றாள்
விந்துநாதம் பேரிச் சங்கு நாதமும்
வேதாளை பாதாள பூதங்க ளாடவே
கொந்துகொந் தாகவே முத்தை விரைத்து
கோடி கோடி கணங்கொண் டோடவே
தொந்த முடனே விசையநாரா யணத்தூரில்
துகைக்கு ளடங்காத முத்தை விரைத்தாள்
துடிகள் கொடியுடன் திடிமண் ணதிரவே
சூராதி வயிரவன் வீரே சுரன்வர
கடிகையாகச் செல்லுமுன் னிலங்காமணி அய்யனும்
கட்டான நெட்டுமான் கோட்டய்யன் தொழவே
வடிவுநில முடையாரு மங்காத்த அய்யனும்
மங்கையாம் அஞ்ஞூற்று நங்கையும் புகழவே
அடிமுடியி னடுவான பொருளாகி வளர்கின்ற
அழகிய மன்னாரைத் தொழுதுமுத் தம்மனும்
மன்னார் பதிவிட்டுத் தேரூரும் விட்டு
வளர்திருச் சித்தூரில் மகராசர் தனையும்

என்னாளும் வாழ்ந்திரு மென்றுமுத் தம்மனும்
இசைக்கி பேச்சிராக்கி சத்திபடை சூழவே
ஒன்னார் துதிக்கின்ற கண்ணநல் லூரிலே
உலகம் மனைக்கண்டு விலக்கினாள் முத்தை
நன்னா வலவர்க் குதவியிரு மென்றுசொல்லி
நட்டாத்தி நாயகியைக் கட்டாகக் கண்டு
கண்டுபின் னானைக் குளத்திலே சென்று
கணங்களும் பேய்களு மிணங்கிவந் தாட
வண்டமிழ்ப் புலவரென் றெண்ணாத பேர்களை
வாயிலே மண்ணும் மணலுஞ் சொரிந்தாள்
மீண்டு பேசிவருங் கண்ட கருணனும்
வருபில்லிக் காரனும் அதமசண் டாளனும்
எண்டிசை மெய்க்கின்ற ராசாக்கள் மங்கலம்
எங்கள்பெரு வேம்புடையார் வந்துபோற் றிடவே
போற்றுகின்ற மயிலாப் புதுவூர் தழைக்கவே
புண்டரீக முத்தம்மன் படைநடத் திடவே
நாற்றிசைப் படையுடன் சென்றுவிளங் கய்யனும்
நல்லமுத் தம்மனைத் தொழுதுநின் றாரே
மாற்றலர்கள் சிங்கந் தளபதி சமுத்திரம்
மகாசனம் வாழ்த்தவே வீரவ நங்கையுடன்
தோற்று நாகீசுரர் அழகியனாயகி யம்மனும்
துணையான பெருமாள் பெரும்பளஞ்சி யிலும்
துணையான பெரும்பளஞ்சி சிறு பளஞ்சி
தோகை யுலகம்மன் மகாதெய்வப் பெருமாள்
பெணையாரும் விழிதேருங் குருநாத னுடனே

பேய்காளி மாகாளி முத்தம்மன் வரவே
எனையான நவலோக நல்லூர தாகிய
ஏருபாடி யூரிலே மீறவே வந்தாள்
பனையாத வயிரவன் வீர பத்திரன்முதல்
பாதாள பூதம்வளர் சங்கிலிப் பூதமும்
சங்கீத மேளங்கள் எங்கு முழங்கவே
தளகத்தன் பெரிய சுவாமி முன்வரவே
எங்கும் விளங்குந் திருவழு தீசுரன்
இயல்பெரிய னாகியைத் தொழுதுமுத் தம்மனும்
கொங்கார முலைச்சியும் வடக்குவாச் செல்லியும்
குளத்தூ ரய்யன்முதல் மங்கல முடையாரும்
வங்கார மாகிய நிலப்பாறை அய்யனும்
வரகுண பாண்டியனும் வந்து போற்றிடவே
பாண்டியன் சேரன் சோழன்பணிந் தேற்றும்
மங்கையாஞ் சேரமுத்து நங்கை நாயகியும்
தூண்டியே முத்தைச் சொரிந்தே விரைத்துத்
தேராம லேபூசை ஆராய்ந்து கொண்டு
காண்டிப நுதலார்க ளாலத்தி யேந்தக்
கனகதப்பு சங்கு நாகசுர மூத
வேண்டிய மாறாத வரிசைதந் தருளிய
விறல் வணிகரை தெருவிலே வந்திருந் தாளே
விறல்வணிகர் வாழ்ந்திருக்க வேசொல்லி
வீரமாகிய பெரிய சுவாமியை யழைத்துத்
திறமாக வொருவீடு கட்டியவை யென்று

திருக்குறுங்கை யருகே யெழுந்தருளி னாளே
மறவாத வன்னியர் குரவர்படை சூழவே
வருவராவுத்தப் போற்றி வந்துசலா மெனவே
நறைவீசு சோலையில் அடுத்தாரைக் காத்தய்யன்
நல்லமுத் தம்மனைத் தொழுதுநின் றாரே
நின்றமுத் தம்மன் விடைகொடுத் தருளியே
நீடூழி காலமே வாழ்ந்திருமென் றாளே
நன்றெனப் படையுடன் தளவாய் புரம்விட்டு
நல்லதிரு மயிலாடு வரதரையுந் தொழுது
குன்றனைய முலைமுத்துத் திருவழுதீ சுரரும்
கூண்டதிரு மங்கையாழ்வார் கோவிலும் விட்டு
அன்று குறுங்குடி வல்லிசிங்கப் பெருமாள்
அருள் குறுங்கைப் பதித்தெரு வீதிநகர்வந்தாள்.

விருத்தம்

வீதி தோறுஞ் சதுமறை வேதியர்
சாதி வேதந் தழைக்குங் குறுங்கையில்
சோதி மாமணி தோணு முத்தம்மனும்
நீதி சேரும் நெடுந்தெரு வெய்தினாள்.

நடை

நெடுந்தெருத் தென்கரை பிரதிவினா யகன்முதல்
நேர மாய ஆகாச அய்யனும்
துடந்த படைஏ ழானைகொண் டய்யனும்வந்து
துங்கமுத் தம்மனைப் பணியவே
நடந்த படை யுடன்வர மயேந்திரகிரி திருமலை
நம்பி தனையுந் தொழுது வந்தனள்

அடந்த கணநாதரும் சூரன் கலியாரும்
அட்டமா சித்தருஞ் சூழவே
சூழவே மாவேலி முன்னோடி வளந்தமால்
துய்ய பரிபட்டப் பாறையும்
ஆழ மாகிய திருப்பாற்கடல் சித்ராநதி
அழகு சித்தர கூடங் கண்டனள்
காளவாய் முகிலெனுஞ் செங்கனிவாய் நம்பி
கமல தெர்ப்பக்குளங் கண்டனள்
தாளவித மாகவே பரதர்க களாடவே
சதிர்பே ராழிமுனி புகழவே
சதிரங்க சேனையோடு கொச்சினாப் புளிமூடும்
தனிமுதல் பிரகாரஞ் சுத்தியே
கதிர்பெறுஞ் சித்திரபொற் கோபுரங் கருட
கம்பமணி மண்டபங் கண்டனள்
முதிருகா ரண்டமாடு பொய்கை யுந்தான்
முனி வளரும் நனிசொக்க வாசலும்
மதுரமொழி யாழ்வார் துதிக்கின்ற நம்பியை
வைகுண்ட மேகொண்ட நம்பியை
நம்பிபொரு ளானநம்பி யழகிய நம்பி
நாதனே போதனே வேதனே
அம்புயத்தாள் நீண்டபொன் மேனி நம்பியேன்
அழகுமுத் தம்மனும் தொழுதனள்
ஒம்பிய மிணக்கியே ரெற்றினமுடி நம்பியும்
உண்மையாய் வரங்கொடுத் தருளினார்
தம்பியா மிளைய பெருமாள் போலவே யெனது

தங்கைநீ முத்தென் றனுப்பினார்
அனுப்பவே சந்தனந் திருமலை தீர்த்தமும்
அழகுசட கோபமுந் தரித்தனள்
மனுப்பாலர் தழைக்கவே முத்து நாயகியும்
வளர்சின்ன முத்துநா யகியுடன்
இனிப்பா ரெனப்பூதம் பல்லியந் துந்திமி
இடியென முழக்கி விளியெறிவே
விளக்கொளி வாள்நம்பி ராயனுக்கு முன்னும்
விருதென பிரமாதி பூசித்தனர்
முழக்கவே காளசின்னம் நவூரி பூரிகை
முகவீணை நாகசுரம் ஊதியே
பழக்கனி தேன்நதியில் மந்திகுதி பாயவே
பருவாளைக் கருவாளை தாவியே
அளக்க ருலகம் புகழ் நம்பியேழு ரெல்லாம்
அன்றளகு முத்தாகவே விரைத்தனள்
அழகான பூதகெணங் கேத்திர பாலனும்வந்து
அரியநல் முத்தைவந் தடிதொழ
வளமான கயிலாச நாதர் சுந்தரபாண்டி
மாய சுந்தராச்சி மாதங்கியும்
நளபாக மாகவே அமுதுகொண் டேகியே
நற்கிருடத்தே நாகலா தேவியும்
உளமாக அமுதிட உண்டுமுத் தம்மனும்
உயர்களந்தைப் பதியினில் சென்றனள்.

விருத்தம்

சென்ற முற்படை தென்களந் தைப்பபதி
நன்று நன்றென நல்லமுத் தம்மனும்
இன்று சத்திய வாசக ரீசரை
மன்றல் சேர்குழல் வந்து வணங்கினாள்.

வணங்கியே பொய்சொல்லாத மத்தன் நித்தனைப் பணிந்து
வள்ளலாவுடை யம்மனை உள்ளமாகவே பணிந்து
எணங்கிக் கருத்தாவா எண்கோடி அய்யன் தொழவே
என்றுபெருமாள் புதுத்தெரு வடநகருங் கடந்து
கணங்களுடனே வெத்தி வேலய்யனும் வந்து போத்த
கறுக்குங் சூழலிமுத்து கறுப்பியம்மனைக் கண்டாள்
பிணங்கிவரும் படைக்கும் பேர்வளர்முத் தம்மனுக்கும்
பிசகாம லேயமுது மசகாம லேகொடுத்தாள்
கொடுத்தபின் பூதகெணம் எடுத்துமதுக் குடிக்கக்
கூர்த்தலைக் கூளிகாளி குட்டிக் கரணங்கள் போட
தொடுத்த வயிரவனும் வீரபத்திர னிருளன்
தொண்டிசெய்யும் பூதத்துடன் குண்டனிஅம் பலந்தன்னில்
கடுத்த முகத்துடனே வெத்திவேலய்யனும் வந்து
கண்ட கருணன்பெரிய குண்டோதரனும் வரவே
அடுத்த யிலந்தை யடித்தெருவிலே நின்றுகொண்டு
அக்கினிமாடனும் வந்து மெய்க்கவே யடிதொழுது
அதமசண் டாளனுக்கும் அளவத்த பேய்தனக்கும்
அமுது மிகப்படைத்து அன்பாக விருந்தளித்தாள்
முக்கியமாய் நம்முடைய வாசல்பிர தானியாக

முகனைபெற யிருவென்று முத்தம னருளிச் செய்தாள்
செக்கணியிட் டாடும்பெண்கள் தெருக்கள் தெருக்கள்தொறும்
சிக்கெனப்பூ தங்கள்சென்று உக்கிரமுத் தைவிரைக்க
கர்க்கிஷத்தொழில் கள்கத்த கன்னாளர் தெருத்தனிலும்
கன்னல்சென்னல் முத்துக்களை உன்னியே விரைத்துக் கொண்டு
ஒக்கவே அடங்கல்முத்தைச் சிக்கெனவே விரைக்கலுற்றாள்
உலகில் பெரியமுத்து விலகிக் கொள்ளும் முன்னேசென்று
கன்னியர் கொண்டாடும் முத்துநாச்சியார் சன்னதிக்கேத்த
காரிகையார் தான்வளருந் தேவதாசியள் தெருவில்
வன்னியர் குறப்படையும் மாடனிரு ளப்பன்துர்க்கை
வளைந்து கனலுருதி மாரிபோல் சொரிந்துகொல்ல
அன்னைய ரிடைத்தெருவும் சாலியர்கைக் கோளர்தெரு
அட்டதிக்குங் கொண்டபல பட்டாடை தெருக்கள்தொறும்
மின்னி யிடித்துமழை மேகங்கள் சொரிந்தாப் போலே
விரைத்தாள் சொரிமுத்தாக மீறிய களக்காட்டூரை
மீறு பத்தையூரில் குலசேகர முடையார்தம்மை
மெச்ச திருவடிநிலை பச்சைநதி யாறுங்கண்டாள்
நாறு மலர்க்குழல் குலசேகர நங்கைதனையும்
நல்லகரும் பாண்டியம்மனை மெல்லவே புகழ்ந்துகொண்டு
சோறுதருங் குளத்தூருந் துய்யதேவ நல்லூரும்
சோமலிங்கத்தைப் பணிந்து தோகைகருங் குழல்முத்து
கருவைப் பதியில்நல்ல முதலியார் தனைத்தொழுது
கரையடிப் பிள்ளையாரைக் கண்டுமகிழ்ந்தே புகழ்ந்து
ஒருவப் பதியுங்கீழ வூரு நடுவுக் குறுச்சி

ஒட்டிய மீழத்தக் கூழைச்செட்டி கருவேலங்குளம்
தருவைப்பதி தைர்வியநல்லூர் தென்திருத் தூரும்
தக்கபோகத்துச் செல்லி ஒக்கவந்து கண்டுகொண்டாள்
கொண்டல்சேரியும் படலார்குளமும் நல்லொன்ப தூரைக்
குப்பகுப்ப மாகமுத்தை ஒப்பமாய் விரைத்துக்கொண்டு
தண்டல் காரரும்படையும் தண்டிகைக் கூடாரங்குடை
சாமரை கட்டியஞ்சுருள் தக்ககாளாஞ்சி களேந்த
செண்டலங்கா ரக்கடம்பை கயிலாச னாதரையும்
தேனி பொன்மாலையம்மனுஞ் செல்விசுந்தர பாண்டியம்மன்
மண்டல மேழும்புகழுஞ் சூரைமங்கல முடையார்
மகிழ்ந்துபுகழ்ந்து முத்து வானமா மலையில்வந்தாள்.

கலிவிருத்தம்

வான வர்மலை வல்லவ மாமலை
ஞான மாமலை நல்ல தவமலை
கான மாமலை கல்விசேர் மாமலை
தேன மாமலை செல்வியுங் கண்டனள்.

நடை

செல்வந் தழைத்திடுந்தோத் தாத்திரி தீர்த்தந்
தெர்ப்பக் குளங் கண்டனள் – நல்ல
கல்வி தழைத்திடும் நாரதரோ டீசர்
கண்டதோர் கிட்டி ணனும்
கிட்டிணப் பிள்ளை யாராட்டு மண்டபங்

கீழத் திரு மதிலாம் – புகழ்
மட்டுப் படாத்திரு வாய்மொழி கத்த
வயிணவ மறை யோராம்
மறையோர் தொழுது வணங்கு
மடபதி மங்கை முனிவோராம்
குறையாய் நெடுமணிக் கோபுர வாசல்
கொடி மரத்தின் சிறப்பாம்
சிறப்பாய் மகிழவனந் தென்னமரஞ் சோலை
தெக்குத் திரு மதிலாம்
உரைப்பான மேலத் திருமதில்வாச
லுயர்ந்த வட சபையாம்
சபையான திற்பிருகு மார்க்கண்ட ருஞ்சிவ
சந்திர சூரியராம்
உபையான பொன்னின் கவரிகள் வீசிடு
மொன்றொடி மாத ரென்றார்
மாது மலர்மகள் வந்து புலிமகள்
வளர் சேனை காவலனும் – நல்ல
ஆதி கருடன் முதப்பதியென்
றவதார சத்தி யென்னும்
அவதார சத்திவளர் வான மாமலை
ஆதி நாரா யணனை
நவதார ணம்பெறு சீவர மங்கை
நகர்த் தெய்வ நாயகனை
தெய்வப் படைக ளிருபிறஞ் சூழவே

சீர்பெத்த முத்தம் மனும் – திகழ்
கையைக் குவித்துத் தொழுது பின்னே – நல்ல
காச்சி கொடுத்தனளாம்
கொடுத்தாரே தீர்த்தந் திருமாலையுஞ் சட
கோபமுந் தரித்தாரே
நடுத்தா னருளிய நாச்சியா ரம்மனும்
நல்ல வரங் கொடுத்தார்
வரமானது யிருகையார வாங்கிவர
முத்துத் தாய்தனக்கு
அரனா ரெனுந்திரு நாகீசர் பங்கில்
அருள் சிவ காமியம்மன்
அம்மன் தனக்குத் திருநீறு சந்தன
மான வரங் கொடுத்தாள்
செம்மைபெற நல்லமுத் தம்மன் வாங்கித்
திடிமண் ணடிக்கச் சொன்னாள்.

விருத்தம்

சொன்ன போதுநல் சொர்ண வயிரவன்
சின்ன முத்துபொற் சேனையு மானையும்
வண்ண முத்தை வரமங்கை நாடெல்லாம்
கன்னல் முத்தைக் கனக்க விரைத்தனள்.

வேறு நடை

கனக தப்புக் கிடுபிடி பேரிகை
கைமணி மும்முரசு முழங்கவே

தினகரன் திசை யெட்டும் நடுங்கவே
சேடன் மாமுடி கொண்டோடி விரைக்கவே
சனக ராயன் படைபோலே பூதங்கள்
தண்டிகை முத்தை வண்டிமே லேத்திவர
பனக மீதுறை நாக மணிமுத்து
பச்சை நீலம் பதித்த கனல்முத்து
பதிக்கவே கண்டு கற்பகப் பிள்ளையார்
பார முத்தை வணங்கி யிணங்கியே
எதுக்கவே வந்து பூலாவுடை அய்யன்
எங்கள் முத்துக் கெதிர்ப விருசாய்வர
விதிக்க வந்த மறையோர் தெருவிலும்
விறல் வணிகர் வெள்ளாளர் தெருவிலும்
அதிக்க மான கண்ணாளர் தெருவிலும்
அக்க சாலையும் பள்ளியும் கண்டனள்
அக்க சாலை வினாயகன் போற்றவே
அழகு முத்தம்மன் சென்று வளைந்தனள்
பக்க பூதம் வேதாளை வயிரவன்
பத்திர காளி யக்கினி மாடனும்
செக்கர் வானத் திடிபோல் வீரேசுரன்
செண்பகா தேவி வண்டி மலையனும்
ஒக்கவே சென்று யிசக்கி யிருளப்பன்
ஒருமுக மாகச் சென்று வளைந்ததே
சென்ற தீமுத்து வேய்முத்துக் காய்முத்து
சிறுமணல் முத்து கோலாகல முத்து

கொன்று கொன்று பிணங்கள் குவிக்கவே
கோடி முத்தைக் கொண்டோடி விரைக்கவே
மன்று தன்னி லிரங்காத நெஞ்சரை
மாய முத்தை விரைத்து மண் ணாக்கினாள்
அன்று மின்று மிரங்குவார் தங்களை
ஆத ரித்துப் பெரியவ ராக்கினாள்
நோக்கு நல்லகரர் மழுச்சேட் டம்மனும்
நோக்க நில்லாத நாகலோக நங்கையும்
ஆர்க்க மான மறுகா லுடையாரும்
அழகு முத்தை வணங்கித் தொழுதனர்
கார்க்க வந்த மறுகால்வளர் நாட்டையுங்
கண்டு முப்பத்தி ரெண்டு புன்னைக் குளமும்
தெற்குச் செண்பகராம் நல்லூர் மட்டுஞ்
சிறந்த முத்தை விரைத்துத் திரும்பினாள்
திரும்பினாள் பரிவா ரங்கள் சூழவே
சின்ன முத்து வேதாளையில் முன்வர
கரும்பனைய மொழி முத்துத்தாய் நல்ல
கனக தண்டிகை தனிலெழுந் தருளவே
விரும்பு பொற்குடை வெள்ளிக் குடைகளும்
விருந்து டோலக்கன் கொடிகள் நெருங்கவே
கரும்பு பாடநல் தோகைய ராடவே
சுத்த மத்தளந் துந்திமி யார்ப்பவே
ஆர பார வெடிக ளதிரவே
ஆனை சேனை குதிரை நெருங்கவே

சேர வொட்டனை கோலால வண்டியும்
    செப்புக் கொப்பரை கூடாரங் கைகுடை
பார மங்கைப் பதியைக் கடந்துதான்
    பங்கய முத்துச் சங்கீதத் தோடேதான்
வார மாகிய பட்ட புரந்தன்னில்
    வரிசை நல்ல முத்தம்மனும் வந்தனள்

விருத்தம்

வரிசை முத்தம்மன் வந்தபின் மன்னர்தாம்
தெரி சித்திர திருக்கோவில் சிறக்கவே
குருசிப் பொன்னின் கூடாரத் திருத்தியே
விரிசொல் மாந்தராம் வேந்தரை வாவென்றாள்.

நடை

வேந்தனே மாந்தையில் விகுவனே சகலகுரு
    மேக வாகனப் பிற வழகனே
சேந்தவான் பட்டியல் கண்டஞ்சி கதியுடன்
    திட மாக அடவுடன் செய்தனர்
பாந்தமுடன் தளவிசைக் கல்லுடன் பாவியே
    பத்தி யிட்டுத் தூண்கள் நாட்டினார்
சாந்தபுகழ் போதி புத்திரரும் ஓடியே
    சதி ருடன் சிகரமு முகித்தனர்
முகித்தகோவில் கிரகப்பிர வேசஞ் செய்து
    முறையுடன் மறை யோரும் வந்தனர்
சகித்து வாழும் சின்னமுத் தம்மனும்

சரி பக்க மாக யிருந்தருளினார்
கவித்துதியள் செய்துடன் தேவதைக ளொக்கவே
கன்னல் முத்தம்மனைச் சூழ்ந்திருந்தனர்
இருந்தன்பு கொட்டப் பட்டபுரம் நாங்கெல்லையில்
இசை வான மறையோரும் வாழியே
வருந்தாத நாட்டாண்மைக் கரையாளர் வாழியே
பொருந்திய பட்டபுரத் தம்மன்கதை படித்தவரும்
புக ழாக அனுதினமும் வாழியே
திருந்த நிறைப்பாடலைக் கேட்டோரும் வாழியே
தேச மேழு லோகமும் வாழியே.

விருத்தம்

பட்டபுரந் தனைக்கவரும் பத்தினி முத்தாரம்ம னழகுபாடல்
திட்டமுறு வரலாற்றுக் கதைமுழுதுஞ் சந்துகவி சிறக்கச் செய்தான்
கொட்டமிடு மருவலர்வே ளணைஞ்சபெரு மாள்புலவன் குமாரனான
இட்டமருள் வேள்ளகான மங்கை யிருளணைஞ்ச பெருமாள் சொல்புலவன் வாழ்கவே

குரு பாதமே கெதி.

ருசயஅளூ கார்த்திகை லு சா உ

மங்கள வாரமும் அமர பச்சமும் புனர்
பூச நட்செத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்
தில் வள்ளியூரிலிருக்கும் முத்துக் கறுப்பப்
புலவர் மகன் அருணாசலப்புலவன் எழுதின
முத்தாரம்மன் கதை முற்றிற்று.
குமரன் துணை.

VI. *பின்னிணைப்புக்கள்*

தெய்வக் கதைப்பாடல்கள் – அகரவரிசை

1. அண்ணன்மார் சுவாமி கதை
2. அழகன் பெருமாள் கதை*
3. அன்னரு பொன்னரு கதை*
4. ஆத்திமாடன் கதை
5. இசக்கியம்மன் கதை
6. இசக்கி கதை
7. உச்சினி மாகாளி அம்மன் கதை
8. கட்டையேறும் பெருமாள் கதை*
9. கபாலக்காரன் கதை
10. கருங்கிடாக்காரன் கதை
11. கன்னிமார் கதை*
12. காத்தவராயன் கதைப்பாடல்
13. கால கன்னியம்மன் கதை*
14. கால சாமி கதை*
15. குருக்களாஞ்சி கதை
16. குருசாமி கதை
17. குலைவாழை இசக்கி*
18. கௌதலமாடன் கதை
19. சங்கிலிப் பூதத்தார் கதை*
20. சந்தி மாடன் கதை*
21. சாஸ்தா கதை
22. சின்னத்தம்பி கதை
23. சுடலைமாடன் கதை*
25. செங்கிடாக்காரன் கதை*
26. சேத்திரபாலன் கதை*
27. சேர்வைக்காரன் கதை
28. தடிவீரன் கதை*
29. தோட்டுக்காரி அம்மன் கதை
30. நீலி கதை
31. பச்சையம்மாள் கதை*
32. பத்திரகாளியம்மன் கதை*
33. பலவேசக்காரன் கதை
34. பிச்சை காலன் கதை *
35. பூலங் கொண்டாள் கதை
36. பெருமாள் சாமி கதை*
37. பெல மாடன் கதை *
38. பொன்னிறத்தாள் கதை
39. மதுரை வீர சுவாமி கதை
40. மம்பட்டியான் கதை
41. மன்னன் கருங்காளி கதை*
42. மாசான சாமி கதை*
43. மாரியம்மன் கதை*
44. மாலையம்மை கதை *
45. முத்தாரம்மன் கதை
46. முத்துப்பட்டன் கதை*
47. முனியம்மாள் கதை *

49. வண்டி மலைச்சி கதை *

50. வயிரவநாதன் கதை*

51. வல்குன்னி அம்மன் கதை *

52. வல்லரக்கன் கதை

53. வல்லவர் கதை*

54. வன்னியடி மறவன் கதை

55. வன்னிராசன் கதை

56. வில் கதை அம்மன் கதை*

57. வீணாதி வீணன் கதை

58. வெட்டும் பெருமாள் கதை *

59. வெள்ளைக்காரச் சாமி கதை

60. ஜகதீஸ்வர அம்மன் கதை*

* – இக்குறியிடப்பட்டவை இதுவரையும் அச்சேறப் பெறாதவை.

முத்தாரம்மன் தொடர்பான பிற சுவடிகள் – அகரவரிசை

1.	அம்மன் அகவல் (எழுமாத்தூர்).	
2.	அம்மன் அழைப்பு ”	
3.	அம்மன் துதி (பாண்டிச்சேரி)	– 4171
4.	ஆர்க்காவடி மகமாரியம்மன் பேரில் பதிகம் (தொ.பொ.ஆ).	
5.	அரிச்சந்திரன் கும்மி கோட்டை மாரியம்மன் விருத்தம் (ஈரோடு)	
6.	ஊற்றுக்காட்டு மாரியம்மை பதிகம் (செ.கீ.சு.)	– D1751
7.	கண்ணனூர் மாரியம்மை துதி (செ.கீ.சு.)	– D 1748
8.	காரைப்பட்டு முத்தாலம்மை ஊஞ்சல் (செ.கீ.சு.)	– R 2998
9.	காரைநகர் முத்தாரம்மை ஊஞ்சல் ”	– R 5412
10.	” முத்தாரம்மை எச்சரிக்கை ”	– R 5413
11.	கீரம்பர் அம்மன் பாடல் (எழுமாத்தூர்).	
12.	குமாரபுரி மாரியம்மன் எச்சரிக்கை (செ.கீ.சு.)	– R 2997
13.	” ” ” ”	– 5701
14.	குமாரபுரி முத்தாலம்மன் ஊஞ்சல் ”	– R 2996
15.	” ” ” ”	– R 5700
16.	” ” பதிகம் ”	– R 2995
17.	” ” ” ”	– R 5699
18.	தாடிக்கொம்பு கிராமம் அகரத்து முத்தாலம்மன் வரலாறு (செ.கீ.சு)	– R 3071
19.	தாடிக்கொம்பு கிராமம் அகரத்து முத்தாலம்மன் வரலாறு (செ.கீ.சு)	– R 8271
20.	மாரியம்மன் ஊஞ்சல் ”	– R 5966
21.	” ” ”	– D 1876
22.	” ” ”	– R 6614

23.	மாரியம்மன் எச்சரிக்கை (செ. கீ.சு).	– R 4843
24.	மாரியம்மன் எச்சரிக்கை (செ.கீ.சு.)	– 5769.
25.	மாரியம்மன் ஐயனார் பேரில் பாட்டு (கே.ப.சு.)	– 8874–b
26.	மாரியம்மன் கலிவெண்பா (செ.கீ.சு.)	– R 2182
27.	" " "	– R 6165
28.	" தாலாட்டு "	– R 6574
29.	" துதி "	– D 1748
30.	" " "	– D 1749
31.	" " "	– R 6615
32.	" தோத்திரம் (பாரீஸ்)	– 341 – C
33.	" பதிகம் (செ.கீ.சு)	– R 2618
34.	" " "	– R 4843
35.	" பதிமுகம் எச்சரிக்கையும் (செ.கீ.சு).	– R 5967
36.	" பேரில் விருத்தம் "	– R 7433
37.	" பேரிலருச்சனை (பாரீஸ்)	– 341 – d
38.	" பேரிலூஞ்சல் "	– 342 – b
39.	" விருத்தம் (செ.கீ.சு.)	– R 2828
40.	மாரியம்மனடைக்கலப்பாட்டு (பாரீஸ்)	– 341 – a
41.	மாரியம்மை ஊஞ்சல் (செ.கீ.சு.)	– D 2162
42.	" " "	– R 4842
43.	" கலிவெண்பா "	– D 306
44.	" பதம் "	– D 1750
45.	" பதிகம் "	– R 6592
46.	" தாலாட்டு "	– R 171

47. மாரியம்மன் தாலாட்டு (செ.கீ.சு) – D 1747

48. " " " – R 6593

49. " வர்ணிப்பு " – R 86

50. " " " – D 2164

(கண்ணனூர்) "

51. மாரியம்மை வர்ணிப்பு (கண்ணனூர்) (செ.கீ.சு.) – D 1878

52. " " விருத்தம் " – D 2632

53. " " " " – R 2924

54. " " " " – R 6594

55. " " " " – R 6664

56. முத்துக்கண்ணனூர் மாரியம்மைபதம் " – D 1750

57. முத்து மாரியம்மன் துதி " – R 4364

58. முத்து மாரியம்மன் வர்ணிப்பு (பாரீஸ்) – 342 – a

59. யாழைப்பழித்த அம்மன் திருவிருத்தம் முதலிய நூல்கள் (பாண்டிச்சேரி) – 10854

முத்தாரம்மன் கதை

அருஞ்சொற்பொருள் அகரவரிசை

(எண் – வரி எண்)

அக்கு பாரிசா – உறக்குப்பாதுஷா. குஜராத்தினை ஆண்ட மொகலாய அரசன் (கி.பி. 1530 – 1556 (946.)

அட்டமாநாகம் – செங்கண் எனும் கருநாகன்,பத்மன், மகாபத்மன், வாசுகி, குளிகன், அனந்தன், கார்க்கோடகன், தக்ஷன் என்பன எட்டு நாகங்களாகும். ஈசனுக்கு அணிகலன்–களாக அமைவன (641).

அளகாபுரி – குபேர நகரம் (585).

அறப்பு – அரைப்பு, எண்ணை ஸ்நானத்தில் தேய்த்துக் கொள்ளும் சீயக்காய் முதலியன (313).

ஆலிப்பது – ஆடுவது (59).

இடக்கை – பெரு முரசு வகை (Large double drum). அல்லது இடக்கையாற் கொட்டும் ஒரு தோற்கருவி (838).

இடைக்காடர் – தொண்டை மண்டல இடையன்திட்டு இடையர் என்றும், மதுரைக்குக் கிழக்கிலுள்ள இடைக்காட்டில் பிறந்தவர் என்றும் கூறுவர். சித்தர். போகரின் மாணாக்கர் (724).

இடைச்சி – இடையை உடையவள் (1532)

உடல – மாறுபட (840).

உண்ணி – சின்னவர் (834).

உத்தளமாய்	–	விபூதியைக் குழைக்காது பூசல் (345).
உதங்க முனி	–	பிருகு வம்சத்தவர். பயிலவ முனிக்குச் சீடர். சனமேசெயனைச் சர்ப்ப யாகஞ் செய்யத் தூண்டியவர்.
உபைய	–	இரண்டு (1027).
உரோம மகாமுனி	–	புகண்ட மாமுனிகுமாரர். உடம்பெல்லாம் மிகுதியான உரோமத்தை உடைமையின் இப்பெயர் பெற்றார் (695).
உறுமி	–	ஒருவகைத் தோற்கருவி. குறுந்தடியால் ஒலியுண்டாகுமாறு தேய்த்தடிப்பர் (842).
ஏமகூடம்	–	அஷ்ட குலாசலங்களிலொன்று. மேருவின் தெற்குஇமயத்திற்கப்பால் 3000 யோசனையிலுள்ள பருவதம், விஞ்ஞையர் வாழிடம் (582).
கண்ட கர்ணன்	–	கயிலாய வாயிற் காப்போன் (1233).
கமல தெர்ப்பக்குளம்	–	தெர்ப்பைப் புற்கள் நிறைந்துள்ளதால் தெப்பக்குளம் எனப் பேச்சு வழக்கில் அழைக்கப்பட்டிருக்கலாம் ? (1781).
கரடி	–	கரடிகை, கரடி கத்தினாற்போலும் ஓசையுடைய பறை வகை (834).
கலைக்கோட்டு மாமுனி	–	அரணிபுத்ரர் என்றும் விபாண்டக புத்ரர் என்றும் கூறுவர். மான் வயிற்றில் பிறந்தவர். இவருக்கு தலையிலொரு கொம்புண்டு. தசரதனுக்குப் புத்திர காமேஷ்டி யாகம் செய்வித்தவர் (700).
கற்றரான	–	கர்த்தரான (1317).
கன்னாளர்	–	கம்மாளர் (Kammala caste).
காசிமாவிரிஷி	–	காசிபர். இவர் மரீசி அல்லது அரிசி ரிஷியின் குமரர். தாய் களை. தக்ஷப் பிரசாபதியின் குமரிகள் பதின்மூவரை

		மணந்து, அவருள் கத்துரு என்ற பெண்ணிடம் நாகரைப் பெற்றார்.
காளம்	–	எக்காளம். அதாவது, ஊதுகொம்பு (1808).
காளாஞ்சி	–	தாம்பலந் துப்புங் கலம் (67).
கிடுபிடி	–	வட்ட வடிவமான ஒரு வகை வாத்தியம் (A tambourine of oval form) (851).
கிம்புருஷர்	–	பிரமன் பிரதி பிம்பத்திலுதித்தவர். மனுஷ முகம், குதிரையுருப் பெற்ற தேவ வகுப்பினர் (731).
குடமுழா	–	முழவு வாத்திய வகை. (Large hemispherical loud - sounding drum) (840).
கூண்ட	–	கூடிய (1615).
கெந்தமாதனமலை	–	வீரபாகு தேவர் வீர மயேந்திரபுரியைத் தாவ நின்ற மலை. அஷ்ட குலாசலங்களி–லொன்று (571).
கெவுத மாமுனி	–	இவரது ஆச்சிரமத்துக்கு விநாயகர் ஐயன் என்பவனைப் பசுவுருவமாக ஏவி உயிர்விடச் செய்ய, கோக்கொலை நீங்க இவர் கங்கையில் நீராட,இதனால் கங்கை கௌதமி எனப் பெயர் பெற்றாள் (704).
கேத்திரபாலன்	–	சேத்திரபாலன் – வயிரவன் (1814).
கொட்டம்	–	முழக்கம் (519).
கொட்டியம்	–	பொதி மாட்டுத்திரள் (518)
கொம்மை	–	சிறந்த (1490).
சங்கமசாதி	–	நாலு சாதியிலும் அடங்காத கீழ்ச்சாதி (1254).
சங்கை	–	அளவிட முடியாத (1386).

சடகோபம்	– திருமாலின் திருவடிநிலை. தரிசிப்ப–வர்களது முடியில் வைத்து அனுக்கிரகிப்பது (1915–1916).
சண்டன்	– சிவ கணத்தவருளொருவன் (739).
சமதக்கினி	– பிருகு முனிவரின் புதல்வர். இரேணு–கையை மணந்தவர். பரசுராமரின் தந்தை.
சரவை	– மேல்வரிச் சட்டம் (829)
சல்லரி	– பறைப் பொது என்றும் திமிலைப் பறை என்றும் அழைக்கப்பெறும் (843).
சல்லிகை	– பெரும் பறைவகை (A kind of large drum) (839).
சாகை	– கிளை (333).
சாலியர்	– நெசவுச் சாதி வகையார் (1856).
சித்திரசபை	– திருக் குற்றால நாதர் கோயிலிலுள்ளது (1327).
சிவிந்திரம்	– சுசீந்திரம் (1655).
சுக்கிரன்	– சிவ மூர்த்தியின் வழித் தோன்றியவர். அதிக கிரணமும், வெண்ணிறமும் பெற்றவர் (712).
சுத்த மத்தளம்	– மிருதங்க வகையுள் ஒன்று (1978).
செக்கணி	– கூத்துவகை (1846).
செண்டை	– ஒருவகைக் கொட்டு வாத்தியம் (A kind of large drum) (855).
செவந்தகண் நாதர்	– கோச்செங்கட் சோழர் (714).
சேனை	– செவ்வெண்ணை (234).
டம்மாணம்	– டம்மாரம். டமருகம் என்றும் உடுக்கை–யென்றும் கூறப்படும் சிறுபறை (1037).

தக்கை	–	அகப்புற முழவு மூன்றனுள் ஒன்றாகிய ஒருவகைப்பறை (840).
தடாரி	–	உடுக்கை (Drum shaped like an hour-glass) (842)
தண்ணடை	–	உடுக்கை வகை (857).
தம்பூரு	–	தம்பூர். பறை வகை
தவசு மகாமுனி	–	தவசு பன்னிரண்டாமன் வந்தரத்து ரிஷி (702)
தாம்பு	–	அணையில் நீர் செல்லுதற்கென விட்ட வழி (404)
தாருகர்வனம்	–	முனிவர், முனிபத்தினிகள் செருக்கடங்கி இறுதியில் சிவபூசை செய்து பேறு பெற்ற வனம் (341).
திமிலை	–	ஒருவகைப் பறை (839).
திரிசூல பீடம்	–	சக்தி பீடங்களில் ஒன்று.
தும்புரி	–	தும்புரு. ஒருவகை யாழ் (843).
துருசறுத்து	–	மாசறுத்து (1442).
துருவாசன்	–	அத்திரி ரிஷிக்கு அநுசூயையிடம் உதித்தவர் (697).
தென்னடந்த	–	அழகு செறிந்த (1476)
தோத்தாத்திரி	–	வானாமாமலை (1883).
நவுரி	–	நமரி. நீண்ட எக்காள வகை (849).
நனிய	–	நனி. நன்மை (264)
நாகசுரம்	–	நாதசுரம் எனப்படும் துளைக்கருவி வகை (264).
நாகப்பறை	–	நாவாய்ப்பறை? நெய்தல் நிலப்பறை (840)

நாதம்	–	சிவபிரானது நவபேத மூர்த்தங்களுள் ஒன்று (365).
நாரதன்		பிரமன் புத்திரர். இவர் கையிலிருப்பது மகரயாழ். தக்ஷனால் நிலையில்லாது திரியச் சபிக்கப் பெற்றவர் (430).
நாழிகைப் பறை		ஒருவகைத் தோற்கருவி (A kind of hour drum) (845).
நிசாளம்		ஒருகட் பறை (1277).
நிறப்பட்டாடை		சிவந்த பட்டாடை (1553).
பசுவாரி		கோவர்த்தனகிரி (893).
பதஞ்சலி		சிவனின் நடன தரிசனங் காண அத்திரியின் தேவியாய அநுசூயையிடம் பிறந்தவர். ஆதிசேஷன் அவதாரம் (726).
பரசமய சிங்கம்		பரசமயகோளரி. இது திருஞானசம்பந்தரின் பட்டப் பெயராகும் (103).
பராசரமுனி		வியாசர் மகன் (869).
பறை		முரசு (844)
பார்ப்பயன்றாள்		பார்ப்பையனுடைய திருவடிகள் (82)
பாரிசா		பாதுஷா. அதாவது பகதூர்ஷா (1020).
பானுகம்பன்		சிவ கணத்திலொருவன் (434).
பிறங்குருனாதர்		பிருங்கி? முக்கண், வெண்சிகை உடைய, மாம்சமல்லாத தேகத்தவர். நிருத்தனம் செய்யும் தேவதரிசனப் பிரியர் (425).
புலத்தியர்		பிரமனின் காதில் பிறந்தவர். புலம் என்பது வேதத்தில் தவத்தை அறிவிக்கும். இவர் தவத்தால் புகழுற்றோரதலின் இப்பெயர் பெற்றார் (710).
புள்ளி		ஆள் (1679).

பூரிகை	–	பேரிகை (849).
பெணை		பிணை. பெண் மான் (1726).
பேரிகை		பேரி. பறை (838).
போதி		போதிகை(1997).
மகாமேரு		மேருச் சக்கரம். தேவி உபாசகர்கள் இதனைப் பூசைச் சாதனமாக வைத்து வழிபடுவர் (1013).
மஞ்சணெய்		மஞ்சள் சேர்த்து வடித்த மருந்தெண்ணை (221).
மஞ்சனம்		நீராட்டம் (224).
மஞ்சு		மேகம் (330).
மத்தன்		பித்தன் (1826).
மத்தாளம்		மத்தளம். பறை வகை (838).
மழவன்		மழ நாட்டான் (98).
மனுப்பாலர்		அரசர்கள் (1802).
மாதங்கி		மதங்கன் தன் தவத்தால் சக்தியைப் பெண்ணாகப் பெற்று மாதங்கியெனப் பேரிட்டு வளர்த்தான் (1817).
மாந்தை		சேரர் இராஜதானி. நார்முடிச்சேரல் இதிலிருந்து ஆட்சி செய்தான் (96).
மாரவேள்		மன்மதன் போன்றவன் (1508).
மாவை		மால்வா. உஜ்ஜியினியின் முக்கிய பட்டணம் (1043).
மானோம்பு		மகர் நோம்பு (1210).
முகனை		முனைப்பு (1845).
முந்திரி		1/320 என்ற குறியுள்ள பின்னவெண் (62).

மூன்றுகனல்	– கார்உறபத்யம், தக்ஷிணாக்கினி, ஆகவனீயம் அல்லது அரிணித்தீ, மின்னின்தீ, வடவைத்தீ என்றும் கூறப்பெறும் மூலாக்கினியாகும்.
மேருமலை	சத்த தீவுகளின் மத்தியிலுள்ளதும் கிரகங்கள்சுற்றி வருவதுமாகக் கருதப்படும் பொன்மலை (595).
யோக வேட்டி	மார்பில் இரு குறுக்காய் இடது தோள் மேலிருந்து குறுக்காக அணியும் மேலாடை (807)
ரசதம்	வெள்ளி (650)
ரோசினை	யோசனை – நான்கு குரோசங்கொண்ட நீட்டலளவு (668).
வாணன்	பரியின் குமாரன் (1533)
விசேக பருபதம்	வைசாக பருபதம் (577)
வித்துருவு	வித்துருமம் அதாவது பவளம் (318).
வியாக்கிரபாதமுனி	மத்தியந்தன முனிவர் புத்திரர். சிவ பூசைக்குப் பழுதில்லா மலரெடுக்க நகங்களிற் கண்களும், மரம் வழுக்காமலேறப் புலிக்காலும், கையும் பெற்றவர் (725).
வியாசன்	பராசரருக்குச் சத்தியவதியிடம் பிறந்து வேதத்தை வகுத்துப் புராணங்களை அருளியவர், பாரதம், பிரமசூத்திரம் கூறியவர் (701).

முத்தாரம்மன் கதையில் இடம்பெற்றுள்ள இசைக் கருவிகளும், விளக்கமும் – அகரவரிசைப் பட்டியல்

(எண் – வரி எண்)

1. இடக்கை (838) (பெரு, முரசு வகை).
2. உறுமி (842) (குறுந்தடியால் தேய்த்தடிக்கும் தோற்கருவி).
3. எக்காளம் (848), காளம் (1290, 1808), காளை (849) (ஓர் ஊது சின்னம் – A kind of Cornet).
4. கயிலாச வீணை (856) (கயிலை மலையினடியில் சிக்கித் தவித்த இராவணன் வாசித்த வீணை இப்பெயராலேயே பின்னர் அழைக்கப் பட்டிருக்கலாம்) *.
5. கரடி (839) (கரடி கத்தினாற்போலும் ஓசையுடைய பறை வகை).
6. கனகதப்பு (853, 1745, 1931) (ஒருவகைப் பறை small tom-tom)
7. கிடுபிடு (851, 853, 1037, 1931) (வட்ட வடிவமான ஒரு வகை வாத்தியம் – A tambourine of oval form).
8. கின்னரி 849, 857 (யாழ்வகை – A musical instrument smaller than the Vinai).
9. குழல் (840) (இசைக் குழல் Flute-pipe)
10. கைமணி (851, 1290, 1932) (பூசையில் வழங்கும் சிறுமணி)
11. கொட்டு வாத்தியம் (1263, 1520) (Drum)
12. கொம்பு (850, 1467, 1521) (ஊது கொம்பு – Horn, pipe, cornet).
13. சங்கு (394, 847, 1467, 1521, 1686, 1745) இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம் என்ற நால்வகை நீர்வாழ் சங்கு).
14. சந்திர வளையம் (846) (தோற் கருவி வகை – A kind of drum).
15. சல்லரி (843) (பறைப்பொது, திமிலைப்பறை – Drum).
16. சல்லிகை (839) (பெரும் பறை வகை).
17. சாஸ்திர வீணை (857) (ஆயிரம் நரம்புகளுடைய சகஸ்ரவீணை. சாஸ்திர வீணை எனப் பேச்சு வழக்கில் வழங்கப்பட்டிருக்கலாம்)*

18. சுத்த மத்தளம் (1978) (மிருதங்க வகை, A superior hand-drum).
19. செண்டை (854) (ஒருவகைக் கொட்டு வாத்தியம் A kind of large drum)
20. டம்மாணம் (1037) (டம்மாரம், டமருகம் என்றும், உடுக்கை என்றும் கூறப்பெறும் சிறுபறை).
21. டோலக் (1976) (சிறு, தோல் வாத்திய வகை A small drum)
22. தக்கை (840) (அகப்புற முழவு மூன்றனுள் ஒன்றாகிய ஒரு வகைப் பறை).
23. தடாரி (842) (உடுக்கை Drum shaped like an hour-glass)
24. தண்ணடை (857) (உடுக்கை வகை).
25. தம்பூரு (857) (தம்பூர், பறை வகை. A kind of drum)
26. தவில், சந்திரநிறத் தவில் (847), உச்சந்தவில் (851), மந்தத்தவில் (1037) (மேள வகை A kinf of two headed drum).
27. தனிச்சின்னம் (848), வண்ணச் சின்னம் (852) (காளம் A kinf of trumpet)
28. தாளம் (839) அனுதாளம் (841), இங்கிதத் தாளம் (842) (கைத்தாளக் கருவி).
29. திமிலை (839, 852) (ஒருவகைப் பறை)
30. துடி (1365) (உடுக்கை யென்னும் பறை வகை).
31. துந்துமி (394, 568, 1365, 1804, 1978) (பேரிகை Large kettle drum)
32. தும்புரி (843) (தும்புரு. ஒருவகை யாழ்).
33. நவுரி (849) நவூரி (1808) (நமரி. நீண்ட எக்காள வகை).
34. நாகசுரம் (850, 1745, 1809) (நாதசுரம் எனப்படும் துளைக்கருவி).
35. பம்பை (1265, 1462) (பறைப்பொது, முல்லை, நெய்தலுக்குரிய பறை).

36. பறை
- சம்புலப்பறை (844) (சம்பை தாளத்துக் கியைய அடிக்கப் பெறுவதாகலாம்) *
- நாகப்பறை (840) (மருதப் பண்களுள் ஒன்றாய நாகத் தொனியுடன் கூடி அடிக்கப் பெறுவதாகலாம்) *
- நாழிகைப்பறை (845) (ஒருவகைத் தோற்கருவி A kind of hour drum).

37. பேரி (1686, 1931), பேரிகை (838) பூரிகை(849) (முரசு, kettle drum).

38. மத்தாளம் 838, 1290) (மத்தளம் – பறை வகை).

39. முகவீணை (1809) (நரம்புக் கருவியல்ல. துளைக்கருவி. நாகசுரம் போன்றது. ஆயின் உருவில் சிறியது. இனிய ஒலி எழுப்புவது. கோயில்களில் இரவு நேர வழிபாட்டு நேரங்களில் வாசிக்கப் படுவது).

40. முரசு (841, 1037) – மும்முரசு (1932) வீர, நியாய, மண முரசு). மோகன முரசு (844) (மோகனப் பண்ணில் அடிக்கப் பெறுவதாகலாம்).

41. முழவு – அந்தரி முழவு (846) (A variety of drum). குட முழா (840) (ஐந்துமுகமுடைய பஞ்சமுக வாத்தியம். பஞ்வானன் முரசு என்றும் வழங்கப்பெறும்).

42. மேளம் (514, 972, 1555, 1732) (நாதசுரம்,ஒத்து, தாளம் என்பனவற்றின் தொகுதி)

43. ருத்திரவீணை (856) (ஒருவகை யாழ். நரம்புக் கருவி).

44. வீராணம் (852, மந்தவீராணம் (852) (ஒருவகைப் பெரிய பறை (A large double drum).

* – உரையாடிப் பெற்ற கருத்து. ஆர். ஆளவந்தார், ஆராய்ச்சி உதவியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், நாள் 11.9.1985.

முத்தாரம்மன் கதையில் ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ள வரிசை முறை

1. தாருகாவனம்
2. கயிலை
3. வடவையென்ற சமாதி
4. சாலியாவண மலை
5. கெந்தமாதன மலை
6. ஏமகூடம்
8. அளகாபுரி
9. அதிசய கண்டம்
10. ஆலந்தீவு
11. மகாமேரு
12. பஞ்சநதி
13. தெண்டகாரண்யம்
14. அருண்கண்டம் (அருணாசலப்பிரதேசம்)
15. இமயமலை
16. பசுவாரிமலை
17. கருணைசத்தியதீர்த்தம்
18. இருநூறு தீர்த்தம்
19. நந்தபருபதம்
20. மொக்கீசதீர்த்தம்
21. மல்லிக்காசணம்
22. உத்திரமாங்காளி (உஞ்சைமாகாணம் ?)
23. உத்திரமண்டலி (உத்தரப்பிரதேசம்)
24. கல்லாறு
25. தேவகிரி (தாருகாசுரன்) பட்டணம். சதத்துரு யமுனை நதிகளுக்கு இடையிலுள்ள மலை
26. சந்திரகிரி (தெலுங்கு இராசதானி)
27. துவாரகா (துவாரகைமுத்தித்தலங்கள் ஏழுள் ஒன்று. கூர்ச்சரத்துக்கு மேற்கிலுள்ளது)
28. அயோத்திப்பதி
29. துவாரபுரி (துவாரகாபுரி, ஒரு பழைய நகரம்).
30. லாடதேசம்
31. பிரையாகை (அலகாபாத்)
32. டில்லி
33. விசுவநாதருலகு (காசி)
34. விசை நகரம் (விசயநகரம்)
35. மாலை
36. வடவேங்கடம்
37. காஞ்சிபுரம்
38. விருஞ்சிபுரம் (விரிஞ்சிபுரம்)
39. பாளூசி
40. திருப்பாண்டிக் கொடுமுடி
41. சிதம்பரம்
42. ஆருர்
43. காரூர் (கரூர்?)
44. புண்டரீகதீர்த்தம் (கமலாலயம்)
45. திருமறைக்காடு
46. திருவுத்திரமங்கை (உத்தரகோச மங்கை)
47. திருப்பெருந்துறை எனும் வேணுபுரம் (சீர்காழி)
48. திருக்கடவூர்
49. திருவானைக்கா
50. கொள்ளிடம்

51. சீரெங்கம்
52. திருச்சிராப்பள்ளி
53. அழகர் மலை (திருமா லிருஞ்சோலை)
54. ஆனைமலை
55. குமரியென்றெழு தீர்த்தம் (தன்துறை) (கொங்குநாடு)
56. மதுராபுரி (மதுரை)
57. வண்டியூர்
58. ஆவணிபுரம் (ஆவணியாபுரம்)
59. சேதுராமேசுரம்
60. கொங்குதேசம்
61. பழனிதேசம்
62. மன்னார்பேட்டை
63. சீவலபுத்தூர் (ஸ்ரீவில்லிபுத்தூர்)
64. வீரராசாவின் பாளையம் (ராஜபாளையம்)
65. சங்கரனார் கோவில் (சங்கரநயினார் கோயில்)
66. பாவனாச தீர்த்தம் (பரணதீர்த்தம்)
67. வாதவநல்லூர் (வாசுதேவ நல்லூர் ?)
68. புளியங்குடி
69. சிந்தாமணியூர் (வாசுதேவநல்லூர்)
70. கடையநல்லூர்
71. அனுமதீர்த்தகுண்டம்
72. சடாயுதேவர் கோவில் (கழுகுமலை)
73. பண்புளி
74. திருக்குற்றாலம்
75. சிற்றாறு (சித்ராநதி)
76. மேலகரத்தூர் (மேலகரம்)
77. செங்கோட்டை
78. பரலியான்பாறை
79. புளியரைநாடு
80. தென்காசி
81. வடகரையூர்
82. சுரண்டை
83. சுந்திரபாண்டி (சுந்தரபாண்டிய புரம்)
84. பாவூர்
85. முத்தண்டல்
86. திப்பணம்பட்டியூர்
87. பூவூர்
88. புலியூர்
89. இடையன்பாறை
90. துத்தம்
91. கடையம்
92. கிட்டிணாபுரம் (அனந்த கிருஷ்ணாபுரம்)
93. ஏந்தியாபுரம் (செவந்தியாபுரம்)
94. ஆழ்வார்க்குறிச்சி
95. பொதிகைமலை
96. விக்கிரமர்சிங்கம் (விக்கிரமசிங்கபுரம்)
98. வாகைக்குளம்
99. மல்லீச்சரம் (மல்லீஸ்வரம்) (திருப்புடை மருதூர் ?)
100. ஊர்க்காடு
101. திருவலஞ்சுழி
102. உத்தரதீர்த்தம்
103. தாம்பிரவண்ணிச் சங்குமுகம் (ஆற்றூர்)
104. தூத்துக்குடி
105. ஒன்பது திருப்பதி (ஒன்பதூர்) (நவதிருப்பதி)

106.தோழப்பன்பண்ணை
107. வல்லநாடு(தூத்துக்குடி திருவைகுண்டம்
108. பாளையம் (பாளையங் கோட்டை?)
109. முத்தராமன் குளம்
110. செப்பறை
111. சிந்துபூந்துறை (நெல்லை)
112. கம்பையாறு
113. திருநெல்வேலி
114. கல்லிடைக்குறிச்சியூர்
115. சித்திரக்கெங்கை நதி (சித்ரா நதி)
116. வீரநல்லூர்
117. வீரவநல்லூர்
118. சேரநங்கையூர் (சேரன்மாதேவி)
119. மடைசைப்பதி
120. செவ்வலூர் (இடைசெவல்)
121. தென்பண்ணை
122. உய்யக்கொண்டான் (கற்குடிஅருகே திருச்சி மாவட்டத்திலுள்ளது)
123 அம்மனூர் (அம்மன்புரம்?)
124. சங்காணி
125. கல்லுக்கு மேற்குள்ள ஊர்(கோவில்பட்டி தாலுகாவிலுள்ள கல்லூரணி?)
126. அரியனாபுரம் (அரியநாயகிபுரம்)
127. பாப்பாகுடி (அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்தது)
128. கெவுலிப்பாறை
129. புதுப்பட்டி
130. சீவலாகுளம் (சீவலார்குளம்)
131. நெட்டூர்
132. மாயமாங்குறிச்சி (மாயமான்) (பொய்மான்கரடு)
133.முடவாக்குறிச்சி
134. மானூரம்பலம்
135. ஊத்துமலைநாடு
136. எட்டமான் சீமை (எட்டையபுரம்)
137. கருசக்காடு
138. வைப்பாறு
139. வேம்பாறு
140. கயத்தாறு
141. கெங்கைகொண்டான்
142. முக்கூடலூர் (முக்கூடல்)
143. செய்துங்கநல்லூர்
145. மாணிக்கபுரம்
146. விளாகத்துறை (விளாத்துறை)
147. கம்பையாறு
148. பொருநைநதி
149. ஓமநல்லூர்
150. திடியூர்
151. பகவதிகனைதீர்த்தம்
152. காருசேரி
153. நாற்பதூர் (நாட்டுப்புறத்திலுள்ள (நாற்பதூர்களை உள்ளடக்கிய சொல்
154. முனைஞ்சிப்பட்டி
155. திருவலநேரி
156. அலைவாய்க்கரை (திருச்செந்தூர்)
157. குலசேகரப்பட்டணம்
158. மானாடு
159. கூட்டப்புளி
160. கீழ்பத்து
162. பெரும்பத்து
163. விசையாபதி
164. பழவூர்

165. கருங்குளம்
166. வாரியூர்
167. கன்னிமாகுமரி (கன்னியாகுமரி)
168. அசுத்தீசுரம் (அகத்தீஸ்வரம்)
169. தென் சிவிந்தைப்பதி (சுசீந்திரம்)
170. களக்காடு நாடு
171. தேன்கொம்பு
172. பறக்கை
173. ராக்கியமங்கலம்
174. அருமைபுரம்
175. ஞானகுடி
176. ஈத்தான்முழி (ஈத்தா மொழி)
177. பிள்ளைத்தோப்பு
178. வலம்புரி
179. முட்டத்துறை
180. வேம்பனூர்
181. வீரணசேரி
182. ஆளூர்
183. மிடாலம்
184. குளச்சை (குளச்சல்)
185. திருவனாங்குறிச்சி
186. மனவாளக்குறிச்சி
187. பழங்கடைப்புதுவூர்
188. இரணியல்
189. நெய்யூர்
190. தேங்காய்ப்பட்டினம்
191. கிளியூர் (கிள்ளியூர்)
192. மசங்கொட்டாரம்
193. பைங்குளம்
194. சிறவாரை (செறுவாரக் கோணம்?)
195. வாவறை
196. கொல்லாங்கோடு
197. பரவூர்
198. விழிங்கம் (விழிஞம்)
199. பூவாறு
200. கருங்குளம்
201. உடையாறு
202. வெயிலூர்
203. அருங்கூர்
204. காவறை
205. வற்கரை (வற்கலை)
206. கொல்லன் சிறை
207. கழைக்கோட்டம் (கழக்கூட்டம்)
208. ஆரியநாடு (ஆரியங்காவு?)
209. பொற்றாழி
210. நெடுமன்காடு (நெடுமங்காடு)
211. ஆலப்பள்ளி (ஆலப்புழை)
212. அம்பலப்பள்ளி (அம்பலம்புழை)
213. வேட்டுக்காடு
214. புறக்காடு
215. எருமைகொல்லி
216. பேட்டை
217. இரால்
218. ஏரிப்பேட்டை
219. காஞ்சிரப்பள்ளி
220. பேட்டையீத்து
221. கூடலூர்
222. பள்ளிப்புரம்
223. கொட்டாரக்கரை
224. கொச்சி
225. முக்காடு
226. காயல்
227. காயங்குளம்
228. பறக்கை
229. கருனாபபள்ளி (கருனாகப்பள்ளி ?)

230. ஆலம்பாடு
231. மொகரம்புரி
232. கொடுங்கண்ணூர் (கொடுங்கோளூர்)
233. அருவிக்கரை
234. அனந்தேசரூர் (ஸ்ரீபத்மநாபபுரம்)
235. நெய்யாற்றங்கரை
236. பாறசாலை
237. பரிவிக்கல்(பரகலைக்கல்)
238. கரமனை
239. குழித்துறை
240. கால்வாய்
241. முளவன்கோடு
242. நட்டாலி (நட்டாலம்)
243. நெல்வேலி
244. குஞ்சரன் கோடு (காஞ்சரங்கோடு)
245. அருமனை
246. பொன்மலை
247. திற்பரப்பு
248. திருநந்திக்கரை
249. வேங்கோடு
250. அய்யப்பன் கோடு
251. பூட்டேத்தி (பூட்டேற்றி)
252. கோழிக்கோடு
253. திருவட்டாறு
254. பன்னிமலை (பன்னிகோடு)
255. மேய்க்கோடு
256. கோட்டைவிளை
257. மணலிக்கரை
258. திருவாங்கோடு (திருவிதாங்கோடு)
259. கேரளபுரம்
260. சிதறால்
261. வள்ளியாறு
262. கற்குளம் (கல்குளம்)
263. திருவம்பலம்
264. பன்னிவாய்க்கால்
265. சுங்கான்கடை
266. கள்ளியங்காடு
267. பஞ்சவங்காட்டாறு
268. கோட்டாறு
269. வடசேரி
270. தாழைக்குடி
271. பூதப்பாண்டி
272. இறைச்சிகுளம்
273. புத்தேரி (நாகர்கோவில்)
274. ஈசாந்திமங்கலத்தூர் (ஈசாந்தி மங்கலம்)
275. அருமைநல்லூர்
276. வீரவநல்லூர்
277. மாத்தாண்டநல்லூர்
278. விளாங்காடு (விளவங்கோடு)
279. அத்திக்கோடு
280. சுள்ளோடு
281. கருங்கரை
282. காட்டுப்புதூர்
283. வாலமாத்தாண்டபுரம் (பாலமார்த்தாண்டபுரம்)
284. அனந்தபுரம் (அனந்தபத்மனாபபுரம்)
285. சிறைமடம் (சிறமடம்)
286. அந்திராபுரம்
287. தொள்ளாந்தை (தெள்ளாந்தி)
288. துவரங்காடு
289. மாத்தாங்கரையூர்
290. காரை
291. மாங்குளத்தூர்
292. அழகியபாண்டி (அழகியபாண்டிபுரம்)
293. மேல்கரை

294. பனைவிளாகம்
295. சீகப்பால் நல்லூர்
296. திட்டிவிளை
297. செண்பகராமன் புதுவூர்
298. கொம்மண்டை (மண்டைக்காடு ?)
299. கிட்டிணன்கோவில் (நாகர்கோவில் அருகில் உள்ளது)
300. இடலாக்குடி
301. அருப்புக்கோட்டை
302. ஆச்சிராமம்
303. சிவிந்திரந்தேரூர் (சுசீந்திரத்தின் அருகிலுள்ள தேரூர்)
304. மருத்துமாமலை
305. தெற்கு வடக்கு மலையாளம்
306. நாஞ்சினாடு
307. பழத்தூர்
308. தாமரைக்குளம்
309. புதுவூர்
310. மேல்மருங்கூர் புதுவூர்
311. ஈத்தாங்காட்டுப்புதூர்
312. தாணுமலையன்புதூர்
313. வரிசைநல்லூர்
314. குறண்டி
315. வண்டிக்காரன்புதூர்
316. தோவாளையூர் (தோவாளை)
317. ஆராவாய்மொழி (ஆரம்பொலிமொழி) (ஆரல்வாய்மொழி)
318. முப்பந்தல்
319. பெருங்குடி
320. பணகுடி
321. வள்ளியூர்
322. விசையநாராயணத்தூர்
323. மன்னார்பதி
324. தேரூர்
325. சித்தூர்
326. கண்ணநல்லூர்
327. நட்டாத்தி
328. ஆனைக்குளம்
329. ராசாக்கள் மங்கலம்
330. மயிலாப்புதுவூர்
331. தளபதிசமுத்திரம்
332. பெரும்பளஞ்சி
333. சிறுபளஞ்சி
334. ஏருபாடி (ஏருவாடி)
335. திருக்குறு(ங்)கை
336. தளவாய்புரம்
337. திருமயிலாடு
338. மயேந்திரகிரி
339. திருமலை
340. பரிபட்டப்பாறை
341. சித்ராநதி
342. சித்திரகூடம்
343. கமலதெர்ப்பக்குளம்
344. கொச்சினாப்புளிமுடு
345. நம்பியேழூர்
346. களந்தைப்பதி (களம்பூர்)
347. பெருமாள் புதுத்தெரு (பெருமாள்புரம், பாளையங்கோட்டை அருகில்)
348. வடநகர்
349. இலந்தையடித்தெரு திட்டு (இலந்தையடித்திட்டு)
350. பத்தையூர்
351. பச்சைநதி
352. குளத்தூர்
353. தேவநல்லூர்
354. கருவைப்பதி (கரிவலம்வந்த நல்லூர்)
355. கீழவூர்

356. நடுவுக்குறிச்சி
357. ஒட்டியம்
358. கருவேலங்குளம்
359. தருவைப்பதி (தருவை)
360. தைர்வியநல்லூர் (தயிர்விய நல்லூர்)
361. தென்திருத்தூர்
362. கொண்டல்சேரி
363. படலார்குளம்
364. ஒன்பதூர்
365. சூரைமங்கலம்
366. வானமாமலை (நாங்குநேரி)
367. தோத்தாத்திரி (தீர்த்தம்)
368. சீவரமங்கை
369. புன்னைக்குளம்
370. செண்பகராமநல்லூர்
371. பாரமங்கைப்பதி
372. பட்டபுரம்

முத்தாரம்மன் கதையில் ஊர்ப்பெயர்கள்
அகரவரிசை

1. அகத்தீசுரம் (1556)
2. அத்திக்கோடு (1644)
3. அதிசயகண்டம் (587)
4. அந்திராபுரம் (1647)
5. அம்பலப்பள்ளி (1595)
6. அம்மனூர் (1430)
7. அயப்பன்கோடு (1609)
8. அயோத்திப்பதி (926)
9. அரியனாபுரம் (1432)
10. அருங்கூர் (1590)
11. அருண்கண்டம் (877)
12. அருப்புக்கோட்டை (1654)
13. அருமனை (1608)
14. அருமைநல்லூர் (1642)
15. அருமைபுரம் (1578)
16. அருவிக்கரை (1602)
17. அலைவாய்க்கரை (1509)
18. அழகர்மலை (1188)
19. அழகியபாண்டி (1650)
20. அளகாபுரி (585)
21. அனந்தபுரம் (1646)
22. அனந்தேசரூர் (1603)
23. அனுமதீர்த்தகுண்டம் (1300)
24. ஆச்சிராமம் (1654)
25. ஆரவாய்மொழி (1669)
26. ஆரியநாடு (1594)
27. ஆரூர் (1113)
28. ஆலந்தீவு (592)
29. ஆலப்பள்ளி (1595)
30. ஆலம்பாடு
31. ஆவணிபுரம் (1280)
32. ஆழ்வார்குறிச்சி (1360)
33. ஆரூர் (1581)
34. ஆனைக்குளம் (1708)
35. ஆனைமலை (1189)
36. இடலாக்குடி (1654)
37. இடையன்பாறை (1354)
38. இமயமலை (885)
39. இரணியல்(1584)
40. இரால்
41. இருநூறு தீர்த்தம் (904)
42. இலந்தையடித் தெரு (1840)
43. இறைச்சிகுளம் (1641)
44. ஈசாந்திமங்கலத்தூர் (1641)
45. ஈத்தாங்காட்டுப்புதூர் (1666)
46. ஈத்தான் முழி (1578)
47. உடையாறு (1590)
48. உத்தரதீர்த்தம் (1383)
49. உத்திரமண்டலி (920)
50. உத்திரமாங்காளி (918)
51. உய்யக்கொண்டான் (1430)
52. ஊத்துமலைநாடு (1440)
53. ஊர்க்காடு (1382)
54. எட்டமான்சீமை (1441)
55. எருமைகொல்லி (1596)
56. ஏந்தியாபுரம் (1355)
57. ஏமகூடம் (582)
58. ஏரிப்பேட்டை (582)
59. ஏருபாடி (1729)
60. ஒட்டியம் (1868)

61. ஒன்பது திருப்பதி (1388)
62. ஒன்பதூர் (1871)
63. ஓமநல்லூர் (1477)
64. கடையநல்லூர் (1299)
65. கடையம் (1355)
66. கண்ணநல்லூர் (1704)
67. கம்பையாறு (1391, 1455)
68. கமலதெர்ப்பக்குளம் (1781)
69. கயத்தாறு (1444)
70. கயிலை (497)
71. கரமனை (1605)
72. கருக்கரை (1645)
73. கருங்குளம் (1526,1589)
74. கருசக்காடு (1442)
75. கருணைசத்தியதீர்த்தம் (900)
76. கருவேலங்குளம் (1868)
77. கருவைப்பதி (1865)
78. கருனாப்பள்ளி (1600)
79. கல்லாறு (920)
80. கல்லிடைக்குறிச்சியூர் (1416)
81. கல்லுக்கு மேற்குள்ளவூர் (1431)
82. கள்ளியங்காடு (1638)
83. களக்காடுநாடு (1570)
84. களந்தைப்பதி (1821)
85. கழைக்கோட்டம் (1593)
86. கற்குளம் (1618)
87. கன்னிமாகுமரி (1543)
88. காஞ்சிபுரம் (1067)
89. காஞ்சிரப்பள்ளி (1597)
90. காயங்குளம் (1599)
91. காயல் (1599)
92. காருசேரி (1482)
93. காரூர் (1116)
94. காரை (1649)
95. கால்வாய் (1606)
96. காவறை (1592)
97. கிட்டிணபுரம் (1448)
98. கிட்டிணாபுரம் (1355)
99. கிட்டிணன் கோவில் (1653)
100. கிளியூர் (1585)
101. கீழ்பத்து (1518)
102. கீழவூர் (1867)
103. குஞ்சரன்கோடு (1607)
104. குமரியென்றெழு தீர்த்தம் (1191)
105. குலசேகரப் பட்டணம் (1512)
106. குளச்சை (1582)
107. குளத்தூர் (1863)
108. குழித்துறை (1606)
109. குறண்டி (1667)
110. கூட்டப்புளி (1517)
111. கூடலூர் (1597)
112. கெங்கைகொண்டான் (1444)
113. கெந்தமாதனமலை (571)
114. கெவுலிப்பாறை (1432)
115. கேரளபுரம் (1617)
116. கொங்குதேசம் (1284)
117. கொச்சி (1599)
118. கொச்சினாப்புளிமுடு (1786)
119. கொட்டாரக்கரை (1598)
120. கொடுங்கண்ணூர் (1601)
121. கொண்டல்சேரி (1871)
122. கொம்மண்டை (1653)
123. கொல்லன்சிறை (1593)
124. கொல்லாங்கோடு (1585)
125. கொள்ளிடம் (1181)
126. கோட்டாறு (1639)
127. கோட்டைவிளை (1613)
128. கோழிக்கோடு (1610)
129. சங்கரனார்கோவில் (1293)
130. சங்காணி (1431)

200. துவரங்காடு (1648)
201. தூத்துக்குடி (1388)
202. தெண்டகாரண்யம் (871)
203. தெள்ளாந்தை (1647)
204. தென்காசி (1335)
205. தென் சிவிந்தைப்பதி (1557)
206. தென்திருத்தூர் (1869)
207. தென்பண்ணை (1429)
208. தெற்குவடக்கு மலையாளம் (1656)
209. தேங்காய்ப்பட்டினம் (1584)
210. தேரூர் (1700)
211. தேவகிரி (921)
212. தேவநல்லூர் (1863)
213. தேன்கொம்பு (1570)
214. தைர்வியநல்லூர் (1869)
215. தோத்தாத்திரிதீர்த்தம் (1883)
216. தோவாளையூர் (1668)
217. தோழப்பன்பண்ணை (1389)
218. நட்டாத்தி (1707)
219. நட்டாலி (1607)
220. நடுவுக்குறிச்சி (1867)
221. நந்தபருபதம் (909)
222. நம்பியேழூர் (1812)
223. நாஞ்சினாடு (1657)
224. நாற்பதூர் (1483)
225. நீலகிரிப்பட்டணம் (582)
226. நெட்டூர் (1435)
227. நெடுமன்காடு (1594)
228. நெய்யாற்றங்கரை (1603)
229. நெய்யூர் (1584)
230. நெல்வேலி (1607)
231. பகவதிகுனை தீர்த்தம் (1481)
232. பச்சைநதி (1860)
233. பகுவாரி மலை (893)
234. பஞ்சவங் காட்டாறு (1639)
235. பஞ்சநதி (867)
236. பட்டபுரம் (1985)
237. படலார் குளம் (1871)
238. பண்புளி (1302)
239. பணகுடி (1671)
240. பத்தையூர் (1859)
241. பரலியான்பாறை (1333)
242. பரவூர் (1589)
243. பரிபட்டப்பாறை (1777)
244. பரிவிக்கல் (1605)
245. பழங்கடைப்புதுவூர் (1583)
246. பழத்தூர் (1664)
247. பழவூர் (1526)
248. பழனிதேசம் (1284)
249. பள்ளிப்புறம் (1598)
250. பறக்கை (1570)
251. பறக்கை (1600)
252. பன்னிமலை (1613)
253. பன்னிவாய்க்கால் (1637)
254. பனைவிளாகம் (1651)
255. பாப்பாகுடி (1432)
256. பாரமங்கைப்பதி (1983)
257. பாவனாச தீர்த்தம் (1295)
258. பாவூர் (1352)
259. பாளூசி (1087)
260. பாளையம் (1389)
261. பாறசாலை (1603)
262. பாளையம்
263. பிரையாகை (944)
264. பிள்ளைதோப்பு (1579)
265. புண்டரீகதீர்த்தம்
266. புலியூர் (1354)
267. புளியங்குடி (1298)
268. புளியரைநாடு (1333)

338. வல்லநாடு (1389)
339. வலம்புரி (1579)
340. வரிசைநல்லூர் (1667)
341. வள்ளியாறு (1617)
342. வள்ளியூர் (1678)
343. வற்கரை (1592)
344. வாகைக்குளம் (1378)
345. வாரியூர் (1527)
346. வாலமாத்தாண்டபுரம் (1646)
347. வாவறை (1587)
348. வாதவநல்லூர் (1297)
349. வானமாமலை (1878)
350. விக்கிரமர்சிங்கம் (1376)
351. விசுவநாதருலகு (1040)
352. விசைநகரம் (1042)
353. விசையநாராயணத்தூர் (1690)
354. விசையாபதி (1522)
355. விருஞ்சிபுரம் (1086)
356. விழிங்கம் (1589
357. விளாகத்துறை (1454)
358. விளாங்காடு (1644)
359. வீரணசேரி (1580)
360. வீரகநங்கை (1423)
361. வீரவநல்லூர் (1423)
362. வீரவநல்லூர் (1642)
363. வீரராசாவின் பாளையம் (1288)
364. வேம்பாறு
365. வெயிலூர் (1590)
366. வேங்கோடு (1609)
367. வேட்டுக்காடு (1595)
368. வேம்பனூர் (1580)
369. வைப்பாறு (1443).

*ஊர்ப் பெயர்களைத் தெளிவாக அறிவதற்கு 'கிராமங்களின் அகரவரிசைப் பட்டி (Alphabetical List of Villages) தமிழ்நாடு அரசு, 1972 என்ற நூல் பயன்படுத்தப்பட்டது.

மலை	ஆறு	தீர்த்தம்	வனம்	பிற இடங்கள்
கயிலை (497)	பஞ்சநதி (867)	கருணைசத்திய தீர்த்தம் (900)	தாருகாவனம் (341)	வடவையென்ற சமாதி (576)
சாலியாவணமலை (567)	கல்லாறு (920)			
கெந்தமாதனமலை (571)	சிற்றாறு (1328)	இருநூறு தீர்த்தம்(904)	தெண்ட–காரண்யம் (871)	
மகாமேரு (595)	சித்திரக்கெங்கை நதி (1422)	மொக்கீசதீர்த்தம்(910)		ஆலந்தீவு (592)
இமய மலை (885)	சித்ராநதி (1778)			பன்னிவாய்க்கால் (1637)
பகவாரிமலை (893)	கம்பையாறு (1391)	புண்டரீகதீர்த்தம்(1117)		
நந்தபருபதம் (909)	பொருநைநதி (1476)			
மல்லிக்காசனம் (914)	வள்ளியாறு (1617)	குமரியென்றெழு தீர்த்தம் (1191)		
அழகர்மலை (1188)	பஞ்சவங்காட்டாறு (1639)			
ஆனைமலை (1189)	பச்சைநதி (1860)	பாவனாசதீர்த்தம் (1295)		
பொதிகை மலை (1361)		அனுமதீர்த்தகுண்டம் (1300)		
பன்றிமலை (1613)		உத்தரதீர்த்தம் (1383)		
மேய்க்கோடு (1613)				
மருத்துமாமலை (1655)		பகவதிகனைதீர்த்தம் (1481)		
		கமலதொப்பக்குளம் (1781)		
		தோத்தாத்ரிதீர்த்தம் (1883)		

இருவேறு முத்தாரம்மன்களாகக் காட்டப்பட்டுள்ள இடங்கள்

(எண் – வரிசை எண்)

முத்தாரம்ம னிருபேரும் (197)

பொன்னு முத்து மாவி சின்னமுத்தும் (199)

முத்து மாத ரிருபேரும் (203)

பொன்னு நல்லமுத்துஞ் சின்னமுத்தும் (205)

பிறந்தன ரிருபேர் தானும் (206)

ரெண்டு பெண்களும் (214, 240, 250)

முத்துமாலை சின்னமுத்து மாலைக்கு (261)

முத்துமணி யுருவை ரெண்டையும் (283)

ஆதிமுத்து மாமயிலே, மாமயிலே சின்னமுத்து (305–306)

முகனையுட னிரு பேர்க்கும் (323)

பெரியமுத்து சின்னமுத்து தானும் (339)

தையலிருபேர் முழுகி (341)

இருபேரும் இருந்தார் (347)

இருவர் தம்மை (389)

தோகையர்க ளிருவரையும் (393)

குருக் கயிலைக் கிருவரையும் (395)

வைத்தன ரிருபேர் தாமும் (396)

ஆதியைத் தொழுதிருவர் (460)

மெல்லிய ரிருவர் (469)

இருள் நீங்கி யிருவரும் (473)

மெல்லியர் முத்து மாதர் (691)

பல்லக்கில் பெரியமுத்து பவனி யெழுந்தருள

பண்ணுதமிழ்ச் சின்னமுத்துப் பாரவேதா ளையில்வர (815–816)

செல்லுமென முத்தார் சின்னமுத்தா ரருளவே (962)

முத்து மாதா வளர்சிறு முத்துத்தாயும் (1048)

கன்னல் முத்துத் தாயுடனே சின்னமுத்துத் தாய்வரவே (1185)

அன்னதருமவென்ன முத்தா ரழகர்மலையில் வந்தாள்

பின்னல் சின்ன முத்துத்தாயும் பெருங்கடல் படையோட

பிரிசத்துட னெழுந்து மதுரைப் பதியில்வந்தார் (1188, 1195)

(ஒருவர் வந்தபின் மற்றவர் வரலாக)

நின்ற முத்தாரம்மன் நின்றசின்ன முத்தம்மனும் (1310)

நல்லமுத்துத் தாயுஞ் சின்னவன்னமுத்துத் தாயுடனே (1368–69)

மங்கைசின்ன முத்துத் தாயுஞ் . . .

நல்ல முத்து நாச்சியாரைத் தொழுது வணங்கிக்கொண்டு
(1411–1412)

காணிக்கையாய் வைத்துச் சின்னமுத்துத் தான்பெரியமுத்து

கமலந்தனைத் தொழுது கம்பையாத்தில் வந்து சேர்ந்தாள்
(1458–1459)

துகையாகச் சின்னமுத்து வேதாளை மீதில்வர

தொல்லுலகில் . . . . நல்ல முத்து நல்ல சிவிகையில் வர
(1630–1631)

. . . முத்து நாயகியும்

வளர்சின்ன முத்து நாயகியுடன் (1802–1803)

செம்மைபெற நல்ல முத்தம்மன் . . . .

. . . .

சின்ன முத்து பொற் சேனையு மானையும் (1925–1928)

சின்னமுத்து வேதாளையில் முன்வர

. . . . . . முத்துத்தாய் நல்ல

கனக தண்டிகை தனி லெழுந்தருள (1972 – 1974)

துலங்கி முத்தம்மன் குடியிருந் தனள்

சகித்து வாழுஞ் சின்னமுத் தம்மனும்

சரிபக்க மாக யிருந்த ருளினார். (2002–2003)

அம்மனின் பரிவார தேவதைகளின் அகரவரிசைப் பட்டி

(எண் – வரி எண்)

1. அக்கினிக்குமாரன் (828)
2. அக்கினிமாடன் (964, 1232,1244, 1404, 1624, 1627, 1841,1950)
3. அதம சண்டாளன் (1236, 1713, 1842)
4. ஆதித்தன் (563, 1553)
5. இசக்கி (560, 819, 960, 1233, 1408, 1471, 1703, 1953)
6. (அ) இடுகாட்டுச் சாமுண்டி (1235)
   (ஆ) சாமுண்டி (562)
7. (அ) இருளப்பன் (963, 1234, 1953)
   (ஆ) இருளன் (1406, 1836)
8. கண்டகருணன் (823, 1233, 1325, 1625, 1712, 1839)
9. கறுப்பன் (1405,1626)
10. காச்சலெரிகண்ணர் (965)
11. (அ) காட்டேரி (964)
    (ஆ) காடேரி (1234)
12. காடாளம்மன் (1331)
13. (அ) காளி (824, 967, 1240, 1345, 1554, 1633)
    (ஆ) பத்திரகாளி (1950)
14. குண்டோதரன் (1839)
15. குமிர்தன் (563, 1553)
16. சங்கிலிப்பூதம் (1233, 1736)
17. (அ) சந்தணக்குமாரன் (828, 1239, 1626)

(ஆ) சந்தனு முத்துக்குமாரர் (564)

(இ) முத்துக் குமாரன் (1626)

18. சந்திவீரன் (1234)

19. செண்பகாதேவி (1952)

20. சோனைமுத்துமாரி (820)

21. துர்க்கை (1402, 1633)

22. நீலகேசரி (1632)

23. நீலன் (563, 584, 1473, 1553)

24. நீலி (584, 1408,1473)

25. பாதாளன் (561)

26. பில்லிக்காரன் (1713)

27. புட்டாபுரத்தி (1402)

28. பெரியசுவாமி (972, 1241,1470, 1733, 1749)

29. (அ) பேச்சி (819, 960, 1234, 1408, 1471, 1703)

(ஆ) முத்துப்பேச்சி (960)

30. மாரி (1402, 1633)

31. முப்புராதி (1402, 1633)

32. மூலதேவன் (1473)

33. வண்டிமலையன் (562, 818, 966, 1233, 1325, 1406, 1625, 1952)

34. (அ) வண்டிமலைச்சி (819)

(ஆ) மலைச்சி (562, 966, 1233)

35. (அ) வயிரவன் (560, 818, 963, 1324, 1405, 1730. 1836, 1949)

(ஆ) வாலவயிரவன் (1232)

(இ) அகோரவயிரவன்(1472)

(ஈ) நாத வயிரவன் (1624)

36. வன்னியர் (1406)

37. வீரசூரன் (818, 963)

38. வீரபத்திரன் (1232, 1326, 1404, 1624, 1730, 1836)

39. வீரேசுரன் (561, 1951)

40. வெத்திவேலய்யன் (1838)

41. வேப்பிலைக்காரர் (965, 1627)

42. ராக்காச்சி (960, 1235)

43. ராக்கிசத்தி (1471, 1634, 1703)

அம்மன் தரிசித்த தல தெய்வங்கள் – அகர வரிசை

(எண் – வரி எண்)

1. அங்கம்மன் (325)
2. அழகர் (அழகர்மலை) (1189)
3. அழகர் (முக்கூடலூர்) (1445)
4. அழகிய மன்னார் (1699)
5. அழகியனாயகியம்மன்(1722)
6. அனந்தசயனன் (1591)
7. ஆதிநாராயணர் (1908)
8. ஆதிமூலர் (1105)
9. ஆதிவராகப் பெருமாள் (1419)
10. ஆவுடை (1297)
11. ஆவுடையம்மன் (தென்களந்தைப்பதி) (1827)
12. ஆவுடையார் (1419)
13. ஆனைக்கோட்டுத் தம்பிரான் (1615)
14. ஈசன் (சிவிந்தைப்பதி) (1558)
15. ஈசுரர் (916)
16. உத்திரமாங்காளி (919)
17. ஏகாம்பரம் (1073)
18. கட்டிப்பிள்ளையார் (1301)
19. கண்ணுதல் மூர்த்தி (1461)
20. கயிலாசநாதர் (கடம்பை)(1875)
21. கரியமாணிக்கப் பெருமாள் (1397)
22. கரும்பாண்டியம்மன் (1862)
23. கரையடிப்பிள்ளையார்
24. காமாச்சி (1071)
25. காளிங்கன் தெய்வம் (864)
26. குமரிப்பகவதி (1540)
27. குமாரர் (கற்குளம்)(1621)
28. குலசேகரநங்கை (1420)
29. குலசேகரமுடையார் (1420)
30. குழல்வாய்மொழி (1322)
31. குற்றாலநாதர் (1322)
32. கொடுங்கண்ணூர் பகவதி(1601)
33. கோட்டைவிளை அம்மன் (1614)
34. சங்கரேசர் (1297)
35. சடாயுதேவர் (1301)
36. சத்திய வாசகரீசர் (தென்களந்தைப்பதி) (1824)
37. சவுந்தரவல்லி (1428)
38. சாமுண்டி (873)
39. சிவகாமி (1420)
40. சிவகாமி (பணகுடி)(1672)
41. சிவகாமியம்மன் (1922)
42. சுந்தரபாண்டியம்மன் (1876)
43. சூடிக்கொடுத்தாள் (1292)
44. சூரைமங்கலமுடையார் (1877)
45. செகநாத சுவாமி (1041)
46. செவ்வந்தீசுரர் (1187)
47. சொக்கனாதர் (1206)
48. சொரி முத்தய்யன் (1414)
49. சோமலிங்கம் (1864)
50. சோளகவல்லி (1447)
51. திருநீலகண்டர்(கற்குளம்) (1619)
52. திரிபுரசுந்தரி (1434)
53. திருமலைநம்பி (1772–1773)
54. திருவழுதீசுரன் (1734)
55. தெய்வானை (1506)
56. தெய்வானை (கற்குளம்) (1621)
57. தெய்வானை (வள்ளியூர்) (1680)
58. நட்டாத்தி நாயகி (1699)
59. நந்த பருப்பத நாதன் (909)
60. நம்பி (திருமலை ?) (1780)
61. நரசிங்கமூர்த்தி (905)
62. நல்ல முதலியார் (1865)

63. நாகீசுரர் (1722)
64. நாகீசர் (வானமாமலை) (1929)
65. நாச்சியாரம்மன் (1917)
66. நாராயணமூர்த்தி (1059)
67. நெல்வேலிநாதர் (1393)
68. பரமன் (1610)
69. பரமேசுரர் (1088)
70. பாடகவல்லி (1439)
71. பார்பதியாள் (892)
72. பெரியநாயகி (1735)
73. பெருமாள் (1183)
74. பெருமாள் (பெரும்பழஞ்சி) (1723)
75. பொன்மாலையம்மன் (1876)
76. மகாதேவர் (1616)
77. மரகதவல்லி (1418)
78. மரகதவல்லி (முக்கூடலூர்) (1447)
79. மலரல்மங்கை (1167)
80. மால் (1775)
81. மீனாட்சி (1205)
82. முருகவேள் (1499)
83. மூர்த்தி (1171)
84. மூன்றுயுகங்கொண்டாள் (1683)
85. ராமலிங் கேசர் (1673)
86. வடிவேலர் (1680)
87. வரதர் (1759)
88. வல்லி சிங்கப்பெருமாள் (1762)
89. வள்ளி (திருக்குறுங்குடி) (1506)
90. வள்ளி (கற்குளம்) (1620)
91. விசுவநாதர் (1337)

அம்மனைத் தரிசித்த தெய்வங்கள் – அகர வரிசை

1. அக்கசாலை வினாயகன் (வரமங்கைநாடு) (1947)
2. அஞ்ஞூற்றுநங்கை (1697)
3. ஆகாச அய்யன் (1769)
4. இலங்காமணி அய்யன் (1964)
5. உலகம்மன் (1705)
6. எண்கோடி அய்யன் (தென்களந்தைப்பதி) (1828)
7. ஏழானை கொண்டய்யன் (1770)
8. கயிலாசநாதர் (1816)
9. கற்பகப் பிள்ளையார் (1939)
10. கறுப்பியம்மன் (1831)
11. காத்தய்யன் (1754)
12. குளத்தூரய்யன் (1737)
13. கேத்திரபாலன் (1814)
14. கொங்கார முலைச்சி (1736)
15. சுந்தரபாண்டி (1816)
16. நாகலோக நங்கை (1964)
17. நிலப்பாறை அய்யன் (1738)
18. நெட்டுமான் கோட்டய்யன் (1695)
19. பூலாவுடை அய்யன் (திருவலநேரி) (1491)
20. பூலாவுடை அய்யன் (1941)
21. பிரதி வினாயகன் (1768)
22. மங்கலமுடையார் (1737)
23. மண்காத்த அய்யன் (1696)
24. மழுச்சேட்டம்மன் (1963)
25. மறுகாலுடையார் (1965)
26. மாதங்கி (1817)
27. மாய சுந்தராச்சி (1817)
28. வடக்குவாச் செல்லி (1736)
29. வடிவு நிலமுடையார் (1696)
30. விள(ல)ங்கய்யன் (1718)
31. வெத்தி வேலய்யன் (1830)
32. வேம்புடையார் (1715)
33. ராவுத்தப்போற்றி (1753)

பயன்பட்ட சுவடிகளின் அகரவரிசைப் பட்டி

(சுவடி எண்கள், நூலகப் பெயர்களுடன்)

அகத்தியர் அம்மை சாஸ்திரம், 192 – செ.கீ.சு.

அசுவமேத யாகக்கதை – 8179 – கே.ப.சு.

அழகன் பெருமாள் கதை – 6715 – ”

ஆமையன் கதை – 8423 – ”

ஆழ்வார் திருநகரி யானைக்கும்மி – 8232 ”

இடைச்சி செல்லி கதை அல்லது வள்ளியூர்க் கோட்டையை அழித்த கதை – 8016 – கே.ப.சு.

இசக்கியம்மன் அல்லது நீலி கதை– 8016 – கே.ப.சு ”

இசக்கியம்மன் கதை அல்லது நீலி கதை – 8019 ”

இராமாயணம் வில்லுப்பாட்டு – 8434 – ”

இராமாயணம் வாசகம் – 6320 – ”

இராமாவதாரக் கதை – 10289 – ” கே. ப. சு

உச்சினி மாகாளி அம்மன் கதை (கையெழுத்துப்படி) – உ.த.நி.சு.

உச்சினி மாகாளி கதை – 46 – ஆ.ஆ.நி.

உச்சினி மாகாளியம்மன் கதை – 48 – ஆ.ஆ.நி

குசலவ மகாராசர் கதை – 8014 – கே.ப.சு.

குசலவன் சரிதம் – 8419 – ”

குத்தாலலிங்கர் கொடிப்பாட்டு – 8432 – ”

குருக்களாஞ்சி கதை – 8425 – ”

குளத்தூரய்யன் நொண்டி நாடகம் – 11611 ”

கோவலன் கதை – 6305 – ”

கோவலன் கதை 6718 – ”

சாஸ்தாவின் கதை – 8022 – ”

சித்திர புத்திரனார் நயினார் கதை – 5451 – – ”

சித்திர புத்திரனார் கதை – 4087 – ”

சித்தராரூட நொண்டிச்சிந்து – 11309 – ”

சிவன் செம்படவனாகி பார்வதியை மணந்த கதை – 314 – உ.த.நி.சு

சின்னத்தம்பி கதை – 11613 – கே.ப.சு

சீவக அம்மானை – 8248 – "

சீவகசிந்தாமணி அம்மானை – 8825 –

10366 "

சுந்தரி கல்யாணம் – 8413 – "

செட்டிச்சி அமராவதி கதை – 5451– கே.ப.சு.

செட்டிச்சி கதை – 4087 – – "

சொரி முத்தையன் பாட்டு – 8015 – "

ஞானவாசிஸ்டம் கதை – 5953 – – "

தடிவீரன் கதை – 8440 – "

தாடிக்கொம்பு கிராமம் அகரத்து முத்தாலம்மன் வரலாறு – – செ.கீ.சு.

திருவள்ளுவர் சரித்திரம் – 6383 – 11283 – கே.ப.சு.

தோட்டுக்காரி கதை – 316 – உ.த.நி.சு.

நம்பிராயன் கதை – 8425 – கே.ப.சு.

நளன் கதை – 10434, 10305, 10294, 9122, 7956 – கே.ப.சு

நாலு மந்திரி கதை – 6157, 10356, 11608 – "

நாலு மந்திரி கும்மிப்பாட்டு – 3223 – "

பஞ்சதந்திரக் கதை – 4103, 8818, 7961, 8809, 8069 "

பாண்டவர் வனவாசக் கதை – 8085 – "

பாண்டவர் வனவாசம் – 9067 – "

பார்வதியம்மன் கதை – 58 – ஆ.ஆ.நி.

பாரத அம்மானை – – உ.த.நி.சு

புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை – 7951 – கே.ப.சு

பேச்சி அம்மன் ஆனந்தக்களிப்பு – 9178 – "

பேச்சி அம்மன் தாலாட்டு – 9178 – "

மதுரை வீரன் அம்மானை – 8420 – "

மருந்து செய்யும் முறை – 3929 – "

மருந்து தயாரிக்கும் முறை – 2612 – "

மருந்து யோகங்கள் – 6692 – கே.ப.சு

மார்க்கண்டன் கதை – 5655, 8433 – ”

மார்க்கண்டன் நாடகம் – 10301, 9108, 8254, 7319, 8253, 10383, 1042 – ”

மாரியம்மன் கலிவெண்பா – 6165 – செ.கீ.சு

முத்தாரம்மன் கதை – 27 – ஆ,ஆ,நி.சு.

” ” – 52 – ”

” ” – 8427 – கே.ப.சு.

முத்துப்பட்டன் கதை – 8018 ”

ராமகதை – 10409 – ”

ராமர் வனவாசக் கதை – 8121 – கே.ப.சு

லெச்சுமியம்மன் தவநிலை – 296 – ”

வசூரி வகையும் சிகிச்சையும் – 3952 – ”

வசூரி வாகடம் – 8866 – ”

வன்னிராசன் கதை – 8017 – ”

வானதீர்த்தக் கரைப்புலையன் சுடலையாண்டி கதை – 8029 – ”

விக்கிரமாதித்தன் பதுமை கதை – 8634 – ”

வில் கதை அம்மன் கதை – 8028

வீர குமாரன் கதை – 6717 – ”

வீர போக வசந்தராயர் பத்திரிகை – 6681 – ”

வீர மாறன் கதை 7957 – ”

வைசூரிக்கு மருந்து 6546 – செ.கீ.சு

வைசூரி சாஸ்திரம் 6985 – ”

வைசூரி வைத்தியம் – 213 – த. ச.சு,

” ” – 7581 – செ.கீ.சு

உறிரண்ய நாடகம் – 8832 – கே.ப.சு.

ஸ்ரீராம கதை – 10292 – ”

பயன்பட்ட தமிழ்நூற்களின் அகரவரிசைப்பட்டியல்

அண்ணாமலை, பெ.,	பாம்புகள், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், ஏப்ரல் 1966.
அநுமந்தன், கி.ர., மங்கள முருகேசன், ந.க.,	இந்திய வரலாறு (கி.பி. 1206 முதல் 1773 வரை) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு, 1976.
அப்துல் ரஹீம், மு.,	மொகலாயர்களின் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு, ஜூலை 1976.
அப்பாதுரை, கா.,	இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, கழக வெளியீடு, 1963.
அருணாசல முதலியார், மு.ஆ.,	திருமுறைத் திருத்தலங்களில் தேவி தோத்திரங்கள், 11.11.1972.
அறவாணன், க.ப.,	செந்தமிழ் செனகால் செங்கோர், பாரி நிலையம், சென்னை – 1, 1977.
” ”	திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு, பாரி நிலையம், சென்னை – 1, 9.8.1979.
ஆளவந்தார், ஆர்.,	கல்வெட்டில் ஊர்ப்பெர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 113, மே. 1983.
ஆறுமுகப் பெருமாள் நாடார்	(ப.ஆ.) முத்தாரம்மன் விற்கவிதை, 1978.
” ” ”	(ப.ஆ.) மாரியம்மன் கதை.
இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ் வெளியீடு	கோவிலன் கதை (பெரிய எழுத்து), சென்னை – 1.
” ” ”	கோவலன் கண்ணகி நாடகம்.
இரத்தினவேலு முதலியார்	அஷ்டாலீலை யென்னும் தேவி பராக்கிரமம், 4–ஆம் பதிப்பு, இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் வெளியீடு.

இராசமாணிக்கம் பிள்ளை, மா,. மொஹஞ்சொ–தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், கழக வெளியீடு, செப். 1972.

இராமசாமி, துளசி நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, மார்ச் 1985.

இராமநாதபிள்ளை, ப., (விளக்கவுரை எழுதியவர்) திருமந்திரம், கழக வெளியீடு, 1969.

இராமநாதன், ஆறு., நாட்டுப்புற இயல் ஆய்வுகள், அணியகம், சென்னை–30, மார்ச் 1979.

இராமராவ், யு., குழந்தை வளர்ப்பும், நோய்த் தடுப்பும், பூம்புகார் பிரசுரம், சென்னை – 1.

இராமன், கே.வி., பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1977.

உலகநாத முதலியார், வி., (தொ.ஆ) தேவி தோத்திர மஞ்சரி, முருகவேள் புத்தகசாலை, சென்னை, 1931.

கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதம், 8–ஆம் பதிப்பு, வானதி பதிப்பகம், பிப். 1977.

கண்ணப்பர், ஏ.ஆர்., நம்நாட்டு மூலிகைகள், மூலிகை மணி வெளியீடு, வேலூர், ஜன.1966.

கமலையா, க.சி., இராமப்பய்யன் அம்மானை – ஓர் ஆராய்ச்சி, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை–5, பிப்.1980

காசிநாதன், நடன., தாமோதரன், கு., (தொ.ஆ.) கல்வெட்டு (ஓர் அறிமுகம்) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1973.

காந்தி, க., தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டிச. 1980.

குழந்தை	இராவண காவியம், வேலா பதிப்பகம், ஈரோடு–1, 1946.
கேசவராஜ், வெ.,	நடுகல் வழிபாடு, சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை–1 1978.
கைலாசபதி, க.	பண்டைத் தமிழர் வாழ்வும், வழிபாடும், பாரி நிலையம், டிச. 1966.
கொடுமுடி சண்முகப் பிரகதம்	(ப.ஆ.), மதுக்கரைப் பட்டயம், கொங்கு பதிப்பகம், சென்னை – 20, 1974.
" " "	(ப.ஆ.) சண்முக சுந்தரம், சு., (தொ.ஆ.) பழையனூர் நீலி, கொங்கு வெளியீடு, ஜன. 1978.
கோமதி நாயகம், தி.சி.,	தமிழ் வில்லுப்பாட்டுகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை – 20, மார்ச், 1979.
சக்திக் கனல்	(ப.ஆ.) அண்ணன்மார் சுவாமி கதை, நர்மதா பதிப்பகம், சென்னை– 17, 1971.
சங்கரராமன், எஸ்.,	தொற்று நோய்கள், பூங்கொடி பதிப்பகம், சென்னை–4, நவ.1976.
சண்முக சுந்தரம், சு.,	நாட்டுபுற இலக்கியத்தின் செல்வாக்கு, இலக்கிய மாணவர் வெளியீடு, மார்ச் 1976.
" " "	(தொகுப்பாளர் & பகுப்பாளர்), மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை, கொங்கு பதிப்பகம், சென்னை–20.
" " "	நாட்டுப்புற இலக்கிய வரலாறு, மணிவாசகர் நூலகம், சென்னை–1, டிச.1980
" " "	நாட்டுப்புற இயல் – ஓர் அறிமுகம், இலக்கிய மாணவர் வெளியீடு, சென்னை–1, ஜன.14, 1975.

சண்முக சுந்தரம். சு., தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள், மணிவாசகர் நூலகம், சென்னை–1, ஆக.1980.

சாமி, பி.எல்., தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு 2–ஆம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் உறவுஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை, 1976.

சாமிநாதையர், உ.வே., (உரையாசிரியர்), பரிபாடல், டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை-1980

சிவசாமி, வி., ஆரியர் ஆதி வரலாறும், பண்பாடும், இலங்கைப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, மே.1976.

சீனிவாச்ன், இரா., சக்தி வழிபாடு, ஜெய்குமாரி ஸ்டோர்ஸ் நாகர்கோவில்–1.

சீனிவாசன், அரங்க., அன்னை கருமாரி அம்மன் அந்தாதி, அருள் நிலையம், சென்னை – 17.

சுப்பிரமணிய பிள்ளை, இ.மு., நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு, அறநிலையத் துறை வெளியீடு, தமிழ்நாடு அரசாங்கம், 1962.

சுப்பிரமணியம், ந., இந்திய வரலாறு (கி.பி. 1526 வரை) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை–2, ஆக.1972.

சுப்பிரமணியம், ச.வே., (தொ.ஆ.,) தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், செப்.1979.

சுரேந்திரன், இரா., நாட்டுப்புற இலக்கியம், தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம்–1, ஏப்.1979.

சூசைராஜா, எஸ்.ஏ., பயங்கர வியாதிகளும் பயனுள்ள சிகிச்சையும், சாந்தி நிலையம், சென்னை – 17, மே.1981.

செங்கல்வராய பிள்ளை, வ.சு., தேவார ஒளி நெறி (சம்பந்தர்), 1,2,3–ஆம் தொகுதி, கழகப் பதிப்பு 1963, 1963, மார்ச் 1954.

" " " தேவார ஒளி நெறி (அப்பர்), 2–ஆம் தொகுதி, கழக வெளியீடு, 1962.

" " " தேவரா ஒளி நெறி (சுந்தரர்), கழக வெளியீடு, 1963.

சோமசுந்தரனார், பொ. வே., (பதவுரை விளக்கமெழுதியவர்), அகநானூறு, கழக வெளியீடு, 1970.

" " " (பதவுரை விளக்கமெழுதியவர்), குறுந்தொகை, கழக வெளியீடு, 1972.

தங்கதுரை, சு., (ப.ஆ.), சிதம்பர நாடார் கதை, மேலக்கிருஷ்ணன்புதூர், குமரி மாவட்டம், மே.1982.

தட்சிணாமூர்த்தி, அ., தமிழர் நாகரீகமும், பண்பாடும், வெற்றிச் செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர், நவ.1980.

தமிழவன் (தொ.ஆ.) நாட்டுப்புற நம்பிக்கைகள், கன்னட சங்கம், கிருத்தவ கல்லூரி, பெங்களூர், 1976.

துரைசாமிப்பிள்ளை, கழக ஔவை, சு., (உரை எழுதியவர்), புறநானூறு, வெளியீடு, 1951.

" " (உரை எழுதியவர்), பதிற்றுப்பத்து, கழக வெளியீடு, 1968.

தேவநேயன், ஞா., தமிழர் மதம், நேசமணி பதிப்பகம், வடார்க்காடு மாவட்டம், 1972.

நச்சினார்க்கினியர் (உரையெழுதியவர்), கலித்தொகை, கழக வெளியீடு, 1967.

நடராசன், தி., (ப.ஆ.), வன்னியடி மறவன் கதை, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1977.

நடராசன், எஸ்., கருணை காமாட்சி, பிரதிபா பிரசுரம்., சென்னை – 4.

நாகசாமி, இரா., (ப.ஆ.). சென்னை மாநகர்க் கல்வெட்டுக்கள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு, 1970.

நீலாம்பிகை அம்மையார், தி., தனித்தமிழ்க் கட்டுரைகள், (செந்தமிழ்க் கட்டுரை நூற்கோவை), கழக வெளியீடு, 1964.

பகவதி, கே., இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை–113, அக். 1984.

பதி, ஆர்.வி., கம்பெனி மாரியம்மன் தாலாட்டு, சென்னை–1

பரந்தாமனார், அ.கி., மதுரை நாயக்கர் வரலாறு, பாரி நிலையம், சென்னை–1, ஜன.1971.

பெருமாள், ஏ.என்., தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராயச்சி நிறுவனம், சென்னை–113, டிச.1980.

" " (ப.ஆ.), வெள்ளைக்காரன் கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை–113, ஜூலை 1983.

முத்துப்பிள்ளை, சி., வடநாட்டுத் தலங்கள், பைலட் பப்ளிகேஷன்ஸ், சென்னை–1, பிப்.1980.

ராமசாமி, சி.க., உலக மதங்கள், 2–ஆம் பதிப்பு, வானதி பதிப்பகம், ஏப். 1977.

ராஜதுரை, ரா., மருத்துவக்கலை அன்றும் இன்றும், கிறித்துவ இலக்கிய சங்கம், சென்னை–3, 1969.

வாண்டுமாமா மருத்துவம் பிறந்த கதை, வானதி பதிப்பகம், சென்னை – 17, நவ.1977.

வானமாமலை, நா., (ப.ஆ.) முத்துப்பட்டன் கதை, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை–2, அக்.1971.

வானமாமலை. நா., (ப.ஆ.) கான்சாகிபு சண்டை, மதுரைப் பல்கலைக் கழகம், மார்ச். 1972.

" " (ப.ஆ.) ஐவர் ராசாக்கள் கதை. மதுரைப் பல்கலைக் கழகம், ஜன. 1974.

" " (ப.ஆ.) மக்களும் மரபுகளும் (மானிடவியல் கட்டுரைத் தொகுப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை–2, அக். 1975.

விநாயகமூர்த்தி, அ., ஐவர் அம்மானை, பாலமுருகன் பதிப்பகம், மதுரை, ஜூன் 1981.

வேங்கடராமன், எஸ்.ஆர். பாரதப் பழங்குடிகள், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை–5, மே 1983.

வேலுப்பிள்ளை, ஆ., சாசனமும் தமிழும் இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை, ஏப். 1971.

ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு சிலப்பதிகாரம், 8–ஆம் பதிப்பு, சென்னை, 1968.

ஸ்ரீநிவாஸாசார்யா, டி.வி., ஸ்ரீமகாபாரதம் (கர்ணபர்வம்), ஸ்ரீமகாபாரதம் பிரஸ், கும்பகோணம், ஜன. 1923.

ஸ்ரீமகள் கம்பெனி வெளியீடு மாரியம்மன் தாலாட்டு, சென்னை.

கட்டுரை, இதழ், மலர், அகராதிகள்

அகத்திலிங்கம், ச., (மற்றும் மூவர்) (ப.ஆ.). 7,9,10, 15– வது கருத்தரங்கு ஆய்வுக்கோவைகள், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றம், புதுதில்லி, 1975, 1978, 1983.

அகத்தியலிங்கம், ச., (மற்றும் பிறர்) (ப.ஆ.) நாட்டுப்புறவியல், இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் (காலாண்டு இதழ்), 1983.

அறவாணன், க.ப., இராசேந்திரன், அ., (ப.ஆ.) இளவேனில், கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு, திருவனந்தபுரம். 1972.

காசிநாதன், நடன., தாய்மார் எழுவர் வழிபாடு, கல்வெட்டு (இதழ்–14) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, காளயுத்தி ஆண்டு, ஆடித்திங்கள்.

கோமதி நாயகம், தி.சி., தென்மாவட்டங்களில் கோயில் கொடைவிழா, ஆய்வாளர் கருத் தரங்கக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1981.

சண்முக சுந்தரம்,சு., நாட்டுப்புற இலக்கியம், தமிழ் இலக்கியக் கொள்கைகள்(3–ஆம் தொகுதி), சுப்பிரமணியம், ச.வே., மணவாளன், அ.அ., (ப.ஆ.). உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மார்ச் 1978.

சிங்காரவேலு முதலியார் அபிதான சிந்தாமணி ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி–16, 1981.

சூரநாட்டுக்குஞ்ஞன்பிள்ளை,எம்.ஏ.,(ப.ஆ.) பொன்னிறத்தாள் கதை (மலையாளம்) கேரளசர்வகலாசாலை வெளியீடு திருவனந்தபுரம், 1954.

திருஞானசம்பந்தம், பொ., சிவ வழிபாட்டின் தொன்மை, சித்தாந்தம் (மலர்–45), 1972.

தெய்வநாயகம், சி.கோ., நாகர் – ஊரும், பட்டினமும், ஆய்வுமன்ற 11–ஆம் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 30.5.1986.

புஷ்பா அசோக்குமார் அருள் வலம், மங்கை (இதழ்), மார்ச் 1981.

பெருமாள், ஏ.என் கதைப்பாடல்கள், வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கக் கட்டுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை–113, 26.8.1982.

போஸ் புராணங்கள் உண்மை வரலாறுகளா?, செந்தமிழ்ச் செல்வி (சிலம்பு–12), கழக வெளியீடு, 1933–34.

லூர்து. தே., கதைப்பாடல்களின் இயல்புகள், கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு (தட்டச்சுப்படி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1977.

வானமாமலை, நா., தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவுகள், ஆராய்ச்சி, காலாண்டு பத்திரிகை (மலர்–2, இதழ்–2), நெல்லை–2, மார்ச் 1971.

வானமாமலை, நா., உலகப் படைப்புக் கதைகள், கதை மூலங்களைப் பற்றி ஓர் ஆய்வு, ஆராய்ச்சி, மலர்–2, இதழ்–4, டிச. 1971.

" " நாட்டுப் பாடலில் சமூகப் பிரச்சினைகள், தமிழ் வட்டம், 2 ஆவது ஆண்டு விழா மலர் சென்னை, 1962.

ஆய்வேடுகள்

தேவராஜ், மு., தெக்கன் பாட்டுகள் – ஓர் ஆய்வு, எம்.ஏ., பட்டத் தேர்வின் ஒரு பகுதியாகப் படைக்கப்பட்ட ஆய்வேடு (வெளிவராதது), கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தை, 1980.

கலைக் களஞ்சியம்

தொகுதி 1,8 தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1954, 1961.

அகராதி

தமிழகராதிகள்

அட்டவணை

இராமன், மு.கோ., திருவனந்தபுரம் கேரளப்பல்கலைக் கழகச் சுவடி நூலகச் சுவடி அட்டவணை (தட்டச்சுப்படி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1979.

" " தமிழகத்தில் பல்லிடங்களிலும் தனியார் மடங்கள் வசம் உள்ள சுவடிகளின் அட்டவணை (தட்டச்சுப்படி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

நிர்மலாதேவி, இரா., (ப.ஆ.) தமிழ்ச் சுவடிகள் (அட்டவணை), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை–113, செப். 1983.

பாஸ்கரன், டி., (ப.ஆ.). தமிழ்ச் சுவடிப் பெயர்கள் கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகம், திருவனந்தபுரம், மே. 1984.

கிராமங்களின் அகரவரிசைப்பட்டி

தமிழ்நாடு அரசு, 1972.

பேட்டி

ஆளவந்தார். ஆர். ஆராய்ச்சி உதவியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 10.9.1985.

English Books, Articles, Thesis, Catalogues, Dictionaries, Encyclopaedias

Alan Dundes	Essays in Folkloristics, Folk lore Institute, Meerut, 1978.
Alan Lomex	Folk song style and culture Transaction Books, New Jersey, 1978.
Ananthakrishna Ayyar LK.,	The Mysore Tribes and Castes Vol.I., Published under the Auspices of the Mysore University, Mysore, 1953.
Arokyasami	The Cult of Mariamman on the Goddess of the rain, Tamil Culture, Quarterl / Review dedicated to the study of Tamiliana, April 1953.
Bala Subramanian	The Status of Woman in Tamilnadu during the Sangam Age, University of Madras, 1976.
Charles E. Gover	The Folk songs of Southern India, The South India Saiva Siddhanta Works Publishing Society, Madras -1, Jan.1959.
Chopra, P.H.	A Social Cultural and Economic History of India, Vol.III, Modern Indian Macmillan India, 1974.
Deva poorpathy Nadarajan	Women in Tamil Society - Classical Period, Unversity of Malaya, Kulalampur 1967.

Devendra Kumar — A Folk Tragic Ballad of North Karnataka An Analysis, Indian Folklore Congress, Annamalai University, March 1981.

Dorson, Richard — (Ed.), Folklore and folklife, The University of Chicago Press, Chicago, 1972.

Ernest Jones — Psyco Analysis and Folklore, The Study of Folklore, Prentice Hall, 1965.

Grolier Incorporated — The New Book of Knowledge, D-Vol J.K.10, Vol.19, New York , 1973.

Helva.J.Herskvits — Cultural Anthropology, Second Indian Reprint, An Abridged Revision of man and his works, Oxford and Publishing Co., New Delhi, 1974.

Henrywhitehead — The Village Gods of South India, 1976.

Hodge, M.J.C., — The Ballads, Second Edition, Hutchinson & Co. Publishers Ltd., 1962.

Horm — Social and Cultural Life of Nagas, B.R. Publishing Corporation, Delhi, 1977.

Julienvinson — Catalogue of Tamil Manuscripts.

Kadhirvel, S., — A History of Maravas, Maduri Publishing House, Madurai, 1977

Kailasapathy, K., — Tamil Heroic Poetry, Clareanden Press, Oxford, 1968.

Krishna Iyer	Social History of Kerala, Vol.II, The Dravidians - Book Centre Publication Madras-2, 1970.
Lakshmanan Chettiar, S.M.L.,	Folklore of Tamilnadu, National Book Trust, New Delhi, 1973.
Nambiar, P.K.,	Census of Indian, Vol.IX, Part-XI, D Temples of Madras, 1961.
Narenthranath Bhatta charyya	The Indian Mother Goddess, Manohar Book Service, New Delhi-64, 1970.
Pilliai, K.K.,	A Social History of the Tamils, Part-I, University of Madras, 1969.
" "	Caste system in Tamilnadu, (Dr. Annie Besant Memorial Lectures 1974-75) Reprinted from Journal of the Madras University, July, 1977.
Rajendra Nath Sharma	Brahmins through the Ages, Ajantha Publication, Delhi, 1977.
Sahab Lal Srivastava	Folk Culture and oral Tradition, Abhinav Publications, New Delhi, 1974.
Sambasivam Pillai, T.V.,	Tamil-English Dictionary of Medicine, Chemistry, Botany and Allied Sciences, Vol.IV, 1977.
Sankar Sen Gupta Upadhya	(Eds.) An approach to Folklore Research in India - Studies in Indian Folk Culture, Indian Publications, India, 1941.

Saraswathi Mahal Publications	Dascriptive Catalogue of the Tamil Manuscripts, Vol.I,II,III, Thanjavur, 1960, 1964.
Shaila Asirvatham	A Sociological Study of Folk Ballads (Unpublished Ph.D. Thesis), Kerala University, Trivandrum, Jan.1983.
Swaminathaiyar Library Publications	A Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol.II,III,IV, Madras-20. 1961, 1962.
Subramanian, S.V., Murugan, V.,	(Eds.) Paper on Tamilology, Tamil Studies, International Institute of Tamil Studies, Madras - 113, 1980.
Veronica loas	Indian Mythology, sydney Toronto, Second Impression, 1968.
William Bridgwater and Seymour Kurtiz	(Eds.) Every man's Encyclopaedia, Vol.5. Fifth Edition,J.M. Dent & Sons Ltd., 1967.
" "	Encyclopaedia of Americanaı , Americana Corporation, New York, Vol.II, 1970.
" "	Encyclopaedia Britannica, Vol.3,5,7,9, 20 The University of Chiocago, 1972.

புதிய வெளியீடுகள்

Mysticism of Love in Saiva Tirumurais — Dr. V. C. Sasivalli ... 50.00
எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-2 — முனைவர் அன்னி தாமசு ... 30.00
தொல்காப்பியம்-பொருள்-களவியல் — பேரா. சிவலிங்கனார் ... 85.00

The Contributions of the Tamils to Indian Culture
Vol. I Language and Literature — Dr. K. Subbiah Pillai ... 18.00
Vol. II Art and Architecture — Dr. K. Bhagavathi ... 30.00
Vol. III Socio Cultural Aspects — Dr. M. Valarmathi ... 90.00
Vol. IV Religion and Philosophy — Dr. V. C. Sasivalli ... 80.00

எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-I — முனைவர் அன்னி தாமசு ... 47.00
சிவகிரி குமர சதகம் — திரு. மெய். சந்திரசேகரன் ... 39.00
புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை — திரு. மொ. மருதமுத்து ... 27.00
தேரையர் அந்தாதி — மருத்துவர் மா. புனிதா ... 33.00
குசலவர் சுவாமி கதை — செல்வி இரா. வசுமதி ... 36.00
குணவாகடம் — முனைவர் வே. நெடுஞ்செழியன் ... 40.00
தோட்டுக்காரி கதை — முனைவர் வ. அலமேலு ... 28.00
சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள்
முனைவர் சாலினி இளந்திரையன் ... 24.00
உலகத்தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு
முனைவர் தி. மகாலட்சுமி ... 35.00

Selected Poems of Bharathidasan – Translation:
Tamil to English — Dr. V. Murugan ... 60.00
Tamil to Malayalam — Dr. P. P. Thambi & D. Ramakrishnan ... 60.00
Tamil to Kannada — Mr. V. Pasumalai Arasu ... 60.00
Tamil to Telugu — Dr. C. R. Sarma ... 60.00

Chieftains of the Sangam Age — Dr. K. D. Thirunavukkarasu ... 20.00
பாரெலாம் பரந்த தமிழர் — உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ... 25.00
காண்டேகரும் கா. ஸ்ரீ. ஸ்ரீ. யும் — முனைவர் மு. வளர்மதி ... 18.00
A Comparative Study of Tamil and Japanese
Dr. Pon. Kothandaraman ... 15.00
தமிழும் பிற துறைகளும் — முனைவர் ந. கடிகாசலம் ... 35.00
பெண்ணியம் — முனைவர் இரா. பிரேமா ... 25.00
விலங்கியலும் தமிழியலும் — முனைவர் ஏ. த. சோதிநாயகம் ... 10.00
தமிழும் தெலுங்கும் — முனைவர் தா. சா. மாணிக்கம் ... 15.00
தமிழ் ஆய்வுக் களங்கள் — முனைவர் ந. கடிகாசலம் ... 70.00
வ.உ.சியும் தமிழும் — முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம் ... 18.00
தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புக்கள்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம் ... 14.00
புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம்
முனைவர் நா. ஆறுமுகம் ... 20.00
கனகாபிஷேக மாலை — திறனாய்வு —
முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன் ... 16.00
இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு
முனைவர் து. சீனிச்சாமி ... 20.00
பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்
முனைவர் ச. சிவகாமி ... 60.00
தொல்காப்பியம் — பொருள் — பொருளியல்
பேரா. ஆ. சிவலிங்கனார் ... 32.00